முகுந்தனிசைந்தருள்செய்தவைந்தாலைந்தும்
பத்திதனிற்படிவில்லார்பரஞ்சுமத்தப்
பார்த்தன்றேர்முன்னேதான்தாழநின்ற
வுத்தமனுருத்தமநல்லுரைநாலெட்டு
முணர்ந்தவர்தாமுகந்தெம்மையுணர்வித்தாரே. (௫௨)

(ப-ரை.) தத்துவமும் - தத்வங்களையும், சாதனமும் - மோக்ஷோபாயத்தையும், பயனும் - பலத்தையும், காட்டும் - ப்ரதிபாதிக்கின்ற, தாரம்முதல் - ப்ரணவத்தை முதலாகவுடைய, இருநான்கும் - எட்டு திருவக்ஷரங்களை யுடைய திருமந்த்ரத்தையும், தன்கருத்தால் - தன் திருவுள்ளத்தினுல், முத்திவழி - மோக்ஷமார்க்கத்திலே, நாம்-நாம், முயலும்வகை - ப்ரயத்னம் செய்யும்படி, காண-காணும்படியாக, முகுந்தன் - ஸ்ரீயஃபதியானவன், இசைந்து - திருவுள்ளமிசைந்து, அருள்செய்த - க்ருபைசெய்த, ஐந்தாலைந்தும் - இருபத்தைந்து திருவக்ஷரமான த்வயமென்னும் மந்த்ரத்தையு மென்கை, பத்திதனில் - பக்தியோகத்தில், படிவில்லார் - ஆஸக்தியில்லாதவர்கள், பரம் - ரக்ஷாபரத்தை, சுமத்த - தன்மேல் சுமத்தும்படியாக, பார்த்தன் - அர்ஜுனனது, தேர் - ரதத்தின், முன்னே - முன்தட்டிலே, தான் - ஸர்வாதிகனுனதான், தாழநின்ற - அர்ஜுனனுக்குக் கீழேஇருந்த, உத்தமனுர் - ஸர்வோத்தமனை க்ருஷ்ணனுடைய, உத்தம - ஸர்வோத் க்ருஷ்டமான, நல்லுரை - நல்ல ஸ்ரீஸூக்தியான, நாலெட்டும் - முப்பத்திரண் டக்ஷரமான சரமச்லோகமென்னும் மந்த்ரத்தையும், உணர்ந்தவர் - அர்த்தஜ்ஞான பூர்வகமாக நன்றாய் அறிந்த நம்மாசார்யர்கள், தாம் - தாங்களே, உகந்து - ஸந்தோஷித்து, எம்மை - அடியோங்களை, உணர்வித்தார் - அடியோங்களும் அதுகளின் அர்த்தங்களையறிந்து உஜ்ஜீவிக்கும்படி உபதேசித்தார்களென்றபடி. (கரு)

வியாக்யானம்.

முன்தட்டிலே (தான்) ஸ்வயமேவ, (தாழநின்ற) பார்த்தஸாரதிஎன்று தாழ்த்தியாகச்சொல்லும்படி, கீழேஸ்திரமாயிருந்த (உத்தமனுர்) இப்படிப்பட்ட ஸௌசில்யாதி குணத்தாலே ஸர்வோத்க்ருஷ்ட்டனை வவனுடைய, (உத்தம) ச்ரேஷ்ட்டமான, அகிஞ்சனுேபாய ப்ரதிபாதகமாகையாலே கீழ்ச்லோகங்களுக்கு ஶ்ரேஷ்ட்டமான, (நல்லுரைநாலெட்டும்) நல்லதான சப்தங்களுடைய முப்பத்திரண் டக்ஷரமும், த்வாத்ரிம்சதக்ஷராத்மகமான சரமச்லோகமு மென்றபடி. பகவத்வதநாரவிந்தகளிதத்வமே யிதுக்குநன்மை. (உணர்ந்தவர்தாம்) இதுகளை ஸதா

கசு-மூ.—பரக்கும்புகழ்வரும்பைம்பொருள்வாய்த்திடும்பத்தர்களா
யிரக்கின்றவர்க்கிவையீந்தாலறமுளதென்றியம்பக்
கரக்குங்கருத்துடைத்தேசிகர்கனெனநம்மையெண்ணிச்
சுரக்குஞ்சுரபிகள்போற்சொரிகின்றனசொல்லமுதே. (௫௩)

(ப-ரை.) பத்தர்களாய் - பத்தர்களாய், இரக்கின்றவர்க்கு - யாசிப்பவர்க்கு, இவை - இந்த ரஹஸ்யார்த்தங்களை, ஈதால் - கொடுத்தால், உபதேசித்தாலென்கை, பரக்கும் - பரவுகின்ற, புகழ் - கீர்த்தியானது, வரும் - உண்டாகும், பைம் - ஸ்ப்ருஹணீயமான, பொருள் - தனம், வாய்த்திடும் - கிடைக்கும், அறமுளது - தர்மமுண்டு, என்று - இப்படி க்யாதிலாப பூஜைகளில் இச்சையாலே, இயம்பார் - சொல்லாதவர்களாய், கரக்கும் - மறைகின்ற, கருத்துடை - ஹ்ருதயத்தை யுடையவர்களான, தேசிகர் - நம்மாசார்யர்கள், நம்மை - ஆச்ருதரான நம்மை, கன்றென - கன்றுபோல, எண்ணி - நினைத்து, சுரக்கும் - கன்றைநினைத்த உடனே பால்சுரக்காநின்ற, சுரபிகள்போல் - பசுக்கள்போலே, சொல்லமுது - பால்போன்ற சொற்களை, சொரிகின்றனர்-வர்ஷிக்கின்றார்கள், வாத்ஸல்யத்தால் நமக்கு மந்த்ரார்த்தங்களை உபதேசிக்கின்றார்களென்கை. (கசு)

வியாக்யானம்.

சார்யர்களிடத்தில் நன்றாகவறிந்தவர்கள் தாங்களே, (உகந்து) ஸந்தோஷித்து, க்யாத்யாதியன்னியிலே - (எம்மை) அவர்க ளாஶ்ரயித்த எங்களை, (உணர்வித்தார்) அறியும்படி பண்ணிவைத்தார்கள். இத்தால் திருமந்த்ரம் ஸ்வரூபாதி ப்ரகாசகபரமென்றும், த்வயமுபாயாநுஷ்டாந ப்ரதிபாதகமென்றும், சரமச்லோகம் சாத்ருசமான வுபாயாதிகாரத்தையும் சரண்யக்ருத்யத்தையும் சொல்லுமென்று ஸூசிதமாய்த்து. (கரு)

இப்படியாசார்யர்க ளுபதேசித்த விந்த ரஹஸ்யார்த்தங்களை தேவரீர்க்ரந்தரூபமாக செய்தருளுவா னென்னென்ன; ஈச்வரவிஷயத்திலும் ஆசார்யவிஷயத்திலும் பக்தியுடையவர்களுக்கு இந்த வர்த்தங்களை யுபதேசித்தால் பஹுகீர்த்தியும் பஹுதர்மங்களு முண்டென்றெண்ணியன்றே, காமதேநுபோன்றவவர்கள் நம்மை ஒருதர்ணகம்போலேயெண்ணி யிந்த ரஹஸ்யத்ரயத்தை வர்ஷித்தார்களென்கிறார் முடிவிலொரு பாட்டாலே.

(பத்தர்களாய்) பக்திமான்களாய், (இரக்கின்றவர்க்கு) யாசிக்கிறவர்களுக்கு, ரஹஸ்ய ததர்த்தங்களிலே பக்தியுடையராய், அபேக்ஷிக்கிறவர்களுக்கென்றபடி, (இவையீந்தால்) இந்த ரஹஸ்யார்த்தங்களைக் கொடுத்தால், (பரக்கும்புகழ்வரும்) விஸ்தாரமாயிருக்கும் கீர்த்தியுண்டாம், புகழ்-கீர்த்தி, பரக்குகை - விசாலமாயிருக்கை. (பைம்பொருள்

வியாக்யானம்.

வாய்த்திடும்) பைமென்று பசுமையாயிங்கு ச்ரேஷ்ட்டவாசி. பரிசுத்த பொருள்கள் வாய்த்துவிடும், அபேக்ஷிதார்த்தமெல்லா முண்டாமென்றபடி. (அறமுளது) அறம் - தர்மம், உளது - உள்ளது, தர்மமுண்டு. (என்ற) இப்படிநினைத்து, (இயம்ப) சொல்லுகைக்கு, உபதேசிக்கைக்கு, (காக்குங்கருத்துடை) காக்கை - நிறைந்திருக்கை, நிறைந்திருக்குங் கருத்தை யுடையவர்களான, பரிபூர்ணமான ஜ்ஞாநௌதார்யாதிகளை யுடையவர்களான வென்றபடி, (தேசிகர்) நல்வழிநடத்துமாசார்யர்கள், (நம்மை) தங்கள் திருவடிகளிலே பக்தியுடையநம்மை, (கன்றென) கோதர்ணகம்போலே, (எண்ணி) நினைத்து, பசுப்ராயரான நம்மிடத்தில் தயைபண்ணியென்று க்ருத்து. (சுரக்கஞ் சுரபிகள்போலே) கன்றுக்கிரங்கிப் பால்சுரக்குஞ் சுரபிகள்போலே, (சொல்லமுதே) ரஹஸ்யத்ரயாத்மகமான சப்தரூபாம்ருதத்தையே (சொரிகின்றனர்) சொரியாநின்றார்கள். அஜ்ஞாந ஸம்சயவிபர்யயங்கள் தீரும்படி நன்றாக வுபதேசியாநின்றார்களென்கை, இத்தால் பக்தியுடைய சிஷ்யர்களுக்கு ரஹஸ்யோபதேசம் ப்ராப்தமாகையால் க்ரந்தரூபமாயிருந்தால் சிரகாலோபகாரமாயிருக்குமென்று தர்சிதமாய்த்து. (கச)

இதுக்குமேல் அபயப்ரதானஸாரத்திலே அடியி லிரண்டுபாட்டு முடிவில் மூன்றுபாட்டுஆக வைந்துபாட்டில் முதல்பாட்டு. ஸகலவேதார்த்த ப்ரதிபாதகமாயும் சரணாகதி சாஸ்த்ரமாயும் ஆதிகாவ்யமாயுமுள்ள ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸப்தகாண்டத்திலும் சரணாகதி ப்ரகாரங்களையும் விசேஷத꞉ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கு அபயப்ரதாநம்பண்ணின ப்ரகரணத்துக்குத் தாத்பர்யார்த்தங்களையும் ப்ரதிபாதியாநின்று கொண்டு விபீஷணாழ்வான் வ்யாஜமாக ஸகலபூதங்களுக்கும் அபயப்ரதாநம்பண்ணின ஶரண்யவாக்யமான “ஸக்ருதேவ ப்ரபந்நாய” (ஸக்ருதேவப்ரபந்நாய) வென்கிற ச்லோகத்துக்கு, பத்து அதிகாரத்தாலே இந்த ரஹஸ்யத்திலே யர்த்தத்தை யருளிச்செய்கைக்காகவடியிலே, “ஜயத்யாஶ்ரித ஸந்த்ராஸ த்வாந்த வித்வம்ஸநோதய꞉” ஜயத்யாஶ்ரித, ப்ராயꞏப்ரபதநே) என்கிற ச்லோகத்வயத்தை மங்களமாகச்செய்தருளி இது மணிப்ரவாளமாகையாலே மங்களாத்மகமான வொருபாட்டாலே க்ரந்தத்துக்கு பரமதாத்பர்யத்தை யருளிச்செய்கிறார்.

(சோகந்தவிர்க்கும்) சோகம்-வ்யஸநம், தவிர்க்கை - போக்குகை, சோகத்தைப் போக்கடிக்குமதான, ஸகலசோக நிவர்த்தகமான வென்றபடி, (சுருதியுள்பொருளொன்று) ச்ருதிகளிலே ஒருபொருள், ச்ருத்யர்த்தங்களிலே முக்யமான வோரர்த்தமென்றபடி, யிங்கு ச்ருதிசப்தம் “வேத꞉ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத்ராமாயணாத்மநா” (வேத꞉ப்ராசேதஸாதாஸீத்ஸாக்ஷாத்ராமா யணாத்மநா) என்கிறபடியே ஸ்ரீமத் ரா

கரு-௩.—சோகந்தவிர்க்குஞ்சுருதியுட்பொருளொன்றுசொல்லுகின்[றேன்
நாகந்தனக்குமிராக்கதர்க்குநமக்குஞ்சரணு
மாகண்டலன்மகனாகியவாவலிப்பெரியதோர்
காகம்பிழைத்திடக்கண்ணழிவேசெய்தகாகுத்தனே. (௫௪)

(ப-ரை.) சோகம் - சோகங்களை, தவிர்க்கும்-நீக்குகின்ற, ஒன்று - அத்விதீயமான, சுருதிப்பொருள் - வேததாத்பர்யத்தை, சொல்லுகின்றேன் - சொல்லுகிறேன், ஆகண்டலன் மகனாகிய - இந்த்ரனது புத்ரனாகிய, ஆவலிப்பு - அகங்காரம், ஏறியது - ஏறினதான, ஓர் காகம் - ஒரு காகமானது, பிழைத்திட - பிராணனோடே போம்படியாக, கண்ணழிவே - நேத்ர ஹாநிமாத்ரத்தையே, செய்த - செய்தவனான, காகுத்தன் - ககுத்ஸ்த குலத்தில்பிறந்த ஸ்ரீராமன், நாகந்தனக்கும் - தேவலோகத்திற்கும், தேவலோக வாஸிகளுக்கும், என்னுதல்; ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கும் என்னுதல்; இராக்கதர்க்கும் - ராக்ஷஸர்களுக்கும், நமக்கும் - மனிதர்களுக்கும், சரணும் - ரக்ஷகனும். (கரு)

வியாக்யானம்.

மாயணபரம். சோகநிவர்தகமான ச்ருதிவிசேஷபரமாகவுமாம். (சொல்லுகின்றேன்) சொல்லாநின்றேன், ஸ்ரீமத்ராமாயணத்தில் ஸாரதமமாய் ச்ருதிக்குமுக்யார்த்தமாய் ஸகலஜநசோகநிவர்த்தகமாயுமுள்ளவோரர்த்தம் சொல்லுகிறேனென்றுகருத்து. இதுக்கு விவரணம்மேல்.(ஆகண்டலன்மகனாகிய) ஸஹஸ்ராக்ஷனான விந்த்ரனுடைய புத்ரனான, (ஆவலிப்பெரியதோர்காகம்) ஆவல் - ஆசாவிசேஷம், அதுடையது-ஆவலி, அத்தாலே பெரியதான வொருகாகமானது, மஹத்தானவாசையுடைய ஜயந்தாத்மகமான காகமென்றபடி, (பிழைத்திட) பிழைக்கைக்காக, (கண்ணழிவேசெய்த) கண்ணழிவுமாத்ரம்செய்தவரான, (காகுத்தனே)காகுஸ்தனானசரண்யனே, அந்தஃபுராபராதியைக்கொல்லவிட்டசரத்தாலே காலில் விழுந்தபின்பு அதுக்கு இரைகொடுத்து கண்ணழிவு மாத்ரம் செய்த ககுத்ஸ்தவம்ச நிர்வாஹனான ஸர்வசரண்யனே யென்றபடி. இதுக்கு சரணுமென்கிறத்தோடன்வயம் (நாகந்தனக்கும்) தன்-ஸ்வார்த்தே. நாகம்ஸ்வர்க்கம், இது லக்ஷணயா தத்ரத்ய ஜநபரம் ஸ்வர்க்கவாஸிகளான ஸகல தேவதைகளுக்கும், (இராக்கதர்க்கும்) ராக்ஷஸர்களுக்கும், (நமக்கும்) அஸ்மதாதிகளுக்கும், (சரணும்) ரக்ஷகனும், தேவமனுஷ்யாதி ஸகலஜாதிகளுக்கும் அந்தகாகுஸ்தன் ரக்ஷகனென்கையே யிந்தக்ரந்தத்திற்கு பரமதாத்பர்யம். சரணுமென்கிறத்தாலே ஸப்தகாண்டத்திலுள்ள சரணாகதிப்ரதிபாதநம் அவாந்தரதாத்பர்ய மென்றதாய்த்து. ஆத்யந்த காண்டங்களில் தேவரக்ஷகத்வமும் மத்யமகாண்டங்களில் மனுஷ்யாதி ரக்ஷகத்வமும், உபாந்த்ய காண்டங்களில் ராக்ஷஸாதி ரக்ஷகத்வமும் ஸ்ரீமத்ராமாயணத்தில் கண்டுகொள்வது. (கரு)

கசு-மூ.—ஒருக்காலேசரணாகவடைகின்றார்க்கு
உனக்கடிமையாகின்றேனென்கின்றார்க்கு
மருக்காதேயனைவர்க்குமனைவராலு
மஞ்சாமனெனருள்கொடுப்பனிதுதானோது
மிருக்காலுமெழின்முனிவர்நினைவினாலு
மிவையறிவார்செயலுடனென்னிசைவினாலு
நெருக்காதநீள்விரதமெனக்கொன்றென்று
நெறியுரைத்தார்நிலையுணர்ந்துநிலைபெற்றோமே. (ருரு)

(ப-ரை.) ஒருக்காலே - ஓராவ்ருத்தியே, சரணாக வடைகின்றார்க்கும்-சாணாகதி செய்பவர்க்கும், உனக்கு-உனக்கு, அடிமையாகின்றேன்-தாஸனாகவாகின்றேன், என்கின்றார்க்கும் - என்று சொல்பவர் களுக்கும், அருக்காதே - ஸங்கோசியாமல், அனைவர்க்கும் - எல்லாருக்கும், அனைவராலும் - எல்லாராலும், அஞ்சேலென்று - பயப்படாதே யென்று, அருள்கொடுப்பன் - க்ருபைசெய்வேன், இதுதான் - இதுவே, ஓதும் - அத்த்யயனம் செய்கின்ற, இருக்காலும்-இருக்கினாலும், எழில்-ஒளிபெற்ற, முனிவர் - யோகிகளது, நினைவினாலும் - ஸ்ம்ருதியினாலும், இவையறிவார் - இவைகளை யறிந்தவர்களுடைய, செயலுடன் - அனுஷ்டானத்தோடு, என்னிசைவினாலும் - என் அங்கீகாரத்தாலும், எனக்கு - எனக்கு, நெருக்காத - நெருக்குப்படாத, ஒன்று - ஒன்றான, நீள்விரதம் - நீண்டவ்ரதம், என்னும் நெறி - என்கிற மார்க்கத்தை, உரைத்தார் - அருளிச்செய்த ஸ்ரீராமனது, நிலை - சரணாகதரக்ஷண தீக்ஷையையென்றபடி, உணர்ந்து - நிலையை அறிந்து, நிலைபெற்றோம்-ஸ்தைர்யத்தை யடைந்தோம், நிர்ப்பரோ நிர்ப்பயோஸ்மியென் றிருக்கப்பெற்றோமென்கை. (கசு)

வியாக்யானம்.

இப்படி இந்த ரஹஸ்யார்த்தத்தை ஸாமான்யமாக வருளிச்செய்து விசேஷமாகத் தாமருளிச்செய்யப்புகுகிற "𑌸𑌕𑍃𑌦𑍇𑌵 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌾𑌯" (ஸக்ருதேவப்ரபந்நாய) என்கிறச் லோகார்த்தத்தையும் அந்த வர்த்தமருளிச்செய்கிற வெட்டா மதிகாரத்திலே தாம்ப்ரமாணமாக வெடுக்கிற) "𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃 𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚 𑌪𑍍𑌰𑌿𑌯𑌮𑌾𑌤𑍍𑌮𑌨𑌃 𑌸𑌮𑍍𑌯𑌕𑍍𑌸𑌙𑍍𑌕𑌲𑍍𑌪𑌜𑌃 𑌕𑌾𑌮𑍋 𑌧𑌰𑍍𑌮𑌮𑍂𑌲𑌮𑌿𑌦𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌮𑍍" (ச்ருதிஸ் ம்ருதிஸ்ஸ தாசாரஃஸ்வஸ்ய சப்ரியமாத்மநஃ ஸம்யக் ஸங்கல்ப ஜஃகாமொ தர்மமூல மிதம்ஸ் ம்ருதம்—என்கிற ச்லோகத்துக் கர்த்தத்தையும் விவரித்து அருளிச்செய்கிறா ரொருபாட்டாலே.

(ஒருக்காலே) ஒருவேளையே, ஸக்ருதாவ்ருத்தியேயென்றபடி (சரணாக) உபாயமாக, (அடைகின்றார்க்கும்) அடையாநின்றிருக்குமவர்களுக்கும், ஸக்ருதாவ்ருத்தி யென்னை யுபாயமாக வடைந்தபேர்களுக்கு

வியாக்யானம்.

மென்றபடி. இது ஸக்ரு தேவப்ரபன்னாய வென்கிறத்தி னர்த்தம். இதுக்கும் மேல் ஷஷ்டிக்கும் அஞ்சாம லருள்கொடுப்ப னென்கிறத்தோடந்வயம். (உனக்கடிமையாகின்றேன்) ஸர்வசரண்யனான வுனக்கு தாஸனாக வாகாநின்றேன், (என்கிறார்க்கும்) இப்படி சொல்லு மவர்களுக்கும், அநந்யப்ர யோஜநரா யென்னுடைய தாஸ்யத்தையே யாசிக்கு மவர்களுக்கு மென்றபடி. தவாஸ்மீதிச யாசதே, யென்கிறத்தி னர்த்தமிது. (அருக்காதே) ஸம்சயப்படாதே, விரோதம் வாராமலென்றுமாம், இது இந்தச்லோகத்தி லர்த்தஸித்தம். (அனைவர்க்கும்) ஸர்வபூதங்களுக்கும், இது ஸம்பந்தஸாமான்யஷஷ்டியாகையாலே "ஸவ-ூ ஊ-மெ-தஹ்ஃ" (ஸர்வபூதேப்யஃ) என்கிறது சதுர்த்தியென்கிற சோமாசியாண்டான் பக்ஷத்தைச் சொல்லித்து, (அனைவராலும்) ஸர்வபூதங்களாலும், இது பஞ்சமிபக்ஷம், (அஞ்சாமல்) பயப்படாமல், (நான்) ஸர்வசரண்யனான நான், (அருள்கொடுப்பன்) க்ருபைபண்ணுவேன், க்ருபையாலே யபயப்ரதானம் பண்ணுவனென்றபடி. அபயம்ஸர்வபூதேப்யோதததாமி என்கிறதினர்த்தமிது, ப்ரதமபக்ஷத்தில் நம்மையடைந்த விவனொருவனுக்கன்று நான்ஸர்வபூதங்கள்பொருட்டு மபயப்ரதானம் பண்ணுகிறேனென்றர்த்தம். த்விதீயபக்ஷத்தில் ஸர்வபூதங்களாலும்பயமில்லாதபடி யபயங்கொடுக்கிறேனென்றர்த்தம். மேல் ச்ருதி ஸ்ம்ருதீத்யாதி ச்லோகார்த்தம், இதுதான் இப்படியபயப்ரதானம் பண்ணினேமென்கிற வர்த்தத்தின்கருத்து (ஓதுமிருக்காலும்) ஓதப்படுகிறருக்காலும், "ஸஙாஞயாஂஸநு யெஷு ஹமெணஷஃ ரஂமெ-தஹ்நூ-தஜீணெ-ஶயாநெ நெநஂஜஹா-த்ஹஸ-வ-ூ-ஷ-" (ஸந்தாஞ்சயாம்ஸந்ததேப்ரஹ்மணேஷஃ, ரமதேதஸ்மிந்நுத ஜீர்ணேசயாநே, நைநம்ஜஹாத்யஹஸ்ஸு பூர்வ்யேஷு, என்கிற ஶ்ருதியாலும் (எழில்) விளங்காநின்ற (முனிவர்) ரிஷிகளுடைய (நினைவினாலும்) ஸம்மதியாலும், "ஆ-ெத-ா வாயதிவாத்ருப்தஃ வரெஷாஂஶரணாமதஃ - ஆரிஃவ்ராணாநுவரிதஜ்ய ரக்ஷிதவ்யஃ க்ருதாதநா" (ஆர்த்தோவாயதிவாத்ருப்தஃ பரேஷாம்சரணாகதஃ, அரிஃப்ராணாந்பரித்யஜ்ய ரக்ஷிதவ்யஃ க்ருதாத்மநா) இத்யாதி ஸ்ம்ருதிகளாலு மென்றபடி. (இவையறிவார் செயலுடன்) இந்த ச்ருதிஸ்ம்ருதிகளை யறியாநின்ற ஸத்துக்களுடைய வநுஷ்டாநத்துடனே, செயலென்று க்ருத்யமாயிங் கநுஷ்டாநபரம். (என்னிசைவினாலும்) என்னுடைய வங்கீகாரத்தாலும், "ஸ்வஸ்யவஹியஆாதூநஃ ஸஂகல்வஜஃ" (ஸ்வஸ்யசப்ரியமாத்மநஃ ஸம்யக்ஸங்கல்பஜஃ) என்கிறதினர்த்தம் இது, கீழது ஸ்பஷ்டம். (நெருக்காத) நெருக்கப்படாத, நெருக்கு - உபத்ரவம், (நீள்விரதம் எனக்கொன்று) எனக்கொன்று நீள்விரதமென்றந்வயம், எனக்கொருதீர்க்கவ்ரதம், சரணாகதரக்ஷண

கஎ-மூ.—பொன்னையிகழ்ந்துவிருகங்கள்புல்லியபுல்லுகந்தால்
மன்னரொடுப்பதப்பொன்னலதேமன்னுலகனைத்துந்
தன்னையிகழ்ந்திடத்தானருள்செய்யுந்தனிச்சிலையோன்
பொன்னடிநாமடைந்தோம்புறமாறென்கொல்செய்திடிலே.()

(ப - னா.) விருகங்கள் - செந்நாய் முதலான ம்ருகங்கள், பொன்னை-ஸ்வர்ணத்தை, இகழ்ந்து - உபேக்ஷித்து, புல்லிய - அற்பமாகிய, புல் - த்ருணத்தை, உகந்தால் - ஸந்தோஷித்து அங்கீகரித்தாலும், மன்னர் - அரசர்கள், எடுப்பது - உகந்தேற்றுக்கொள்வது, அப்பொன்னலதே - அந்தபொன்னேயன்றோ, அதுபோல, மன் - திடமாகிய, உலகனைத்தும் - லோகமெல்லாம், தன்னை - தன்னை, அடைந்திட - ஆச்ரயிக்க, தான் - தான், அருள்செய்யும் - க்ருபைசெய்யுமவனான, தனி - ஒப்பற்ற, சிலையோன் - வில்லாளியான பெருமாளது, பொன்னடி - ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை, நாம் - நாம், அடைந்தோம் - ஆச்ரயித்தோம், புறம் - புறம்பே, ஆர் - யார், என்செய்திடில்கொல் - எதுசெய்தால்தான் நமக்கென்ன. (கஎ)

வியாக்யானம்.

மாகிற விதுதான் ச்ருத்யாதி ஸம்மதமான தீர்க்கவ்ரதமெனக்கென்றர்த்தம். (என்று) இப்படி, (நெறியுரைத்தார்) நெறி-மார்க்கம், சரணகதிமார்க்கத்தைச் சொன்னவனுடைய, “ஏதத்வ்ரதம்” (ஏதத்வ்ரதம் மம) என்கிறதினர்த்தமிது. (நிலை) ஸ்திதியை, சரணகதஸம்ரக்ஷணத்தில் த்ருடாத்யவஸாயத்தை என்றபடி. (உணர்ந்து) அறிந்து, (நிலைபெற்றோமே) நாம் நிலையைப்பெற்றோம், நாமென்படப் புகுகிறோமோவென்று சலியாதே சரண்யவாக்யத்தாலே தைர்யத்தை யடைந்தோமென்றபடி. (கசு)

இப்படிஸமாஸவ்யாஸதாரணமென்கிற கணக்கில் ஸங்க்ரஹமாக வருளிச்செய்த விந்த வர்த்தங்களை பத்ததிகாரத்தாலே விஸ்தாரமாக வருளிச்செய்து பின்பு இப்படி ஸர்வசரண்யனாய் ஸர்வஸுலபனாய் தயாபூர்ணனான ஸர்வேச்வரனை யெல்லாருமடைந்து உஜ்ஜீவியாதேயிருப்பானேனென்கிற சங்கையை ஸத்ருஷ்டாந்தமாகப் பரிஹரியாநின்றுகொண்டு அவன் ஸ்வபாவத்தையறிந்து நாமவன் திருவடிகளை யடைந்தோம் புறம்பேயாரொன்செய்தால் நமக்கென்னவென்கிறு ரொருபாட்டாலே.

(விருகங்கள்) வ்ருகங்கள், இதுபலக்ஷணம், வநம்ருகங்களென்றபடி, (பொன்னையிகழ்ந்து) ஸர்வர்க்கும் ஸ்ப்ருஹணீயமான ஸ்வர்ணத்தை யுபேக்ஷித்து, இகழ்கை - அங்கீகரியாமலிருக்கை. (புல்லிய) ஸர்வோபேக்ஷணீயமான, புல்லியது-க்ஷுத்ரபதார்த்தம், (புல்லுகந்தால்) த்ருணதிகளையுகந் தங்கீகரித்தால், க்ஷுத்ரபதார்த்தங்களை யங்கீகரித்

வியாக்யானம்.

தால் (மன்னர்) ராஜர்கள், (எடுப்பது) உகந்தங்கீகரிப்பது, (பொன்னலதே) பொன்னல்லதோ, ஸ்வர்ணத்தைத்தவிர வேறொருபதார்த்தமோ, விவேகமில்லாத வநம்ருகங்கள் க்ஷுத்ரபதார்த்தங்களை யங்கீகரித்தால் ஸாராஸாரவிவேகிகளான ராஜாக்க ளங்கீகரிக்குமது ஸ்வர்ணமன்றோவென்று விசிஷ்டதாத்பர்யம். மேல்தார்ஷ்டாந்திகம் (மன்னுலகனைத்தும்) ஸ்திரமான விந்தலோகமெல்லாம், சிரகாலஸ்தாயித்வமேயிங்குமன்னுகை. (தன்னை) ஸர்வசரண்யனான தன்னை, (இகழ்ந்திட) உபேக்ஷியாநிற்க, அடையாமலிருக்கவென்றபடி. (தான்) ஸ்வயமேவ, (அருள்) க்ருபைபண்ணுமவனான, தன்னுடைய ஸர்வசரண்யத்வாதிகளையறிந்து தன்னை யவர்களடையாமலிருக்க தான் அவர்கள்ரக்ஷணத்திலே யுத்யுக்தனாயிருக்குமவ னென்றர்த்தம், தன்னை யடைந்திடத்தானருள்செய்யுமென்று சில கோசங்களிலே யிருக்கிறது. அப்போது அவர்களுடைய ஜாதிகுணங்களையும் பூர்வந்தன்னை யுபேக்ஷித்தமையையும் பாராதே யடைந்ததே பற்றாக ரக்ஷிக்குமவனென் றர்த்தம், (தனிச்சிலையோன்) சிலையுடையவன் சிலையோன், சிலை - வில்லு, அத்விதீயதநுர்த்தரனுடைய (பொன்னடி) ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை, (நாமடைந்தோம்) அவனுடைய ஸ்வபாவாதிகளையறிந்த நா மவன்திருவடிகளை யுபாயோபேயமாக வடைந்தோம் (புறமாறென்கொல் செய்திடிலே) புறம் - புறம்பே, ஆறு - உபாயம், செய்திடில் - செய்தால், என்கொல்- என்னவாகும். இதரத்ர உபாயானுஷ்டானம் பண்ணினாலென்ன பலிக்குமென்றபடி. யத்வா-புறம்பே யாதொன்னசெய்திட்டாலென்னவென்றுமர்த்தம் கொள்ளலாம். கொல்லென்று ஓவென்கிற பர்யாயமா யாக்ஷேபோக்தி, சரணாகதிதவிர வேறுபாயம்செய்தா லென்ன ப்ரயோஜனமென்றுமாம். இத்தால் நாமவன் ஸ்வபாவமறிந்தடைந்தோம், இதரர்களடையாத்தாலே நமக்கென்ன ப்ரயோஜனஹாநியென்று கர்ப்பிதம்.(கஎ)

பொன்னடி நாமடைந்தோ மென்றவன் திருவடிகளை யுபாயமாக வருளிச்செய்த தேவரீர் வேதாந்தங்களிலே கர்மஜ்ஞாநபக்தியோகங்களை யுபாயமாகச் சொல்லியிருக்கிறதேயென்ன இந்த சரணாகதி ஸகலபலஸாதனமாகையாலே யந்தகர்மயோகாத் யதிகாரிக்கு அதுகளையும் ஸாதித்துக் கொடுக்கும், அதில் அநதிகாரிக்கு மதின் பலமான மோக்ஷத்தையும் ஸாதித்துக் கொடுக்குமாகையால் அந்த வர்த்தங்களை விவரித்து சொல்லிக்கொடுக்கிற விந்த வபயப்ரதாந ச்லோகார்த்தத்தை நெஞ்சில் தேக்கிக்கொள்ளுங்களென்கிறா ரொருபாட்டாலே.

(வேதத்திரளில்) வேதங்களுடைய ஸமூஹங்களிலிருக்கிற, ஸகலவேதாந்த பாகங்களிலேயு மிருக்கிறவென்றபடி, (விதி) விதியை-மோக்ஷோபாயவிதியை யென்றபடி. (உணர்ந்தோர்கள்) நன்றாகவறிந்தவர்

கஅ-மூ.—வேதத்திரளில்விதியுணர்ந்தோர்கள்விரித்துரைத்த
காதற்கதியையுஞ்ஞானத்தையுங்கருமங்களேயும்
சாதிக்கவல்லசரணுகதிதனிநின்றநிலே
ஓதத்துடங்குமெழுத்தின்திறத்திலுணர்மின்களே. (ருஎ)

(ப-ரா.) வேதத்திரளில் - வேதங்களின்கூட்டத்தில் சொல்லிய, விதி-விதியை, உணர்ந்தோர்கள்-அறிந்தவர்கள், விரித்து - விஸ்தரித்து, உரைத்த - கீதாசார்யன் உபதேசித்த, காதற்கதியையும்-பக்திமார்க்கத்தையும், ஞானத்தையும்-ஜ்ஞானயோகத்தையும், கருமங்களேயும் - கர்மயோகத்தையும், சாதிக்கவல்ல - தானேஸாதிக்க ஸமர்த்தமான, அதுகளின் காரியங்களேத் தானேசெய்து தரவல்லதான வென்கை, சரணுகதி - ப்ரபத்திமார்க்கமானது, தனி - ஒப்பில்லாமல், நின்றநிலே-நின்றரீதியை, ஓதத்துடங்கு மெழுத்தின்திறத்தில் - வேதமோதுவதற்கு முதலில் துடங்கப்படும் ஓரக்ஷரமான ப்ரணவத்தின் ப்ரகாரத்தில், உணர்மின்கள் - அறிந்துகொள்ளுங்கோள். (கஅ)

வியாக்யானம்.

கள், (விரித்துரைத்த) அவர்களாலே விவரித்துச் சொல்லப்பட்டதுகளான, (காதற்கதியையும்) காதலென்று ப்ரேமமாய் தத்விசேஷமான தத்பக்தியைச்சொல்லும், கதி - உபாயம், பக்திரூபோ பாயத்தையும், (ஞானத்தையும்) ததுபாயமான ஜ்ஞானயோகத்தையும், (கருமங்களேயும்) அந்தவிரண்டுக்கும் ஸாதனமான கர்மயோகத்தையும், (சாதிக்கவல்ல) ஸாதிக்கைக்கு சக்தமான, இத்தாலங்க பக்தியைச்சொன்னபடி. (சரணுகதி) சரணுகதியினுடைய, (தனிநின்றநிலே) தனியாகநின்றநிலே, ஸ்வதந்த்ரமாகநின்ற நிலேயென்றபடி. இது ஸகல பலஸாதனமென்றதாய்த்து. (ஓதத்துடங்கும்) ஸகலபலஸாதனமான ப்ரபத்தியினுடைய மோக்ஷார்த்தமாக ஸ்வதந்த்ரமான நிலேயை சொல்லத்துடங்கினதான, (எழுத்தின்திறத்தில்) எழுத்துகளுடைய ஸாமர்த்யத்திலே, ஸ்வதந்த்ர ப்ரபத்திவாசகமான “ஸக்ருதேவப்ரபந்நாய” (ஸக்ருதேவப்ரபன்னுய) வென்கிற ச்லோகாந்தர்கதாக்ஷரார்த்த ஸாமர்த்யத்திலே, (உணர்மின்கள்) மத்யமபுருஷபஹுவசனம். நன்ருகவறியுங்கோள், ஸ்வதந்த்ரப்ரபத்தியை இதிசேஷ:. இந்த ச்லோகார்த்தத்தையறிந்து ப்ரபத்திமோக்ஷோபாயமென்றறியுங்கள் என்று தாத்பரியம். (கஅ)

சிரகால ஸாத்யங்களான பக்த்யாத்யுபாயங்களாலே ப்ரஸன்னனுகிற ஈச்வரன் க்ஷணகால ஸாத்யமான ப்ரபத்தியாலே ப்ரஸன்னனுய பேக்ஷித்தபலன்களேக் கொடுப்பனே; இப்ரபத்திதான் ஸகலபல ஸாதநமானபடி கண்டதுண்டோ; அந்த வுபாயாந்தரங்களுக்கு த்ரைவர்ணிகாத்யதிகார நியதத்வமுண்டாகிறதுபோலே இதுக்கதிகாரிகள் தானுர் என்கிற வித்யாதி சங்கையில் வ்யாஜமாத்ர ஸாபேக்ஷனுய் வத்யு

கக-மூ.—மூவுலகுந்தன்பிழையைத்தானேசாற்ற
முனிவர்களுந்தேவர்களுமுனிந்தவந்நாள்
தாவரிதாயெங்கும்போய்த்தளர்ந்துவீழ்ந்த
தனிக்காகந்தானிரந்தவுயிர்வழங்கிக்
காவலினியெமக்கெங்குங்கடனென்றெண்ணிக்
காணனிலையிலச்சினையன்றிட்டவள்ள
லேவல்பயனிரக்கமிதுக்காறென்றேது
மெழிலுடையாரிணையடிக்கீழிருப்போம்நாமே. (ருஅ)

(ப-ா.) மூவுலகும் - மூன்றுலோகங்களிலும், தன்பிழையை-தன் அபராதத்தை, தான் - தானே, சாற்ற - சொல்ல, முனிவர்களும்-ருஷிகளும், தேவர்களும் - தேவதைகளும், முனிந்த-கோபித்துக்கொண்ட, அந்நாள் - அந்தநாளிலே, எங்கும்போய் - கண்டவிடமெல்லாம்போய், தாவு அரிதாய் - ரக்ஷாஸ்தானம் துர்லபமாய், தளர்ந்து - தளர்ச்சி பெற்று, வீழ்ந்த - தானிருந்தவிடத்தில்வந்து கீழேவிழுந்த, தனி - தனிமையான, ரக்ஷகாந்தரரஹிதமான, காகந்தான் - காகமானது, இரந்த - யாசித்த, உயிர் - பிராணனை, வழங்கி - கொடுத்து, இனி - இது சரணாகதிசெய்தபின்பு, காவல் - இதை ரக்ஷிப்பது, எங்கும் - எல்லாவிடத்தும், எமக்கு-நமக்கு, கடன்-அவஶ்யகர்த்தவ்யம், என்றெண்ணி-என்றுநினைத்து, அன்று - அப்போது, காணன்நிலை - ஏகாக்ஷவிகலனது ஸ்திதியை, இலச்சினை - அறிகுறியாக, இட்ட - செய்துவைத்த, வள்ளல் - மஹோதாரனும், இதுக்கு - இப்படியான நம்ப்ரஸாதத்தைப் பெறுகைக்கு. ஏவல் - ஏவுதலை, ஆஜ்ஞாபித்தலையே, பயன் - பயனாக, இரக்கம் - யாசிப்பது, ஆறு - உபாயம், என்றேதும் - என்றருளிச் செய்யும், எழிலுடையார் - ஒளியுள்ளவருமாகிய பெருமாளது, இணையடிக்கீழ்-திருவடியின்கீழ், நாம்-நாம், இருப்போம்-வாழ்வோம். (கக)

வியாக்யானம்.

தாரணைகையாலே ஈச்வர னபேக்ஷித்த பலந்தருமென்று மவனுடைய வௌதார்யாதிகளையும் ப்ரபத்தி ஸகலபலஸாதனமானமையும் வெளிப்படுகிற காகாஸுரவ்ருத்தாந்தமொன்றுமே நமக்கு ஸகலநிதாநமாக வமையுமென்றும் காட்டாநின்றுகொண்டு ப்ரபந்ததாத்பர்யத்தை தலைக்கட்டுகிறார் ஒருபாட்டாலே.

(மூவுலகும்) மூன்று லோகங்களிலேயும், (தன்பிழையை) பிழை - குற்றம். தன்குற்றத்தை, ஸ்வாபராதத்தை யென்றபடி. (தானேசாற்ற) தான் தானேசொல்ல, (முனிவர்களும்) ரிஷிகளும், (தேவர்களும்) தேவதைகளும், (முனிந்தவந்நாள்) கோபித்துக்கொண்ட வப்போது, கோபித்துக்கொண்டு தள்ளிவிட்டவந்த வேளையிலேயென்றபடி. நானபராதப்பட்டேன் சரமென்னை நலியாநிற்கிறது நீங்களென்னை ரக்ஷியுங்

வியாக்யானம்.

கோள் என்று த்ரிலோகவர்த்திகளான தேவாதிகளிடத்தி லறிவிக்க வவர்கள் சரண்யாபிப்ராயமறிந்து கோபத்தோடே தள்ளிவிட்டபோதென்றுகட்ட தாத்பர்யம். (எங்கும்போய்) ஸர்வத்ரபோய், தச்சனடித்த தலைவாசலெல்லாம் நுழைந்தென்றபடி. (தாவரிதாய்) தாவு - பிடிப்பிடம், அரிது - அசக்யம், ரக்ஷகாவலம்பன மசக்யமானவாறே, (தளர்ந்து) தளர்த்தியையடைந்து, இனிநா மென்படப் புகுகிறோமோவென்று கனைத்தலோடேயென்றபடி. (விழுந்ததனிக்காகம்) தன் திருவடிகளிலே வந்துவீழ்ந்த தனியான காகத்துக்கு, ரக்ஷகாந்தராபாவமேயதற்குத் தனிமை. (தானிரந்தவுயிர் வழங்கி) அதுதான் வீழ்ந்ததுக்கு பலமாக யாசித்த ப்ராணனைக்கொடுத்து, இதுக்கன்றிட்ட வென்கிறத்தோ டந்வயம். ‟ஸவிதூரவஸிதஃ தூ꞉ ஸ꞉ெரௌஸவஉஹஷி꞉ஹி꞉ தீநுெஜாகாநுஸவஸிகூ உ்தெவஸுணஂம தஃ” (ஸபித்ராச பரித்யக்த : ஸுரைச்சஸமஹர்ஷிபி : த்ரீந்லோகாந்ஸம்பரி க்ரம்யதமேவசரணங்கதஃ) என்றும், ‟வயாஹ꞉உவிகாக꞉ஷஃ க்ருவயாவய꞉வாஜயச” (வதார்ஹமபிகாகுஸ்த : க்ருபையாபர்யபாலயத்) என்றுஞ் சொல்லுகிறவர்த்தங்க ளிவ்வளவு. இவன் சரணாகதனானபின்பு (எமக்கு) சரணாகதரக்ஷணத்திலே தீக்ஷிதனானவெமக்கு, (எங்கும்) ஸர்வதா ஸர்வத்ர ஸர்வாவஸ்தையிலும், (காவல்) ரக்ஷணமானது, (கடன்) ருணம், அதுபோலே ப்ராப்தமென்றபடி. (என்றெண்ணி) இப்படிநினைத்து, (அன்று) அந்தகாகத்துக்கு ப்ராணப்ரதானம்பண்ணினபோது, (காணனிலை) காணனுடைய நிலை, காணன் - ஏகநேத்ரவிகலன், ஏகாக்ஷித்வத்தையென்றபடி, (இலச்சினை) அடையாளமாக, (இட்டவள்ளல்) கொடுத்தவுதாரன், இடுகை - கொடுக்கை, துஷ்ப்ரக்ருதியான விக்காகத்துக்குக் கேட்ட ப்ராணனைக்கொடுத்து மேலு மபராதத்தைப்பண்ணி இந்தப்ராணனைப் போக்காமைக்காக வடையாளம்போலேயும் சரத்துக்குலக்ஷ்யமாகவும் ஒருகண்ணை வாங்கி ப்ராணவியோகம் பண்ணிவையாமல் ரக்ஷிக்கு மத்யுதாரனானவென் றர்த்தம். இதுக்கு எழிலுடையா ரென்கிறதோ டந்வயம். இவ்வளவால் சரணாகதியினுடைய ஸகலபல ஸாதநத்வம்தர்சிதம். மேல் ப்ரக்ருதார்த்தம். (ஏவல்பயனிரக்கம்) ஏவுகிறதென்ன பலத்தை யாசிக்குறதென்ன, (இதுக்கு) இந்தகார்யங்களுக்கு, ஏவுகை - ஒருகாரியத்தில் நியோகிக்கை, இரக்குகை - யாசிக்கை, பயன் - பலம், பயனிரக்கையாவது ஒருபலத்தை யாசிக்கை, ஆகவிந்தவிரண்டுகளுக்கும் (ஆரொன்றோதும்) ஆர் விஷயமென்று ஓதுமவனான, எனக்கு ஒருகார்ய நியோகத்தையும் என்னிடத்தி லொருபலயாசனத்தையும் யார் பண்ணப்புகுகிறார்களென்று சொல்லுமவனானவென்றர்த்தம். ஏவல் என்றத்தாலே ‟ஸக்ருதெவவ்ரவந்நாய” (ஸக்ருதேவப்ரபன்னாய) வென்கிறத்தி னர்த்தமான வுபாயாந்தரஸ்தாநநிவேசமும்,

உ0-மூ.—திருத்தம்பெரியவர்சேருந்துறையிற்செறிவிலர்க்கு
வருத்தங்கழிந்தவழியருளென்னநம்மண்மகளார்
கருத்தொன்றவாதிவராகமுரைத்தகதியறிவார்
பொருத்தந்தெளிந்துரைக்கப்பொய்யிலாமதிபெற்றனமே. ()

(ப-ரை.) திருத்தம் - திருத்தத்தில், வேதார்த்தநிர்ணயாதிகளில், பெரியவர் - பெரியோர்களாகிய மஹரிஷிகள், சேரும் - சேருகின்ற, துறையில் - மோக்ஷோபாயமான பக்தியோகத்தில், செறிவிலர்க்கு - ப்ரவேசமில்லாதவர்க்கு. அஜ்ஞருமாய் அசக்தருமாய் பக்தியோகாநதி காரிகளானவர்களுக்கு, வருத்தம்கழிந்த - ப்ரயாஸரஹிதமான, வழி - வழியை உபாயத்தை, அருள் - க்ருபை செய்யவேண்டும், என்ற - என்றுப்ரார்த்தித்த, நம்மண்மகளார் - நமது மாதாவான ஸ்ரீ பூமிப்பி ராட்டியாரது, கருத்தொன்ற - திருவுள்ளத்தில் யுக்தமென்று படியும் படி, ஆதிவராகம் - ஆதிவராகநயினர், உரைத்த - உபதேசித்த, கதி - ப்ரபத்திரூபமான உபாயத்தை, அறிவார் - அறிந்தவர்களான நம்மாசி ரியர்கள், பொருத்தல் - ஷித்தாரிருணருணிபாவம் முதலிய பொருத் தங்களை, தெளிந்து - தெளிந்து, உரைக்க - அந்த ரஹஸ்யசிகா மணியென்கிற மந்த்ரத்தையும் அதன் அர்த்தங்களையும் உபதேசிக்க, பொய்யிலா - பொய்யில்லாத, ஸத்யமான; மதி-புத்தியை, பெற்றனம் - அடைந்தோம். (உ0)

வியாக்யானம்.

பயனிரக்கமென்றத்தாலே “தவாஸ்மீதிசயாசதே” (தவாஸ்மீதிசயாச தே) என்கிறத்தி னர்த்தமான பல யாசனமும், சொன்னபடி. ஓதுமென் றத்தாலே யிந்தஸ்லோக மவனுடைய திருப்பவளத்தாலேவந்த ஶப்த மென்று ஸூசிதம். (எழிலுடையார்) எழில் - ஔஜ்வல்யம், அதையு டையவருடைய, இப்படி யோதுகையால் வந்தவௌஜ்வல்யத்தை யுடை யவனுடைய வென்றபடி. (இணையடிக்கீழ்) பரஸ்பரஸத்ருசமான திரு வடிகளின்கீழே, (இருப்போம்நாமே) நாமிருப்போமே. உன்பாதநிழ லல்லால் மற்றோ ரிருப்பிடம் யானென்றுங் காண்கிறிலேன் : என்னும் படியத்தையே யுபாயமாகப் பற்றுவோமென்றர்த்தம். (கசூ)

இதுக்குமேல் ரஹஸ்யசிகாமணியி லாத்யங்களாயிருக்கிற நாலு பாட்டில் முதல்பாட்டு, இந்தரஹஸ்யத்திலே வேதோபப்ரும்ஹணங்க ளில் ப்ரதானதமமான ஸ்ரீ வராஹபுராணத்திலே வராஹநயினாராலே யுத்த்ருதையாய் ஜகன்மாதாவான பூமிபிராட்டி லோகஹிதார்த்த மெம் பெருமானை தத்ப்ராப்திக்கு ஸுகரோபாயங்களைக் கேழ்க்க வந்த ஸர் வேச்வரன் பரம்பரோபகாரகங்களான ஸம்மார்ஜநோப லேபனுதிகளை யருளிச்செய்து ஸுகரமாய் க்ஷணகால ஸாத்யமாய் ஸர்வாதிகாரமான ப்ரபத்தியை இரண்டுஸ்லோகத்தாலே யருளிச்செய்தார். அந்தஸ்லோ

வியாக்யானம்.

கத்வயத்துக்கு விஸ்தாரமான வர்த்தங்களைச் செய்யத்துடங்கி “ஸ்திரச ரஜகந்மாதுஃ, காபிகல்பாந்தவேசந்தே” (ஸ்திரசரஜகன்மாதுஃ, காபிகல் பாந்தவேசந்தே) என்கிற இரண்டு ஸ்லோகத்தாலே ப்ரக்ருதார்த்தத்தையும் மங்களத்தையு மருளிச்செய்து இஸ்லோகத்வய மவதரித்த க்ரமத்தையு மதுக்கு முக்யார்த்தத்தையு மொருபாட்டாலே யடியிலே காட்டியருளுகிறார்.

(திருத்தம்பெரியவர்) திருத்தமாவது திருந்தியிருக்கை, அதாவது ஜ்ஞாநசக்த்யாதிகளையுடைத்தாயிருக்கை, அத்தாலே பெரியவர், ஜ்ஞாநசக்த்யாதிகளாலே பூர்ணரென்றபடி. (சேருந்துறையில்) அவர்களாலே சேரப்படுமதான துறையில், துறையென்ற வதரணஸ்தலமாயிங் கவர்களிழிந்த வுபாயவிசேஷத்தைச் சொல்லும். பூர்ணஜ்ஞாநாதிகளை யுடையவ ரநுஷ்டிக்கும் பக்தியிலேயென்றபடி. (செறிவிலர்க்கு) செறிவு - செறிந்திருக்கை, அதாவது பாஹ்யேந்த்ரியத்தோடே மநஸ்ஸு ஏகாஸ்ரயமாயிருக்கை. அதில்லாதவர்களுக்கு, உபாஸநயோக்யமான மநோநைர்மல்யாதிக ளில்லாதவர்களுக்கு மென்றபடி. (வருத்தங்கழிந்தவழி) வருத்தம்-ப்ரயாஸம். அது கழிந்திருக்கும் மார்க்கத்தை, பகவத்ப்ராப்திக்கு ப்ரயாஸரஹிதமான மார்க்கத்தையென்றபடி. (அருளென்றன) க்ருபைபண்ணு என்று சொல்லாநின்ற, “மத்க்ருதே ஸர்வபூதாநாம் லகூபாயம்வத ப்ரபோ” (மத்க்ருதேஸர்வபூதாநாம் லகூபாயம்வத ப்ரபோ) என்று பெருமாளை ப்ரார்த்தியாநின்றவென்றபடி. வந்த வராகநயினா ரருளிச்செய்ததான, (நம்மண்மகளார்) மண்மகள் பூமிப்பிராட்டி. நமக்கு மாதாவான பூமிப்பிராட்டியினுடைய, (க்ருத்தொன்ற) கருத்தொன்றும்படி, அவள் கேட்ட ப்ரஸ்னத்துக் கநுகுணமாகவென்றபடி. (ஆதிவராகமுரைத்த) ஜகத்காரணபூதனான வந்த வாதிவராக நயினா ரருளிச்செய்ததான, (கதியறிவார்) கதியையறியுமவர்கள், கதிஸப்தமிங்கு பூர்வோத்தர ஸ்லோகங்களிற் சொன்ன வுபாயத்தையும் த்விதீயஸ்லோகார்த்தமான பலத்தையும், சொல்லும், அதையறிந்தவர்கள் என்கை. (பொருத்தம்தெளிந்துரைக்க) பொருத்தமாவது சொல்லுகிறவர்த்தம் அந்தச்லோகத்துக்கு பொருந்தியிருக்கை. அது தெளிந்துசொல்ல, அந்த ஸ்லோகத்துக்கு யுக்தமான வர்த்தத்தை நமக்குத் தெளியச்சொல்லவே யென்றபடி. (பொய்யிலாதமதி) பொய்யிலாதபுத்தியை, ப்ரமவிப்ரலம்பாதிரஹிதமான யதார்த்த ஜ்ஞானத்தையென்றபடி. (பெற்றனம்) அடைந்தோம், நாமிதிசேஷஃ, இத்தாலிஸ்லோகத்தி லுபாயமாகச் சொல்லப்பட்ட ஸ்மரணம் கேவல ஸ்மரணமென்று சிலர் சொல்லவே யிதர ப்ரமாணாநுகுணமாக ஸாதரமாய் ஸாங்கமாய் ஸ்மரணவிசேஷமான ப்ரபத்தியே யிங்குவிவக்ஷிதமென்று

உக-மூ.— இடம்பெற்ருரெல்லாமென்னுடலாய்நிற்க
விடற்பிறப்பொன்றிவையில்லாவென்னேயென்பாற்
றிடம்பற்ருமவனென்றுநினேந்தான்யாவ
னவனுவிசரியும்போதறிவுமாறி
யுடம்பிற்ருனுபலம்போற்கிடக்கநானே
யுய்யும்வகைநினேந்துயர்ந்தகதியாலென்ற
னிடம்பெற்றென்னுடன்வாழவெடுப்பனென்ன
வெம்பெருமானருள்பெற்றுமருள்செற்ருேமே. (சூ0)

(ப - ரை.) இடம்பெற்ருர் எல்லாம் - இந்தலோகங்களில் இடம் பெற்றவர்களான எல்லாரும், ஸகல சேதநாசேதனங்களும்; என்னுடலாய் நிற்க - எனக்கு சரீரமாயிருக்க, இடர் - ஆபத்தும், பிறப்பு - ஜனனமும், இவையொன்று - இவையொன்றும், இல்லா - இல்லாத, என்னே - என்னே, அன்பால் - பக்தியோடே, அவன் - அந்தஸர்வேச்வரன், அடம் - தீமைக்கு, பற்ரும் - அவலம்பநமாவன், என்று - இப்படி அத்யவஸித்து, யாவன் - யாதொருவன், நினேந்தான் - நினேத்தானே, அவன் - அவனது, ஆவி - ப்ராணன், சரியும்போது - தேகத்தைவிட்டுப் போம்போது, அறிவுமாறி - ஜ்ஞானம்மாறுபட்டு, உடம்பில் - தேகத்தில், தான் - ஜீவாத்மா, உபலம்போல் - கல்போல, கிடக்க - இருக்க, நானே - ஸர்வரக்ஷகனுன நானே, உய்யும்வகை - அவன் உஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தை, நினேந்து - நினேந்து, உயர்ந்த - உத்கிருஷ்டமாகிய, கதியால்- அர்ச்சிராதி மார்க்கத்தாலே, என்தன் - எனது, இடம்-ஸ்த்தானமாகிய பரமபதத்தை, பெற்று - அடைந்து, என்னுடன் - என்னுடன் கூட, வாழ - வாழும்படி, எடுப்பன் - உயரவெடுப்பன், என்ற - என்றருளிச்செய்த, எம்பெருமான் - ஸர்வேச்வரனுனவராஹ நயினுருடைய, அருள்பெற்று - க்ருபையைப்பெற்று, மருள் - அஜ்ஞானத்தை, செற்ருேம் - நீக்கினேம். (உக)

வியாக்யானம்.

நம்மாசார்யர்கள் சொன்னுர்கள். ததர்த்தமே யிந்த ரஹஸ்யப்ரவ்ருத்தியென்று ஸூசிதமாய்த்து. (உ0)

இப்படி ஶ்லோகத்வய மவதரித்த க்ரமத்தை ஸங்க்ரஹமாக வருளிச்செய்து ஸ்த்திதே மனஸி என்று துடங்கி அதற்கு பதஶஃ விஸ்தாரமாக வர்த்தங்களேயும் அருளிச்செய்து தாமருளிச்செய்த வர்த்தங்களேயெல்லாம் ஸுகரமாக வநுஸந்திக்கைக்காக அந்த ஶ்லோகங்களிலிருக்கிற பதங்களுடைய வர்த்தங்களே க்ரமமாக ஸ்வாநுஸந்தானரூபமான வொருபாட்டாலே முடிவில் ஸங்க்ரஹிக்கிருர்.

(இடம்பெற்ருரெல்லாம்) இடம்-ஸ்த்தாநம், அதுபெற்ருரெல்லாரும், சரீரம்பெற்ற ஸகலபூதங்களும், நாமரூபவாக்குகளான ஸகலவஸ்

வியாக்யானம்.

துக்களுமென்றபடி. (என்னுடலாய்நிற்க) உடல் - சரீரம், எனக்குசரீரமாகாநின்றிருக்க, (இடர்பிறப்பொன்றிவை யில்லாவென்னை) இடர் ப்ரதிபந்தகம், அவத்யமென்னவுமாம். பிறப்பு - ஜந்மம், இதுகளொன்றுமில்லாதவென்னை, சேதநாசேதந சரீரியாயிருந்தாலும் அவத்யமன்றியிலேயும் ப்ரக்ருதியிலே யவத்ரித்தாலும் கர்மக்ருதஜன்மமன்றியிலே இருக்கிறவென்னை யென்றபடி. இதுக்கு நினைத்தா னென்கிறத்தோடந்வயம், "விஶ்வ-ரூபமஜம்மாம்" (விச்வரூபமஜம்மாம்) மென்கிற பதத்ரயார்த்த மிவ்வளவு. (அவன்) அந்தஸர்வேச்வரன், (திடம்பற்றும்) திடம் - த்ருடம், பற்று - அவலம்பம், த்ருடமான வவலம்பமாம், அவனே நல்லவுபாயமாவனென்றபடி. அடம்பற்றுமென்று பாடமானல் அடுக்கை - பசிக்கை. அடமென்று பக்வமாய் ஶ்ரேஷ்ட்டவாசி. ஶ்ரேஷ்ட்டமானவ வலம்பநமென் றர்த்தங்கொள்ளலாம். (என்று) இப்படி யெண்ணிக்கொண்டு, (அன்பால்) ப்ரேமத்தால், (நினைந்தான்யாவன்) நினைக்கிறவன் யாவனொருவன், அன்பாலே நினைக்கிறானேயென்றுமாம். அன்பால் திடம்பற்றுமென்று நேரேயன்வயித்து நம்மிடத்தில் ப்ரேமத்தாலே நமக்கு நல்ல வவலம்பமானவனென்று யாவனொருவன் நினைக்கிறானேயென்றும் யோஜிக்கலாம். "ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே ஶரீரே ஸதி யோ நரஃ, தாது ஸாம்யே ஸ்திதே ஸ்மர்த்தா" (ஸ்த்திதேமனஸி ஸுஸ்வஸ்த்தேசரீரேஸதியோநரஃ, தாதுஸாம்யேஸ்த்திதே ஸ்மர்த்தா) என்கிற பதங்களுடைய வர்த்தங்களிவ்வளவு இங்குசொன்ன ஸ்மரணமுபாய விசேஷபரம். மேலிரண்டாம் ஶ்லோகார்த்தம். (அவனுவிசரியும்போது) அப்படி நினைந்தவனுடைய ப்ராணன் சரிந்துபோம்போது, (உடம்பில்) தன்சரீரத்திலே, (தான்) அந்தஜீவாத்மாவானவன், (அறிவுமாறி) அறிவு - ஜ்ஞாநம், தனக்குள்ள ஜ்ஞாநமுமாறிப்போய், தர்மபூதஜ்ஞாநப்ரஸரண மன்றியிலே யென்றபடி, (உபலம்போல் கிடக்க) உபலம் - சிலை, அதுபோல, ஜ்ஞான சூன்யனுய்கிடக்க; "ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்ட பாஷாண ஸந்நிபம்" (ததஸ்தம்ம்ரியமாணந்து காஷ்ட்டபாஷாணஸன்னிபம்) என்கிறத்தி னர்த்தமிவ்வளவு. (நானே) ஹார்தரூபனானநானே, (உய்யும்வகைநினைந்து) உஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தை நினைத்து, இத்தாலிவனுடையவந்திம ஸ்மரணமீஶ்வராயத்தமென்றபடி "அஹம் ஸ்மராமி மத்பக்தம்" (அஹம்ஸ்மராமிமத்பக்தம்) என்ற வர்த்தமிது (உயர்ந்தகதியால்) உச்ச்ருதமானகதியாலே, ஸர்வோத்க்ருஷ்ட மான வர்ச்சிராதிகதியாலே யென்றபடி. (என்தனிடம்பெற்று) தன் ஸ்வார்த்தே, எனக்கஸாதாரணவிடமான நித்யவிபூதியையடைந்து; (என்னுடன்வாழவெடுப்பன்) பரமபதநிலயனுன வென்னோடேகூடி வாழுகைக்காக வெடாநிற்பேன், ஹார்தரூபனானநான் ப்ரும்மநாடி ப்ரவேசமுதல் அர்ச்

உஉ-மூ. இரண்டுரையாதநமெனமுரைத்தவுரையிரண்டின்
திரண்டபொருள்கடெளிந்தடிசூடிநந்திண்ணருளாற்
சுருண்டநஞ்ஞானச்சுடரொளிசுற்றும்பரப்பதன்முன்
புரண்டதுநம்வினைபோமிடம்பார்த்தினிப்போமளவே. (சுக)

(ப - ரை.) இரண்டு - இரண்டாவது வார்த்தையை, உரையாத - அருளிச்செய்யாத, நம் - நம் ஸ்வாமியான, ஏனம் - ஸ்ரீவராகநயினர், உரைத்த - உபதேசித்த, உரையிரண்டின் - வாக்கியமிரண்டினது இரண்டு ஸ்லோகமாகிய ரஹஸ்ய சிகாமணியினது, திரண்ட - ஸாராம்சமான, பொருள்கள் - அர்த்தங்களை, தெளிந்து - தெளிவாயறிந்து, அடி - எம்பெருமான் திருவடிகளை, சூடினம் - சிரஸ்ஸில் அணிந்தோம், பகவச்சரணாரவிந்தங்களில் ஆச்ரயிக்கப்பெற்றோமென்கை; திண் - திடமான, இருளால் - அக்கியானந்த காரத்தினல், சுருண்ட - சுருட்டிக்கொண்ட, ஸங்குசிதமானவென்றபடி; நம் - நமது, ஞானச்சுடர் - ஜ்ஞானமாகிற தேஜஸ்ஸினது, ஒளி - பிரகாசம், சுற்றும் - முழுதும், பரப்பதன்முன் - பரவுவதற்குமுன்னே, நம் - நமது, வினை - புண்ய பாபரூபங்களான கர்மங்கள், புரண்டது - புரண்டன, இடம்விட்டு மாறினவென்கை; இனி - இனிமேல், அவை; போமிடம் - போகவேண்டிய இடத்தை, பார்த்து - பார்த்து, போமளவே - போகிறவளவே, உள்ளது - உள்ளது. (உஉ)

வியாக்யானம்.

சிராதிகதியாலே நித்யவிபூதியிலே கொண்டுபோய் என்னோடேவாழும்படி பரமஸாம்யங் கொடுப்பேனென் றர்த்தம். "நயாமிபரமாங்கதிம்" நயாமிபரமாங்கதிம் என்கிறவர்த்தம். (என்றவெம்பெருமா னருள்பெற்று) இப்படியருளிச்செய்த வெனக்கு ஸ்வாமியானவராக நயினருடைய க்ருபையை யடைந்து, (மருள்செற்றோமே) அஜ்ஞாநத்தைப்போக்கினோம், மருள் - அஜ்ஞாநம். இஸ்லோகத்துக்குக் குமதிகள்சொல்லு மர்த்தவிசேஷத்தையறிந்து ப்ரமியாமல் ஸம்யக் ஜ்ஞானத்தை யடைந்தோமென்றபடி. (உக)

இப்படி ஜகன்மாதாவான ஸ்ரீபூமிப்பிராட்டியார் தன் ப்ரஜாஸம்ரக்ஷணார்த்தமாக ஸர்வலோக சரண்யனனவராக நயினரைக்கேழ்க்க, அந்தவராக நயினருளிச்செய்த வார்த்தையாகையாலே ஸத்யமானவிந்த ச்லோகத்வ யார்த்தத்தை யுள்ளபடியே யறிந்து அதிலேசொன்ன வுபாயாநுஷ்ட்டாநம் பண்ணின பேர்களுக்குவரும் பலவிசேஷத்தை முகபேதத்தா லொருபாட்டாலே யருளிச்செய்கிறார்.

(இரண்டுரையாதநம் ஏனமுரைத்த) "ராமோத்விர்நாபிபாஷதே" (ராமொத்விர்நாபிபாஷதெ) இத்யாதிரீதியில் பூர்வோக்தத்துக்கு அன்யதாவாக வேறெ ஒருவார்த்தை யருளிச்செய்யாத நமக்கு ஸ்வாமியானவ

வியாக்யானம்.

ராக நயினருனாத்ததான, ஏனம் வராஹம். ஆப்ததமவாக்ய மாகையா லெ ஸத்யமென்றபடி. (உனாயிரண்டின்) சப்தரூபமான விரண்டுப்ஃ லோகங்களுடைய, ஏனமுனாத்த - வுனாயென்றத்தாலே கீழேசொன் னதுக ளர்த்தமாத்ரமிவ னருளிச்செய்ததன்று, இதன் சப்தமும் அவன் திருப்பவளத்தாலே வந்ததென்று ஸூசிதம் (திரண்டபொருள்கள்) சேர்ந்த வர்த்தங்களே, அந்த ப்ஃலோகங்களுடைய பதங்களாலும் வாக் யங்களாலும் சேர்ந்த முக்யமான வர்த்தங்களே யென்றபடி. (தெளிந்து) ஆசார்யோப தேசத்தாலே தெளிந்தறிந்துக்கொண்டு, (அடிசூடினம்) அவன் திருவடிகளே சிரோபூஷணமாகப் பண்ணினோம், அவன் திரு வடிகளே, உபாயோபேயமாக வடைந்தோமென்றபடி. (திண்ணருளால்) திண்மை தார்ட்யம் த்ருடமான க்ருபையாலே, க்ருபைக் குதார்ட்யமா வது பற்றினவிஷயத்தை யொருக்காலும் விடாதொழிகை. (திண்ணரு ளால்) தெளிந்தடி சூடினமென்று மங்வயிக்கலாம் (சுருண்ட) ஹ்ருஸ்வ மானகர்மவசத்தாலே ஸங்குசிதமானவென்றபடி. (நம்ஞானச்சுடரொளி) நம்முடைய யஜ்ஞானமாகிறதே ஜ்ஃப்ரபை, (சுற்றும்) ஸர்வப்ர தேசத்தி லும், (பரப்பதன்முன்) பரம்புவதற்குமுன்னமே, பரப்புகை - விசாலமா கை. ஸர்வவஸ்துவையும் விஷயீகரிக்கிறத்துக்கு முன்னேயென்றபடி. இதுக்கு புரண்டதென்கிறத்தொ டந்வயம். (நம்வினை) நம்முடையபா பங்கள், நம்முடைய ப்ராப்தி விரோதியான பாபங்கள். (இனி) தேஹா வஸாநத்திலே, (போமிடம்பார்த்து) தனக்குகமன ப்ரதேசம் பார்த்துக் கொண்டு, (போமளவு) போகிறபர்யந்தம், ஸ்வஸ்தாநமானத் விஷதாதி கள் பக்கல் போகிற பர்யந்தமென்றபடி, போமடைவேயென்று பாட மானல், தானன்யத்ரபோகிற க்ரமத்திலெ யென்றர்த்தம். இதுஸமீசீன ம் (புரண்டது) புரண்டுபோகாநின்றதுகள். புரளுகை - ஸ்தலம்விட்டு ஸ்தலாந்தரகமனம், நம்மை விட்டகன்றதென்றபடி. இந்த ப்ஃலோகத் தில்சொன்ன வுபாயாநுஷ்ட்டாந பலமிதுவென்றபடி. (உஉ)

இப்படி யிஃலோகத்வயத்துக் கர்த்தங்களேயும் அதில் சொல் லப்பட்ட வுபாயபலத்தையும் அருளிச்செய்து இப்படிப்பட்ட ஸூக ரோபாயத்தி லிழியாதேயும். அன்யதாஜ்ஞாநத்தாலே தேஹாத்மாபி மாநிகளாயு மிருக்குமவர்களேக் குறித்து தயையாலே யுங்களுக்கு வார்த் தக்யம் வந்தாலும் நீங்கள் சரீரவிஃலேஷத்தில் ஸம்மதியாநின்றி கோ ளில்லையாகையாலே ப்ரளயார்ணவ மக்னேயாந பூமிப்பிராட்டியை ரக்ஷி த்தவள் முகமலர்த்திக்காக வுபதேசித்த விந்த ரஹஸ்யார்த்த ப்ரதிபா தகமான ச்லோகத்வயத்தை யறிந்தவன் க்ருபைபெற்று உங்களுடைய விபரீ தஜ்ஞாநத்தைப்போக்கி யுஜ்ஜீவியுங்களென்கிரு ரொருபாட் டாலே.

உகூ-மூ.—மலையுங்குலையுமென்றெண்ணியும்வன்பெரும்புண்டிரங்கி
தலையும்வெளுத்தபின்தானேயழியவிசைகின்றிலீ
ரலையுங்கடல்கொண்டவைய்யமளித்தவன்மெய்யருளே
நிலையென்றுநாடிநிலைநின்றபொய்மதிநீக்குமினே. (கூஉ)

(ப - ரை.) மலையும் - குலாசலங்களும், குலையும் - உருக்குலைந்து போகும், என்றெண்ணியும் - என்று நினைத்திருந்தும், வன் - திடமாகிய, பெரும் - பெரிய, புண் - புண்ணானது, பெரும்புண்கள் பொருந்திய சரீரமானது; திரங்கி - மடிப்புவிழுந்து, தலை - தலைமயிர்கள், வெளுத்தபின்னும் - நரைத்துப்போனபின்பும், தானே - தானே, அழிய - சரீரம் நசிக்க, இசைகின்றிலீர் - அங்கீகரிக்கிறீர்களில்லை, அலையும் - அலை வீசுகின்ற, கடல் - ப்ரளயார்ணவத்தால், கொண்ட - அபக்ருதையான, வையம் - பூமியை, அளித்தவன் - ரக்ஷித்த ஸ்ரீவராஹநயினருடைய, மெய் - ஸத்யமான, அருளே - க்ருபையே, க்ருபையால் உபதேசித்த ப்ரபத்தியே; நிலையென்று-ஸ்த்திரமான உபாயமென்று, நாடி- அறிந்து, நிலைநின்ற - நிலைபெற்றுள்ள, பொய்மதி - அந்யதாஜ்ஞானத்தை, நீக்குமின் - நீக்கிக்கொள்ளுங்கோள். (உகூ)

வியாக்யானம்.

(மலையுங்குலையும்) பர்வதங்களுங் குலைந்துபோம், குலைகை - விசீர்ணமாகை. (என்றெண்ணியும்) இப்படி நினைத்துக்கொண்டிருந்தும், த்ருடமான பர்வதாதிகளும் சிலநாள்கழிந்தால் விசீர்ணமாமென்று ப்ரத்யக்ஷாதிகளா லறிந்திருந்துமென்றபடி. இதுக்கு இசைகின்றிலீ ரென்கிறத்தி லந்வயம். (வன்பெரும்புண்) த்ருடமாய் பெரியதான புண்ணானது, புண்ணாராக்கையென்கிறபடியே புண்ணுக்காதாரமான சரீரத்தையிங்கு புண்ணென்றபடி. இதிலுண்டாகிற புண் ஸ்வல்பகாலவர்தியாகையா லித்தை த்ருடமான புண்ணென்றது. (திரங்கி) சுருங்கி, சரீரத்தின் மேல்தோலெல்லாம் சுருங்கியென்றபடி. புண் திரங்கீத்யத்ர ஸம்ஹிதகாரஸ்ய டாதேசாத்புண்டிரங்கியென்று ரூபம். (தலையும்வெளுத்தபின்) தலைசப்தம் தத்ரத்யரோமபரம். தலையில் மயிரும் நரைத்து வெளுத்தபின்பும், (அழிய) இந்தசரீரம் அழிந்துபோக, (தானே) ஸ்வயமேவ, (இசைகின்றிலீர்) இசைகிறிர்கொளில்லை. அன்யாயத்தமாக சரீரவிஶ்லேஷம்வந்தால் அந்த துக்கத்தையடையுவதொழிய நமக்குவார்த்தக்யம் வந்ததே; இந்த துக்கப்ரதமான சரீரத்தைவிட்டுப் பரலோகத்தை யடைவோமென்று நினைத்து அதுக்கு உபாயத்தை சீக்ரமாகத் தேடுவோமென்கிற விச்சையுங்கூடவில்லை யுங்களுக்கென்று தாத்பர்யம். ஆனு லென்செய்வோமென் றவர்கள்சொல்ல அருளிச்செய்கிறுர். (அலையுங்கடல்கொண்ட) அலையாநின்ற கடலாலே கொள்ளப்பட்டதான மஹத்தரதரங்கசாலியான ப்ரளயார்ணவத்தில் மக்னையானவென்றபடி, (வையம்) பூமியை, (அளித்தவன்) ரக்ஷித்தவன், ஏனத்துருவாயுலகி

உச-மூ. கண்ணன்கழறொழக்கூப்பியகையின்பெருமைதன்னை
யெண்ணங்கடக்கயமுனைத்துறைவரியம்புதலாற்
றிண்ணமிதுவென்றுதேறித்தெளிந்தபின்சின்மதியோர்
பண்ணும்பணிதிகள்பார்த்துப்பழந்தொழில்பற்றினமே. (சுரு)

(ப-ரை.) கண்ணன் - க்ருஷ்ணனது, கழல் - திருவடிகளை, தொழ - தொழும்படி, கூப்பிய - சேர்த்துக்கூப்பிய, கையின் - கையினுடைய, அஞ்சலியினுடைய; பெருமைதன்னை - பெருமையை, எண்ணங்கடக்க - மனோரதாதிகமாக, யமுனைத்துறைவர் - ஆளவந்தார், இயம்புதலால் - அருளிச்செய்தலால், இது - இது, திண்ணமென்று - நிச்சயமென்று, தேறி - தேறி, தெளிந்தபின் - தெளிந்துகொண்டபின்பு, சின்மதியோர் - அல்பமதிகள், பண்ணும் - பண்ணும், பணிதிகள் - வார்த்தைகளை, மாற்றி - மாற்றி, பழம் - நமக்குப் பழமையாய் கிடைத்த, தொழில் - கைங்கர்யத்தை, பற்றினம் - பற்றினோம். (உச)

வியாக்யானம்.

டந்த வென்கிறபடியே யண்டபித்தியி லொட்டிக்கிடந்த பூமியை ப்ரளயார்ணவத்தில் நின்று மெடுக்கவந்த ஜ்ஞாநப்பிரானுடைய வென்றபடி. (மெய்யருளே) ஸத்யமான க்ருபையை, ஸத்யமாய் க்ருபையாலே யவநருளிச்செய்த விந்தரஹஸ்யார்த்தத்தை யென்றபடி. (நிலையென்றுநாடி) நிலை-ஸ்திதி, இதுவே யிவ்வவஸ்தைக்கு யோக்யமானஸ்திதியென்று தேடிக்கொண்டு இந்தவர்த்தத்தைத் தேடி யாசார்யர்களிடத்தில் அறிந்துக்கொண்டென்றபடி. (நிலைநின்றபொய்மதி) நிலையாகவுங்களிடத்தில் சிரகாலமாயிருந்த தேஹாத்ம ப்ரமாதிகளாகிற மித்யாஜ்ஞானத்தை, (நீக்குமினே) போக்கடியுங்கோ ளென்றபடி. (உரு)

அஞ்சலிவைபவத்தில் பாட்டொன்று. அஞ்சலி வைபவத்திலே ஆளவந்தார் ஸ்தோத்ரத்திலே யருளிச்செய்த "த்வதங்க்ரிமுத்திச்ய" வென்கிற ச்லோகத்துக்கு பதார்த்தங்களும் வாக்யார்த்தங்களும் அருளிச்செய்து இச்லோகத்திலிருக்கிற வஞ்சலிசப்தார்த்தத்தையும் அன்யப்ரமாணங்களுக்கு விரோதம் வராதபடி யருளிச்செய்து. சில ரிதுக்குச்சொல்லும் அபார்த்தங்களையும் அனுசிதமென்று காண்பிவைத்து இப்படி தாமருளிச்செய்த விச்லோகார்த்தத்தை யொருபாட்டாலே ஸங்க்ரஹிக்கிறார் முடிவிலே.

(கண்ணன்கழல்தொழ) கண்ணனுடைய திருவடியைத் தொழுகைக்காக, பெரியபெருமாள் விஷயமான விச்லோகத்தில் க்ருஷ்ணசப்தமில்லாதிருக்க விவர் கண்ணன்கழல்தொழ வென்றது அந்த பெரியபெருமாளை "கண்ணனை யரங்கமாலை" யென்றும், "கோவலனாய்வெண்ணை யுண்டவாய" னென்னு மித்யாதியா லாழ்வார்கள் க்ருஷ்ணனாக வனுபவித்தபடியாலும் "யமுனைத்துறைவ" னென் றுவக்தாவுக்கும் வாச்ய

வியாக்யானம்.

னுக்கும் பேராகையாலும். (கூப்பியகையின்) சேர்க்கப்படுகிற கைக ளுடைய, உபயகரஸம் மேளநாத்மகமான வஞ்சலியினுடைய வென்ற படி. (பெருமைதன்னை) மாஹாத்ம்யத்தை, தன்ஸ்வார்த்தே. இங்கே யஞ்சலியென்றது ப்ரபத்திகர்ப்பமான வஞ்சலிவிசேஷத்தை. சிலர் கே வலாஞ்சலி யென்பார்கள். சில ரிதில்சொன்ன ப்ரபாவம் வைபவ பர மென்பார்கள். ததர்த்தமே யிந்த ரஹஸ்யப்ரவ்ருத்தியென்று கருத்து. (யமுனைத்துறைவர்) ஆளவந்தார், (எண்ணங்கடக்கை) எண்ணம்-ஸங் க்யை, கடக்கை - அதிக்ரமிக்கை, ஸங்க்யயை யதிக்ரமித்து, அஸங்க் யாதமாக வென்றபடி. (இயம்புதலால்) இயம்புகை - சொல்லுகை, அரு ளிச்செய்தபடியால், ப்ரபத்திமார்க்கமான வஞ்சலிப்ரபாவத்தை ஆள வந்தார் விஸ்தாரமாக வருளிச்செய்கையா லென்றபடி. இதுக்கு பற் றினமென்கிறத்தோ டங்வயம். (திண்ணமிதுவென்று) திண்ணம்-த்ரு டம், இந்தவர்த்தம் த்ருடமென்று. (தேறித்தெளிந்தபின்) இஶ்லோ கோக்தமான வஞ்சலிப்ரபாவம் நிச்சயமென்று விசாரித்துத் தேறி மன ஸ்ஸு தெளிந்தபின்பு, (சின்மதியோர்) ஸ்வல்பபுத்திகள், (பண்ணும் பணிதிகள் பார்த்து) பணிதிகள் - வ்யாபாரங்கள், இது உபலக்ஷணம். மிதப்ரஜ்ஞர்கள் சொல்லுமர்த்தங்களையும் அவர்கள்செய்யும் வ்யாபாரங் களையு மநுசிதங்களென்று பார்த்து, (பழந்தொழில்) பழைய தானதொ ழிலே, (பற்றினமே) அடைந்தோமே, பழந்தொழில் பற்றுகையாவது வேதோக்தமான வுபாயவிசேஷா வலம்பநமாகவுமாம், "ബദ്ധാഞ്ജലിപു டாஹ்ருஷ்டா: நம இத்யேவவாதிந:" (பத்தாஞ்சலிபுடா ஹ்ருஷ்டா, நம இத்யேவவாதிந:) என்கிறபடியே யுத்தரக்ருத்ய விசேஷமான வஞ்சல் யாதிகளாகவுமாம். அநுதியான தாஸக்ருத்யமாகையாலே யஞ்சலியை பழந்தொழிலென்ற துசிதம். (உச)

இதுக்குமேல் ப்ரதானசதகத்தில் ஆத்யந்தங்களிலிருக்கிற மூன்று பாட்டில் முதல்பாட்டு. இந்தரஹஸ்யத்திலே வேததது பப்ரும்ஹணதி களிலும் ரஹஸ்யத்ரயாதிகளிலும் முமுக்ஷுவுக்கு அவச்யம் ஜ்ஞாதவ் யதமங்களான நூறர்த்தங்களை பூர்வாசார்ய வாக்யத்தாலே தாமறிந்தபடி யருளிச்செய்கையாலே ப்ரதான சதகமென்று பேர்வைத்திருந்த வர்த் தங்கள் ஸ்வபக்ஷஸாதகங்களாயும் பரபக்ஷ நிராகரண யோக்யங்களாயு மிருக்குமென்று மிடத்தை "പരവിദുപദർശിതനഃ പ്രധാനശതകം പ്രമാണസിദ്ധമിദം। ഭജതിശതകോടിഭാവം പരപക്ഷപ്രയോജനേ സതാം" (பரவிதுபதர்சிதந: ப்ரதானசதகம் ப்ரமாண ஸித்தமித ம், பஜதிசதகோடிபாவம், பரபக்ஷச ப்ரயோஜநேசஸதாம்) என்றடி யிலே யொரு ஶ்லோகத்தாலேகாட்டி, தமக்கிவ்வர்த்தங்களை ப்ரதாநங்க ளென்று சொன்ன பூர்வாசார்ய வாக்யங்களை சில த்ருஷ்டாந்தங்க ளோடேகூட ப்ரஸம் ஷிக்கிறுரடியி லொருபாட்டாலே.

உரு-மூ.—பொங்குபுனலாறுகளிற்புவனமெல்லாம்
பொன்கழலாலளந்தவன்றன்றாளால்வந்த
கங்கையெனுநதிபோலக்கடல்களேழிற்
கமலைபிறந்தவனுகந்தகடலேபோலச்
சங்குகளிலவனேந்துஞ்சங்கேபோலத்
தாரிலவன்றண்டுளவத்தாரேபோல
வெங்கள்குலபதிகளிவைமேலாமென்றே
யெண்ணியநல்வார்த்தைகணுமிசைகின்றோமே. (சுச)

(ப - ரை.) பொங்கு - பொங்குகின்ற, புனல் - பிரவாஹத்தை யுடைய, ஆறுகளில் - நதிகளில், புவனமெல்லாம் - லோகங்களை யெல்லாம், பொன் - அழகிய, கழலால் - திருவடிகளால், அளந்தவன் தன் - அளந்தருளின த்ரிவிக்கிரமனது, தாளால் - திருவடியினுல், வந்த - உண்டான, கங்கைஎனும் - கங்கையென்கிற, நதிபோல-நதிபோலவும், கடல்கலேழில் - ஸப்த ஸமுத்ரங்களுக்குள்ளே, கமலை - பெரியபிராட்டியார், பிறந்து - திருவவதரித்து, அதனுல்; அவன் - அந்தஸ்ரீயஃபதியானவன், உகந்த - திருவுள்ளமுகந்த, கடலேபோல-க்ஷீரஸமுத்ரம் போலவும், சங்குகளில் - சங்கங்களில், அவன் - அந்தபரமபுருஷன், ஏந்தும் - தரிக்கின்ற, சங்கேபோல - ஸ்ரீபாஞ்சசன்னியமென்னும் சங்கம் போலேயும், தாரில் - மாலைகளில், அவன் - அந்த புருஷோத்தமனது, தண் - குளிர்ந்த, துளவத்தாரேபோல - ஸ்ரீமத்துளசீமாலிகைபோலவும், இவை - இவ்வர்த்தங்கள், மேலாம் - உத்க்ருஷ்டங்க ளாகும், என்று - என்று, எங்கள் - ப்ரபன்னரான எங்களது, குலம் - ஸந்தானத்திற்கு, பதிகள் - கூடஸ்தர்களான நம்மாழ்வார்முதலிய ஆசாரியர்கள், எண்ணிய - நினைத்த, நல்வார்த்தைகள் - நல்லவார்த்தைகளை, நாம் - அவர்களை ஆச்ரயித்துப்பெற்ற நாம், இசைகின்றோம், அங்கீகரிக்கின்றோம். (உரு)

வியாக்கியானம்.

(பொங்குபுனலாறுகளில்) பொங்குகை-உஜ்ரும்பிக்கை, புனல்-ப்ரவாஹம். உஜ்ரும்பியாநின்றுள்ள ப்ரவாஹங்களையுடைய நதிகளுக்குள்ளே, இதுக்கு கங்கையோடந்வயம். (புவனமெல்லாம்) காடுமேடுடைத்தான லோகங்களையெல்லாம் (பொன்கழலாலளந்தவன்) ஸப்ருஹணீயமாய்ம்ருதுவான திருவடிகளாலேயளந்த அந்தஸர்வரக்ஷகனுடைய,(கழலால்வந்த) திருவடிகளால்வந்த, த்ரிவிக்ரமாவதாரத்தில் ப்ரஹ்மாதிருவடிவிளக்கினஜலமான வென்றர்த்தம். (கங்கையெனும்நதிபோல) கங்கையென்று சொல்லப்படும் நதியானதுபோல், அதுநதிகளுக்குள்ளே யெப்படி ஶ்ரேஷ்ட்டமோ அப்படியென்று மேலேயந்வயம். மேல்த்ருஷ்டாந்தங்களிலு மிப்படியே கண்டுகொள்வது. (கடல்களேழில்) ஏழுஸமுத்ரத்துக்குள்ளே, (கமலைபிறந்தவனுகந்த) கமலை - பெரியபிராட்டி,

வியாக்யானம்.

பிறந்து-அவதரித்து, அத்தாலே, அவனுகந்த - அந்த ஸர்வேச்வரனுகந்ததான, (கடலேபோல) க்ஷீரஸாகரமானதுபோலேயும், (சங்குகளில்) ஸமுத்ரோத்பன்னங்களான சங்குகளில், (அவனேந்துஞ் சங்கம்போல) அந்த ஸர்வேச்வரன் போக்யமாகத் திருக்கையிலே தரிக்கும் பாஞ்சஜன்ய மானதுபோலேயும், (தாரில்) தார்களுக்குள்ளே, தார் - அர்த்தவிகஸிதபுஷ்பங்கள் (அவன் தண்டுளபத்தாரேபோல) தண் - சீதளம், துளபம் - துளஸி, அவன் போக்யமாகச் சாற்றியருளினதான சைத்யஸௌகந்த்யாதிகளுடைய திருத்துழாய்த்தார்போலவும், இந்நாலு த்ருஷ்டாந்தத்துக்கும் தார்ஷ்டாந்திகமான வார்த்தைகளோடே யந்வயம், (எங்கள்குலபதிகள்) எங்கள் குலத்துக்குப் பதிகளான வாசார்யர்கள் "ஆத்யஸ்யந꞉குலபதே꞉" (ஆத்யஸ்யந꞉குலபதே꞉) என்கிற படியே யெங்கள் ப்ரபன்னகுலத்துக்குப் பதிகளானவென்றபடி. (இவைமேலாமென்று) இந்தவர்த்தங்கள் ஸர்வோத் க்ருஷ்டங்களாமென்று, (எண்ணிய) எண்ணப்பட்டதுகளான, (நல்வார்த்தைகள்) நல்லதான வார்த்தைகளே, ப்ரதாநதமார்த்தங்களைச் சொல்லும் வார்த்தைகளே, முமுக்ஷுக்களான நமக்காக வாசார்யர்கள் க்ரந்தரூபமாயும் வார்த்தாரூபங்களாயுமிவையிவை யென் றெண்ணினதான வாக்யங்களே யென்றபடி. (நாமிசைகின்றோமே) அவர்கள் திருவடிகளை யாச்ரயித்து அவர்கள் வாக்யத்தில் ப்ராமாண்ய ஜ்ஞாநமுடைய நாமிசைந்தங்கீ கரியாநின்றோம், இத்தாலிந்த ரஹஸ்யத்தில் சொல்லப்புகுகிற நூறர்த்தங்களு மாசார்யோப திஷ்டங்களென்றும் பூர்வத்ருஷ்டாந்தங்களாலே ப்ரதாநதமங்களென்றும் சொன்னபடி. (உரு)

இப்படி பூர்வாசார்ய வாக்யத்தை ப்ரசம்ஸித்து "வார்த்தையறிபவர், "மாயவர்க்காளன்றி யாவரோ" வென்று துடங்கி, ச்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராணத்யத்யாத்ம சாஸ்த்ரரஹஸ்யத்ரய ததர்த்த விசேஷ தத்ப்ரதிபாத்யோபாயவிசேஷ கைங்கர்யவிசேஷ தத்ப்ரதி ஸம்பந்தி பாகவதாசார்யாதிகளில் ப்ராதான்யத்தை நூறுவாக்யத்தாலே ஸம்யக்காக வருளிச்செய்து இப்படிப்பட்ட வர்த்தங்களையறிந்த பேர்களுக்கு வரும்பலத்தையும் தாமிந்த ரஹஸ்யம் செய்தருளினத்துக்கு பலத்தையும் ஒருபாட்டாலே முடிவிலருளிச்செய்கிறார்.

(பாற்கடலோன்) பாற்கடல் - க்ஷீராப்தி. அத்தையுடைய வன்பாற்கடலோன், க்ஷீராப்திநாதனான ஸர்வேச்வரன், இங்கிவனை யெடுத்தது ஸகலாவதார கந்தமாகையாலும் பவஸாகரதரணத்துக்காக வொருகடலறிந்தவனாகையாலும். இதுக்குக்ரியையோ டந்வயம் (சீர்கடலின்திரையென்ன) சீர் - குணம், குணஸாகரத்துக்கலைபோலே யிராநின்ற, (தகவால்) தயையாலே (மிக்க) அதிகர்களான, (தேசிகராய்) வாத்ஸல்யாதி

உசு-மூ.— சீர்க்கடலின்றிரையென்னத்தகவான்மிக்கத்
தேசிகராய்த்திணியிருளாங்கடலைநீக்கி
பார்க்கடலோன்றிருவணையாய்நின்றுபாரங்
காணுதபவக்கடலைக்கடத்துகின்ருன்
நீர்க்குமரக்கலமென்னவிரைவரின்ப
மெழுந்தழியுங்குமிழியெனவிகழ்ந்தொழிந்தோம்
ஆர்க்கினிநாமென்கடவோநமக்குமாரொன்
கடவாரொன்றடைந்தவர்கட்கறிவித்தோமே. (சுரு)

(ப - ஊா.) சீர் - கல்யாணகுணங்களாகிற, கடலில் - ஸமுத்ரத்தினது, திரையென்ன - அலையென்று சொல்லலாம்படியான, தகவால் - க்ருபையால், மிக்க - ச்ரேஷ்டராகிய, தேசிகராய் - ஆசார்யர்களாய், ஆசார்யரூபேண அவதரித்து, திணி - திடமான, இருளாம்-அஜ்ஞாநாந்த காரமென்னும், கடலை - ஸமுத்ரத்தை, நீக்கி - நீங்கச்செய்து, திருவருளாய்நின்று - ஒளிபொருந்திய சேதுவாய் நின்று, பாரங்காணுத - அக்கரைகாணலாகாத, பவக்கடலை - ஸம்ஸாரஸாகரத்தை, நீர்க்கு - ஜலத்திற்கு, மரக்கலமென்ன - கப்பலென்னலாம்படி, கடத்துகின்ருன் - தாண்டிவைக்கின்ருன், விரைவரின்பம் - விஷயப்ரவணர்களின் வைஷயிகஸுகமானது, எழுந்து - உண்டாய், அழியும் - உடனே அழிந்து போகின்ற, குமிழியென - நீர்க்குமிழிபோலே நச்வரமென்று, இகந்து - இகழ்ந்து, ஒழிந்தோம் - ஒழித்துவிட்டோம், இனி - இதன்மேல், நாம் - நாம், ஆர்க்கு - எவர்க்கு, என்கடவோம் - என்னவாகக்கடவோம், ஆர் - யார், நமக்கு - நமக்கும், என்கடவார் - என்னவாகக்கடவார்கள், என்று - என்று, அடைந்தவர்கட்கு - நம்மை ஆச்ரயித்தசிஷ்யர்களுக்கு, அறிவித்தோம் - தெரிவித்தோம், உபதேசித்தோ மென்கை. (உசு)

வியாக்யானம்.

குணஸாகர தரங்காயமான தயாபூர்ண தேசிகராக வவதரியா நின்றுகொண்டு, (திண்ணிருளாம்) திண் - நிபிடம். அத்யந்தம் நிபிடமான வந்தகாரமாக வாகாநின்றுள்ள, (கதியே) இங்கு கதிசப்தம், ஸ்திதிபரம். ஸம்பூர்ண ஜ்ஞாநயுக்தமான நம்முடைய ஸ்திதியை, அஜ்ஞாநதசையை யென்கை. (நீக்கி) ஆசார்யரூபனுய்க்கொண்டு அந்த வஜ்ஞாநதசையைப்போக்கி, (பாரங்காணுத பவக்கடலை) பாரம் - அக்கரை அக்கரைகாணுதபடி யதிகம்பீரமான பவஸாகரத்தை, (திருவணையாய்) ஸேதுவாகவாய், திரு - பூஜ்யவாசகம். (நீர்க்கு மரக்கலமன்ன) மரக்கலம் கப்பல், அன்ன - ஸத்ருசமான, ஜலத்துக்குத் தாரகமான கப்பல்போலேயாய், (கடத்துகின்ருன்) கடத்துகை, தரணம்பண்ணிவைக்கை, அது செய்யாநின்ருன். ஜலோத்தாரண ஸமர்த்தமான நௌகாதிகள்போலே அதிவிசாலமான நம்முடைய பவஸாகரத்தை தானே

வியாக்யானம்.

“ஏஷஸேது:” (ஏஷஸேது:) என்று ஸேதுசப்த வாச்யமான வுபாய விசேஷமாகா நின்றுகொண்டு தாரணம்பண்ணிவையா நின்றுனென்று தாத்பர்யம். (விரைவரின்பம்) விரைவர் - த்வரிக்குமவர்கள், ப்ரயோஜநாந்தரத்திலே யாசையாலே த்வரிக்குமவர்களுடைய வைஷயிகஸுகமான சிற்றின்பத்தை, நீர்க்குமரக்கலமன்னவென்றத்தை யிங்கு விசேஷணமாயு முரைக்கலாம், அப்போது ஜலத்துக்கஞ்சாதே யதிலே கதாகதம்பண்ணும் வங்கம்போலே வைஷயிக ஸுகத்துக்கு அஞ்சாதே “கதாகதம் காமகாமாலபந்தே” (கதாகதம் காமகாமாலபந்தே) என்கிறபடியே யதிலேயே த்வரிக்குமவர்களுடைய சிற்றின்பதை யென்றர்த்தம். (எழுந்தழியுங்குமிழியென) உயரவெழுந் துடனேயழியும் குமிழி யென்றெண்ணி, க்ஷணகாலவர்த்தியான ஜலபுத்புதவத் புத்திபண்ணி யென்றபடி. (இகழ்ந்தொழிந்தோம்) இகழுகை - உபேக்ஷிக்கை, உபேக்ஷித்தே யொழிந்துவிட்டோம். அனுபாதேயமென்று நிராகரித்தோமென்றபடி. இவ்வளவு இந்த ரஹஸ்யார்த்த ஜ்ஞானபலம் மேலிக்க்ரந்தகரண ப்ரயோஜனம். (நாம்) பாரலௌகிகா பேக்ஷையுடைய நாம், (இனி) அபேக்ஷையுண்டானபின்பு, (ஆர்க்கு) எந்தவாசார்யர்களுக்கு, (என்கடவோம்) என்ன ஶிஶ்ரூஷாதிகள் பண்ணக்கடவோம், (நமக்குமாரொன்கடவார்) அத்ருஷ்டாதித்வரையுடைய நமக்கு எந்தவாசார்யர் என்னவுபதேஶத்தைப் பண்ணக்கடவர்கள், (என்றடைந்தவர்களுக்கு) இப்படி யெண்ணிக்கொண்டு வந்தடைந்தவர்களுக்கு, யத்வா (ஆர்க்கினி நாமித்யாதி) அத்யந்தம் பாரதந்த்ர்யத்தாலே யாருக்கு நாமென்னவுபகாரம் பண்ணப் புகுகிறோம், நமக்குத்தான் யாரொன்ன உபகரிக்கப்போகிறார்களென் றனன்யகதியாய் வந்தடைந்தவர்களுக்கென்றுமாம். (அறிவித்தோமே) அறியும்படி பண்ணினோம், இந்த கூடார்த்த ப்ரதிபாதகமான வித்தரஹஸ்யத்தை ஆசார்யவாக்யத்தைக்கொண்டு நம்மை ஆஶ்ரயித்தவர்களுக்காக வெளியிட்டோமென்று கருத்து. (உகூ)

இந்த ரஹஸ்யத்திலே நல்வார்த்தைகள் நாமிசைகின்றோமென்றும் வார்த்தை யறிபவர்மா யவர்க்காளன்றி யாவரோவென்றும் தகவால் மிக்கத் தேசிகராய் என்றும் ஆழ்வார்களுடையவு மாசார்யர்களுடையவும் ப்ரசம்ஸியாநின்றீரோ அப்படியே நிர்மலாந்த:கரணரான ரிஷிகளு மிவ்வர்த்தங்களை யறிவித்திலரோவென்ன நன்குவந் தென்னுடனுக்கியென்னுற்ற தன்னைவன்கவிபாடு மித்யாதிப்படியே ஸர்வேச்வரனோ யுகந்தருளினதான பூர்வாசார்ய வாக்யத்துக் கொக்குமோ அந்த யோகலப்த தத்வஜ்ஞானமுடைய ரிஷிவாக்யமென்று சில த்ருஷ்டாந்தங்களோடே காட்டுகிறார் முடிவிலொருபாட்டாலே.

உஎ-மூ.—காசினியில்வரையனைத்துங்காயாவண்ணன்
கடைந்தெடுத்தகௌத்துவத்தின்சீர்மைக்கொவ்வா
காசிமுதலாகியநன்னகரியெல்லாங்
கார்மேனியருளாளர்கச்சிக்கொவ்வா
மாசின்மனந்தெளிமுனிவர்வகுத்ததெல்லா
மாலுகந்தவாசிரியர்வார்த்தைக்கொவ்வா
வாசியறிந்திவையுரைத்தோம்வையத்துள்ளீர்
வைப்பாகவிவைகொண்டுமகிழ்மினீரே. (சுசு)

(ப-ரை.) காசினியில் - பூமியிலுள்ள, வரையனைத்தும் - பர்வதங்கள் எல்லாம், காயாவண்ணன்-காயாம்பூவர்ணனான நாராயணன், கடைந்து - க்ஷீரஸாகர மதனம்செய்து, எடுத்த - உத்தரித்த, கௌத்துவத்தின் - ஸ்ரீகௌத்துபரத்தினத்தினது, சீர்மைக்கு - பெருமைக்கு, ஒவ்வா-ஒப்பாகா, காசிமுதலாகிய - காசிமுதலான, நல்நகரியெல்லாம்-முக்திப்ரதங்களான நல்லநகரங்களெல்லாம், கார் - மேகம்போன்ற, மேனி-திவ்யமங்கள விக்ரஹமுடைய, அருளாளர் - பேரருளாளனது, கச்சிக்கு - ஸ்ரீகாஞ்சீநகரத்துக்கு, ஒவ்வா - ஒவ்வா, (அதுபோல) மாசில் - குற்றமற்ற, மனந்தெளி - மனஸ்ஸூதெளிந்த, முனிவர் - மஹர்ஷிகள், வகுத்ததெல்லாம் - சொன்னவை யெல்லாம், மால் - ஸ்ரீய:பதியானவன், உகந்த - திருவுள்ளமுகந்த, ஆசிரியர் - ஆசார்யர்களது, வார்த்தைக்கு - திவ்யஸூக்திக்கு, ஒவ்வா - ஒவ்வா, வாசி - தாரதம்யத்தை, அறிந்து - அறிந்து, இவை - இதுகளை, உரைத்தோம் - சொன்னோம், வையத்துள்ளீர் - இப்பூமியிலுள்ளவர்கான், நீர் - நீங்கள், இவை - இவ்வர்த்தங்களை, வைப்பாக - நிக்ஷேபமாக, கொண்டு-வைத்துக்கொண்டு, மகிழ்மின் - ஸந்தோஷியுங்கள். (உஎ)

வியாக்யானம்.

(காசினியில்) பூமியிலே, (வரையனைத்தும்) அனைத்துவரையும் என்றன்வயம். வரை - பர்வதம், ஸகலரத்நமய பர்வதங்களும், (காயாவண்ணன் கடைந்தெடுத்த) காயா - காசா, இங்கு தத்புஷ்பம் விவக்ஷிதம் - காசாம்பூவுக்கு ஸத்ருசமான வர்ணத்தையுடைய ஸர்வேச்வரனாலே கடைந் தெடுக்கப்பட்டதான, (கௌத்துபத்தின்) கௌஸ்துபத்தினுடைய, (சீரமைக்கு) ஸ்வபாவத்துக்கு, சீர் - குணம், சீர்மை-குணவத்தை, பகவத்வக்ஷஸ்தல ஸம்பந்தம்பெற்ற நல்லஸ்வபாவத்துக் கென்றபடி, (ஒவ்வா) ஒப்பாகுமோ, ஸத்ருசமாகுமோ. (காசிமுதலாகிய நன்னகரியெல்லாம்) காசியைமுதலாக வுடையதுகளான முக்தி க்ஷேத்ரங்களான நல்ல நகரிகளெல்லாம், (கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா) கார் - நீருண்டமேகம், மேனி - சரீரம், வார்ஷூகவலாஹகஸத்ரு சவர்ணசாலியான பேரருளாளருடைய நகரியான காஞ்சிக்கி

வியாக்யானம்.

ஸத்ருசமாகுமோ, (மாசில்மனந்தெளி) மாசு - மலம்; அதில்லாத மன ஸ்ஸினுடைய தெளிவையுடைய, (முனிவர் வகுத்ததெல்லாம்) வகுக்கை - பிரித்துச்சொல்லுகை, நிர்மலாந்தஃகரணரானரிஷிகள் பிரித்து தத்வநிரூபணம் பண்ணின வாக்யங்களெல்லாம் (மாலுகந்தவாசிரியர்) மால்-ஸ்வாமி, ஸர்வஸ்வாமியான ஸ்ரீயஃபதியுகந்த வாசார்யர்களுடைய, (வார்த்தைக்கொவ்வா) க்ரந்தரூபமாயு முபதேசரூபமாயுமுள்ள வாக்யங்களுக் கொப்பாகுமோ, "𑌰𑌤𑍍𑌨𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌽𑌪𑌿 𑌯𑌥𑌾𑌵𑌾 𑌭𑌗𑌵𑌤𑍍𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌾𑌯𑌤𑍍𑌤𑌮𑍌𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌟𑍍𑌯𑌂 𑌕𑍌𑌸𑍍𑌤𑍁𑌭𑌸𑍍𑌯 𑌮𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌽𑌪𑌿 𑌭𑌗𑌵𑌤𑍍𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌪𑍍𑌰𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌂 𑌕𑌾𑌞𑍍𑌚𑍍𑌯𑌾𑌃 𑌤𑌥𑍈𑌵 𑌚𑌿𑌦𑌚𑌿𑌦𑍀𑌶𑍍𑌵𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑌿𑌰𑍂𑌪𑌣𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵𑌾𑌮𑍍𑌯𑌭𑌿𑌮𑌤𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑍂𑌪𑌶𑍍𑌰𑍈𑌷𑍍𑌠𑍍𑌯𑌮𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌦𑍇𑌵𑍇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌃". (ரத்நத்வாவி சேஷேபியதாவா பகவத்ஸம்பந்தாயத்தௌத்க்ருஷ்ட்யம் கௌஸ்துபஸ்ய, முக்திக்ஷேத்ரத்வாவிசேஷேபி பகவத்ஸம்பந்த ப்ரயுக்தச்ஶ்ரைஷ்ட்யம் காஞ்ச்யாஃதத்வ தேவ சிதசிதீச்வரதத்வநிரூபணத்வா விசேஷேபிஸ்வாம்யபிம தத்வரூப ஶ்ரைஷ்ட்ய மாசார்யவாக்ஸ்ய தத்வதேவேத்யர்த்தஃ (வாசியறிந்து) வாசி-பேதம், ரிஷிவாக்யத்துக்கும் ஆசார்ய வாக்யத்துக்கு முண்டான பேதமறிந்து, (இவையுரைத்தோம்) இந்தரஹஸ்யார்த்தம் சொன்னோம். இந்த வாசார்யவாக்ய ஶ்ரைஷ்ட்யம் சொன்னோமென்றுமாம். (வையத்துள்ளீர்) பூமியிலேயிருக்குஞ் ஜநங்காள், (வைப்பாகவிவைகொண்டு) யிந்தவர்த்தங்களை வைப்பாக நிக்ஷேபமாகவைத்துக்கொண்டு, நிக்ஷேபம்போலே ரக்ஷிக்குமென்றெண்ணிக்கொண்டு, (மகிழ்மினீரோ) மத்யமபுருஷபஹுவசனம். மகிழுங்கோள், ஸந்தோஷியுங்கோள். (௨௭)

இதுக்கு மேலுபகார ஸங்க்ரஹத்திலிருக்கிற வாத்யந்தப் பாட்டுக்கள் மூன்றில் முதல்பாட்டு. இந்த ரஹஸ்யத்திலே ஜீவாத்மாவுக்கு ஈச்வரன் ஸ்வரூபத்திலும் குணபூத ஜ்ஞாநாதிகளிலும் சாஸ்த்ரப்ரதாநாதிகளிலும், ஆசார்யாதீந வ்யாபாரங்களிலும், உபாயாநுஷ்டாநாதிகளிலும், உத்தரதசைகளிலும் ஸம்ஸார நிவ்ருத்தி பூர்வக திவ்யதேசப்ராப்திதத்ரத்ய கைங்கர்யாதிகளிலும் பண்ணுமுபகார விசேஷங்களை விஸ்தாரமாக வருளிச்செய்கைக்காக வடியிலே யந்தவுபகாரங்களில் முக்யமான சில வுபகாரங்களை ஸங்க்ரஹியாநின்றுகொண்டு இவ்வளவு உபகாரம் நமக்கீஶ்வரன்பண்ணினது ஆழ்வாருடைய க்ருபையாலே யென்கிறு ரொருபாட்டாலே.

(அந்தமிலா) அந்தமில்லாததான, (பேரின்பம்) பெரிதானஸுகம், ஸ்வர்க்காதிஸுகம்போலே நாசமில்லாதவபரிச்சேத்யமான மோக்ஷஸாம்ராஜ்ய ஸுகத்தை யென்றபடி. (அருந்த) அருந்துகை-பானம்பண்ணுகை, இங்கு அனுபவிக்கையிலே தாத்பர்யம் (ஏர்க்கும்) யோக்யா

உஅ-மூ.—அந்தமிலாப்பேரின்பமருந்தபேர்க்கு
மடியோமையறிவுடனேயென்றுங்காத்து
முந்தைவினைநிரைவழியிலொழுகாதெம்மை
முன்னிலையாந்தேசிகர்தம்முன்னேசேர்த்து
மந்திரமுமந்திரத்தின்வழியுங்காட்டி
வழிப்படுத்திவானேற்றியடிமைகொள்ளத்
தந்தையெனநின்றதனித்திருமாறாளிற்
றலைவைத்தோஞ்சடகோபனருளினாலே. (சுஎ)

(ப-ரை.) அந்தமில்லா - முடிவில்லாத, பேரின்பம் - பெரிய இன்பத்தை, அறிந்தபேர்க்கும் - அறியாதவர்களுக்கும், அடியோமை-தாஸபூதரான நம்மை, அறிவுடனே - ஞானத்தோடே, என்றும் - எப்போதும், காத்து - ரக்ஷித்து, முந்தை - பழமையான, வினைநிரை - கர்மஸமூஹங்களின், வழி - மார்க்கத்தில், ஒழுகாது - சிதறிப்போகாமல், எம்மை - நம்மை, முன்னிலையாம் - முந்தினநிலையாகிய, தேசிகர்தம் - ஆசார்யர்களுடைய, முன்னே - முன்னே, சேர்த்து - சேர்ப்பித்து, ஆசார்யப்ராப்தி செய்வித்து; மந்திரமும் - மந்த்ரத்தையும், மந்தரத்தின்வழியும் மந்த்ரப்ரதி பாத்யமான மார்க்கத்தையும்; காட்டி - அறிவித்து, வழிப்படுத்தி - பக்திப்ரபத்திரூப உபாயத்தில் ப்ரவர்த்திப்பித்து, வான் - பரமபதத்தில், ஏற்றி - ஏறவைத்து, அடிமைகொள்ள-கைங்கர்யங்களை திருவுள்ளம் பற்றுவதற்கு, தந்தையென - பிதாபோலே, நின்ற - வீற்றிருந்த, தனி - ஒப்பற்ற, திருமால்-ஸ்ரீ:பதியினது, தாளில்-திருவடிகளில், சடகோபன் - நம்மாழ்வாருடைய, அருளால் - க்ருபையினால், தலை - சிரஸ்ஸை, வைத்தோம் - பணிந்தோம். (உஅ)

வியாக்யானம்.

ளான, (அடியோமை) அடியோங்களை, ஸுரிபோக்யமான ஸுகத்தையனுபவிக்க ப்ராப்தாளான வெங்களை யென்றபடி. (அறிவுடனே) ஜ்ஞாநத்துடனேகூட (என்றும்), ஸர்வதா, (காத்து) ரக்ஷித்து, ஜ்ஞாதாவாயும் ஜ்ஞாநஸ்வரூபனாயுமுள்ள வெங்களை யிதுகளழியாதபடி ப்ரளயதசையிலும், காத்தென்றபடி. (முந்தை) அநாதிகளான, (வினை) கர்மங்களுடைய, (நிரை) வர்க்கம், ஸமூஹமென்றபடி. (வழியில்) மார்கத்தில் (ஒழுகாது) ஒழுகிப்போகாதே, (எம்மை) விரோதிபூயிஷ்டத்தையுடைய நம்மை, (முன்னிலையாந்தேசிகர்) முந்தின நிலையாகாநின்ற வாசார்யருடைய, இவன் ரக்ஷணத்திலே ப்ரதமஸ்தாநமான வாசார்யனுடையவென்றபடி. (முன்னேசேர்த்து)அவர்களங்கீகரிக்கும்படி அவர்கள் முன்னேசேரும்படி நம்மைப்பண்ணி, ப்ராரப்த்தா ப்ராரப்தரூபங்களாயனாதிகளான பாபமார்கங்களிலே சேராதபடி நம்மை ஸதாசார்யர் பக்கலிலே சேர்த்தென்று தாத்பர்யம். (மந்திரமும்) திருமந்த்ராதி

வியாக்யானம்.

களும், (மந்திரத்தின்வழியும்) திருமந்த்ராதிகளிலே ப்ரதிபாத்யமான வழியும், (காட்டி) ரஹஸ்யத்ரயாதிகளும் ததர்த்தங்களும் மனஸ்ஸில் படும்படி யாசார்யாளைக்கொண்டு காண்பிவைத்து, (வழிப்படுத்தி)ஸ்வாதிகாரானு ரூபமான வொருமோக்ஷமார்க்க பூதமான வுபாயாநுஷ்ட்டாநத்திலே யுறுப்படுத்தி, யத்வா - மந்த்ரத்தின் வழியென்று உபாயவிசேஷத்தைச்சொல்லி, வழிப்படித்தியென்று அர்சிராதியைச் சொல்லவுமாம். (வானேற்றி) அர்ச்சிராதிமார்க்கத்தாலே பரமபதத்திலேயேற்றி, (அடிமைகொள்ள) ஸூரிபோக்யமான கைங்கர்யங் கொள்ளுகைக்காக, (தந்தையெனநின்ற) தந்தை - பிதா, ஹிதபரனுனபிதாபோல நில்லாநின்ற, (தனித்திருமால்தாளில்) அத்விதீயனுன ஸ்ரீயஃபதியினுடைய திருவடிகளிலே, நம்முடைய ரக்ஷணத்தில், அஸஹாயனுயிருக்கையே, இங்கு - அத்விதீயத்வமவனுக்கு. (தலைவைத்தோம்) சிரஸ்ஸை மடுத்தோம்) அவன்திருவடிகளை நம்முடைய சிரோபூஷணமாக்கினோமென்றபடி. (சடகோபனருளினுல்) ஈச்வரன் நமக்கு உபகாரம் பண்ணினது, ஆழ்வாருடைய க்ருபையாலே, ஆழ்வார் ஸம்பந்தம் பெற்றபடியினுலே யென்றபடி. இங்கே யாழ்வாரை யெடுத்தது இந்த ரஹஸ்யத்தில் பூர்வாவர மத்யமதசைகளில் பண்ணு மீச்வரனுடைய வுபகாரங்களை மூன்றதிகாரத்தாலே சொல்லி இவ்வள வர்த்தங்களும் ஆழ்வாருடைய முதல்ப்ரபந்தமான திருவிருத்தம் முதல்பாட்டி லிருக்கிறதென்று முடிவிலே காண்பிக்கிறபடியாலே. (உஅ)

இப்படி ஸங்க்ரஹமாக வுபகாரங்களை யருளிச்செய்து பின்பு மூன்றதிகாரத்தாலே தாம் விஸ்தாரமாக வருளிச்செய்த ஸர்வேச்வரனுடைய வுபகாரங்களை யறிகைக்கி பல மேதென்கிற வாகாங்க்ஷையில் முமுக்ஷுவான ஜீவாத்மாவுக்கு அபேக்ஷிதமாய் ரஹஸ்யார்த்தங்களான தேகாத்ம ப்ரமஸ்வதந்த்ராத்மப்ரமாதி நிவ்ருத்தி பூர்வகமாக வுபகாரங்களை பகவத்ஸ்வரூபாதிகளை யறிகையே யிதின் பலமென்னுமிடத்தை ஸ்வாநுஸந்தானருபமான வொருபாட்டாலே முடிவிலே காட்டுகிறுர்.

(தான்) அஹம்சப்த வாச்யனுனதான், (தனக்கு) ப்ரகாசபலியான தன் ஜீவஸ்வரூபத்துக்கு, (தன்னுலேதோன்றி) ஜ்ஞாநஸ்வருபனுய் அத ஏவஸ்வயம் ப்ரகாசமுமான ஸ்வரூபத்தாலே தோன்றிக்கொண்டு, அஹமஹமென்று ப்ரத்யக்த்வாதி விசிஷ்டமாக ஸ்வரூபத்தை ஸ்வரூபத்தாலே தானேயறிந்தென்கை. (தன்னேரொளியிணை குணத்தாலும்) தனக்கத்விதீயமாய் தேஜஸ்ஸுபோலே ப்ரகாசகமாய் தன்னை விட்டுப் பிரியாதே குணபூதமான தத்பூதஜ்ஞானத்தாலும், (தன்னைக் கண்டு) ஸ்வஸ்வரூபத்தைக்கண்டு, விஷயப்ரகாசந வேளயாம் ஸ்வாப்ருதக்ஸித்ததர்மபூத ஜ்ஞானஸ்யாபி ஸ்வஸ்யவிஷயதா ப்ரகாசம் சொன்னபடி யிது. ஜ்ஞாதாவும் ஜ்ஞானஸ்வரூபனுமானமைக்கு பலமிதுகள்.

உகூ-மூ.—தான்றனக்குத்தன்னாலேதோன்றித்தன்னே
ரொளியிணைக்குணத்தாலுந்தன்னைக்கண்டு
தான்தனக்கென்றறியாததன்குணத்தை
தன்குணத்தாற்றானிறையிற்றானேகூட்டி
ஊன்மறித்துப்புலன்மனன்மானாங்காரங்க
ளொருமூலப்பிரகிருதியன்றிநின்ற
நான்தனக்குத்தான்றனக்கென்றறிவுதந்த
நாரணனைநான்மறையானான்கண்டேனே. (கூஅ)

(ப-ரை.) தான்தனக்குத்தன்னாலேதோன்றி-ஸ்வயம் ப்ரகாசமாய், தன் - தனது, ஓரொளி - ஒரு ப்ரகாசத்தை, அணைக்கும் - அணைத்துக் கொள்ளுகின்ற, குணத்தாலும் - ப்ரத்யத்வகுணத்தினாலும், தன்னை - தன்ஸ்வரூபத்தை, கண்டு - கண்டு, (தான்தனைக்கென்றறியாத) தன் குணத்தை - தனதுகுணத்தை, (தன்குணத்தால்) தன்னிறையில்-தனது ஈச்வரனிடத்தில், தானே - தானே, தபடி - சேர்த்து, ஊள் - மாம்ஸ மயமான சரீரத்திலும், மருத்து - ப்ராணன் முதலியவாயுக்கள், புலன் - இந்திரயங்கள், மனம் - மனது, மான் - மஹத்தத்வம், ஆங்காரங்கள் - ஸாத்விகராஜஸ தாமஸாஹங்காரங்கள், ஒரு - ஒன்றாகிய, மூலப்பிர கிருதி - மூலப்ரக்ருதி, அன்றி - இவைகளாகாமல், இவைகளில் வேறு பட்டு, நின்ற - நின்றவனான, நான் - நான், தனக்கு - தனக்கு சேஷ பூதன், தான் - நமக்குசேஷியான ஸ்ரீயஃபதி, தனக்கு - தனக்கு, (அன் யாதீனனன்று) என்று-என்று, இசைவு-அங்கீகாரத்தை, தந்த-எனக்கு உண்டாகச்செய்த, நாரணனை - ஸ்ரீமன்னாராயணனை, நான் - நான், நான்மறையால் - நாலுவேதங்களினால், கண்டேன். (உகூ)

வியாக்யானம்.

(தான்தனக்கென்றறியாத) தானென்றும் தனக்கென்று மறியாததான, அஹம்மமேதி ஜ்ஞாநசூந்யமான வென்றபடி. (தன்குணத்தை) தனக்கு குணபூதங்களான தேஹாதிகளை, (தன்குணத்தால்) தனக்கு குணபூத மாயாசார்யா தீனமாகவந்த சரீராத்மபாவஸம்பந்தாதி ஜ்ஞாநத்தாலே, (தாநிறையில்கூட்டி) தத்வவிவேகம்பிறந்த தான் ஸர்வசரீரியான வீச் வரநிடத்திலே சேர்த்து, அவனுக்கே சேஷமென்றெண்ணி யென்றபடி. இதுக்கு பலமாயுமே தத்விவரணரூபமாயுமிருக்கும்மேல். (ஊன்மறி த்து) தேகத்தைக்காட்டிலும் வேறாய், ஊன் - சரீரம், (புலன்) இந்த்ரி யங்கள், (மன) மநஸ்ஸு, (மான்) மஹாநு, (ஆங்காரங்கள்) அஹங்கா ரங்கள், ஸாத்விகாதிபேதே பஹுவசனம். (ஒருமூலப்பிரகிருதி) இது களுக்கு காரணமாய த்விதீயமான மூலப்ரக்ருதி, (அன்றிநின்ற) இதுக னன்றியிலே யிராநின்ற, (நான்) தேஹவிலக்ஷணனாய் அதரவ - ப்ரக் ருத்யாதி சதுர்விம்சதி தத்வபின்னனாயிருக்கிற நான், (தனக்கு) ஸ்வ சரீரியான தனக்கு, (தான்தனக்கு) ஸர்வஸ்வதந்தரனை தான்தனக்

வியாக்யானம்.

கென்று, (அறிவுதந்த) ஜ்ஞானத்தைக்கொடுத்த, தேஹாதிவிலக்ஷண னை தனக்கு சேஷமென்றும், ஸர்வஸ்வாமியான தான்தனக்கே ஸ்வாதீனனென்று மிப்படிப்பட்ட ஜ்ஞானத்தைக்கொடுத்த வென்றபடி. (நாரணனே) ஸ்ரீயஃபதியை, இங்கு நாராயணசப்தத்தாலே முன்சொன்ன ஸர்வசரீரத்வாதிகள் விவக்ஷிதங்கள் (நான்மறையால்) நாலுவேதங்களாலே, தத்ப்ரதிபாத்யார்த்தங்களா லென்றபடி. (நான்கண்டேனே) அசித்கல்பனுயிருந்த நான் அவனுடைய வுபகாரத்தாலே ஜ்ஞானம் பிறந்து அத்தாலே நன்ருக வறிந்துக்கொண்டேனே. இப்பாட்டிலிறையில் கூட்டியென்கிற பர்யந்த மீச்வரபரமாயும் யோஜிக்கலாம், எப்படியென்னில், (தான்தனக்கித்யாதி) விபுவால் ஜ்ஞானஸ்வரூபமான தன் திவ்யாத்மஸ்வரூபமானது அஹமென்று தானேதோன்றி, (தன்னேரொளியிணையித்யாதி) தனக்கஸாதாரணகுணமாய் விபுவான தர்மபூத ஜ்ஞானத்தாலும், ஸர்வதாஸ்வ ஸ்வரூபத்தையும் பாத்துக்கொண்டு, (தான்தனக்கித்யாதி) அஹம்மமேதி ஜ்ஞானசூன்யமான வசேதனமாய் தனக்கு குணபூதங்களான ப்ரக்ருத்யாதிகளை, இதுகளை குணமென்றது அப்ருதக்ஸித்தமானபடியால், தன்குணத்தால் - ஸ்வஸங்கல்பத்தாலே, (தானிறையில்கூட்டி) ஸ்வதந்த்ரனை தான் தன்னிடத்தில்கூட்டி, ஸ்வாப்ருதக்ஸித்தமான ப்ரக்ருத்யாதிகளை ஸ்வஸங்கல்பத்தாலே ஸ்வசரீரமாயும் ஸ்வாதீனமாயு மங்கீகரித்தென்கை. மேல்பூர்வவத் பூர்வ யோஜனைக்கு ப்ரக்ருதார்த்தஸ்வாரஸ்யமுண்டு. இதுக்கு தான் நாரணனே யித்யாதி சப்தஸ்வாரஸ்யமுண்டு. (உகூ)

இப்படிப்பட்ட வுபகாரங்களை வேறொருவர் செய்யமாட்டாரோ வென்கிற சங்கையைப் பரிஹரிக்கைக்காக தான் ப்ரதமாதிகாரத்தாலே சொன்ன முமுக்ஷுவுக்கு கர்ப்பவாஸ ப்ரப்ருதியுபாயாநுஷ்டானபர்யந்த மீச்வரன்பண்ணு முபகாரங்களையும் த்விதீயாதிகாரத்தாலே வெளியிட்ட வுபாயாநுஷ்டான ப்ரப்ருதி ப்ரம்மநாடி ப்ரவேசபர்யந்தம் பண்ணுமுபகாரங்களையும் த்ரித்ரியாகாரத்தாலே ப்ரகாசிப்பித்த வர்ச்சிராதிக மனப்ரப்ருதிமேல் முழுக்கச்செய்யு முபகாரங்களையும் ஒருபாட்டாலே யுபலக்ஷணதயாஸங்க்ரஹிக்கிருர்.

இப்பாட்டில் மூன்றதிகாரத்தாலே சொன்னவர்த்தங்களை மூன்று பாதத்தாலே ஸங்க்ரஹித்து நாலாம்பாதத்தால் முன்வந்த சங்கையை பரிஹரிக்கிருர்.

(கழியாத) கழிந்துபோகாததான, ப்ராயச்சித்தாதிகளால் நாச்யமல்லாததான, (கருவினையில்) கரு-கர்ப்பம். இது உபலக்ஷணம். கர்ப ஜந்மஜராமரணதி ப்ரதமான பாபங்களில், (படிந்தநம்மை) படியாநின்றுள்ள நம்மை, பாபபூயஸ்தையாலே சேற்றிலழிந்தின சேருகளைப்

ஙo-மு.— கழியாதகருவினையிற்படிந்தநம்மைக்
காலமிதுவென்றொருகாற்காவல்செய்து
பழியாதநல்வினையிற்படிந்தார்தாளிற்
பணிவித்துப்பாசங்களடையநீக்கிச்
சுழியாதசெவ்வழியிற்றுணைவரோடே
தொலையாதபேரின்பந்தரமேலேற்றி
அழியாதவருளாழிப்பெருமான்செய்யு
மந்தமிலாவுதவியெல்லாமளிப்பாராரோ. (சுகூ)

(ப - ரை.) கழியாத - கழிவுபெறாத, கருவினையில் - கர்ப்பம்முதலிய இடர்விளைவிக்கும் பாபங்களில், படிந்த-படிந்திருக்கின்ற, நம்மை-நம்மை, இதுகாலம் - ரக்ஷிக்க இது ஏற்றகாலம், என்று - என்று, ஒருகால் - ஒருதடவை, காவல்செய்து - ரக்ஷித்து, பழியாத - குற்றமற்ற, நல்வினையில் - ஸுக்ருதத்தில், ஸத் கர்மங்களில், படிந்தார் - படிந்த பெரியோர்களது, தாளில் - திருவடிகளில், பணிவித்து - பணியும்படி செய்து, பாசங்கள் - பந்தங்களான கர்மங்களை, அடைய - நிச்சேஷமாய், நீக்கி - நீங்கச்செய்து, சுழியாத - சுழித்தலற்ற, செவ்வழியில் - ருஜுவான மார்கத்தில், துணைவரோடே-ஸஹாயபூதர்களுடன், தொலையாத - அழிவில்லாத, பேரின்பம் - பெரிய இன்பத்தை, தர - அளிக்க, மேல் - ப்ரக்ருதி மண்டலத்திற்குமேல், ஏற்றி - ஏறவைத்து, அழியாத - என்றும் அழிவுறாத, அருள் - க்ருபையையுடைய, ஆழி - சக்கரதரனாகிய, பெருமான்-எம்பெருமான், செய்யும் - செய்யும், அந்தமிலா-முடிவில்லாத, உதவி எல்லாம்-உபகாரங்களையெல்லாம், ஆர்-யார்தான், அளப்பார் - அளவிடவல்லவர்கள், இவ்வளவென்று பரிச்சேதித்தறிய வல்லவர்யாவரொன்கை. (ஙo)

வியாக்யானம்.

போலே, ததந்தர்கதனானவன்போலே யிருக்கிற நம்மை, (ஒருக்கால்) ஒருவேளையிலே, ஜாயமாந கடாக்ஷாநியோக்யமானகாலத்திலே, (இதுகாலமென்று) இவன் ரக்ஷணத்துக் கிதுநல்ல ஸமயமென்று, (காவல் செய்து) ரக்ஷணத்தைப்பண்ணி, அஜ்ஞாதஸுக்ருதோத்பாதந ப்ரக்ருதி ஸதாசார்ய ஸம்பந்த பர்யந்தமான ரக்ஷணங்களைப்பண்ணியென்றபடி. (பழியாதநல்வினையில்) இங்கு வினை-கர்மம், பழிக்கப்படாததான, நல்ல கர்மங்களில், சாஸ்த்ர ஸம்மதமாயும் ஸத்துக்களுகந்ததாயுமுள்ள ஸகல கற்மங்களென்றபடி. (படிந்தார்தாளில்) படிந்திருக்கு மவர்களுடைய திருவடிகளிலே, ஸத்கர்ம நிரதாளான ஸதாசார்யாதிகள் திருவடிகளிலே, (பணிவித்து) பணி - கைங்கர்யம், அத்தைசெய்வித்து, ஸதாசார்யர் திருவடிகளில் கைங்கர்யம் பண்ணும்படி நம்மை யங்கே சேர்த்ததென்றபடி. (பாசங்கள்) பாசம், கயிறு, பாசம்போலே பந்தகங்களான

வியாக்யானம்.

நம்முடைய பாபங்களை, (அடைய) க்ருத்ஸநத்தையும், (நீக்கி) உபாய ப்ராப்தி விரோதியான க்ருத்ஸந பாபத்தையும், புருஷகார மோக்ஷா ர்த்த ப்ரபத்யாதிகளாலே போக்கி, (துலையாபேரின்பம்) துலைகை - நாசம். நாசரஹிதமான மஹத்தரஸுகத்தை தருகைக்காக, கைங்கர்ய ஸம்பத்தைக் கொடுக்கயென்றபடி. (சுழியாத) சுழியாக வாகாததான, (செவ்வழியில்) செவ்வையான வழியில், சுழிபோலே பரிப்ரமண ஹேதுவான தூமாதி மார்கம்போலே யன்றிக்கே, அபுநராவ்ருத்தி ஹேதுவாய் ஸமீசீநமானவர் சிராதிமார்கத்திலென்றபடி. (துணைவரோடே) ஸஹாய பூதாளான வாதிவாஹிகரோடேகூட, (மேலேற்றி) ப்ரக்ருதிக்குமேலான பரமபதத்தி லேற்றிவைத்தும், (அழியாதவருளாழிப் பெருமாள்செய்யும்) ஒருக்காலுமழியாததான க்ருபாஸாகரனுனஸர்வேச்வரன் பண்ணுமதான, "புணைகொடுக்கிலும் போகவொட்டாரோ, தன்னடியார் திறத்து, இத்யாதிப்படியே, முக்தவிஷயத்தில், க்ருபை நிருபாதிகமான படியை பற்றவிங்கு அழியாதவருளென்றது. ஆழி - ஸமுத்ரம். (அந்தமில்லா வுதவியெல்லாம்) உதவி - உபகாரம், அந்தமில்லாததான வுபகாரங்களையெல்லாம், பூர்வோக்தங்களான வநந்தோப காரங்களையெல்லாமென்றபடி. (அளிப்பாராரோ) ஆர்தான் அளிப்பார்கள். அளிக்கை- ரக்ஷிக்கை, இந்த உபகாரங்களைப்பண்ணி ஆர் ரக்ஷிபபொன்கை, அஜ்ஞாத ஸுக்ருதப்ரப்ருதி மோக்ஷப்ரதாந பர்யந்தமான வுபகாரம்பண்ண வொருவரும் ஸமர்த்தரன்றென்றபடி. (ங௦)

மேல் ஸாரஸங்க்ரஹத்திலொருபாட்டு. இந்த ஸாரஸங்க்ரஹத்திலே முமுக்ஷுவுக்கு ஜ்ஞாதவ்யங்களாய் ஸாரதமங்களானத்யாஜ்யோபாதேயவிபாகமென்ன பூர்ணத்வப்ரகாரங்களென்ன, ப்ரக்ருதிகுண விவேகாதிபலங்களென்ன, நித்யாநுஸந்தேயமான ஸர்வஸங்க்ரஹமென்ன, ப்ரமாணப்ரமேய ஸங்க்ரஹமென்ன, ஜ்ஞானிக்ருத்யமென்ன, இதுகளை விஸ்தாரமாக வருளிச்செய்து முடிவிலே இவ்வதிகாரிக் கனுஷ்டேயமான ப்ரபத்தியினுடைய வனுஷ்டாந ப்ரகாரத்தை யொரு பாட்டாலே காட்டியருளுகிறார்.

(நின்னருளாங்கதியன்றி) உன்னுடைய க்ருபையாகவாகாநின்ற கதியைத்தவிர, க்ருபாவிசிஷ்டனைக்கொண்டு கதியாகாநின்றவுன்னைத் தவிர வென்றபடி, (மற்றொன்றில்லேன்) வேறொருகதி யில்லாதவனானேன், ஏதேந உபாயாந்தரப்ரவ்ருத்தி சூன்யத்வரூபமான ஆகிஞ்சின்யாத் யனுஸந்தானத்மகமான கார்ப்பண்யம் சொன்னபடி. (நெடுங்காலம் பிழைசெய்த நிலைகழிந்தேன்) அனாதியாக ஆஜ்ஞாதிலங்கனரூபமான குற்றம்செய்யாநின்ற நிலையைத்தள்ளிவிட்டேன். பாபாபிஸந்தியைவிட்டேனென்கை. பாபாபிஸந்தி நிவ்ருத்திரூபமான ப்ராதிகூல்யவர்

௩க-மூ.—நின்னருளாங்கதியன்றிமற்றொன்றில்லேன்
நெடுங்காலம்பிழைசெய்தநிலைகழிந்தேன்
உன்னருக்கினிதானநிலையுகந்தே
னுன்சரணேசரணென்னுந்துணிவுபூண்டேன்
மன்னிருளாய்நின்றநிலையெமக்குத்தீர்த்து
வானவர்தம்வாழ்ச்சிதரவரித்தேனுன்னை
யின்னருளாலினியெமக்கோர்பரமேற்றாம
லென்றிருமாலடைக்கலங்கொள்ளென்னைநீயே. (எ0)

(ப-ரை.) நின் - உனது, அருளாம் - க்ருபையாகிற, கதியன்றி - ப்ராபகம்அல்லாது, மற்றொன்று - வேறொரு ப்ராபகம், இல்லேன் - உடையவனல்லென், நெடுங்காலம் - தீர்க்ககாலம், பிழைசெய்த - அபராதங்கள் செய்த, நிலை - ரீதியை, கழிந்தேன் - விட்டேன், உன்னருளுக்கு - உன் க்ருபைக்கு, இனிதான - இனிமையான, நிலை - நிலையை, உகந்தேன் - ஸந்தோஷித்தேன், உன்சரணே - உன் திருவடிகளே, சரண் - ரக்ஷகம், என்னும்துணிவு - என்கிற நிச்சயத்தை, பூண்டேன் - அடைந்தேன். மன் - த்ருடமாகிய, இருளாய் - அந்தகாரமாய், நின்றநிலை - நின்ற நிலையை, எமக்கு - எமக்கு, தீர்த்து - நீக்கி, வானவர்தம் - நித்யஸூரிகளது, வாழ்ச்சி - போதத்தை, தர - கொடுக்க, உன்னைவரித்தேன் - ப்ரார்த்தித்தேன், இன்னருளால் - இனிய உன்க்ருபையினால், இனி - இதன்மேலே, எமக்கு - எமக்கு, ஓர்பரம் - ஒருபரத்தையும், ஏற்றாமல் - ஏறவைக்காமல், என் - எனது, திருமால் - ஸ்ரீய:பதியே, நீயே - நீயே, என்னை - என்னை, அடைக்கலம் - அடைக்கலமாக, கொள் - அங்கீகரிக்க வேண்டும். (௩க)

வியாக்யானம்.

ஜநமித்தால் சொன்னபடி. (உன்னருளுக்கினிதான நிலையுகந்தேன்) உன்க்ருபைக்கு போக்யமான தசையையுகந் தங்கீகரித்தேன், உன் க்ருபை யென்னையுகந்து விஷயீகரிக்கும்படியான நல்லதசையை யங்கீகரித்தேன். தத்வஜ்ஞானு வர்த்தநரூபமான விருத்தியை யடைந்தேன் என்கை, ஆனுகூல்யஸங்கல்ப்பம் சொன்னபடியிது. (உன்சரணேசரணென்னுந் துணிவுபூண்டேன்) துணிவு - த்ருடாத்யவஸாயம், உன் திருவடிகளே உபாயமென்கிற த்ருடாத்யவஸாயத்தை யடைந்தேன். பூண்டேனென்றது - போக்யமாக விந்த வத்யவஸாயமிருந்ததென்கை. இத்தால் ரக்ஷகத்வாத்யவஸாயாத்மகமான விச்வாசம் சொன்னபடி. (மன்னிருளாய்நின்றநிலை) மன் - த்ருடம், த்ருடமான வந்தகாரம்போலேயிருக்கிற வெங்களுடைய வஜ்ஞானதசையை, (எமக்குத்தீர்த்து) தேவரீரை யுபாயமாகவடைந்த வெங்களுக்கு நிச்சேஷமாகத் தீர்த்து, (வானவர்தம்வாழ்ச்சிதர) வானவர் - நித்யஸூரிகள். அவர்கள் தங்க

வியாக்யானம்.

ளுக்கு அசாதாரணமான வாழ்ச்சியை யெங்களுக்குத் தருகைக்காக, வாழ்ச்சி - வாழுகை, கைங்கர்யம் செய்கையென்றபடி. (வரித்தேனுன்னை) உன்னைவரணம்பண்ணினேன், இத்தால் பலப்ரார்த்தனுத்மகமான கோப்த்ருத்வவரணம் சொன்னபடி. (இன்னருளால்) போக்யமான க்ருபையாலே, (இனி) பரஸமர்ப்பணேத்தரதசையிலே, (எமக்கு) அகிஞ்சனரான வெங்களுக்கு, (ஓர்பரமேற்ருமல்) ஒருபரத்தையுமேற்ருமல், ஸ்வயத்நஸாத்யமாக வொரு வ்யாபாரத்தையு மெங்கள் தலையில் வையாமலென்றபடி. (என்திருமால்) எனக்கு ஸ்வாமியான ஸ்ரீயஃபதியே, (நீயே) ஸர்வசரண்யனுய் தயாபூர்ணனுன நீயே, (என்னையடைக்கலங்கொள்) நிருபாதிகதாஸனுன வென்னை ரக்ஷ்யவஸ்துவாக வங்கீகரித்துக்கொள். பரமேற்ரும லென்னை யடைக்கலங்கொள்ளென்றத்தால் ஸ்வநிர்பரத்வாத்வ்யவஸாய பூர்வகமாக பரகர்ப்பமான வாத்மஸமர்ப்பணரூபாங்கி ப்ரதிபாதிதமாய்த்து. பலஸமர்ப்பணம்ஸித்தமித்தாலே எனக்குத் தீர்த்தெறு பலப்ரார்த்தனையிலே யாத்மீயபரத்தைச்சேர்த்து பஹுவசநமாக இருக்கையாலே அடைக்கலங்கொள்ளென்னை யென்கிறவிடத்திலும் பஹுவசனத்திலேதான் தாத்பர்யம். இப்பாட்டிலங்கங்களை முன்பின்னுகச் சொன்னத்துக்கு "ஐவத்ராதிகூல்யமுகாஃ, அத்யந்தாகிஞ்சநோஹம்" (த்வத்ப்ராதிகூல்யமுகாஃ, அத்யந்தாகிஞ்சநோஹம்) இத்யாதி ப்ரதேசங்கள்போலே க்ரமத்திலே தாத்பர்யமில்லை, அவச்யாபேக்ஷிதத்வத்திலே தாத்பர்யம். இத்தாலங்காங்கீ ஸமுதாயாத்மகமே ப்ரபத்தி சப்தவாச்யமென்றும் இதி லேகதேசமான சேஷத்வ ஜ்ஞாநரக்ஷகத்வாத் யவஸாயங்கள் ப்ரபத்திசப்தவாச்ய மன்றென்றும் சொல்லிற்ருய்த்து.　　(ருக)

மேல் விரோதபரிஹாரத்திலிருக்கிற வாத்யந்தபாட்டுகள் மூன்றில் முதல்பாட்டு. இந்த விரோதபரிஹாரமென்கிற ரஹஸ்யத்திலே "ஸ்ரீமத்வேங்கடநாயகேநவஹதா சேஷாமிவாஜ்ஞாம்ஸதாம்" (ஸ்ரீமத்வேங்கடநாயகேநவஹதா சேஷாமிவாஜ்ஞாம்ஸதாம்) என்கிறபடியே பெரியவாளுடைய நியமனத்தாலே முமுக்ஷுவுக் கவச்யஜ்ஞாதவ்யங்களான ரஹஸ்யார்த்த ப்ரமேயங்களில் பாலுக்குள் நீர்த் துரும்புபோலே வருகிறசங்கைகளை நூற்றெட்டு வாக்யங்களாலே பரிஹரிக்கத் திருவுள்ளமாய், "ஸ்ரீமந்நாராயணஸ்ஸ்வாமீ, உதிதம்பவதஃபாயாத்" (ஸ்ரீமந்நாராயணஸ்வாமி, உதிதம்பவதஃ பாயாத்) என்கிற ச்லோகத்வயத்தை வக்தவ்யார்த்த ஸங்க்ரமாயும் மங்களமாயும் செய்தருளி தமக்கிப்படிப்பட்ட சங்கைகளைப் பரிஹரிக்க யோக்யங்களான ஜ்ஞானசக்த்யாதிகளுண்டென்கிற வம்சத்தை ஸகலவேத ப்ரதிபாத்யனுய் அகடிதகடனுஸாமர்த்யவானுய் ஸர்வவிரோதி நிவர்த்தகனுன ஸர்வேச்வரன் நமக்கு

கூஉ-மூ.—பரவுமறைகளெல்லாம்பதஞ்சேர்ந்தொன்றநின்றபிரான்
இரவன்றிரவியின்காலத்தழைத்தவெழிற்படையோன்
அரவுங்கருடனுமன்புடனேந்துமடியிரண்டுந்
தரவெந்தமக்கருளால் தளராமனந்தந்தனனே. (எக)

(ப-ரை.) பரவும் - பரவுகின்ற, மறைகளெல்லாம் - வேதங்களெல்லாம், பதம் - தன்திருவடிகளை, சேர்ந்து - அடைந்து, ஒன்ற - பொருந்தும்படி, நின்ற - எழுந்தருளியிருந்த, பிரான் - பரமோபகாரகனும், அன்று-பாரதயுத்தத்தில், இரவியின் காலத்து - ஸூர்யனதுகாலமாகிய பகலில், இரவு - ராத்திரியை, அழைத்த - வரவழைத்த, எழில் - ஔஜ்வல்யமுடைய, படையோன் - சக்ராயுதத்தையுடையவனுமாகிய ஸ்ரீயঃபதி, அரவும் - ஆதிசேஷனும், கருடனும் - கருடனும், அன்புடன் - ப்ரீதியுடன், பக்தியுடன், ஏந்தும் - தரித்தும், அடியிரண்டும் - திருவடிகளிரண்டையும், தர - நமக்குகொடுக்க, எந்தமக்கு - நமக்கு, தளரா - தளராத, மனம் - மனஸ்ஸை, அருளால் - தன்கிருபையினால், தந்தனன் - கொடுத்தான். (கூஉ)

வியாக்யானம்.

ப்ரமப்ரமாதாதி ரஹிதமான ஜ்ஞானத்தை க்ருபைபண்ணினனென்கிறரடியி லொருபாட்டாலே.

(பரவும்மறைகளெல்லாம்) மறை - வேதம், பரவுகை - விசாலமாகை, அதி விஸ்த்தீர்ணங்களான வேதங்களெல்லாம், (பதஞ்சேர்ந்து) தம்முடைய திருவடிகளையடைந்து, (ஒன்ற) ஒன்றும்படி, ஒன்றுகை ஏகீபவிக்கை. (நின்றபிரான்) ஸகலவேதங்களும் தம்திருவடிகளை ப்ரதிபாத்யதயா அடைந்து அங்கேயே ஏகீபவித்து நிற்கும்படி ஸர்வோத்க்ருஷ்டனாய்நின்ற வுபகாரனை, ஏகீபவிக்கையாவது அக்நீந்த்ராதிசப்தங்களும் பர்யவஸான வ்ருத்யாதத்பரங்களாகை. இது படையோன் யென்கிறத்தோ டந்வயிக்கும். (அன்று) பாரதஸமரத்தில், (இரவியின்காலத்து) இரவி - ராத்திரி, இன்மை - யில்லாமை, ராத்திரியில்லாத வேளையிலே, யத்வா - இரவிஸூர்யன், இன் - ஸ்வார்த்தே. ஸ்ஸூர்யனுடைய ஸஞ்சாரகாலத்திலே, (இரவு) ராத்ரியை, (அழைத்தவெழில்படையோன்) எழில் - ஔஜ்வல்யம், அழையாநின்று அத்தாலே ஔஜ்வல்யசாலியான திருவாழியையுடைய ஸர்வேச்வரன், படை - ஆயுதம், தத்விசேஷமான சக்கரம் விவக்ஷிதமிங்கு, ஜயத்ரதவதார்த்தமாக ஸூர்யனிருக்கும்போதே சக்ரத்தாலே யவனிமறைத்து ராத்ரியையுண்டாக்கின வகடிதகடனா ஸாமர்த்யவானான வுபகாரகனென்றர்த்தம். இதுக்கு க்ரியையோ டந்வயம். (அரவும்) ஸர்ப்பமும், ஆதிசேஷனுமென்றபடி, (கருடனும்) கருடனும், (அன்புடனேந்தும்) ப்ரேமத்தோடேகூட வேந்துகைக்கு யோக்யமான, (அடியிரண்டும்)

வியாக்யானம்.

இரண்டுதிருவடிகளையும், (தர) கொடுக்கைக்காக (வந்து) ஆசார்யரூபமாகவந்து, அனந்த கருடாதிகளாலே ப்ரேமபூர்வமாக ஸ்பர்சிக்குந் திருவடிகளை நமக்கும் போக்யமாக வநுபவிக்கும்படி தருகைக்காக விங்குவந்தென்றபடி. இந்த ரஹஸ்யம் திருவஹீந்த்ரபுரத்தில் செய்தருளினபடியால் அங்கே யநந்தகருட ஸம்வாதநிவர்த்தகமாகவந்தமை தோற்றுகைக்காக அரவுங்கருடனு மித்யாதியால் திருவஹீந்த்ரபுரத்தில் வந்தென்றுமாம். (அருளால்) க்ருபையாலே, (எமக்கு) ஸதாசார்ய கடாக்ஷம்பெற்ற நமக்கு, (தளராமனந்தந்தனனே) தளராதமநஸ்ஸைக் கொடுத்தான். மதாந்தரஸ்தர்களு மேகதேசிகளும்பண்ணும் சங்கைகளுக்கு நிவர்த்தகங்களாயும் ப்ரமப்ரமாத ரஹிதங்களாயுமுள்ள ஜ்ஞாநாதிகளையும் க்ருபையாலேதந்து அதுகளில் மநஸ்ஸு போகாதபடி பண்ணினனென்று தாத்பர்யம். (கூஉ)

இப்படி நமக்கிவ்விஷயத்திலே பகவத்கடாக்ஷத்தால் வந்ததெளிவை யருளிச்செய்து மேல் எண்பது வாக்யத்தாலே திருமந்த்ரார்த்தத்தில்வரும் சங்கைகளையும் பத்துபத்து வாக்யங்களாலே மத்யமத்ருதீய ரஹஸ்யார்த்தசங்கைகளையும் மேலேழு வாக்யத்தாலே மூன்று ரஹஸ்யத்துக்கும் பொதுவான சங்கைகளையும் பரிஹரித்து, இப்படி நூற்றேழுவாக்யங்களாலே பரிஹரித்த சங்கைகள்தவிர மற்று மிஸ்ஸம்ப்ரதாயார்த்தங்களில்வரும் சங்கைகளை ஸ்ரீபாஷ்யகாராதிகள் அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யாதிகளாலே பரிஹரிக்கலாமென்று நூற்றெட்டாம் வாக்யத்தாலே யருளிச்செய்து இப்படி ஸம்ப்ரதாயத்தை ப்ரவர்த்திப்பித்த ஸ்ரீபாஷ்யகாரருடைய திகந்தவிச்ராந்தமான கீர்த்தியைச் சில த்ருஷ்டாந்தங்களைக் காண்பிவைத்து அதுகளோடே ஸத்ருசமன்றென்று சொல்லியதுக்கு ஹேதுவையு மருளிச்செய்து இது நித்யமாகச் சொல்லவேணுமென்று இக்கீர்த்திக்கு மங்களாசாஸநம் செய்தருளுகிறுரொருபாட்டாலே நாலாமதிகாரத்தில் முடிவிலே.

(மூண்டமுண்டரை) மூளுகை - உத்யோகம், மூண்ட - உத்யுக்தரான, முண்டரை - முண்டரொன்று சிகாயஜ்ஞோபவீதாதி ரஹிதரான சங்கராதிகளைசொல்லி வாதம்பண்ணவந்த ஸமஸ்த ஸித்தாந்திகளை ளென்னலாம். யத்வா - பூர்வோத்தரபாகங்களாலே ஏகமான மீமாம்ஸையில் முண்டம்போலேயிருக்கிற ஏகதேசக்ராஹிகளான ராஹுகபந்த மீமாம்ஸக ப்ரப்ருதிகளையும் சொல்லலாம். இதுக்கு சாடியென்கிறத்தோ டந்வயம். (சலந்தவிர்ந்து) சலத்தைவிட்டு, தவிர்கை - விடுகை. இதுபலக்ஷணம். வாதத்திலே சலசாதிரூபங்களான நிக்ரஹஸ்தானங்களை விட்டென்றபடி. (வாதுசெய்து) வாது - வாதம், அத்தைச் செய்து, அந்த ஸித்தாந்திகளோடு வாதம்பண்ணி யென்றபடி. (சாடி)

ரு-ரு-மூ.—அலர்ந்தவம்புயத்திருந்துதேனருந்திகயென்றுகோ
அல்குலாரசைந்தடைந்தநடைகொளாவனமெனே
நலந்தவிர்ந்தாலதென்கொனுவின்வீறிழந்ததா
ணுவணங்குநாதர்தந்தநாவின்வீறிழந்ததென்
சலந்தவிர்ந்துவாதுசெய்துசாடிமூண்டமுண்டரைச்
சருவிலாரெனக்கனத்துரைத்தவெதிராசர்தம்
வலந்தருங்கைநாயனார்வளைக்கிசைந்தகீர்த்தியார்
வாரிவாலதாகுமென்றுமாசில்வாழிவாழியே. (எஉ)

(ப - ரை.) அலர்ந்த - விகஸித்த, அம்புயத்து - தாமரஸ புஷ்பத்தின்கண், இருந்து - இருந்து, தேன் - மகரந்தத்தை, அருந்தி - பானம் செய்து, இன் - இனிய, அகல் - விசாலமாகிய, அல்குலார் - கடிபுரோபாகமுடைய யுவதிகள், அசைந்து - மெள்ளமெள்ள நடந்து, அடைந்த- அடைந்த, நடை - நடையை, கொளாதது - கொள்ளாததான, அனமெனே - அன்னமென்னலாமோ, அது - அவ்வன்னம், நலந்தவிர்ந்ததால் - நன்மையற்றதாகையால், என்கொல் - என்னுகின்றது, நாவின் - நாக்கினது, வீறு - பெருமையை, இழந்ததால் - இழந்தமையால், நாவணங்கு - ஸரஸ்வதியினது, நாதன் - உபாஸ்யனுகியஹயக்ரீவன், அல்லது பர்த்தாவாகிய பிரமதேவன், தந்த - தந்த, நாவின்வீறு - நாவின் வீறு, இழந்ததென் - இழந்ததோஎன்ன, சாடிமூண்ட - வாதத்தில் உத்யுக்தர்களாகிய, முண்டரை - மொட்டைத்தலையரை, சாடி-நிராகரித்து, சலந்தவிர்ந்து - ச்சலத்தைவிட்டு, வாதுசெய்து - வாதம்பண்ணி, சருவிலார் - சரிந்துபோத லில்லாதவர், என - என்றுநினைத்து, கனைத்து - கர்ஜித்து, உரைத்த - வாக்யார்த்தமருளிச்செய்த, எதிராஜர்தம் - யதிஸார்வ பௌமனுடைய, வலந்தரும் - அபயப்ரதானம்செய்யும், கை - திருக்கையையுடைய, நாயனார் - எம்பெருமானது, வளைக்கு - சங்கத்திற்கு, இசைந்த - ஸத்ருசமான, கீர்த்தி - கீர்த்தியானது, வாரி - நிர்மல ஜலம்போலவும், வாலது - சாமரம்போலவும், ஆம் - ஆம், அது - அந்த கீர்த்தி, என்றும் - எப்போதும், மாசில் - களங்கமற, வாழி - வாழக்கடவது, வாழி - வாழக்கடவது. (ருரு)

வியாக்யானம்.

நிராகரித்து, சாடுகை - தள்ளிவிடுகை, வாதத்தாலே யவர்களுடைய யுக்தியை நிராகரித்து அவர்கள் ஸித்தாந்தத்தை யபஸித்தாந்தமாக்கி யென்கை. (சரிவிலாரென), சரிவு - சரிந்துபோகை, அதிலார் சரி வில்லாதவர்கள், என - என்றெண்ணி, இத்தாலு மிவர்களுக்கொரு சரி வில்லையென்று பார்த்தென்றபடி. (கனத்துரைத்த) அதிகமாகச் சொன்னவரான, அதாவது சிரகாலமவர்கள் யுக்திக்குக் கழிவுவரும்படி க்ரந்த ரூபமாக வவர்கள் ஸித்தாந்தத்தையழித்து ஸ்வஸித்தாந்தத்தை ஸ்தா

வியாக்யானம்.

பித்தவரான வென்கை. (எதிராஜர்தம்) தம்மென்று ஸ்வார்திகம், அவருக்கே யஸாதாரண மென்கையிலே தாத்பர்ய மாகவுமாம். யதிராஜருடையதான, இதுக்குக் கீர்த்தியோடே யந்வயம். ராமாநுஜாதி சப்தத்தைவிட்டு யதிராஜ சப்தப்ரயோகத்துக்கு ச்ருதி ஸ்ம்ருதி விருத்தமாய் சிகாயஜ்ஞோபவீதரஹிதமான முண்டஸன்யாஸம்போலே யன்றிக்கே, ஸகலசாஸ்த்ரஸம்மதமாய் தத்தாத்ரேய பஞ்சசிகாதிகளாலே பரிக்ருஹீதமாயிருந்த த்ரிதண்ட ஸன்யாஸா ச்ரமபரிக்ரஹம்பண்ணினவனென்று தாத்பர்யம், அதிலும் குடீசகாதிகளில் சிரேஷ்டமான பரமஹம்ஸத்வத்தைப் பரிக்ரஹித்தமை தோற்றுகைக்காக ராஜபதம். (பலந்தருங்கை நாயனுர்) பலம்-பலம், தருகை-கொடுக்கை, நாயனுர்-ஸ்வாமி, பலத்தைக்கொடாநின்ற திருக்கைகளை யுடைத்தான ஸர்வ ஸ்வாமியினுடைய, பலந்தருங்கையென்று ஆச்ரிதர்களுக்கு அஞ்சாதேயென்று தைர்யப்ரதமான வபயஹஸ்தத்தைக் கணிசிக்கிறபடி. (வளைக்கிசைந்த கீர்த்தியால்) வளை-ஹஸ்தகடகம், அதுக்கு இசைகையாவது ஆஸ்ரித ரக்ஷணத்திலும் ச்வைத்தியத்திலும் போக்யதையிலும் ஸத்ருசமாயிருக்கை. கீர்த்தியை வெளுப்பாக லோகத்தில் வர்ணிக்கையாலும் அதுரக்ஷகமாக நமக்கு இருக்கையாலும் ச்ரவணம் பண்ணும்போது போக்யமாக இருக்கையாலும் இப்படி சொல்லுகை யுபபன்னம். ரக்ஷகத்வமுண்டோவென்ன "வடமதுரைப் பிறந்தவன் வண்புகழே சரண்" என்னுரிறே ஆழ்வாரும் கீர்த்திக்கு. (கீர்த்தியார்) யசஸ்ஸானது, இதுக்குமேலுள்ள த்ருஷ்டாங்களோடும் காதாந்தத்திலுள்ள க்ரியையோடும் அந்வயம். கீர்த்தியாரென்று சேதநஸமாதியால் நிர்தேசித்தது பூஜ்யதையாலும் அஸத்ருச மாகையாலும். மேல் த்ருஷ்டாந்தம், (அலர்ந்தவம்புயத்திருந்த) அலருகை - விகஸிக்கை, அம்புயம் - பத்மம், விகஸியாநின்ற பத்மத்துக்குள்ளே யிருந்ததான, (தேனருந்தி) அருந்துகை-பாநம்பண்ணுகை, இங்குலக்ஷணயா பாநயோக்யமான ப்ரவாஹபரம், தேனுடைய ப்ரவாஹமானதென் றர்த்தம். அருந்தியென்று ப்ரவாஹத்தையும்சொல்லலாம். (என்றுகோ) என்றுசொல்லலாமோ, ச்வைத்யத்துக்கும் போக்யதைக்கும் விகஸிததாம ரஸாந்தர்கதமது வெள்ளத்தை யதிராஜகீர்திக்கு த்ருஷ்டாந்தமாகச் சொல்லலாமோ வென்றபடி, என்கொலென்று பாடமானுலும் அர்த்தமிப்படியே. இது சலிக்கையாலே அசலமான த்ருஷ்டாந்தாந்தரஞ் சொல்லுகிறுர் மேல், (அல்குலாரசைந்தடைந்த) அல்குல் - கடிபுரோபாகம். அதுடையவர்கள் அல்குலார், ஸ்திரீகளென்றபடி. அந்த ஸ்திரீகளாலே அசைந்தடையாநின்ற, (நடை) கமனம், அசைந்தடைகையாவது ம்ருதுவாக நடக்கை. (கொளாத) கொள்ளாததான, அந்நடையை யங்கீகரியாததான வென்றபடி. (அனமோ) அனம் - ஹம்ஸம், ஹம்ஸமென்னலாமோ,

வியாக்யானம்.

உத்தமஸ்திரீக மனஸத்ரு சகமனவத்தானஹம்ஸத்தினுடைய கமநர ஹிததசையையந்த கீர்த்திக்கு ஸத்ருசமாகச் சொல்லலாமோ, இங்கு ஸ்திரீ கமனவத்தையையெடுத்தது உத்தமலக்ஷண வத்வத்யோதநார்த் தம். தந்நிஷ்டகுணங்க ளிதுகளிலில்லாமையினுலே இந்த த்ருஷ்டாந் தங்களைத் தவிர்க்கிறுர் மேல், (அது) த்ருஷ்டாந்தங்கள், (நலந்தவிர்ந்த தால்) நலம்-ஆநந்தம், ஆநந்தத்தைத்தவிர்ந்திருக்கையால், (என்கொல்) என்னென்று சொல்லலாம். கீர்த்திக்கு ஸத்ருசமான வாநந்த மிதுகளி லில்லாததினுலே யெப்படியதுக்கு ஸத்ருசமாகச் சொல்லலாமென்ற படி. இதுகளைக்காட்டிலு மந்தகீர்த்திக்கு என்ன நலமென்ன; சொல்லு கிறுர் மேல். (நாவின்வீறிழந்ததால்) நாவு - ஜிஹ்வை, வீறு - உத்கர் ஷம், நாவினுடைய வுத்கர்ஷத்தை யிழந்தபடியால், நாவுக்கு வீறுவது ஸர்வஸம்மதமாயும் விலக்ஷணமாயுமுள்ள சப்தரசன ஸாமர்த்யம். ததாயத்தமாயன்றே கீர்த்திக் கௌத்க்ருஷ்ட்யம். ஹம்ஸாதிகளுக்கு ச்வைத்யாதிகளிருந்தாலும் தாத்ருசமான நாவின் வீறில்லாததினுலே யதுக்கு ஸத்ருஸமான வாநந்தப்ரதத்வ சக்தியில்லை. அத ஏவத்ருஷ் டாந்தமாக மாட்டாதென்கை. இப்படி ஹம்ஸாதிகள் ஸத்ருசங்களாகா திருந்தபோதிலும் இவற்றைப்போலே நாவின்வீறு பெற்றவர்கள் பின் னும் சிலபேர்களிலல்லையோ வென்னசொல்லுகிறுர்மேல். (நாவணங்கு நாதர்தந்த) அணங்கு-தேவதை. நாவு - வாக்கு, நாவணங்குவாக்தேவ தையான ஸரஸ்வதீ. அவளுக் காராத்யத்வேந ஸ்வாமியான ஹயக்ரீவர் கொடுத்ததான, (நாவின்வீறிழந்ததென்) அந்த நாவின்வீறை யிழந்த தென்னவஸ்து. வாக்தேவதாராத்யரான ஹயக்ரீவ ப்ரஸாதலப்தமான ஜ்ஞாநஸத்ருச ஜ்ஞாநமாகுமோ வங்யஜ்ஞாந மென்றபடி. இவருக்கு ஹயக்ரீவர் ப்ரஸாதித்தாரோ வென்ன. பேரருளாளர் ப்ரஸாதித்ததே ஜ்ஞாநப்ர தத்வாகாரத்தாலே ஹயக்ரீவ ப்ரஸாதலப்த மென்கை. நாவ ணங்கு நாதனென்று ப்ரஹ்மாவுக்கும் ஸரஸ்வதிக்கும் ப்ரத்யக்ஷமாயும் ஆராத்யராயுமுள்ள பேரருளாளரைச் சொல்லவுமாம். நாவணங்கென்ன அவளுங்கு நாதனென்ன இவர்கள் கொடுத்தவீறென் றுத்வந்த்வனுகவும் யோஜிக்கலாம். அப்போது சாரதாபீடத்திலே ஸ்வாமியினுடைய ஸ்ரீ பாஷ்யத்தை ஸரஸ்வதி சிரஸாவஹித்து இதுவே சர்வோத்க்ருஷ்ட மென்று அங்கீகரித்தமை தோற்றலும் ஆகையாலிப்படிப்பட்ட வேற் றம் அன்யநாவுக்கிருந்தாலன்றே த்ருஷ்டாந்தமாகலாமென்று தாத்பர் யம். இப்படி ஸர்வாம்சத்திலும் ஸமமான த்ருஷ்டாந்தமில்லாவிடிலும் நிர்மலத்வாதிகளிலே தோன்று மோரம்சத்திலாவது த்ருஷ்டாந்தமா கும் வஸ்துவில்லையோவென்னச் சொல்லுகிறுர்மேல்; (வாரிவாலதாகு மென்று மாசில்வாழிவாழியே) மாசு-அழுக்கு, அதில்லாத, நிர்மலமான வென்றபடி. இது வாரிக்கும் வாலுக்கும் விசேஷணம். வாரி - ஜலம்,

வியாக்யானம்.

வால் - ஸாமான்யவாசியான வால் சப்தம் தத்விசேஷமான சமரம்ருகத்தினுடைய வாலைச் சொல்லும். அதாகும் - அதுக்கு த்ருஷ்டாந்தமாகும், யத்வா, வாலதென்று - வாலாய் ஆருமென்று, த்ருஷ்டாந்தமாகுமென்றுமாம். இத்தால் நிர்மலத்வாம்சத்தில் பரிசுத்தஜலமும், சுப்ரமானசாமரமும் யத்யபி த்ருஷ்டாந்தமாகலாமென்றர்த்தம். வாரி வாலதென்று சிடுக்குவிடுத்து வாரினதா யத்தாலே பகவத்கைங்கர்ய யோக்யமான சாமரமென்னும் ஒரு த்ருஷ்டாந்தமாகவும் யோஜிக்கலாம். வாழியென்று மங்களவாசி சப்தமாய் மங்களப்ரார்த்நாபரம். (என்று வாழி) இப்படி யிக்கீர்த்தி நித்யமாகச் சொல்லவேணும். த்விருக்தியாதராதிசயத்யோதகம். வாரிவாலதாகு மென்கிறவிடத்தில் நைர்மல்யமர்த்தஸித்தமாய் மாசிலென்கிறத்தை வாழியோடே சேர்த்து இக்கீர்த்தி நித்யமாயும் நிர்மலமாயு மிருக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறதாகவுமாம். எம்பெருமானுருடைய கீர்த்தியானது எம்பெருமானுக்கு நிர்மலமான வொருசாமரம் வீசுகிறதுபோலேயா மாகையாலே யது நித்யமாகச் சொல்லவேணுமென்று இப்படியு மொரு யோஜனைபண்ணலாம். கீர்த்தியாலென்று பாடமாளுலு மிப்படியர்த்தங் கொள்ளலாம். (ருரு)

இப்படி ப்ரஸ்துதமான வெம்பெருமானர் கீர்த்தியை ஸ்துதித்து ஸ்ரீமத் வேங்கடநாயகே என்கிற ச்லோகத்தாலே ஸன்நியோகத்தாலதிகர்க்கசயுக்திகளாலே இச்சங்கையைப் பரிஹரித்தோமென்றும் "ஸ்தோதும் நிந்திதுமஸ்மதுக்தி" என்கிற ச்லோகத்தாலே யிந்தக்ரந்தத்தை குணக்ராஹிகள் ஸ்துதித்தாலும் மூடபுத்திகள் நிந்தித்தாலும் நமக்கொரு பாதகமில்லை, நம்முடைய திருவடிகளை யாச்ரயித்தவர்களுக்காகச் செய்தோமென்றும் சொல்லி, இப்படிப்பட்ட சங்காநிவர்தகமான ஜ்ஞாநாதிகள் அந்யாளுக் கில்லையாவென்கிற சங்காவாரணார்த்தம் பகவத் க்ருபாபாத்ரபூதாளான வாசார்ய ஸகாசாத்க்ருஹீதமான ஜ்ஞாநாதிகளையுடையவர்களுக்கு ஸர்வஜ்ஞ த்வேநப்ரஸித்தரான ருத்ராதிகள் பக்கல் நன்ருகவடைந்த ஜ்ஞானமுடையவர்களும் ஸத்ருசராகமாட்டார்க ளென்கிருர் முடிவிலொருபாட்டாலே.

(சடையன்திறலிவர்கள்) சடையன் - ஜடாதாரியான ருத்ரன், திறலென்று ஸாமர்த்யவாசியாய் லக்ஷணயா ஸ்ருஷ்ட்யாதி ஸாமர்த்யவானை ப்ரஹ்மாவைச்சொல்லி, ருத்ரனென்ன ப்ரஹ்மாவென்ன விவர்களென்றர்த்தம், (பெருஞானக்கடலதனை) பெரிதான ஞானமாகிறகடலை, (இடையமிழாது) இடை-மத்யம், மத்யையிலே யமிழ்ந்துபோகாதபடி, (கடத்தலும்) கடக்கை - தாண்டப்பண்ணுகை, ஞானஸாகரத்தை ஸ்வயம் தரணம் பண்ணினாலும் தங்களை யாஸ்ரயித்தவர்களைத் தாண்டிவைத்தாலும், (எய்து) எய்தது என்கிறது நடுக்குறைதலாய் எய்தென்றிருக்கிறது. எய்தது - அடைந்தது, (அளவென்றறியார்) பரிச்சின்னமென்

௩௪-மூ.—சடையன்றிறலிவர்கள்பெருஞானக்கடலதனை
இடையமிழாதுகிடக்கிலுமெய்தளவென்றறியார்
விடையுடனேழன்றடர்த்தவன்மெய்யருள்பெற்றநல்லோர்
அடையவறிந்துரைக்கவடியோமுமறிந்தனமே. (எ௩)

(ப-ரை.) சடையன் - சடாவானன சிவனது, திறலவர்கள் - பலத்தவர்கள், சிவன்பலத்தால் அறிவுபெற்றவர்கள், பெரு - பெரிய, ஞானக்கடலதனை - ஞானஸமுத்ரத்தை, இடை - மத்தியத்தில், அமிழாது - முழுகிப்போகாமல், கடக்கிலும் - தாண்டினும்; ஈது - இது, அளவென்று - அவதியென்று, அறியார் - அறியமாட்டார்கள், அன்று - நீளாபரிணயகாலத்தில், விடையேழு - ஸப்த வ்ருஷபங்களையும், உடன் - ஏகதா, அடர்த்தவன் - நிரஸித்த க்ருஷ்ணனது, மெய்யருள் - ஸத்யமான க்ருபையை, பெற்ற - அடைந்த, நல்லோர் - பெரியோர்கள், அடையவறிந்து - பூர்ணமாக அறிந்து, உரைக்க-நமக்குச்சொல்ல, அடியோமும் - அவர்களின் தாஸபூதர்களான நாமும், அறிந்தனம் - தெரிந்துகொண்டோம். (௩௪)

வியாக்யானம்.

றறியமாட்டார்கள். அளவு - பரிச்சேதம், தத்வத்தாயாம்லக்ஷண, அறியவேண்டியவர்த்த மிவ்வளவுதான் வேறில்லையென் றறியமாட்டார்களென்றபடி. யத்வா, இவர்கள் - இந்த மதாந்தரஸ்தர்கள், சடையன் றிறல் - ருத்ரனுடைய ஸாமர்த்யத்தாலே, பெருஞானக்கடல்தன்னை-மஹத்தான ஞானஸாகரத்தை, எய்து-அடைந்து, இடையமிழாது கிடக்கிலும் மத்தியத்திலே விஶ்ரமியாமல் பூர்ணமாக கரைகண்டாலும், அளவென்றறியாத - இவ்வளவுதானென் றறியமாட்டார்களென்றும் யோஜிக்கலாம், பெருஞானக்கடல் தன்னில் இடையமிழாது கிடக்கிலும் எய்தனவென்றறிவார் என்று சிலபாடமுண்டு. அப்போது ருத்ராதிகளிடத்தில் பெற்ற ஜ்ஞாநஸாகரத்திலே மத்தியத்தில் முழுகிப்போகாமலதிலேயே கிடந்துகொண்டிருந்தாலு மிது ஒரு பரிச்சின்னமான ஜ்ஞாநமென்றே யறிவார்கள், என்றர்த்தம். இத்தா லவர்கள் பரிச்சிந்ந தேவதைகளாகையாலே ததாயத்தமாய்வந்த ஜ்ஞானமும் பரிச்சிந்நமானதால் அபரிச்சின்ன ஜ்ஞாநத்தாலே பண்ணவேண்டிய சங்காநிவர்த்தநத்தை யிது பண்ணமாட்டாதென்று கருத்து. தமக்கபரிச்சிந்ந ஜ்ஞானம் வந்ததுக்கு ஹேது மேல். (விடையுடனேழன்றடர்த்தவன்) அன்று - நப்பின்னைப்பிராட்டி விவாஹகாலத்திலே, ஏழுவிடை - ஏழு வ்ருஷபங்களையும், உடனடர்த்தவன் - ஏககாலத்திலே ஸம்ஹரித்தவனுடைய, இத்தால் ஜ்ஞாநப்ரதனுடைய ஸர்வவிரோதி நிவர்த்தநசக்தியைக் காண்பிவைத்தபடி. (மெய்யருள்) ஸத்யமான க்ருபையை, ஏகதா விஷயீகரித்த வஸ்துவை விடாதொழிகையே இதுக்கு ஸத்யத்வம்.

வியாக்யானம்.

(பெற்றநல்லோர்) அடைந்த நல்லவாசார்யர்கள், ஸர்வவிரோதி நிவர்த்தகனன க்ருஷ்ணனுடைய க்ருபாபாத்ர பூதாளான வாழ்வாராதிகளான வாசார்யர்களென்றபடி. (அடையவறிந்துரைக்க) க்ருத்ஸ்நத்தையும் தாங்களுமறிந்து தங்களையாஶ்ரயித்த வெங்களுக்கும் தெரியும்படி சொல்ல, (அடியோமுமறிந்தனமே) அவர்கள் திருவடிகளை யாச்ரயிக்கையாலே பகவத் க்ருபாவிஷய பூதாளான நாங்களு மந்த க்ருத்ஸ்நார்த்தங்களையு மறிந்துகொண்டோம். ஆகையாலே யிந்த க்ரந்தம் பண்ணினேமென்று கருத்து. (ஙசு)

மேல் முனிவாஹந போகத்தி லாத்யந்தங்களி லிருக்கிற மூன்று பாட்டுகளில் முதல்பாட்டு, இந்த ரஹஸ்யத்திலே பெரியபெருமாள் நியமநத்தாலே லோகஸாரங்க மாமுனி தோள்தனிலேவந்து அத்தாலே முனிவாஹநனென்று திருநாமமுடைய திருப்பாணுழ்வார் அந்த பெரியபெருமாளைக்கண்டு ஆபாதகேசமாக வநுபவித்து அவ்வநுபவ பரீவாஹமாய்வந்த அமலனுதி பிரானென்கிற ப்ரபந்தத்தை யருளிச்செய்ய அதினுடைய வர்த்தங்களை விசதமாக வருளிச்செய்ய வேண்டுமென்று வைராக்யசாலிகளான பெரியோர்கள் ப்ரார்த்திக்க வதின்பேரில் அருளிச்செய்த தாகையாலே யிதுக்கு முநிவாஹ நபோகமென்று பேர்வைத்து அதற்காக வடியிலே "வ்யாஸிஷ்ய ஸதிஷக்த்யா" (வ்யாசிக்யா ஸதிபக்த்யா) என்கிற ச்லோகத்தாலே தாமருளிச்செய்யப் புகுகிற வம்சத்தை யருளிச்செய்து பின்பு ஒருபாட்டாலே பெரியபெருமாளைத் தவிர விஷயாந்தரத்தில் ப்ரவர்த்தியாத விந்த்ரியங்களையுடைய விவ்வாழ்வா ரநுபவ பரீவாஹ ரூபமாக வருளிச்செய்த தாகையாலே சுத்த வேதாந்தார்த்தங்க ளென்றறியுங்கொள் இவ்வம்சம் அந்த பெரியபெருமாளாலே வேதாந்ததேசிக பதத்திலே ஸ்தாபிக்கப்பட்ட நாமறிந்து சொல்லுகிறோமென்று பரோபதேசம் பண்ணுகிறுப்போலே யிப்ரபந்தத்தை ஸ்துதியா நின்றுகொண்டு முக்யார்த்தத்தை வெளியிடுகுறார்.

(காண்பனவும்) காணப்படும் வஸ்துவும், (உரைப்பனவும்) சொல்லப்படும் வஸ்துவும், (மற்றொன்றின்றி) வேறொன்று மில்லாமல், கண்ணனைத்தவிர சக்ஷுர் விஷயமான வஸ்துவும் வாக்விஷயமான வஸ்துவும் வேறொன்று மில்லாம லென்றபடி. இவர் சக்ஷுராதிகளுக்கு க்ருஷ்ணவ்ய திரிக்த வஸ்துவை விஷயமாக்கிற தில்லையென்று கருத்து, (கண்ணனையே கண்டுரைத்த) க்ருஷ்ணனையே கண்டனுபவித்து தத்பரிவாஹமாக வுரைக்கப்பட்டதான க்ருஷ்ணுவதாரச்சுவடும் ஸௌலப்யாதிகளு மிருக்கையாலே பெரிய பெருமாளை க்ருஷ்ணனுகச் சொன்னது. இதுக்குப் பாடலோ டந்வயம். (கடியகாதல்) காதல் - ப்ரே

ங௫-மூ.—காண்பனவு முரைப்பனவு மற்றொன்றின்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடியகாதல்
பாண்பெருமா ளருள்செய்த பாடல்பத்தும்
பழமறையின் பொருளென்று பரவுமின்கள்
வீண்பெரிய விரிதிரைநீர் வையத்துள்ளே
வேதாந்த வாரியனென் றியம்பநின்றோம்
நாம்பெரியோ மல்லோமின்று நன்றுதீதும்
நமக்குரைப்பா ருளரென்று நாடுவோமே. (எச)

(ப - ரை.) காண்பனவும் - காணப்படுமவையும், உரைப்பனவும் - சொல்லப்படுமவையும், மற்றொன்றின்றி - வேறொன்றில்லாமல், கண்ணனையே - கிருஷ்ணனையே, கண்டு-ஸாக்ஷாத்கரித்து, உரைத்த - அவரையே அருளிச்செய்த, கடிய-பூர்ணமான, காதல்-பக்தியையுடைய, பாண்பெருமாள் - திருப்பாணாழ்வார், அருள்செய்த - கிருபைசெய்த, பாடல் பத்தும் - பத்துபாட்டுக்களும், பழமறையின் - பழயதான வேதங்களின், பொருள் என்று - அர்த்தமென்று, பரவுகின்றோம் - ஸ்துதிக்கின்றோம், வீண் - வீணே, பெரிய - பெரியதான, விரிதிரைநீர் - விரிகின்ற அலைகளையுடைய கடலால் சூழப்பட்ட, வையத்துள்ளே - பூமியிலே, வேதாந்தவாரியனென்று - வேதாந்தாசார்யனென்று, இயம்ப-சொல்லும்படி, நின்றோம் - நின்றோம், நாம் - நாமே, நாண் பெரியோமல்லோம் - பெரியவர்களன்று, நமக்கு - நமக்கு, இன்று - இப்போது, நன்றும் - நல்லதும், தீதும் - தீயதும், உரைப்பார் - இதுநன்று இது தீதெனச்சொல்பவர்கள், உளர் - இருப்பார்கள், என்று - என்று, நாடுவோம் - தேடுவோம். (ங௫)

வியாக்யானம்.

மம், கடிய - அதிகமான, விஷயாந்தரத்திலே போகாதபடி மனஸ்ஸு அங்கேப்ரவணமா யிருக்கும்படியான பூர்ணப்ரேமசாலியான, (பாண்பெருமாள்) பாணனென்கிறது பாணனென்றபடி. எம்பெருமான் போலே யிவரு முபகாரகத்வேந ஸ்வாமி யாகையாலே பெருமாளென்றது. அப்படிப்பட்ட பாண்பெருமாள் (அருள்செய்த பாடல்பத்தும்) க்ருபையாலே செய்தருளினதாய் கானயோக்யமான பத்துபாட்டும், உரைக்கவென்றிருக்க விங்கருள்செய்த வென்றது தம்முடைய வனுபவத்தோடே நில்லாமல் ப்ரபந்த ரூபமாகச் செய்தருளினது க்ருபாகார்யமென்கைக்காக. அன்றிக்கே "என்னுள்ளங் கவர்ந்தானை" யென்கிறபடியே தம்முடைய காதலை ப்ரபந்தத்திலே சொல்லுகையாலே கண்ணனைக்கண்டுரைத்த காதலை யுடையவரென்று காதலுக்கு விசேஷணமாயு மாக்கிஸார்த்தக்யம் சொல்லலாம். பாடல் பத்தென்றது சரமச்லோகம் போலே யொற்றையாயும் திருவாய்மொழிபோலே யாயிரமாயுமன்றிக்கே ஸர்வார்த்த ப்ரகாசகமாய்க்கொண்டு பத்துபாட்டா யிருக்கிற

வியாக்யானம்.

தென் கைக்காக. இதுக்குமேல் க்ரியையோடே யந்வயம். (பழமறை யின் பொருளென்று) அநாதியான வேதார்த்த ப்ரதிபாதகங்களென்று, (பரவுமின்கள்) பரவுங்கோள், பராமர் சித்தறியுங்கோ ளென்றபடி. இதில் ப்ராமாண்யார்த்த மருளிச்செய்கிறார்மேல். (வீண்பெரிய) வீண் களாலே பெரிதான, வீண் - வ்யர்த்தவார்த்தை, தொஷாரோபண வார்த்தை யென்னவுமாம். இதுவையத்துக்கு விசேஷணம் (விரிதிரை நீர்) விரிகை - விஸ்தாரமாகை - விஸ்தாரமாயும் அனேகம் அலைகளை யுமுடைய ஸமுத்ர ஜலங்களாலே சூழப்பட்ட, (வையத்துள்ளே) பஞ்சாசத்கோடி விஸ்தீர்ணமான பூமிக்குள்ளே, (வேதாந்த வாரிய னென்று) வேதாந்தா சார்யனென்று, (இயம்ப) சொல்லும்படி, (நின் றோம்) ப்ரஸித்தனாக இராநின்றோம். “𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑌰𑌾𑌜𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌲𑌬𑍍𑌧𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑌦𑌃” (ஸ்ரீ ரங்கராஜ திவ்யாஜ்ஞா லப்தவேதாந்தா சார்ய பதஃ) என்கிறபடியே பெரியபெருமாளாலே வேதாந்தாசார்ய பதத்தி லே நிறுத்தப்பட்டு அப்படியே பூமியிலுள்ளா ரடங்கலும் கொண்டாடு ம்படி யிருந்தோமென்றபடி. ஆனல் தேவரீருக்குப் பெரியவர்களில்லை யோவென்ன; லஜ்ஜித்துச் சொல்லுகிறார். (நாம் பெரியோமல்லோம்) சேஷத்வஜ்ஞாந கார்யமான நைச்யாநு ஸந்தாநத்திலே வந்தால் நாம் பெரியவர்களல்லோம், இத்தையே விவரிக்கிறார்மேல் (இன்று) இப் போது, (நமக்கு) ஸ்பஷ்டம், தீ தும் என்கிறவிடத்தி லிருக்கிற அபி சப்தத்தை நன்று என்கிறத்திலும் கூட்டினல் நன்றும் தீதும் என்று ரூபம். நல்லதும் பொல்லாதும், (உரைப்பா ருளரொன்று) சொல்லு கிறபேர் ளுண்டென்று, (நாடுவோமே) நாம் வேதாந்தாசார்யபதம் பெற்றுலும் நமக்கு ஹிதாஹிதோப தெஷ்டாக்களான பெரியோர்க ளிப்போ தெங்கே யிருக்கிறார்களென்று தேடாநின்றோ மென்றபடி. நாடுவோ மென்றபடியாலே வஸ்துஸ்த்திதியி லில்லை, ஸ்வசிஷ்ய சிக்ஷார்த்த மிப்படி யநுஸந்தித்தபடியென்று தோன்றுகிறது. (௬௫)

இப்படி ப்ரபந்த கர்த்தாவான வாழ்வாருடைய ஸ்வபாவத்தை யும் அதுக்கு வ்யாக்யானம் பண்ணுகிற தம்முடைய ஸ்வபாவத்தையும் சொல்லி மேலே யிப்ரபந்தத்திலுள்ள பத்து பாசுரங்களுக்கும் விஸ் தாரமாக வர்த்த மருளிச்செய்து யிதிலுபதிஷ்டார்த்தங்களும் ரஹஸ் யார்த்தங்களு மிருக்கும்படியாயும் காண்பிவைத்து இப்படி ஸர்வார் த்த ஸங்க்ரஹமான விப்ரபந்த தாத்பர்யத்தை யறிந்தபேர்களுக் குண் டாகும் பலவிசேஷத்தை ஸ்வாநுஸந்தாந ரூபமான வொருபாட்டாலே யருளிச்செய்கிறார் முடிவிலே.

(பாவளருந்தமிழ்மறையில்) பா - பாசுரங்கள், வளருகை - அபிவி ருத்தியாகை, காநயோக்யங்களான பாசுரங்களாலே பூர்ணங்களாயிருக்

ஙசு-மூ.—பாவளரும் தமிழ்மறையிற் பயனேகொண்ட
பாண்பெருமாள் பாடியதோர் பாடல்பத்திற்
கோவலனுங் கணவனுமாய்க் கலந்துநின்ற
காரணனேக் கருத்துறநான் கண்டபின்பு
கோவலனுங் கோமானு மானவந்நாள்
குரவைபுணர் கோவியர்தங் குறிப்பேகொண்டு
சேவலுடன்பிரியாத பெடைபோற் சேர்ந்து
தீவினேயோர் தனிமையெல்லாந் தீர்ந்தோநாமே. (எரு)

(ப - ரை.) பா - பாட்டுக்கள், வளரும் - வளருகின்ற, தமிழ்மறையின் - த்ரமிடவேதத்தின், பயனே - ப்ரயோஜனத்தையே, கொண்ட - தமக்கு முக்கியமாகக்கொண்ட, பாண்பெருமாள் - திருப்பாணாழ்வார், பாடியது - பாடியதான, ஓர் - ஒப்பற்ற, பாடல் பத்தில் - பத்துப்பாட்டுக்களில், காவலனும் - ரக்ஷகனும், கணவனுமாய் - ஸ்வாமியுமாய், கலந்துநின்ற - சேர்ந்துநின்ற, காரணனே - ஸர்வகாரணபூதனை ஸ்ரீயப்பதியை, கருத்து - மனத்தில், உற - பொருந்த, நான் - நான், கண்ட பின்பு - பார்த்தபின், கோவலனும் - கோபாலனும், கோமானும் - ராஜாவுமாக, ஆன - ஆகிய, அந்நாள் - அந்தநாளிலே, குரவைபுணர் - ராஸபந்தம்செய்த, கோவியர்தம் - கோபிகைகளின், குறிப்பு - குறிப்பை, கொண்டு - க்ரஹித்து, சேவலுடன் - ஆணுடன், பிரியாத - நீங்காத, பெடைபோல் - பெண்போல், சேர்ந்து - கூடி, தீவினேயோர் - துஷ்கர்மவான்களது, தனிமையெல்லாம் - தனிமையையெல்லாம், நாம் - நாம், தீர்ந்தோம் - நீங்கினேம். (ஙசு)

வியாக்யானம்.

கிற த்ராவிட வேதங்களுக்குள்ளே, மறையென்றது - கீர்வாண மயமான வேதம்போலே நித்யமாய் அபௌருஷேயமா யிருக்குமென்கைக்காக, அதுகளி லிருக்குக்களென்றும் ப்ருஹத்ஸாமமென்றும் ரதந்தரஸாமமென்று மிருக்குமாப்போலே இங்கு பாசுராதிகள். அங்குகாடகாதி ஸம்ஜ்ஞைபோலே யிங்கு பெரியாழ்வார் திருமொழிபெருமாள் திருமொழி யித்யாதி ஸம்ஜ்ஞை, அது நித்யமென்கை ஸர்வஸம்மதம். இப்படி இதுக்கு ப்ரமாண முண்டோவென்ன “வேதாஶ்சவேதமாயாஶ்ச நித்யாத்ராவிடஸம்ஹிதா꞉ । கலௌகலௌப்ரணீயந்தே க்ருபயாஜ்ஞாநயோகிபி꞉ ॥ த்வாபராந்தேயதாவ்யாஸோவ்யாஸிஷ்யதிஸம்ஹிதா꞉ । தது நித்யாத்ராவிடாம்நாயா ஸங்க்ஷேப்ஸ்யந்தி” என்றும் “ஸம்க்ஷிப்தோயம் .... ஸம்ஹிதா꞉” என்றும் (வேதாச்ச வேதகாதாச்ச நித்யாத்ராவிட ஸம்ஹிதா꞉ (கலௌகலௌப்ரணீயந்தே க்ருபயாஜ்ஞாந யோகிபி꞉ - த்வாபராந்தெ யதா வ்யாஸோ வ்யாஸிஷ்

வியாக்யானம்.

யதிமஹாந் ச்ருதீ:-தஞ்சநித்யாத்ம பூர்காதா: சடகோப:ப்ரணேஷ்யதி) (ஸம்ஸ்க்ருத ச்ருதயோயத்வத் தத்வத் த்ராவிடஸம்ஹிதா:) என்றும் மார்க்கண்டேயாதி புராண வசநங்களாலும், அதை யனுசரித்ததான ,,யொ ராக்ஷீ ராவிடீம் ஹஸம் ஹிதாம்'' (யொத்ராக்ஷீத் த்ராவிடீம் ப்ரும்மஸம்ஹிதாம்) என்றும் ,,ஸம் ஹிதாம் ஷ்டவஞம், தாம்ரவணீ தடமதஸஜிஷ்டவஸீயஸாவா'' (ஸம்ஹிதாம் த்ருஷ்டவந்தம், தாம்ரபர்ணீ தடகதசடஜித்த்ருஷ்டஸர்பீயசாகா) என்றும் சொல்லுகிற பூர்வாசார்ய வாக்யங்களாலும் நித்யத்வாகாராதிகளாலே தத்துல்ய மென்கைக்குக் குறையில்லை. (பயனேகொண்ட பாண்பெருமாள் பாடியதோர் பாடல்பத்தில்) பலத்தையே முக்யமாகக் கொண்டவரான திருப்பாணாழ்வாருடைய திருப்பவளத்தாலே பாடினதாயு மிதர விலக்ஷணமாயிருக்கையாலே யத்விதீயமாயுமுள்ள பத்துப்பாட்டுகளிலே. பயனேகொண்டவென்றது "நண்ணுதார் முறுவலிப்ப நல்லுற்றார் கரைந்தேங்க" என்றும் "முற்றமூத்து கோல்துணையா முன்னடி நோக்கிவளைந்" தென்றும் "கூடிச்சுட்டியுற்றார்களிருந்து" என்றும்பாடியுலகவ்ருத்தாந்தத்தையும் காடுமேடுகளையும் வர்ணிக்கும் மற்ற ஆழ்வார்கள்போலன்றிக்கே பெரியபெருமாள் திருமேனியையும் அவருடைய கல்யாணகுணங்களையும் தவிர வேறொன்றை யிவ்வாழ்வா ரனுபவியாத வம்சத்தை. பாடியதோரொன்றது காநயோக்யமேதவிர மற்றப்ரபந்தங்கள் உத்பத்தி தசையிலே தாளத்தோடே பாடினதான விப்ரபந்தம்போலே யிராதென்கைக்காக. உத்தமான வாகாராதிகளே யிப்ரபந்தத்துக்கு வைலக்ஷண்யம். (காவலனுங்கணவனுமாய்க் கலந்துநின்ற காரணனை) ரக்ஷகனுமாய் ஸ்வாமியுமாயு மிப்படிகலந்துகொண்டுநின்ற ஸர்வகாரணபூதனை, (கருத்துறநான்கண்டபின்பு) இந்தவர்த்தங்க ளென்னுடைய மனஸ்ஸிலே படும்படி நான் நன்றாகக்கண்ட வநந்தரம், அமலனாதியென்கிறதில் நிர்த்துஷ்டமான காரணத்வத்தையும், பிரானடியார்க்கென்னை யாட்படுத்த வென்கிறதில் ஸர்வரக்ஷகத்வத்தையும், விண்ணவர்கோனென்றதில் ஸர்வஸ்வாமி த்வாதிகளையுமறிந்த பின்னென்றபடி. இதுக்குக் கொண்டுசேர்ந்து தீர்ந்தோமென்கிற பதங்களோடந்வயம். (கோவலனும் கோமானுமானவந்நாள்) க்ருஷ்ணவதாரம்பண்ணி ஸௌலப்யத்தாலே கோபாலனுமாய் ஸர்வகோக்களுக்கும் ஸ்வாமியுமானபோது, ஏகத்ர கோபாலத்வமும் ஏகத்ர கோஸ்வாமித்வமும் கண்டதுண்டுலகத்தில், தத்ஸமுச்சயார்த்த மிரண்டுபத மிங்கே. (குரவைபுணர்கோவியர்தம்) குரவைபுணராநின்ற கோபிமார்களுடைய வென்றர்த்தம். (குறிப்பேகொண்டு) குறிப்பாகச்செய்யு மத்தையே முக்யமாகக்கொண்டு, குறிப்பு - லக்ஷயம், அவர்க ளீச்வரனைத்தவிர வேறொருவஸ்துவைத் தங்களுக்கு லக்ஷயமாகவெண்ணுத வம்சத்தையே

வியாக்யானம்.

நமக்கு முக்யமென் றெண்ணிக்கொண்டு (சேவலுடன்பிரியாத பெடைபோல்சேர்ந்து) சேவல் - ஆண்பக்ஷி, பெடை - ஸ்திரீபக்ஷி, புருஷ பக்ஷியோடே சேர்ந்துகொண்டேயிருந்து ஒருகாலும் பிரியாத ஸ்திரீ பக்ஷிபோலே யெம்பெருமான் பக்கலிலேசேர்ந்து, அவனை பர்த்தாவைப்போலவும் நம்மை பர்த்தாவைவிட் டன்யத்ர பாராத பதிவ்ரதையான ஸ்த்ரீபோலவும் எண்ணிக்கொண்டென்றபடி. (தீவினையோர் தனிமையெல்லாம்) உக்ரமானபாபத்தை யுடையவர்களுடைய துர்தசையையெல்லாம், (தீர்ந்தோம்நாம்) இப்படி பகவத்விஷயத்திலே யவகாஹித்தநாமே தீரும்படி பண்ணினோம். இப்ரபந்த தாத்பர்யங்களான வீச்வரனுடைய ஸ்வபாவங்களை யறிந்தால் ஸகலபாபங்களும் தன்னடையே போமென்பது கருத்து. (௩௬)

இப்படி யிப்ரபந்தம் ஸர்வபாப நிவர்த்தக பஹுவர்த்த கர்ப்பிதமென் றிதற்குண்டான வைலக்ஷண்யத்தை யருளிச்செய்து இப்படிப்பட்ட ப்ரபந்தத்தினுடைய பதார்த்தங்களையும் நன்றாக வெளியிடுகிற தம்முடைய ப்ரபந்தமான விந்த ரஹஸ்யார்த்தங்களை யறிந்தபேர்கள் ஸகல வேதவேதாந்தார்த்தங்களையும் யுக்தாயுக்த விசாரங்களோடே யறிந்தவர்களாவார்களென்றெண்ணி யிந்த ரஹஸ்யம் பண்ணினோமென்று ப்ரசம்ஸிக்கிறாரொருபாட்டாலே.

(ஆதிமறையென வோங்குமரங்கத்துள்ளே) ஸகல சாஸ்த்ரங்களுக்குமாதியான வேதம்போலே யிருக்கிற ஸ்ரீரங்கஸம்ஜ்ஞிதமான திவ்யவிமானத்துக்குள்ளே, வேதம் ப்ரதிபாதகதயா உத்க்ருஷ்டமாயிருக்கிறாப்போலே பெரியபெருமாளுக் காதாரமாயிருக்கையாலே யோங்கியிருக்கிற ஸ்ரீரங்க திவ்யவிமானத்திலென்றபடி. அன்றிக்கே - ஆதிமறையென்று ஸகலவேதங்களுக்கும் மூலமான ப்ரணவத்தைச்சொல்லி, "விமாநம் ப்ரணவாகாரம் வேதச்ருங்கம்" என்றும் "ப்ரபத்யே ப்ரணவாகாரம் பாஷ்யம் ரங்கமிவாபரம்" என்றும் (விமாநம் ப்ரணவாகரம் வேதச்ருங்கம், ப்ரபத்யேப்ரணவாகாரம் பாஷ்யம்ரங்கமிவாபரம்) சொல்லுகிறபடியே யந்த ப்ரணவத்துக்கு ஸத்ருசமா யோங்கியிருக்கிற ஸ்ரீரங்கத்துக்குள்ளே யென்றுமாம். (அருளாருங்கடலைக்கண்டவன்) அருளாலேணமாய் கடல்போலே சாய்ந்தருளின பெரியபெருமாளைக்கண் டநுபவியாநின்ற, அருளாருமென்றதினாலே யிக்கடலுக்கு க்ருபையே ஜலமென்றபடி. (எம்பாணனென்றியது)நமக்கு ஸ்வாமியான திருப்பாணாழ்வாரனுபவ பரிவாகமாக வோதினதான, எம்பாணனென்றது பெரியபெருமாள் அவருக்கும் தமக்கும் முனிவாஹநனென்றும் வேதாந்ததேசிகனென்றும் திருநாமஞ்சாற்றின வுறவைப்பற்றி. (ஓரிருநான்கு மிரண்டுமான வொருபத்தும்) அதிவிலக்ஷணமான விரண்டு நான்கு ஸங்க்யை

௯எ-மூ.—ஆதிமறை யெனவோங்கு மரங்கத்துள்ளே
யருளாருங் கடலைக்கண்டவ னென்பாண
னோதியதோ ரிருநான்கு மிரண்டுமான
வொருபத்தும் பற்றாக வுணர்ந்துரைத்தோம்
நீதியறியாதநிலை யறிவார்க் கெல்லா
நிலையிதுவே யென்றுநிலை நாடிநின்றோம்
வேதியர்தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம்
விதையாகு மிதுவென்று விளம்பினோமே. (எசு)

(ப - ரை.) ஆதி - முதன்மையான, மறை - வேதம் [ப்ரணவம்,] என - என்னும்படி, ஓங்கும் - வ்ருத்திபெறுகின்ற, அரங்கத்துள்ளே- ஸ்ரீரங்கத்தில், அருளாரும்கடலை - க்ருபாபூர்ணஸமுத்ரத்தை, கண்டவன் - பார்த்தவராகிய, என் - எனது, பாணன் - திருப்பாணாழ்வார், ஓதியது - அருளிச்செய்த, ஓர் - ஒரு, இருநான்கும் - இரண்டுநாலும், இரண்டும் ஆன - இரண்டுமாகிய, ஒருபத்தும் - ஒருபத்துப்பாட்டையும், பற்றாக - ஆலம்பனமாக, உணர்ந்து - அறிந்து, உரைத்தோம் - சொன்னோம், நீதி - மதாந்தர நிரஸநயுக்தியை, அறியாத - தெரிந்துகொள்ளாத, நிலை - நிலையை, தத்வஸ்திதியை, அறிவார்க்கெல்லாம் - அறியுமவர்க்கெல்லாம், இதுவேநிலை - இதுவேஸ்திரம், என்று-என்று, நிலை - ப்ரபந்ததாத்பரியத்தை, நாடிநின்றோம் - விசாரித்து நின்றோம், வேதியர்தாம் - வைதிகர்கள், விரித்து - விஸ்தரித்து, உரைக்கும்- சொல்லுகின்ற, விளைவுக்கெல்லாம் - விளைவுகளுக்கெல்லாம், இது - இதுவே, வித்தாகும் - விதையாகும், என்று - என்று, விளம்பினோம் - சொன்னோம். (௯எ)

யாலு மிரண்டுஸங்க்யையாலுங்கூடிப் பத்துபாசுரமான ப்ரபந்தத்தை, பத்துமென்றதே யமைந்திருக்க விருநான்கு மிரண்டுமென்றது அடியிலே நாலுபாட்டு காரணத்வத்தையும் மேல் நாலுபாட்டு ரக்ஷகத்வத்தையும் மேலிரண்டுபாட்டு ஸ்வாமித்வத்தோடேகூடின போக்யத்வத்தையும் முக்யமாக ப்ரதிபாதிக்குமென்கிற வர்த்தம் தொற்றுகைக்காக, (பத்தாகவுணர்ந்துரைத்தோம்) பத்தர்த்தத்தை முக்யமாக ப்ரதிபாதிக்கிறதாகவறிந்து நன்றாக விந்தரஹஸ்யத்திலே சொன்னோம், பத்தும்பத்தாக வென்றதனாலே நூறர்த்த மிதிலிருக்கிறதென்று அறிந்து சொன்னோமென்றுமாம். பற்றாகவென்று பாடமானால் இந்த பத்து பாசுரமே நமக்கவலம்பமென்றறிந்து சொன்னோமென்று பொருள். இதுக்குமேல் க்ரியையோடே யந்வயம். (நீதியறியாத நிலையறிவார்க் கெல்லாம்) நிலையாவது - தத்வஸ்திதி, நீதியறியாதபடி தத்வஸ்திதி யறியாநிற்கு மவர்களுக்கெல்லாம், நீதியறியாதே நிலையறிகையாவது - மதாந்தரஸ்தர்களை நிராகரிக்கைக்கும் யுக்திகளோடே கேட்டவர்களுக்கு ஸம்சயவிபர்யயமறச் சொல்லுகைக்கும் யோக்யமானபடி யறியாதே

வியாக்யானம்.

க்ஷோதக்ஷமமன்றியிலே கேவலம் தத்வஸ்வரூபத்தைமாத்ர முபதே சத்தாலேயறிகை, (இதுவேநிலையென்று) இந்த ரஹஸ்யமே க்ஷோத க்ஷமமாகும்படியான நிலையென்று, (நிலைநாடிநின்றோம்.) இப்ரபந்த தாத்பர்யத்தினுடைய நிலையைநாடி விசாரியாநின்றோம், இந்த ரஹஸ் யத்தி லிதிசேஷ:. (இது) இப்படி நம்மாலே ஸர்வார்த்தங்களையுந் தே டிச் சொல்லப்பட்டதான விந்தரஹஸ்யம், ஸர்வார்த்த ஸங்க்ரஹமான விப்ரபந்தமென்றுமாம். (வேதியர்தாம் விரித்துரைக்கும்) வேதார்த்த மறிந்தவர்கள் வேதியர், அவர்கள் தாங்களேவிரித்து விஸ்தாரமாக வுபதேசரூபமாகச் சொல்லுமதான, (விளைவுக்கெல்லாம்) விளையு மது களுக்கெல்லாம், விளைவு-பலிக்கை, இங்கு விஸ்தாரமாக பரப்புகையிலே தாத்பர்யம். "தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மந:" (தஸ்யைதே கதிதாஹ்யர்த்தா: ப்ரகாசந்தே மஹாத்மந:) என்கிற படியே சாஸ்த்ரபரிச்ரமம்பண்ணின யுக்திமான்களுக்கு ஸ்வோபதேச மே க்ஷோதக்ஷம மாகும்படி விஸ்தாரமாக விளைகிறத்துக் கெல்லா மென்றர்த்தம், (விதையாகும்)காரணமாகும், விதை-காரணம். (என்று) இப்படியெண்ணி, சாஸ்த்ர பரிச்ரம மில்லாதவர்களுக்கு த்ரமிட சப் தமயமான விந்த ரஹஸ்யார்த்த மறியவே ஸகல தத்வார்த்தங்களும் யுக்தாயுக்த விசாரத்தோடே யறிந்தபடி யாகுமென் றிப்படி யெண்ணி யென்றபடி. (விளம்பினோமே) சொன்னோம், இந்த ப்ரபந்த தாத்பர் யார்த்தங்களை ப்ரகாசிப்பித்தோ மென்றபடி. இதனாலெ யிந்தரஹஸ் யம் முநிவாஹநபோக மென்று ஆழ்வா ரனுபவித்தபடி சொன்னவம லனாதிபிரானுக்கு வ்யாக்யாநமானாலு மிதிலீச்வரனுடைய காரணத்வ ரக்ஷகத்வ ஸர்வஸ்வாமித்வ, ஸர்வாதாரத்வாதிகளையும், ஜீவனுடைய நித்யத்வ ஸ்வதச்சேஷத்வ பாரதந்த்ரயாதிகளையும், மற்றும் ஜ்ஞாதவ் யங்களான வநேகார்த்தங்களையும் வெளியிடுகையாலே தெரிந்தவன் அர்த்தபஞ்சகாதி ஸர்வார்த்தங்களையும் அறிந்தவனென்று சொல்லிற் றுய்த்து. (௩௭)

இதி கௌசிக குலதிலகஸ்ய, ஸ்ரீநிவாஸதேசிக ஸூதஸ்ய, ஸ்ரீமத் கோபால மஹாதேசிக தௌஹித்ரஸ்ய, தச்சரண நகமணிஜ்யோத் ஸ்நாயமான மானஸஸ்ய, ஸ்ரீமத் வேதாந்த ராமாநுஜ ஸம்யமி ஸார்வ பௌம கடாக்ஷலப்த வேதாந்த த்வயஸ்ய, ஸ்ரீபாலதந்வி வேதாந்த மஹாதேசிகஸ்ய தநூஜேந, தச் சரணாரவிந்த ஸமர்பிதாத்ம பரோண தத்க்ருபா ப்ராப்த ஸகலவேத தத்அங்கவேதாந்த த்வய ரஹஸ்யஜாதேந, ஸ்ரீரங்கநாத தாஸேந, யதாச்ருதம் லிகிதா அம்ருதாஸ்வாதிநீ காதாஸம் க்ரஹஸ்ய வ்யாக்யா ஸம்பூர்ணா:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாயநம:.

ஸ்ரீ

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

அதிகாரஸங்க்ரஹம் வ்யாக்கியானம்.

ஸாராஸ்வாதினியிலிருந்து
எடுத்தெழுதியது.

ஸ்ரீ ஸாக்ஷாத்ஸ்வாமி யென்கிற ஸ்ரீவேதாந்த ராமானுஜ ஸ்வாமி
அருளிச் செய்தது.

தனியன்.

ஸ்ரீரங்கநாத குரு பாத ஸரோஜ ஹம்ஸம்
வேதாந்த தேசிக பதாம்புஜ ப்ருங்க ராஜம்।
ஸ்ரீமத் யதீந்த்ர சடகோப தயாவலம்பம்
வேதாந்த லக்ஷ்மண முநிம் சரணம் ப்ரபத்யே॥*॥

ஸ்ரீரங்கநாத குரு பாத ஸரோஜ ஹம்ஸம்
வேதாந்த தேசிக பதாம்புஜ ப்ருங்க ராஜம்!
ஸ்ரீமத் யதீந்த்ர சடகோப தயாவலம்பம்
வேதாந்த லக்ஷ்மண முனிம் சரணம் ப்ரபத்யே.

(ப்ராரீப்ஸித குருபரம்பரா ஸாராக்ய ப்ரபந்தஸ்ய நிஷ்ப்ரத்யூஹ பரிபூரண ப்ரசய கமனார்த்தம் குருப்ய இத்யாதினா (ப்ராரீப்ஸித குருபரம்பரா ஸாராக்ய ப்ரபந்தஸ்ய நிஷ்ப்ரத்யூஹ பரிபூரண ப்ரசய கமனார்த்தம் குருப்ய இத்யாதினா) ஒருமங்களம் செய்தருளி, "பராசரப்ரபந்தாதபி வேதாந்தரஹஸ்ய வைசத்யாதிசய ஹேதுபூதை: ஸத்ய: பரமாத்மநி சித்தரஞ்ஜகதமை: ஸர்வோபஜீவ்யை ருபப்ரும்ஹணை: (பராசரப்ரபந்தாதபி வேதாந்தரஹஸ்ய வைசத்யாதிசய ஹேதுபூதை: ஸத்ய: பரமாத்மநி சித்தரஞ்ஜகதமை: ஸர்வோபஜீவ்யை ருபப்ரும்ஹணை:) என்று ஸ்தோத்ர பாஷ்யத்தி லறுதியிட்டபடியே அத்யாத்ம ப்ரபந்தங்களில் த்ரமிட ப்ரபந்தங்கள்ஸாரதமங்களாகையாலே யவ்வுபகாராதிசயத்தையிட்டு த்ரமிடோபப்ரும்ஹணகர்த்ரு திவ்யஸூரிப்ருந்த ஸ்தவரூபமாக மங்களபூயஸ்த்வார்த்தம் பின்னையுமொரு மங்களாசரணம் செய்தருளுகிறார். பொய்கையிதி.

"பொய்கைமுனிபூதத்தார் பேயாழ்வார் தண்பொருநல்வருங் குருகேசன் விட்டுசித்தன், துய்யகுல சேகரனம் பாணநாதன் றொண்டரடிப் பொடிமழிசை வந்த சோதி, வய்யமெலா மறைவிளங்க வாள்வேலேந்து மங்கையர்கோ னென்றிவர்கண் மகிழ்ந்துபாடுஞ், செய்யதமிழ் மாலைகளுந் தெளியவோதித் தெளியாத மறைநிலங்க டெளிகின்றோமே". (க)

தண் - சீதளமான, பொருநல் - தாம்ரபர்ணியிலே, தந்தீரத்திலே யென்றபடி. வரும் - வந்தவரான, அவதரித்தவரான வென்றபடி. சீதளதாம்ரபர்ண் யவதீர்ணத்

வோக்ந்யா ஆழ்வாருடைய வார்த்ரசித்தத்வம் வ்யஞ்ஜிதமாகிறது. இங்கு தாம்ர பர்ணியையிட்டு ஆழ்வாரை விசேஷித்தது ‘‘கலௌகலுபவிஷ்யந்தி நாராயணபராயணா:, தாம்ரபர்ணீ நதீயத்ர’’ “கலௌகலுபவிஷ்யந்தி நாராயண பராயணா:, தாம்ரபர்ணீ நதீயத்ர” என்று ஸ்ரீபாகவதத்திலே மஹர்ஷி நம்மாழ்வாரைக்கொண்டாடின வசனத்தை ஸ்மரிப்பிக்கைக்காக. இங்கு ஸ்ரீவிஷ்ணுசித்தரைச் சொன்னது அவர் திருமகளாரான வாண்டாளுக்கு முபலக்ஷணம். இவளை இங்கு தனித்தருளிச் செய்யா தொழிந்தது மற்றவாழ்வார்களைப்போலே யன்றிக்கே “விட்டுசித்தர்தங்கள் தேவரை” இத்யாதியில் படியே இவ ளிவருக்கு பரதந்த்ரையா யிருக்கிறவேற்றம் தோற்றுகைக்காக. துய்யகுலசேகரன்—பரிசுத்தரான குலசேகராழ்வார், இங்குபரி சுத்தியாவது ஸ்ரீவைஷ்ணவர் ஹாரத்தையபஹரித்தார்களென் றத்யந்தா ந்தரங்கரான மந்த்ரிகள் சொல்லச்செய்தேயும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்காகத் தாம் ஸர்ப்பகடத்திலே கையிடும்படி ஸ்ரீவைஷ்ணவர்பக்கல் தோஷதர்சன மற்றிருக்கை. நம்பாணநாதன்- திருப்பாணாழ்வாராகிற நம்முடையநாதன், முனிவாஹநனென்று திருநாம மாம்படி யாகவும் ஸ்ரீவேதாசார்யனென்று திருநாமம்சாற்றி யருளியும் தங்களிருவரிடத்திலும் பெரியபெருமாள் வ்யாமோஹம் செய்தருளின இஸ்ஸம்பந்தத்தையிட்டு விசேஷித்து நம்முடைய நாதனென்று அநுஸந்திக்கிறார். மழிசைவந்தசோதி - திருமழிசையென் கிற திவ்யஸ்தலத்திலே யவதரித்தருளின ஜ்யோதிஸ்ஸு, திருமழிசை யாழ்வாரென்ற படி. பெரும்புலியூரில் யாகஸதஸ்ஸிலே யிவர்பர ஞ்ஜ்யோதிஸ்ஸாக பரதேவதையாய் தோற்றின மஹாப்ரபாவத்தை நினைத்து இவரை ஜ்யோதிஸ்ஸென்கிறார். வையமெல் லாம் - லோகங்களெல்லாவற்றிலும், மறை - வேதமானது, விளங்க-ப்ரகாசிக்கும்படி, வாள்-கட்கத்தையும், வேல்-குந்தமென்கிறவாயுத விசேஷத்தையும்,ஏந்தும்-தரிக்குமவ ரான, இவர் வாளும் வேலு மேந்தினது - லோகமெல்லாம் வேதம் ப்ரகாசிக்கும்படி யாய்த்துஎன்று திருவுள்ளம். அதாவது - இவர் வாளும் வேலு மேந்திக்கொண்டு ஸர் வேச்வரனை மறித்து ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணத் தொடங்க, இவ்வவஸரத்திலே ஒரு வ்யாஜத்தைக்கொண்டு ஸர்வேச்வர னிவருக்கு திருமந்த்ரத்தை யுபதேசிக்க, அத் தாலே யிவர் ப்ரபுத்தராய் ஸர்வலோகத்திலும் ஸகல வேதார்த்தங்களும் ஸம்யக் ப்ரகாசிதங்களாம்படி யதிப்ரேம பரவசராய்ப் பாடியருளுகையாலே இவையெல்லாவ ற்றிற்கும் இவர் வாளும்வேலு மேந்தினது நிதானமாய்த் தென்றபடி. லோகத்திலும் ரிஷிகளுமுட்பட தந்தமளவுக்கு வேதம்ப்ரகாசிக்கைக்காக வாரோனு மொரு வாசார் யன்பக்கலிலே ஸமித்பாணிகளாய் வந்துகிட்டி ஸர்வஸ்வதானம்பண்ணி யுபாஸியா நிற்பர்கள். இவர் லோகமெல்லாம் வேதம் ப்ரகாசிக்கும்படி ஸாக்ஷாத் ஸர்வேச்வரன் பக்கலிலே கட்கருந்தபாணியாய் ஸர்வார்த்தக்ரஹணம் பண்ணி நிர்பந்தித்தா ரொருவ ரென் றாச்சர்யகர்ப்பமா யிருக்கிறது. மங்கையென் றிவருடைய திவ்யநகரிக்குத் திரு நாமம். மங்கையிலே யிருக்குமவர் மங்கையர், கோன் - ஸ்வாமி, அவர்களுக்கு ஜ்ஞா நபக்தி கைங்கர்யாதி ஸர்வஸம்பன் நிர்வாஹகரான வாழ்வாரென்றபடி. இப்படி தத் தன்நாமபி: விசிஷ்யானு ஸந்தித்து ஆதராதிசயத்தாலே இவர்களுடைய ஸமுதாயத் தை அநுவதிக்கிறார் (என்றிவர்களென்று) இப்படி “அன்னிக்குமமுதூறு” மென்னும் படியான திருநாமங்களை யுடையராய் ப்ரயோஜநாந்தர ஸஹிஷ்ணுக்களான ரிஷிகளைப் போ லன்றிக்கே பகவத் ப்ரேம ப்ரவாஹங்கள்தாம் வடிவுகொண்டாப்போலே யிருக் கிற இவர்க ளென்றிவ்வநுவாதத்துக்குக் கருத்து. மகிழ்ந்துபாடும், ஆநந்தபரிதராய்ப் பாடுமவையான, பகவதநுபவாநந்த நிர்பரராய் ஆநந்தபரிவாஹமாக விவர்கள் பாடு மவையான என்றபடி. செய்ய-ருஜுக்களான, ஸரளதரங்களான வென்றபடி. தமிழ் மாலைகள்-புஷ்பமாலைகள்போலே ஸர்வேச்வரனுக்கு போக்யதமத்வேந சிரஸா ச்லாக

நீயங்களான த்ரமிடஸூக்திகளை, நாம்-அத்யந்தமிதம்பசரானநாம், யத்வா "𑌦𑍍𑌰𑌮𑌿𑌡𑍇𑌷𑍁 𑌚 𑌭𑍂𑌰𑌿𑌶𑌃" (த்ரமிடேஷுசபூரிச:) என்று மஹர்ஷிகள் கொண்டாடும்படி இந்த வகஸ்த்யபாஷையுள்ள ஸ்ரீவைஷ்ணவகுலங்களிலே ஜநிக்கும்படியான பாக்யத்தை யுடையநாம், தெளியவோதி - அர்த்தஜ்ஞாந பர்யந்தமாக வப்யஸித்து, இதற்கு தெளிகின்றோ மென்கிறத்தோடே யந்வயம். தெளியாத - ந்யாயங்களாலும் ரிஷிவசநங்களாலும் ஸம்சய விபர்யய ரஹிதார்த்தநிச்சயம் பிறவாதவையான, மறைநிலங்கள்- வேதப்ரதேசங்களை, உபநிஷத்துக்களையென்றபடி. தெளிகின்றோம் - களங்கரஹிதமாக வறியப்பெற்றோம், அதின் தாத்பர்யங்களை விசதமாக வறியப்பெற்றோ மென்றபடி. (க)

முமுக்ஷுக்க ளெல்லாருக்கும் ஆசார்யவத்வம் நியமேந வேண்டுமாகலிறே குருபந்திபஜநம் வேண்டுமென்று நிர்பந்தமுண்டாவது, பக்திப்ரபத்யாதிகளாலே மோக்ஷம் பெறலாமிறே, பகவானையும் தத்பஜநாதிகளையும் அறிகைக்கு உபதேஷ்டாக்கள் வேண்டாவோ வென்னில்? சாஸ்த்ராந்தரங்களில் பண்டிதனு யிருப்பானுக்கு ச்ருதி ஸ்ம்ருத்யாதிகளாலே உபதேஷ்ட்ரு நிரபேக்ஷமாக உபயுக்த்தங் களெல்லா மறிந்து கொள்ளலாமிறே, "𑌏𑌕𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌵𑍇𑌦𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂" (ஏகம்யதி பவேச்சாஸ்த்ரம்) என்கிற ச்லோகத்தின்படியே ஜ்ஞாத்ருத்வம்ஸுதுர்லபமென்னிலும் "𑌪𑍁𑌣𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌂 𑌵𑌰𑍍𑌧𑌯𑌤𑌿" "𑌭𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑍍𑌵𑌨𑌨𑍍𑌯𑌯𑌾 𑌶𑌕𑍍𑌯𑌃" "𑌜𑍍𑌞𑌾𑌤𑍁𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇𑌨" (புண்யம் ப்ரஜ்ஞாம்வர்தயதி, பக்த்யாத்வநந்யயாசக்ய:, ஜ்ஞாதும்த்ரஷ்டுஞ்சதத்வேந,) இத்யாதிகளில்படியே பகவத்பக்த்யாதிகளாகிற ப்ரபல ஸஹகாரியைக்கொண்டு சாஸ்த்ரமுகேந ஸர்வார்த்தங்களையும் தெளியக்குறையில்லையிறே, ஆகையால் ஸர்வமுமுக்ஷுக்களுக்கும் ஆசார்யவத்வம் வேணுமென்று நிர்பந்தமுண்டோ வென்கிறசங்கையில் "𑌧𑌰𑍍𑌮𑌜𑍍𑌞𑌸𑌮𑌯𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂" (தர்மஜ்ஞஸமய:ப்ரமாணம்) என்கிறபடியே முந்தரஸ்ரீமதுரகவிகளுடைய வநுஷ்டானத்தை ப்ரமாணமாகக் காட்டாநின்றுகொண்டு உத்தரம் அருளிச்செய்கிறார். இன்பத்தில்இதி.

"இன்பத்தி லிறைஞ்சுதலி லிசையும்பேற்றி லிகழாத பல்லுறவில்ராகமாற்றில், தன்பற்றில் வினைவிலக்கிற் றகவோக்கத்திற் றத்துவத்தை யுணர்த்துதலிற் றன்மையாக்கில், அன்பர்க்கே யவதரிக்கு மாயனிற்க வருமறைக டமிழ்செய்தான் றாளே கொண்டு, துன்பற்ற மதுரகவி தோன்றக்காட்டுந் தொல்வழியே நல்வழிக ளணிவார்கட்கே. (உ)

அறுதியிட்டார்க ளென்னு மளவாலே இங்குப்ரதிபாதிக்கப்புகுகிற குருபஜநரூபதர்மத்துக்கு கண்ணிநுண்சிறுத்தாம்பை யிட்டு ப்ரதமப்ரவர்த்தக ராகையாலே இதற்கு விசேஷித் தாசார்யரான மதுரகவிகளுடைய குணசிந்தநஸ்தவந ரூபமான மங்களமு மிப்பாட்டிலே அர்த்தாத் க்ருதமாகிறது. இதுவும் ச்ருத்யாதிகளுக்குமுன்னே யிவருடைய வநுஷ்டாநாதிகளை வர்ணிக்கைக்கு நிபந்தநம். ஆசார்யஸமாச்ரயணம் உபாதேயமாகிறது தத்வஜ்ஞாநாதி ஹேதுத்வமாத்ரத்தா லன்றிக்கே ப்ராப்யத்வம் ப்ராபகத்வம் முதலானபத்துப்படியாலு முபாதேய மென்கிற திருவுள்ளத்தாலே இங்கு பத்துப்பதங்களாலே கண்ணிநுண்சிறுத்தாம்பு பாட்டுகளின் அர்த்தங்களை யடைவே ஸங்க்ரஹிக்கிறார். இன்பத்தில் - ஆநந்தத்தில், ஆநந்தரூபமானவநுபவத்திலென்றபடி, அன்னிக்குமமுதூறு மென்று சொன்ன வர்த்தத்தை இரண்டாம்பாட்டிலே இன்பமெய்திலேனென்ன றநுவதித்தாரிறே. இறைஞ்சுதலில் - ஆச்ரயணத்தில், சரணத்தேவந ஆச்ரயணத்திலென்றபடி. மேவினேனவன்பொன்னடி மேன்மையை என்றதை ஸங்க்ரஹித்தபடி. இசையும்பேற்றில் - அப்யுபகமம்பண்ணும் புரு

ஷார்த்தத்தில், இசைகை - அப்யுபகமம்பண்ணுகை, பேறு - புருஷார்த்தம், திரிதந் தாகிலு மென்கிறபாட்டுக்கு பகவத்விஷயத்தை யாழ்வாருகந்த விஷயமென் றவ் வழியாலே யப்யுபகமம்பண்ணுகிறே னத்தனைபோக்கி எனக் கிது ஸ்வதோப்யுபகம னீய மன்றென்று தாத்பர்ய மாகையாலே ஆழ்வாரோ தமக்கு நிருபாதிகமாக வப்யுப கமநீய புருஷார்த்த மென்று வ்யஞ்ஜிதமாகிற வர்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. இக ழாத - ஒருகாலத்திலும் ப்ரச்யுதமாகாத, பல்லுறவில் - பஹுவிதபாந்தவத்தில், அன்னையாயத்தனாய் இத்யாதியை ஸங்க்ரஹித்தபடி. இராகம்மாற்றில் - அநுசித விஷய ராக நிவர்த்தநத்தில், அடியேன் சதிர்த்தேனென்கிறதின் தாத்பர்யத்தை ஸங்க்ரஹித்தபடி. தன்பற்றில் - தானே தன்பற்றை யுண்டாக்குகையில், தன்புக ழேத்தவருளினான் என்கிறதை ஸங்க்ரஹித்தபடி. வினைவிலக்கில் - பாபநிவாரணத் தில், வல்வினைமாற்றியருளினா னென்கிறதைச் சொன்னபடி. தகவோக்கத்தில் - க்ருபையினுடைய வுத்கர்ஷத்தில், தகவு, க்ருபை, ஒக்கம் - உத்கர்ஷம், அருள்கண்டீ ரிவ்வுலகினில் மிக்கதென்றதைச் சொன்னபடி. தத்துவத்தை யுணர்த்துதலில்-தத்வ போதனத்தில், வேதத்தி னுட்பொரு ளித்யாதியின் தாத்பர்யத்தை நிஷ்கர்ஷித்த படி. தன்மை - ஸ்வபாவத்தை, அதாவது ஆழ்வார்தம்முடைய ஸ்வபாவத்தையென் னுதல், ஜீவனுடைய ஸ்வாபாவிகாகாரத்தை என்னுதல், இவைஇரண்டும் பகவத்பாக வதாசார்ய கைங்கர்யங்களென்கிறது, ஆக்கில் - உண்டாக்குகையில், செயனன்றுக வித்யாதியை யருளிச்செய்தபடி. இவைபத்தும் விஷயஸப்தமிகள். இவை பத்துக்கு மருமறைகள் தமிழ்செய்தான்தாளேகொண்டு என்கிறத்தோடந்வயம், அன்பர்க்கே - பக்திமான்களுக்காகவே, லீலாதியான ஸ்வப்ரயோஜநம் ப்ரதாந மன்றிக்கே ஆஸ்ரீதர்க் கிப்பத்துபாட்டில் சொன்னபத்துப்ரகாரமான வுபகாரத்தையும் தான்பண்ணுகைக் காக வென்றபடி. அவதரிக்கும் - அவதரித்தருளுமவனான, ஆயன்நிற்க, கோபாலன் நிற்கச்செய்தேயும், அவனையநாதரித்து என்றபடி. அரு - ஸூக்ஷமங்களான, துர்போ தங்களான வென்றபடி. மறைகள் - வேதங்களை, தமிழ்செய்தான் - த்ரமிடரூபங்க ளாகச் செய்தருளின வாழ்வாருடைய, தாளே - திருவடிகளையே, அவதாரணத்தாலே க்ருஷ்ணனைவ்யவச்சேதிக்கிறது, கொண்டு - அவலம்பித்து, இதனால் என்னப்பனில் நண்ணிஎன்கிறதின் அபிப்பிராயத்தை ப்ரகாசித்தபடி. இதற்கு தோன்றக்காட்டு மென்கிறத்தோடந்வயம். துன்பற்ற - தோஷரஹிதரான, துன்பு - தோஷம், ப்ரம விப்ரலம்பாதிதோஷரஹிதரயா ஆப்ததமரான என்றபடி. பகவத்விஷயத்தையும் கழி ந்து புருஷார்த்தகாஷ்டையிலும் ஸாரமான ஆசார்யனையே கவிபாடுகையாலே மதுர கவிகளென்று திருநாமம் பெற்றவர். தோன்றக்காட்டும் - தோன்றும்படிகாட்டுகிற, ஸர்வஸுலபனுன க்ருஷ்ணனிருக்கச்செய்தே நா மாழ்வார்திருவடிகளையே யவலம் பித்தபடி தம்முடையவனுஷ்டானத்தாலும் உக்தியாலும் நிஸர்கஸுஹ்ருத்தாய் ஸர்வபலப்ரதனுன ஸர்வேச்வரனிருந்தாலும் ஸதா சார்யஸமாச்ரயண மில்லாதாருக் குமோக்ஷம் கிடையாதென்று ஏகந்துக்கெல்லாம் ஸ்பஷ்டமாகத்தோற்றும்படி காட்டு கிறுனென்று கட்டதாத்பர்யம். தொல்வழியே-அநாதியானமார்க்கமே, மதுரகவிமாத்ர மன்றிக்கே ப்ராசேதஸ பராசர மைத்ரேயா ச்வலாயனாதி ப்ராசீன மஹாஜனங்க ளெல்லாரும் நடந்த வாசார்ய ஸமாச்ரயண ரூப கண்டாபதமே யென்றபடி. அவ தாரணம் கேவலபகவத்பஜந புஸ்தகநிரீக்ஷணாதிகளை வ்யவச்சேதிக்கிறது. துணி வார்கட்கு - தைர்யவான்களுக்கு, விஷயங்களை ஜயிக்கும்படி தைர்யமுடைய முமுக்ஷுக்களுக்கென்றபடி. நல்வழிகள் - மோக்ஷமார்க்கங்கள், மோக்ஷஸாதநமான பக்திப்ரபத்திகளென்கை. பக்திப்ரபத்திகளுக் காசார்யபஜந மன்றிக்கே மார்க்காந் தரத்தாலே ஸம்யக்ஸ்வருபநிஷ்பத்தியுமில்லை கார்யகரத்வமுமில்லை யென்று கருத் தாலேயதனோ டிவற்றிற் கபேதோபசாரம் பண்ணினபடி. (உ)

இப்படி "வாவிஷ்ஃக்ஷதுஜவஸாஸு" என்று துடங்கி ப்ராயச்சித்தமுமாமெ ன்னுமளவும் ப்ரமாணங்களாலே முமுக்ஷுவுக்கு ஸர்வாவஸ்தைகளிலும் குருபங்திம ஜநம்கர்த்தவ்ய மென்று ஸாதித்தருளி இனி யித்தை யநுஷ்டிக்கும்படி எங்ஙனே என்கிற வாகாங்க்ஷையில் ஸர்வருக்கு மநுஷ்டான ஸௌகர்யார்த்த மிதுக்கு ப்ர யோகரூபமாக வொருபாட்டு அருளிச்செய்கிறார். என்னுயிர்இதி.

எகூ-மூ.—என்னுயிர்தந் தளித்தவரைச் சரணம்புக்கி
யானடைவே யவர்குருக்க ணிரைவணங்கிப்
பின்னருளாற் பெரும்பூதூர் வந்தவள்ளல்
பெரியநம்பி யாளவந்தார் மணக்காலநம்பி
நன்னெறியை யவர்க்குரைத்த வுய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகளென் றிவரைமுன்னிட்
டெம்பெருமான் றிருவடிக ளடைகின்றேனே. (கூ)

யான்-ஆசார்ய கடாக்ஷத்தாலே லப்தஸத்தாகனான நான், என்னுயிர்-என்னாத்மா வை, தந்து - பரசேஷத்வஜ்ஞாந மில்லாமையாலே நஷ்டமாய்ப் போயிருந்தத்தை அந்த பரசேஷத்வோப தேசத்தாலே ஸத்தாக்கி சேஷியுடைய வதிசயாதாநத்தில் விநியோகிக்கலாம்படி யெனக்குக் காட்டித்தந்து, அளித்தவரை - ரக்ஷித்தவரை, இப்படி காட்டித்தருகையே ஸம்யக் ரக்ஷண மென்று கருத்து. ஸ்வாவ்ய வஹிதா சார்யரை யென்றபடி. சரணம்புக்கு - சரணத்வே நாச்ரயித்து, அவர் குருக்கள்- அந்த ஸ்வாசார்யருடைய குருக்களுடைய, எம்பெருமானார்க் கிப்பால்பட்ட பரம குருக்களுடைய என்றபடி. நிரை - பங்தியை, அடைவே - "சூவாயஃராணா ஃஸாவஸா" (ஆசார்யாணு மஸா வஸௌ) என்கிற ஶ்ருதியில் சொன்ன க்ரமத் தாலே என்றபடி. வணங்கி - நமஸ்கரித்து, சரணம்புக்கு என்றபடி. பின் - அவர் களுக்குப்பின்பு, இதுக்கு இவர்களை முன்னிட்டு என்கிறத்தோடே அந்வயம். அரு ளால் - ப்ரகடராயும் ப்ரச்சன்னராயு முள்ள பாஷண்டிகளால் ப்ரதாரிதமான ஜகத் தின்பக்கல் க்ருபையாலே, பெரும்பூதூர் - ஸ்ரீபெரும்பூதூரிலே, வந்த - அவதரித்தவ ரான, வள்ளல் - உதாரர், லக்ஷ்மீ நிவாஸமான ஹிரண்யநிதியை பாஹ்ய குத்ருஷ்டி தஸ்கர ரபஹரியாதபடி பண்ணி நமக்குத் தந்தருளின மஹாவதாந்யரான ஸ்ரீபா ஷ்யகாரரென்றபடி. என்னுயிர் தந் தளித்தவரை என்றும் வள்ள லென்று மிம்ம ஹோப காரசத்வா நுஸந்தாநத்தாலே ப்ரோமாதிசயம் தோற்றுகையால் குருபங்க் த்யநுஸந்தாநஸ்ய பக்திரூபத்வம் வ்யஞ்ஜிதமாய்த்து. நன்னெறியை - நல்லமார்க்கத் தை, நெறி - மார்க்கம். பக்தியோகாதப்யதிசயித வைபவமான ப்ரபத்தியை யென்ற படி. அவர்க்கு - அந்த மணக்கால்நம்பிக்கு, உரைத்த - உபதேசித்தவரான, இன்ன முத - போக்யா ம்ருதபூதையான, இன் - போக்யம். அத்யந்தம் போக்யையான வென்றபடி. நிருபாதிக போக்யனான பரமபுருஷனுக்கும்கூட போக்யை யாகையா லே திருமக ளத்யந்த போக்யபூதை யென்றுகருத்து. என்றிவரை - இப்படி மனோ ஹரங்களான திருநாமங்களையும் கல்யாண குணங்களையு முடையவரான விவர்களை யென்றபடி. முன்னிட்டு - முந்தர விவர் திருவடிகளை பஜித்து, பின்பு பகவான் திரு வடிகளை பஜிக்கிறே னென்றபடி. (கூ)

இப்படி "ஸாதேஹ்யூ, ஹூஜூஹூகுநு" என்கிற ச்லோகங்களாலே ப்ரகாசன பர்யந்த குருபங்தி பஜந ப்ரகாரத்தை யருளிச்செய்து காட்டி இவ்வாசார்யர்களி

லெம்பெருமானாரு மாளவந்தாரும் நாதமுநிகளு முபகாரகத்வாதிசயத்தாலே தனித் தனியே விசேஷித் தநுஸந்தேயரென்னும் திருவுள்ளத்தாலே தத்விஷயமாக மூன்று பாட்டருளிச்செய்கிறார். ஆரணநூலிதி.

அ௦-மூ.—ஆரணநூல் வழிச்செவ்வை யழித்திடு மைதுகர்க்கோர்
வாரணமா யவர்வாதக் கதலிகண் மாய்த்தபிரான்
ஏரணிகீர்த் திபிராமா னுசமுனி யின்னுரைசேர்
சீரணிசிந் தையிநோஞ் சிந்தியோமினித் தீவினையே. (ச)

ஆரணநூல் - வேதாந்த சாஸ்த்ரத்தினுடைய, வேதாந்த மீமாம்ஸையான சாரீரக ஸூத்ரத்தினுடைய என்றபடி. வழி - மார்க்கத்தினுடைய, ந்யாய ப்ரதிபாதந ப்ரகாரத்தினுடைய என்றபடி. செவ்வை - ருஜுத்வத்தை, ஸூத்ராக்ஷர ஸ்வாரஸ்யாநுகுணமாக ப்ரவர்த்திக்கையை யென்றபடி. அழித்திடும் - கெடுக்கிறவர்களான, ஸ்வஸ்வகல்பிதார்த்தஸாதநா நுகுண்யேந ஸூத்ரங்களை யதாயதம் நயிப்பிக்கிறவர்களாகையாலே தத்ஸ்வாரஸ்யாநுகுண ப்ரவ்ருத்தி நாசகரான என்றபடி. "பஹுஶ்ருதிவ்யாவாத ஹேதுயுக்திகாழ்" பஹுமதிவ்யாகாததுரஸ்திதாம் என்றதிறே. ஐதுகர்க்கு - ஹைதுகருக்கு, ஓர் வாரணமாய் - அத்விதீய கந்தஸிந்துரமாய், இத்தாலே அமோகாரம்பத்வமும் அநாத்ருஷ்யத்வமும் விவக்ஷிதம். அவர் வாதக் கதலிகள் - அவர்களுடைய வாதங்களாகிற கதளிகள், இத்தால் ததீயவாதங்களுடைய நிஸ்ஸாரத்வமும் அநாயாஸ பஞ்சநீயத்வமும் விவக்ஷிதம். மாய்த்த - நசிப்பித்தவரான, பிரான் - ததஏவ உபகாரகரான, ஏரணி - ஏர்ந்த வணியான, அணி - அலங்காரம். லோகங்களுக் கெல்லாம் அநுரூபாலங்காரமான என்றபடி. கீர்த்தி - கீர்த்தியை யுடையவரான, இராமாநுசமுநி - ஸ்ரீபாஷ்யகாரருடைய, இன் - போக்யங்களான, உரை - ஸூக்திகள், சேர் - சேர்ந்திருக்கிற, ததேகவிஷயினியான என்றபடி. இது சிந்தைக்கு விசேஷணம். சீரணி - அதஏவ சீர்களாலே அலங்க்ருதையான, சமாதி குணங்களாலே அலங்க்ருதையான என்றபடி. சிந்தையிநோம் - சிந்தையையுடைய நாம், இனி - யதிபரிட்ரூட க்ரந்தைக ரஸிக மநோவ்ருத்திகரான பின்பு, தீவினை - க்ரூரகர்மங்களை, பகவதநபிமத கர்மங்களை யென்றபடி. சிந்தியோம்- மனஸ்ஸாலும் நினையோம். ஸ்ரீபாஷ்யகாரர் திவ்ய ஸூக்திகளைச்சேர்ந்து கைங்கர்ய விருத்த கர்மாபிஸந்தி யொழியப் பெற்றோ மென்று தத்யதாநுஸந்தாந முகேந அவருடைய பரமோபகாரகத்வத்தை யநுஸந்திக்கிறபடி. (ச)

அரு-மூ.—நீளவந் தின்று விதிவகையால் நினை வொன்றியநாம்
மீளவந் தின்னும் வினையுடம் பொன்றி விழுந் துழலாது
ஆளவந்தா ரெனவென் றருடந்தும் விளங்கியசீர்
ஆளவந்தா ரடியோம் படியோ மினி யல்வழக்கே. (ரு)

நீள - தீர்க்கமாக, வந்து - ஸம்ஸரித்து, இங்கு வருகை என்று ஸம்ஸரிக்கை விவக்ஷிதம். அநாதி தீர்க்க காலமாக ஸம்ஸாரத்திலே ஓடித் திரிந்து என்றபடி. இன்று - இந்தஜந்மத்திலே, விதிவகையால் - விதிபேதத்தாலே, வகை - வகுப்பு, பேதமென்றபடி. பாக்யவிசேஷத்தாலென்கை. நினைவு - தேஹாதிரிக் தாத்மஜ்ஞாந தந்மூல பாரலௌகிக விசாராதிகளை, ஒன்றிய - அடைந்தவர்களான, நாம் - இப்படி ஸ்தாவர திர்யகாதி தசைகள் கழியப் பெற்ற நாம், மீளவந்து - ஸ்வதந்த்ரத்வ தேவதாந்தர சேஷத்வாதி ப்ரமங்களாலுண்டாம் பகவத் பாகவத வைமுக்யாதி தோஷங்களாலே திரும்பியும் ஸம்ஸாரத்திலே போய்ப் புக்கு, இன்னும் - அனந்தமான

உத்தரகாலத்திலும், வினையுடம்பு - துஷ்கர்ம ஜன்யமாய் துஷ்கர்ம ஜனகமுமான தேஹத்தோடே, ஒன்றி - ஏகீபவித்து, தேஹாத்மப்ரம யுக்தனு யென்றபடி. விழுந்து - அதடியாக வதோகதிகளையடைந்து, உழலாது - யாதனைப்படாதபடி, ஆளவந்தார் - ரக்ஷிக்கவந்தார், என - என்னும்படி, மஹாபுருஷ நிர்ணயாதிகளாலே பகவதநர்யார்ஹ சேஷத்வ ஜ்ஞாநாதிகளை யுண்டாக்கி நம்மை ரக்ஷிக்க வவதரித்தாரென்று எல்லாரும் கொண்டாடும்படி யென்று கட்டார்த்தம். வென்று - ப்ரதிவாதிகளை ஜயித்து, அருள்தந்து - லோகத்தாருக்கு க்ருபைபண்ணி, திவ்யப்ரபந்த நிர்மாணுதிகளைப் பண்ணியென்றபடி. விளங்கியசீர் - வித்யோதமான கல்யாணகுணங்களை யுடையவரான, ஆளவந்தார் - அன்வர்த்தநாம தேயரான ஸ்ரீயாமுநாசார்யருக்கு, அடியோம் - அடிமையாகப் பெற்ற நாம், இனி - அவருடைய கடாக்ஷ விஷயரான பின்பு, அல்வழக்கு - அபந்யாயங்களை, அசேஷத்வா ந்யசேஷத்வாதி பரங்களான வஸச் சாஸ்த்ரங்களை என்றபடி. படியோம் - படியோம். ஆளவந்தாருடைய திவ்ய ஸூக்தி லாபத்தாலே யவர்க்கே யடிமையாய் குமதிமத பாதாள குஹரங்களைக் கால் கடைக்கொள்ளப் பெற்றோமென்று க்ருதார்த்ததா நுஸந்தாந முகத்தாலே யவருடைய மஹோபகார கத்வத்தை யனுஸந்திக்கிறபடி. (ரு)

அஉ-மூ.—காளம் வலம்புரி யன்ன நற்காத லடியவர்க்குத்
தாளம் வழங்கித் தமிழ்மறை யின்னிசை தந்தவள்ளல்
மூளுந் தவநெறி மூட்டிய நாத முனிகழலே
நாளுந் தொழுதெழுவோ நமக்கார் நிகர் நானிலத்தே. (சு)

காளம் - காஹளம், வலம்புரி - தக்ஷிணுவர்த்தசங்கம், அன்ன - இவைத்துக்கு ஸத்ருசரான, வாதாஹவேஷு அதிகம்பீர த்வநி விஜ்ரும்பணத்தாலே ப்ரதிவாதிகளுக்கு பயங்கரராய் ஸ்வாமிக் கதிசயாவஹாராய்க் கொண் டஸாதாரண சேஷபூதரா யிருக்கிற விவ் வாகாரத்தாலே சங்க காஹள ஸத்ருசரான என்றபடி. நற்காதல் - நல்ல ப்ரேமத்தை யுடையவரான "யஸ்ய தேவே பரா பக்தி:" யதாதேவே ததாகுரௌ" என்கிறபடியே அநவதிக குருபக்தி சாலிகளான என்றபடி. அடியவர்க்கு - தாஸர்களுக்கு, "கீழையகத்தாழ்வான் மேலையகத் தாழ்வான்" என்கிற மருமக்களான ஸச்சிஷ்யர்களுக் கென்றபடி. தாளம்வழங்கி - தாளவித்யையை ப்ரஸாதித்தருளி, காந்தர்வவேதத்தை யுபதேசித்து என்றபடி. தமிழ்மறை - த்ராமிட வேதத்தினுடைய, இன் - போக்யமான, இசை - காநத்தை, தந்தவள்ளல் - உபதேசித்தருளின மஹோதாரரான, மூளும் - மூளப்படுமதான, முமுக்ஷுக்களுக்கு ஆதரேண வாச்ரணீயமான வென்றபடி. தவநெறி - தீபோமார்க்கங்களை, பக்தி ப்ரபத்தி மார்க்கங்களை யென்றபடி. மூட்டிய - லோகத்திலே ப்ரவர்த்திப் பித்தவரான, நாதமுனி - ஸ்ரீமன் நாதமுனிகளுடைய, கழலே - திருவடிகளையே, நாளும் - ப்ரதி திநமும், தொழுது - ஸேவித்து, எழுவோம் - உஜ்ஜீவிப்போம், யத்வா - திருவடிகளைத் தொழுகையாகிற மஹாநந்த லாபத்தாலே ஸமுல்லஸித ராவோ மென்றபடி. நமக்கு - ஏவம்வித பாக்ய ராசிகளான நமக்கு, நானிலத்தே - நாலுவகைப்பட்ட நிலத்திலே, க்ருத்ஸ்ந பூமியிலு மென்றபடி. ஆர்நிகர் - ஆர்ஸத்ருசர். நாதமுனிகள் திருவடிகளைத் தொழப் பெற்று நாம் ஸர்வோத்க்ருஷ்ட ரானோ மென் றிம்முகத்தாலே நாதமுனிகளே பரமபுருஷனில் காட்டில் அதிகமான பரதேவதை யென் றநுஸந்திக்கிறபடி. இங்கு சிந்தியோ மினித் தீவினை யென்று மங்கள மனோவ்ருத்தி லாபமும் படியோ மினி யல்வழக் கென்று மங்கள வாக்வ்ருத்தி லாபமும் தொழுதெழுவோ மென்று மங்கள காயவ்ருத்தி லாபமும் அடைவே சொல்லிற்றுயித்து. இவை யோ

றொன்று ஒரோரிடத்திலே ப்ரதானமாகச் சொல்லியிருந்தாலும் மூன்றிடத்திலும் மூன்று மங்கள ஸித்தியுமுண்டென்கைக்கு ப்ரதர்சனபரம். (கூ)

இப்படி ‘‘ரஹஸ்யத்ரயஸாரம் விஸ்தீர்ணஸாரமாய் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரய ஸாரம்’’ என்னும் க்ரந்தம் செய்தருள திருவுள்ளம்பற்றி இனியிந்த ரகஸ்ய த்ரயத்தின் பதவாக்ய யோஜனையும் ஸம்ப்ரதாய ப்ரக்ரியையும் த்ரிதிய சதுர்த்த பாகங்களுக்கு அஸாதாரண விஷயமென்று ஸூசிப்பியா நின்றுகொண்டு இப்ரபந்தத்துக்கு பரம ப்ரயோஜநத்தையும் அவாந்தர ப்ரயோஜநங்களையும் காட்டாநின்றுகொண்டு ஆசார்யர்களுடைய ப்ரஸாதத்தாலே யனுபவ பரீவாஹமாக விப்ரபந்தம் ப்ரவ்ருத்த மாகிறதென்று இப்படி சிகீர்ஷித ப்ரதிஜ்ஞையையும் செய்தருளுகிறார். ஆளுமித்யாதியால்.

அரு-மூ.—ஆளு மடைக்கல மென்றெம்மை யம்புயத் தாள்கணவன்
தாளிணை சேர்ந்தெமக்கு மவை தந்த தகவுடையார்
மூளு மிருட்கள் விள்ளமுயன் றோதிய மூன்றினுள்ளம்
நாளு முகக்க விங்கே நமக்கோர்விதி வாய்க்கின்றதே. (எ)

எம்மை - அகிஞ்சநரான நம்மை, அடைக்கல மாளு மென்று - அடைக்கலமாக வாண்டு கொள்ளுவ னென்று, சரணவரணம் பண்ணில் ஸ்வேநைவ பர்த்தவ்யமான வஸ்துவாக ஸ்வீகரித்து ஸ்வாஸாதாரண மஹிஷீ பரிஜநாதிகளோடொக்க ஸ்வேஷ்ட கைங்கர்யங்களிலே நியோகித்துக் கொள்ளுவ னென்று அத்யவஸித் தென்றபடி. இத்தா லிப்ரபந்தத்துக்கு பரம ப்ரயோஜநம் ஸூசிதமாய்த்து. அம்புய்த்தாள் கணவன் தாளிணை - அம்புயத்தில் வஸிக்குமவள் அம்புயத்தாள் அவளுடைய கணவன் வல்லபனுடைய திருவடிகளுடைய இணை த்வந்த்வத்தை, சேர்ந்து - உபாயமாக வாச்ரயித்து, இத்தால் ப்ரபத்யனுஷ்டானம் இப்ரபந்தத்துக்கு அவாந்தர ப்ரயோஜந மென்று த்யோதிதமாய்த்து. எமக்கும் - தங்களை யாச்ரயித்த நமக்கும், அவை தந்த - அத்திருவடிகளையே உபாயமாக காட்டிக்கொடுத்த, தகவுடையார் - க்ருபாசாலிகளான வாசார்யர்க ளென்றபடி. இதுக்கு ஓதிய என்கிறத்தோடே அந்வயம். மூளும் - ஜ்ரும்பண சீலங்களான, இருள்கள் - அஜ்ஞாநங்கள், விள்ள முயன்று-விட்டுப் போகைக் கபிநிவெசித்து, நிச்சேஷ நிவ்ருத்தங்க ளாகவேணு மென் றபிநிவிஷ்டரா யென்றபடி. இந்தால் அஜ்ஞாந நிவ்ருத்தியு மிப்ரபந்தத்துக் கவாந்தர ப்ரயோஜந மென்று தர்சிதமாய்த்து. ஓதிய - அநுஸந்தித்ததான, உபதேசித்ததான என்றபடி. மூன்றினுள்ளம் - ரஹஸ்யத்ரயத்தினுடைய தாத்பர்யத்தை, இங்கே - பகவந் ஸ்வரூப திரோதாயகமான விந்த ப்ரக்ருதி மண்டலத்திலே, நாளும் - ஸர்வகாலத்திலும், உகக்க - அநுபவித் தாநந்தித் திருக்கும்படி, ப்ரபந்த நிர்மாண ததநுஸந்தாநாதிருப பரீவாஹ யுக்தமாக வத்யர்த்த ப்ரீதியோடே நாளு மநுபவிக்கும்படி என்கை. நமக்கு - அந்த வாசார்யர்களுடைய திருவடிகளை யாச்ராயித்திருக்கிற நமக்கு, ஓர்விதி - விலக்ஷணமான பாக்யமானது, பகவ் ததநுக்ரஹாதபி விலக்ஷணமான குருபங்க்தி ப்ரஸாதமாகிற பாக்யமானது என்றபடி. வாய்க்கின்றது - வந்து கிட்டாநின்றது, இதுக்கு ஸத்ருசமான ஹேது கண்டிலேன்; பலமாகில் ஸித்தியா நின்றதென்றபடி. மூன்றினுள்ள மென்கிற வித்தாலே விப்ரபந்தத்தில் த்ருதிய பாகத்துக்கு பதவாக்ய யோஜநை விஷய மென்று ஸூசிதம். எமக்கு மவை தந்த என்கிற வித்தாலே யாசார்ய க்ருத்யம் தோற்றுகையாலும் தகவுடையா ரித்யாதியாலே யவர்கள் விஷயத்தில் க்ருதஜ்ஞதாநு சந்தானமும் நித்யம் ததுபதிஷ்ட ரஹஸ்ய த்ரயார்த்தா நுஸந்தாநமு மாகிற சிஷ்யக்ருத்யமும் தோற்றுகையாலும் ஆசார்ய

சிஷ்யோபய க்ருத்யம் சம்ப்ரதாய ப்ரக்ரியாக்யமான சதுர்த்த பாகத்துக்கு விஷய மென்று வ்யஞ்ஜிதமாய்த்து. (எ)

“ஶ்ரீணிவர ஊவஸுஎரெ:” “மணிவர இவ செளரே:” என்று துடங்கி ஸ்ரீய: பதி இத்யாதியாலே சாஸ்த்ரார்த்த விசேஷ ஜிஜ்ஞா ஸோத் பாதநாய உபொத்காத மென்னும் ப்ரதமமான இவ்வதிகாரத்தில் சொன்ன வர்த்தங்களை யெல்லாம் முமுக்ஷுக்களுக்கு ஸ்வஶிஷ்டங்களாக வநுசந்தித்துக் கொள்ளும்படி ப்ரயோக ரூபமாகவும் வைசித்யாதி சயார்த்தமாகவும் பாட்டாலே ஸங்க்ரஹிக்கிறார். திருவுடனிதி.

அச-மூ.—திருவுடன் வந்த செழுமணி போற்றிரு மாலிதயம்
மருவிட மென்ன மலரடி சூடும் வகைபெறுநாம்
கருவுடன் வந்த கடுவினை யாற்றில் விழுந்துழலா
தருவுட னைந்தறிவா ரருள் செய்ய வமைந்தனரே. (அ)

மேலும் ப்ரத்யதிகாரம் பாட்டுக்களுக் கிதுவே ப்ரயோஜநம். திருவுடன் வந்த-பிராட்டியோடே கூட க்ஷீராப்தியிலெ யாவிர்ப்பவித்த, இத்தால் ஸ்ரீகௌஸ்துபஸ்ய லக்ஷ்மீ துல்ய ப்ரேமாஸ்பதத்வம் விவக்ஷிதம். செழு மணி போல் - ச்லாக்ய மணி போல், ஸ்ரீகௌஸ்துபத்துக்குப் போலெ யென்றபடி. திருமால் - ஸ்ரீவல்லபனுடைய, இதயம் - ஹ்ருதயம், வக்ஷஸ்தலமென்றபடி. மருவிட மென்ன - மருவும் ஸ்தல மென்ன, நமக்கு ஸ்நேஹமாக வஸிக்கும் ஸ்தலமென்று சொல்லலாம்படி, இவனுக்கு ப்ரியதமராய்கொண்டு ஜீவாபிமானியான ஸ்ரீகௌஸ்துபத்தை ஈச்வரன் பிராட்டியை ப்போலே அதிப்ரேமத்தோடே தன் ஹ்ருதயத்திலே வைத்துக்கொண்டிருக்கிற, இது இஜ்ஜீவர்களுக்கும் ததாவித ப்ரேமாஸ்பத த்வக்யாபகமென்று கருத்தாலெ யிவர்களுக்கு ஸ்ரீகௌஸ்துபத்தை த்ருஷ்டாந்தமாக வெடுத்தது. மலரடி - பத்ம ஸத்ருசங்களான திருவடிகளை, சூடும் வகை - சிரோ பூஷணமாகக் கொள்ளும் ப்ரகாரத்தை, நிரதிசயபோக்யமாக வடிமைசெய்யும் ப்ரகாரத்தை யென்றபடி. பெறு நாம் - பெற யோக்யதையுடையரானநாம், கருவுடன் வந்த - கர்ப்பத்தோடெ வந்ததான வென்றபடி. கடுவினை யாற்றில் - க்ரூரமான கர்மரூப நதியில், விழுந்துழலாது - நிபதித்துபெருகிப்போகாதபடி. இதுக் கருள்செய்ய வென்கிறத்தோடெ அந்வயம். அருவுடன்-ஸூக்ஷ்மார்த்தத்தோடெ, அங்யைர் துர்போதமான சரீராத்மபாவாதி ஸம்பந்தத்தோடேகூட வென்றபடி. ஐந்தறிவார் - அர்த்த பஞ்சகத்தை யறிவார், ஸம்பந்தத்திலும் அர்த்தபஞ்சகத்திலும் நிஷ்ணாதரான நம்மாசார்யர்க ளென்றபடி. அருள் செய்ய - க்ருபைபண்ணுகைக்கு, அபேக்ஷிதார்த்தங்களை யெல்லாம் தெளிவிக்கைக்கு, அமைந்தனர் - பர்யாப்த ராணர்கள், ஜ்ஞாதார்த்த மினி நமக்கு ஒன்றை யபேக்ஷிக்க வேண்டா மென்று கருத்து. “ஶ்ரு-திவயவிவரிதஃ” ச்ருதிபதவிபரீத மென்று துடங்கி இந்த ரஹஸ்யத்ரயத்திலிந்யாதியால் ரஹஸ்யத்ரயம் மிகவும் ஸாரதம மாகையால் உபாதேயதம மென்று ஸாரநிஷ்கர்ஷாதிகாரத்தில் அருளிச்செய்து இவ்வதிகாரார்த்த மெல்லாம் ஸம்ப்ரதாயாகத மென்று காட்டாநின்றுகொண்டு இவைத்தை ஸங்க்ரஹிக்கிறார். அமையாதிதி.

அடு-மூ.—அமையா திவையென்னு மாசையி னாலறு மூன்றுலகில்
சுமையா னநல்விகள் சூழவந் தாலுந் தொகை யிவையென்
றிமையா விமையவ ரேத்திய வெட்டிரண் டெண்ணியநம்
சமயா சிரியர் சதிர்க்குந் தனிநிலை தந்தனரே. (கூ)

இவை - இப்போது நா மப்யஸித்த வித்யைகள், அமையாது - போதாது, என்று மாசையிருல் - இவை நமக்குப் போராது இன்னும் அப்யஸிக்க வேணு மென்கிற வாசையா லென்றபடி. இதுக்கு சூழவந்தாலு மென்கிறத்தோ டன்வயம். உல கில் சுமையான - நிஷ்பலங்க ளாகையாலே ““வேத ஹார ஹாராஶ்ரா ஜ:”” வேதபார பராக்ராந்த : இத்யாதிகளில் படியே லோகங்களுக்கு கேவல பாராயணங்களான என்றபடி. அறுமூன்று - அஷ்டாதச ஸங்க்யாசங்க் ளான, உபவேதாநாம் ப்ரு தக் கணநயா வித்யாநா மஷ்டாதசத்வம். கல்விகள் - வித்யைகள், அத்யாத்ம ஸார தம ரஹஸ்யத்ரய வ்யதிரிக்த வித்யைக ளென்றபடி. சூழவந்தாலும் - கார்த்ஸ்ந்யெந லப்தங்க ளானாலும், இவை தோகை யென்று - இவைகள் சங்க்யா பூரண மாத்ர ப்ரயோஜநங்க ளென்று, நிஸ்ஸாரங்களென்று நிச்சயித் தென்றபடி. இதுக்கு என் ணிய வென்கிறத்தோடே யன்வயம். இமையா - நிமேஷ மில்லாதவர்களான, க்ஷண மாத்ரமபி ஜ்ஞாநசங்கோச லேச மில்லாதவர்களான என்கை. இமையவர் - தேவ தைகள், நித்யஸூரிகள். ஏத்திய - கொண்டாடுகிற, அத்யாத்ம விஷய சப்தராசி யில் அத்யந்த ஸாரதமங்களான என்று தாத்பர்யம். எட்டு - ஸ்ரீம தஷ்டாக்ஷரத் தையும், இரண்டு - ஸ்ரீமந்த்ரரத்நத்தையும் சரமச்லோகத்தையும், என்ணிய - ஸர் வதா அநுசந்திக்குமவரான, நம் சமயாசிரியர் - நம்முடைய தர்சன ப்ரவர்தகரான வாசார்யர்கள், சதிர்க்கும் - சதுரமான, ““ஸாரா ஸாரவிவேகஜ்ஞா:”” அல்பாயாஸெந ஸர்வார்த்த ஸித்திகரமான என்கை. தனிநிலை - அஸாராதிகளைக் கழி த்து ஸாரதமத்திலு மத்யந்த ஸாரதம மான ரஹஸ்ய த்ரயத்தையே விரும்பும்படி யான ஸித்தியை, இவ்வதிகாரத்தில் சொன்ன ஸாராஸாரங்களுடைய நிஷ்கர்ஷத் தை என்றபடி. தந்தனர் - நமக்கு க்ருபையாலு முபதேசத்தாலும் ப்ரஸாதித்தரு ளினார்கள் என்கை. (௬)

““ஆதேயத்வ ப்ரக்ருதி நியமை:”” ஆதேயத்வ ப்ரப்ருதி நியமை: என்று துடங்கி, ஜீவேச்வரயோச் சரீராத்மபாவம் ரஹஸ்யத்ர யார்த்தங்களில் ப்ரதான மாய் நம் ஸித்தாந்தத்திற்கு அஸாதாரணமான அர்த்தமென்று ப்ரதான ப்ரதிதந் த்ராதிகாரத்தில் அருளிச்செய்து இச்சரீராத்ம பாவம் வேதங்களில் சொல்லப்படுகிற தோ சொல்லப்படுகிறதாகில் மற்றுள்ள ஸித்தாந்திக ளித்தை இசையா தொழிவா னேனென்கிற சங்கையைப் பரிஹரியா நின்றுகொண்டு அதிகாரார்த்தத்தை ஸங்க்ர ஹிக்கிறார். நிலையிதி.

அசு-மூ.—நிலைதந்த தாரக னாய்நிய மிக்கு மிறைவனுமாய்
இலதொன் றிலாவகை யெல்லாந் தனதெனு மெந்தையுமாய்
துலையொன் றிலையென நின்ற துழாய்முடி யானுடம்பாய்
விலையின்றி நாமடியோ மென்று வேதியர் மெய்ப்பொருளே.

நிலை - ஸ்திதி, இது ஸத்தைக்கு முபலக்ஷணம். நிலை தந்த தாரகனாய் - கடாதிந் ப்ரதி பூதலாதிவ தன்றிக்கே தன் ஸ்வரூபாதீநங்களாக ஸத்தாஸ்த்திகளை ஸங்கல்பித்து தாரகனா யென்றபடி, நியமிக்கு மிறைவனுமாய் - ஔபாதிக நியந் தாக்களான ஜீவர்களைப் போலன்றிக்கே நியமனத்தை ஸ்வபாவமாக உடைய வீச் வரனுமாய், ஒன்று மிலது எனு வகை - இதொன்று மிவனுக்கு சேஷமன் றென்ன வொண்ணாதபடி, எல்லாந் தனதெனு மெந்தையு மாய் - ஸமஸ்த வஸ்துவும் தனக்கு சேஷ மென்னப்படும் ஸ்வாமியுமாய், இதுக்கு நின்ற வென்கிறத்தோடே அந்வயம். துலை யொன் றிலையென நின்ற - இவனுக்கு ஸமமான வஸ்துவொன்று மில்லையெ

ன்னும்படி நின்றவனுன, துழாய்முடியானுடம்பாய் - ஸ்ரீதுளஸீ மௌளிகனுக்கு சரீரமாய், துழாய்முடியா னென்கிறவித்தா லிவனுடைய திவ்யமங்கள விக்ரஹம்போலெ யாதேயத்வாதிநியமைஸ் ஸர்வமும் சரீரமாகலா மென்றுகருத்து. விலை - க்ரயம், உபாதியென்றபடி. விலையின்றி - உபாதியொன்று மின்றிக்கே, நாமடியோமென்று, நாம் தாஸபூதரென்று, வேதியர் மெய்ப்பொருள் - வேதத்தை யதாவத்தாக வறிந்தவருடைய ஸத்யபூதமான வர்த்தம். "யஸ்ய ப்ருதிவீ ஶரீரம், யஸ்யாத்மா ஶரீரம்" யஸ்ய ப்ருதிவீசரீரம், யஸ்யாத்மா சரீர மித்யாதிகளாலே வேதங்களிலே இச்சரீராத்மபாவம் சொல்லாநிற்க விதின் முக்யார்த்தத்துக்கு பாதகமில்லாதிருக்க இத்தை கௌணமாக்கினவர்கள் வேதத்தை யதாவத்தாக வறிந்தவர்க ளன்றென்றுகருத்து. (க0)

அர்த்தபஞ்சகஸ்ய "ஸூசநார்த்தம்" ஆதௌப்ராப்யமென்று துடங்கி, ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோரூப மித்யாத் யுக்தமான அர்த்தபஞ்சகத்தை உபபாதித்து தஸ்யஸதாசார்ய ஸம்ப்ரதாயாதேவ ஸம்யகவகதத்வ க்யாபனுர்த்மாகவும் ததாத்வேந ஸர்வேஷா மநுஸந்தாநார்த்தமாகவு மிதைபாட்டாலே ஸங்க்ரஹிக்கிறுர். பொருளிதி.

அள-மூ.—பொருளொன் றென நின்ற பூமக ளுத னவ னடிசேர்ந்
தருளொன்று மன்ப னவன்கொ ளுபாய மமைந்தபயன்
மருளொன்றிய வினை வல்விலங் கென் றிவை யைந்தறிவார்
இருளொன் றிலாவகை யெம்மனந் தேற வியம்பினரோ. (கக)

பொருள்-புருஷார்த்தம், ஒன்றென - ஒன்றென்று சொல்லும்படி, நின்ற - இவனொருவனுமே பரமபுருஷார்த்த மென்று ஸர்வசாஸ்த்ரங்களும் சொல்லும்படி யநவதிககல்யாண ஸ்வரூப குண விக்ரஹ விபூதி சேஷ்டித சாலியாய்க் கொண்டு நித்யமாக நிலைநின்றவனுன வென்று தாத்பர்யம். பூமகள்நாதன் - பத்மாலயாநாதன், அவனடி - தத்பாதங்களை, சேர்ந்து - சரணம்புகுந்து, அருளொன்றும் - க்ருபையோடே ஏகீபவிக்குமவனுன, நித்யம் க்ருபாவிஷயனுய்க் கொண்டு நித்யகைங்கர்யம் பண்ணும்படிக்கு ஸ்வரூபயோக்யனுன வென்றபடி. அன்பன் - ஸ்நேஹீ, பகவதநுபவ ரஸிகத்வ ஸ்வபாவனுன ஜீவன், அவன்கொள் - அவன்கொள்ளுமதான, இந்தஜீவன் தனக்கு மோக்ஷஸாதநமாக ஸ்வீகரிக்கும்படி இருக்கிற என்றபடி, உபாயம் ஸித்தஸாத்ய ரூபங்களான வுபாயங்கள், அமைந்த - அந்த ஜீவஸ்வரூபத்துக் கனுரூபமான, பயன் - பலம், மருளொன்றிய - அவித்தையையோடே கூடியிருக்கிற, வினை - கர்மங்களாகிற, வல் விலங்கு - த்ருடதரச்ருங்கலை, என்றிவை யைந்து - இப்படி சொல்லப்பட்ட வர்த்த பஞ்சகத்தை, அறிவார் - ஸம்யக்காகத் தெளிந்தவரான வாசார்யர்கள், இருளொன்றிலாவகை - விபரீத ஜ்ஞாநாதிகளேஷத்து மில்லாதே போம்படி, எம்மனம் - நிரம்பசரான நம்முடைய மநஸ்ஸை, தேற - நிஸ்ஸம்சயமாகத் தெளியும்படி, இயம்பினர் - அருளிச்செய்தார்கள். இவ் வர்த்த பஞ்சகத்தையென்று அர்த்தாத் ஸித்திக்கிறது.

புருடன் மணிவர மாகப் பொன்னு மூலப்
பிரகிருதி மருவாச மான் றண்டாகத்
தெருண் மருண் வாண் மறை வாக வாங்காரங்கள்
சார்ங்கஞ் சங்காக மநந் திகிரியாக

இருடீகங்க ளீரைந்துஞ் சரங்க ளாக
விருபூத மாலை வந மாலையாகக்
கருடனுருவா மறையின் பொருளாங் கண்ணன்
கரிகிரிமே னின்றனைத்துங் காக்கின்றானே.

புருடன் - புருஷன், ஜீவனென்றபடி. மணிவரமாக - ஜீவதத்வாபிமானியான வொரு நித்தியஸூரி ஸ்ரீகௌஸ்துப மணிரூப விக்ரஹ யுக்தனா யிருக்கையாலே யவ்வபிமானி தேவதையுடைய வபேதத்தை விவக்ஷித்து ஜீவன் மணிவரமென்கிறது, இப்படி மேலும் தத்ததபிமானீ நித்தியஸூரிகளாக யோஜித்துக்கொள்ளுவது. பொன்று - பொன்றுதல்-நசித்தல், நசியாததான, மூலப்பிரகிருதி - மூலப்ரக்ருதி, மருவாக - ஸ்ரீவத்ஸமாக, மான் - மஹான், மஹத்தத்வமென்றபடி. தண்டாக - தண்டமாக, கதையாகவென்றபடி. தெருள்மருள் - ஜ்ஞாநாஜ்ஞாநங்கள், வாள்மறைவாக - கட்கமும் அதினுறையுமாக, ஆங்காரங்கள் - அஹங்காரங்கள், சார்ங்கம் சங்காக - தாமஸாஹங்காரம் சார்ங்கமும் ஸாத்விகா ஹங்காரம் சங்கமுமாக வென்றபடி. மனம் - மனஸானது, திகிரியாக - சக்கரமாக, இருடீகங்கள் - ஹ்ருஷீகங்கள், ஈரைந்தும் - இருபஞ்சகமும், தசேந்திரியங்களு மென்றபடி. சரங்களாக - பாணங்களாக, இருபூதமாலை - த்விவிதபூதமாலை, தந்மாத்ராத்மநா ஸூக்ஷ்ம ரூபமாயும் ஸ்தூலரூபமாயுமிருந்துள்ள பூதமாலையென்றபடி. வனமாலையாக - ஸ்ரீவைஜயந்தியாக, இவ்வாக்யங்களுக்கெல்லாம், மறையும்பொருளாமென்கிறத்தோடே யந்வயம். கருடனுருவாமறையின் "த்ரிவ்ருதேவ ஶிரோ காயத்ரம் சக்ஷு" ரித்யாதிகளில் அப்படி கெருடனுக்கு ரூபமாக நிற்கிற வேதங்களுடைய வேதவேத்யவிஷயத்வ ப்ரகாசகத்வ ஸாமர்த்ய ஸம்பந்தத்தால்போல் வேதாவயவத்வ ஸமாநாதிகரணத்தாலும் ஸ்வவேத்யத்தில் ஸ்வாமித்வ ரூபேண ஸம்பந்தமாகிறதென்றபிப்பிராயம், பொருளாம் கண்ணன் - ப்ரதாநார்த்தமாகாநிற்கிற க்ருஷ்ணன், இப்படி ஸர்வதத்வங்களும் தனக்கஸ்த்ரபூஷணாதி ரூபேண வேதங்களால் ப்ரதிபாதிக்கப்படுகிற க்ருஷ்ணனென்று இவ்வாக்யங்களெல்லாத்துக்கும் ஸமாநாதிகரண்யம். கரிகிரிமேல்நின்று - ஹஸ்திகிரிமேலேநின்று, குன்றுமேலே விளக்குபோலே ஸர்வருக்கும் காணலாம்படிநின்று என்றபடி. அனைத்தும் - ஸமஸ்தத்தையும், காக்கின்றான் - அநிஷ்டநிவ்ருத்தி இஷ்டப்ராப்திகளாலே ரக்ஷியாநின்றான். ஸர்வதத்வங்களும் அஸ்த்ரபூஷணாதிரூபேண தனக்கு யதேஷ்ட விநியோகார்ஹமான வுபகரணமானபடியையுமத்தாலே ஸர்வோத்க்ருஷ்டனாய் ஶரீரத்வமான படியையும் வேதங்கள் பரோக்ஷமாகச்சொல்லுகிற வளவேயாய்ப் போகாதபடி யபரோக்ஷமென்கிற ஶ்லோகத்தின்படியே ஹஸ்திகிரிமேலேநின்று ஸர்வர்க்கும் ப்ரத்யக்ஷமாகக் காட்டிக்கொண்டு விச்வத்தையும் உஜ்ஜீவிப்பியாநிற்கிறானென்று பூர்வாபராத்வயம். (கக)

ஸேஶ்வர நிரீஶ்வராதியான ஸாங்க்ய விஷயம்ருதி யிருந்தாலும் "ஏகமேவாத்விதீயம், நேஹநாநாஸ்தி, ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம" இத்யாதியாக ப்ரஹ்மமொன்றையே தத்வமென்கிற விருத்தச்ருதிகளாலே ஸம்சயம் பிறவாநிற்க தத்வங்கள் மூன்றென்றிங்கு நிஷ்கர்ஷித்த தெங்ஙனே என்கிற சங்கையை பரிஹரியாநின்றுகொண்டு இவ்வதிகா ரார்த்தமெல்லாம் ஸம்ப்ரதா யாகதமென்று காட்டாநின்றுகொண்டு அதிகாரார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். தேறவிதி.

அஅ-மூ.—தேற வியம்பினர் சித்தும சித்து மிறையுமென
வேறு படும்வியன் தத்துவ மூன்றும் வினையுடம்பில்
கூறு படுங்கொடு மோஹமும் தானிறை யாங்குறிப்பும்
மாற நினைந்தரு ளால்மறை நூல்தந்த வாதியரே. (கஉ)

மறைநூல் - வேதரூபசாஸ்த்ரத்தை, தந்த - தந்த, உபதேசித்தவர்களான, ஆதியர் - ஆத்யா:, பூர்வாசார்யர்களென்றபடி. அருளால் - க்ருபையாலே, ஸூவெயாநி ஸூஜ ஹொவஷெக" என்கிறபடி. வ்யாதிஜாஹாதி களை கணிசியாதேஎன்று கருத்து. இதுக்குத் தேறவியம்பினரொன்கிறத்தோடே யந்வயம். வினையுடம்பில் - கர்மஸம்பந்தியான தேஹத்தில், ககூஜவிஸஜுஶேவிஷெஹெ ஆகக ஹாதிநாஷ்ஃ ஸலவஸா ஸ ஸஂஹவதீதிஹாவ:, கூறுபடும் - கூறுகொள்ளப்படுகிற, நாளுக்குநாள் த்ருடீபவித்ததான என்றபடி. கொடு - ஜூலாகொன நரகாஜூநயவஜா வஹமாய் பாரலௌகிக ச்ரேய: ப்ரதிரோதியுமான என்றபடி. மோஹமும் - ப்ரமமும், தேஹாத்மப்ரமமு மென்றபடி. தானிறையாங்குறிப்பும் - தான் ஸ்வதந்த்ரனும்படியான நிருபணமும், தேஹாதிரிக்தனை வாத்மா ஸ்வதந்த்ர னத்தனே போக்கி சேஷத்வபாரதந்த்ர்யாதிமா னன்றென்று குத்ருஷ்டிமதங்களா லுண்டாம் ப்ராந்தியு மென்றபடி. மாறநினைந்து - நிவ்ருத்த மாகவேணு மென்று கணிசித்து, இதுக்கும் தேறவித்யாதியோடே அந்வயம். சித்தும் - சேதநதத்வமும், அசித்தும் - அசேதநதத்வமும், இறையும் - ஈச்வரதத்வமும், என - என்றிப்படி, வேறுபடும் - பின்னமான, வியன் - விஸ்மயநீயமான, அந்யோந்யவிசித்ரா நேகஸ்வபாவவேலோகத்தாலே ஆச்சர்யாவஹங்களான என்றபடி. இத்தால் தத்வத்ரயஜ்ஞாநஸ்ய ப்ராந்திநிவர்தகத்வமாத்ரமன்றிக்கே புருஷார்த்தரூபத்வமு முண்டென்று ஸூசிதம். தத்துவம்மூன்றும் - தத்வங்கள் மூன்றையும், தேற - நாம் தெளியும்படி, ஏகமேவேத்யாதிகளான விருத்த ச்ருதிகளால் பிறக்கும் ஸம்சயாதிகள் தீரும்படி யென்கை. இயம்பினர் - சொன்னார்கள். இயம்புகை-சொல்லுகை. மறைநூல் தந்த வாதியர் தேறவியம்பினர் என்கிறவித்தால் இந்தச்ருதிக ளெல்லாத்துக்கும் ஸ்ரீபாஷ்யாதிகளிலே ஸமீசீநந்யாயங்களாலே ஸ்வாரஸ்யஹாநிலேசமு மன்றிக்கே விரோதசமனம்பண்ணி யுபதேசித்தார்க ளென்றதாய்த்து. (கஉ)

அநந்தரம் பரதேவதா பாரமார்த்யாதிகாரத்தில் ஸ்ரீமானான நாராயணனே பரதேவதை யென்று ஸப்ரமாணமாக உபபாதித்து இதுக்கு பாரமைகாந்த்யசித்தித்வாரா அவ்யவதானென மோக்ஷம் பலமென்றருளிச்செய்து இந்த பரதேவதா பாரமார்த்திய ஜ்ஞானத்துக்குக் கீழ்ச்சொன்ன விஷ்ட ப்ராப்திபோலே சில வநிஷ்ட நிவ்ருத்தி விசேஷங்களும் ப்ரயோஜந மென்று காட்டாநின்றுகொண்டு அம்முகத்தாலே இதினுடைய வத்யந்தோபாதே யத்வத்தையும் வ்யஞ்ஜிப்பியா நின்றுகொண்டு இந்தபரதேவாபாரமார்த்த்யம் தூயூஜஷிஷ்ணாதை: வூவாசாயை ரெவ ஸாயிதகூா உவிசாஷ்ஃ, (த்ராய்யந்தநிஷ்ணதை: பூர்வாசார்யைரேவ ஸாதிதத்வாத் அவிசாலயம்) என்கிறார். (வாதியரித்யாதியால்).

அகூ-மூ.—வாதியர் மன்னுந் தருக்கச்செருக்கின் மறைகுலையச்
சாதுசனங்க ளடங்கநடுங்கத் தனித் தனியே
ஆதியெ னுவகை யாரணதேசிகர் சாற்றினர்நம்
போதமருந் திருமாதுட னின்ற புராணனையே. (கஙு)

வாதியர் - துர்வாதிகள், இதுக்குத் தனித்தனியே ஆதியெனுவகை என்கிறத் தோடேயந்வயம். மன்னும் - ஸ்திரமான, துர்வாரமான என்றபடி. தருக்கச் செருக்கில் - தர்க்ககர்வத்தாலே, த்ருதீயார்த்தஸப்தமி. மறைகுலைய - ‟பிெஹெத்யல்ப ச்ருதாத் வேதஃ” பிபெத்யல்பச்ருதாத்வேதஃ என்கிறபடியே வேதங்கள் நடுங்கும்படி, சாதுசனங்கள் - ஸாதுஜநங்கள், தர்க்கபரிச்ரமாலஸராய் பரமாஸ்திகரா யிருந்துள்ள பகவத்பக்தரென்றபடி. அடங்க - கார்த்ஸ்ந்யேந, நடுங்க - ஸாத்வஸ கம்பித ராம்படி; தனித்தனியே யாதியெனுவகை - துர்வாதிகள் தந்தாமுக்குத் தோற்றினபடி வேறே வேறே ஜகத்காரணவஸ்து வென்னுதபடி, அதாவது - ப்ரஹ்மா பரன், சிவன் பரன் இந்த்ரன் பரன், இத்யாதி ப்ரகாரேண சொல்லாதபடி யென்கை. இவ்வளவால் வேதாநாம் ஸாதுஜநாநாஞ்ச ஸாத்வஸநிவ்ருத்தியும் துர்விதக்த்த வாத நிவ்ருத்தியுமாகிற விவ்வநிஷ்டநிவ்ருத்திகளு மிந்த பரதேவதா பாரமார்த்யஜ்ஞாநத்துக்கு ப்ரயோஜந மென்றதாய்த்து. ஆரணதேசிகர் - வேதாந்தாசார்யர்களான நம்மாசார்யர்கள், நம் - ப்ரஸித்தனுன, நமிதிசப்தஃ ப்ரஸித்தபரஃ, பரத்வேந ஸர்வசாஸ்த்ர ப்ரஸித்தனுன என்றபடி. போதமரும் - புஷ்பத்திலே யமர்ந்திருக்கிற, போது - புஷ்பம். பத்மவாஸிநியான வென்றபடி. திருமாதுடன் - ஸ்ரீயாகிறயுவதியுடனே, நின்ற - ஸர்வர்க்கும் ப்ராப்யனும் சரண்யனுமாய் நின்ற, புராணனை - ப்ரஹ்மருத்ராதிகளைப்போலே யுத்பத்யாதிகளுடையவனுகையன்றிக்கே ‟த்வமாதிதேவஃ புருஷஃ புராணஃ” த்வமாதிதே வஃ புருஷஃ புராணஃ இத்யாதிகளில் ப்ரசித்தனுனபுருஷனை என்றபடி. சாற்றினர் - ‟ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்” ஸத்யம்ஸத்யம் புநஸ்ஸத்யம் என்கிறபடியே தட்டிச் சாற்றினர்கள். தனித்தனியே ஆதியெனுவகை, இத்யேதத் ஸமபிவ்யாஹாராத் இவனையே யாதியாகச் சாற்றினரென்று தாத்பர்யமாகிறது. (கங)

கீழே ப்ரதானப்ரதிதந்த்ராதிகாரம் துடங்கி நாலுஅதிகாரத்தில் அருளிச்செய்த வர்த்தங்களெல்லாம் மோக்ஷோபாயாதிகாரத்வோப யுக்தங்க ளென்று நிரூபித்து இவ்வதிகாரத்தில் ப்ராதாந்யேந நிருபிதமான ஸாம்ஸாரிகஸுக ஹேயத்வத்தையும் பகவதநுபவவைலக்ஷண்யத்தையும் டாட்டாலே ஸங்க்ரஹியாநின்றுகொண்டு இந்த ஹேயதாதிகளை ஸ்வப்ரயாஸத்தா லநுஸந்தானம் பண்ணுகிறமாத்ரம் கார்யகாரமாக மாட்டா தென்று வ்யஞ்ஜிப்பியாநின்றுகொண்டு மோக்ஷோபாயாதி காரியாகைக்கு ஸதாசார்யோபதேச ததநுக்ரஹங்கள் ப்ரதானகாரணங்க ளென்கிறர். நின்றபுராணனிதி.

கூ0-மூ.—நின்றபுராண னடியிணையேந்து நெடும்பயனும்
பொன்றுதலேநிலை யென்றிடப் பொங்கும் பவக்கடலும்
நன்றிது தீயதிதென்று நவின்றவர் நல்லருளால்
வென்று புலன்களை வீடினைவேண்டும் பெரும்பயனே. (கச)

நின்ற - திருமாதுடனின்றவரான வென்றபடி. கீழதிகாரஸங்க்ரஹப்பாட்டில் திருமாதுடன் நின்றபுராணனையே யென்றிருக்கையாலே அந்தாதியா யிருக்கிற விப்பாட்டி லப்படி யர்த்தம் கொள்ளுகை யுசிதமிறே. புராணன்-அநாதி புருஷனுடைய, அடியிணையேந்தும் - சரணத்வந்தவத்தை யேந்துகையாகிற, அந்யோந்ய ஸௌஸாத்ருச்யத்தாலே நிரதிசய போக்யங்களான திருவடிகளை சிரஸாவஹித்து கைங்கர்யம் பண்ணுகையாகிற என்றபடி. நெடும்பயனும் - உத்தராவதி யன்றிக்கே உத்தரோத்தர மனுவர்த்திப்பதான புருஷார்த்தத்தையும், பொன்றுதலே நிலையென்றிட - நசிக்கையே யிதுக்கு ஸ்வாபாவிக தர்ம மென்று சொல்லும்படி, பொங்கும் பவக்கடலும்-

பாதகமாம்படி யடிக்கடி யுத்ரேகியாநிற்கிற ஸம்ஸார ஸமுத்ரத்தையும், நன்றிது - இதுநல்லது, இந்த நெடும் பயன் நல்ல தென்றபடி. தீயதிது - இது பொல்லாதது, இந்த பவக்கடல் பொல்லாதது என்றபடி. என்று நவின்றவர் - என்றிப்படி யுபதேசித்த வாசார்யர்களுடைய, நல்லருளால் - நல்லக்ருபையாலே, இங்கு நன்மையாவது - பரோஜ்ஜீவனைக ப்ரயோஜநத்வம். புலன்களை - இந்த்ரியங்களை, வென்று - ஜயித்து, சப்தாதி விஷயங்களில் நின்றும் நிவர்த்திப்பித்துஎன்றபடி. பெரும்பயன், மஹா புருஷார்த்த ரூபமான, வீடினை - வீட்டை மோக்ஷத்தை என்றபடி. வேண்டும்- அபேக்ஷிக்கும், பராவரதத்வவிவேகம் பெற்ற சேதநனிதி சேஷ:. (கசு)

அதிகாரி விபாகாதிகாரத்தில் ப்ரத்யதிகாரிக்கும் முகபேதேந ப்ரபத்தி யுண்டென்று அருளிச்செய்து அகிஞ்சனனுக்கு பக்தியோக மில்லாமையாலே தத்ஸ்தாநே ப்ரபத்தி வேண்டினாலும் ஸகிஞ்சனனுக்கு பக்தியோகமே பரமபுருஷார்த்த ஸாதகமாக விருக்க விவனுக்கும் ப்ரபத்தி பண்ணவேண்டுவ தேதுக்காக வென்கிற சங்கையைப் பரிஹரியா நின்றுகொண்டு அதிகாரார்த்தத்தை பாட்டாலே ஸங்க்ரஹிக்கிறார். வேண்டுமித்யாதி.

கூக-மூ:—வேண்டு பெரும்பயன் வீடென் றறிந்து விதிவகையால்
நீண்டுங் குறுகியு நிற்கு நிலைகளுக் கேற்குமன்பர்
மூண்டொன்றின் மூல வினைமாய்த் துதலின் முகுந்தனடி
பூண்டன்றி மற்றோர் புகலொன் றிலையென நின்றனரே. (கரு)

வேண்டும் பெரும்பயன் - ப்ரார்த்த நீயமான மஹாபலம், வீடு - மோக்ஷம், என்றறிந்து—, நீண்டுங் குறுகியும் நிற்கும் நிலைகளுக்கு - சிரகால ஸாத்யமாயும் க்ஷண கால ஸாத்யமாயும் நிற்கு முபாயங்களுக்கு, விதிவகையால் - பூர்வஸுக்ருத வைசித்ரியாலே, ஏற்குமன்பர் - யோக்யரான பகவதநுபவேச்சுக்கள், சிலர் சிரகால ஸாத்யோபாயத்துக்கும் சிலர் க்ஷணகால ஸாத்யோபாயத்துக்கு மென்றிப்படி வ்யவஸ்த்திதமாக யோக்யரான ஸகிஞ்சநாகிஞ்சநாதி காரிகளென்றபடி. ஒன்றில் மூண்டு- இவ்விரண்டி லேதேனு மொன்றிலே யுத்யோகித்து, மூலவினை - ஸம்ஸாராநுவ்ருத்திக ளெல்லாத்துக்கும் மூலகந்தமான கர்மங்களை, உபாய விரோதியை யாதல் ப்ராப்திவிரோதியை யாதல் என்றபடி. மாய்த்துதலில் - நிவர்த்திப்பிக்கையில், முகுந்த னடிபூண்டன்றி - பகவச்சரணங்களை ஸாதரமாகப் பற்றியல்லது, தத்ப்ரபத்தியைப் பண்ணியல்லது என்றபடி. மற்று - வேறு, ஓர்புகல் - நிரபே க்ஷோபாயம், ஒன்றிலையென - ஒன்றுமில்லை யென்றும்படி, நின்றனர் - நின்றார்கள், ஸகிஞ்சனனுக்கு பக்தியோகம் பரமபுருஷார்த்த ஸாதநமாக வத்தாலு முபாயவிரோதி நிவ்ருத்யம் சத்துக்கு வேறு நிரபேக்ஷ ஸாதந மில்லாமையாலே யகிஞ்சனனுக்கு ப்ராப்தி விரோதி நிவ்ருத்திக்காக ப்ரபத்தி வேண்டினாப்போலே உபாய விரோதி நிவ்ருத்திக்காக ஸகிஞ்சனனுக்கும் அது வேண்டுமென்று தாத்பர்யம். (கரு)

உபாய விபாகாதி காரத்திலே உபாயங்களை ஸித்தஸாத்ய ரூபங்களாகவும் ஸித்தோபாயத்தை பலப்ரதத்வ ப்ரஸத நீயத்வாதி விசிஷ்டமாகவும் ஸாத்யோபாயத்தை தத்ப்ரஸாதந மாத்ரரூபமாகவும் ஜ்ஞாந விகாஸ ரூபமாகவும் ப்ராப்தி ரூபஜ்ஞாந விலக்ஷண மாகவும் கர்ம யோகாத்யுபாயத்தை ஸத்வாரகமாகவும் யதாவஸ்திதஸ்வரூப கதனமுகேந பரஸ்பர விபக்தங்களாக நிரூபித்து இப்படி யிவ்வதிகாரத்திலே கர்மயோகத்தை யாத்மாவலோக நஸாதநமாகச் சொன்னது கூடுமோ, வைதிகரிலே சிலர் கர்மம் முமுக்ஷுவுக்கு விருத்தமென்றும் சிலரது மோக்ஷத்துக்கே யவ்ய வஹித ஸாதநமென்றுஞ் சொல்லவில்லையோ ; ஆத்மாவலோகநம் ஜ்ஞாநயோ

கமாத்ரத்தாலே தானே பிறவாதோ; கிஞ்ச, இது ஆத்மாவலோக நஸாதநமாகில் ஜ்ஞாநயோகம் வேண்டா தொழியாதோ; யதாதிகார மென்கைக்கு அதிகாரபேதம் துர்நிருபமன்றோ; ஸாக்ஷாத்கார துல்ய நிரதிசய ப்ரீதிருப த்ருவாநு ஸம்ருதியே மோக்ஷஸாதந மென்றது தான்கூடுமோ; ஸ்துதிகீர்த்தந நமஸ்காராதிருப பக்தி யையும் மோக்ஷஸாதனமாகச் சிலர் சொல்லவில்லையோ; இனி ப்ரபத்தி மோக்ஷோ பாய மென்றதுதான் கூடுமோ; அத்யந்த லகுவான இது மோக்ஷோபாயமாகில் பக்திக் கத்யந்தோச்சேதம் ப்ரஸங்கியாதோ; இதில் சக்தரல்லாதார்க்கு ப்ரபத்தி யென்னில், கர்மயோகாதிகளுக்கு அத்யந்தோச்சேதம் ப்ரஸங்கியாதோ; பரம்ப ரோபாயத்திலும் சக்தரல்லாதாருக் கென்னத்தான் கூடுமோ; ஸர்வஸுகரமான நாமஸங்கீர்த்தநாதிகளிலும் சக்தரல்லாதாருண்டோ, என்கிற சங்கைகளைப் பரிஹ ரியா நின்றுகொண்டு இவ்வதிகாரார்த்தத்தைப் பாட்டாலே ஸங்க்ரஹிக்கிறார். நின் றவித்யாதி.

கூஉ-மூ.—நின்ற நிலைக்குற நிற்குங் கருமமு நேர்மதியால்
நன்றென நாடிய ஞானமு நல்கு முட்கண்ணுடையார்
ஒன்றிய பத்தியு மொன்று மிலாவிரை வார்க்கருளால்
அன்று பயன்தரு மாறு மறிந்தவ ரந்தணரே. (கசு)

நின்றநிலைக்கு - ஸ்திரமான நிஷ்டைக்கு, அஸ்கலிதமான வுபாயநிஷ்டைக் கென்றபடி. உறநிற்கும் - உறும்படி நிற்கும், யோக்யமாய் நிற்கிற என்றபடி. கருமமும் - கர்மயோகத்தையும், கர்மயோக மில்லாதபோ தந்தக்கரண சுத்தி பிறவா மையாலும் ஜ்ஞாநயோக மநப்யஸ்த பூர்வதயா துஷ்கர மாகையாலும் - அப்யஸ்த ஸஜாதீயதயா ஸுகரமான கர்மயோகமே ஸ்திரமான வுபாயநிஷ்டைக்கு உபயுக்த மாகையா லிது முமுக்ஷுவுக்கு விருத்தமன்று, இப்படி யிது ஆத்மாவ லோகநமா த்ரே விநியுக்தமாக சாஸ்த்ரேஷு நிர்ணீதமாகையால் மோக்ஷத்துக் கவ்யவஹித ஸாதநமாகவு மாட்டா தென்றுகருத்து. நேர்மதியால் - ஸூக்ஷ்மையான புத்தியா லே, துஷ்கர ஜ்ஞாநயோகத்தையும் நிஷ்ப்ரமாதமாக நிர்வஹிக்கவல்ல புத்தியாலே யென்றபடி. இத்தால் ஜ்ஞாநயோக கர்மயோகயோ ரதிகாரபேதம் ஸூசிதமாகை யாலே ஜ்ஞாநயோக வையர்த்யசோத்யம் பரிஹ்ருதம். நன்றென நாடிய - நல்ல தென்று தேடப்பட்ட, ஞானமும் - ஜ்ஞானயோகத்தையும், இங்கு நன்மையாவது ஆத்மாவலோகநத்துக் கந்தரங்கமா யிருக்கை. கர்மயோகம் ஸுகரோபாயமாகிலும் விஷயவ்யா பாரமிச்ரமா யிருக்கையால் அங்கனல்லாத ஜ்ஞாநயோகமே யாத்மாவ லோகனத்துக் கந்தரங்கொபாயமா யிருக்குமென்று கருத்து. நல்கும் - ஸ்நிஹ்யத் தாலே, உள்கண்ணுடையார் - அந்தர்த்ருஷ்டி யுடையவர்கள், ஆத்மஸ்வ ரூபஸ்ய பகவச்சேஷதை கரஸத்வாவ காஹிதயா ப்ரீதி ரூபாபன்னமான வாத்மாவ லோகந முடையவர்க ளென்றபடி. ஒன்றிய - ஏகீபூதராகப்பற்றின, நிரதிசய ப்ரிய மாகை யாலே நிரந்தரமாகப் பற்றின வென்றபடி. ஆகவித்தால் ஸாக்ஷாத் காரதுல்ய நிரதி சய ப்ரீதி ரூபாபன்ன நிரந்தர த்யாநரூபத்வம் சொன்னபடி. ததாச இதுவே மோ க்ஷஸாதநமென்று சாஸ்த்ரேஷு நிர்ணீதமாகையாலே கேவலஸ்துதி நமஸ்காராதி ரூபபக்தி மோக்ஷத்துக்கு ஸாக்ஷாதுபாய மன்றென்று கருத்து. பத்தியும் - பக்தியு மென்றபடி, ஒன்றுமிலா விரைவார்க்கு - இந்த கர்மயோகாதிக ளொன்றுமில்லாதவ ராய் த்வரிதருமா யிருக்கிறவர்க்கு, விரைவார் - த்வரிப்பார். கர்மயோகாத்ய ஸமர்த் தராய் அதாபி ஜந்மாந்தர விளம்பாஸஹருமா யிருப்பார் ப்ரபத்திக் கதிகாரிகள், தாத்ருச த்வராதிசய மில்லாதார் நாமஸங்கீர்த்தநாதிகளி லிழிவாரென்று கருத்து, இப்படி லகூபாயத்துக்கு அதிகாரிபேதம் கிடைக்கையால் குருபாய வையர்த்ய ப்ர

ஸங்க மில்லையென்று கருத்து. அன்று - இவர்கள் கோலினபோதே, அருளால் - கேவலக்ருபையாலே, பயன்தரும் - ஈச்வரன் பலன்தரும்படியான, ஆறும் - உபாயத்தையும், ப்ரபத்தியையு மென்றபடி. அறிந்தவர் - உக்தாகார விசிஷ்டங்களாகத் தெளிந்தவர், அந்தணர் - ப்ராம்மணர், வேதவித்துக்களென்றபடி. இப்படியறியாதே இதுக்கு விபரீதமாக வறிந்தவர்கள் அனேக ச்ருதி ஸ்ம்ருத் த்யர்த்தாபலாபம் பண்ணினவராய் முடிகையாலே வைதிக ரன்றென்று கருத்து. (கசு)

ப்ரபத்தி யோக்யாதிகாரத்தில் "ப்ரபத்திலகுதரோபாயமாகையாலே இதில் அதிகார ஸம்பாதனம் லகுதரமாகையாலும் வர்ணாச்ரமாதிநியமம் இல்லாமையாலும், இது ஸர்வாதிகார மென்று அருளிச்செய்து "ப்ரத்திக்கு ஜாத்யாதி நியம மில்லாமையாலே ஸர்வாதிகாரத்வம் ஸித்த" மென்றிப்படி ஸர்வஜாதியர்க்கும் அதிகாரமும் துல்யமாகச் சொன்னது கூடுமோ; ஸர்வாதிகாரத்வ முண்டானாலும் ப்ராஹ்மணாதிக ளுத்க்ருஷ்ட ராகையாலும் சூத்ராதிகள் அபக்ருஷ்ட ராகையாலும் அதிகாரத்தில் கௌணமுக்யதாரதம்ய மில்லையோ; இவ்வம்சத்தில் ஸம்ப்ரதாயந்தானுண்டோ, வென்கிற சங்கையை பரிஹரியாநின்றுகொண்டு அதிகாரார்த்தத்னத பாட்டாலும் ஸங்க்ரஹிக்கிறார். அந்தணரித்யாதி.

கள-மூ.—அந்தணரந்திய ரெல்லையினின்ற வனைத்துலகும்
நொந்தவரே முதலாக நுடங்கிய நன்னியராய்
வந்தடை யும்வகை வன்றக வேந்திவருந்தியநம்
அந்தமி லாதியை யன்பரறிந்தறி வித்தனரே. (கள)

அந்தணர் - ப்ராஹ்மணர், அந்தியர் - அந்த்யர், ச்வபாக ரென்றபடி. எல்லையில் நின்ற - இவ்வுபயாவதி மத்யத்தில் நின்ற, அனைத்துலகும் - ஸர்வலோகங்களும், ஸர்வஜநங்களு மென்றபடி. நொந்தவரே முதலாக - ஸம்ஸாரார்த்தரே ப்ரதாநமாக, அவதாரணத்தால் ஜாத்யாதிகளை வ்யவச்சேதிக்கிறது. ஆர்த்தத்வ த்ருப்தத்வங்களையிட்டு பல விளம்பாவிளம்பங்கள் வருகையாலே தத்ப்ரயுக்தமான வதிகாரத்தில் கௌணமுக்ய தாரதம்ய மத்தனை போக்கி ஜாத்யாதி ப்ரயுக்தமாக வதில்லை யென்று கருத்து. நுடங்கி - அகிஞ்சநராய், நுடங்குகை - க்ருசராகை. அநன்னியராய் - அந்யரஹிதராய், அத்ர அந்யசப்தேந ப்ரயோஜநாந்தரம் சரண்யாந்தரஞ்ச விவக்ஷிதம். வந்து - உபாயாந்தர ப்ரயோஜநாந்தர சரண்யாந்தரேப்யஃ ப்ரத்யாவ்ருத்தரா யென்றபடி. வன் தகவு - வலியக்ருபையை, வலிமை - பலிஷ்டத்வம், மஹத்பிரப் யபராதைரப்ரகம்ப்யத்வ மென்றபடி. ஏந்தி - யாத்ருச்சிக ஸுக்ருதாதி வ்யாஜத்தைக்கொண்டு தரித்து என்றபடி. வருந்திய - வருந்துகை ப்ரயாஸப்படுகை. சேதநொஜ்ஜீவனரூப க்ருஷியில் ப்ரயாஸப் படுகின்ற, நம் மந்தமி லாதியை - நம்முடைய ஸ்வாமியாய் அனந்தனை ஜகத்காரணபூத னானவனை, இவ்விசேஷணங்க ளெல்லாம் சரண்யதைக் குபயுக்தங்களாகச் சொன்னபடி. அடையும்வகை - சரணம்புகும் ப்ரகாரத்தை, சரணம்புகலாம்படி யதிகாரிகளுக்குள்ள ப்ரகாரத்தை யென்றபடி. பரனை வரிக்கும் வகையென்று மேலதிகாரப் பாட்டில் சொல்லுகிறுப்போ லன்றிக்கே இப்பாட்டிலே யனைத்துலகு மென்றதிகாரிகளை ப்ரதானமாக நிர்தேசித்ததிறே. அன்பர் - ப்ரீதிமான்கள், குருவிஷயே பகவத்விஷயேச பக்திமான்களான வாசார்யர்க ளென்றபடி. அறிந்து அறிவித்தனரே, தாங்களு மாசார்யஸகாசாத் தெளிந்து நமக்கு முபதேசித்தார்க ளென்றபடி. (கள)

பரிகரவிபாகாதிகாரத்தில் ப்ரபத்தியின் பரிகரங்க ளிருக்கும்படியையும் அவைத்தின் உபயோக விசேஷத்தையும் மற்றும் ப்ரபித்ஸுவானவன் அறியவேண்டும்

விசேஷார்த்தங்களையும் அருளிச்செய்து சங்காபஞ்சக நிவாரகங்களான புருஷகார ஸம்பந்தாதிகளில் தெளிவு மதுக்கு விசேஷஸாமக்ரியான ஸதாசார்யகடாக்ஷ விசேஷமு மிவ்வதிகாரார்த்தங்களில் ஸாரதமங்க ளென்று காட்டாநின்றுகொண்டு இவ் வர்த்தங்களை தெளிவித்த வாசார்யர்கள் திறத்தில் க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் நித்ய கர்த்தவ்ய மென்கிற வபிப்ராயத்தாலே யந்தக்ருதஜ்ஞதாநு ஸந்தாநரூபமாக வொரு பாட்டருளிச்செய்யாநின்றுகொண்டு பரிகரவிபாகத்தையும் ஸங்க்ரஹேண ஸூசிப்பிக்கிறார். (அறிவித்தனரிதி).

கூச-மூ.—அறிவித்தன ரன்பரையம் பறையு முபாயமில்லாத்
துறவித்துனியிற் றுணையாம்பரனை வரிக்கும் வகை
உறவித்தனை யின்றியொத்தாரென நின்ற வும்பரைநாம்
பிறவித்துயர் செகுவீரென் றிருக்கும் பிழையறவே. (கஅ)

ஐயம் - ஸம்சயத்தை, பறையும் - சொல்லுவதான, ஜ்ஞாபிக்கும் ஸ்வபாவமான, உண்டாக்கு மதானஎன்றபடி. நம்மால் நிர்வஹிக்கப் போகாதோ வென்று ஸம்சயத்தை யுண்டாக்கும்படி துஷ்கரதமமான என்றுதாத்பர்யம். உபாயம் - பக்தி யோகாதிகள், இல்லாத் துறவி - இவை யில்லாமையாகிற தாரித்ரயம், ஆகிஞ்சந்ய மென்றபடி. துனியில் - அதடியாக வுண்டாகும் துக்கதசையில், துணையாம் - ஸஹாய மாகும் ஸ்வபாவனை, அபிமதத்தை நிர்வஹித்துக் கொடுக்கும் ஸ்வபாவனை என்ற படி. பரனை-ஸர்வோத்க்ருஷ்டனை, இங்கு பரசப்தத்தாலே பூர்வோக்த சங்கா பீஜபூ தாகார யோகித்வமும் துணையா மென்கிறவித்தாலே தந்நிவர்த்தகாகார யோகித்வமும் ஸூசிதமாகிறது. வரிக்கும்வகை - உபாயாந்தர ஸ்தாந நிவேசியாம்படி வரிக்கும் ப்ரகாரத்தை, பரத்வமாத்ரத்தைக் கண்டு அகன்றுபோகாதே புருஷகாரஸம்பந்தவிசேஷ விசிஷ்டதயா ஸௌலப்யாதிசயத்தைத் தெளிந்து மஹாவிச்வாஸ சாலிகளாய் அவனையே உபாயமாக வரிக்கும்படியை யென்றபடி. இதுக்கு அன்ப ரறிவித்தனர் என்கிறத்தோடே யந்வயம். உறவித்தனைமின்றி - பாந்தவ மீஷத்து மில்லாமல், சேஷசேஷிபாவாதி ஸம்பந்தங்களி லொன்றுமின்றிக்கே என்றபடி. ஒத்தாரெனநின்ற - ஸத்ருசரென்று சொல்லும்படி நின்ற, கர்மவச்யத்வாதிநா நமக்கு ஸஜாதீயரான என்றபடி. உம்பரை - தேவர்களை, ப்ரஹ்மருத்ராதிகளை யென்றபடி. நாம் - முமுக்ஷுக்களானநாம், பிறவித்துயர் - ஸம்ஸாரதுக்கத்தை, செகுவீரென்று- போக்குங்கோளென்று, பிழை - யாசிக்கையாகிற அநுசிதக்ருத்யம், இருக்கும் பிழை யென்கிற பாடத்திலு மிப்படியே தாத்பர்யம். அற - அற்றுப் போம்படி, அதுக்கு ப்ர ஸக்தியே யில்லாதே போம்படி யென்கை. அன்பர் - ஸ்நிக்தர், நம்பக்கல் அத்யந்த வத்ஸலரான வாசார்யர்க ளென்றபடி. அறிவித்தனர் - தெரியும்படி யுபதேசித் தனுக்ரஹித்தார்கள். ஆசார்யர்கள் புருஷகார ஸம்பந்தாதிகளாலே ஸௌலப்யத்தைத் தெளிவியாதபோது முமுக்ஷுக்களுக்கு ஸர்வேச்வரனுடைய பரத்வமாத்ரத்தைக் கண்டு அஞ்சி "ஸம்ஸாரார்ணவமக்நாநாம்" சங்கராத்ஜ்ஞாநமன்விச்சேத் இத்யாதிகளில் படியே தேவதாந்தரங்களை க்ஷிப்ரகாரித்வமடியாக ஜ்ஞாநவை சத்யாதிசய ப்ரதாநாதி த்வாரா ஸம்ஸார நிவர்த்தநம் பண்ணவேணுமென்று யாசிக்கும்படி ப்ரஸங்கிக்குமிறே யென்று கருத்து. இங்கு துணையா மென்கிறவிடத்திலே ஆநுகூல்ய ஸங்கல்பமும் ப்ராதிகூல்ய வர்ஜநமு மௌசித்யத்தாலே ஸூசிதமாகிறது. துறவித்துனி யென்கிற விடத்திலே கார்ப்பண்யம் சொல்லித் தாகிறது. மத்ததிறெண்டும் வரிக்கும்வகை யென்கிற விடத்திலே ஜ்ஞாபித மாகிறது. (கஅ)

ஸாங்கப்ர பதனுதி காரத்திலே, அங்கிஸ்வ ரூபத்தையும் ஸாங்கமாக அதை அனுஷ்டிக்கும் ப்ரகாரத்தையும் நிரூபித்து இப்படி நிரூபிதமான ஸாங்க ப்ரபத

நத்தினுடைய வநுஷ்டாநம் வ்யாஜமாத்ரம், சரண்யன் க்ருபையும் தத்ஸம்பந்தமும் ஸ்வரக்ஷணத்துக்கு ப்ரதான காரணம், அதிலு மாசார்ய ஸம்பந்தம் ப்ரதாநதம மென்று இவ்வநுஸந்தாநத்தோடே ப்ரபதநாநுஷ்டாநம் பெற்றவன் "ஃஹூ திரூதூ ஆுணாாவிநூ" அக்ருத்ரி மத்வச்சரணாரவிந்த என்கிற ச்லோக தாத்பர்யத்தின் படியே யுத்தர க்ஷணந் துடங்கி நிர்பரனுமாய் நிஸ்ஸம்சயனுமாய் நிர்பயனுமாய் ஹ்ருஷ்டமனுவு மாவனென்று காட்டுகைக்காக வந்த நிர்பரத்வாத்யநுஸந்தானம் பலிதமாய் ஸித்திக்கும்படியான காருண்யாதி ப்ராதாந்யா நுஸந்தான ரூபமாக வொரு பாட் டருளிச் செய்கிறார். (அறவே இத்யாதி.)

௬௫-மூ.—அறவே பரமென் றடைக்கலம் வைத்தன ரன்றுநம்மைப்
பெறவே கருதிப் பெருந்தகவுற்ற பிரானடிக்கீழ்
உறவே யிவனுயிர் காக்கின்ற வோருயி ருண்மையைநீ
மறவே லெனநம் மறைமுடி சூடிய மன்னவரே. (௬௫)

நம் - நம்முடையவர்களான, நமக் குஜ்ஜீவகர்களான என்றபடி. மறை முடி சூடிய - வேதங்களிலே மூர்த்தாபி ஷிக்தரான, மன்னவர் - ராஜர்கள், வேதார்த்த நிர்ணய துரந்தரர்களான பூர்வாசார்யர்க ளென்றபடி. இதுக்கு வைத்தனர் என்கிறத்தோடே அந்வயம். ஈச்வரன் ஸஹஜகாருண்யாதி சாலியாய் சேஷியாயிருக்க நாம்) "ஶஹஜூ தாஹுவொயநா:" கர்பபூதாஸ்த போதந: என்னும் கணக்கிலே ஸ்தநந்தய ப்ராயராயிருக்க தாய்முலைப்பாலுக்கு கூலி கொடுப்பாரைப் போலே ஆத்மஸமர்பணம் பண்ணுகையும் ரக்ஷிக்கவேணுமென் றபேக்ஷிக்கையு மென்றுப்போலே யொன்றை யனுஷ்டிப்பது ஸ்வரூபத்துக்குப் பொருந்துமோ என்றிப் புடைகளிலே பிறக்கும் சங்காவாரணார்த்தம் மறைமுடி சூடிய இத்யாத்யுக்தி:, பாஷ்யகாராதிகளான பூர்வாசார்யர்கள் மஹாவிச்வாஸபூர்வக ப்ரார்த்தநாத்ம நிக்ஷேபாதிகளை தாங்களும் அநுஷ்டித் திவைத்துக்கு சாஸ்த்ரங்களையும் மூதரிப்பித்துக் கொண்டு உபதேச பரம்பரையையும் நடத்திப் போருகையாலே ஸஹஜகாருண்ய சேஷித்வ ஸம்பந்தாதிக ளிருந்தாலும் கர்மவச்யனை யொரு வ்யாஜத்திலே மூட்டியல்லது ரக்ஷியாமையால் ஸ்தநந்தயனுக்கு முலையுண்கிற வ்யாபாரம்போலே யிவனுக்கு மொரு வ்யாஜம் வேணு மென்றும் அந்த ஸஹஜகாருண்யாதிகள் ப்ரதாநகாரணங்களா யிருக்கு மென்றும் ப்ரமாண ஸம்ப்ரதாய பலத்தாலே யங்கீகரிக்கவேணு மென்று கருத்து. உறவே - உறவினாலேதானே, சேஷத்வாதி ஸம்பந்தத்தாலே தானே, இவனுயிர் - இந்த ஜீவனுடைய ஸ்வரூபத்தை, காக்கின்ற - ரக்ஷியாநிற்கிற, சேஷத்வாதி ஸ்வரூப மழியாதபடி ஸ்வரூபப்ராப்தி புருஷார்த்த ப்ரதனாயிருக்கிற என்றபடி. ஓருயிர் - உலகங்களுக்கெல்லாம் ஓருயிர் என்கிறபடியே யத்விதீ யாத்மாவாயிருக்கிறவனுடைய, ஸர்வாந்தர்யாமியினுடைய என்றபடி. ஸம்பந்த க்ருபாதிகளோடொக்க ஸ்வாதந்த்ர்யமும் ப்ரதாந காரண மிதி த்யோதநார்த்த மிங்கு ஸர்வாந்தர்யாமி த்வோக்தி:. உண்மையை - ஸ்வபாவதை, ஸம்பந்தத்தினாலேதானே ரக்ஷண ப்ரவணனா யிருக்கையாகிற ஸ்வபாவத்தை யென்றபடி. இத்தால் ஸம்பந்தமே ரக்ஷணத்துக்கு ப்ரதாநகாரணம், ப்ரபத்திவ்யாஜமாத்ர மென்கிற தாகிறது. நீ மறவேலென - அகிஞ்சனனான நீ மறவாதே கொள்ளென்று சிக்ஷித்து, இதுக்கும் வைத்தனரென்கிறத்தோடே அந்வயம். மறவாதே யென்றவித்தால் இது அநுஷ்டானகாலத்திலே அவச்யாநுஸந்தேய மென்றதாகிறது. பூர்வத்ர நம்மை யென்றும் உத்தரத்ர நம்மென்றும் பஹுவசநமாயிருக்க இங்கு நீயென்றேகவசனமாக ப்ரயோகித்து அயுஷ்டகர்ணோபதேச்யத் வஜ்ஞாபந முகேந இவ்வர்த்தத்துக்கு அத்யந்தகோபநீயத்வ

வ்யஞ்ஜநார்த்தம். நம்முயிரென்று ப்ரயோகியாதே யிவனுயிரென்று முமுக்ஷு சமுமுக்ஷு ஸாதாரணமாக ஏகவசநமாக ப்ரயோகித்ததுவும் ஸம்பந்தாதேவ ரக்ஷ்யத்வே ஸர்வஜீவாநா மைகராச்ய வ்யஞ்ஜநார்த்தம்.

(அன்றித்யாதி) அன்று - பூர்வகாலத்திலே; அனுதியாக என்றபடி. நம்மை - பவார்ணவ நிமக்நரானநம்மை, பெறவே - தன்ப்ரயோஜநமாக வடைகைக்காகவே; இங்கவதாரணத்தால் லீலோபகரணமாக்குகை யவன் ஸ்வபாவமன்றென்று கருத்து. கருதி - அபிஸந்திபண்ணி, ஸஹஜஸௌஹார்தாதிகளாலே நம்மைப் பெறுகையி லூற்றமுடையவனு யிருந்து என்றபடி. பெருந்தகவு - பெரியக்ருபையை, உற்ற - அடைந்தவனை, யாத்ருச்சிக ஸுக்ருத ப்ரப்ருதி உபாயப்ரவ்ருத்தி பர்யந்தம் அஸ்மத்ரக்ஷணத்தில் க்ருவிபண்ணினவனை என்றபடி. இத்தால் ஸம்பந்தம் போலே காருண்யாதி குணங்களும் ப்ரதாந காரணங்கள் ப்ரபத்திவ் யாஜமாத்ர மென்கிறதாகிறது. பிரான் - உபகாரகனை வீச்வரனுடைய, அடிக்கீழ் - பாதமூலத்திலே, இதுக்கு அடைக்கலம் வைத்தன ரென்கிறதோடே அந்வயம், (அறவே) - இத்யாதி பரம் அறவே யென்று - பர மறுகைக்காகவே என்று, பர மறுந்தே போகவேணு மென்று உத்தேசித்தென்றபடி. அடைக்கலம் வைத்தனர் - நம்மை ரக்ஷ்யவஸ்துவாக ஸமர்ப்பித்தார்க ளென்றபடி. இங்கு பரமறவென்கிற வித்தாலே தான் நிர்பரனானபடியும் அறவேயென்கிற வவதாரணத்தாலே நிஸ்ஸம்சய னானபடியும், அடைக்கல மென்கிற வித்தாலே நிர்பயனானபடியும், அடிக்கீழென்கிறவித்தாலே ஹர்ஷமும் தோற்றுகிறது. வைத்தனரென்று ஆசார்யகர்த்ருத்வமாக நிர்தேசித்தது ஆசார்ய நிஷ்டரல்லாதாருக்கும் தங்களுடைய ப்ரபத்யனுஷ்டாநம் ஆசார்யாதீன மாகையாலே தத்கர்த்ருகமாக வேணுமென்று ஜ்ஞாபிக்கைக்காக. இத்தால் நம்முடைய ரக்ஷணத்துக்கு ஆசார்ய ஸம்பந்தமே ப்ரதாநதமமான காரணமென்று கருத்து. (கக)

க்ருதக் ருத்யாதி காரத்தில் "ஸாங்கமாய் ஸக்ருத் கர்த்தவ்யமான உபாயவிசேஷத்தை அனுஷ்டித்தவன் க்ருத க்ருத்யன் க்ருதார்த்த னென்று சாஸ்த்ரதந்நிஷ்டர்களால் கொண்டாடப்படுமவன்" என்று அருளிச்செய்து இப்படி யிவ்வதிகாரி முக்ததுல்யனுய் க்ருதக்ருத்யனென்றும் க்ருதார்த்தனென்றும் கொண்டாடப்பட்டிருக்கும் என்றது கூடுமோ; பக்தி யோகரூப முக்யோபாய நிஷ்டனை விட்டு கௌணோபாய நிஷ்டனை ஸ்துதிக்கிறது அஸங்கத மன்றோ, என்கிற சங்கையில் அசேதந பக்தி யோக நிஷ்டாபேக்ஷயா பக்தியோகத்துக்கும் பலப்ரதத்வேந ப்ரதாந பூதனுயும் அகிஞ்சன விஷயத்திலே பக்திகார்யகரதயா பக்திஸ்தாநா பந்நனுயும் அநுபந்திபர்யந்தம் ஸமதி மோக்ஷப்ரதனுமான சரண்யனே உபாயத்வேந பரிக்ரஹித்து தந்நிஷ்டனை வதிகாரிக்கு ஸ்துதி உபபன்னேயென்று ஸ்துதிப்ர யோகரூபமாக வொரு பாட்டு அருளிச்செய்கிருர். (மன்னவரிதி.)

கூகூ-மூ.—மன்னவர் விண்ணவர் வானே ரிறையொன்றும் வான்கருத்
தோ, ரன்னவர் வேள்வி யனைத்து முடித்தன ரன்புடையார்க்,
கென்ன வரந்தர வென்றுநம் மத்திகி ரித்திருமால்
முன்னம் வருந்தி யடைக்கலங் கொண்டநம் முக்கியரே. ()

அன்புடையார்க்கு - ஸ்வவிஷயத்தில் ப்ரேமமுடையார்க்கு, அன்பு - ப்ரேமம். என்னவ ரந்தரவென்று - அநுபந்தி பர்யந்தம் மோக்ஷப்ரதாநம் பண்ணியும் இன்னும் என்னவரம் தரக்கடவேனென்று அத்ருப்தனை, நம் - நம்முடைய, அத்திகிரி - "அம்மானுழிப் பிரானவ னெவ்விடத்தா" னென்று அகலாதே பரத்வத்யோதகௌ ந்நத்யசாலி ஹஸ்திகிரியிலே ஸௌலப்யத்தாலே ஸர்வர்க்கும் ஸேவா

(முன்கருவியித்யாதி) முன் - ப்ரதமதஃ. கருவியீரைந்தும் - கருவி - கரணங்கள், வாகாதி கரணங்கள் பத்தையும், மனத்தில்கூட்டி - ஸ்பஷ்டோர்த்தஃ, அவை அந்தஸமநஸ்கமான விந்த்ரியங்களை, முக்கியமாம் மருத்தில்-முகவர்த்தியான ப்ராணவாயுவிலே, சேர்த்து—,அதெல்லாம்-அவையெல்லாவற்றையும், நன்குணருமுயிரில் - நன்றாகஜ்ஞாநவானான வாத்மாவில், சேர்த்து—, அவ்வுயிரை யிதிசேஷ, ஐம்பூதத்தை நண்ணுவித்து - ஸூக்ஷ்மபூத பஞ்சகத்தையடைவித்து, தான் தன்பால்வைக்கும்நாதன்-இந்தபூதஸூக்ஷ்மாந்தமாகக் கூட்டினதிரளை யெல்லா மிளைப்பாற்றும்படி ஹார்தனை தானே தன்பக்கல் சேர்த்துக்கொள்ளுமவனான ஸ்வாமி, ஒன்பதுடன் வாசலிரண்டுவைத்தாய் - ஒன்பதுடனிரண்டு பதினொன்று, சீர்ஷண்ய ப்ராணத்வாரங்களேழும் மேட்ர பாயுக் களும் தசமியான நாபியும் ப்ரஹ்மரந்த்ரமும் கூட பதினொருவாசலையுடைத்தாய், உள்ளே யொருகோடிதுயர்விளைக்கும் - தனக்குள்ளேயிருக்கிற நாள் ஜீவனுக்கு அநந்த துஃகங்களை விளைக்குமதாய், உடம்பாயொன்றும் வன்சிறையின் - சரீரத்வேந ப்ராப்தமான வல்லிய சிறைக்கூட்டத்தின், தலைவாசல் திறந்து - ப்ரஹ்மரந்த்ரத்தைத்திறந்து கொடுத்து, நம்மை—,வானேறவழிப்படுத்த-பரமபதத்திற்குக்கொண்டுபோ மர்ச்சிராதி மார்கத்திலேபடுத்த, மனமுற்றானே - ஸங்கல்பித்தானென்கை. (கரு)

கசச-மூ.—தெருளார்பிரமபுரத்திறைசேர்ந்திடவந்தவர்தா
மருளால்பிரமபுரச்சிறை தீர்ந்தபின்வந்தெதிர்கொண்
டருளாலமரர்நடத்தவிம்மாயை கடந்தன்பின்
சுருளார்பவநரகச்சுழலாற்றின்றன்சூட்சியிலே. (கசு)

இனி அர்ச்சிராதி பருவத்தில் பாட்டு. (தெருளாரித்யாதி) அர்ச்சிராதி மார்கத்தால் பரமபதமேறினவர்க்கு புநராவ்ருத்தி யில்லையென்கிறது. தெருளார்பிரமபுறத்திறை - தெருள் - ஜ்ஞாநம், ஜ்ஞாநபரிபூர்ணனாய், ப்ரஹ்மபுரமென்று பேர்பெற்ற ஜீவசரீரத்திற்குக்கடவனான ஹார்தன், சேர்ந்திட - சேர்ந்துபுறப்பட, வந்தவர்தாம்-வைகுண்டப்ரஸ்தானார்த்தமாகப்புறப்பட்டவர்கள், அருளால் - ஹார்தனுடைய க்ருபையாலே, பிரமபுறச்சிறை - ப்ரஹ்மபுரமென்று பேர்பெற்ற ஸ்தூலசரீரமாகிற சிறையை, தீர்ந்தபின் - கழித்தவநந்தரம், வந்தெதிர்கொண்டு—,அமரர் - ஆதிவாஹிகதேவகணங்கள், அருளால்-அத்யாதரத்தாலெ, நடத்த - தந்தா மெல்லை யளவும்நடத்த, இம்மாயை-ப்ரக்ருதிமண்டலத்தை, கடந்ததன்பின் - அர்ச்சிராதிமார்கத்தாலே பரமபதத்துக்கேறப்போகப் பெற்றவர்களென்றபடி மீண்டும், பவநரகச் சுழலாற்றின் தன் சூழ்ச்சியிலே-பவநரகமாகிற சுழலாறு, சக்ராகாரேணச்சுழன்றுவரும்நதி, அதினுடைய, சூழ்ச்சி - சுழி, அதில், சுருளார் - சுழலார், புநঃ நிவர்த்தி யார்களென்கை. (கச)

கசரு-மூ—விழியல்லால் வேலில்லைவிண்ணின்மாதர் மேனியல்லால் வில்
வில்லை மீனவற்கு, மொழியல்லாவமுதில்லை யென்றுமுன்னாண்
முத்திவழி முனிந்தடைந்த மோகந்தீர்ந்தோம், கழியல்லால்
கடலில்லை யென்பார்போலக் காரியமே காரணமென்றுரைப்
பார் காட்டும், வழியல்லா வழியெல்லாங் கடந்தோமற்ற வா
னேறும் வழிகண்டோ மகிழ்ந்திட்டோமே. (கரு)

(விழியல்லாலித்யாதி) ஸம்ஸாரத்தைக் கடந்து அர்ச்சிராதிமார்க்கத்தைப் பெற்றநமக்கினி ஸந்தோஷமென்கிறது. முன்னாள்-பூர்வகாலமெல்லாம், நாம், முத்திவழி முனிந்து - மோக்ஷமார்க்கத்தை யநாதரித்து, மீனவற்கு - மகரத்வஜனான மன்மதனுக்கு, விண்ணின் மாதர்-தேவலோகவநிதைகள், இது ஸ்த்ரீஜநோபலக்ஷணம். அவர்களுடைய, விழியல்லால் - கடாக்ஷமொழிய, வேலில்லை - உத்தமமானவாயுதம் லோகத்திலில்லை, அந்த ஸ்த்ரீகளுடைய, மேனியல்லால் - தனுயஷ்டியொழிய, வில்லில்லை - ஜைத்ரமான தநுஸ்ஸில்லை, அவர்களுடைய, மொழியல்லால் அமுதில்லை - உக்தியொழிய வம்ருதசப்தவாச்யபதார்த்த மில்லை, மோக்ஷாதிகளு மிதுக்குப்பின்னென்று கருத்து. என்றுகொண்டு, அடைந்தமோகம் - அநாதியாகப்ராப்தமான வ்யாமோஹம், தீர்ந்தோம் - இப்போது தீரப்பெற்றோம். கிஞ்ச. கழியல்லால் கடலில்லை யென்பார்போல - ஸமுத்ரைகதேசமான நதிமுகத்தைக்கண்டு கழியொழிய வேறு ஸமுத்ரமில்லை யென்பார்போல, காரியமேகாரண மென்றுரைப்பார் - ஈச்வரகார்யமான ஜகத்தை யொழிய வேறு இதுக்குக்காரணமில்லை, ஜகத்தே காரணமான ப்ரஹ்மம் ஏதத்வ்யதி ரேகேணப்ரஹ்மபதார்த்த மில்லை யென்று ப்ரமாண விருத்தமாக ஜல்பிக்கு மீச்வராபலாபிகள், காட்டும்-பௌத்த சார்வாகாதிகள் ஸ்வசாஸ்த்ரத்தில் காட்டும், வழியல்லா வழியெல்லாம் - பாஹ்யகுத்ருஷ்டி மார்கங்களை யெல்லாம், கடந்தோம் - கடந்து புறப்படப் பெற்றோம், கிஞ்ச. மற்ற-தத்விலக்ஷணமான, வானேறும்வழி - அர்சிராதிமார்க்கத்தை, கண்டோம் - காணப் பெற்றோம், அதுவுமன்றியே, மகிழ்ந்திட்டோம். ஆதிவாஹிகரால் ஸத்கரிக்கப் பெற்று பண்டு ஸம்ஸாரத்தில் பட்ட துக்கங்களெல்லாம் மாறி யுகக்கவும் பெற்றோ மென்கை. (கரு)

கசசா-மூ—வன்மற்றுடன் மயல்பூண்டு மற்றோர்கதியாலினநா
ளென்பெற்றது பெறுந்தானமுமெத்தனை போதுளதாங்
துன்பற்றதன்றுணி வாற்றுயர்தீர்க்குந் துழாய்முடியா
னின்புற்றநல்வழியா லேறுநற்பத மெண்ணுவமே. (கசா)

இனி பரமபதாரோஹண பர்வத்தில் பாட்டு. (வன்பற்றித்யாதி) பண்டு ஸம்ஸாரத்தில் துக்கமே யொழிய வேறொரு பலமும் பெற்றதில்லை, இப்போது பகவத்க்ருபையாலே பரமபலமான பரமபதத்தைப் பெற்றவரானோ மென்கிறது. வன்பற்றுடன் - வலியபற்றுடன், தத்தத்வாஸனையோடேகூட, மயல் - ஸம்ஸாரப்ராந்தியை, பூண்டு - சுழலாதபடி பூண்டுகொண்டு, மற்றோர் கதியால் - இதரோபாயங்களால், உபாயாந்தரங்களாலே யென்றபடி, இனைநாள் - இத்தனைநாள், என்பெற்றது. எந்தஸ்தாநம் ஸாதிக்கப்பட்டது, ஒன்றுமில்லை யென்று கருத்து. பெறுந்தானமும் - உபாயாந்தரங்களால் ஸாதிக்கப்படுமதான ப்ரஹ்மபதாதிஸ்தானமும், எத்தனைபோதுளதாம் - எத்தனைகாலம் ஸ்திரமாயிருக்கும். ("ஆப்ரஹ்மபுவநால்லோகாঃ".) (ஆப்ரஹ்மபவநால்லோகாঃ.) என்கிறபடியே யத்யந்தாஸ்திரங்க ளென்றபடி. அதெல்லாமிருந்தொழிக இப்போது, துன்பற்றதன் துணிவால்-துன்பு - துக்கம், துக்கஸம்பந்தமற்ற தன்துணிவால்-தன்னையே உபாயோபேயமாகப் பற்றுமதாகிற, துணிவு-விச்வாஸம், பக்திப்ரபத்திரூப விசேஷஜ்ஞாநத்தாலே என்றபடி. துயர்தீர்க்குந்துழாய் முடியான் - ஸர்வதுக்கவிமோசநம் பண்ணுவிக்குமவனாய் திருத்துழாயே திருமுடியிலே யுடையவனான க்ருஷ்ணன்காட்டின, இன்புற்ற நல்வழியால்-அதிபோக்யமான வர்ச்சிராதிமார்க்கத்தாலே, ஏறுநற்பதம். ஏறப்படுமதாய் விலக்ஷணமான பரமபதத்தை, எண்ணும் - எண்ணக்கடவோ மென்கை. (கசு)

கசஎ-மு—பண்டையிரு வினையாற்றிற் படிந்துபாரங் காணாதேயொழுகிய
நாம் பாக்கியத்தால், வண்டமருமலர் மாதர்மின்னாய் மன்ன வை
சயந்தி மணிவில்லாய் விளங்கவான்சேர், கொண்டலருண் மழை
பொழியவந்த தொப்பாங் குளிர்ந்து தெளிந்தமுதாய விரசை
யாற்றைக், கண்டணுகிக்கருத்தாலே கடந்துமீளக் கரைகண்
டோர் கதியெல்லாங் கதித்திட்டோமே. (கஎ)

(பண்டையித்யாதி) அநாதிகாலம் ஸம்ஸாரத்திலுழன்ற சேதனன் அர்ச்சிராதிமார்க்கத்தாலே விரஜையைக்கிட்டி ஸங்கல்பத்தாலே கடந்து பரமபதமேறும் அவருடைய மார்கஸத்கார மெல்லாம் விண்ணப்பஞ்செய்யப் பெற்றோ மென்கிறார். பண்டையிருவினையாற்றில் - அநாதியான புண்யபாபரூபமான கர்மப்ரவாஹத்தில், படிந்து-பதிந்து, பாரங்காணாதே - கரைகாணமாட்டாதே, ஒழுகியநாம் - பெருகிப்போருகிற நாம், பாக்கியத்தால் - பாக்யஹேது பூதமான பகவத் கடாக்ஷத்தாலே யென்றபடி. வண்டமருமலர்மாதர் - வண்டுகள் மதுபானார்த்தமாக அமர்ந்திருக்குமதான தாமரைப்பூவை வாஸஸ்தான மாகவுடைய பிராட்டி, மின்னாய் மன்ன - காளமேகத்தின் நடுவே ஸ்திரமான மின்னல்போலே விளங்காநிற்க, வைசயந்தி மணிவில்லாய் விளங்க-வநமாலை மணிமயமான விந்த்ரதனுஸ்ஸுபோலே விளங்காநிற்க, வான்சேர் கொண்டல் - பரமாகாசஸ்தனான ஸ்ரீயঃபதியாகிற காளமேகம், அருள்மழைபொழிய - க்ருபாரூப வ்ருஷ்டியை வர்ஷிக்க, வந்த தொப்பாம் - வந்ததோ விரஜாநதி யென்னும்படி, குளிர்ந்து தெளிந்தமுதாய-ஸம்ஸாரதாபமாறும்படி சீதள நிர்மலாம்ருதரூபமாய் போருகிற, விரசையாற்றை - விரஜாநதியை, கண்டணுகி - தூரத்திலேகண்டு ஸமீபத்திலேகிட்டி, கருத்தாலே கடந்து - பகவத்ஸங்கல்பாயத்த ஸ்வஸங்கல்பத்தாலே யக்கரையேறி, மீளாக்கரை கண்டோர் - புநராவ்ருத்தியில்லாத பரமபதமாகிற வக்கரையைக்கண்டமுக்தரானவர்களுடைய, கதியெல்லாம் - மார்கஸத்கார மெல்லாம், கதித்திட்டோமே - விஸ்தாரமாகச் சொல்லப்பெற்றோ மென்கை. (கஎ)

கசஅ-மு—பூவளருந்திருமாது புணர்ந்தநம் புண்ணியனார்
தாவளமான தனித்திவஞ் சேர்ந்து தமருடனே
நாவளரும் பெருநான்மறை யோதியகீதமெல்லாப்
பாவளருந் தமிழ்ப்பல்லாண்டிசையுடன் பாடுவமே. (கஅ)

இனி பரிபூர்ணாநுபவ பர்வத்தில் பாட்டு. (பூவளருமித்யாதி) பரமபதத்தமருடனே ஸாமகாநத்தோடேகூட திருப்பல்லாண்டு பாடுமென்கிறது. பூவளருந்திருமா

தி - தாமரைப்பூவிலே வளரும்பிராட்டி, புணர்ந்த, ஆலிங்கிக்கப்பட்ட, நம்புண்ணியனார் - நம்முடையவஜ்ஞாதஸுக்ருதத்துக்கு மூலமான ஸர்வேச்வரனுக்கு, தாவளமான தனித்திவம் - நித்யவாஸஸ்தாநமாய் குளிர்ந்து அநுபமமான பரமபதம், அத்தைச்சேர்ந்து, தமருடனே - வைகுந்தத்தமரரும் முனிவருமான நித்யமுக்தர்களோடேகூட, நாவளரும் பெருநான்மறை - நாக்காலுச்சரிக்கபபட்டு வர்த்திப்பதான ச்லாக்யமான வுபநிஷத்பாகத்திலே, ஓதிய கீதமெல்லாம் - ஓதப்படுகிற ஸாமகாந விசேஷமெல்லாவற்றையும், பாவளருந்தமிழ் - பா-சந்தஸ்ஸின், வெண்பாமுதலானவைத்தில் வர்த்திக்குமதான தமிழ்வேதத்தி லோதப்படுகிற, பல்லாண்டிசையுடன் - பல்லாண்டென்றுபாடும் சிலமங்களாசாஸநத்தோடேகூட, பாடுவாம் - பாடுவோம், ஸ்வச்சந்த கைங்கர்ய வ்ருத்தி விசேஷத்தையும் பண்ணக்கடவோம். (கஅ)

கசகூ-மு.—அடலுரகமுண்டுமிழ்ந்த வருக்கன்போல வழுக்கடைந்துகழு
வியநற்றரளம்போலக், கடலொழுகிக்கரை சேர்ந்தகலமேபோ
லக் காட்டுத்தீகலந்தொழிந்தகளிறேபோல, மடல்கவருமயல்
கழிந்த மாதர்போல வன்சிறைபோய் மன்னர்பதம் பெற்றார்
போல, வுடன்முதலாவுயிர்மறைக்கு மாயைநீங்கியுயர்ந்தபத
மேறி யுணர்ந்தொன்றினோமே. (கசு)

(அடலுரகமித்யாதி) ஸம்ஸாரத்தைக்கழிந்து பரமபதத்தே சென்று பரமாநந்த நிர்பரனாகும்படியை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச்செய்கிறார். அடலுரகமுண்டுமிழ்ந்த வருக்கன்போல - அடல்-பராபிபவநஸாமர்த்யம், அத்தையுடைய, உரகம் - ராஹு, அத்தாலுண்டுமிழ்ந்த-க்ரஸ்தமுக்தனான, ஸூர்யன்போலவும், அழுக்கடைந்து கழுவியநற்றரளம்போல - பூர்வமழுக்கேறி யநந்தரம் கழுவப்பட்ட நல்லமுத்துப்போலவும், தரளம்முத்தும் நாயகரத்நமும். கடலொழுகிக்கரை சேர்ந்தகலமேபோல - பூர்வங் கடலில் சண்டவாதத்தால் விஷமஸ்தலத்தே சென்று பின்புகரைசேர்ந்த - கலம், ஓடம், அதுபோல்வும், காட்டுத்தீ கலந்தொழிந்தகளிறேபோல - பூர்வம் தாவாக்னியால் சூழப்பட்டு அநந்தரம் தத்விமுக்தமான வானைபோலவும், மடல்கவரும்மயல் கழிந்தமாதர்போல - நாயகவசீகரணார்த்தமாக பூர்வம் மடலெடுக்குமவஸ்தையாலே நொந்து பச்சாந் நாயகப்ராப்தியாலே யவ்வவஸ்த்தை கழியப்பெற்றயுவதிபோலவும், வன்சிறைபோய்மன்னர் பதம்பெற்றார் போலே - பூர்வம் அருஞ்சிறையிலே யிருந்த ராஜகுமாரனுக்கு அதுகழிந்து பைத்ருகமான ஸாம்ராஜ்யபதம் பெற்றவந்தராஜகுமாரன்போலவும், (உடல்முதலித்யாதி) தேஹேந்த்ரியமநঃ ப்ராணாதிரூபமாய், உயிர்மறைக்கும்மாயை-ஆத்மஸ்வரூபதிரோதானம்பண்ணும் மாயாசப்த்வாச்யமான ப்ரக்ருதி மண்டலத்தை, நீங்கி - கழித்து, உயர்ந்தபதமேறி - பரமபதத்தை யாரோஹித்து, உணர்ந்து - ஸர்வவிஷயஜ்ஞாநத்தைப்பெற்று, ஒன்றினோம் - பரமாத்மாவோடே "அவிபாகேந த்ருஷ்டத்வாத்" என்கிறபடி யேததப்ருதக்ஸித்தத்வேந தஸ்மிந்நந்தர்பூதமாம்படியைக் காணப்பெற்றோமென்கை. (கக)

கரு0-மு.—மண்ணுலகின்மயறீர்ந்து மனந்தளும்பி மன்னுதபயனிகழ்ந்து
மாலேயன்றிக், கண்ணிலதென்றஞ்சியவன்கழலேபூண்டுக் கடு
ஞ்சிறைபோய்க்கரையேறுங்கதியேசென்று, விண்ணுலகில்விய
ப்பெல்லாம் விளங்கக்கண்டு விண்ணவர்தங்குழாங்களுடன் வே
தம்பாடிப், பண்ணுலகிற்படியாதவிசையாற்பாடும் பல்லாண்
டே பல்லாண்டும் பாடுவோமே.

இது பரமபதஸோபாநபர்வாநுக்ரமணப்பாட்டு. (மண்ணுலகில் மயல்தீர்ந்து - பூலோகத்தில், மயல் - வ்யாமோகம், அதாவது - ஸ்வஸ்வரூபபரஸ்வரூபாந்யதாஜ்ஞாநம், அது தீருகையா[வ]து. ஆசார்யோபதிஷ்ட சாஸ்த்ர முகத்தாலே ஸ்வஸ்வரூபபரஸ்வரூப ஜ்ஞாநமாகி[யு]ற விவேகம் பெறுகை. மனந்தளும்பி - மனஸ்ஸு தத்தளித்து, அதாவது விவேகலாபாநந்தரம் தானநாதிகாலம் ஸம்ஸாரத்தில் பட்டபாட்டைக்கண்டு துஃகிக்கை, இது நிர்வேதமென்னப்படும். மன்னுதபயனிகழ்ந்து - அஸ்திரபல

ங்களைவிட்டு, அதாவது - நிர்வேதாநந்தரம் ஐச்வர்யாதி ப்ரயோஜநாந்தரங்களுடைய வல்பாஸ்திரத்வாதி தோஷ பராமர்சத்தாலே ஸவாஸநமாய் அவையைபரித்யஜிக்கையாகிற விரக்திபிறந்து, இகழ்கை - விடுகை. மாலேயன்றிக்கண்ணிலதென்றஞ்சி - ப்ரயோஜநாந்தர பரித்யாகாநந்தரம் பரமப்ரயோஜந மோக்ஷத்தைத்தருகைக்கு ஸமர்த்தன் ஸ்ரீ:பதி தானொழிய வேறொருவருமில்லையென்று பயப்பட்டு, அவன் கழலேபூண்டு - இப்படி பயப்பட்டவநந்தரம் ("ஹே..ஈ") (பக்த்யாபரமயாவாபிப்ரபத்யாவாமஹாமதே என்கிறபடியே ஸ்வாதிகாராநுரூபமான பக்திப்ரபத்திகளாலே அந்த ஸ்ரீய:பதியினுடைய திருவடிகளையே ஸமாச்ரயித்து, கடுஞ்சிறைபோய் - ஏததநந்தரம் ப்ராரப்தகர்மாதீன தேஹாவஸாநத்தில். அதிக்ரூர க்ரகமாகிற ஸ்தூலசரீரம் விட்டு, கரையேறுங் கதியே சென்று - ஸம்ஸாரத்துக்கக்கரையான பரமபதத்தை யேறும் வழியானவர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று, விண்ணுலகில் வியப்பெல்லாம் விளங்கக்கண்டு - அநந்தரம் பரமபதத்தில் யதத்யத்புதம், ததஃபரமமத்புத" மென்றுசொல்லப்பட்ட திவ்யோத்யாந மணிபர்வத ஸரித்தடாகங்களாகிய வத்யாச்சர்யங்களெல்லா மிங்கு தான் கத்யாதிகளில் அநுஸந்தித்தபடியே ஸ்பஷ்டமாகக் கண்டனுபவித்து, (விண்ணவரித்யாதி) ததநந்தரம் நித்யமுக்த்தர்களுடைய ப்ருந்தங்களோடேகூட, வேதம்பாடி-ஸாமகாநத்தைப்பண்ணி, பண்ணுலகில்படியாத பண்-குரிஞ்சிமுதலானராகவிசேஷம். உலகு-ஸமூகத்தைக்காட்டுகிறது. பண்ணுலகில்-குருஞ்சிபஞ்சமம் முதலானவத்தில், படியாத-அடங்காத - நாட்டில்காணும் ராககுலங்களில் காணப்படாத, விசையால் - அப்ராக்ருத தேவகாநவிசேஷங்களாலே பாடுமதான, பல்லாண்டே பல்லாண்டும் பாடுவோமே - ("...") (பஹுகாலம் மங்கலாநிதேஹியார்ஸ:) என்னுமர்த்தத்தையுடைய மங்களாசாஸநங்கள் நிர்ப்பயதேசத்தில் நிஸர்கநிர நிஷ்டனான ஸ்ரீய:பதிக்கு ஸ்வச்சந்தகைங்கர்யவிசேஷரூபேண பாடக்கடவோ மென்கை. (௨0)

கருக-மு—மாளாத வினையனைத்து மாளநாம்போய் வானேறிமலர்மகளாரன்பு பூணும், தோளாதமாமணிக்குத் தொண்டுபூண்டுத் தொழுதுகந்து தோத்திரங்கள் பாடியாடிக், கேளாதபழமறையின் கீதங்கேட்டுக் கிடையாத பேரின்பம் பெருகநாளும், மீளாத பேரடிமைக் கன்புபெற்றோம் மேதினியிலிருக்கின்றோம் விதியினாலே. (உக)

நிகமநத்தில் நாமிந்த பர்வத்திற் சொன்னவாத் மகுணவிசேஷங்களெல்லா மிங்கேயிருக்கச் செய்தேபெற்றோம், இத்தனையதிகார மிருந்தும் பூமியிலிருக்கின்றோம், இதுக்குஹேது பகவதிச்சையொழிய வேறொன்று மில்லை யென்கிறார். நாம்-ஆதியிலே பகவத்கடாக்ஷ பாத்ரமாய் ஸதாசார்யமுகத்தாலே பகவத்ஸமாச்ரயணம் பெற்ற நாம், மாளாத வினையனைத்தும் மாள-ப்ரபத்திவசீக்ருதனான வீச்வரன், ("...") (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்கிற கிரமத்திலே ("...") (ப்ராரப்தேதரபூர்வபாபமகிலம்) என்கிற ச்லோகத்தின்படியே ஸர்வபாபங்களையும் திரண்டுபோம்படி பண்ண, போய்-உத்க்ரமணாநந்தர மர்ச்சிராதிமார்க்கத்தாலே சென்று, வானேறி-விரசைக் கக்கரையில் பரமபதத்தையேறி, (மலர்மகளித்யாதி) மலர்மகளார் - பெரியபிராட்டியார், அன்புபூணும்-அவள் ஸ்நேகத்தாலே தத்ஸ்தநதடத்துக்காபரணத்வேந பூட்டிக்கொள்ளுமதான, தோளாதமாமணிக்கு - துளைக்கப்படாத மஹாநீலரத்நஸ்தாநீயனான ஸர்வேச்வரனுக்கு, தொண்டுபூண்டு-தத்தாஸ்யத்திலே அத்யந்தஸ்வாரஸ்யத்தாலே யாஸக்தனாய், கைங்கர்யந் தொடங்கினபடி. தொழுது-ப்ரதமத: அஞ்ஜலிபண்ணி, உகந்து - அவன் குணங்களை யனுஸந்தித்து, அதில் ஸந்துஷ்டனாய், தோத்திரங்கள்பாடி - அக்குணங்களுக்கு ப்ரதிபாதகமான ஸ்தோத்ரங்களை ப்ரீதிக்குப்போக்கு வீடாம்படி யாகப்பாடி, ஆடி - அவ்வளவில் பர்யாப்தி பிறவாமையாலே மொய்மாம்

பூம்பொழில் திருவாய்மொழிப்படியே அவஶராய் ஆடி, ஸஸம்ப்ரமந்ருத்தாதிகளைப் பண்ணி, கேளாதபழமறையின் கீதங்கேட்டு-ஸம்ஸாராவஸ்தையில் கேட்டறியாத அநாதி ஸாமவேதகீதங்களை நித்யமுக்தர்கள் திரளாகப்பாடக்கேட்டு, கிடையாதபேரின்பம் பெருக-லீலாவிபூதியில் கிடைக்கவரிதாய்நிரதிசயாநந்தம் புங்கானு புங்கமாக ப்ரவஹிக்க, நாளும் - காலதத்வமுள்ளதனையும், மீளாத-புநராவ்ருத்தியில்லாத, பேரடிமைக்கு - ஸர்வதேச ஸர்வகால ஸர்வாவஸ்தோசித ஸர்வவிதநித்ய நிரவத்யகைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு, அன்பு பெற்றோம் - ததனுரூப நிரவதிகபக்தியை யிங்கே யந்தர்யாமி ஸாக்ஷிகமாகப் பெற்றோம், மேதினியிலிருக்கின்றோம் - பரமபக்தி லாபாநந்தரம் முக்தியாகு மென்று சாஸ்த்ரம் சொல்லாநின்றது, அத்தைப்பெறும் நாமிந்தலீலாவிபூதியி லிருக்கின்றோம். இங்கே யிருக்க ஹேதுவன்றியிலே யிருக்க விங்கே யிருக்கின்றோம், இதென்ன வாச்சர்ய மென்று ஆச்சர்யப்படுகிறார். ஒருக்காலு மில்லாத வாச்சர்யோத்பத்தி கார்யமாவது ஆனபின்பு கார்யாத்காரண மனுமேய மாகையாலே இதுக்கோர் காரணமுண்டாக வேணும், அதுதான் விதியினாலே-இங்கு விதி பலாத் என்றது. விதிவாய்க்கின்று காப்பாராரென்கிற விடத்தில்போலே ஸர்வவிதமூலக்ருபையைக்காட்டுகிறது. அதாவது நம்மைக்கொண்டு லோகத்தை திருத்தப் பார்க்கிற பரமகாருணிகனான ஶ்ரிய:பதியினுடைய க்ருபையாலே மேதினியிலிருக்கின்றோமாமித்தனை யென்கிறது. (உ௬)

𑌶𑍍𑌰𑍀𑌕𑌾𑌨𑍍𑌤𑌪𑌦𑌸𑍋𑌪𑌾𑌨𑌗𑌾𑌥𑌾𑌨𑌾𑌮𑍇𑌵𑌮𑍀𑌦𑍃𑌶𑍀 ।
𑌕𑍌𑌶𑌿𑌕𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑍇𑌨 𑌕𑍃𑌤𑌾𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌯𑌤𑌾𑌮𑌿𑌤𑌿॥
𑌸𑍍𑌵𑍀𑌯𑌗𑌂𑌭𑍀𑌰𑌗𑌾𑌥𑌾𑌨𑌾𑌂 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌮𑌸𑌦𑍃𑌶𑍀𑌮𑌿𑌮𑌾𑌂 ।
𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌦𑍇𑌶𑌿𑌕𑍋𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑍇𑌶𑍍𑌵𑌰𑌃॥

ஶ்ரீகாந்தபதஸோபாந காதாநாமேவமீத்ருஶீ,
கௌஶிகஶ்ரீநிவாஸேந க்ருதாவ்யாக்யாயதாமதி.
ஸ்வீயகம்பீரகாதாநாம் வ்யாக்யாமஸத்ருஶீமிமாம்,
க்ஷந்துமர்ஹதிவேதாந்த தேஶிகோவேங்கடேச்வர:.

பரமபதஸோபாநம் முற்றிற்று.

வ்யாக்யாநமும் ஸம்பூர்ணம்.

ஶ்ரீமதேநிகமாந்த மஹாதேஶிகாயநம:

தேசிகன் திருவடிகளேசரணம்.

மு ற் றி ற் று.

ஸ்ரீ

பரமதபங்க வ்யாக்யானம்.

ஆஹ்வஸ்மாராஹ்ய: ஶ்ரீமதி வ்யாஸ்ய மாராதிம் நகா |
ஶ்ரீஸுவாஸதஹம் ப்ரபந்நாய: க்ருபேணவிஷ்ணோ: ||

ஸநாதி ஸ்ருத்யந்தநிஷ்டவிலக்ஷிதா மந்தவிபக்ஷ ப்ரமதோத்காரோஹம்
ஸம்ஸ்தவித்வதஸ்யாவிஷ்க்ருதயே | ஸதாநந்தாநாயாஶ்ச மார்க்கவிஷி
தேஜாக்ஷி பதிதப்ரபந்நவ்யாஸம் த்ருஷ்டிக்ருதஸம்ஸாரவல்லீ: ||

கஙஉ-மு,—எண்டளவம்புயத்து ளிலங்குமறு கோணமிசை
வண்பணிலந்திகிரிவளை வில் வளைவாய்முசலம்
திண்கையிலங்குசஞ்சீர் திகழுங்கதைசெங்கமலம்
எண்படையேந்திநின்ற னெழிலாழியிறையவனே. (க)

பாஹ்யகுத்ருஷ்டித்வயஸம்ஶயச்சேத நிவ்ருத்திபத்தகக்ஷா
ஸ்யவஸாயோத்தாநதோஷத்தாலே ஸம்ஸ்ஜநோஜ்ஜீவநப்ர வ்ருத்தராய்ஸ
ர்வாதிகாரவரதஹம்ஸாவ்ய ப்ரபந்நிர்மாணத்தாலே மீண்டு முற்பட “ஸ்வா
ஸ்ய தமஸ: பும்ஸாம் அநபாயப்ரபாந்வித: அஹீந்த்ர நகரே நித்யமுதி
தோயமஹஸ்கர:” (அபாஸ்யதுதம: பும்ஸாம் அநபாயப்ரபாந்வித: அஹீந்த்ரநக
ரேநித்ய முதிதோயமஹஸ்கர:) என்கிறச்லோகத்திலே அநபாயப்ரபாசப்திதலக்ஷ்மீ
வைசிஷ்ட்யத்தாலும் அஹீந்த்ரநகரேநித்யமுதித: என்கிறவிடத்திலே விவக்ஷிதமான
தேசகாலவிப்ரகர்ஷராஹித்யப்ரயுக்தாச்ரயணஸௌகர்யத்தாலும் ஸாபாயப்ரபாந்
விதனாய் தேசகாலவிப்ரகர்ஷப்ரயுக்தாச்ரயணதௌஷ்கர்யப்ரயுக்தனான ப்ரஸித்தாஹ
ஸ்கரனில் காட்டில் விலக்ஷணனான அஹஸ்கரன் ப்ரஸித்தாஹஸ்கரனாலே துர்நிரஸந
மான புருஷமாநஸதமஸ்ஸை நிரஸிக்கக்கடவனென்று மங்களத்தையாசரித்து அம்மு
கத்தாலே யிப்ரபந்தத்திற்கு தமச்சப்த ஸூசிதங்களானபரமதங்கள் நிரஸநீயதயாவிஷ
யங்கள் சிதசிதீச்வரதத்வத்ரயம் ப்ரதிபாத்ய தயாவிஷயம்-பூர்வோக்தக்ஷேபநிவ்ரு
த்திபூர்வகஸம்யக்ஞாநம் அவாந்தரபலம், அஹஸ்கரசப்தத்திலே “ஸக்ருத்திவாஹை
வாஸ்மை பவதி” (ஸக்ருத்திவாஹைவாஸ்யபவதி) என்கிறச்ருதியில் அபவர்க்கதசா
பிப்ராயமானதிவாசப்தத்திற்கு பர்யாயமானவஹச்சப்தத்தாலே ஸூசிதமானவபவர்க்
கம் பரமபலம், இவைத்தில் ருசித்தவரெல்லாரும் அதிகாரிகளென்று விஷயப்ரயோ
ஜநாதிகாரிகளைவ்யஞ்ஜிப்பித்து இனிமேல் தாமாசாஸித்தபடியேஸர்வேச்வரன்தமோ
நிராஸம்பண்ணும்போது அவனுக்குங்கூட அவ்யாஹதஸங்கல்பதாபாதகனாய் பஹிர
ந்தஸ்தமொருபஸர்வவிரோதி நிரஸநம்பண்ணஸஜ்யோதிஷ்கனான திருவாழியாழ்வா
னையனுஸந்திக்கிறார் எண்டளமித்யாதி.

எழில் - உஜ்வலனான, ஆழியிறையவன் - திருவாழியாழ்வானாகிற வீச்வரன்
ஆயுதேச்வரனான திருவாழியாழ்வானென்றபடி. இதுக்கு நின்றானென்கிறத்தோ
டே யந்வயம். திண் - த்ருடங்களான, கையில் - கைகளிலே, அதிதுர்ப்பராயுதபர
ணயோக்யங்களானகைகளிலே, கையிலென்றே கவசநம் ஜாத்யபிப்ராயம், இதுக்
கேந்தியென்கிறத்தோடே யந்வயம். வண் - ஸுந்தரமான. பணிலம் - சங்கம், திகிரி-
சக்ரம், வளை - வக்ரமான, வில் - தநுஸ்ஸு, வளைவாய் - வளைந்திருக்கிறவாயையுடை
ய பரசு, முசலம் - உலக்கை, அங்குசம் - மாவெட்டி, சீர்திகழும் - விரோதிபயங்கர
த்வாதி குணங்கள் ப்ரகாசிக்கும்படியான, கதை - கதை, செங்கமலம் - அருணதாம

ரஸம், எண்படை - இவைகளாகிற வெட்டாயுதங்களை, ஏந்தி - புஷ்பஸ்தபகங்களைப் போலேயநாயாஸேந தரித்துக்கொண்டு, எண்டளம் - எட்டுதளங்களையுடைய, அம்புயத்து - அம்புஜத்தினுடைய, உள் - மத்யத்திலே, இலங்கும் - விளங்காநிற்கிற, அறுகோணமிசை - ஷட்கோண யந்த்ரத்திலே, மிசையென்பது ஸப்தம்யர்த்தவாசகம், நின்றான் "ப்ரணதரக்ஷாயாம் விளம்பம் அஸஹன்னிவ ஸதா பஞ்சாயுதம் பிப்ரத் என்றபடியே ஸதாஸர்வவிரோதி நிரஸநோத்யுக்தனை ஸர்வஸ்வாமியைக்கண்டு விரோதி நிரஸநாகூதனை விவனும் தன்பரிகரங்களை ஸஜ்ஜீகரித்துக்கொண்டு நின்றானென்றபடி.

கநுரு-மூ.—விடுநெறியஞ்சிவிடத்துடக்கிய விதியரடைந்துதொழத்தழைத்தெழு விழியருள்தந்துவிலக்கடிக்களை விரகிலியம்பிவிலக்கிவைத்தனர், கொடுவினையென்பதனைத்தினைத்தினை கொணர்தவிழுந்தகுணத்தனைத்தனர் குருகையில்வந்துகொழுப்படக்கிய குலபதிதந்தகுறிப்பில்வைத்தனர், கடுநரகன்புகழற்றிமற்றொருகதிபெறுமன்பிலெமைப்பொருத்தனர் கமலையுகந்தகடற்கிடைக்கடல்கருணையுயர்ந்ததிடக்கொருக்கினர், படுமுதலன்றிவளர்த்தநற்கலை பலபலவொன்றவெமக்குரைத்தனர் பழமறையந்திநடைக்கிடைச்சுவர் பரமதமென்றதிடித்தபத்தரே. (உ)

முமுக்ஷுவுக்கு ப்ரமாணாதீநதத்வவிவேகத்தாலே தானே மோக்ஷம் ஸித்திக்கலாயிருக்க மதாந்தரபஞ்ஜநத்தால் ப்ரயோஜநமென்ன, ப்ரத்யுதவித்வத்விஜிகீஷாரூபாநாத்மகுண மூலமாகையாலே யுபசாந்திப்ரதாந பூர்வாசார்யாநுஷ்டாநத்தோடு விரோதியாதோ, கிஞ்ச சார்வாகாதி பாஹ்யமதபஞ்சனம் சக்யமானாலும்வேதாவலம்பி ஸாங்க்யாதி மதபஞ்சனம் சக்யமோ, அநந்தசாகங்ளான வேதங்கள் நாநாமதங்களுக்கு மிடங்கொடுக்குமவைகளாய் க்வசிதுபஸம்ஹார்து மசக்யங்களாகவிறேகாணப்படுகின்றனவென்கிற சங்கைகளைப்பரிஹரியாநின்றுகொண்டு ஸ்வாசார்யபரம்பராநுஸ்மரணரூபமங்களத்தையுமாசரியாநின்றுகொண்டு க்ருதஜ்ஞதாதிசயந்தோற்றவவர் செய்தவுபகாரபரம்பரையை யநுஸந்திக்கிறார் விடுநெறியிதி.

இப்படியாக யாசார்யப்ராப்திஹேது ஆசார்யப்ராப்தி ஆசார்யகடாக்ஷலாபம் அதடியாகவந்ததத்வஜ்ஞாநவிரோதி பாபநிவ்ருத்தி ஆசார்யர்களுக்கு ஆசார்யகோபயுக்தகுணபௌஷ்கல்யம் அவர்களிடத்தில் நின்றும் தத்வஜ்ஞாநப்ராப்திவிஷயாந்தரவைத்ருஷ்ண்யம் பரமாத்மப்ராவண்யம் பகவத்ஸமாச்ரயணம் சீர்கலந்து சொல்நினைந்து போக்குகையாகிய வுத்தரக்ருத்யம் என்றிவ்வர்த்தங்களடைவே காணப்படுகின்றன. பழை - அபௌருஷேயதயா ப்ராசீநங்களான, மறையந்தி - வேதாந்தங்களுடைய, நடைக்கு - ஸரஸகதிக்கு, பரமதம் - பாஹ்யகுத்ருஷ்டி மதங்கள், இடைச்சுவர் - நடுவே ப்ரதிபந்தமாயிருக்கிற பித்தி, வேதாந்தவாக்யஜன் யஸ்வரஸார்த்தபோதக்ஷேபஹேதுக்களென்றபடி. என்று - இப்படி நினைத்து, அது - அந்த மதங்கள், இடித்த - பேதித்தவரான, பத்தர் - பகவத்ப்ரேமசாலிகளான நம்மாசார்யர்களென்றபடி, ஏகாரம்பாதபூரணார்த்தம், இப்படி மேலும் பாதாந்தங்களிலே கண்டுகொள்வது. இத்தால் தத்வஜ்ஞாநதார்ட்யாபாதகதயா பரமதபஞ்சநம் முமுக்ஷுவுக்கு அத்யந்தோபயுக்தமென்று மது தானும் விஜிகீஷாமூலமன்றிக்கே தத்வாத்யவஸாயஸம்ரக்ஷணேச்சா மூலகமாகப் பூர்வாசார்யர்களாலே யநுஷ்டிக்கப்படுகையாலே விரோதமில்லையென்றும் ஸூசிதமாய்த்து. பத்தரென்கிற பதத்துக்கு விலக்கிவைத்தனரித்யாதிகளாதி மேலுள்ளக்ரியைகளோடேயந்வயம். விடு - விடத்தக்கவையான, நெறி-மார்கங்களில் நின்றும், அஞ்சி-பயப்பட்டு, விடத்துடக்கிய - அவைகளைவிடவுத்யோகித்தவர்களான, த்யாஜ்யமென்று முபாதேயமென்று மிரண்டுண்டு, அவைத்தில் த்யாஜ்யத்தைவிடாதபோதநர்த்தம் வரும், உபாதேயத்தைப்பற்றாதபோது பலமில்லையாமென்று ஸாமாந்யேந நிச்சயித்து ஸொத்வேகராய்த்யாஜ்யோபாதேயங்களுடைய த்யாகோபாதாநங்களிலே வத்யச்சான வென்றபடி. இங்கு - த்யாஜ்யத்யாகம் சொ

ன்னது உபாதேயோபாதாநத்துக்கு முபலக்ஷணம். விதியர் - பாக்யசாலிகள், யாத்ரு ச்சிகாதி ஸுக்ருதவிசேஷசாலிகள், ஆகவிசேஷணவிசேஷ்யங்களால்-"𑌈𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌸𑍌𑌹𑌾𑌰𑍍𑌦𑌂 𑌯𑌦𑍃𑌚𑍍𑌛𑌾 𑌸𑍁𑌕𑍃𑌤𑌂 𑌤𑌥𑌾। 𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌃 𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑌮𑌦𑍍𑌵𑍇𑌷𑌮𑌾𑌭𑌿𑌮𑍁𑌖𑍍𑌯𑌂 𑌚 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑍈𑌃। 𑌸𑌂𑌭𑌾𑌷𑌣𑌂 𑌷𑌡𑍇𑌤𑌾𑌨𑌿 𑌹𑍍𑌯𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌿𑌹𑍇𑌤𑌵𑌃।" (ஈச்வரஸ்யசஸௌஹார்தம்யத்ருச்சாஸுக்ருதந்ததா விஷ்ணோःகடாக்ஷமத்வேஷமாபிமுக்யஞ்சஸாத்விகை:। ஸம்பாஷணம்ஷடேதாநிஹ்யாசார்யப்ராப்திஹேதவ: என்று-பரிகணிதமான வாசார்யப்ராப்திஹேதுஷட்கத்திலே யாபிமுக்யயாத்ருச்சிகஸுக்ருதங்கள்கண்டோக்தங்களாய் மற்றுள்ளநாலுமுபலக்ஷிதங்களாகின்றன. அடைந்து த்யாகோபாதாநயோகி த்யாஜ்யோபாதேயஸ்வரூபவிசேஷவிவேகஸித்யர்த்தமாகஸ மித்பாணிகளாய்வந்துகிட்டி, தொழ-𑌶𑌿𑌷𑍍𑌯𑌸𑍍𑌤𑍇𑌽𑌹𑌂 𑌶𑌾𑌧𑌿 𑌮𑌾𑌂 𑌤𑍍𑌵𑌾𑌂 𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌮𑍍" "சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம் பரபன்னம்" என்று ஸத்வோத்தராளாகிசரணம டையுங்காலத்திலே, தழைத்து - சாகோபசாகங்களாகவர்த்தித்து, எழு - எழும்பாநி ற்கிற, விழி - கடாக்ஷங்களாலே தோற்றிவைக்கப்பட்ட, அருள் - க்ருபையை, தந்து கொடுத்து, கருணாதரங்கிதகடாக்ஷங்களாலே விஷயீகரித்தென்றபடி. விலக்கு - பஸ ஹாநிக்கு, மூலங்களாகையாலே களையென்கிறஸஸ்யநாசகத்ருணவிசேஷங்கள்போ லேயிருக்கிறதுரிதங்களையென்றபடி. இயம்பி விரகில் விலக்கிவைத்தனரென்றவ யம். இயம்பி - சொல்லி, விரகில் - உபாயத்தாலே, தாள்கள் - தலையில் வணங்கியெ ன்கிறவிடத்தில்போலே த்ருதீயார்த்தே ஸப்தமி. விலக்கிவைத்தனர் - நிவர்த்திப்பித் தார்கள், தமோகுணவ்ருத்தித்வாராதத்வஜ்ஞாநபரிபந்திகளான வஸத்ஸஹவாஸதாம ஸாஹாரநிஷேவணாதிகளை நமக்கு ஹேயத்வேந விசதமாகவுபதேசித்து அவைகளைத் தவிரும்படிபண்ணினார்களென்றபடி. கொடு - க்ரூரங்களான, வினையென்பதனை - கர்மங்களென்று சொல்லப்பட்டவைகளை, தினைத்தனை-ஈஷத்தும், கொணர்தல்-கொ டுக்கையை, இகழ்ந்த - விட்டவையான, குணத்தனைத்தினர் - அனைத்துங்குணத்தன ரென்றந்வயம், ஸகலகுணங்களையுமுடையவர்கள் சிஷ்யஜநத்துக்குபாபகர்மாவகாசக் லேசங்கொடாதவைகளானஸ்காலித்யசாஸநாத்யாசார்ய கோபயுக்த நிகிலகுணங்க ளாலே பரிபூர்ணரென்றபடி. குருகையில் - ஸ்ரீகுருகாநகரத்திலே, வந்து - அவத ரித்து, கொழுப்பு - பாஹ்யகுத்ருஷ்டி கர்வத்தை, அடக்கிய - அடக்கினவரான, குலபதி - "ஆத்யஸ்யந: குலபதே:" என்கிறபடியே ப்ரபந்நஸந்தாநகூடஸ்தரான நம்மாழ்வாராலே, தந்த - தரப்பட்டதான, குறிப்பில் - ஸூக்ஷ்மாத்யவஸாயத் திலே, வைத்தனர் - ப்ரதிஷ்டிதராக்கினர், அகிலலோகோஜ்ஜீவநார்த்தமாக ஸ்ரீகுரு கையிலேயவதரித்து பொய்நின்ற ஞானந்துடங்கிய வாவற்று வீடு பெறுமளவாக நம் மாழ்வார் பரமதநிரஸந பூர்வகமாக நிஷ்கர்ஷித்தருளின தத்வஹித புருஷார்த்தங் களை நமக்கு ப்ரதிஷ்டிதமாம்படி யுபதேசித்தார்களென்றபடி. கடு - துஸ்ஸஹங்க ளான, நரகு - நரகங்களிலே, அன்பு - ப்ரேமத்தை, கழற்றி - போக்கி, துஸ்ஸஹ நரகப்ராபகாநு சிதவிஷயப்ராவண்யத்தை நிவர்த்திப்பித்தென்றபடி. மற்றொரு கெதி - நிரஸ்தாதிசயாஹ்லாதஸுகபாவைக லக்ஷணையாகையாலே கீழ்ச்சொன்னநர கங்களுக்கெதிர்த்தட்டாய் விலக்ஷணையான கதியை, மோக்ஷத்தை, பெறும் - லபிக் கைக்கீடான, அன்பில்-ப்ரேமத்திலே, ஸ்வரூபோசிதபுருஷார்த்த ப்ராபகபாகவதப் ராவண்யத்தாலே யென்றபடி. எமை-நம்மை, பொருத்தினர்-நிறுத்தினார்கள், கமலை - பிராட்டியாலே, உகந்த - உகக்கப்பட்டதான, கடல் - ஸமுத்ரத்திலே, கிடை - சய நத்தையுடையதான, கடல்-ஸமுத்ரத்தினுடைய, இதுக்கு திடரோடேயந்வயம். இங் குபிராட்டிக்கு ஜநகபவநப்ரீத்யாபஹ ஸுமதமான துக்தார்ணவத்திலேகண்வளர்கிறவெம் பெருமானைக்கடலாக வத்யவஸித்து நிகரணம்பண்ணினபடி. இதுதானும் ஸ்வரூப ரூபகுணவிபூத்யவச்சேதப்ரயுக்த பரத்வமூலக ப்ராப்யதாத்யோதநார்த்தம். கமலையுகந் தவித்யாதி விசேஷணத்தாலே யெம்பெருமானுக்கு ஸௌலப்யமூலமானபத்நீபார தந்த்ர்யம் சொன்னபடி. கருணை - க்ருபையாகிற, உயர்ந்த - உச்ரிதமான, திடர்க்கு- திடரிலே, ஸப்தம்யர்த்தேஷஷ்டி. திடர் - ஜலமத்யத்திலே விச்ரமார்த்தமானமேடு,

ஓதுக்கினர் - அநுகூலமாருதந்யாயத்தாலே சேர்த்தார்கள், லீலாரஸபரவசனானவெம்பெருமான் ஸம்ஸாரதந்த்ரவாஹியாகையாலே ஸம்ஸாரவிச்ரமப்ரதாநத்திலேயவனை ப்ரதாநீகரித்தும் லீலாபாரவச்யபரிபந்தியானகருணையைப்ரதாநீகரித்து மீச்வரனைக்கடலாகவும் கருணையைத் திடராகவும் நிர்தேசித்தது நம்மை பகவதிந்யஸ்தபரராக்கினரென்று வாக்யதாத்பர்யம். படு - பட்டுப்போனவைகளான, முதல் - அங்குரங்கள், அன்றி - இல்லாதபடி, ஒருலேசமுமுச்ஸன்னமாகாதபடி, வளர்த்த - வர்த்திதங்களான, ஈச்வரனாலும் மஹர்ஷிகளாலும் தத்ததவஸரங்களிலே ப்ரவர்திதங்களான பலபலநற்கலை யென்றந்வயம். பலபல - வேதததங்கேதிஹாஸ புராணந்யாய மீமாம்ஸாதர்மசாஸ்த்ரரூபேண நாநாவிதங்களான, நற்கலை - ஆப்த ப்ரவர்த்திதங்களாகையாலே. அப்ராமாண்யகந்தாநர்ஹங்களான வித்யாஸ்தாநங்கள், ஒன்ற - ஏகீபவிக்கும்படி, "𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍇𑌦𑌾 𑌯𑌤𑍍𑌪𑌦𑌮𑌾𑌮𑌨𑌨𑍍𑌤𑌿, 𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌹𑌮𑍇𑌵 𑌵𑍇𑌦𑍍𑌯𑌃 𑌵𑌚𑌸𑌾𑌂 𑌵𑌾𑌚𑍍𑌯𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌂. 𑌸𑌰𑍍𑌵𑌵𑌚𑌸𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾 𑌯𑌤𑍍𑌰 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑍀, 𑌏𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑍇 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃" (ஸர்வேவேதாயத்பதமாமநந்தி, வேதைச்சஸர்வைரஹமேவவேத்ய: வசஸாம்வாச்யமுத்தமம், ஸர்வவசஸாம்ப்ரதிஷ்டாயத்ர சாச்வதீ,) ஏதேஸர்வேவ்யாக்யாதா:, ஓதுவாரோத்தெல்லாமெவ்வுலகத்தெவ்வவையும் சாதுவாய்நின்புகழின் தகையல்லாப்பிறிதில்லை, சூ 𑌆𑌦𑍌 𑌵𑍇𑌦𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍁𑌪𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌸𑍇𑌤𑌿𑌹𑌾𑌸𑍈𑌃 𑌪𑍁𑌰𑌾𑌣𑍈𑌃 𑌨𑍍𑌯𑌾𑌯𑍈𑌸𑍍𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌚𑌾𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌪𑌰𑌿𑌪𑌰𑌿𑌕𑍍𑌷𑍀𑌯𑌤𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌭𑌾𑌗𑌃। 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑍋 𑌭𑌾𑌗𑌸𑍍𑌤𑍍𑌵𑌦𑍀𑌹𑌾𑌗𑍁𑌣𑌵𑌿𑌭𑌵𑌪𑌰𑌿𑌜𑍍𑌞𑌾𑌪𑌨𑍈𑌸𑍍𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌦𑌾𑌪𑍍𑌤𑍌 𑌵𑍇𑌦𑍍𑌯𑍋 𑌵𑍇𑌦𑍈𑌶𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑍈𑌰𑌹𑌮𑌿𑌤𑌿 𑌭𑌗𑌵𑌨𑍍 𑌸𑍍𑌵𑍇𑌨 𑌚 𑌵𑍍𑌯𑌾𑌸𑌕𑌰𑍍𑌤𑌾 (ஆதௌவேதா: ப்ரமாணம்ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை:புராணை:ந்யாயைஸ்ஸார்த்தம்த்வதர்ச்சாவிதிமுபரிபரிக்ஷீயதே பூர்வபாக:। ஊர்த்வோபாகஸ்த்வதீஹா குணவிபவபரிஜ்ஞாபனைஸ்த்வத்பதாப்தௌ வேத்யோவேதைச்சஸர்வைரஹமிதிபகவாந்ஸ்வேநசவ்யாசகர்த்த) இத்யாதிகளில் படியே சதுர்தசவித்யாஸ்தாநங்களும் பகவந்நாராயணவிஷயத்திலே யேறுமிடமுகஸ்வாரஸ்யத்தையனுபவிக்கும்படியென்றபடி. எமக்கு - உபதேசாத்தரிம்புத்வாக்ருதக்ருத்யரானநமக்கு, உரைத்தனர் - (𑌶𑍍𑌰𑍁𑌣𑍍𑌵𑌨𑍍𑌤𑌿 𑌗𑌾𑌯𑌨𑍍𑌤𑌿 𑌗𑍃𑌣𑌨𑍍𑌤𑌿 𑌸𑌾𑌧𑌵𑌃) ச்ருண்வந்தி காயந்தி க்ருணந்திஸாதவ: என்கிறபடியே யநுபவபரிவாஹமாக உபபாதித்தார்கள், இத்தால் வேதங்களாபாத ப்ரதீதிரஸிகனுக்கு பரஸ்பரவிருத்தநாநாமதாஸ்பதங்களாகத்தோற்றினவேயாகிலும் அவைகளை ஸம்யங்ந்யாயங்களாலே நிரூபித்துப்பார்க்கில்; (𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑍁 𑌚 𑌨𑍃𑌪𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌷𑍍𑌵𑍇𑌤𑍇𑌷𑍁 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌯𑌥𑌾𑌗𑌮𑌂 𑌯𑌥𑌾𑌨𑍍𑌯𑌾𑌯𑌂 𑌨𑌿𑌷𑍍𑌠𑌾 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌃 𑌪𑍍𑌰𑌭𑍁𑌃) (ஸர்வேஷுசந்ருபச்ரேஷ்டஜ்ஞாநேஷ்வேதேஷு த்ருச்யதே யதாகம்யதாந்யாயம் நிஷ்டாநாராயண: பர:) என்று - நிஷ்டா நிர்ணயாத்யாயத்திலே நிகமித்தபடியே பகவந்நாராயணைகநிஷ்டங்களாக முடிகையாலே பாஹ்யமதங்கள்போலே வேதாவலம்பிஸாங்க்யாதிமதங்களும் அஸமஞ்சஸங்களென்றதாய்த்து. (௨)

௬௰௪ ௫—பொருளொணாக்கும் பொருள்யாமறியோம் பொருளார்மறையில்
தாமுரைக்கின்றன தர்மேயறியுந் தம்முடையார்
ஆமுரைக்கு மிவையாய்ந்தெடுத்தாரண நூல்வழியே
நாமுரைக்கும் வகைநல்லருளேந்தி நவின்றனரே. (௩)

ஸர்வவித்யாஸ்தாநங்களுக்கும்நாராயணைகநிஷ்டத்வம் நகேவலம்ந்யாயஸித்தமன்றிக்கே யோகஸாக்ஷாத்கார ஸித்தமுமென்று பூர்வோக்தார்த்தத்தையே ஸ்கிரீகரியாநின்றுகொண்டு ஆசார்யோபகாராதிசயத்தை சத்யார்த்தமாக நம்முடைய பூர்வாசார்யதசைகளை யநுஸந்திக்கிறார். பொருளார்மறையிலென்கிறது பூர்வோத்தராத்தி பொருள் - அர்த்தங்களாலே, ஆர் - பூர்ணமான, தாத்பர்யவிஷயங்களன்றிக்கே யாபாததஃ ப்ரதீதங்களான விஷயங்களாயும் தாத்பர்யவிஷயங்களாயுமுள்ள வர்த்தங்களாலே பூர்ணமானவென்றபடி. மறையில் - ச்ருதியிலே, பொருளொணாக்கும் - பொருளென்று. பொருள் சபதத்தை யாவர்த்தித்தங் வயிப்பது, பொருள் - ஆபாதப்ரதீதியாலே

தோற்றி ஸம்யங்நிரூபண தசையில் தாத்பர்யவிஷயங்களன்றிக்கே யொழியும். உரைக்கும் பொருள் - ஸம்யங்நிரூபண தசையிலே தாத்பர்ய விஷயங்களாய் நின்றபரோபதேசயோக்யங்களான வர்த்தங்களையும், யாம் - ஸம்யங்நிரூபணக்ஷமஹ்ருதயரான நாம், அறியோம் - அறியமாட்டோம், பொருளார் மறையில் - பூர்வவதர்த்தஃ, தாம் - தங்களாலே, உரைக்கின்றன - சொல்லப்பட்ட வர்த்தங்களை, தாமே - தாங்கள் தாமே, அறியும் - ஸாக்ஷாத்கரிக்கலாம்படியான, தம்முடையார் - வாய்ப்பையுடையவர்கள். ஆகமநிரபேக்ஷமாகத் தாங்களே ஸாக்ஷாத்கரிக்கலாம்படியான யோகபரிபாகத்தையுடையவர்களென்றபடி. மயர்வறமதிநலமருளின ஜீயர்நாதமுநிஸ்வயோக மஹிமப்ரத்யக்ஷதத்வத்ரயஃ என்கிறபடியே. விதிதஸகலவேதததர்த்தராயுத் கடப்ரஸந்நபகவத்கடாக்ஷ லப்தஸ்வயோக மஹிமஸாக்ஷாத்க்ருதபராவரதத்வயாதாத்ம்யரான ஸ்ரீபராங்குசநாதமுநியாதிகளான நம்மாசார்யர்களென்று பலிதார்த்தம். இதுக்குநவின்றனரென்கிறத்தோடே அந்வயம். நல்லருள்-ஸமீசீநக்ருபையை, ஏந்தி-தரித்து, தாங்கள் ஸாக்ஷாத்கரித் துஜ்ஜீவிக்கமாத்ரமன்றிக்கேதத்வத்ருஷ்டி விகலரானநாமும்தத்வஜ்ஞராயுஜ்ஜீவிக்கும்படி ஸ்வார்த்தநிரபேக்ஷையான க்ருபையைப் பண்ணியென்றபடி. ஆய்ந்திடையுரைக்கலாமென்றெடுத்தன வென்றந்வயக்ரமம். ஆய்ந்து - ஸாராஸாரங்களை மீமாம்ஸையாலே சோதித்து, வேதார்த்தங்களைத் தாங்கள் ஸாக்ஷாத்கரித்தாரோ யாகிலும் பரபுத்தி ஸமாதாநார்த்தமாக ந்யாயங்களாலும் நிரூபித்தென்றபடி. இவை - யிவ்வர்த்தங்கள், உரைக்கும் - பரோபதேசத்துக்கு, ஆம் - யோக்யங்கள். என்று - இப்படி பார்த்து, எடுத்து - நிஷ்கர்ஷித்து, ஆரணநூல்-வேதஸூத்ரத்தினுடைய, வழியே - மார்க்கத்தாலே தானே, அவதாரணத்தால் மார்கஸ்கலநவ்யவச்சேதஃ. சாரீரகமீமாம் ஸாஸிக்ஷிதந்யாயமார்கம் தப்பாதென்றபடி. நாம் - ந்யாயாநபிஜ்ஞரான நாம் - உரைக்கும் வகை - பிறருக்குபதேசிக்கும்படி, ந்யாயாநபிஜ்ஞரான நாமவ்வர்த்தங்களை யறியுமளவன்றிக்கே அஸ்கலிதந்யாயமார்கராய் பரோபதேசமும் பண்ணும்படியாகவு மென்றபடி. நவின்றனர் - அருளிச் செய்தார்கள், நவில்கை - சொல்லுகை. (௫)

௧௫௫-மூ—சித்துமசித்து மிறையுமெனத் தெளிவுற்றுநின்ற
தத்துவம்மூன்றுந் தனித்தனிகாட்டுந் தனிமறையால்
முத்திவழிக்கிது மூலமெனத்துணி வார்களையும்
கத்திமயக்குங் கதகரைநாம் கடிகின்றனமே. (௬)

இனிமேல் பூர்வாதிகாரத்திலே ஸம்ஸாரநிவ்ருத்தி யாவதற்கு முற்படதத்வஜ்ஞாநம்ஸம்பாதநீயமென்று பக்ஷிப்தங்களான ஜ்ஞாதவ்யதத்வங்களை விசதமாக நிரூபிக்கத்துடங்கி யவைகளைந்யாயாநுக்ருஹீதாகமங்களாலேநிரூபித்தாலும்பரமதநிரஸநம்பண்ணதபோது வக்தவ்யார்த்தத்தைக்காட்டாதென்றுகொண்டு இவ்வதிகாராஸாதாரணமான சேதநாசேதநநிரூபணத்தையு மர்த்தாத்ப்ரதிஜ்ஞை பண்ணுகிறார்சித்துமிதி: சித்தும்-சேதநதத்வமும், அசித்தும், அசேதநதத்வமும், இறையும் - ஈச்வரதத்வமும். என - என்று சொல்லப்படுகிற, தத்துவம்மூன்றும் - தத்வத்ரயத்தையும், தனித்தனி, ப்ருதக் ப்ருதக்காக, பரஸ்பரவிலக்ஷண ஸ்வபாவமாக, காட்டும் - காட்டாநிற்கிற, தனி - அத்விதீயமான, ப்ரமாண சிகாமணியான, மறையால் - ஸ்ருதியாலே "𑌕𑍍𑌷𑌰𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑌮𑍃𑌤𑌾𑌕𑍍𑌷𑌰𑌂 𑌹𑌰𑌃 𑌕𑍍𑌷𑌰𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌾𑌵𑍀𑌶𑌤𑍇 𑌦𑍇𑌵 𑌏𑌕𑌃" (க்ஷரம்ப்ரதாநமம்ருதாக்ஷரம்ஹரஃ க்ஷராத்மாநாவீசதேதேவஏகஃ) இத்யாதி ஸ்ருதிகளாலேயென்றபடி. தெளிவு - வைசத்யத்தை, உற்று - அடைந்து, நின்ற - ஸ்திரரான, இதுக்குத் துணிவார்களையும் என்றத்தோடே அந்வயம். இது - இந்த தத்வத்ரய வைசத்யம், முத்தி வழிக்கு - மோக்ஷமார்கத்துக்கு, மூலம் - ஹேது, என - என்று, துணிவார்களையும் - த்ருடாத்யவஸாயசாலிகளையும், "𑌭𑍋𑌕𑍍𑌤𑌾 𑌭𑍋𑌗𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑍇𑌰𑌿𑌤𑌾𑌰𑌂 𑌚 𑌮𑌤𑍍𑌵𑌾 - 𑌜𑍁𑌷𑍍𑌟𑌸𑍍𑌤𑌤𑌸𑍍𑌤𑍇𑌨𑌾𑌮𑍃𑌤𑌤𑍍𑌵𑌮𑍇𑌤𑌿" போக்தாபோக்யம்ப்ரேரிதாரஞ்சமத்வா - ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி; இத்யாதிகளில்படியே தத்வத்ரயவிவேகமே பகவத்ப்ரஸாதஜநகந்யா ஸோபாஸநாத்மக மோக்ஷோபாயமென்று அத்யவ

ஸித் திருப்பார்களை யென்றபடி. துணிவார்களையு மென்கிற வித்தாலே கிம்புநர்மந்தவிவேகரையென்று ஸூசிதம். கத்தி-தர்க்கங்களைப்ரலபித்து,மயக்கும்-மோஹிப்பிக்குமவரான, கதகரை - கதகரை, நாம் - தயாசீல தேசிகோபதேசத்தாலே ப்ருஹஸ்பதிஸஹஸ்ரேணாபி அக்ஷோப்யதத்வாத்யவ ஸாயயுக்தரானநாம், கடிகின்றனம் - அநாதர: பரிஹரித்தோம். (ச)

கநிசு-மூ—முத்தில்வடங்களென்ன முகுந்தன்பூண்ட மூவகையும்
சித்திலருஞ்சுருதி செவ்வைமாறிய சிந்தைகளால்
பத்திலிரெண்டு மெய்க்கப்பகட்டும் பரவாதியர்தம்
கத்தில்விழுந்தடைந்த வழுக்கின்று கழற்றினமே. (ரு)

ஸவாதிகாரத்தாலே சேதநதத்வத்தை விசதமாகநிரூபித்து அதினுடையவஸாதாரண கார்யங்களை ஸங்க்ரஹியா நின்றுகொண்டு இவ்வாகாரங்களிந்நா நாசாஸ்த்ரங்களாலும் ஸ்வாநுபவத்தாலும் தொற்று தொழிந்ததுக்கு ஹேதுவைக் காட்டுகிறார் முத்திலிதி. முத்தில் - முக்தாபலங்களுடைய, ஷஷ்ட்யர்த்தே ஸப்தமீ. வடங்களென்ன ஸரங்களென்னும்படியான, முகுந்தன் - முகுந்தனாலே, பூண்ட - பூஷணத்வேந தரிக்கப்பட்டதான, மூவகையாம் - பத்தமுக்தநித்ய பேதேநத்ரிவிதமான, சித்தில் - சேதநதத்வத்திலே, ஸ்வதோபஹதபாப்மாவாய் விபூதித்வயகபளீகாரக்ஷமப்ரகாசகுணரு நிரதிசயாநந்த ஸ்வரூபமாகையாலே ஸ்வச்சந்தஸ்வரூப விஸ்ருத்வரப்ரபாந்விதமா போக்யமுக்தாஸரங்கள்போலே யிருந்துவைத்து அஸ்த்ரபூஷணாத்யா யோச்சித்யாஸ்வாதிஷ்டான தேவதாபூதகௌஸ்துபத்வாராபகவத்தார்யமான சேதநவர்க்கத்திலே யென்று வாக்யார்த்தம். முக்தாபலஸாம்யத்யோதித நிர்விகாரத்வமைநத்யாதிகளாலும் முகுந்தபூஷணத்வஸ்போரித பகவச்சேஷத்வதார்யத்வாதிகளாலும் க்ரமேண சேதநாப்யாம் வ்யாவ்ருத்தி:. சித்திலென்கிறபதத்துக்குஎய்க்கவென்கிற பதத்தோடே யந்வயம். அரும்-துரவபோதைகளான, சுருதி - ச்ருதிகளுடைய, செவ்வை - ஆர்ஜவத்தை, மாறிய - கெடுக்குமவைகளான, சிந்தைகளால் - சிந்தைகளால், குதர்க்கங்களாலே, இதுக்குப்பகட்டு மென்கிறத்தோடே யந்வயம். பற்றில் - தங்கள் மதங்களைப் பரிக்ரஹித்தால், இரண்டும்-ஸுகதுக்காபாவாத்மக புருஷார்த்தத்வயத்தையும், யத்வா, ஐஹிகாமுஷ்மிகரூப புருஷார்த்தத்வயத்தையும், எய்க்க - இழக்கும்படி, பகட்டும் - மயக்குமவரான, வைதிகரும் பாஹ்யகுத்ருஷ்டி மதங்களைப்பற்றி புருஷார்த்தமிழந்து மயங்கும் படிகலக்குமவரான வென்றபடி. பரவாதியர்தம் - பரவாதிகளுடைய, தம்மென்று ஸ்வார்த்தேநுப்ரயோகம். கத்தில் - ஜல்பத்தில், விழுந்து - அகப்பட்டு. அவர்கள் ஜல்பத்தை விஸ்வஸித்தென்றபடி. அடைந்த - அதனாலெப்ராப்தமான, அழுக்கு-மாலிந்யத்தை, இன்று - ஆசார்யகடாக்ஷம் பெற்றவின்று, கழற்றினம் - அலம்பினோம், லோகத்திலெஸ்வச்சந்தமாய் ராஜாலங்காரார்ஹமான முக்தாபலம் பங்கத்திலெ விழுந்தொளியழிந்து கிடந்தாப்போலெடுத்தலம்புகையு சிதமிறே. இத்தால் துர்மதமூலகதேஹாத்மஸ்வதந்த்ராத்ம வாஸநாதிகளாலெயிந்நாள் சேதநத்வயாதாத்ம்யம் ஸ்புரியாதொழிந்த தென்றதாய்த்து. (சு)

கநிஎ-மூ—நாக்கியலும்வகை நம்மையளித்தவர் நல்லருளால்
பாக்கியமேந்திப் பரனடியார்திறம் பார்த்ததற்பின்
தாக்கியர்தங்கள் தலைமிசைதாக்கித் தனிமறைதான்
போக்கியமென்றதனில் பொய்மதங்களைப் போக்குவமே. (எ)

இப்படி சேதநதத்வத்தை நிரூபித்தவாறேபிற்படவ சேதநிரூபண மஸங்கதமன்றோ. ஈக்ஷத்யாநந்தமயாதி காரணாவதாரக்ரமத்தாலெ ப்ரத்யக்ஷாதிப்ரமாண ஸம்ப்ரதிபத்தி சாலியான வசேதநதத்வமிறெ ப்ரதமநிரூபணீயமென்று பிறக்கும் சங்கையைப் பரிஹரியா நின்றுகொண்டு அசேதநநிரூபணத்தைச் சொல்லுகிறார் நாக்கியலுமிதி. நம்மை - பசுப்ராயரான நம்மை, நாக்கு - ஜிஹ்வையானது, இயலும் வகை - சலிக்கும்படி, வ்யவஹரிக்கும்படி, அளித்தவர் - ரக்ஷித்தவர்களுடைய, நல்லருளால் - ஸமீசீனக்ருபையாலே, பாக்கியம் - பாக்யத்தை, ஏந்தி - தரித்து, "ஸாஹி ஸ்ரீர

தாஸதாம்'' (ஸாஹி ஸ்ரீரம்ருதாஸதாம்) என்கிற ஸம்யக்ஜ்ஞாந ஸம்ருத்தியைப் பெற்றென்றபடி. பரன் - ஸர்வஸ்மாத்பரனான வீச்வரனுக்கு, அடியார் - தாஸபூதரான ஜீவர்களுக்கு ''வபுராதிஷு யோபி கோபி வா - குணதோஸாநியதாதாவிதஃ'' (வபுராதிஷு யோபிகோபிவா - குணதோஸாநியதாதாவிதஃ.) என்று நாதரணீயங்களானசேதநத்வாத்யாகாரங்களைகாட்டில் ''ததஹந்தவபாதபத்மயோரஹமத்யைவமயா ஸமர்பிதஃ'' (ததஹந்தவபாதபத்மயோரஹமத்யைவமயா ஸமர்பிதஃ.) என்று ஆதரணீயதமமான பகவத்தாஸ்யத்தினுடைய ப்ராதாந்யம் தோற்றுகைக்காகப் பரனடியாரென்று நிர்தேசித்தது. திறம் - ப்ரகாசத்தை, ஜ்ஞாநாநந்தஸ்வரூபத்வாதியஸாதாரணாகாரங்களை, பார்த்ததற்பின் - பரீக்ஷித்தபின்பு, சேதந நிரூபணாநந்தரம் தாக்கியர் தங்கள் - தார்க்கிகருடைய, தலைமிசை - சிரஸ்ஸுக்களிலே, தாக்கி - இடித்து, சுஷ்கோபந்யாஸ சிக்ஷாபடிமகடரேடத்வைரி வித்வத்கரோடி குட்டாகக்ரீடவாமபாதராய்க் கொண்டென்றபடி. இதுக்குப் போக்குவமென்கிறத்தோடந்வயம். தனி - அத்விதீயமான, மறைதான் - ஸ்ருதியிலேதானே, போக்கியமென்றதனில் - போக்யமென்று சொல்லப்பட்ட வசேதநதத்வத்திலே, பொய் மதங்களை - மித்யா மதங்களை, ''போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா'' (போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்சமத்வா.) என்கிற ஸ்ருதியிலே போக்யமென்று சொல்லப்பட்ட சப்தத்தாலே விபஜிக்கப்பட்ட வசேதநதத்வத்திலே குதர்கமூலமதங்களை யென்றபடி. போக்குவம் - நிரஸிக்கிறோம். நாக்கு ப்ரவ்ருத்திக்ஷமமானபோது போக்யாஸ்வாதநத்திலேயிறே ப்ரவர்த்திப்பது. இத்தால் ஸம்ப்ரதிபத்திக்ரமத்தாலே அசேதநநிரூபண ப்ராதம்யௌசித்யே பி ஸ்ருதியில் விபாகக்ரமத்தாலே யிக்ரமமேமிகவுமுசிதமாய்த்து. (சூ)

கந்அ-மூ—தீவகைமாற்றியன்றோர் தேரிலாரணம் பாடியநந்
தேவகிசீர்மகனார் திறம்பாவருள் சூடியநாம்
மூவகையாமறியாத தத்துவத்தில் முகமறிவார்
நாவகையேநடத்தும் நடைபார்த்து நடந்தனமே. (எ)

இனியிந்த வசேதநநிரூபணத்தை தத்வவித் ஸம்ப்ரதாய ஸித்தமென்று நிகமிக்கிறார் தீவகையிதி. தீவகை - க்ரூரப்ரகாரங்களை, தேஹாத்மஸ்வாதந்த்ர்யாத்மப்ரமதத்கார்யங்களை, மாற்றி - நசிப்பித்து, நசிப்பியாநின்று கொண்டென்றபடி. அன்று - பாரதஸமரஸந்நாஹத்திலே, ஓர்தேரில் - அத்விதீயமானரதத்திலே, ''யத்ர யோகேச்வரஃ க்ருஷ்ணோ யத்ர பார்த்தோ தநுர்தரஃ தத்ர ஸ்ரீஃ'' (யத்ரயோகேச்வரஃ க்ருஷ்ணோயத்ர பார்த்தோ தநுர்தரஃ தத்ர ஸ்ரீஃ) என்கிறபடியே ஸேநாமத்யத்திலே மஹாரதாதிஷ்டிதர தாந்தரங்களில் காட்டில் வைலக்ஷண்யம் தோற்றும்படி யிருந்த வர்ஜுநரதத்திலே யென்றபடி. ஆரணம்பாடிய - உபநிஷத்துக்களை காநம்பண்ணினவரான ஸ்ரீகீதோபதேஷ்டாவான, நம் - நம்முடைய ஸ்வாமியான, தேவகி - தேவகியுடைய, சீர்மகனார் - கல்யாணகுணபூர்ணரான, மகனென்று பகுவசநோக்திகீதோபநிஷத்துபதேஶநிபந்தனம். ''ததோகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்ப்பூதம்'' (ததோகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்ப்பூதம்.) என்கிறபடியே யகிலலோகஜ்ஞாநப்ரதாநார்த்தமாகவந்து தேவகீஜடரத்திலே யவதரித்துத் தன்னுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதிகளை ப்ரகாசிப்பித்து அர்சுனனொருவனை வ்யாஜீகரித்து அத்யாத்ம சாஸ்த்ரங்களை யுபதேசித்த கீதாசார்யனுயென்றபடி. திறம்பா - சலியாததான, அருள் - க்ருபயை, சூடிய - புஷ்பமாலையைப்போலே யலங்காரமாக தரித்தவர்களான, நாம் - ஒருக்காலுமாஶ்ரிதரைக் கைவிடாத க்ருஷ்ண க்ருபையாலே விஷயீக்ருதரான நாமென்றபடி. ஸ்ரீகீதாவசநங்களாலே விவேகித்ததத்வத்ரயரான நாமென்று கட்டார்த்தம். மூவகையாம் - த்ரிகுணசுத்தஸத்வபேதேநத்ரிப்ரகாரமான, அறியாத - அறிவில்லாத, தத்துவத்தில் - தத்வத்திலே, அசேதநதத்வத்திலே, த்ரிகுணத்ரவ்யத்தினுடைய சதுர்விம்சதி பேதங்களை யுபநிஷத்துக்களாலே நிரூபித்தவாசார்யர்களாலே யென்றபடி.

இங்கு த்ரிகுணவிகாரங்களை முக்யங்களென்றது இவைகளில் அவாந்தர பேதங்களென்று த்யோதநார்த்தம் நாவகையே யென்கிற பதத்தையுத்கர்ஷித்து அர்த்தக்ரமத்தாலே நடத்தினே மென்கிறத்தோடே யந்வயிப்பது. நடத்தும் - நடத்தப்பட்டதான, நடை - கதியை, அவர்களாலே ப்ரவர்த்தித ஸித்தாந்தத்தை யென்றபடி. பார்த்து - நிரூபித்து, நாவகையே - அவர்களுடைய ஜிஹ்வைபோன வழியாலேதானே, பூர்வாசார்யோக்திகளை யனுஸரித் தென்றபடி. ஸித்தாந்த பரிஜ்ஞாநமாத்ரம் பரபக்ஷகாந்த ஸாதாரணமாகையாலே தத்வ்யாவ்ருத்யர்த்தமிங்குத்தவனுவாதத்தைச் சொன்னபடி. நடத்தினோம் - நடந்தோம், யத்வா - நாவகையென்கிறது பாடக்ரமத்திலே யந்வயிக்கிறது. அப்போது முகமறிவார் - முகங்களை யறிந்த பராசரப்ரப்ருதி மஹர்ஷிகளுடைய, நாவகையே - ப்ராக்வத், நடத்தும்-நம்மாசார்யர்களாலே நடத்தப்பட்டதான, சேஷம் ப்ராக்வத். இந்த யோஜநையிலே பூர்வாசார்யோக்திகளுக்கு ப்ரமாணமூலகத்வம் கண்ட்டோக்தம். (எ)

கரு௮-மூ—வேலைப்புற மகங்காண்பதுபோல் வேதநன்னெறிசேர்
நூலைப்புற மகங்காண்டலில் நுண்ணறிவின்றிநின்றீர்
மாலைப்பெற வழிகாட்டிய தேசிகர்வாசகமே
ஓலைப்புறத்தி லெழுதுகின்றே முள்ளேயெழுதுமினே. (அ)

இப்படி சிதசின் நிரூபணம் சக்யமானாலு மீச்வர நிரூபணம் சக்யமோ "ஸத்தா வேதய த்ரஸ:, நாஹம்வேதைர்ந தபஸா" (கஇத்தாவேதயத்ரஸ:। நாஹம்வேதைர்நதபஸா) யாருமோர் நிலைமையனெனவறிவரிய வெம்பெருமான், இத்யாதிகளில் படியேயத்யந்ததுர் நிரூபமன்றோவீச்வரஸ்வபாவம்,மீமாம்ஸாநுக்ருஹீதவேத ஸம்ப்ரதாயத்தால் கதஞ்சின்னிரூபணம் சக்யமானாலுமதில்காலாந்தரவர்த்திகளான வாயுஷ்மத்புத்தி மஜ்ஜநங்களே யதிகாரிகளல்லது பரிமிதபல தீ ப்ராண தத்விக்யுக்தரான விக்காலத்து ஜநங்கள் அதிகாரிகளோ வென்று பிறக்கும் சங்கையை நிரஸியா நின்றுகொண்டு ஸத்ஸம்ப்ரதாயாகதமான வீச்வரநிரூபணத்திலே விசேஷித்தவஹிதமநஸ்கராகுங்கோ ளென்கிறார் வேலையிதி.வேலை-ஸமுத்ரத்தினுடைய, புறம் - வெளியையும். அகம் - உள்ளையும், காண்பதுபோல்-அறிவதுபோல, ஸமுத்ர வைபுல்ய காம்பீர்ய பரிச்சேதம்போலே யசக்யமான வென்றபடி. இதுக்குக் காண்டலிலென்கிறத்தோடே யந்வயம். வேத-வேதமாகிற, நன்னெறி - நல்லவுபாயத்தோடே, தத்வநிஷ்கர்ஷோ பாயமான வேதத்தோடே யென்றபடி. வேதாக்யோபதிஷத்துக்கு நன்மையாவது அபௌருஷேயத்வாதி, சேர்-சேர்ந்திருக்கிற, நூலை - ஸூத்ரத்தை, யதேவ யஜ்ஞேந ஸகலானி கர்மாணி ஸாத்யந்தே தான்யாஹ
ஸாமாந்யம் வ்யாக்யாஸ்யாமி,"(தர்மேப்ரமீயமானெதுவேதெநகரணத்மநா। இதிகர்தவ்யதாபாகம் மீமாம்ஸாபூரயிஷ்யதி.) என்கிறபடியே ஸ்வர்கத்வைதீபாவாதிகரணங்களான தர்சபூர்ணமாஸ கூடாராதிகளுக்கு ப்ரயாஜோத்யம நாதிவ்யாபாரங்கள் போலே தர்வப்ரமிதிகரணமான வேதத்துக்கு இதிகர்தவ்யதாகோடி நிவிஷ்டையான பூர்வோத்தரமீமாம்ஸைகளை யென்றபடி. புறமகம்-வெளியுமுள்ளும், காண்டலில்-காண்கையிலே, புறங்காண்கையாவது ஏகதேச நிரூபணமாத்ரத்திலே பர்யவஸாநமன்றிக்கேயாவச் சாஸ்த்ரபரிஸமாப்தி வ்யாபிக்கை, அகங்காண்கையாவது சாஸ்த்ர பரிஸமாப்தியா பாதப்ரதிதிமாத்ர மன்றிக்கே தத்ததிதிகரணார்த்தங்களை விசதமாக நிரூபிக்கை. நுண் - ஸூக்ஷ்மமான, அறிவின்றி - ஞானமில்லாதே, நின்றீர் - நின்றவர்களென்று ஸம்போதநம், மீமாம்ஸாநுக்ருஹீத வேதவாக்யார்த்த ப்ரமித்யநுகுணஸூக்ஷ்மதராப்யூஹ சூன்யஹ்ருதயரென்று ஸகருணமாக ஸம்போதித்தபடி. இங்குஜ்ஞாநவைகல்யம் சொன்னது ஆயுராதிவைகல்யத்துக்கு முபலக்ஷணம். ஆகபூர்வார்த்தத்தால் முன்பு சொன்ன சங்கையை யநுவதித்ததாய்த்து, அதுக்குத்தரமருளிச் செய்கிறார்மேல், மாலை - ஆச்ரிதவ்யாமோஹசீலனான வெம்பெருமானை, பெறலபிக்கைக்கு, வழி - மார்கத்தை, காட்டிய - காட்டினவர்களான, தேசிகர் - தேசிகருடைய, ந்யாஸோபாஸாக்ய ஸாத்யோபாயவசீகார்யமாய் ஸ்வரூபரூபகுண வ்யூ

திவிசிஷ்டமான ஸித்தோபாயத்தை யுபதேசிக்கிற வாசார்யர்களுடைய வென்றபடி. தேசாபிஜ்ஞரிறே வழிகாட்டுகைக்கு ப்ராப்தரென்று ஸூசனார்த்தமிங்கு ஆசார்யர்களை தேசிகரென்று நிர்தேசித்தது. வாசகமே - வாசகத்தை, யீச்வரவிஷயமாகவவர்களருளிச்செய்த நல்வார்த்தைகளை யென்றபடி. ஓலைப்புறத்தில்-ஓலையினுடைய பின்புறத்திலே, ஓலையிலென்னாதே ஓலைப்புறத்தி லென்றது ஸங்க்ரஹத்வாதி சயத்யோதனார்த்தம். எழுதுகின்றோம் - லேகித்தோம், உள்ளே - அந்தஃகரணத்திலே, எழுதுமின் - எழுதிக்கொள்ளுங்கோள், இத்தை நீங்களிதிசேஷஃ, மறவாதபடி தரியுங்கோளென்றபடி. இத்தால் குருபதேசத்தால் ஈச்வரவிவேக மிக்காலத்தார்க்கும் ஸுலபமென்ற தாய்த்து. குருக்களுக்குத்தா னீச்வரவிவேகம் துர்லபமன்றோவென்கிற சங்காவாரணார்த்தமிங் கெம்பெருமானை மாலென்று நிர்தேசித்தது, அவனுஸ்ரிதவ்யாமோஹ சீலனுகையாலுமிவர்கள் பரமபுருஷ வரணீயதாஹேது குணவிசேஷம் பெற்றவராகையாலும் அது துர்லபமன்றென்று கருத்து. யமேவைஷவ்ருணுதே தேந லப்யஃ, பக்த்யா, சாஸ்த்ராத்வேத்மிஜநார்தநம்'' (யமேவைஷவ்ருணுதே தேநலப்யஃ பக்த்யா சாஸ்த்ராத்வேத்மிஜநார்தநம்) யாருமோர் நிலைமையனென வறிவரியவெம்பெருமான் என்றக்கடவதிறே. (அ)

கடுகூ மூ—சிறைநிலையாம்பவத்தில் சிறுதேனின்ப முண்டுழல்வார்
மறைநிலைகண்டறியா மயன்மாற்றிய மன்னருளே
துறைநிலைபாரமெனத் துலங்காவமுதக் கடலாம்
இறைநிலையா முரைத்தோமெங் குருக்களியம்பினவே. (கூ)

ஈச்வரநிரூபணத்தை யுபஸம்ஹரிக்கிறார் சிறையிதி. சிறைநிலையாம் - காராக்ருஹத்தினுடைய ஸ்திதியையுடைய தாகாநிற்கிற, சிறை-காராக்ருஹம், காராக்ருஹம் போலே ஸர்வப்ரகாரபாதகமான வென்றபடி. ஆமென்கிற வித்தாலா பாதப்ரதீதியில் போக்யமாகத் தோற்றித்தேயாகிலும் நிபுணதரநிரூபண தசையில் அதிதுஸ்ஸஹமாய் முடியுமென்று வ்யஞ்ஜிதம். பவத்தில் - ஸம்ஸாரத்திலே, சிறுதேன் - க்ஷுத்ரமதுவினுடைய, இன்பம் - ரஸத்தை, உண்டு - புஜித்து, உழல்வார் - பரிப்ரமிப்பாருடைய, தாபத்ரயீமயதவா நலதஹ்யமான சரீரத்திலே யிருந்து பசுபுத்ரவித்ததாரஸ்வர்காத்யதிக்ஷுத்ரஸுகத்தை புஜித்தத்தாலே பூர்ணம் மன்யமானராய் ஸம்ஸாரகடீயந்த்ர குண்டிகாயமானராய் பரிப்ரமிக்கிற சேதநருடைய வென்றபடி. இதுக்கு மயலென்கிறத்தோடே யந்வயம், மறைநிலை - வேதத்தினுடைய நிஷ்டையை, ஸர்வவேததாத்பர்ய விஶ்ராந்தி பூமியான வீச்வரனை யென்றபடி. கண்டறியா-கண்டறியாதபடி பண்ணுமதான. ஈச்வரவிஷயத்திலாபாத ப்ரதீதியுங்கூடவர வொட்டாததானவென்றபடி. மயல்-மோஹத்தை, அநுசிதவிஷயவ்யா மோஹத்தை, மாற்றிய-நசிப்பிக்குமதான, மன் - த்ருடமான, அருளே - க்ருபையாலேதானே, அருளென்று லுப்ததத்ருதீயை. அவதாரணத்தால் க்யாதிலாப பூஜாவ்யுதாஸஃ, இதுக்கு இயம்பின வென்கிறத்தோடே யந்வயம். எம் - நம்முடைய, குருக்கள் - பூர்வாசார்யர்களாலே, இயம்பின - சொல்லப்பட்டதான, ''ஸம்ஸாரஸாயமபண்டிதோ பகவதிப்ராகேவபூயஃ கலௌ பூர்ணம்மன்யதமேஜநே ஶ்ருதிசிரோகுஹ்யம்ப்ருவே ஸாஹஸாத்'' (ஸம்ஸாரோயமபண்டிதோ பகவதிப்ராகேவபூயஃ கலௌ பூர்ணம்மன்யதமேஜநே ஶ்ருதிசிரோகுஹ்யம்ப்ருவேஸாஹஸாத்) என்கிறபடியே உத்வேலக்ருபாப்ரேரிதா சார்யோபதிஷ்டமான வென்றபடி. இதுக்கு இறைநிலை யென்கிறத்தேடே யந்வயம். துறை - இறங்குமார்கம், நிலை - ஸ்திதி, பாரமென்ன-பாரமென்னும்படியான, இரங்குகையும் நிலைத்தவகாஹிக்கையும் துஷ்கரமென்னலாம்படி துராஸதகம்பீரமான வென்றபடி. இது கடலுக்கு விசேஷணம். துளங்கா - சலியாததான, நிஸ்தரங்கமான, அமுதக்கடலாம் - அம்ருதஸாகரமாகாநிற்கிற, ஆமென்கிற வித்தாலுத்தரோத்தராநு பவத்தில்ரஸ்யதாதிசயம் தோற்றுகிறது. இறை - ஈச்வரனுடைய, நிலை - ஸ்திதியை, ஸ்வபாவத்தை, இறைநிலையுணர்வரி துயர்களென்றபடியே ஜ்ஞாநதர்சன ப்ராப்திகள் அத்யந்தாசக்ய மென்னலாம்படியாய் ''வ்யா

ஞாநஞாதாநா ஹவஜஹோநூ ஹிவ்யஸக்தஸை நித்யாநுக்ரு தவிதாரங்காணவ'' (ப்ரசாந்தாநந்தாத்மாணிபவஜமஹாநந்தமஹிமப்ரஸக்தஸ்ஸை ர்நித்யாநுக்ருதவிதரங்கார்ணவ) தசனுயிருக்கிற வெம்பெருமானுடைய ஸ்வரூபரூபகு ணவிபூதிகளையென்று பிண்டிதார்த்தம். யாம்-நாம், உரைத்தோம்-நிரூபித்தோம். (௯)

கசு0-மூ—வெறியார் துளபுடை வித்தகன்றன்மையின் மெய்யறிவார்
குறியார்நெடியவ ரொன்றொருகுற்றம் பிறர்க்குரையார்
அறியாதிறத்தி லருள்புரிந்தாரண நன்னெறியால்
சிறியார்வழிக ளழிப்பதுந்திங்கு க்ழிப்பதற்கே (௧0)

இப்படி யதிகாரத்ரயத்தாலே தத்வத்ரயத்தை நிரூபிக்குமிடத்தில் ஸம்க்ஷேபெ ணவுபக்ஷிப்தங்களான பரமததூஷணங்களை விஸ்தரேணப்ரதர்சிப்பிக்கத் துடங்கி முற்படவவைகளுடைய ஸமுதாயதூஷணங்களை வெளியிடக் கடவராய்ப்ரமாணுநீந தத்வவிவேகத்தாலே மோக்ஷம் ஸித்திக்கலாயிருக்க பரமதநிரஸநத்துக்கு ப்ரயோஜந மே தென்கிற சங்கைக்கு முன்பு ஸம்க்ஷிப்தமான பரிஹாரத்தை விசதமாஹக் காட்டு கிருர் வெறியாரிதி. வெறி - பரிமளத்தாலே, ஆர் - பூர்ணமான, துளபுடை - தூளஸி யையுடையவனுன, வித்தகன் - விஸ்மயநீயனுன வெம்பெருமானுடைய, தன்மை யில் - ஸ்வபாவத்தில், மெய் - யாதார்த்யத்தை, அறிவார் - அறிந்தவர்களான வாசார் யர்கள், இதுக்குரையா ரொன்கிறத்தோடே யந்வயம். நித்யநிர்தோஷ நிர்பாதமான வேதத்தைப் பரமகாருணிகனுன ஸர்வேச்வரன் ப்ரஹ்மாமுதலான தேவதைகளையும் கொண்டு ப்ரவர்த்திப்பித்துப் போராநின்ற லோகத்திலே யநர்த்தஹேதுக்களானசப் தாந்தரங்களுதிக்கைக்கடியென்னென்கிற சங்காஸமாதாநார்த்த மீச்வரனைவித்தகனெ ன்று நிர்தேசித்து விஸ்மயநீய லீலாசேஷ்டித ப்ரவ்ருத்தனுன ஸர்வேச்வரன் தானே 'ஶுத்தோ தநஸுதோ பூத்வா மோஹயிஷ்யாமி மாநவாந், த்வம் ஹிருத்ர மஹாபாஹோ'' (சுத்தோதநஸுதொபூத்வாமோஹயிஷ்யாமிமாநவாந், த்வம் ஹிருத்ரமஹாபாஹோ) நின்மாட்டாய் மலர்புரையுந் திருவுருவம் மனம்வைக்கமாட் டாத பலசமயமதிகொடுத்தா யித்யாதிகளில்படியே யாஸுரப்ரக்ரு திவ்யாமோஹ நார்த்தமாக மோஹசாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பிக்கையாலே யவைகளுமுதிக்கலாமெ ன்று கருத்து. ஆனல் களையைவளர்க்கப் பயிரழியுமாப்போலேயும் ச்யேநமத்யவர்த் தியான கபோதந்யாயத்தாலும் வைதிகதர்சனம் முழுக்க வழிந்து போகாதோவென்று சங்கியாமைக்காக தன்மையில் மெய்யறிவா ரொன்கிறது. 'த்ரிதண்டதாரிணா பூர்வம் விஷ்ணுநா ரக்ஷிதா த்வயா। த்வமவ்யயஶ்ஶாஶ்வதத⁴ர்மகோ³ப்தா நாராயணஸ்ஸாத்வததர்மகோப்தா''(த்ரிதண்டதாரிணுபூர்வம்விஷ்ணுநாரக்ஷிதாத்வயா, த் வமவ்யச்சாச்வததர்மகோப்தா நாராயணஸ்ஸாத்வததர்மகோப்தா) பீதகவாடைப்பிரா னூர் பிரமகுருவாகிவந்து, இத்யாதிகளில்படியே ஸர்வேச்வரன் தானேவைதிகதர்சன த்துக்கு வேண்டும் ரக்ஷைபண்ணிப்போருகையாலே வைதிகதர்சனம் ஸத்வோத்த ரர் பக்கலிலநுஸ்யூதமா யிருக்குமென்று கருத்து. பிறர்க்கு - அந்யருக்கு, குறியார் - ஹ்ரஸ்வர், நெடியவர் - தீர்க்கர், என்று - இப்படி நிகர்ஷாபாதகங்களான சரீரதர்ம ங்களை புரஸ்கரித்தும், ஒருகுற்றம் - ஒருதப்பை, உரையார் - சொல்லார், கிம்புநர் நிகர்ஷாபாதகங்களான தோஷங்களை யென்று ஹ்ருதயம். இவர்களிப்படி வைதிக தர்சன பரிதுஷ்டராய் வீதராகராயிருந்து வைத்து''நவிக்ருஹ்யகதாங்குர்யாத் அதீயாநம் பண்டிதம்மந்யமாநः, யோவித்யாஹந்தியச:பரஸ்ய தஸ்யாந்தவந்தஶ்ச ப⁴வந்தி லோகா:। நசாஸ்ய தத்³ப்³ரஹ்மப²லந்த³தா³தி'' (நவிக்ருஹ்யக தாங்குர்யாத்·அதீயாநம்பண்டிதம்மன்யமாநः யொவித்யாஹந்தியச:பரஸ்ய தஸ்யாந் தவந்தச்சபவந்திலோகாः நசாஸ்யதத்ப்ரஹ்மபலந்ததாதி) இத்யாதி வசநங்களாலே நிஷித்தமாய் விஜிகீஷா மூலமாய்க்யாத்யாதி பலமான பரமதநிரஸநத்திலே யிறங் குவானென்னென்னில் அருளிச்செய்கிருர்மேல். ஆரணம் - உபநிஷத்துக்களாகிற நன்னெறியால் - நல்லவுபாயத்தாலே, தர்க்கரூபோபாய மவர்களுக்கு முண்டேயெ ன்று தத்வ்யாவ்ருத்யர்த்தம் நன்னெறியென்கிறது. அவர்கள் தர்க்கங்களாகமபாதிதங்

ரென்று தாத்பர்யம், சிறியார்-க்ஷுத்ரர்களுடைய, அல்பஜ்ஞரானவாதிகளுடைய, நெறிகள் - மார்க்கங்களை, அழிப்பதும் - நசிப்பிக்குமதும், சிஷ்யேப்யஸ் ஸ்வயந்தோபந்யாஸ மாத்ரமன்றிக்கே பரமதநிரஸநமுமென்று ஸமுச்சயத்தாலே ஸித்திக்கிறது. இத்தால் "யதாசக்தி நிர்குண்யா சைவ தாமைர் நந்தகாந் வித்யா சோரோ குருத்ரோஹீ வேதேச்வர விதூஷக: தவதேப குபாப்மாநஸ் ஸத்யோ ஹந்த்யா இதி ச்ருதி:" (யதாசக்தி நிக்ருஷ்ணீயாந் தேவநாகுருநிந்தகாந் வித்யாசோரோ குருத்ரோஹீ வேதேச்வரவிதூஷக: தவதேபகுபாப்மாநஸ்ஸத்யோ ஹண்ட்யா இதி ச்ருதி:) என்கிறப்ரமாணங்களாலும் தத்வாத்யவஸாய ஸம்ரக்ஷணார்த்தம் ஜல்பவிதண்டே பீஜப்ரரோஹ ஸம்ரக்ஷணார்த்தம் கண்டகசாகாவரணவந் என்று கௌதமோக்த ப்ரகாரத்தாலும் விஜிகீஷுகதையிலே நின்று வேதோபப்லாவகபாஹ்யகுத்ருஷ்டிகளை நிராகரிக்கை ப்ராப்தமாகையாலேபூர்வோக்தகதா நிஷேதகப்ரமாணங்கள் வீதராகவைதிகரோடு கதையை நிஷேதிக்கிறன வென்று தாத்பர்யம் வ்யஞ்ஜிதம், அறியார்திறத்தில்-தத்வாத்யவஸாயவிகலரான சிஷ்யர்களிடத்திலே, அருள் - க்ருபையை, புரிந்து - வர்ஷித்து, இது பூர்வாந்வயி, பரமதநிரஸநம் சிஷ்யாநுஜிக்ருக்ஷாமூலகமல்லது விஜிகீஷாமூலகமன்றென்று கருத்து. இதுக்கு ப்ரயோஜநமருளிச்செய்கிறார். தீங்கு - தோஷங்களை, கழிப்பதற்கு - நிரஸிக்கைக்கு, ஸ்வஸித்தாந்தமறியாத மந்தமதிகளுக்கு பரஸித்தாந்த ஸசதில்யா பரிஜ்ஞாநமூலமாக "அஜ்ஞச்சாச்ரத்ததாநச்ச ஸம்சயாத்மா விநச்யதி। நாயம் லோகோஸ்தி ந பரோ ந ஸுகம் ஸம்சயாத்மந:। ஸம்சயாத் ஹேதுபலாந் நாத்யவஸ்யதி மாநவ:" (அஜ்ஞச்சாச்ரத்ததாநச்சஸம்சயாத்மாவிநச்யதி-நாயம் லோகோஸ்தி நபர: ஸுகம்ஸம் சயாத்மந: ஸஸம்சயாந்ஹேதுபலாந் நாத்யாவஸிதிமாநவ:) இத்யாதிகளில்சொன்ன நசைவாராமைக்காக வென்றபடி, அவதாரணத்தால் க்யாத்யாதிகாம் பலத்வவ்யுதாஸ:. (கo)

ககக மூ—மீண்டுரைக்க விரகுதருந் தருக்கங்கொண்டே வேண்டுங்கால்
வேண்டுவதே விளம்புகின்றார், கண்டதற்கு விபரீதங்கத்து
கின்றார் காணுதகுறைபறையிற் காட்டுகிற்பார், பண்டொருத்
தன் கண்பொத்தேனென்ன யென்னப்பலவகையிலு பாதிகளாற்
படிந்து வீழ்வார், கொண்டலொக்குந் திருமேனிமாயக் கூத்தன்
குரைகழல்சேர் விதிவகையிற் கூடாதாரே. (கக)

நாநாவித பரமதப்ரவ்ருத்தி மூலகர்வத்தை விசதீகரியா நின்றுகொண்டு ஸமுதாயதாஷணங்களை வெளியிடுகிறார் மீண்டுரைக்கவிதி. கொண்டல் - வார்ஷுகவலாஹகத்தோடே, ஒக்கும் - ஸத்ருசமான, திருமேனி - திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனை, மாயக்கூத்தன்-ஆச்சர்ய நாட்யத்தையுடையவனுடைய, வார்ஷுகவலாஹகஸ்நிக்தச்யாமளகளேபரனாய் விஷமவிபாகவிசித்ர ஸம்ஸாரப்ரவர்த்தந ரஸிகனான வெம்பெருமானுடைய வென்றபடி. குரை - சப்தாயமானமான, கழல் - திருவடிகளை, சேர் - அடைகைக்கான, விதிவகையில் - பாக்யவிசேஷத்தில், கூடாதார் - கூடாதவர்கள், ஆபரணசிஞ்ஜித பகவச்சரணாரவிந்த ப்ராபகஸுக்ருத விசேஷசூன்யரான ஸம்ஸாரிசேதந ரென்றபடி. மீண்டு - திரிப்பிக்கொண்டு, உரைக்க - சொல்லுகைக்கு, விரகு - உபாயத்தை, தரும் - கொடுக்குமவைகளான, தருக்கம் - தர்க்கங்களை, கொண்டே - அவலம்பித்தே, "தர்க்காப்ரதிஷ்டாநாதபி" என்கிறபடி-ஒன்றைச் சொன்னாலு மதுக்கும்மேலே திருப்பிக்கொண்டு சொல்லவழி கொடுக்குமவைகளான வப்ரதிஷ்டிததர்க்கங்களையே யவலம்பித்தென்றபடி. அவதாரணத்தாலாகமாநுஸாரவ்யவச்சேத:. வேண்டுங்கால் - வேண்டினபோது, வேண்டுவதே-வேண்டின வர்த்தங்களையே, விளம்புகின்றார் - சொன்னார்கள், பூர்வோத்தர விரோதத்தையும் பாராதே ஸமயோசிதமாக ஜல்பித்தார்களென்றபடி. இது வேதவிருத்த கல்பனப்ரதானரான வைசேஷிகநையாயிகமீமாம்ஸகவையாகரணர்களைப்பற்றிச் சொன்னபடி. கண்டதற்கு - ப்ரத்யக்ஷத்துக்கு, விபரீதம் - விருத்தத்தை, கத்துகின்றார்-ஜல்

பித்தார்கள், இது ப்ரத்யக்ஷவிருத்த ப்ரபஞ்சமித்யாத்வபேதா பேதாதிவாதிகளான த்ரிவிதாத்வைதிகளையும் கணிசித்துச் சொன்னபடி. மறையில் - வேதத்தில், காணாத - ஒருவராலு மறியப்படாத, குறை - அபிஷ்கர்ஷத்தை, காட்ட - காட்டுகைக்காக, நிற்பார் - ப்ரத்யவஸ்தானம் பண்ணுவர்கள். இது அபௌருஷேயதயா நித்யநிர்தோஷங்களான வேதங்களிலத்யந்தாஸம்பவ நீயங்களான பௌருஷேயத்வாதி தோஷங்களை யுத்காடனம் பண்ணுமவரான சார்வாகபௌத்தார்ஹதனை நினைத்துச் சொன்னபடி. பண்டு - பூர்வகாலத்திலே, ஒருத்தன் - ஒருவன், கபிலஹிரண்ய கர்ப்ப பசுபதிகளில் அந்யதம னென்றபடி. நானே - நான்தானே, அவதாரணத்தாலாகம வ்யவச்சேதஃ கண்டு - ஸாக்ஷாத்கரித்து, உரைத்தேன் - ப்ரதிபாதித்தேன், என்ன - இப்படி சொல்ல, உரைத்தேனானே யென்கிற விடத்திலே ஸந்தியிலே நகாரலோபஃ, பலவகையில் - நாநாப்ரகாரங்களிலே, உபாதிகளால் - தத்தத்கர்மோபாதிகளாலே, படிந்து - அழிந்து, வீழ்வார் - விழுந்துபோவர், இது கபிலஹிரண்ய பசுபதிகள் ஸ்வஸ்வ சாஸ்த்ராநு குணஸ்வஸ்வ ஸாக்ஷாத்கார மூலகத்வேந ப்ரமாண தமங்களாக வுபதேசிக்கஅத்தை விச்வஸித்து தத்தச்சாஸ்த்ரோக்த தபோவேஷாசாராதிகளிலே யிழிந்தவரான ஸாங்க்ய ஹைரண்ய கர்ப்ப பாசுபதர்களை நோக்கிச் சொன்னபடி. (கக)

கஙஉ. மூ—கண்டது மெய்யெனிற்காணு மறையிலறிவு கண்டோம்
கண்டத லாததிலதெனிற் கண்டிலங் குற்றமிதில்
கண்டது போன்மறை காட்டுவதுங்கண்ட தொத்ததனால்
உண்டது கேட்கு முலோகாயதரின்று மீறுவதே. (கஉ)

இப்படி பரமதங்களை ஸமுதாயே நிராகரித்து இனிமேலிவர்களை விசேஷித்து நிராகரிக்கத்துடங்கி முற்பட ப்ரத்யக்ஷ ப்ரமாணைகமூலமான சார்வாகமதத்திலே ப்ரதாநப்ரமேயத்தை யனுவதித்து தூஷிக்கிறார் கண்டது மெய்யிதி. ப்ரத்யக்ஷஸித்த பதார்த்தங்களேயுள்ளது அநுமாநாகமங்கள் ப்ரமாணங்களன்றாகையாலே அலௌகிக பதார்த்தவ்யாபாரம் வ்யர்த்தமென்று சார்வாக மதப்ரக்ரியை, அத்தை யநுவதிக்கிறார். கண்டது - காணப்பட்ட பதார்த்தமே, மெய்யெனில் - மெய்யென்று சொல்லில், காணும் - காணப்படாநிற்கிற, ச்ராவணப்ரத்யக்ஷ விஷயங்களான, மறையில்-வேதங்களாலே, த்ருதீயார்த்தேஸப்தமீ. அறிவு - ஜ்ஞாநத்தை, கண்டோம் - மநஸ்ஸாலே ஸாக்ஷாத்கரித்தோம், ப்ரத்யக்ஷமாத்ர ப்ராமாண்யவாதிகளான சார்வாகர்களுக்கும் ப்ரத்யக்ஷ ச்ருதிரர்த்தநீச்ச, என்கிறபடியே ச்ராவணப்ரத்யக்ஷ ஸித்தமான வேதமும் மாநஸப்ரத்யக்ஷ ஸித்தமான ஜ்ஞாநமும் அந்வயவ்ய திரேகஸஹக்ருத ப்ரத்யக்ஷ ஸித்தமான விவைகளுடைய ஹேதுஹேது மத்பாவமும் துரபஹ்நவ மாகையாலே வேதப்ராமாண்யமங்கீகரிக்க வேணுமென்று கருத்து. அதுக்கு கண்டதலாத்தில் எனிலென் றந்வயம். அது-அந்தவேத ஜந்யஜ்ஞாநம், கண்டதலாததில் - காணப்படாத விஷயத்திலே, அதீந்த்ரியார்த்த விஷயகம், எனில்-இப்படி சொல்லில், ப்ரத்யக்ஷஸித்த வாதார்த்தங்களுக்கு பாரமார்த்ய மிசைந்தோமேயாகிலு மவைகளுக்கு கார்த்ஸ்ந்யேந பாரமார்த்ய மிசைந்தோமோநாம், சுக்திரூப்யாதிகள் ப்ரத்யக்ஷ ஸித்தமானாலும் ப்ரமாணே தரஜ்ஞாந விஷயதயா அளீகங்களாகவிறே காணப்படுகிறன, ஆகையாலே வேதஜந்ய ஜ்ஞாநமும் ப்ரத்யக்ஷ ரூபமானாலும் அதீந்த்ரியார்த்த விஷயத்வாதப்ரமாணம், அதின்விஷயங்களான தர்மாதர்மாதிகளுமளீகங்களென்று சொன்னாலோவென்று சங்காநுவாதத்துக்கு பிண்டிதார்த்தம. இதுக்குத்தரம்? கண்டிலங் குற்றமிதில் - இதில் - இந்தவேதஜந்யஜ்ஞாநத்திலே, குற்றம் - ப்ரமவிப்ரலம்பாதிகாரண தோஷங்களையும் பாதகப்ரத்யயத்தையும், கண்டிலம்-ஸாக்ஷாத்கரித்தோமல்லோம், அதீந்த்ரியார்த்தவிஷயகத்வம் ப்ராமாண்ய பாதகத்வேந ஸம்ப்ரதி பன்னமன்றுகித்துகாரண தோஷபாதகப்ரத்யயங்களே ததாவிதங்கள். அவைகள் தாமிங்கே நத தாதோவதஃ, ததர்த்தஃ புநஃ "யமஶாயமசோவாஷாவரெஸாஸோவஃ வக்ஷிவாமெக்ஷாநவ" (தர்மாதர்மபராவரோச்சவரமுகஃ ப்ரத்யக்ஷ ஸாத்யோநச) என்கிறபடியே ப்ரத்யக்ஷ ஸித்தங்களன்று, அநுமாநாதிகளுக்கு ப்ராமாண்யமில்லை யாகை

கஅரு-மூ—கனைகடல்போலொரு நீராஞ்ஞ்ரத்திரத்தைக் கவந்தனையுமிராகுவையும் போலக்கண்டு, நினைவுடனே நிலைத்தருமமிகழ்ந்து நிற்கு நீசர்நிலை நிலைநாடாவண்ணமெண்ணி, வினைபரவு சைமினியார் வேதநூலை வேதாந்தநாலுடனே விரகாற்கோத்த, முனையுடைய முழுமதிநம் முநிவர்சொன்ன மொழிவழியே வழியென்று முயன்றிட்டோமே. (௩௫)

பூர்வோத்தர மீமாம்ஸைகளுக்கு சாஸ்த்ரைக்யத்தையை ஸம்ப்ரதாயோபபத்திகளாலே ஸமர்த்தியா நின்றுகொண்டு நிரீச்வரமீமாம்ஸக மதநிராஸநத்தை நிகமிக்கிறார் கனைகடலிதி. கனைகடல்போல் - சப்தாயமான ஸமுத்ரம்போலே, ஒருநீராம் - ஏக ஜலமானபடியான, சூத்திரத்தை, ஏகோதகமான ஸமுத்ரம்போலே ஏகசாஸ்த்ரமான பாகத்வயாத்மகமான மீமாம்ஸாதந்த்ரத்தை யென்றபடி. ஏகோதகாநாஞ்சதுர்ணும பிஸமுத்ராணும் ப்ராச்யோதீச்யாவாந்தர பேதங்கள் ஏகாவயவித்வ விரோதிகளல்லாதாப்போலே த்வயோரபி மீமாம்ஸயோ: வேதாந்த விசாராத்மகத்வரூபை கோபாத்யவச்சின்னயோ: காண்டாத்யவாந்தர பேதங்களேகாவயவித்வ விரோதிகளன்றென்று ஸமுத்ரத்ருஷ்டாந்தத்தாலே விவக்ஷிதம். கவந்தனையும் இராகுவையும்போலே - கபந்தனையும் ராஹுவையும்போலே, கண்டு - பார்த்து, பூர்வோத்தர பாகங்களைக் கபந்தராகுக்களைப்போலே யத்யந்த பின்னவயவிகளாகப்பார்த்தென்றபடி. சாஸ்த்ரபேத மங்கீகரிக்கில் சாஸ்த்ரத்வயமு மத்யந்த ஸாகாங்க்ஷத்வேந பர்யவஸிதமாய் முடியுமென்று கபந்தராஹு த்ருஷ்டாந்தத்தாலே ஸ்போரிதம். நினைவுடனே-புத்திபூர்வகமாகவே, நிலைத்தர்மம்-ஸ்திரதர்மத்தை, இகழ்ந்து நிற்கும்நீசர்நிலை நிலைநாடாவண்ணம் எண்ணி-, ப்ரலோபித்து ஸத்வாரகமாகவு மத்வாரகமாகவும் ஸர்வகர்ம ஸமாராத்யனாய் பலப்ரதனுகையாலே (க்ருஷ்ணம்தர்மம்ஸநாதநம்) என்கிறபடியே ஸித்ததர்ம பூதனான வீச்வரன் ஶ்ருதீதிஹாஸ புராணங்களாலே யஸக்ருத்குஷ்யமாணனாயிருக்க வாஸநாஸ்வபாவத்தாலே யவனையபலபித்து சேதநேதரமான கர்மமே பலப்ரதமென்றிருக்கும் நிரீச்வரமீமாம்ஸகருடைய மதம்ப்ரதிஷ்டிதமாகாதபடி யுபாயத்தை சிந்தித்தென்றபடி. இதுக்கு கோர்த்தவென்கிறத்தோடே யந்வயம். வினை-கர்மங்களாலே, பரவு - விஸ்தீரணமான, சைமினியார் - ஜைமினியுடைய, வேதநூல் - வேதவ்யாக்யாநரூபமான ஸூத்ரத்தை, நாநாவித கர்மவிதாயக கர்மபேதேதிகர்த்தவ்யதா பூத ஜைமினிதந்த்ரத்தை யென்றபடி. சைமினியாரென்கிற பஹுவசநத்தாலே வ்யாஸசிஷ்யத்வ ப்ரும்மஸம்வாத தார்ட்யாதிகளாலே பரமாஸ்திகதயா ப்ரஸித்தரான விவருக்கு ஸ்வாசார்யாபிப்ராய விருத்தமான ஶ்ருதிஸஹஸ்ர சூடாமணி பூதேச்வராபலாபத்திலே தாத்பர்யகல்பநம் மதிமாந்த்ய ப்ரயுக்தமென்று வ்யஞ்ஜிதம். வினைபரவுமென்கிற ஸூத்ரவிசேஷணத்தாலே தேவதாநிராகரண பரத்வேநப்ரதீதங்களான சிலநாவமிக ஸூத்ரங்களும் "[illegible]" (அபிஷ்டார்த்தவ்யயேநாபிஜயதிக்ஷேத்ரஹாரிணம் லப்தக்ஷேத்ரைர்நதுஷப்ரபஸ்யாதர்த்தஇதிநிச்சயாத்) என்கிறந்யாயத்தாலே கர்ம்மண்யச்ரத்தா வாரணுய கர்மப்ரரோசநார்த்தா ந்வாருஹ்யவாத ரூபங்களாகையாலே அந்யபரங்களென்றுத்யோதிதம். விரகால் - உபாயத்தாலே, வேதாந்தநூலுடனே - வேதாந்தஸூத்ரத்தோடே, கோர்த்த-சேர்த்தவர்களான, பூர்வோத்தர தந்த்ரங்களுக்காபாதத: ப்ரதிபந்நங்களான விரோதங்களை ஸம்யங்ந்யாயங்களாலே சமிப்பித்து சாஸ்த்ரைக்ய ஸமர்த்தநம் பண்ணினவர்களான வென்றபடி. இதுக்கு முனிவரென்கிறத்தோடே யந்வயம். முனையுடைய-தைக்ஷ்ண்யத்தையுடையதான, முழு - புஷ்கலமான, மதி - ஜ்ஞானத்தையுடையவரான,

நம்முனிவர் - நம்முடையமுநிகளாலே, தத்விரோத ப்ரசமனாநாநுகூல நைக்ஷண்ய சாலி ஸர்வவ்யாபகப்ரக்ஞருன பகவத்போதாயந யாமுநபாஷ்யகாராதிகளாலே யென்றபடி. முழுமதி யென்கிற வித்தாலே கபந்தாராஹ மீமாம்ஸகவதேகைக தந்த்ர மாத்ர விச்ராந்தஜ்ஞான வ்யுதாஸ:. சொன்ன - சொல்லப்பட்ட, மொழிவழியே-ஸூக்திமார்கமே, வழியென்று - மார்கமென்று, முயன்றிட்டோம் - ப்ரதிபாதித்தோம். ()

௩அகூ-மூ. முக்குணமாய் நின்றமூலப்பிரகிருதிக் கழியார்,
அக்குணமற்றவருத்துணை மற்றதற்கீசனில்லை,
யிக்கணனைப் படியையைந்துமெண்ணின்முன்முத்தியென்னும்,
பக்கணவீரர் பகட்டைப்பழதாக்குவமே. (௩௬)

இப்படி மீமாம்ஸக நிராஸநாநந்தர மீச்வராபலாபத்தாலே யிவர்களுக்கு ஸஜாதீயரான நிரீச்வரஸாங்க்யரை நிராகரிக்கிறார் முக்குணமிதி முக்குணமாய்நின்ற - ஸத்வரஜஸ்தமோலக்ஷண குணத்ரயரூபமாயிருந்த, மூலப்பிரகிருதி - மூலப்ரக்ருதிக்கு, ஸத்வரஜஸ்தமோ ரூபங்களான மூன்றுத்ரவ்யங்கள் ஸமாவஸ்த்தாபன்னங்களான போதுமூலப்ரக்ருதியென்று பேர்பெற்றிருக்குமென்று ஸாங்க்யமதப்ரக்ரியா, த்ரவ்யங்களான ஸத்வாதிகளிலபியுக்தாநாம் குணசப்தப்ரயோகம் பரஸ்பரா ப்ரதக்ஸித்தி மாத்ரத்தாலே யௌபசாரிகமென்று தேஷாமாசய:. அழியா - அநச்வரமான, நித்யமான, இது - அருவுக்குவிசேஷணம், அக்குணம் - அந்தகுணங்களாலே, அற்று - சூன்யமான. அரு - ஸூக்ஷ்மபதார்தம், ஜீவனென்றபடி, துணை - ஸஹாயம், கர்த்ரியான மூலப்ரக்ருதி மஹதாதிரூபேண விகரிக்கும்போது குணத்ரயசூந்யனாய் நித்ய நிர்லேபனான ஜீவன் ஸஹகாரியென்றபடி. அதற்கு - அந்தப்ரக்ருதிக்கு, மற்று ஈசனில்லை - வேறே ஈச்வரனில்லை, அயோம்புபச்வந்த்தலோஹாயஸ்காந்தந்யாயேந ப்ரக்ருதிபுருஷாப்யாமேவ ஸர்வவிதபரிணமமுமுப்பன்னமாயிருக்க ப்ரக்ருதி ப்ரேரகனான வீச்வரனென்றொருவனைக்கல்பிக்கை கௌரவ பராஹதமென்று இப்படி தன் மததத்வப்ரக்ரியையை யனுவதித்தினி யுபாயபுருஷார்த்தங்களை யனுவதிக்கிறார், இக்கணனைப்படி - இந்த காபிலதந்த்ரோக்த கணனாப்ரகாரத்தாலே, ஐயைந்தும்- இருபத்தைந்தும், "மூலப்ரக்ருதி ரவிக்ருதிர்மஹதாத்யா: ப்ரக்ருதிவிக்ருதயஸ்ஸப்த। ஷோடசகஸ்துவிகாரோ நப்ரக்ருதிர்நவிக்ருதி: புருஷ:" (மூலப்ரக்ருதி ரவிக்ருதிர்மஹதாத்யா: ப்ரக்ருதி விக்ருதஸ்ஸப்த। ஷோடசகச்சவிகார: நப்ரக்ருதிர்நவிக்ருதி: புருஷ:) என்று ஸாங்கியபரிகணிதையான தத்வபஞ்சவிம்சதியை யென்றபடி. எண்ணில் - விசதமாகவிவேசித்தால், முன்முத்தி - பூர்வஸித்தமான மோக்ஷம், ஸர்வகார்யவாதிகளான விவர்களுக்கு மோக்ஷமாவது பூர்வஸித்தஸ்வரூபாவிர்ப்பாவ ரூபமாகையாலே முன்முத்தியென்றது. யத்வாமுத்தி - மோக்ஷமானது, முன் - எதிரே நிற்கும், ஸுலபதமமென்றபடி. என்றும் - இப்படி சொல்லுமவரான, பக்கணவீணர்-சபராலயவர்த்திகளான வ்யர்த்தஜல்பாகர்களுடைய, பக்கணச் சபராலாய:. ஆபாதசூடம் வேததந்தங்களாலே யுத்குஷ்யமாணனான வீச்வரனை யறியாமையாலே சபராலயவாஸ்தவ்யஜநங்கள் போலேயதிபாமரராய் வேதமர்யாதாலேசமறியாதே வ்ருதாகபிலதந்த்ரபரிச்ராந்தரான ஸாங்கயர்களுடைய வென்றபடி. பழம் பகட்டை - அநாதியான வ்யாமோஹத்தை, பழுதாக்குவம் - வ்யர்த்தமாக்குகிறோம். அவர்களுடைய குஹநோபதேசத்தை யொருவரும் விச்வஸியாதபடி பண்ணுகிறோமென்றபடி. (௩௬)

௩அஎ மூ. ஈசனிலனென்பதனுலென்றுஞ் சீவரெங்குமுளரிலருணர் வையென்றவைத்தால் பாசமென்றும் பிரகிருதிதன்னுலென்னும்பல முமிலை விடுமிலையென்னும் பண்பால் காசினிநீர்முதலான காரியங்கள் கச்சபத்தின்கால் கைபோலென்னுங்கத்தால் நாசமிலதிலைகாணுனாலத்துள்ளீர் நாமிசையாச்சாங்கியத்தை நாடுவார்க்கே. (௩௭)

ஸாங்க்யதர்சநத்திற்கு ச்ருதிவிரோத பூர்வாபரவசநவிரோத யுக்தி விரோதைஃ ப்ரதியுத அனுதாரணீயதையைக்காட்டுகிறுர், ஈசனிதி. ஈசன் - ஈச்வரன், இலன் - இல்லை, என்பதனுல் - என்று சொல்லுகையாலும், சீவர்-ஜீவர்கள், என்றும் - ஸ்பஷ்டம், எங்கும்-ஸர்வத்ர, உளர்-இருப்பார்கள், நித்யவிபுக்களென்றபடி. உணர்வையில ரென்றுமாறியந்வயிப்பது. ஜ்ஞானசூந்யரென்றுபொருள். என்றவத்தால் - என்கிற வந்தவசனத்தாலும், ச்ருதிஸித்தேச்வராபலாபத்தாலும் அணுத்வேத ஜ்ஞாத்ருத்வோச ச்ருதிப்ரதிபன்னரான ஜீவரை விபுக்களாகவும் ஜ்ஞானமாத்ரஸ்வரூபராகவும் சொல்லுகையாலுமென்று ப்ரதமசரணார்த்தம். இத்தால் ச்ருதிவிரோதஃ ப்ரதர்சிதஃ. இந்த ஹேதுக்களுக்கெல்லாம் நாமிசையாச்சாங்கியத்தோடந்வயம். பாசமென்றும் - புருஷனுக்கு பந்தகதயாபாசமென்று சொல்லப்படுமதான, பிரகிருதி தன்னுல் - ப்ரக்ருதியாலே, என்றும்-ஒருனாளும், பலமுமில்லை - பல்பர்யாயமான ஸம்ஸாரபோகமுமில்லை, வீடுமில்லை - மோக்ஷமுமில்லை, என்னும்பண்பால் - என்கிற காதையாலும், புருஷஸ்யதர்சனார்த்தம் கைவல்யமென்று துடங்கி புருஷபந்தமோக்ஷஹேது ப்ரக்ருதியென்று சொல்லிவைத்தே "தஸ்மாந்ந பத்யதேநாபிமுச்யதே நாபிஸம்ஸரதிகச்சித்" என்று புருஷனுக்கு பந்தமோக்ஷங்களில்லையென்று சொல்லுகையாலும் என்று த்விதீயசரணார்த்தஃ. இத்தால் "விப்ரதிஷேதாச்சாஸமஞ்ஜஸம்" என்கிற ஸூத்ரத்தின்படியே பூர்வோத்தரஸ்வவசந விரோதம் சொன்னபடி. காசினிநீர்முதலான-ப்ருதிவீ ஸலிலப்ரப்ருதிகளான, காசினி - ப்ருதிவீ, கார்யங்கள் - கார்யங்கள், கச்சபத்தின் - கச்சபத்தினுடைய, கால்கைபோல் - பாதபாணிகள்போலே, என்றுங்கத்தால் - என்கிற ஜல்பத்தாலும், ஆமையுடைய சரீரத்திலே பாதாத்யவயவங்கள் பூர்வஸித்தங்களாயாகுஞ்சித ப்ரஸாரிதங்களாகிறுப்போலே மஹதாத்யவஸ்தாகார்யங்களும் நித்யஸித்தங்களாய் ப்ரளயஸர்க்கதசைகளிலே ஸங்கோச விகாஸசாலிகளாயிருக்குமல்லது கதாசிதபி அபூர்வாவஸ்த்தாந்தராபத்தி யில்லை என்கிற வபிவ்யக்திபக்ஷாங்கீகாரத்தாலுமென்று த்ருதீயசரணார்த்தஃ. இத்தாலபிவ்யக்தி பக்ஷத்திலாரம்பணாதிகரணபாஷ்யோக்தயுக்திவிரோதஸ்ஸூசிதஃ. ஞாலத்துள்ளீர் - பூமண்டலவர்த்திகளே, இதுஸம்போதகம், நாம் - ப்ரதிபுத்தரான, நம்மாலே, இசையா - அங்கீகரிக்கப்படாததான, சாங்கியத்தை - ஸாங்க்யத்தை, நாடுவார்க்கு - தேடுவார்க்கு, நாசமிலது - நாசமில்லாத, பலம் - மோக்ஷம், இலைகாணும் - கிடையாது கிடீர். (ஙஎ)

கஅ மு—தாவிப்புவனங்கள் தாளிணைசூட்டிய தந்தையுந்திப்
பூவிற்பிறக்கினும் பூதங்களெல்லாம் புணர்த்திடினும்
நாவில்பிரிவின்றி நாமங்கைவாழினு நான்மறையில்
பாவித்ததன்றி யுரைப்பதுபாறும் பதர்த்திரளே. (ஙஅ)

இப்படி நிரீச்வரஸாங்க்யமதத்தை நிரஸித்து இனிமேல் ஸேச்வரஸாங்க்ய ஸம்ஜ்ஞஹைரண்யகர்ப்ப பக்ஷத்தை நிரஸிக்கிறுர். அதுசெய்யு மிடத்தில் ஹிரண்யகர்ப்பன் பகவதௌரஸபுத்ரனுய் ஸர்வஸ்ரஷ்டாவாய் வாக்தேவதா வல்லபனுகையாலே யவனுக்கு ப்ரமப்ரமாத விப்ரலிப்ஸாகரணாபாடவங்களுக்கு ஸம்பாவனையில்லாதிருக்க தத்ப்ரணீதமான யோகதந்த்ரத்துக்கு அப்ராமாண்யங்கொள்ளுகை யனுபபன்ன மன்றோவென்று பிறக்கும் சங்கையை யனுவதித்துப் பரிஹரிக்கிறுர் தாவியிதி. புவனங்கள் - புவனங்களை, தாவி - தாவனம்பண்ணி, தாளிணை - சரணயுகளத்தை, சூட்டிய - சிரஸ்ஸிலே யலங்காரமாக விந்யஸித்தவனுன, தந்தை - பிதாவினுடைய, உந்திப்பூவில் - உதரபுஷ்பத்திலே, நாபீகமலத்திலே யென்றபடி. பிறக்கினும் - ஜநித்தாலும், லோகவிக்ரமண தசையிலே ஸர்வஜநங்களுடைய சிரஸ்ஸிலேயு மருணஸுரபிஸுகுமாரங்களான திருவடிகளை யனுலோசித விசேஷமாக விந்யஸித்தலங்கரித்தவனுன ஸர்வஜகதத்யயபிதாவினுடைய நாபீகமலத்திலே யுத்பன்னனுனுலுமென்று நிஷ்கர்ஷஃ. இத்தால் யோகசாஸ்த்ரவக்தாவான ஹிரண்யகர்ப்பன் பகவதௌரஸபுத்ரனுகையாலே யிவனுக்கு ப்ரமப்ரமாத ஸம்பாவனையில்லையென்று வ்யஞ்ஜிதம். பூதங்களெல்லாம்-ப்ராணிகளை யெல்லாவற்றையும், புணர்த்திடினும் - ஸ்ருஷ்டித்தாலும், இத்தால் லோகஸ்ரஷ்டாவான விவனுக்குத் தன் ப்ரஜைகள் விஷயத்திலே விப்ர

லிப்ஸை யஸம்பாவிதமென்று த்யோதிதம். நாவில்-ஜிஹ்வையிலே, பிரிவின்றி - ஒரு நாளும் விச்லேஷ மன்றிக்கே, நாமங்கை - வாக்தேவதை, வாழிலும் - வஸியாநின்றாலும், இத்தாலவனுக்கு அந்யஸ்மிந்வக்தவ்யேந்யஸ்யவசநமாகிற கரணபாடவம் அஸம்பாவிதமென்று த்வநிதம். நான்மறையில் - நாலுவேதங்களில், பாவித்ததன்றி - பாவிதமான ப்ரமேயமன்றிக்கே, உரைப்பது - சொல்வது, ஹிரண்யகர்ப்பனாலே இதி சேஷ:. வேதவிருத்தங்களான நிமித்தோபாதானபேதாதி யோகசாஸ்த்ரப்ரமேய மென்றபடி. பாறும் - பறந்து போகாநிற்கிற, பதர்த்திரள் - துச்சதாந்யபுஞ்ஜங்கள், யோகசாஸ்திரத்திலும் வேதவிருத்தாம்சம் பரித்யாஜ்ய மென்றபடி. ஹிரண்யகர்ப்பன் க்ஷேத்ரஜ்ஞனாகையாலும் விஷமவிபாகதந்த்ர ஸம்ஸாரப்ரவர்த்தனுதிக்ருதனாகையாலும் அவனுக்கு ப்ரமவிப்ரலிப்ஸைகள் கூடுகையாலும் தத்ப்ரணீத சாஸ்த்ரத்திலே யப்ராமாண்யமுண்டாகலாமென்று ஹ்ருதயம். (ருஅ)

கஅகூ-மூ—காரணனாயுலகளிக்குங் கண்ணன்தேசைக் கண்ணாடிநிழல்போ
லக் காண்கையாலும், தாரணையின் முடிவானசமாதிதன்னைத்
தனக்கேற்றும் விளக்கென்று தனிக்கையாலும், காரணமாமது
தனக்குப் பயனாஞ்சீவன் கைவலியநிலையென்று கணிக்கையா
லும், கோரணியின் கோலமெனக் குறிக்கலாகுங் கோகனதத்
தயன் கூறுஞ்சமயக்கூறே. (ருகூ)

யோகசாஸ்த்ரத்துக்கு நான்மறையில் பாவித்ததன்றியென்று முன்பு ஸாமான்யேநதர்சிதமான வேதவிரோதத்தை விசேஷித்துக் காட்டாநின்று கொண்டு இது விப்ரலிப்ஸாமூலகமே யாகவேணுமென்கிறார் காரணனாயிதி. காரணனாய் - ஜகந்நிமித்தோபாதாநபூதனாய், உலகு - லோகங்களை, அளிக்கும்-ரக்ஷிக்குமவனான, கண்ணன்-க்ருஷ்ணனுடைய, தேசை-தேஜஸ்ஸை, இது மற்றுமுள்ள ஜ்ஞானாதிகளுக்கு முபலக்ஷணம். கண்ணாடிநிழல்போல-தர்ப்பணத்தில் தோற்றின ப்ரதிபிம்பத்தைப்போலே, காண்கையாலும்-நிரூபிக்கையாலும், "பராஸ்யசக்திர்விவிதைவ ச்ரூயதேஸ்வாபாவிகீஜ்ஞானபலக்ரியாச" இத்யாதிச்ருதிகள் பகவத் கல்யாணகுணங்கள் ஸ்வாபாவிகங்களென்றுத் கோஷியாநிற்க வவைகள் முகாத் யாபிமுக்யோபாதிக தர்பணச்சாயாந்யாயத்தாலே ப்ரக்ருதிபுருஷாபி முக்யோபாதிகங்களென்று சொல்லுகையாலு மென்று தாத்பர்யம். இது மற்றுள்ள நிமித்தோபாதாநங்களுக்கு முபலக்ஷணம். இத்தாலித்தந்த்ரத்துக்கு தத்வாம்சத்திலே வேதவிரோதம் சொன்னபடி. தாரணையில்-தாரணையில், முடிவான-பர்யவஸாயியான, சமாதிதன்னை-ஸமாதியை, தனக்கு-ஸ்வாத்மதர்சநார்த்தமாக, எற்றும் - கொளுத்தப்பட்டதான, விளக்கென்று - தீபமென்று, தனிக்கையாலும்-பிரிக்கையாலும், த்ருவாநுஸ்ம்ருதி பர்யவஸாயியாய் அந்தர்பாவித தீப பரமாத்மதர்சந ப்ரதாநமான மோக்ஷோபாயோபாஸநத்தை ஜீவாத்மதர்சநப்ரதானமாக வேகதேசத்திலே விச்ரமிப்பிக்கையாலு மென்றபடி. இத்தாலுபாயாம்சத்திலே வேதவிரோதம்சொன்னபடி. காரணமாமதுதனக்கு-காரணமாமதுக்கு, உபாயமான உபாயத்துக்கென்றபடி. சீவன்-ஜீவனுடைய, கைவலியநிலை-கைவல்யஸ்த்திதி, பயனாம்-பலமாம், என்று கணிக்கையாலும் - எனறு கணிக்கையாலும், த்ருவாநுஸ்ம்ருதி ரூபதயாத்யந்ததுஷ்கரமான ஸமாதிக்கு மலைகல்லியெலிபிடிக்குமாப்போலே அல்பரசமான ப்ரக்ருதிவியுக்தஜீவஸ்வரூபானுபவம் பலமாமென்று சொல்லுகையாலு மென்றபடி. இத்தால்புருஷார்த்தத்திலே வேதவிரோதம் சொன்னபடி. கோகநதத்து - கோகநதோத்பன்னனான, அயன் - அஜனாலே, கூறும் - சொல்லப்பட்டதான, சமயக்கூறு - ஸமயவார்த்தை, ஹிரண்யகர்ப்போக்த யோகஸமயவசநம், கோரணியின்-நர்த்தநத்தினுடைய, கோலம் - அலங்காரம், என - என்று, குறிக்கலாகும் - சொல்லலாம், ஸாமாஜிகவ்யாமோகனார்த்தநடபூமிகாபரிக்ரகந்யத்தாலே மந்தமதிவ்யாமோகநார்த்த விப்ரலம்பவசநமென்று நிச்சயிக்கலாமென்று கருத்து. (ருகூ)

ககூ0-மூ—சாதுசனங்களெல்லாஞ்சச்சையென்னுஞ்சலம்புணர்த்தார்
கோதமசாபமொன்றூற்கொடுங்கோலங்கள்கொண்டிலகில்

பூதபதிக்கடியாரெனநின்றவன்பொய்யுரையால்
வேதமகற்றிநிற்பார் விகற்பங்கள் விலக்குவமே. (௪0)

இப்படி யோகஸித்தாந்த நிஷ்டரைநிரஸித்து நிமித்தமாத்ரேச்வர வாதத்தாலே இவர்களுக்கு ஸஜாதீயரான பாசுபதரை பஹிஷ்கரிக்கிறார். சாது சனங்களெல்லாம்-ஸாது ஜநங்களெல்லாரும், சச்சையென்னும் - அஸாரமென்று சொல்லும்படியான, சலம் - சலத்தை, ச்சலமாவது - வக்து ரபிமதார்த்தாரோபேண தூஷணம். இங்கு ச்சலசப்தத்தாலே மித்யாதோஷாரோபம் விவக்ஷிதம். புணர்த்தார் - சொன்னவர்களான, இது வேதமகற்றி நிற்பார்க்கு விசேஷணம். உத்கடாபத்தசையிலே ஸர்வவித ரக்ஷகனான கௌதமமஹர்ஷி விஷயத்திலே க்ருதக்நதையாலே தங்களை சிஷ்டரெல்லாரும் கர்ஹிக்கும்படி குருபாதகமான கோஹத்தியையாரோபித்தவர்களான வென்றபடி. கொதமசாபமொன்றால்-ஒருகௌதமசாபத்தாலே, கொடும் - க்ரூரங்களான, கோலங்கள் - வேஷங்களை, கொண்டு-ஸ்வீகரித்து, "த்ரிபுண்ட்ரதாரிணோயூயம் பஸ்மோத்தூளநதத்பரா:| பவிஷ்யதத்ரயீபாஹ்யாமித்யாஜ்ஞானப்ரலாபிந:" என்கிறகௌதமருடைய சாபத்தாலே பரிபூதராய் ஜடா பஸ்ம ருத்ராக்ஷ தாரணாதிகளாலே பயங்கர வேஷரா யென்றபடி. த்வாதசவார்ஷிகதுர்ப்பிக்ஷத்திலே கௌதமராலேரக்ஷிதரான வஷ்டாசத்வாரிம்சத்ஸஹஸ்ரப்ராஹ்மணர்கள் முடிவிலே போகிறபோது கௌதமரிடத்திலே கோஹத்தியையாரோபித்து குபிதரானவவராலே சப்தராய் பாஷண்டரானார்களென்று ஸ்ரீமத்வாராஹபுராணாதிகளிலேப்ரஸித்தம். உலகில் - லோகத்தில், பூதபதிக்கு - பூதபதிக்கு, அடியாரென - தாஸரென்னும்படி, நின்று-இருந்து, யச்சீலஸ்வாமிந்யாய:த்தாலே பூதபதிதாஸாநாம் பூதபதிவத் பயங்கரவேஷத்வம் ப்ராப்தமிறே. அடியாரென நின்றென்கிறவித்தால் மகாரார்த்த பூதரான விவர்களுக்கு பகவத்சேஷத்வமே ஸ்வாபாவிகம், பூதபத்யாதி சேஷத்வம் சாபமூலகமாக வந்தேறியென்று ஸூசிதம். அவன் - அந்தபூதபதியுடைய, பொய்யுரையால்-மித்யாபாஷணத்தாலே, தத்ப்ரணீத வ்யாமோகனார்த்த பாசுபததந்த்ரத்தாலே யென்றபடி. வேதம்-வேதத்தை, அகற்றி - பரித்யஜித்து, நிற்பார் - நிற்குமவருடைய, வேதவிருத்த பகாஸகஸ்த் தாத்மத்யாந ஸுராகும்பஸ்தாபந தத்ஸ்த்த தேவதார்ச்சனாத்யாசாரநிஷ்டரான பாசுபதருடைய வென்றபடி. விகற்பங்கள், கபாலிக காளாமுகாத்யவாந்தர மதபேதங்க பரஸ்பரவிருத்தார்த்தங்களை யென்றபடி. விலக்குவம்-நிராகரிக்கிறோம், பஹிஷ்கரிக்கிறோம். (௪0)

௧௯௧-மூ— மாதவனே பரனென்று வையங்காண மழுவேந்தி மயல்தீர்க்க
வல்லதேவன், சைதவமொன்று கந்தவனைக் கடியசாபங் கதுவி
யனையதின்பலத்தை கருதிப்பண்டை, வேதநெறியணுகாத விலக்குதாவி வேறுகவிரித்துரைத்த விகற்பமெல்லாம், ஓதுவது
குத்திரத்துக் கென்றுரைத்தா னோதாதேயோதுவிக்கு மொரு
வன்தானே. (௪௧)

ஸர்வஜ்ஞத்வேந ப்ரஸித்தனான பசுபதிக்கு ப்ரமாதிஸம்பாவனை யில்லாதபடியாலே யவன்பொய்யுரையால் என்றது பபன்னமோ; ப்ரமமில்லையே யாகிலுங் கௌதமசாப பகவதாஜ்ஞாதிமூலக விப்ரலிப்ஸா நிபந்தநமாகையாலே பொய்யுரை யென்னலாமென்னில் அப்போது தத்வாக்யம் பலிக்கும்படி யெங்ஙனே யென்று பிறக்கும் சங்கையை சபலபுருஷசித்த வ்யாமோஹநார்த்தமாக சிலஸத்ய வசநங்களு முண்டாகையாலே பலிக்கலாமென்று கருத்தாலே பரிஹரியா நின்றுகொண்டு இவ்வர்த்தம் பகவத்வசநஸித்த மென்கிறார். ஓதாதே - ஸ்யமக் அத்யயநம்பண்ணாதேதானே, ஓதுவிக்கும் - பரருக்குபதேசிக்குமவனான, ஒருவன்தானே-அத்விதீயனான வீச்வரன் தானே, "யோப்ரஹ்மாணம் விததாதிபூர்வம் யோவைவேதாம்ச்ச ப்ரஹிணோதிதஸ்மை" என்கிறபடியே ப்ரஹ்மாதிகளுக்கும் வேதோபதேஷ்டாவாகையாலே தனக்கு மேலொரு குருவில்லாதபடி ஸ்வதந்த்ரகுருவான நாராயணன் தானே யென்றபடி. இதுக்குரைத்தானென்கிற வாக்யாந்தக்ரியையோடே யந்வயம். பகவத் வாசக சப்தாந்தரங்களிருக்கச்செய்தே பகவானை ப்ரதமகுருவாக நிர்தேசித்தது பசுபதிப்ரணீத

தந்த்ரத்தில் காட்டில் தத்பரமகுருவான பகவானுடைய தத்தந்த்ரஹேயதாப்ரதிபாதக வாக்யத்துக்கு ப்ராமாண்யம்ஸ்வதஸ்ஸித்தமென்று ஸூசநார்த்தம். மாதவனே - மாதவனொருவனே, பரன் - ஸர்வஸ்மாத்பரன், அவதாரணத்தால் தேவதாந்தரவ்யுதாஸ:. என்று-இப்படி, வையங்காண - லோகமெல்லாங் காணும்படி, மழு-மழுவென்கிற வாயுதத்தை, ஏந்தி - எடுத்து, மயல் - ப்ரமத்தை, தீர்க்கவல்ல - நிவர்த்திப்பிக்க ஸமர்த்தனான, தேவன்-தேவனாலே, பாத்மோத்தரகண்டத்திலே சபதபூர்வகமாக பகவத்பாரம்யத்தை யுபதேசிக்கையாலே இவன் மழுவேந்தினது லோகங்களுக்கு தேவதாந்தர பாரம்ய நிவர்த்தனார்த்தமாக தப்தாய:பிண்ட தாரணம் பண்ணினபடியோ வென்றுத் ப்ரேக்ஷிக்கும்படி யிருக்கிற மஹாதேவனாலே யென்றபடி. இதுக்குரைத்த வென்கிறத்தோடேயந்வயம். கைதவமொன்று - ஒருகபடத்தை, உகந்தவரை-அபிலஷித்தவர்களை யென்றபடி. கௌதமரிடத்திலே மித்யா தோஷாரோபிகளான ப்ராம்மணர்களை யென்றமடி. உகந்தவரையென்கிற வித்தால் ருசிபூர்வக பாபபலம் க்ரூரதம மென்று ஸூசிதம். கடியசாபம்-க்ரூரசாபத்தை, தருவியனாய்-அடைவிக்க கடவனாய், அதின்பலத்தை-அந்த சாபத்தினுடைய பலத்தை, கருதி - நிர்த்தாரித்து, கௌதம மஹர்ஷி சப்தப்ராஹ்மணர்க்கு க்ரூரதம தத்சாப பலானுபவார்த்தமாக அதோகதிப்ராபக பாஹ்யதந்த்ரங்களை ரசிப்போமென்று நிச்சயித் தென்றபடி. இதுக்கு உரைத்த வென்கிறத்தோடே யந்வயம். பண்டை - அனாதியான, வேதநெறி - வேதமார்கத்தை, அணுகாத - கிட்டாதபடி, விலங்கு - ச்ருங்கலையை, தாவி - அதிக்ரமித்து, வேறாக - ப்ருதக்காக, விரித்து-விஸ்தரித்து, உரைத்த-சொல்லப்பட்டதான, விகற்பமெல்லாம் - விவிதகல்பங்களை யெல்லாம், ஸர்வவைதிகதுர்மோச வேதமர்யாதா நிகளநிர்களந பூர்வகமாக "நிச்வாஸஸஹிதாயாஸ ரக்ஷாமாதாப்ரமாணத:" இத்யாதிகள்படியே யத்யந்தவிஸ்தாரிதமாய் வேதவிருத்த ப்ரக்ரியா ப்ரதிபாதகமாய் சைவபாசுபத காபாலிக காளாமுகாத்யவாந்தரபேத பிந்நமான பசுபதிதந்த்ரத்தை யென்றபடி, ஓதுவது - அத்யயநம்பண்ணுவது, குத்திரத்துக்கு-க்ஷுத்ரபலத்துக்கு, என்று ஸ்பஷ்டம். உரைத்தான்-சொன்னான், ஸ்ரீமத்வராகபுராணாதிக ளிலிதிசேஷ:. (௩௧)

௧௬௨-மூ—கந்தமலர் மகள்மின்னுங் காரார்மனிக் கருணைமுகிற் கண்டகண்கண் மயிலாயாலும், அந்தமில் பேரின்பத்திலடியரோடேயடிமையெனும் போகமுத மருந்திவாழத், தந்தமதியிழந்தரனார் சமயம்புக்கு தழல்வழிபோய்த் தடுமாறித் தளர்ந்து வீழ்ந்தீர், சந்தநெறிநேரறிவார்சரணஞ்சேர்ந்து சங்கேதத்தவமுநீர் தவிர்மினீரோ. (௩௨)

ஸ்வரூபோசித புருஷார்த்த ப்ராபணார்த்தமாக வீச்வரன்கொடுத்த வைதிகதர்சநத்தை விட்டு பாஹ்யஸமயத்தைப் பற்றினவர்களுடைய விழவை ததனு பவஸாக்ஷிகமாகவே காட்டாநின்று கொண்டு உத்வேலக்ருபாவம்சவதரா யவர்களுக்கு ஹிதோபதேசம் பண்ணுகிறார். கந்தமலர்மகள் - கந்த யுக்த புஷ்பத்தினுடைய பெண்ணான பிராட்டியானவள், மின்னும் - மின்போலே விளங்கும்படியான, கார் - நைல்யத்தாலே, ஆர் - பூர்ணமான, மேனி - சரீரத்தையுடைய, கருணைமுகில் - க்ருபாஜலபூர்ணமேகத்தை, கண்டகண்கள்-பார்த்தநேத்ரங்கள், மயிலாய் - மயூரங்களாய், ஆலும்-ஆடாநிற்கிற, அந்தமில் - அவதியில்லாததான, பேரின்பத்தில் - பெரியவானந்தத்திலே, "வைகுண்டேதுபரோலோகே ஸ்ரியாஸார்த்த" மித்யாதிகளில்படியே தாமரஸ ஸௌரபந்தான் வடிவுகொண்டாப்போலே யதிபோக்யபூதையான பிராட்டியாகிற மின்னலோடே கூடி கருணையாகிறஸலிலத்தை வர்ஷியாநிற்கிற வெம்பெருமானாகிற வலாஹகத்தைக்கண்டு நித்யமுக்த்தர்களுடைய கண்களாகிற மயூரங்க ளானனந்த நர்த்தனம் பண்ணும்படி யத்யாஹ்லாதகரமாகையாலே ஆநந்த வடிவுகொண்டாப் போலேயிருக்கிற திருமாமணிமண்டபத்திலே யிருக்கிற வென்றபடி. அடியரோடே-நித்யமுக்தர்களோடேகூட, அடிமையெனும்-கைங்கர்யமென்று சொல்லப்பட்டதான போகமுதம் - போக்யமானவம்ருதத்தை, அருந்தி - அடைந்து, வாழ - வாழ்கைக்கு, "அநாவ்ருத்திச்சப்தாதநாவ்ருத்திச்சப்தாத்" என்கிறபடியே நித்யமாகவாழ்கைக்கு,

தந்த - ஈச்வரனாலே கொடுக்கப்பட்டதான, மதி - புத்தியை, இழந்து - அடையமாட்டாதே, வைதிகமர்யாதா ப்ரவேசசூந்யரா யென்றபடி. அரனார் - ஹரனுடைய, இங்கு ஹரணைபஹுவசனாந்தபதத்தாலே நிர்தேசித்தது தத்யோபதேசம் விப்ரலிப்ஸாமூலகமல்லது ஸஹ்ருதயமன்றென்று ஸ்போரணார்த்தம். சமயம் – ஸமயத்தை, புக்கு - ப்ரவேசித்து, தழல் - க்ரூரமான, வழி – மார்க்கத்திலே, போய் - நடந்து, தடுமாறி – பரிதஸ்கலிதராய், தளர்ந்து – பரிச்ராந்தராய், எழுந்தீர் - ஸ்பஷ்டம். துஷ்கரதம தபச்சர்யா வேஷாசாரயுக்த பசுபதிஸமயப்ரவேசத்தாலே ஸுகலேசமன்றிக்கே ப்ரத்யுத "சைவாந்பாசுபதாந்ஸ்ப்ருஷ்ட்வா ஸசேலஸ்நாநமாசரேத்" இத்யாதி தர்மசாஸ்த்ரநிந்த்யராய் பாதித்யத்தை யடைந்து போனநீங்க ளென்றபடி. இனி - இதஃபரம், இப்பாடுபட்ட பிற்பாடாகிலு மென்றபடி. நீர் – நீங்கள்; சந்தநெறி - ச்சந்தோமார்க்கத்தினுடைய, நேர் – ஆர்ஜ்ஜவத்தை, அறிவார் - அறிந்தவர்களுடைய, சரணம் – சரணங்களை, சேர்ந்து – அடைந்து, வேதமார்கமர்மஸ்பர்சிகளான வைஷ்ணவர்களுடைய சரணாரவிந்தத்தை ஸுகாரவிகளிதாபிமானராய் சரணமாகப்பற்றி யென்றபடி. வைதிகாபாஸவ்யாவ்ருத்யர்த்தர் நேரறிவா ரென்றது. லோகேபிவழி தட்டினால் வழியறிந்தவரை சரணீகரிக்கையுசிதமிறே. சங்கேதத்தவம்-பசுபதிதந்த்ர பரிக்ராஹித தபோவேஷாசாராதிகளை யென்றபடி. தவிர்மினீர்-விடுங்கோள், இனி மேலாகிலும் விவேகம்பிறவாதோ வென்று ஹ்ருதயம். (௬௨)

௧௬௩-மு—யாதுமிலாதவன்றும் யாவர்க்கு நன்றியெண்ணியநம்
மாதவனார்வதநத்தமுதுண்ணும்வலம்புரிபோல்
வாதுகளாலழியாமறைமௌலியின்வான்பொருளே
ஓதியபஞ்சராத்திரமுழுகவாரைபொழுக்குவமே. (௬௩)

இப்படி தந்த்ராந்தரங்களை நிரஸித்தவாறே பகவத்சாஸ்த்ரத்திலும் தந்த்ரத்வஸாமாந்யத்தாலே ப்ரஸக்தமான வப்ராமாண்ய சோத்யத்தை பரிஹரிக்கிறார். யாதும் ஒரு பதார்த்தமும், இலாதவன்றும்-இல்லாத காலத்திலேயும், மஹாப்ரளயத்திலேயும், யாவர்க்கும்-எல்லாசேதநருக்கும், நன்றி-நன்மையை, எண்ணிய - ஸங்கல்பித்தவனான, நம்மாதவனார்-நம்முடைய ஸ்வாமியான மாதவனுடைய,மாதவனாரிதிபூஜோக்திஃ பகவத்சாஸ்திரப்ரணயந வேதோபதேசாதி முகேந தத்வஜ்ஞானப்ராபகத்வரூப பரமகுருத்வநிபந்தனு. இத்தால் "மாதாபிதாப்ராதாநிவாஸச்சரணம் ஸுஹ்ருத், ஸர்வஸ்யசரணம் ஸுஹ்ருத்" என்கிறபடியேஸுபால ச்வேதாச்வதரச்ருதியின் படியே பரோக்ஷாபரோக்ஷவிபாகமற ஸர்வாவஸ்த்தையிலும் ஸர்வஜந்துநிஸர்க்கஸுஹ்ருத்தாய் "ஸுமஜ்ஜாநயே" என்கிறபடியேநித்யமஜ்ஞாதநிக்ரஹையான பிராட்டிக்கு வசம்வதனை ஸர்வசேஷிக்கு ஸ்வதோவிப்ரலிப்ஸை கூடாமையாலே தத்ப்ரணீதசாஸ்த்ரஸ்யப்ராமாண்யம் துரவபஹ்நவமென்றுவ்யஞ்ஜிதம். வதனத்து-வதனத்தினுடைய, அமுது - அம்ருதத்தை,உண்ணும்-பஜியாநிர்க்கிற,வலம்புரிபோல்-தக்ஷிணாவர்த்தசங்கம்போலே, இதுக்கு ஒழுக்குவமென்கிற க்ரியை யோடே யந்வயம். பகவத்வதநாம் ருதாஸ்வாதப்ரீதரான ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வார் "ஸகோஷோதார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத்" என்கிறபடியே விரோதிஹ்ருதயவிதாரணம் பண்ணுமாப்போலே ஸாக்ஷாத்பகவந்முகோத்கத ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரார்த்த ஸுதாஸ்வாதாப்யாயித ப்ரஜ்ஞாபூர்ணரான நாமும் விரோதி நிரஸநம் பண்ணமாட்டுவோ மென்று ஹ்ருதயம். இத்தால் தமக்கத்யந்தபாரதந்த்ர்யம் க்யாபிதம். இவ்வர்த்தத்தை "[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]" என்றதிகரண ஸாரவல்யந்தத்திலே தாமே யருளிச்செய்தாரிறே. வாதுகளால்-வாதங்களாலே, அழியா - க்ஷோபிக்கவரிதான, மறைமௌலியின் - வேதமௌலியுடைய, வான் - அழகான, ஸாரபூதமான, பொருளே-அர்த்தத்தையே, அவதாரணத்தால் வேதவிருத்தாம்சவ்யுதாஸஃ. ஓதிய - ப்ரதிபாதியாநிற்கிற, பஞ்சராத்திரம் – ஸ்ரீபாஞ்சராத்ரத்தை – உகவாரை - ச்லாகியாதவரை, ஒழுக்குவம் - ஒழுதம்படி பண்ணுகிறோம், த்ரவீகரிக்குறோம், த்ரவீச்ருத

சித்தராய் பாஞ்சராத்ரப்ராமாண்யத்தை இசையும்படி பண்ணுகிறுரென்று நிர்களிதார்த்தः. மறைமௌலியின் பொருளென்கிறவித்தால் வேதானுஸாரித்வம் ஸித்திக்கையாலே ஸ்ரீபஞ்சராத்ரம் புத்தாகமாதிகள்போலே ஔபாதிகவிப்ரலிப்ஸா மூலகமன்றென்று ஸூசிதம். பொருளே என்கிற வவதாரணத்தால் ஸ்ரீபாஞ்சராத்ராதிகரணபாஷ்யோக்தரீத்யா வேதவிரோத லேசமுமில்லை யென்று ஸித்திக்கையாலே ஸ்ரீபாஞ்சராத்ரஸ்ய ஸாங்க்யாதி சாஸ்த்ரவ தேகதேச வேதவிரோதாப்யுபகந்த்ரு சங்கராதி மதவ்யுதாஸஸ்ப்போரிதः. வானென்கிறபொருளின் விசேஷணத்தாலே "வேதாந்தேஷு யதாஸாரம் ஸங்க்ருஹ்யபகவாந்ஹரிः । பக்தாநுகம்பயாவித்வாந் ஸஞ்சிக்ஷேபயதாஸுகம்" என்றுபரமஸம்ஹிதோக்தரீத்யா திவிதத கஹந கம்பீர நிகம சதசிகரித பரமபுருஷார்த்த ததுபாய ததிதிகர்த்தவ்யதாஸ்வநாயேஸௌநவேத்யஸித்யர்த்தமாக பகவானாலே ஸங்க்ருஹீதமாகையாலே ஸ்ரீபஞ்சராத்ரஸ்ய வேதாந்தை ரக்ருதகரத்வ சங்காநிரஸோத்வநிதः. ஓதிய வென்கிற வத்யயந பர்யாயபதப்ரயோகத்தாலே வேததுல்யகக்ஷ்யத்வம் ஸித்திக்கையாலே பகவத்யாமுநமுனிபி ராகமப்ராமாண்யப்ரதர்சித ஸ்ரீபாஞ்சராத்ராதிகரணத்ரிதீய வர்ணகோக்தரீத்யா ஸ்ரீபாஞ்சராத்ரத்துக்கு வேதவிரோதத்தையப்யுபேத்யசிந்தித்தாலும் வேதத்தோடு விகல்பமல்லது பாதம் கூடாதென்று வ்யஞ்ஜிதம். (௪௩)

கக௬௪-மு—பூவலருந்திருவுந்திப்புனிதன்வையம் பொன்னடியாலளந்திருவர்போற்றநின்ற நாவலருங்கலைகளெல்லாந்தன்னைநாட நாடாத நன்னிதியர் நணுகுநன்னாதன் கோவலனாய் நிரையளித்த நிரைபோல்வேதங் கோவாகக்கோமானாயதின்பால்சேர்த்துக் காவலிது நல்லுயிருக்கென்று காட்டுங் கார்த்தயுகக்சதிகண்டோங் கரைகண்டோமே. (௪௪)

ஸ்ரீபாஞ்சராத்ரசாஸ்த்ரத்துக்கு வேதாந்தஸாரார்த்தப்ரதிபாதகத்வத்தை ஸத்ருஷ்டாந்தோபபத்திகமாக வுபஸம்ஹரிக்கிறுர். பூ - தாமரஸபுஷ்பம், அலரும் - விகஸிக்கும்படியான, திருவுந்தி-ஸ்ரீமந்நாபியுடையவனான, புனிதன் -பாவநதமனான, சதுர்முகஜநந ஸ்தாநபூத கமலவிகாஸமஹாஹ்ரதாயமாநநாபிகனாய் பவித்ராணாம் பவித்ரனான வென்றபடி. இத்தால் ஜகத்காரணத்வமும் ஸர்வலோகபரமபாவநகங்கோத்பாதநமுகேந சிவப்ரப்ருதி ஸர்வஜந்துஜ்ஜீவகத்வ ரூப ரக்ஷகத்வமும் சொன்னபடி. வையம்-லோகங்களை, பொன்னடியால்-ஸ்ப்ருஹணீயதமாங்க்ரியாலே; அளந்து-ஸ்பஷ்டம். இருவர்-சதுர்முகத்ரிநேத்ரர்கள், போற்ற-ஸ்துதிபண்ணும்படி, நின்ற-நின்றவனான, இத்தால் ஜகத்ஸ்வாமித்வம் விவக்ஷிதம். நாவு-ஜிஹ்வையிலே, அலரும்-விகஸியாநிற்கிற, கலைகளெல்லாம்-வித்யாஸ்தாநங்களெல்லாம், தன்னை-தன்னுடைய ஸ்வரூபகுணாதிகளை,நாட-தேடச்செய்தே, நாடாத-தேடப்படாத, நல்நிதியர்-நல்லநிதியையுடையவர்களாலே, "ஸக்ருத்த்வதாகாரவிலோகநாசயா த்ருணீக்ருதாநுத்தம புக்தி முக்திபி:" என்கிறபடியே பகவத்ப்ராவண்யாதிசயத்தாலே த்ருணீக்ருதமஹாநிதி ப்ரப்ருதைச்வர்யரானவநந்யப்ரயோஜநர்களாலே யென்றபடி. நணுகும்-கிட்டியாச்ரயிக்கப்படுமவனான,நன்னாதன்-நல்லநாதனானவன், இங்கு நாதனுக்கு நன்மையாவது பரத்வேஸதிஸௌலப்யம். கீழ்ச்சொன்ன விசேஷணங்களித்தை ஸ்புடீகரிக்கிறன. கோவலனாய் - கோபாலனாய், நிரை - பங்தியை, கோபங்தியை, அளித்த - ரக்ஷித்த, நிரைபோல் - பங்திபோலே, ஸௌலப்ய வாத்ஸல்ய ஸௌசீல்யாதி குணவ்ருத்தியாலே கோபாலக்ருத்யம் பண்ணுமாப்போலே யென்றபடி. வேதம்-வேதங்கள், கோவாக-கோக்களாக, கோமானாய் - கோமானாய், கோபாலனாய், அதின்பால் - அந்த வேதகோக்களுடைய க்ஷீரத்தை, சேர்த்து - திரட்டியெடுத்து, "இதம்சதஸஹஸ்ராத்பாரதாக்யாநவிஸ்தராத் । ஆவித்யமதிமந்தாநம் தத்கோக்ருதமிவோத்த்ருதம்" என்கிறபடியே தயிரைக்கடைந்து வெண்ணெயெடுக்குமாப்போலே வேதஸாரார்த்தத்தைத் திரட்டியெடுத் தென்றபடி. இது - இந்த வேதஸாராம்சம், நல்லுயிருக்கு - நல்லஜீவனுக்கு, பகவச்சேஷதைக ஸ்வபாவமான ஜீவஸ்வரூபத்துக்கு, காவல் - ரக்ஷணம், தேவதாந்தரஸம்பந்தாக்ய ஸ்வரூபநாசநிவர்த்தகதிவ்யௌஷத மென்றபடி.

லோகத்திலே கவ்யரஸம் ப்ராஜாஜீவநாதிநிதானமாயிருக்குமிறே. என்று-ஸ்பஷ்டம். காட்டும்-காட்டப்படாநிற்கிற, "இதம்ஶ்ரேயஇதம்குஹ்யமிதம்ஹிதமநுத்தமம்' பவிஷ்யதிப்ரமாணம்வைவதேவாநுசாஸநம்" இத்யாதிப்ரகாரேண பகவானாலே ப்ரதர்சிதமான வென்றபடி. கார்த்தயுகக்கதி - கார்த்தயுககதியை, அபிகமனாதிரூபசுத்தபகவத்தர்மங்களை யென்றபடி. ஆதிக்ருதயுகே சுத்தபகவத்தர்ம ப்ரவ்ருத்திர் மஹாபாரதேப்ரபஞ்சிதா. கண்டோம் - பகவச்சாஸ்த்ரத்தாலே விசதமாகவறிந்தோம், கரை - ஸம்ஸாரார்ணவபாரத்தை, கண்டோம் - ஸ்பஷ்டம். (௪௪)

௧௬௫-ஆ—நமக்கார் துணையென நானென்றருள் தருநாரணனார்
உமக்காறிவை யென்றடி யிணைகாட்ட வுணர்ந்தடையும்
எமக்கோர் பரமினியில்லா திருவினை மாற்றுதலில்
தமக்கே பரமென்று தாமுயருந்தரஞ் சாற்றுவமே. (௪௫)

இப்படி பகவச்சாஸ்த்ரஸ்ய ஸார்வபௌம ப்ராமாண்ய ப்ரதிஷ்டாபந பர்யந்தமாக பரமதஸித்தப்ரக்ரியைகளை விஸ்தரேண ப்ரபஞ்சித்து இனிமேல் தத்தத்ஸம்க்ஷிப்தமான பரமதஸித்தோபாயப்ரக்ரியா நிரஸநத்தை ப்ராதாந்யேந வுபக்ரமியாநின்றுகொண்டு ஸ்வமதே பரமததோஷாநு மப்ரஸங்கார்த்தமாக முற்படஸ்வமதோபாயப்ரக்ரியையை வெளியிடுகிறார். நமக்கு-ஸம்ஸாரதுர்திநாந்ததமஸ்ஸிலே தடுமாறுகிற நமக்கு, ஆர்-எவர், துணை-ஸஹாயபூதர், என-என்று சொல்லவே, ஸம்ஸாரிகளிப்படி சோகிக்கும்தசையிலே என்றபடி. நான்-நான்தான், (துணை)என்று-ஸ்பஷ்டம், அருள்தரும்-க்ருபையைக் கொடுக்குமவனான, நாரணனார்-நாராயணனானவன், நாரணனாரென்கிற பூஜாயாம் பஹுவசநம் "மாமேகம்சரணம்வ்ரஜ" என்று ஸ்வஸ்யஸ்வோபாயத்வோபதேசக்ருத குருத்வநிபந்தநம். இவை-இந்த சரணங்கள், உமக்கு - சோகிக்கிற வுங்களுக்கு, ஆறு-உபாயம், மதீயசரணங்களே உங்களுக்கு துணையாக நிற்கச்செய்தே இவைகளை யவைகளாகநினைத்து நீங்கள் வேறேதுணை தேடுகிறீர்கள், இவைகளே யிறே உங்களுக்கு ஸர்வவிதோஜ்ஜீவநோபாயங்க ளென்றபடி. என்று - இப்படி தாத்பர்யத்தாலே, அடியிணை - சரணயுகளத்தை, காட்ட - உபதேசிக்க, உணர்ந்து - அந்தப்ரகாரம் விச்வஸித்து, அடையும் - சரணம்புக்கு நிற்கிற ஸம்ஸாரிகளுக்கு, ஓர்பரம் - ஒருபரமும், யத்நலேசமும், இல்லாது - இல்லாதபடி, இனி - சரணம் புகுந்தபின்பு, இருவினை - புண்யபாபரூபேண த்விவிதமான கர்மத்தை, மாற்றுதலில் - போக்குகையிலே, தமக்கே - ஸர்வலோகசரண்யனான தமக்கே, பரமென்று-பரமென்று, ந்யஸ்த பரனான சேதநனுடைய வநிஷ்டநிவ்ர்த்தீஷ்டப்ராப்த்யநுகுண ஸர்வவ்யாபாரங்களையும் நானே நடத்துகிறே னென்றபடி. தாம் - அந்த நாரணன் தானே, உயருந்தரம் - உச்ருதனும்படியை, லோகத்திலே அந்யதீயபரத்தை தன்தலையிலெடுத்துக் கொள்ளுமவன் ஸர்வதோ புக்நகாத்ரனாயிருக்கும், ஸர்வேச்வரனோ ஸர்வசேதநருடைய பரங்களையு மெடுத்துக்கொண்டு இரட்டித்தவ்யாப்தியுடையவனாகிறா னென்று விஸ்மயகர்ப்பமிதம். சாற்றுவம்-கோஷிக்கிறோம். ஆகவித்தால் ஸ்வஸித்தாந்தத்திலே ஸர்வேச்வரன் ஸித்தோபாயம், சரணவரணம் ஸத்வாரகமாகவும் அத்வாரகமாகவும் ஸாத்யோபாய மென்று நிர்ணீதமாய்த்து. சாற்றுவமென்கிற வுத்கோஷ பர்யாய பத ப்ரயோகத்தாலே யிவ்வுபாயப்ரக்ரியை ஸ்வகோஷ்டீமந்த்ரபாடமாத்ர ஸித்தையல்ல, கிந்து; ஸர்வவைதிககண்டாபதஜோகுஷ்யமாணமாயிருக்கும், இதில் பரமதோபாயப்ரக்ரியாயாம் வக்ஷ்யமாணதோஷங்களுடைய கந்தமாகிலும் ப்ரஸங்கிக்குமோ வென்று நிரூபணநிபுணர்கள் பரிக்ஷியுங்கோ ளென்றுத்வநிதம். (௪௫)

௧௬௬-ஆ—பலத்திலொரு துவக்கற்ற பதவிகாட்டிப் பல்லுயிருந்தடுமாறப்
பண்ணுகின்ற, கலித்திரளின் கடுங்கழுதைக் கத்து மாற்றிக்
கண்ணுடையார் கண்டுரைத்த கதியைச்சொன்னோம், வலத்தி
லகு மறுவொன்றுன் மறுவொன்றில்லா மாமணியாய் மலர்மா
தரொளியாமநல், நலத்திலொரு நிகரில்லாநாதன்பாத நல்
வழிபா மல்வழக்கார்நடத்துவாரோ. (௪௬)

பரமதோபாயாநுபபத்தியை யுபஸம்ஹரியா நின்றுகொண்டு ஸ்வமதோபாயத்தை ஸம்ப்ரதாயோபபத்திகளாலே ஸ்திரீகரிக்கிறார்.

பலத்தில் - பலத்திலே, ஒருதுவககு - ஏதேனுமொரு ஸம்பந்தமும், அற்ற-இல்லாததான, ஸாக்ஷாத்வா பரம்பரயாவா ஐஹிகஸ்யவா ஆமுஷ்மிகஸ்யவா கஸ்யாபி பலஸ்ய ஸாதநமன்றிக்கே யிருக்கிற வென்றபடி. பதவி - மார்கத்தை, காட்டி - காண்பித்து, பல்லுயிரும் - நாநாசேதநரும், இங்கு ஸமுச்சயத்தாலே பண்டிதபாமர விபாகமன்றிக்கே யென்று விவக்ஷிதம். தடுமாற - தடவும்படி, அந்த நிஷ்பலமார்கத்திலே விழுந்து சுஷ்கக்லேசங்களை யனுபவிக்கும்படி யென்றபடி. பண்ணுகின்ற - பண்ணினவைகளான, இது கழுதைக்கு விசேஷணம். கலித்திரளின் - பாபராசியுடைய, கடும் - க்ரூரங்களான, கழுதை - கர்தபங்களினுடைய, அசேதனபாபராசிகள் தான் க்ரஹீதசரீரங்களானாப்போலே க்ரூரங்களாய் வித்யாபார பராக்ராந்தமாகையாலே கர்தபப்ராயரான பாஹ்யகுத்ருஷ்டிகளுடைய வென்றபடி. கத்து - ஜல்பங்களை, மாற்றி - பஞ்ஜித்து, கண்ணுடையார் - ஸமீசீந ஜ்ஞாநத்ருஷ்டியுடையவரான நம்மாசார்யர்களாலே, கண்டு - ஸாக்ஷாத்கரித்து, உரைத்த - உபதேசிக்கப்பட்டதான, கதியை - கதியை, உபாயத்தை, சொன்னோம்-ஸ்பஷ்டம். அந்த உபாயத்தை விசேஷித்துக் காட்டுகிறது மேல். வலத்து-வக்ஷோதக்ஷிண பார்ச்வத்திலே, இலகும் - ப்ரகாசியாநிற்கிற, ஸந்தௌமாகாரலோபஃ. மறுவொன்றால் - ஸ்ரீவத்ஸாக்ய மறுவொன்றாலே, மறுவொன்றில்லா-மாலிந்ய லேசமில்லாததான, ஸ்ரீவச்ஸமாகிற மறுவொழிய வேறே யொருமறுவில்லை; அந்தமறுத்தானும் ப்ரக்ருத்யதிஷ்டாத்ரு தேவதாரூபதயா நிகர்ஷாதாயகயன்று, ப்ரத்யுத நிரங்குசைச்வர்யாதாயகமா யிருக்கு மென்றபடி. மாமணியாய்-மஹாமணிபோலே போக்யபூதனான, மலர்மாதர்-புஷ்பத்திலே யிருக்கிற ஸ்த்ரீ, பிராட்டி, ஒளியாம் - ப்ரபையாம்படியான, மணிப்ரபாந்யாயத்தாலே பிராட்டியோடே நித்யஸம்ச்லிஷ்டனான வென்றபடி. அந்நல்நலத்தில் - அந்த நல்ல வாநந்தத்திலே, ஒருநிகரில்லா - ஒருஸத்ருசவஸ்து இல்லாதவனான, ஆநந்தாதி கல்யாண குணங்களாலே ஸமாப்யதிகதரித்ரனான வென்றபடி. ஆக இவ்விசேஷணங்களாலே ஹேயப்ரத்யநீகத்வமும் ஸர்வாவஸ்தையிலும் லக்ஷ்மீவைசிஷ்ட்யமும் உபாயத்வோபயுக்த கல்யாணகுணகண பௌஷ்கல்யமும் ப்ரதிபாதித மாகையாலே த்வயத்தில் ஸவிசேஷண நாராயணபதம் வ்யாக்யாத மாய்த்து. நாதன் - நாதனுடைய, பாதம் - திருவடிகளே, நல்வழியாம் - ஸித்தோபாயமா மென்றபடி. இத்தால் சரணசப்தம் வ்யாக்யாதம். ஆர் - எவர், அல்வழக்கு - துர்வ்யவஹாரத்தை, நடத்துவார் - ப்ரவர்த்திப்பார்கள், எம்பெருமான் ஸித்தோபாய மென்கிற வர்த்தத்திலே யொருவராலும் வைபரீத்யம் சொல்ல வொண்ணா தென்றபடி. (௪௬)

௧௬௭·மூ—எல்லார்க்கு மெளிதான வேற்றத்தாலு மினியுரைக்கைமிகை
யான விரக்கத்தாலும் சொல்லார்க்கு மளவாலு மமைதலாலும்
துணிவரிதாய்த் துணைதுறக்குஞ் சுகரத்தாலும் கல்லார்க்குங்
கற்றார்சொற் கவர்தலாலுங் கண்ணனுரை முடிசூடிமுடித்த
லாலும் நல்லார்க்குந் தீயார்க்கு மிதுவே நன்று நாரணர்க்கே
யடைக்கலமாய் நல்குவீரே. (௪௭)

இப்படி ஸ்வஸித்தாந்தத்திலே ஈசுவரன் ஸித்தோபாய மானாலும் சரணாகதியே ஸாத்யோபாயமென்று முன்புசொன்னது பபன்னமோ, பக்தி யென்னுமொரு ஸாத்யோபாயம் சாஸ்த்ரங்களிலே விஹிதமன்றோ வென்று பிறக்கும் சங்கையை பக்த்யபேக்ஷயா சரணாகதிக்கு வைலக்ஷண்யத்தைக் காட்டா நின்றுகொண்டு பரிஹரிக்கிறார்.

எல்லார்க்கும்-த்ரைவர்ணிகாதி விபாகமற ஸர்வஜநங்களுக்கும், எளிதான-ஸுலபமாகையாகிற, ஏற்றத்தாலும், உத்கர்ஷத்தாலும், இத்தால் சரணாகதிக்கு த்ரைவர்ணிகமாத்ராதிகாரபக்த்யபேக்ஷயா ஸர்வாதிகாரத்வமாகிற வுத்கர்ஷம் சொன்னபடி. இனி - இதஃபரம், ஸக்ருத்பரந்யாஸம்பண்ணினபின்பு, உரைக்கை - சொல்லுகை, மிகையான-அதிகமானபடியான, இரக்கத்தாலும்-சித்தத்ரவீபாவத்தாலும், புநஃ ப்ரப

த்தி வாக்யோச்சாரண மநபேக்ஷிதவ்யாபாரமாம்படி ஸக்ருதநுஷ்டாநத்தாலே தானே பகவத்க்ருபோத்தம்பக மாகையாலு மென்றபடி. இத்தாலாப்ரயாணு தஹரஹ ரநுவர்த்தநீய பக்த்யபேக்ஷயா ஸக்ருதநுஷ்டானமாகிற வைலக்ஷண்யம் சொன்னபடி. சொல் - உக்தி, ஆர்க்குமளவாலும் - பூர்ணமானமாத்ரத்தாலும், அமைதலாலும் - பர்யாப்தமாகையாலும், அங்காங்கிவிஷயவைசத்யமில்லாதபோது ஸமுதாயஜ்ஞாநபூர்வக ப்ரபத்திவாக்யொச்சாரணபூர்த்திமாத்ரத்தைக் கொண்டாகிலும் பலஜநகசக்தமாகையாலு மென்றபடி. இத்தால ஜ்ஞாநசக்திபௌஷ்கல்ய நைரபேக்ஷ்யமாகிற உக்திநிஷ்டாப்ரயுக்த வைலக்ஷண்யம் சொன்னபடி. இப்படி சரணாகதிக்கு பக்த்யபேக்ஷயா ஸௌகர்யம் சொன்னதுகூடுமோ; கலவெளுக்கட்டுப்போய் கலவெண்ணெயாயாய்த் தென்கிறபடியே யத்யந்ததுஷ்கர மஹாவிச்வாஸ கடித மாகையாலே பக்த்யபேக்ஷயா தௌஷ்கர்யமே கொள்ளுகை யுசித மன்றோவென்ன, அருளிச்செய்கிறார். துணிவு - விச்வாசம், அரிதாய் - துஷ்கரமாய், துணை - ஸஹகாரிகளை, ஜ்ஞாநயோககர்மயோகாத்யங்கங்களை, துறக்கும் - பரித்யஜிக்கையாகிற, சுகரத்தாலும்-ஸுகரத்தாலும், பாவப்ரதாநோ நிர்தேசः. ஸௌகர்யத்தாலு மென்றபடி. மஹாவிச்வாஸமத்யந்த துஷ்கரமேயாகிலும் ஸ்ரீமத்பரிகரவிபாகாதிகார ப்ரபஞ்சித ரீத்யா சங்காபஞ்சகநிவர்த்தக ஸதாசார்ய ஸம்ப்ரதாயாதிகத ஸவிசேஷண நாராயண சப்தார்த்த பராமர்சத்தாலே யது ஸுகரதரமாய் முடிகையாலே ஸர்வப்ரகார துஷ்கரஜ்ஞாந கர்மயோக கடித பக்த்யபேக்ஷயா ஸௌகர்ய மிதுக்கு துரவபந்ஹவமென்று திருவுள்ளம். கல்லார்க்கும் - அப்யஸியாதவர்களுக்காகவும், கற்றார்-அப்யஸித்தவர்களுடைய, சொல் - உக்தியை, கவர்தலாலும் - ஆதரிக்கையாலும், ப்ரபத்தி வித்யோபதேசமில்லாமையாலே பூர்வோக்த நிஷ்டையிலும் அநதிகாரிகளான வைஷ்ணவர்களுக்குங் கூட வுபதேச பூர்வகப்ரபத்திவாக்யோச்சாரணம் பண்ணுமாசார்யர்களுடைய மதீயத்வோக்தி மாத்ரத்தையே யாதரித்து சரண்யன் பலம்கொடுக்கும்படியிருக்கையாலு மென்றபடி. இத்தால் "சாஸ்த்ரபலம் ப்ரயோக்தரி" யென்கிறபடியே கர்த்தரு மாத்ராநுபாவ்ய பக்த்யபேக்ஷயா ஒருவனநுஷ்டித்தால் மற்றொருவனுக்கு பலங்கொடுக்கையாகிற வாசார்யநிஷ்டா வைலக்ஷண்யம் சொன்னபடி. கண்ணன் - ஸ்ரீக்ருஷ்ணனுடைய, உரை - ஸூக்திகளுடைய, முடி - சிகையை, சூடி - அலங்கரித்து, முடிதலாலும் - பர்யவஸிக்கையாலும், ஸ்ரீகீதாக்ய புரந்த்ரிக்கு சிரோபூஷணமாய் நிலைக்கட்டுகையாலு மென்றபடி. ஸ்ரீகீதையிலுபாயோபதேச பரம்பரா பர்யவஸாந பூமித்வேந சரமோபாய மாகையாலுமென்று நிஷ்கர்ஷம். இத்தால் ஸ்ரீகீதாசார்யனுக்கிதுவே யத்யந்த ஹ்ருதயங்கமமான வுபாயமென்கிற வைலக்ஷண்யம் சொன்னபடி. நல்லார்க்கும் - நல்லவர்களுக்கும், ஸுக்ருதிகளுக்கும், தீயார்க்கும், பொல்லாதவர்களுக்கும், துஷ்க்ருதிகளுக்கும், இதுவே - இந்தசரணாகதியே, நன்றாம்-நல்லதாகும், ஹிதமென்றபடி. இத்தால் பக்திவிரோதி பாப நிவ்ருத்யர்த்தமாக பக்திநிஷ்டனுக்கு மிதுவே யபேக்ஷணீய மாகையாலே சரணாகதியை ஸ்வஸித்தாங்கத்திலே ஸாத்யோபாய மென்று சொல்லத் தட்டில்லை யென்று பரிஹாரம்ஸூசிதம். இதுவே நன்றாமென்று ஸாமாந்யதோ நிர்திஷ்டத்தை விசேஷிக்கிறார் மேல். நாரணர்க்கே-நாராயணனுக்கே, அடைக்கலமாய்-ரக்ஷ்யவஸ்துவாய், அவன் திறத்தில் பரந்யாஸம் பண்ணி யென்றபடி. நல்குவீரே - ப்ரீதராகுங்கோள், நிஸ்ஸம்சயராய் ஹ்ருஷ்டமநஸ்கராய் மாரிலே கைவைத்துக்கொண்டு நித்ரைபண்ணுங்கோளென்றபடி. இப்பாட்டாலே சரணாகதி சப்தோபச்லிஷ்டக்ரியாபதம் வ்யாக்யாதமாய்த்து. ()

௧௯௮-மு—பண்டை மறைக்குப் பகையென நின்ற பரமதங்கள்
கொண்டவர் கொள்ளும் பயனென் றிலதெனுங் கூர்மதியால்
வண்டுவரைக் கரசான நம்மாயனை வானுலகில்
கண்டு களிப்ப தெனுங் காத லொன்றைக் கருதுவமே. (௪௮)

இப்படி த்வயத்தினுடைய பூர்வகண்டத்திலும் சரமச்லோகத்தினுடைய பூர்வார்த்தத்திலும் ஸித்தஸாத்யரூபத்வேந ப்ரதர்சிதங்களான ஸ்வமதோபாயங்களை விசதமாக வுபதேசியாநின்றுகொண்டு பரமதோபாயப்ரக்ரியைகளை நிரஸித்தபின்பு அவை

களுடைய உத்தரகண்டத்திலும் உத்தராத்தத்திலும் விவக்ஷிதமான புருஷார்த்தத்தை பரமத புருஷார்த்த ப்ரக்ரியா நிராஸ பூர்வகமாக வெளியிடுகிறார். பண்டைம றைக்கு - அநாதிகளான வேதங்களுக்கு, பகையென - விரோதிகளென்னும்படி. நின்ற - நிற்குமவையான, பரமதங்கள் - பரமதங்களை, கொண்டவர்-அங்கீகரி த்த வாதிகளாலே, கொள்ளும் - க்ரஹிக்கப்படுமதான, அடையத்தக்கதான வெ ன்றபடி. பயன் - பலமானது, ஒன்றிலது - ஒன்றுமில்லை, ஐஹிகமாத லாமுஷ்மிக மாத லொன்றுமில்லை யென்றபடி. எனும் கூர்மதியால்-என்கிற தீக்ஷ்ணபுத்தியாலே, "யா வேதபாஹ்யா ஸ்ம்ருதயோ யாச்ச காச்ச குத்ருஷ்டய:। ஸர்வாஸ் தாங்ஷ்பலா: ப்ரேத்ய தமோ நிஷ்டா ஹி தா ஸ்ம்ருதா:" என்கிற மனுவசனத்தின்படியே பாஹ்ய குத்ருஷ்டிமதங்கள் ஸர்வப்ரகார நிஷ்பலமென்கிற நிரூபணத்தாலே யென்றபடி. இதுக்குக் கருதுவமென்கிறத்தோடே யந்வயம். வண் - ஸுந்தரமான, துவரை - த்வாரகாபுரத்துக்கு, ஸந்தியிலே தகாரஸ்ய டகாராதேச:. அரசான - ராஜாவான, நம்மாயனை - நமக்கு ஸ்வாமியா யாச்சர்ய சேஷ்டிதனான க்ருஷ்ணனை, வானுலகில் - ஸ்ரீவைகுண்டத்திலே, கண்டு - அனுபவித்து, களிப்பது - வர்த்திப்பது, என்னுங் காதலொன்று - என்கிற வபிலாஷமொன்றையே, பரிபூர்ண ப்ருஹ்மானுபவ பரிவாஹ கைங்கர்யாதிராஜ்யம் கதா ப்ராப்ஸ்யாமி என்கிற ப்ரத்யாசை யொன்றையே யென்றபடி. கருதுவம் - எண்ணுகிறோம். (௬௮)

௧௬௯-மூ.—கலந்திகழும் போகங்கள் கண்டுவெள்கிக் காரியமுங் காரணமு ங்கடந்துநாம்போய்க், குலந்திகழுங் குருக்களடி சூடிமன்னுங் குற்றேவலடியவர்தங் குழாங்கள்கூடி, வலந்திகழுந் திருமகளு மற்றிடத்தே மன்னியமண்மகளாரு நீளையாரும், நலந்திகழ வீற்றிருந்தநாதன் பாதம் நமக்கிதுவே முடியென்ன நண்ணினோமே. (௬௯)

பரமத புருஷார்த்தாநாம் ஆபாஸத்வ விசதீகரணார்த்தமாக ஸ்வமதத்திலே ஸித்திக்கும் புருஷார்த்தத்தினுடைய ஸ்ப்ருஹணீயதமமான பர்வக்ரமத்தை யருளிச்செய்கிறார். நாம்-பகவந் நாதமுநியாதி தர்சனநிஷ்டரான நாம், கலந்திகழும்-கலந்துப்ரகாசியாநிற்கிற, ப்ரதிபந்த ஜடிலங்களான வென்றபடி. போகங்கள்-போகங்களை, கண்டு-பார்த்து, வெள்கி - லஜ்ஜித்து, "சம்பா சலம் பஹுள துக்க மநார்த்த ஹேது ரல்பீய:" என்னும்படியான ப்ரஹ்மாத் யைச்வர்ய ஸுகத்தை நிரூபித்ததில் நின்றும் ஜுகுப்ஸித் தென்றபடி. இத்தால் ஸ்வஸித்தாந்தத்திலே பரிபூர்ண விவேக நிர்வேத விரக்தி பீதி ரூபமான வுபாய பரிக்ரஹ பூர்வபாவி பலவர்கம் சொன்னபடி. இனி மேல் தது்த்தர பாவி பலவர்கம் சொல்லுகிறது. காரியமும் - கார்யங்களையும், காரணமும் - காரணங்களையும். கடந்து - அதிக்ரமித்து, கரண களேபர ப்ரஹ்மாண்ட சதாவரண ரூப கார்யங்களையும் மூலப்ரக்ருதி ரூப காரணத்தையும், அர்ச்சிராதியாலே யதிக்ரமித்து ஸ்ரீவைகுண்டதிவ்ய நகரத்திலே போ யென்றபடி. குலம் - ஸங்கமாக, திகழும் - விளங்காநிற்கிற, குருக்கள் - குருக்களுடைய, அடி - திருவடிகளை, சூடி - சிரஸிலே வஹித்து, மன்னும் - த்ருடமான, குற்றேவல் - கைங்கர்யத்தையுடையவரான, அடியவர்தம் - தாஸர்களுடைய, குழாங்கள்-ஸங்கங்களோடே, கூடி - கலந்து, அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்த ராகையாலே நித்யகைங்கர்ய சாலிகளான நித்ய ஸூரிகளுடைய ஸங்கங்களோடே "மாயப்பிரானடியார்கள் குழாங்களுடன் கூடுவதென்று கொலோ" வென்று சிரகாலாநுவ்ருத்தமான வத்கடாபிலாஷம் மாறும்படி கலந்தென்றபடி. வலம்-தக்ஷிண பார்ச்வத்திலே, திகழும்-விளங்காநிற்கிற, திருமகளும் பெரியபிராட்டியாரோடும், மற்றிடத்தே - மற்றொரு ஸ்தலத்திலே, இடப்பார்ச்வத்திலே யென்றபடி. மன்னிய - ஸ்திரையான, மண்மகளாரும்-பூமிப்பிராட்டியோடும், நீளையாரும் - நீளைப்பிராட்டியாரோடுங்கூடி, நலம் - ஆநந்தமானது, திகழ - உந்மஸ்தகமாய் ப்ரகாசிக்கும்படி. வீற்றிருந்த - வீறு தோற்றும்படி யிருந்தவனை, வீறு - அதிராஜ்யம், நாதன் - ஸ்ரீவைகுண்ட நாதனுடைய, பாதம் - திருவடிகளை, இதுக்கு நண்ணினோ மென்கிற க்ரியையோடே யந்வயம். நமக்கு - தாஸபூதரான நமக்கு,

இதுவே - இந்த திருவடிகளே, முடி - சிரோபூஷணம். என்ன - என்னும்படி, கண்ணினேம் - அடைந்தோம். ஸம்ஸ்ருதிதசையிலே தானே யபவர்கம் ஸித்தப்ராய மென்று பூத வ்யபதேசா பிஸந்திஃ. இத்தால் ஸ்வஸித்தாந்தத்திலே பத்நீ பரிஜந விபூத்யாதி விசிஷ்டனான ஸர்வேச்வரன் ஸித்தோபாயம். உத்தரகண்டத்திலே நமச்சப்தத்திலும் எம்மாவீட்டு திருவாய்மொழியிலும் சோதித ஸ்வரூபமான ததநுபவ பரிவாஹ பூத கைங்கர்யம் உபாயபல மென்று சொல்லித்தாய்த்து. (௪௯)

உ00 மூ— மானங்களின்றி வகுத்துரைக்கின்ற மதங்களெல்லாம்
தானங்களன்று தருமநெறிக் கென்று சாற்றியபின்
வானங்கவர்ந்து மறைமுடி சூடிய மாதவத்தோர்
ஞானங்க ளொன்ற நடக்கின்ற நல்வழி நாடுவமே. (௫0)

இப்படி பரமதங்களெல்லாம் பக்னங்களான பின்பு ஸ்வரூபோசித புருஷார்த்தாபிலாஷிகளுக்கு பகவந்நாதமுநி யதிராஜாதி ஸஞ்சார க்ஷுண்ண கண்டகமான மார்க்கமே சரண மென்று நிகமித்தருளுகிறார். மானங்களின்றி - ப்ரமாணங்களில்லாதே, வகுத்து - பிரித்து, உரைக்கின்ற - தத்தத்வாதிகளாலே சொல்லப்பட்டவையான, மூலபூத ப்ரமாண மில்லாதே வாத்யுத்ப்ரேக்ஷாமாத்ரத்தாலே பகுவிதங்களாக பரிகல்பிதங்களான வென்றபடி. மதங்களெல்லாம் - ஸித்தாந்தங்களெல்லாம், தருமநெறிக்கு - தர்மமார்கத்துக்கு, தானங்களன்று - ஸ்தாநங்களன்று, தர்மவித்யோப யோகிகளன்று, என்று சாற்றியபின் - இப்படி யுக்தோஷித்த பிற்பாடு, வானம்-பரமாகாசாபரபர்யாயமான ஸ்ரீவைகுண்டத்தை, கவர்ந்து-ஆதரித்து, அபிலஷித்து, முமுக்ஷுக்களாயென்றபடி. மறைமுடி-வேதாந்தத்தை, சூடிய-சிரோபூஷணமாகக்கொண்ட, மாதவத்தோர்-மஹாதபஸ்விகளாலே, ஸர்வாதிசாயி ந்யாஸதபோநிஷ்டரான நம்மாசார்யர்களாலே யென்றபடி. ஞானங்கள் - ஜ்ஞாநங்கள், ஒன்ற-ஏகீபவிக்கும்படி, நடக்கின்ற-நடக்கப்பட்டதான, ஜ்ஞாநாநுஷ்டாநங்களேகரூபமாம்படி ப்ரவர்த்திதமான வென்றபடி. நல்வழி - ஸமீசீநமார்கத்தை, நாடுவம் - தேடுகிறோம், சரணீகரிக்கிறோம். (௫0)

உ0௧-மூ—தன்னடிக்கீழுலகேழையும்வைத்த தனித்திருமால்
பொன்னடிக்கேர்க்கின்ற புண்ணியர்கேண்மின் புகலறிவார்
முன்னடிபார்த்து முயலுதலாலவர்சாயையெனப்
பின்னடிபார்த்து நடந்து பெரும்பதமேறுவமே. (௫௧)

இப்படி பரமதங்கள் ஸமஸ்தங்களும் பக்நங்களானபின் தத்ர சிதிலாபிருசிகளாய் புருஷார்த்தாபிலாஷையா லேதேனு மொரு ஸன்மார்கத்தை யுபாதித்ஸுக்களான பராக்ரஹிஜநங்களுக்கு காருண்யபாரவச்யத்தாலே கர்த்தவ்யாம்சத்தை யுபதேசிக்கிறார். தன்னடிக்கீழ்-தன்னுடைய திருவடியின் கீழே, உலகேழையும்-ஸப்தலோகியையும், வைத்த-நிவேசித்தவனான, ப்ரஹ்மாண்டகோடிகளையும் ஸ்வபாதச்சாயையிலே நிறுத்தி யாளுமவனான வென்றபடி. தனி-அத்விதீயனான, திருமால்-ஸ்ரிய:பதியுடைய, பொன்னடிக்கு-ஸ்ப்ருஹணீயங்களான திருவடிகளுக்கு, ஏர்க்கின்ற-யோக்யனான, புண்ணியர் - புண்யத்தையுடையவர்களே, பகவச்சரணாரவிந்த ப்ராப்த்யநுகுணஸுக்ருத விசேஷசாலிகளே யென்று ஸம்போதித்தபடி. கேள்மின்-நான் சொல்லுகிற ஹிதத்தைக் கேளுங்கோள். புகழறிவார் - உபாயஜ்ஞரானவர்கள், பதவாக்யேஷ்வாபாதத: ப்ரதீயமாந விரோத ப்ரசமநாநுகுண ந்யாயாபிஜ்ஞரான நம்மாசார்யர்களென்றபடி. முன்னடி-முன்னே பதந்யாஸம் பண்ணுமிடத்தை, பார்த்து-நிரூபித்து, முயலுதலால் - ப்ரவர்த்திக்கையாலே, நாநாவேதவாக்யார்த்தங்களை ஸம்யங் ந்யாயங்களாலே நிரூபித்து ததநந்தரம் ததநுகுணாநுஷ்டாநத்திலே மூளுகையாலே யென்றபடி. அவர் - அந்த வாசார்யர்களுடைய, சாயையென - சாயை யென்னும்படி, பின்னடிபார்த்து-பின்னே நின்று தத்பதந்யாஸங்களைப் பார்த்து, நடந்து - ஸஞ்சரித்து, பெரும்பதம்-அத்யுந்நதமான ஸ்தாநத்தை, ஏறுவம்-ஆரூடராகுவோம். (௫௧)

உ0உ-மூ—வையமெல்லாமிருணீக்கும்மணிவிளக்காய் மன்னியநான்மறை
மௌளிமதியேகொண்டு மெய்யலதுவிளம்பாதவியாசன்காட்டு
ம் விலக்கில்லாநல்வழியேவிரைந்துசெல்வீர் ஐயமறவறுசமயக்

குறும்பறுத்தோ மணியரங்கரடியவர்க்கே யடிமைசெய்தோம்
மைபகடல்வட்டத்துண் மற்றுந்தோற்றும் வாதியர்தம் வாய்ப்
பகட்டை மாற்றினோமே. (௫௨)

இப்படி இப்ப்ரபந்தத்தாலே பரமதபஞ்சநம் பண்ணவேணுமோ; சாரீரக த்விதீயாத்யாயத்தில் ஸமயபாதத்திலே பகவத்பாதராயண பாஷ்யகாராதிகளாலே தானே ஸர்வமும் க்ருதமன்றோ, என்றுபிறக்கும் சங்கையைப் பரிஹரியாநின்றுகொண்டு கதாநிஷேதகப்ரமாணநாம் முன்பு சொன்னபடியே வீதராகவைதிகவிஷயத்வத்தையும் ஸ்மரிப்பியாநின்றுகொண்டு நாநாவித ஶ்ருதிசிக ரோபப்ரும்ஹண ப்ரவ்ருத்தாப்ததம பாதராயண ப்ரதர்சித கண்டாபதமே ஸாத்விகஜநங்களுக் குபாதேயமென்றுபஸம்ஹரிக்கிறார். வையமெல்லாம்-ஸகலலோகங்களிலும், இருள்-அந்தகாரத்தை,நீக்கும்-நிவர்த்திப்பியா நிற்கிற, மணிவிளக்காய்-ரத்நதீபமாய்,மன்னிய-ஸ்திரமான, இது மதிக்குவிசேஷணம், இத்தால் பவநோதரமாத்ர தமோநிவர்த்தக வாத்யாதி விநாச்ய ப்ரஸித்த தீபாபேக்ஷயா ஜ்ஞாநதீபத்துக்கு வைலக்ஷண்யம் சொன்னபடி. நான்மறைமௌலி - நாலுவேதமௌலிகளுடைய, மதியே - ஜ்ஞாநத்தையே, வேதாந்தசதுஷ்டயஜந்ய ஜ்ஞாநத்தை யென்றபடி. கொண்டு - அவலம்பித்து, அவதாரணத்தால் பாஹ்யமதாவலம்பநவ்யுதாஸஃ. இதுக்குச்செல்வீ ரென்கிறத்தோடே யந்வயம். வேதாந்ததீபத்தைக் கைபிடித்தாலும் வேதாந்தத்தாலே தானே நாநாமார்கங்கள் தோற்றுகையாலே யவைகளில் ப்ரதாரகனன்றிக்கே கண்டாபதத்தை யுபதேசிக்குமவனான வொருதேசிகன் வேண்டாவோ வென்னில், மெய்யலது - ஸத்யமல்லது, விளம்பாத - சொல்லாதவனான, அந்ருதவசக கந்த ரஹிதனான வென்றபடி. இத்தால் ப்ரதாரகத்வ வ்யுதாஸஃ. பகவத் குணவிபூத்யாதிகளிலே மித்யாத்வத்தை யிசையாதவனான வென்று த்வநிதம். வியாசன்-ஶ்ரீமத்வ்யாஸபகவானாலே, காட்டும் - ப்ரதர்சிதமான, விலக்கில்லா - ப்ரதிபந்தகமில்லாததான, ஸர்வப்ரமாணைக கண்ட்யோக ஸ்வரஸகதியாகையாலே விரோதலேச ரஹிதமான வென்றபடி. நல்வழியே-ஸமீசீநமார்கத்திலே தானே, விரைந்து - உகந்து, செல்வீர் - நடவுங்கோள், அய்யம் - ஸம்சயமானது, அற-சின்னமாம்படி, அறுசமயம்,-ஷட்ஸமயங்களுடைய, 𑌚𑌾𑌰𑍍𑌵𑌾
𑌕𑌮𑌾𑌰𑍍𑌹𑌤𑌂 𑌚𑍈𑌵 𑌤𑌥𑌾 𑌬𑍌𑌦𑍍𑌧𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌂। 𑌬𑌾𑌹𑍍𑌯𑌷𑌟𑍍𑌸𑌮𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌤𑍇
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤 𑌪𑌰𑌿𑌪𑌨𑍍𑌥𑌿𑌨𑌃. 𑌕𑌪𑌰𑍍𑌦𑍍𑌯𑌾𑌰𑍍𑌹𑌤𑌮𑍀𑌮𑌾𑌂𑌸𑍇 𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌂 𑌪𑌾𑌶𑍁𑌪𑌤𑌂
𑌤𑌥𑌾। 𑌕𑌾𑌣𑌾𑌦𑌵𑍈𑌯𑌾𑌕𑌰𑌣𑍌 𑌕𑍁𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌸𑌮𑌯𑌾 𑌇𑌮𑍇 (சார்வாகமார்ஹதஞ்சைவ ததாபௌத்த சதுஷ்டயம் । பாஹ்யஷட்ஸமயாஏதே வேதாந்தபரிபந்திநஃ. கபர்த்யார்ஹத மீமாம்ஸே ஸாங்க்யம் பாசுபதந்ததா। காணாதவையாகரணௌ குத்ருக்ஷட்ஸமயாஇமே) என்று பரிகணிதங்களாய் ப்ரத்யேகமாறுவகைகளான பாஹ்யகுத்ருஷ்டி மதங்களுடைய வென்றபடி. குறும்பு - அபிமாநத்தை, அறுத்தோம்-இத்தால் பரமதபஞ்சனத்துக்கு விஜயம் பலமன்று, கிந்து; ஹ்ருதயக்ஷோபநிவ்ருத்தியே பலமென்று பூர்வோக்தம் ஸ்மாரிதம். இப்படி பரமதநிஷ்டர்கள் நிரஸநீயரானால் தாஸ்யம் வஹிக்க விஷயமேதென்னில்; அணியரங்கர் - அலங்க்ருதமான ஶ்ரீரங்கதிவ்யநகரத்திலே வஸிக்குமவரான பெரியபெருமாளுடைய, அடியவர்க்கே - தாஸர்களுக்கு, அடிமை - கைங்கர்யத்தை, செய்தோம் - பண்ணினோம், இத்தால் கதாநிஷேதக ப்ரமாணங்கள் பகவத்தாஸ்ய ரஸிகரான வதிகாரிகளோடு கதையை நிஷேதிக்கிறனவல்லது பாஹ்யகுத்ருஷ்டிகளோடும் கதையை நிஷேதிக்கிறன வன்றென்று விஷயவ்யவஸ்தா ஸூசிதா. கிஞ்ச; இத்தால் நாமிந்த ப்ரபந்த நிர்மாணத்தாலே பரமதபஞ்சனம்பண்ணினது துர்வாதி ஹ்ருதய புடபாக வ்யதாஹேதுவானாலும் பகவத்தாஸ்ய ரஸிக ஶ்ரீவைஷ்ணவஜந ஹ்ருதயொல்லாஸகர மாகையாலே நமக்கு ப்ரத்யவாயகரமல்லாத மாத்ரமன்றிக்கே ஸ்வரூபோசித புருஷார்த்த ரூபமான கைங்கர்யரூபமாயு மிருக்குமென்று த்வநிதம். மைய்ய - அஞ்சநம்போலே யதிநீலமான, கடல் - ஸமுத்ராங்களுடைய, வட்டத்துள்-சக்ரத்தினுள்ளே, ஸமுத்ரபரிவ்ருத திக்சக்ரவாள மத்யத்திலே யென்றபடி. மற்றும் - பூர்வநிரஸ்தங்களன்றிக்கே வேறேயும், தோற்றும் - உத்பன்னராகிற, வாதியர்தம்-வாதிகளுடைய,வாய்

ப்பகட்டை-வாயாலுண்டான மயக்கத்தை, மாற்றினோம்-பஞ்சித்தோம், இத்தால் சாரீரகஸமயபாத நிரஸ்தங்களான மதங்களையே யுக்திகளாலே ஸ்தாபிக்கிறோமென்று தேசாந்தர காலாந்தரங்களிலே முளைக்கும் அவ்வோவாதிகளுடைய வ்யாமோஹ நிரஸநார்த்தமாக விப்ரபந்த மவச்யநிர்மாதவ்யமென்று சொல்லித்தாய்த்து. (௫௨)

௨௦௩-மு. கோதவமொன்றில்லாத தகவேகொண்ட கொண்டலெனவந்து லகிலைவர்க்கன்றோர், தூதுவனாயொருகோடி மறைகளெல்லாந் தொடர்ந்தோடத்தனியோடித் துயரந்தீர்த்த, மாதவனார்வடகொங்கில்வானியாற்றின் வண்ணிகைநன்னடங்கண்டு மகிழ்ந்துவாழும், போதிவைநாம்பொன்னயிந்தைநகரின்முன்னாட் புணராதபரமதப்போர்பூரித்தோமே. (௫௩)

இந்த பரமதபங்கப்ரபந்தத்தைத் திருவஹீந்த்ரபுரத்திலே தேவநாயகனை மங்களாசாஸநம்பண்ணிக்கொண்டிருக்கிறபோது நிர்மித்தோமென் றுபஸம்ஹரிக்கிறார். கோது - அஸாரம், அவம் - தோஷம், ஒன்றில்லாத - இவையொன்றுமில்லாததான, தகவே - க்ருபையையே, கொண்ட - ஸ்வீகரித்ததான, க்ருபைக்கு கோதாவது ஸ்வப்ரயோஜநஸாபேக்ஷதை, அவமாவது விஷயீகரித்தபின்பு தோஷதர்சனத்தாலே கைவிடுகை. கொண்டலென - வலாஹகமென்னும்படி, நிருபாதிக நிஷ்கம்பா நுகம்பாரஸத்தையே ஜலமாகக் கொண்டிருக்கிற ஸ்நிக்த ச்யாமள வலாஹகமென்னலாம்படி யென்றபடி - உலகில் - இந்தலோகத்திலே, வந்து - அவதரித்து, ஐவர்க்கு - பஞ்சபாண்டவர்க்கு, அன்று-பாரதஸமரஸந்நாஹபூர்வஸமயத்திலே, ஓர் தூதுவனாய் - விலக்ஷண தௌத்ய சாலியாய், ஒருகோடி - ஒரு கோடி ஸங்க்யாகங்களான, மறைகளெல்லாம்-வேதங்களெல்லாம், தொடர்ந்தோட-பரிஜனங்கள்போலே யநுஸரித்து தாவநம்பண்ண, தனி - அஸஹாயராக, ஓடி - ஸ்வயம் பாதங்களாலே தாவனம்பண்ணி, ஓடி யென்கிறவித்தால் ப்ரேக்ஷகபாரதந்த்ர்யப்ரயுக்த த்வராதிசயம் ஸூசிதம். துயரம் - துக்கத்தை, தீர்த்த - போக்கடித்தவரான, தான் தௌத்யார்த்தமாக நடக்கும்போது லோகத்தார்க்கு ஸஹாயரஹிதனாகத்தோற்றநின்றுகொண்டே ஸ்வ கல்யாணகுண ஸ்துதி பாடக வந்திப்ருந்த ஸ்தாநீய வேத நிகுரும்பங்களாலே யநுகம்யமானராய் தௌத்யத்தைப் பண்ணியும் மற்றும்ஸாரத்ய கீதோபதேசாதிகளைப் பண்ணியும் ரக்ஷித்தவரான வென்றபடி. மாதவனார் - ஸ்ரீயஃபதியானவர், மாதவனென்கிறபூஜோக்தி கீதோபதேசநிபந்தநாசார்யத்வப்ரயுக்தா. இதுக்கு மகிழ்ந்து வாழும்போதென்கிறத்தோடே யந்வயம். பொன் - ஸ்ப்ருஹணீயமான, அயிந்தைநகரில் - அஹீந்த்ரபுரத்திலே, வடகொங்கில் - உத்தரபார்ச்வத்திலே, வானியாற்றின் - வாஹிநியாயிருக்கிற நதியினுடைய, கருட நதியினுடைய, வண்ணிகை - வர்ணநீயமான, நன்னடம் - நல்லநடத்தை, பாவப்ரதாநோநிர்தேசஃ. நல்லநாட்யத்தையென்றபடி. கண்டு - பார்த்து, மகிழ்ந்து வாழும்போது - ஸுகமாக வஸிக்கும்போது, பூர்வோக்த ஸௌலப்ய ஸௌசீல்யாதி கல்யாணகுண பரிபூர்ணரான ஸ்ரீக்ருஷ்ணன் திருவஹீந்த்ரபுர மென்கிற திவ்யதேசத்திலே அர்ச்சையாக வவதரித்து தேவநாயகனென்று பேர்பெற்று ஸ்வாது ஸதாவதாத ஸுபக ஸ்வாநுகம்பா பரம் போலே ஸ்வோத்தரபார்ச்வத்திலே ப்ரவஹிக்கிற கருடநதியினுடைய ச்லாகநீயதரங்கநாட்யத்தைக் கடாக்ஷித்துக்கொண்டு விரஜாபூர பரிஷ்க்ருத பரமவ்யோமத்திலே போலே யதிப்ரீதனாய் வஸிக்குங்காலத்திலே யென்றபடி. நாம் - இப்படிப்பட்ட தேவநாயகனுடைய ஸேவையாலே யுந்மஸ்தகாநந்தசாலிகளான நாம், முன்னாள் - பூர்வகாலத்தில், புணராத - ரசிக்கப்படாதவையான, இவை-இந்த, பரமதப்போர்-பரமதயுத்தங்களை, பரமதபங்கங்களை யென்றபடி. பூரித்தோம் - ஸம்பூர்ணமாக்கினோம், பரமதப்ரமேயங்களிலே சாரீரகசாஸ்த்ராதிதூஷிதாம்சமன்றிக்கே மற்றும் ஸம்பாவிதங்களான தூஷ்யாம்சங்களையும் தூஷித்து சேஷபூரணம் பண்ணினோ மென்று நிர்களிதார்த்தம்- (௫௩)

௨௦௪-மு. திகிரிமழுவுயர் குந்தந்தண்டங்குசம் பொறிசிதறுசதமுக வங்கி வாள்வேலமர்ந்ததும் தெளிபணிலசிலைகண்ணி சிரங்கசெவ்விடி

ச்செழியகதைமுசலந் திரிசூலந்திகழ்ந்ததும், அகிலவுலகுகள்
கண்டையா யோரலங்கலில் லடையவடைவி லிலங்கவாசின்றி
நின்றதும், அணியுமருகணையுமலவாமென்ன நின்றடியடையு மடி
யரையன்பினலஞ்சலென்பதும், மகிழுமமரர்கணங்கள்வானங்
கவர்ந்திட மலியுமசுரர்கொணர்ந்தமாயந்துறந்ததும், வளரணிம
ணிகண்மின்னவானந்திகொண்டிட மறைமுறைமுறைவணங்க
மாறின்றிவென்றதும், சிகிபிரவிமதியுமிழுதேசுந்தவெண்டிசைத்
திணி மருள்செகவுகந்து சேமங்கள்செய்ததும், திகழரவணை ய
ரங்கர் தேசென்ன மன்னியத் திரிசுதர்சனர் செய்யவிரொண்
புயங்களே. (௫௪)

இப்படி பரமதங்களை பஞ்சித்து இனிமேல் விரோதி நிரஸநாதிக்ருதரா யுபக்ரமத்திலே தம்மாலே யஷ்டபாஹுகத்வேந அநுஸம்ஹிதரான ஸ்ரீஸுதர்சனாழ்வாருடைய ப்ரபாவத்தாலே யிம்மதங்கள் பக்நங்களாயின வென்கிற க்ருதஜ்ஞதாப்ரயுக்தமான உகப்பாலே யவருடைய ஷோடச புஜங்களைக்கொண்டாடுகிறார். திகழ்-விளங்காநிற்கிற, அரவு - ஸர்பமாகிற, திருவநந்தவாழ்வானாகிற, அணை - சய்யையையுடையவரான, அரங்கர் - ஸ்ரீரங்கநாதனுடைய, தேசென்ன - தேஜஸ்ஸென்று சொல்லும்படியாக, மன்னி - ஸ்திரரான, "வ்யூஹ ஸ்தேஜோபிமாநீ நரகவிஜயிநு" என்கிறபடியே பகவத்திவ்யதேஜோபிமானி தேவதையாகையாலே பகவத்தேஜஸ்ஸுதான் புஞ்சீபூத மென்னலாம்படி ப்ரதிஷ்டிதரான வென்றபடி. திருசுதர்சனர் - ஸ்ரீஸுதர்சநாழ்வாருடைய, செய்ய - சிவந்தவைகளான, தாமரஸாருணங்களான வென்றபடி. யத்வா-செய்ய - ருஜுக்களான, ஈர்-த்விகுணிதையான, எண்-அஷ்டஸங்க்யைகளை யுடையவைகளான, ஷோடசஸங்க்யாகங்களான வென்றபடி. புயங்களே - புஜங்களே, இதுக்கு மேல் க்ரியையோடே யந்வயம். திகிரி - சக்ரம், மழு - பரசு, உயர் - உச்ச்ருதமான, குந்தம் - குந்தம், தண்டு-தண்டம், அங்குசம்-அங்குசம், பொறி - ஸ்புலிங்கங்கள், சிதறு - பரிதோ விப்ரகீர்ணங்களாம்படியான, சதமுகம் - சதமுகமான, அங்கி-அக்நி, ஸர்வதஸ் ஸமுத்பதத் ஸ்புலிங்கசதஸஹஸ்ராகுல விஷ்வங்முக லேலிஹாந ஜ்வாலாமாலா ஜடிலமான வஹ்நியை யென்றபடி. தாத்ருசாக்னிரூபாயுதமென்று நிர்களிதார்த்தம். வாள் - கட்கம், வேல்-பல்லம், அமர்ந்ததும் - இவைகளை யமரும்படி தரித்ததும். ஈரொண்புயங்களே யென்று ஸம்பந்தம். இப்படி மேல்க்ரியைகளுக்கும் கண்டுகொள்வது. தெளி - நிர்மலமான, பணில-சங்கம், சிலை - தநுஸ்ஸு, கண்ணி - பாசம். சீர் - ஸீரமாகிற, அங்க-அங்கம், ஸீரமாகிற சிங்ஹ மென்றபடி. ஸீரம்-கலப்பை. அங்கம் சிங்ஹம். செவ்விடி - சிவந்ததாந வசநி, செழிய - அபிவ்ருத்தையான, கதை - கதை, முசலம் - முஸலம், திரிசூலம்-த்ரிசூலம், திகழ்ந்ததும் - ப்ரகாசித்ததும், ஈரெண்புயங்களே. அகில - ஸகலங்களான, உலகுகள் - லோகங்கள், கண்டையாய் - கண்டையாய், ஒரலங்கலில் - ஒருமாலையிலே, அடைய - கார்த்ஸ்ந்யேந, அடைவில் - க்ரமேண, இலங்க-விளங்கும்படி, வாசின்றி-வாஸமன்றிக்கே, ஆஸிகையன்றிக்கே, நின்றதும்-ஸ்பஷ்டம். அகில புவனாத்மககண்டாஸ்ரேணீ கும்பிதையான வீரகண்டாமாலையை தரித்துக்கொண்டு ஆலீடாதி விசேஷத்தோடேகூட விரோதி நிரஸநோத்யமம் தோற்றும்படி நின்றது மென்றபடி. ஈரெண்புயங்களே. இங்கு பாதவ்யாபாரமான ஸ்திதிவிசேஷமும் புஜபராக்ரமவிஜ்ரும்பணபரிவாஹமாகையாலே யத்தை புஜதர்மமாக வுபசரித்தபடி. அணியும்-அலங்காரமும், அருகணையும் - அர்ஹணையும், ஆராதனமும், அல்ல - இல்லாதிருக்கவுமாம், ஆம் - உண்டாயிருக்கவுமாம், என நின்று - என்னும்படி நின்று, இதுக்கஞ்சலென்பது மென்கிறத்தோடே யந்வயம். அடி-திருவடிகளை, அடையும் - சரணமாக வாஸ்ரயிக்குமவரான, அடியரை - தாஸர்களை, அன்பினால் - ப்ரீதியால், வாத்ஸல்யத்தாலே, அஞ்சல் - பயப்படவேண்டாம், என்பதும் - என்று சொல்லுமதுவும், ஈரெண்புயங்களே. பூஷணமும் கந்தபுஷ்பாதிபிரர்சநமும் உண்டானாலு மில்லாவிட்டாலும் தத்ஸத்பாவாஸத்பாவங்களைப் பாராதே கேவலக்ருபையாலே தாஸாநாமபயதாநம் பண்ணு

மது மென்றபடி. இனிமேல் பயநிவர்த்தநப்ரகாரத்தையே விஸ்தரிக்கிறது. மகிழ் - ஹர்ஷியா நிற்கிற, அமரர்கணங்கள் - அமரகணங்கள், வானம் - ஸ்வர்க்கத்தை, கவர்ந்திட - ஆதரிக்கைக்கு, ஸுகமாக வாண்டுகொள்ளும்படி யென்றபடி. இதுக்கு துறந்ததுமென்கிறத்தோடே யந்வயம். மலியும் - ஸங்கீபவியாநிற்கிற, அசுரர்-அஸுரர்களாலே, கொணர்ந்த - உத்பாதிதங்களான, மாயம் - மாயைகளை, துறந்ததும் - நிவர்த்திப்பித்ததும். ஈரெண்புயங்களே. தேவாஸுரஸங்கரத்திலே ஸர்வதேவ கபளீக்ருதிக்ஷமைகளாய் அஸுரப்ரயுக்தைகளான மாயைகளை க்ஷணத்திலே நசிப்பித்தது மென்றபடி. வளர்-வர்த்தியா நிர்க்கிற, அணிமணிகள் பூஷணரத்நங்களாலே, மின்னு - உஜ்வலிதமான, வான் - ஆகாசமானது, அந்தி - ஸந்த்யையை, கொண்டிட-அங்கீகரிக்கும்படி, ஸ்வபூஷணசநனமணி கிரண ரஞ்ஜிதமான வாகாசம் ஸந்த்யாராக பூரிதம் போலே விளங்கும்படியென்றபடி. மறை - வேதங்கள், முறைமுறை - பர்யாயம் பர்யாயமாக, வணங்க-ஸேவித்திருக்கும்படி, வந்திகள்போலே யொன்று விஶ்ரமித்தாலொன்று துடங்கி ஸ்த்ரோத்ரம் பண்ணும்படி யென்றபடி. மாறின்றி - திரும்பாதபடி, முன்னேவைத்தகால் பின்னே வாங்காதபடி யென்றபடி. வென்றதும்-ஜயித்ததும், விரோதிகளை யிதிசேஷ:. ஈரெண்புயங்களே. எண்டிசை-எட்டுதிக்குகளும், எண்டிசை என்கிறவிடத்திலே ஸந்தௌ த்காரஸ்ய டகாராதேச:. சிகி-அக்நி, இரவி - ஸூர்யன், மதி - சந்த்ரன், உமிழும் - உத்கீர்ணங்களான, தேசு-தேஜஸ்ஸுக்களை, உந்த - ஏந்தும்படி, தரிக்கும்படி, "ஸோமஸூர்ய தஹந ப்ரபோஜ்வலம் சக்ரமேத திதம்மஹாமுநே" என்றஹிர்புத்ந்யஸம்ஹிதோக்த யுக்த்யா திசாஷ்டகமும் தேஜஸ்த்ரயீமுகபடலீவ்யாப்த மென்றபடி. திணி - த்ருடமான, மருள்-அஜ்ஞாநம், செக-நசிக்கும்படி, பாஹ்யதமஸ்ஸுபோலே தேஜஸ்த்ரயீதுர்நிராஸமான வவாந்தர தமஸ்ஸுங்கூட நசிக்கும்படி யென்றபடி. உகந்து-ப்ரீதி புரஸ்ஸரமாக, சேமங்கள்-க்ஷேமங்களை, செய்ததும்-பண்ணினதும், ஈரெண்புயங்களே. ஆஶ்ரிதாநாம் பாஹ்ய குத்ருஷ்டிமதமூலக பஹுவித க்ஷோபநிவர்த்தந பூர்வக ஸம்யக் ஜ்ஞாநோத்பாதநத்தாலே யுஜ்ஜீவிப்பித்தது மென்றபடி. (௫௪)

இத்த2ம் வகுலாப4ரணோ தா4ர்ஷ்ட்யயா வீரராக4வோ தா3ஸ: ।
ஶ்ரீஶ பரமதப4ங்க3 ப்ரப3ந்த4மாயா ஸுதா4த்ரே வ்யவ்ருணோத் ॥ (௪)

நாஹம் வேத்3மி ஹ்ருதி3 ப்ரமாதா3தி3ஸம்ப4வா தோ3ஷா: । தாநபி
ஶாந்த்ருஷ்ட்ஞாம் ஶ்ருதிஶிரோகு3ரவ: ஸ்தோ2ம் விப்ரஶமாஸ்து ॥ (௫)

ஸம்வத்ஸரே ஶ்ரவணஸ்ய தாரீப யோக்3ஜ்ஞைர்நத்யா ஸம்யஸ்த்யா
வ்யாக்2யாதம் ஶுத்3தி4ப்ராஜ்ஞை: ப்ரஸந்நாஶயா: । யோஸாவஸா
ஸம்வத்ஸரம் ஶ்ரீவாதூ4லகுலதிலக ஶ்ரீராமாநுஜஸம்யமீந்த்3ரகாரு
ணாலப்4யஜ்ஞாந ஜந்துஷு ஹம் ॥ (௫)

இதி ஶ்ரீமத்தாதயார்ய சரணாரவிந்த3சஞ்சரீக ஶ்ரீவாதூ4லகுலதிலக ராமாநுஜ ஸம்யமீஶ்வர சரணநளிநஜ ஶ்ரீஸூக்தஸாராய ணாமாநஸ் வகுலாப4ரண வீரராக4வதா3ஸ க்ருதிஷு பரமதப4ங்க3 வ்யாக்2யாநம் ஸம்பூர்ணம்.

ஶ்ரீமதே நிக3மாந்த மஹாதே3ஶிகாய நம:.

வகுளாபரணீய பரமதபங்கவ்யாக்யானம்

முற்றிற்று.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:.

ஸ்ரீ ஹஸ்திகிரி மஹாத்ம்யம்.

[illegible]

மூ.—வாழியருளாளர் வாழியணியத்திகிரி
வாழியெதிராசன் வாசகத்தோர்-வாழி
சரணாகதியென்னுஞ்சார்வுடன்மற்றொன்றை
யரணாகக்கொள்ளாதாரன்பு. (க)

ஸகலலோகஹிததமவிஷய விவித வேதாந்தோபப்ரும்ஹணங்களான புராணங்களில் முக்யதமமாகையாலே முற்பட வெண்ணப்பட்ட ப்ரஹ்மாண்டபுராணத்தில் ஸத்யவ்ரதக்ஷேத்ர மாஹாத்ம்ய முகத்தாலே ஸந்தர்சிதமான பேரருளாளன் அருளின்பெருமையை பாவுகரான பகவந்நிஷ்டருடைய ஹ்ருதயரஞ்ஜநார்த்தமாக மநஸ்ஸிலே பாவமும் வாக்கிலே ராகமும் கரத்திலே தாளமுமாக பாவராக தாளங்களை வகுத்த பரதசாஸ்த்ரத்தின்படியே பண்ணுமிசையில் திகழும்படி வெளியிடக்கோலி முற்பட, "[illegible]" என்கிற ச்லோகத்தாலே ஸந்த்யா தாண்டவ ரஸிக சம்பு கபர்தா போக விச்ருங்கல விஹாரகுதூஹலாவிஷ்ட நதீஸார்வபௌம மந்தாகினீஜநகபவநத்வத்யோதித பாவநத்வாதிசயத்தாலும் ஸஸம்ப்ர மாவநம்ர ப்ருந்தாரககுடும்ப நிகுரும்பொத்தமாங்க தாரித பாரிஜாதப்ரஸூந தாம பரிகர்மிதத்வ வ்யஞ்ஜித போக்யதாதிசயத்தாலும் மஹதாம்மஹநீயமாய் ஸகலவேததாத்பர்ய விச்ராந்தி பூமிபூதமான பேரருளாளனுடைய சரணாரவிந்தத்தை ஸதா ஸேவிக்கக்கடவோமென்று மங்களத்தையாசரித்து, தந்முகேந, இப்ரபந்தத்துக்கு பரமகாருணிகரானபேரருளாளன் பரமவிஷயபூதர், ஈடஸ்துதஸ் என்கிறதாதுவிலே லோடுத்தம பகுவசநாந்ததயா நிஷ்பந்நமான ஈடாமஹே யென்கிற பதத்திலே விவக்ஷிதமாய் "விபந்யவ:" என்கிற ச்ருதிஸித்தமான பரமாத்மனைச் சூழ்ந்திருந்து பல்லாண்டேத்துகை பரமப்ரயோஜநம், மஹத்துக்களதிகாரிகளென்று விஷயப்ரயோஜநாதிகாரிகளை ப்ரகாசிப்பித்தினிமேல் மஹத்சப்தநிர்திஷ்டரான வதிகாரிகளை விசேஷித்துக்கொண்டு ப்ரபந்தத்துக்கு பரமவிஷயத்தோடேகூட வவாந்தரவிஷயத்தையு மவாந்தரபலத்தையும் காட்டுகிறார்.

அருளாளர் - பேரருளாளர், வாழி - வாழக்கடவர், இத்தால்ப்ரபந்தத்துக்கு பரமவிஷயத்தைக்காட்டினபடி. அணி - அலங்காரபூதமான, சிகண்டபூதமான வென்றபடி. அத்திகிரி - ஹஸ்திகிரியானது, வாழி - வாழக்கடவது, இத்தாலவாந்தரவிஷய

விஷயத்தை வெளியிட்டபடி. எதிராசன்-எதிராஜனுடைய, வாசகத்தோர் - வாசகத்தையுடையவர்கள், பகவத்பாஷ்யகார ஸூக்திநிஷ்டரான வநந்யதேவர்கள் என்றபடி, வாழி - வாழக்கடவர்கள், இத்தால் மஹச்சப்த நிர்திஷ்டரான வதிகாரிகளை விசேஷித்தபடி. சரணாகதியென்னும் - சரணாகதியென்று பேர்பெற்றிருக்கிற, சார்வுடன் - அபாச்ரயத்தோடே, மற்றொன்றை - வேறே யேதேனுமொன்றை, அரணாக - ரக்ஷகமாக, கொள்ளாதார் - அவலம்பியாதவருடைய, அன்பு - பிரேமம், சரணாகதி வித்யாவஷ்டம்ப தார்ட்யத்தாலே ஸ்வரக்ஷணார்த்த வ்யாபாரலேசத்திலு மந்வயமில்லாத வநந்யோபாயருடைய ப்ரேமமென்றபடி, வாழி - ஸ்பஷ்டம், இத்தால் சரணாகத்யதிகாரமான வநந்யோபாயத்வமும் தத்கார்யமான சரணாகதியும் நிருபாதிக பகவத்ப்ரேமமு மிப்ரபந்தத்துக் கவாந்தரப்ரயோஜந மென்று தர்சிதமாய்த்து.

மூ.—எண்டிசையுங் கடலேழு மலைகளேழு மீரேழுவையகமும் படைத்திலங்கும், புண்டரிகத்தயன்புணர்த்த பெரியவேள்விப்புனிதநறும்போக்கியதையுகந்துவந்து, தொண்டையெனு மண்டலத்தி னடுவிற்பாரிற் றூநிலமெய்விரதத்திற் றோன்றிநின்ற, கொண்டலருட் குணமேநாங்கூறுகின்றோங் கூர்மதியீர் குறிப்பாகக் கொண்மினீரே. (௨)

இப்படி மங்கலாசரணமுகத்தாலே விஷயப்ரயோஜனாதிகாரிகளை தர்சிப்பித்தினிமேல் ப்ரபந்தப்ரதியாத்ய கதாசங்க்ரஹ பூர்வகமாக சிகீர்ஷித ப்ரதிஜ்ஞையை பண்ணிக்கொண்டு ஸஹ்ருதயரை ஸ்வப்ரபந்தவிஷயக ஸாவதாந பர்யாலோசனத்தை யப்யர்த்திக்கிறார்.

எண்டிசையும் - எட்டுதிக்குகளையும், கடல்ஏழும் - ஏழுகடல்களுமென்றந்வயம். ஸப்தசாகரங்களையு மென்றபடி, மலைகளேழும் - சப்தகுலாசலங்களையும், ஈரேழு-த்விகுணித சப்தசங்க்யாகங்களான, சதுர்தசஸங்க்யங்களான வென்றபடி. வையகமும்-லோகங்களையும், படைத்து - ஸ்ருஷ்டித்து, இலங்கும் - விளங்காநிற்கிற, க்ருத்ஸ்ந பதார்த்தவ்யஷ்டி ஸ்ருஷ்ட்யதிகாரியான வென்றபடி, இத்தாலிவனுக்கு சக்த்யதிசய ஸ்ஸூசிதஃ. புண்டரிகத்து-புண்டரீகத்திலுத்பன்னனான, இத்தால் ஜந்யோத்கர்ஷோ தர்சிதஃ. அயன்-அஜனாலே, புணர்த்த-அனுஷ்டிதமான, பெரிய - மஹத்தரமான, ஸ்வக்ருதோத்கர்ஷ தாரதம்ய விச்ராந்தி பூமியானவென்றபடி. வேள்வி-யாகத்திலே, அச்வமேதத்திலே யென்றபடி, புனித - பாவநமான, நறும்- சுத்தமான, போக்கியத்தை-போக்யத்தை, பாவந ஸுரபி ஸ்வாது வான வபா ரூப ஹவிஸ்ஸை யென்றபடி. உகந்து - அபிலஷித்து, வந்து-பரமவ்யோமத்தில்நின்றும் திவ்யமங்களவிக்ரஹ விசிஷ்டனாய் வந்து, பாரில் - பூமியிலே, தொண்டையெனும்-துண்டீரமென்று ப்ரசித்தமான, மண்டலத்தில் - மண்டலத்திலே, நடுவில் - மத்யத்திலே, தூநில - பரிசுத்தஸ்தலமான, மெய்விருதத்தில்-ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திலே, தோன்றி-அபிவ்யக்தமாய், நின்ற ப்ரதிஷ்டிதமான, சிலகாலமபிவ்யக்தமாய் பின்பு திரோஹிதமாகையன்றிக்கே "வேகவத்யுத்தரேதீரே புண்யகோட்யாம் ஹரிஸ்ஸ்வயம்|வரதஸ்ஸர்வ பூதாநா மத்யாபிபரித்ருச்யதே" என்கிறபடியே ஸகலநயநவிஷயதாங்கதமாய் சிரகாலவாஸம் பண்ணுமதான வென்றபடி. கொண்டல்-வலாஹகத்தினுடைய, இங் கநாலோசித விசேஷாசேஷலோக மஹாவதான்யராய் ஸகலஸந்தாப நிச்சேஷநிர்வாபகரான பேரருளாளரைவலாஹகமாக வத்யவஸித்தபடி, அருள்-கிருபையாகிற, குணமே - குணத்தையே, யத்வா - அருள் - க்ருபையினுடைய, குணமே - குணங்களையே. நிருபாதிகத்வ ஸர்வவிஷயத்வா ல்பவ்யாஜமாத் ரஸாபெக்ஷத்வாதி க்ருபா குணங்களை யென்றபடி, நாம்-காருண்யை காந்திகளானநாம், கூறுகின்றோம்-ப்ரதிபாதிக்கிறோம், கூர்மதியீர் - ஹே ஸூக்ஷ்மமதிகளே, குறிப்பாக - ஸாவதானமாக, கொள்மினீர் - அங்கீகரியுங்கொள், பரிசீலியுங்கொளென்றபடி. (௨)

மூ.—வம்மின் புலவீரருளாளப் பெருமாளென்றுமருளாழி, அம்மானென்றுந் திருமகளைப்பெற்றுமென்னெஞ்சங் கோயில்கொண்ட, பேரருளாளரென்றும் வியப்பாவிருதூதும்படிகரைபுரண்ட, கருணைக்கடலையெவ்வண்ணம் பேசுவீரீதென்னபாங்கே. (௩)

கொண்டலருள்குணமே நாம் கூறுகின்றோமென்று ப்ரதிஜ்ஞைபண்ணினது அநுபன்னமன்றோ, தத்கருணைக தேசமுங் கூடவதிவிஸ்மயநீயமாய் வாங்மநஸா பரிச்சேத்யமாக விறே காணப்படுகிறதென்று ப்ரபந்தாரம்பத்தையாக்ஷேபியாநின்று கொண்டு இவ்வர்த்தத்தையே வாதிகளைக்கொண்டுஸம்வதிப் பிக்கைக்காக வவர்களைக் குறித்து உபபாதிக்கிறார்.

புலவீர் - வித்யாசாலிகளே. வம்மின் - வாருங்கள், இந்தஸம்போதநம் வக்ஷ்யமாணார்த்த ஸம்வாதனார்த்தம். அருளாளப்பெருமாளென்னும் - அருளையாளுமவரானபெருமாளென்றும், யத்வா - அருளாலே லோகங்களை யாளுமவரானபெருமாளென்றும், என்றுமென்கிறபதத்ரயத்துக்கும் விருதூதும்படி யென்கிறவிடத்திலே யந்வயம். இப்படி ஸர்வஸாதாரண பகவத்க்ருபாஸ்வரூபத்தைக்காட்டி யினி இதினுடைய பரிச்சேத்யத்வாசோஷ்யத்வா க்ஷோப்யத்வநிருபாதிகத்வாதிகளைக் காட்டுகிறார், அருளாழி க்ருபாஸாகரபரிதரான, அம்மானென்றும், ஸ்வாமியென்றும், இங்குஸ்வாமித்வோக்தியாலே தத்க்ருபாயா நிருபாதிகத்வமும் ஸாகரத் வோக்தியாலே யபரிச்சேத்யத்வாதிகமும் பலிதம். இனிவிஷயத்தில்நிம்நோந்நதபாவப்ரயுக்த தாரதம்யராஹித்யத்தைக் காட்டுகிறார். திரு - பிராட்டியாகிற, மாமகளை-மஹாஸ் திரீயை, இங்குபிராட்டிக்கு மகத்வமாவது பகவந் நாராயணபிமதாநுரூப ஸ்வரூபரூப குண விபவைச்வர்ய சீலாத்ய நவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணவத்வம். பெற்றும் லபித்தும், பெற்றுமென்கிற நிர்தேசத்தாலே அத்யுத்க்ருஷ்ட விஷயலாபேஸத்யநிக்ருஷ்ட விஷயஸ்வீகரணம் துர்கடமென்று விரோதஸ்ஸூசிதஃ. என்-வித்வேஷமாநமதராக விலோபமோஹாத்யாத்மாபிமான பூமியான வென்னுடைய, நெஞ்சம்-மனஸ்ஸை, கோயில்-தனக்காஸ்பதமாக, கொண்ட - ஸ்வீகரித்தவரான, அதிஹேயமான வென் மநஸ்ஸிலேயுங்கூட "அங்குஷ்டமாத்ரஃ புருஷோ மத்ய ஆத்மநி திஷ்டதி, ஈசாநோ பூத பவ்ய ஸ்ய நததோவிஜுகுப்ஸதே" என்கிறபடியே பரமவ்யோமதுக்தார்ணவ மார்த்தாண்டமண்டலங்களில் போல போக்யதாபுத்தியாலே வஸிக்குமவரானவென்றபடி. பேரருளாளரென்றும் - ஸ்பஷ்டம். வியப்பா - விஸ்மயநீயமாக, விருது-விருதத்தை, ஊதும்படி - ஆதிராஜ்யஸூசக த்மாதவ்யவாத்யவிசேஷமுகத்தாலே வதிப்பிக்கும்படி, கரை-வேலையை, புரண்ட-அதிக்ரமித்ததான, கருணைக்கடலை-கருணாமஹாசாகரத்தை, அருளாழி யென்கிறவிசேஷணத்தாலே க்ருபாஸாகரத்வமாத்ரம் சொல்லிற்று, இங்கு தததுவாதேந வேலாதிலங்கித்வ விதி யாகையாலே புநருக்தியில்லை, எவ்வண்ணம் - எந்தப் பிரகாரத்தாலே, பேசுவீர் - வர்ணிப்பீர்கள், ஈது-இது, என்னபாங்கு - என்னபரிபாகம், பகவத்கருணா வர்ணநாநுகுண சக்தி யெவ்வளவென்றபடி. (௩)

மூ.—ஒன்றேபுக லென்றுணர்ந்தவர் காட்டத்திருவருளால்
அன்றேயடைக்கலங்கொண்ட நம்மத்திகிரித்திருமால்
இன்றேயிசையிலிணையடி சேர்ப்பரினிப்பிறவோம்
நன்றேவருவதெல்லா நமக்குப்பரமொன்றிலதே. (௪)

இப்படி ப்ரபந்தாரம்பத்தை யாக்ஷேபித்து இனிமேல் அத்யாத்மஸாரவேதிகளான வாசார்யராலே பகவதி ந்யஸ்தபரராய் அதஏவபகவதாஸ்வீக்ருதபரரான தமக்கு பகவத்கருணாகுணவர்ணநம் யதாவத் கர்த்துமசக்யமானாலும் யதாசக்தி தத்வர்ணநம் ப்ரத்யவாயாவஹமன்று, ப்ரத்யுத; இதுபரந்யாஸாவ்யவஹிதோத்தர க்ஷணமே யபவர்கப்ரதாநம் பண்ணவல்ல வீச்வரன் ப்ராரப்த வைசித்ரீமூலகருசிவிசேஷத்தாலே தேஹாவசானத்திலே யபவர்கத்தை யிசைந்த நம்மிடத்தில் அனுக்கிரகாதிசயத்தாலே சபலகால யாபநார்த்தமாக பண்ணுவிக்கும் வ்யாபாரமாகையாலே பாரதந்த்ர்யபரிகர்மித சேஷவ்ருத்திரூபமாயிருக்கும், ஆகையால் நம்முடைய யத்நத்தில் வருவதொரு நிர்பந்தமில்லை யென்கிற வபிப்ராயத்தாலே ப்ரபந்தத்தை அவதரிப்பிக்கிறார்.

இப்பாட்டு ஸ்ரீமத்ரஹஸ்யரத்நாவலியிலே கிஞ்சித்பாடபேதநபடிதமாய் ஸ்ரீமத்ரஹஸ்யரத்நாவலீஹ்ருதயத்திலே யாசார்யசரணைஸ்ஸ்வயமேவ ப்ரபஞ்சேந வ்யாக்

யாதமே யாகிலு மிங்கு மித்தைப்ரகரணானுகுணதாத்பர்ய வர்ணநேந ஸங்க்ரஹித்து விவரிக்கிறோம. உணர்ந்தவர்-ப்ரதிபுத்தாதிகாரிகள், அர்த்தபஞ்சகத்தையும் ஸம்பந்த விசேஷத்தையும் திருந்தக் கண்டவரென்றபடி. ஒன்றேபுகல் - ஏகமே யுபாயம். “ததேததிதுக்காநா மதாஸ்பதேத்ரபவார்ணவே । பவதாம்கத்யதேஸத்யம் விஷ்ணு ரேவபராயணம்” இத்யாதிஸஹஸ்ரப்ரமாணங்கள்படியே ஸ்ரீமன்நாராயணனொருவனே ஸித்தோபாயமென்றென்றபடி. என்றுகாட்ட - இப்படியுபதேசிக்க, “ஸர்வயோக்யமநாயாசம் அப்ரமாதமநூபமம்। ப்ரபன்னார்த்திஹரம் விஷ்ணும் சரணம் சந்துமர்ஹஸி” என்கிறவுபதேசத்தாலே நம்மைக்கொண்டு பரந்யாசம் பண்ணுவிக்க வென்றபடி. யத்வா - ஒன்றேபுகலென்றுணர்ந்தரென்றந்வயம். அநந்யோபாயத்வாத்யவசாயசாலிகளென்றபடி. காட்ட-“ஆத்மாத்மீயஞ்சயத்கிஞ்சித்தர்பரம் துஸ்த்யஜம் மயா।தத் ஸர்வம் தவ விந்யஸ்தம் சுபயோ: பாதபத்மயோ:” என்கிறபடியே நம்மைபகவச்சரணாரவிந்தங்களிலே ஸமர்ப்பிக்க வென்றபடி. திருவருளால்-ஸ்ரீக்ருபையாலே, ஸ்வார்த்தநிரபேக்ஷக்ருபையாலே. அன்றே- பரந்யாஸகாலத்திலே தானே, அடைக்கலம்-ரக்ஷ்யவஸ்துவாகக்கொண்ட - ஸ்வீகரித்தவரான, நம் - நம்முடையஸ்வாமிகளான, அத்திகிரி - ஹஸ்திகிரியிலே வஸிக்குமவரான, திருமால் - லக்ஷ்மீவல்லபரான பேரருளாளர், இன்றே - இப்போதுதானே, இசையில்-அங்கீகரிக்கில், ப்ரந்யாஸோத்தரக்ஷணத்திலேதானே ஸம்ஸாரநிவ்ருத்தியை யப்யுபகமித்தோமாகிலென்றபடி. இணையடி - யுகளீபூதங்களான திருவடிகளை, சேர்ப்பர்- அடைவிப்பர், நம்மை இதிசேஷ:. இசையில் சேர்ப்பரென்கிற நிர்தேசத்தா லிவர் சேராதொழிந்தது நம்முடைய அநப்யுபகமத்தாலல்லது அவனுடைய அநௌதார்யத்தாலே யன்றென்று த்வநிதம். இனி - இந்ததேஹாவஸாநாநந்தரம், பிறவோம் - ஸம்ஸரியோம், இப்படிப்ராரப்த வைசித்ரீமூலக ருசிவிசேஷத்தாலே தேஹாவஸாநபர்யந்தம் ஸம்ஸாரத்திலேவர்த்திக்கு மாகி லிருந்தால் நாம்செய்யும் தொழிலேதென்ன வருளிச்செய்கிறார். வருவதெல்லாம் - பகவத்ஸங்கல்பத்தாலே வருமவையெல்லாம், நன்றே - நல்லவைகள், இங்கிருந்தநாள் அநுகூலங்களாகவும் ப்ரதிகூலங்களாகவும் வருமவையெல்லாம் ப்ராரப்த புண்ய பாபரூப நிகளவிகடன ப்ரவ்ருத்தனான வீச்வரனுடைய அநுக்ரஹ பலமாகையாலே யிஷ்டதமங்களென்றபடி. நமக்கு இப்படி ந்யஸ்தபரரான நமக்கு, பரமொன்று - ஒருபாரமும், இலதே - ஆத்மதேகயாத்ராநுகுணமாக கர்த்தவ்யலேசமுமில்லையென்றபடி. பிறவோம் - நமக்கென்கிறபஹுவசந நிர்தேசத்தாலே யநுபந்திபர்யந்த நைர்ப்பர்யம் ஸூசிதம். ஆகவித்தால் பகவத்நுக்ரஹபலத்வேநாயத்நஸித்தமாக வருமதான யதாசக்தி பகவத்கருணாகுணவர்ணத்தில் நின்றும் அநர்ஹதாநுசந்தானத்தாலே நாம் நிவர்த்திக்க வேண்டுவதில்லை யென்றுப்ரபந்தாரம்பம் ஸமர்த்திதமாய்த்து. (௪)

மூ.—வம்பவிழ் போதமர் மாதருகந்த வம்மாநிதியைத்
தன்பலமேகொண்டு காணக்கருதியதாமரையோன்
முன்பலகுற்றத்து வல்வினைமொய்க்க முகிழ்மதியாய்
அம்புலிவேண்டிய பாலனைப்போலவழுதனனே. (௫)

இப்படி யிப்ரபந்தத்தை யவதரிப்பித்து கதையை யுபக்ரமித்து ஸமஷ்டிவ்யஷ்டிஸ்ருஷ்டிகளைப்ரதிபாதித்து வ்யஷ்டிஸ்ருஷ்ட்யதிகாரியான சதுர்முகனபிஜநவித்யாவ்ருத்தகர்வங்களாலும் ஸ்வாதந்த்ர்யச்செருக்காலும் ஸர்வஸந்ததஸந்நிஹிதத்வேபி ஸர்வதுர்க்ரஹமான பரமாத்மஸ்வரூபத்தை ஸ்வஸாமர்த்யஸாத்யஸாமாதியாலே ஸாக்ஷாத்கரிக்கமூண்டு அநாதிகாலப்ரவ்ருத்தாநந்தஸ்தர ஸமாதிவிரோதிகர்மஸஞ்சய ரூபாவித்யா ப்ரபாவத்தாலே குண்டிதத்ருஷ்டியாய் நிர்விண்ணனானபடியை ஸத்ருஷ்டாந்தமாக வருளிச் செய்கிறார்.

வம்பு-பரிமளத்தாலே, அவிழ்-விகஸியாநிற்கிற, போது - புஷ்பத்திலே, அமர்-வஸிக்குமவளான, மாதர் – ஸ்த்ரீயாலே, உகந்த - ஆச்ருதமான, விஸ்ருமர யரிமளபரித பத்ம வாஸ்தவ்யையான பிராட்டியாலே ஸந்தத மனுபூயமாநமான வென்றபடி. இத்தால் நிரதிசய போக்யத்வம் பலிதம், அம்மாநிதியை - அந்த மஹாநிதியை,

உபநிஷத் கோஷிதமான மஹாநிதியை யென்றபடி. இங்குநிதிக்கு மஹத்வமாவது தேசகாலவஸ்துபரிச்சேதராஹித்யம். ஈச்வரனைநிதியாக நிர்த்தேசித்ததாலே "யதாஹிரண்யநிதிம்நிஹிதம் க்ஷேத்ரஜ்ஞா உபர்யுபரி ஸஞ்சரந்தோ நவிந்தேயுரேவமேவேமா: ப்ரஜா அஹரஹர்கச்சந்த்ய ஏதம்ப்ரஹ்மலோகம்நவிந்தந்தி" என்கிறபடியே ஸர்வதாஸந்நிஹிதத்வெபி ஸித்தாஞ்ஜநஸம்ஸ்கார விகலநயனைரிவ யோக பரிபாக விகலாந்தகரணைர் துராலக்ஷ்யத்வம் ஸூசிதம். தன்பலமே - தன்னுடையபலத்தையே, அவதாரணத்தால் பகவதநுக்ரஹாவலம்பநவ்யுதாஸ:. கொண்டு - அவலம்பித்து, காண - ஸாக்ஷாத்கரிக்க, கருதிய - மனோரதித்தவனை, தாமரையோன் - தாமரஸபுஷ்பஸம்பவனான சதுர்முகன்; முன் - ப்ராசீனங்களான, பல - பஹுவிதங்களான, குற்றத்து - அபராதங்களுடைய, வல் - த்ருடங்களான, ப்ராயச்சித்த பலாநுபவேதராதிச்சமங்களான வென்றபடி. வினை - கலுஷங்கள், மொய்க்க - மதுமக்ஷிகந்யாயெநநிரந்தரமாகவாக்ரமித்து இருக்கையாலே, அத்ரகுற்ற சப்தத்தாலே சேதநனுடைய சாஸ்த்ரநிஷித்த கரணத்ரய வ்யாபாரங்கள் விவக்ஷிதங்கள். வினைசப்தத்தாலே தஜ்ஜநித பகவந்நிக்ரஹங்கள் விவக்ஷிதங்கள். அநாத்யாஜ்ஞாதிலங்கன ஜநிதாநந்த துச்சம பகவந்நிக்ரஹ வ்யாவெஷ்டநத்தாலே யென்றபடி. முகிழ் - முகுளிதமான, மதியாய் - புத்தியையுடையனாய், அம்புலி - சந்த்ரனை, வேண்டிய - அபிலஷித்தவனை, பாலனைப்போல - மௌட்யத்தாலே சநத்ரக்ரஹணத்திலுத்யோகித்து ததலாபத்தாலேவிஷண்ணனான பாலனைப்போலே யென்றபடி. அழுதனன் - ரோதநம் பண்ணினான். (௫)

மூ.—அடங்காக் கரணங்களைந்துடனாறு மடக்கிமுன்னம்
நெடுங்காலமிந்நிலமேநிலையாப்பூண்டு நீடுறைவான்
சடங்காற்பெரிய தவங்கள்செய்தேனென்னதன்மையிதென்
றிடங்காத்திருந்ததிசைமுகன்றன்னையிகழ்ந்தனனே. (௬)

ப்ராக்தந தபச்சரண தசாநுபூத காயக்லேச பாஹுள்ய தத்பலபல்குத்வாதி பராமர்சத்தாலே நிர்விண்ணனான சதுர்முகன் ஸ்வாத்மகர்ஹணம் பண்ணின ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

இந்நிலமே-இந்தஸ்தாநத்தையே, ஸம்ப்ரத்யநுபூயமாந மானவண்டாதிபதி பதத்தையென்றபடி. இந்நிலம் என்கிறநிர்த்தேசத்தாலே ஸ்வபதத்துக்கு ஸ்வாநுபவஸித்தங்களான ஸ்வரூபதொத்யல்பரஸத்வ பஹ்வாயாஸவிரஸத்வமதுகைடபப்ரப்ருதி ப்ரயுக்த பரஸ்ஸஹஸ்ர விபத்பரம்பரா ஜடிலத்வாதிகள் தர்சிதங்கள். நிலையா - ஸ்திதியாக, பூண்டு - பூட்டிக்கொண்டு, வைராக்யம்பிறந்தபோது விடவொண்ணாதபடி ஸ்திரதரச்ருங்கலம்போலே யிருக்கிற வதிகாரத்திலே யகப்பட்டென்றபடி. நீண்டு - சிரகாலம், உறைவான் - வாஸம்பண்ணுகைக்கு, உறைவானென்கிறது துமுநந்தபர்யாயபதம். இதுக்கு தவங்கள்செய்தே னென்கிறதோடே யந்வயம். முன்னம் - பூர்வம், நெடுங்காலம் - தீர்ககாலம், யுககோடிஸஹஸ்ரங்களிலே யென்றபடி. அடங்கா - நியமயிது மசக்யங்களான, கரணங்கள் ஐந்துடன் - ஐந்துகரணங்களுட னென்றந்வயம். பஞ்செந்த்ரியங்களோடே, ஆறும் - காமக்ரோத லோபமோஹ மதமாத்ஸர்யரூப அரிஷட்வர்கத்தையும், அடக்கி-நியமித்து, இங்கரிஷ்ட்வர்க நியமநோக்தியாலே யந்தரிந்த்ரியநியமனம்பலிதம். பாஹ்யெந்த்ரிய பஞ்சகத்தோடேகூட வந்தரிந்திரியத்தை நிக்ரஹித்தென்று பிண்டிதார்த்தம். இங்குகரணங்களைந்துடனென்று பாஹ்யகரணங்களுக்கு பஸர்ஜநத்வநிர்தேசத்தாலே "இந்த்ரியெப்ய: பராஹ்யர்த்தா அர்த்தேப்யச்ச பரம் மந:" என்று கடவல்லியில் வசீகார்ய பரம்பரையிலே சொன்னபடியே வசிகார்யதாயா மந்தரிந்த்ரியத்துக்கு ப்ராதான்யம் த்வநிதம். யத்வா கரணங்களைந்துடன் - வாக்பாணிபாத பாயூபஸ்தரூப கர்மேந்த்ரிய பஞ்சகத்தோடே, ஆறுமடக்கி - க்ராணரஸந சக்ஷுஸ்த்வக்ச்ரோத்ரமனோரூப ஜ்ஞாநெந்த்ரியஷட்கத்தையும் நிக்ரஹித்தென்றபடி. இந்த யோஜனையிலே நிக்ராஹ்யதாயாம் கர்மேந்த்ரியாபேக்ஷயா ஜ்ஞாநேந்த்ரியங்களுக்கு ப்ராதான்யம் பலிதமாம். சடங்கால் - அங்கங்களாலே, பெரிய - மஹத்தரங்களான, தவங்கள் - தபஸ்ஸுகளை, செய்தேன் - ஆசரித்தேன், இது - இந்த தபச்சரணம், என்னதன்மை - என்னஸ்வபாவம், எலிபிடிக்க மலை கல்லுமாப்

போலே அநர்த்தசத கர்புரிதா த்யல்பரஸ பலோத்தேசேந துர்நிக்ர ஹேந்த்ரிய நிக்ரஹ பூர்வகம் சிரகாலஸாத்யா நந்தேதிகர்த்வ்யதாஜடில தபச்சரண க்லேசா நுபவம் பண்ணின தென்னஸ்வபாவ மென்றபடி. என்று - இப்படி, இதுக்கு வாக்யாந்தக்ரியையோடேயந்வயம். திசைமுகன்-திங்முகன், சதுர்முகனென்றபடி. இடம்-ஸ்தலத்தை, காத்திருந்த - காத்துக்கொண்டிருந்தவனை, நிதி ரக்ஷா பிசாச ந்யாயேந அண்டாதிபதிபதத்தை யாக்ரமித்துக் கொண்டிருக்குமவனென வென்றபடி. தன்னை-ஸ்வாத்மாவை, இகழ்ந்தனன்-லஜ்ஜித்தான், கர்ஹித்தானென்றபடி. "யச்சராமம்நபச்யேத்யஞ்சராமோ நபச்யதி । நிந்திதஸ்ஸவஸெல்லோகே ஸ்வாதமாப்யெநம்விகர்ஹதே" என்கிறபடியே பகவதநுபவவிகலனை தன்னைத்தானே வெறுத்துக்கொண்டானென்றபடி. (௬)

மூ.—விண்ணுலகில் வீற்றிருந்த மேன்மையாலும் வேதங்களீரிரண்டும் விரித்தலாலும், கண்ணனைநான் கருத்துறவே காண்பனென்னக் காணுமல்விலக்கிய தன் வினையைக்காணு, எண்ணியநற்புவனங்க ளேழுமாறு மிருமூன்றுதிவமுமெட் டிடமும்விட்டு, பண்ணியநல் விரதமெல்லாம் பலிக்குமென்று பாரதத்தைப் பங்கயத்தோன் படிந்திட்டானே. (எ)

இப்படி நிர்விண்ணனான சதுர்முகன் மநஃகஷாயசமனார்த்தமாக ஸாத்விகதபச்சரணத்திலே யுத்யோகித்து ததநுகுணமான தேசத்தை நிரூபித்து பூமிவ்யதிரிக்த த்ரயோதசலோகியையும் தத்ராபி ஜம்பூத்வீபவ்யதிரிக்தத்வீபஷட்கத்தையும்தத்ராபி பாரதவர்ஷவ்யதிரிக்த வர்ஷாஷ்டகத்தையும் போகபூமித்வேந உபேக்ஷ்ய ஸர்வதர்மாநுஷ்டானயோக்யமான பாரதவர்ஷத்திலே வந்துபுகுந்தானென்கிருர்.

விண்ணுலகில் - ஊர்த்வலோகத்திலே, சதுர்தசபுவநமத்யே மேல்பட்டதான ஸத்யலோகத்திலே யென்றபடி. வீற்றிருந்த - உத்கர்ஷந்தோற்றும்படியிருந்த, மேன்மையாலும் - உன்னதியாலும், அண்டாதிபத்ய ஐச்வர்ய கர்வத்தாலுமென்றபடி. ஈரிரண்டு வேதங்களு மென்றந்வயம். ஈரிரண்டு - சதுஸ்ஸங்க்யாகங்களான, வேதங்களும் - வேதங்களையும், விரித்தலாலும் - விஸ்தரிப்பிக்கையாலும், விஷ்வங்முக வேதப்ரவர்த்தநகர்வத்தாலுமென்றபடி. நான் - இப்படி அதிசயி தாதிகாரம் பெற்றிருக்கிற, நான், கண்ணனை - க்ருஷ்ணனை, கருத்து - மநஸ்ஸானது, உறவே - அடையும்படியாகவே, காண்பன் - ஸாக்ஷாத்கரிப்பன், மநஸ்ஸு பகவத் விஷயத்திலே ஸ்திரமாம்படி ஸாக்ஷாத்கரிப்பனென்றபடி, என்ன - இப்படி யுத்யோகிக்க, காணுமல் - காணவொட்டாதபடி, பகவத் ஸாக்ஷாத்காரம் பிறவாதபடி, விலக்கிய-ப்ரதிபந்தித்ததான, தன்வினையை- தன்னுடையகர்மத்தை, காணு - அறியாதவனை, ஸ்வ ஸமாதி விரோதி துரிதாநபிஜ்ஞனை வென்றபடி. தத் பரிஜ்ஞாநேஹி ததுசித ப்ரதிபதோக்தப்ராயச்சித்த மநுஷ்டிக்க லாவ தென்று ஹ்ருதயம். பங்கயத் தோன்-பங்கஜ ஸம்பவனான சதுர்முகன், எண்ணிய - புராணாதிகளிலே புவனகோசப்ரஸ்தாவத்திலே ஸங்க்யாதங்களான, நல்-ஸமீசீநங்கலான, சுத்தபூமிகளான வென்றபடி. புவனங்கள் - புவனங்களை, ஏழும் - ஏழுகளையும், ஆறும் - ஆறுகளையும், அதல விதல நிதல தலாதல மஹாதல ஸுதல பாதாள பேதேந சப்தபேதங்களான வதோலோகங்களையும் புவஸ்ஸுவர் மஹர் ஜநஸ்தபஸ்ஸத்யபேதேந ஷட் விதங்களான வூர்த்வலோகங்களையு மென்றபடி, இருமூன்று - த்விகுணிதத்ரிஸங்க்யாகங்களான, ஷட்ஸங்க்யாகங்களான வென்றபடி, திவமும் - த்வீபங்களையும், ப்லக்ஷசால்மலிகுசக்ரௌஞ்சசாகபுஷ்கரத்வீபங்களையு மென்றபடி. எட்டிடமும் - எட்டுஸ்தலங்களையும், கிம்புருஷ ஹரிவர் ஷேளாவ்ருதரம்ய ஹிரண்யக குரு பத்ராச்வ கேதுமால பேதேநாஷ்டவிதங்களான வர்ஷங்களையுமென்றபடி. விட்டு - த்யஜித்து, போகபூமிகளென்று பெக்ஷித்தென்றபடி. பண்ணிய - அநுஷ்டிதங்களான, நல் - ஸமீசீநங்களான, விரதமெல்லாம் - வ்ருதமெல்லாம், பலிக்கும் - பலாவிநாபூதங்களாம், என்று-இப்படி நிருபித்து, கர்மபூமித்வேந நிருபித்தென்றபடி. பாரதத்தை - பாரதவர்ஷத்தை, படிந்திட்டான் - அடைந்துவிட்டான். (எ)

மூ.—எத்திசை நிலனுமெய்தி யருந்தவஞ்செய்தவந்நாள்
சத்தியவிரதஞ்செல்வாயென்றதோ ருரையின் சார்வால்
அத்திசைசென்றழைத்தங் கமரரில்லெடுப்பான்றன்னை
உத்தரவேதிசெய்யென் றுரையணங்கிறையுரைத்தான். (அ)

இப்படி பாரதவர்ஷத்திலே ஒருக்ஷேத்ரவிசேஷத்திலே சென்று துஷ்கரதபச்சரணப்ரவ்ருத்தனாய் தத்ராபி மாலிந்யம் கழியாமையாலே யதிவிஷண்ணனான சதுர்முகன் தத்காலஸமுன்மீலிதாசரீரிவாக்காலே நியுக்தனாய் ஸத்யவ்ரத க்ஷேத்ரத்திலே சென்று அச்வ மேதாநுஷ்டாந பத்தச்ரத்தனாய் விச்வகர்மாவை யழைத்து யஜ்ஞசாலா நிர்மாணார்த்தமாக வாஜ்ஞாபித்த ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்.

உரையணங்கு - வாக்தேவதையுடைய, இறை - ஈச்வரன், வாக்தேவதா வல்லபனான சதுர்முகனென்றபடி. எத்திசை - ஸகலதிக்வர்த்திகளான, நிலனும் - ப்ரதேசங்களையும், எய்தி - அடைந்து, அரும் - துஷ்கரமான தவம் - தபஸ்ஸை, செய்த வந்நாள் - அனுஷ்டித்த வந்தகாலத்திலே, இங்கு நாநாதேசங்களையும் விட்டு பாரதவர்ஷத்தி லொருக்ஷேத்ரத்திலே தபஸ்ஸு பண்ணுகிற சதுர்முகனை நாநாதேசங்களையடைந்தவனாக நிர்தேசித்தது தத்தத் தேசங்களை புத்தியாலேபற்றி நிரூபித்து விடுகையாலே யென்று கண்டுகொள்வது. சத்தியவிரதம்-ஸத்யவ்ரத க்ஷேத்ரத்தை, செல்வாய்-அடையக்கடவை,என்றது - இப்படி போதித்தான, ஓர்-விலக்ஷணமான, சரீரவிநாஸம்பூதமான வென்றபடி. உரையின் - வசனத்தினுடைய, சார்வால்-அவலம்பத்தாலே, ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திலே போகச்சொன்ன வசரீரிவாக்கில் விஸ்ரம்பதார்ட்யத்தாலே என்றபடி. அத்திசை - அந்ததிக்கிலே, சென்று - போய், அங்கு - அந்த ஸத்யவ்ரதக்ஷேத்ரத்திலே, அமரர் - அமரருக்கு, இல் - க்ரஹங்கள் - எடுப்பான் தன்னை - நிர்மிக்குமவனை, தேவக்ருஹநிர்மாதாவான விச்வகர்மாவை யென்றபடி, இத்தாலிவனுக்கு ஜடிதி விசித்ரபுரநிர்மாணஸாமர்த்யம் ஸூசிதம். அழைத்து - ஆஹ்வாநம்பண்ணி, உத்தரவேதி-உத்தரவேதியை, இங்கு உத்தரவேத்யுபாதாநம் ப்ரதாநயாகாநுஷ்டாநதேசத்வ ப்ரயுக்தாப்யர்ஹித்வாபிப்ராயகம். இது மற்றுமுள்ள ஹவிர்தாந ஸதஃப்ராசம்ஸா திவைதிகதேசங்களுக்கும் வாபீகூபதடாகபரிகாப்ரகார நகராகாராதி போகஸ்தானங்களுக்கு முபலக்ஷணம். செய்-நிர்மிப்பாய், என்றுரைத்தான்-என்றுசொன்னான். (அ)

மூ—உத்தம வமர்த்தல மமைத்த தொரெழிற்றநு வுயர்த்தகணையால்
அத்திரவரக்கன் முடி பத்து மொருகொத்தெனவுதிர்த்ததிறலோன்
மத்துறுமிகுத்ததயிர்மொய்த்தவெணெய்வைத்ததுணுமத்தனிடமாம்
அத்திகிரி பத்தர்வினை தொத்தறவறுக்கு மணியத்திகிரியே. (௯)

இப்படி சதுர்முகனாலே யாஜ்ஞப்தனான விச்வகர்மாவும் யதாநியோகம் ஸ்ரீஹஸ்திகிரியை யுத்தரவேதியாக ஸமந்ததஃதக்ஷணம்பண்ணி இது ஸர்வேச்வரன் ஸந்நிதிபண்ணுகைக் கிடமாமென்று மநஸ்ஸிலே விசாரித்தபடியையருளிச்செய்கிறார்.

உத்தம - உத்தமமான, அமர்த்தலம் - யுத்தஸ்தலத்துக்கு, அமைத்தது - பர்யாப்தமான, உசிதமான வென்றபடி. மஹாரதாதிஷ்டித ரணரங்கயோக்யமான வென்றபடி. இது தநுஸ்ஸுக்கு விசேஷணம். ஓர் - அத்விதீயமான, எழில் - உஜ்வலமான, தனு-தனுஸ்ஸிலே, உயர்த்த-உச்ரிதமான, ஸந்தாநம்பண்ணப்பட்டதானவென்றபடி. கணையால் - பாணத்தாலே, இதுக்கு உதிர்த்தவென்கிறத்தோடே யந்வயம். அத்திர-அஸ்த்ரயுக்தனான, அரக்கன் - ராக்ஷஸனுடைய, ஸர்வாஸ்த்ரப்ரயோக குசலனான ராவணனுடைய வென்றபடி, முடிபத்தும் - சிரோதசகத்தையும், ஒருகொத்து - ஒரு கோர்வை, என - என்னும்படி, ஏகநாளோத்கத பரிணத பலப்ருந்த மென்னலாம்படி யென்றபடி. உதிர்த்த - விழத்தள்ளினதான, ராவணனுடைய சிரோதசகத்தையும் பவநாவதாதபரிணமசிதிலபந்தந தாலபல ஸ்தபக ந்யாயே நாநாயாஸேந ஒருக்ஷணத்திலே விழும்படி பண்ணினதான வென்றபடி. திறலோன் - பராக்ரமத்தையடைவனான, இத்தால்துஷ்டநிக்ரஹ சீலத்வமும் பரத்வமும் தர்சிதம். மத்து-மதநதண்டத்தாலே, உறு-உறுத்தப்பட்டதான, கடையப்பட்டதான வென்றபடி. மிகுத்த

அதிகமான, மதநதண்ட ஸம்க்ஷோப கல்லோலிதமான வென்றபடி. தயிர் - ததியிலே, மொய்த்த - நிபிடவ்யாப்தமான, தார்வக்நி திலதைல சேதநாசேதந ந்யாயேநாப்ரதக்ஸித்தமாக ததியிலே வ்யாப்தமான, இத்தால் நவநீதஸ்யமதநநிஷ்பந்நத்வம் பலிதம். வெணெய்-நவநீதத்தை, வைத்தது - சிக்யத்திலே நிஹிதத்தை யெல்லாம், உணும்-புஜிக்குமவனை, இத்தால் சௌர்யம் பலிதம், அத்தன் - ஆப்தனுக்கு, இங்கு ஆபீரபல்லீ லுண்டித ஹய்யங்கவீந குக்ஷிம்பரியான க்ருஷ்ணனை யாப்தத்வேந நிர்தேசித்தது விஸ்மயகர்பம். இத்தால் ஆச்ரிதரக்ஷண சீலத்வமும் ஸௌலப்யஸௌசீல்யாதிகளும் த்யோதிதங்கள். இடமாம்-வாஸஸ்தானமாம்படியான, அத்திகிரி-ஹஸ்திகிரியானது, பத்தர் - பக்தருடைய, வினை - கர்மத்தை, தொத்து - ஸங்க்ரமணம், அற - இல்லாதபடி, புந ரங்குரியாதபடி யென்றபடி. அறுக்கும்-சேதிக்கும், இப்படி ஸ்ரீஹஸ்திகிரிதானே விரோதிநிரஸநம் பண்ணுமாகில் விரோதிநிரஸநாதிக்ருதனை திருவாழியாழ்வானுக்கு பயோஜனமேதென்னில் வாக்யசேஷம் ப்ரவர்த்திக்கிறது. அத்திகிரி-அந்தச்சக்ரமானது, அணி-அலங்காரமாத்ரம். திவ்யாஸ்த்ரபுஷ்பிதசதுர்புஜமெமென்கிறபடியே பகவத்பாணிபல்லவாலங்காரஸ்தபகமா யிருக்கையே யுபயோகமென்றபடி. (௯)

மூ.—திண்மணிகள்பொன்னுடனே சேர்தலாலுஞ் சிதையாதநூல்வழியிற்
சேர்த்தியாலும், வண்மையெழுமிரிரண்டு வண்ணத்தாலும் வானவர்
க்கும் வியப்பான வகுப்பினாலும், உண்மையுடைவாசியொளி யோ
சையாலு மொருகாலு மழியாத வழகினாலும், மண்மகளார்க் கலங்கா
ரமென்ன மன்னு மதிட்கச்சிநகர் கண்டு மகிழ்ந்திட்டானே. (௧0)

சிந்தித விச்வகர்மாவாலே நிர்மித்து தர்சிதமான யஜ்ஞசாலாகர்பதிவ்யநகரத்தைக் கண்டு தனக்கு பஹுமதி விஷயமாகையாலே யிந்நகரத்துக்கு காஞ்சியென்று பேராக்கின சதுர்முகன் இந்நகரத்தினுடைய ஸர்வப்ரகார ஸம்ருத்தியாலே யாநந்தித்தபடியை யருளிச்செய்கிறார்.

திண் - த்ருடங்களான, மணிகள் - ரத்நங்கள், பொன்னுடனே - காஞ்சனத்தோடே, சேர்தலாலும் - கூடியிருக்கையாலும், மஹார்ஹ மணிதப்தஜாம்பூநத ஸம்ஸர்கஜநித சோபாதிசய த்தாலுமென்றபடி. சிதையாத - சலியாததான, நூல்வழியில் - ஸூத்ரமார்கங்களிலே, சேர்த்தியாலும் - ஸந்நிவேசத்தாலும், ஸௌத க்ருஹ வீதிகாதிகள் ருஜுதர ஸூத்ரமார்கம் தப்பாமே ஸந்நிவிஷ்டங்களாகையா லென்றபடி, வண்மை - அழகாலே, எழும் - வர்த்தியாநிற்கிற, ஈரிரண்டு - சதுஸ்ஸங்க்யாகங்களான, வண்ணத்தாலும் - வர்ணங்களாலும், ஸ்வஸ்வ மார்காநதிக்ரம மநோஹர ப்ராஹ்மணாதி வர்ணசதுஷ்டயத்தாலு மென்றபடி. வானவர்க்கும் - ஸ்வர்கவாஸிகளான பேருக்கும், வான்-ஸ்வர்கம். இங்கு - தேவர்களை ஸ்வர்கவாஸித்வேந நிர்தேசிக்கையாலே யவர்களுக்கு அதிமாநுஷ விவித விசித்ரஸந்நிவேச போகஸ்தாநாதி பரிசயசாலித்வம் த்வநிதம். வியப்பான - விஸ்மயநீயங்களான, வகுப்பினாலும்-அஸக்ரு தநுபூ தாதிமானுஷ விவித விசித்ர சில்ப கௌசலாதிசயரான தேவர்களுங்கூட ககந கந்தர்வ நகரேந்த்ரஜால தர்சநந்யாயேந உத்வேல விஸ்மய ரஸோர்மிள மநஸ்கராம்படி விலக்ஷணங்களான கோபுர மண்டப ப்ராகார க்ருஹ ஸௌத குட்டிம வாபீகூப தடாகாதி விபாகங்களாலு மென்றபடி. வானவர்க்கு மென்கிற நிர்தேசத்தாலே கிம்புந ரபரித்ருஷ்ட வைசித்ர்யாதிசயாநாம் மானுஷாணா மிதி கம்யதே. உண்மையுடை-யாதர்த்யத்தையுடையவைகளான, வாசி - வாஜிகளுடைய, ஒளி-ப்ரகாசமான, ஓசையாலும் - கோஷங்களாலும், சாஸ்த்ரோதித சுப லக்ஷணாலங்க்ருத துரக ஹேஷிதங்களாலு மென்றபடி. இதுமற்றுமுள்ள மதாவள ப்ரும்ஹித பூஷணசிஞ்சிதவீணா க்வணிதாதிகளுக்கு முபலக்ஷணம். ஒருகாலும் - ஒருகாலத்திலேயும், அழியாத - நசியாததான, அழகினாலும் - ஸௌந்தர்யத்தாலும், நவநவஜ்ரும்பமாண ஸமுதாய சோபையாலு மென்றபடி. மண்மகளார்க்கு - பூமியாகிறபெண்ணுக்கு, அலங்காரமென்ன - அலங்கார மென்னும்படி, மன்னும் - ப்ரதிஷ்டிதமான, மதிள் - ப்ராகார பரிவ்ருதமான, கச்சிநகர் - காஞ்சீநகரத்தை யென்றபடி. "கஇதி ப்ரஹ்மணோ நாம தேந தத்

ரஞ்சிதோ ஹரி:। தஸ்மாத் காஞ்சீதி விக்யாதா புரீ புண்ய விவர்தநீ” என்று வ்யுத்பாதித காஞ்சீ நாமகமான நகரத்தையென்றபடி. கண்டு - பார்த்து, மகிழ்ந்திட்டான் - ஆநந்தித்தான், சதுர்முகனிதி சேஷ:. (௧௦)

மூ.—காமங்கள் பலகொண்ட வேதங்கொண்டு கைதவமே செய்வார்க்குக்
காணகில்லா, பூமங்கை கேள்வனை நான்கண்டு போற்ற ப்புண்ணி
யத்தி னிகரில்லா விரதம் பூண்டேன், சாமங்கள் கழிவதன் முன் சட
க்கெனப் போய்த் தன்னாற்றிற் றனி யிருந்து தவஞ்செய்கின்ற, நாமங்
கை வந்திட நீ யழைப்பாயென்று நன்மகனை நான்முகன்றானவின்
றிட்டானே. (௧௧)

இப்படி காஞ்சீநகர நிர்மாணாநந்தரம் மரீசிமுதலான மஹர்ஷிகளை ருத்விக்குகளாகக்கொண்டு ஸ்ரஸ்வதீ யென்கிறவாற்றில் தபஸ்ஸு பண்ணுகிற தன்ப்ரதான பத்நியான ஸரஸ்வதியை யழைத்துக்கொண்டுவருவா யென்று ஸ்ரீவஸிஷ்டபகவானுக்கு அநுசாஸித்தபடியை, யருளிச்செய்கிறார்.

காமங்கள்பலகொண்ட - பலகாமங்கள் கொண்ட வென்றந்வயம். பலகாமங்கள் - நாநாவித பலங்களை, கொண்ட - க்ரஹித்ததான, வைரிவத புத்ர பசு வ்ருஷ்ட்யந்ந ப்ருஹ்மவர்ச்சஸ ஸ்வர்கா த்யைஹிகாமுஷ்மிக தத்தத் புருஷாபிருசித நாநாபுருஷார்த்த ஸாதந பூத நாநா கர்ம விதாயகமான வென்றுநிஷ்கர்ஷம். வேத - வேதத்தை, கொண்டு - அவலம்பித்து, கைதவமே - கைதவத்தையே, கைதவம் - கிதவவ்யாபார:. வஞ்சநேதியாவத். செய்வார்க்கு - பண்ணுமவர்க்கு, “குஸீதமேகே விஹரந்தி ஸர்வே ய ஆசீர் வதந்தோ ததத் யத்ர கிஞ்சித்” என்றுஶ்ருதியி லோதுகிறபடியே வார்த்துஷிகன் பகுதந க்ரஹணார்த்தமாக வல்பதநத்தைப் பொலிசைக் கிடுமாப்போலே அதிககாலாநுபாவ்யபலாபிஸந்தியாலே அல்பகால ஸாத்ய கர்மங்களை யநுஷ்டிக்கும் கணிகா நுராக வ்ருத்திகளான த்ரைவர்ணிகர்களென்று நிர்களிதார்த்தம். கைதவமேயென்கிற வவதாரணத்தால் கதாசிதப் யநபிஸம்ஹித பலகர்மா நுஷ்டாந வ்யவச்சேத:. காண - ஸாக்ஷாத்கரிக்க, கில்லா-அசக்யனான, பூமங்கை - தாமரஸவாஸிநி யான பிராட்டியினுடைய, கேள்வனை - நாதனை, ஶ்ரிய: பதியான ஸர்வேச்வரனை யென்றபடி. நான் - அதிநீசனான நான், யத்வா அண்டாதிபத்ய ப்ரப்ருதி ஜுகுப்ஸித புருஷார்த்தங்களில் நின்றும் விரதாபிஸந்திகனான நான், கண்டு - ஸாக்ஷாத்கரித்து, போற்ற - ஸ்துதிக்க, ஸ்தோத்ர நாமார்ச்சநா த்யுபசாரங்களாலே யாராதிக்கைக்கென்றபடி. புண்ணியத்தில் - புண்ணியங்களிலே, நிகரில்லா-ஸத்ருசமில்லாததான, விரதம் - வ்ருதத்தை, பூண்டேன் - பூட்டிக்கொண்டேன். ப்ரஹ்மஹத்யா ச்வ மேதாப்யாம் புண்யபாபக்ருதோவிதி: என்கிறபடியே ஸமஸ்த புண்ய கர்ம ஜாத ப்ரகர்ஷ ச்ரம ஸ்தாநமான வச்வமேதாக்ய மஹாவ்ரதத்திலே மூண்டு விட்டேனென்றபடி. பூண்டேனென்கிற நிர்தேசத்தாலே வ்ரதஸ்ய த்ருடதர நிகளபந்தவந் மத்யே துர்மோசத்வம் த்வநிதம். இத்தால் ப்ரஹ்மாதானேவர வேண்டியிருக்க மனுஷ்ய ப்ரேஷணம் பண்ணுவதேதோ வென்கிறகோபத்துக்கவகாசமில்லை யென்று ஸூசிதம். சாமங்கள் - யாமங்கள், கழிவதன்முன் - அதிக்ரமிக்கைக்குமுன்பே, சடக்கென-சீக்ரமாக, போய்-நடந்து, காலவிளம்பம்பண்ணாதேபோ யென்றபடி. தன்னாற்றில் - தன்னுடைய நதியிலே, தன்னாலே யதிஷ்டிதையான நதியிலே யென்றபடி. தனியிருந்து - அஸஹாயையாயிருந்து, தவம் - தபஸ்ஸை, செய்கின்ற - பண்ணுமவளான, பதிவிநாக்ருத பத்நிக்கு தபஸ்ஸிலே யதிகார முண்டாகிலும் பத்நீ விநாக்ருத பதிக்கு க்ரதுவில் அதிகாரமில்லை யிறேஎன்றுதாத்பர்யம். நாமங்கை-நாவில் வஸிக்குமவளான. ஜிஹ்வாக்ர வர்த்திநியான ஸரஸ்வதியென்றபடி. வந்திட - வந்துவிடும்படி, ப்ரணயகலஹ கலுஷிதையான ஸரஸ்வதி ப்ரஸந்நையாய் ஜடிதிவரும்படி என்றபடி. நீ-ஸாந்த்வவாதகுசலனான நீ, அழைப்பாய்-ஆஹ்வானம் பண்ணுவாய், என்று-இப்படி, நன்மகனை - நல்லபுத்திரனை, தனக்கு விதேயபுத்ரனான வஸிஷ்டபகவானை யென்றபடி. இங்கு வஸிஷ்டபகவானை தன் நாமத்தாலே நிர்தேசியாதே சதுர்முக புத்ரத்வேந நிர்தேசித்தது “ஆத்மாவை புத்ர நாமாஸி” என்கிற

படியே ஸ்வஸ்மாதநதிரிக்தனை புத்ரனை ப்ரேஷிக்கையாலே ஸ்வய மநாகமன ப்ரயுக்தாநாதரசங்கா ப்ரஸக்தியில்லை யென்று த்யோதநார்த்தம். நான்முகன்தான் - சதுர்முகன்தான், நவின்றிட்டான் - சொன்னன், சொல்லியனுப்பினனென்றபடி. (௧௧)

மூ.—அன்னவடிவா ளசையு மன்ன நடையா ளுயரு மன்னவர சேறிவருவாள், அத்தனய னத்தனய னுத்திதனை யத்தெதென வுத்தி புரியாள், நன்னடைவிடா நடமிதென்னநடவா நடுவுநண்ணு குடகேறியிழிவாணற்பதிகளற்பதிகள் கற்புரள வற்புதமருக் கதியினல், கன்னடைவிடாவிடமி லுன்னதி சிறு விகட மன்றுகிரிகூட மிடியக் கட்டவிடை யிற்றுவிழ முற்றும் விழியுற்றடைய விட்டருகுற, அன்ன நயசீரயனிதென்னென விழாவமரர்மன்னுபதியேறிமகிழ வச்சுதனனைத்தனுவி லத்திசை வரத்தகையவற்றணுகினள். (௧௨)

இப்படி ப்ரஹ்மாவாலே நியுக்தனன வஸிஷ்டபகவான் ஸரஸ்வதிபக்கல் சென்று உபசாரபுரஸ்ஸர மாக பரக்ருத வ்ருத்தாந்தத்தை யறிவிக்க ப்ரணய கலஹ கலுஷிதையான ஸரஸ்வதி வாராதவளவில் ப்ரஹ்மா ஸவித்ரீ முதலான பத்நிகளைக் கொண்டு யஜ்ஞம்பண்ணத் துடங்க தேவஸத்காரகுபிதரான அசுரர்களிந்தயஜ்ஞத்தைக் குலைக்கநினைத்துச் சென்று ஸரஸ்வதிக் கறிவிக்க வவளும் அதிகுபித ஹ்ருதையயாய்க் கொண்டு தக்ஷிணபதத்திலே பேர்ந்து வேறேயொரு மஹாநதியாய்ப் பெருகி ப்ரஹ்மாவினுடைய யஜ்ஞ பூமியை யழிப்பதாக வுபக்ரமித்து ஸாடோப விச்ருங்கல கதியாய்புறப்பட இதைக்கண்டு நம்முடைய யஜ்ஞம் மத்யே விசீர்ணமாய்த் தென்றத்யந்தமவஸந்ந மநஸ்கனன ப்ரஹ்மாவாலே சரணமாக வரிக்கப்பட்டவனாய் ஆஶ்ரிதபாரதந்த்ர்யம் தோற்ற யதோக்தகாரியென்று பேர்பெற்று மத்யே மார்கம் அநந்தசாயியாய் ஸேதுவாக வாவிர்பவித்த ஸர்வேச்வரனாலே ந்ருத்தவேகையா யுபசமித்தபடியை யருளிச்செய்கிறார்.

அன்னவடிவாள் - ஹம்ஸம்போலே யிருக்கிற வடிவையுடையவளான, வடிவு- அவயவஸன்னிவேசஃ. ஹம்ஸம்போலே அத்யந்த தர்சநீயாக்ருதியான வென்றபடி. யத்வா - ஹம்ஸம்போலே சுத்தஸ்படிகாக்ருதியான வென்றபடி, ஸரஸ்வத்யாச் சுத்தஸ்படிக ஸங்காசத்வம் ப்ரஸித்தமிறே. அசையும் - மந்தசாரியான அன்ன - ஹம்ஸம்போலேயிருக்கிற, நடையாள் - கமநத்தையுடையவளான, ஸ்பந்தமான மராளீமத கேல கமனையான வென்றபடி. உயரும்-உச்ச்ரிதமான, அன்னவரசு-ஹம்ஸஶ்ரேஷ்டத்தை, ஏறி - ஆரோஹித்து, வருவாள் - வருமவளான, அதி ஸௌகுமார்யேண பாதசாராஸஹிஷ்ணுதயா ராஜஹம்ஸசாரிணியான வென்றபடி. இங்கு ஹம்ஸஸமாநாகாரத்வம் ஹம்ஸகமநத்வம் ஹம்ஸவாஹநத்வம் என்கிறவிசேஷண த்ரயமும் ஸரஸ்வதிக்கு நதீபாவாவஸ்தாயாஃ ப்ராக்ஸித்தம், இதை இங்கேயனுவதித்தது க்ரமேண தத்விருத்தமான பங்ககலுஷ நதீரூபத்வ ஸாடோப விகட கமநத்வ சர்க்கராசதகர்க்கச துங்ககிரி கூடாரோஹித்வ ரூப வக்ஷ்யமான விசேஷணத்ரயத்தினுடைய வைசித்ர்ய ப்ரதர்சநார்த்தம். அத்தன் - ஆப்தனன, தீர்க்க கோபமூலாபராத சூன்யனன வென்றபடி. அயன் - அஜனனுடைய, அத்தனயன் - அந்த தநயனுடைய, சிஷ்டாக்ரேஸரத்வேந ப்ரஸித்தனாய் ப்ரஹ்மபுத்ரனன வஸிஷ்டனுடைய வென்றபடி. உத்திதனை - உத்தியை, அத்து - இது - என - இதி பதச்சேதஃ. இது - அத்து. என- இத்யந்வயஃ இது - இந்தவர்த்தம், அத்து-அஸ்து, அங்கீக்ருதம். என - என்று, உத்தி- உத்தியை, புரியாள் - கொடாதவளான, சொல்லாதவளான வென்றபடி. ஸாந்த்வ ப்ரயோககுசலனன வஸிஷ்டபகவானலே விஜ்ஞாபிதமான வர்த்தத்தைக்கேட்டு அஸ்து என்று அப்யுகம த்யோதகமாக வொருவசநம் சொல்லாதவளான வென்றபடி, சிரகாலதாராவாஹி படுதர மந்யுவான வென்றுபலிதார்த்தம். நன்னடை-நல்லநடையை, சீக்ரகதியை யென்றபடி. விடா-விடாததான, சீக்ர கதியோடே கூடினதானவென்றபடி. நடமிது - பாவப்ரதாநோநிர்தேசஃ. நாட்யமிதென்றபடி. என - என்னும்படி, த்வரித தாவந ஸம்வலித நாட்ய மிதென்று உத்ப்ரேக்ஷிக்கலாம்படி யென்றபடி. இதுக்கு ஏறியிழிவாளென்கிறத்தோட ந்வயம். நடவா - நந்து மசக்யமான, நடுவு-

மத்யத்திலே, நண்ணு - ப்ராப்தங்களான, குடகு - குடகங்களை, உபலராசி: குடகு பதேகோச்யதே. ஏறி - ஆரோஹித்து, இழிவாள் - இறங்குமவளான, துர்கதர மார்க மத்ய கதங்களான வுபல ராசிகளை யெல்லாம் நிரங்குசமாக வேறி யிறங்குகையாலே த்வரித கமந மிஸ்ரித நாட்யம் பண்ணுமவ ளென்று த்ப்ரேக்ஷணீயையான வென்று நிர்களிதார்த்தம். குடகேறி யிழிவா ளென்கிற நிர்தேசத்தாலே மார்க்கத்திலே யத்யுந்நதமான கதி ப்ரதிபந்தக மிருந்தாலு மேறிப் போமதத்தனை போக்கி வழிவிலகிப்போவதில்லை யென்றுத்வநிதம். இங்கு ஸரஸ்வதீதிசேஷ:. நற்பதிகள் ஸமீசீனஸ்தாநங்களிலேயும், அற்பதிகள் - அஸமீசீந ஸ்தாநங்களிலேயும், ஸமப்ரதேசங்களிலேயும் விஷமப்ரதேசங்களிலு மென்றபடி. கற்புரள - கல்புரள இதிச்சேத:. கல் - சிலைகள், புரள - உருளும்படி, வேகாதிசயத்தாலே ஸமவிஷம ப்ரதேச விபாகமில்லாதே கந்தரசிலைகள் விலுண்டநம் பண்ணும்படி யென்றபடி. அற்புத-அத்புதையான, மருக்கதியினல்-மருகதியாலே, மரு-நிர்ஜலப்ரதேச:. யத்வா - மருக்கதியினல் - மருத்கதியாலே, வாயுகதியாலே யென்றபடி. இதுக்கு இடியவென்கிறத்தோடேயந்வயம். கன்னடை - கல்நடையிதிச்சேத:. சிலாகமநத்தை, விடா விடம்-ப்ரவர்த்திப்பியாத ஸ்தலம், இங்கு நடையை விடுகையாவது த்யஜிக்கையன்று, கிந்து அச்வம் விடுகை ஸர்பம் விடுகை யென்கிறவிடத்தில் போலே ப்ரவர்த்திப்பிக்கை. இல்-இல்லாதவையான, இதுகிரிகூடங்களுக்கு விசேஷணம். விஷம ஸங்கட ஸ்கலித சிலா கமனம் பண்ணாத ப்ரதேச மில்லாதவையான வென்றபடி. தாத்ருச கமனமே பண்ணு மிடங்களானவென்று பலிதார்த்தம். உன்னதி-உன்னதியாலே, சிறு - அல்பீபவியாதவையான, சிறுமை - அல்பீபவிக்கை, நிரதிசயோன்னதி சாலிகளானவென்றபடி. விகட - விகடங்களான, அதிவிசாலங்களான வென்றபடி. மன்னு - த்ருடதரங்களான, கிரிகூடம் - கிரிகூடங்கள், பர்வத சிகரங்களென்றபடி. இடிய - இடிந்து விழும்படி, கட்ட - கஷ்டங்களான, துர்தம கடோரங்களான வென்றபடி. விடை-வ்ருஷபங்கள், இற்று - நசித்து, விழ - பதிதங்களாம்படி, அநாயாஸேந மஹாநதீதரண ஸமர்த்தங்களான மஹோக்ஷங்களும் கூட வவஸந்ந ப்ராணங்களாய்பதிதங்களாம்படி யென்றபடி. முற்றும் - ஸர்வத்ர, விழி-வீக்ஷணத்தை,உற்று-அடைந்து, ஸர்வதோ த்ருஷ்டிகளை ப்ரசரிப்பித்தென்றபடி. அடைய - காத்ஸ்ந்யேந, விட்டு-பரித்யஜித்து, அருகு - ஸமீபத்தை, உற - அடையும்படி, ஜநங்கள் ப்ரளய பாராவார ந்யாயெநாபூதபூர்வமான மஹாநதீ ஸம்ப்ரமத்தைக்கண் டிதி கர்த்வ்யதாமூடங்களாய் க்ரத்வநுஷ்டாநவ்யக்ரனன ப்ரஹ்மாவினுடைய ஸமீபத்திலேதாவனம்பண்ணும்படி யென்றபடி, அன்ன - ஹம்ஸயுக்தனன வென்றபடி. நய - ந்யாயயுக்தனன, ஸரஸ்வத்யநுநயார்த்தமாக வஸிஷ்டபகவானை ப்ரேஷிக்கையாலே ப்ரதாநபத்ந்யதிக்ரமரூப துர்நய ரஹிதனன வென்று தாத்பர்யம். சீர்-கல்யாணகுணயுக்தனன, யாகாநுஷ்டானோபயுக்த மந: ப்ரணிதான வாங்நியமாதி யுக்தரான வென்றபடி. அயன் அஜன், இதென் - இதெது, என - என்னும்படி, கிமிதம் என்று ஸம்ப்ராந்தனும்படி யென்றபடி. விழா - உத்ஸவத்திலே யிருக்கிற, அமரர் - அமரர்கள், மன்று - ஸ்திரமான, பதி - ஸ்தானத்தை, ஏறி - ஆரோஹித்து, மகிழ - ஆனந்திக்கும்படி, ஹயமேதோத்ஸவ தர்சந ஸமாகதரான தேவர்களித்தைக்கண்டு அதிபீதராய் ஜடிதி ஸ்வர்கத்தை யாரோஹித்து தங்களுடைய ப்ராணத்ராணத்தாலே புநர்ஜாதம் மந்யராய் ஸந்தோஷிக்கும்படி யென்றபடி. அத்திசை - அந்ததிக்கிலே, அச்வமேதாநுஷ்டானப்ரதேசத்திலே யென்றபடி, வர - வரச்செய்தே, அச்சுதன் - அச்யுதன், நச்யவந்தேஸ்மாதாச்ரிதா இத்யச்சுத: என்கிற வ்யுத்பத்தியாலே பகவத ஸ்ஸர்வப்ரகாராச்ரித ரக்ஷண சீலத்வம் தர்சிதம். அணைத்தனுவில் - சயனபோகத்திலே, ஸ்வசயநபூதமான திருவனந்தாழ்வான் திருமேனியாலேயென்றபடி. ஆவிர்பவித்திதிசேஷ:. தகைய-ப்ரதிபந்திக்க. "ஏஷஸேதுர் விதரணஏஷாம் லோகாநாம்ஸம்பேதாய" என்கிறபடியே ஸகலஜக தேகஸேதுவான ஸர்வேச்வரன்தானே சரணாகத சதுர்முக யஜ்ஞஸம்ரக்ஷணார்த்தமாக வநந்தபோகி போகசாயியா யாவிர்பவித்து யஜ்ஞவிகாதோத்யதமான மஹாப்ரவாஹத்துக்கு திரதிக்ரமமாக வோரணைபோட்டாப்போலே ப்ரதிபந்தம்

பண்ணுகையாலே யென்றுபிண்டிதார்த்தம். வற்ற - சோஷணத்தை, அணுகினாள், அடைந்தாள். கிஞ்சித்லஜ்ஜிதையாய் சிதிலிதவேகையாய் உபசாந்தையாளென்றபடி. (௧௨)

மூ.—அன்றுநயந்த வயமேத மாவேள்விப்
பொன்றவுரையணங்குபூம்புனலாய்க்—கன்றிவர
ஆதியனுக்கருள் செய்தணையானான்
தாதையரவணையான்றான். (௧௩)

கீழ்ப்பாட்டிலருளிச்செய்த வர்த்தத்தையே ஸர்வேச்வரனுடையவாச்ரிதபாரதந்த்ர்ய ப்ரகாசனார்த்தமாக புநரநுஸந்திக்கிறார்.

அன்று - அந்ததிநத்திலே, நயந்த - அனுஷ்டிதமான, அயமேத - ஹயமேதமென்று ப்ரஸித்தமான, மாவேள்வி-மஹாயஜ்ஞமானது, பொன்ற - நசிக்கும்படி, உரையணங்கு - வாக்தேவதை, பூம்புனலாய் - புஷ்பஜலமாய், கமலகுமுதகல்ஹாரேந்தீவராத்யலங்க்ருத மஹாநதியா யென்றபடி. கன்றி - விவர்ணீபவித்து, கோபஜ்வலநதஹ்யமான ஹ்ருதயையா யென்றபடி. வர - வரும்போது, ஆதி-ஜகத் ஸ்ருஷ்ட்யதிகாரியான வென்றபடி. அயனுக்கு - அஜனுக்கு, அருள்செய்து-க்ருபைபண்ணி, தாதை - பிதாவான, ஜகத்ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவுக்கும் பிதாவான வென்றபடி. இங்கீச்வரனை ப்ரஹ்ம பித்ருத்வேந நிர்தேசித்தது வாத்ஸல்ய ஹிதப்ரவர்த்தகத்வாதி ப்ரதர்சநார்த்தம். அரவணையான் - போகிசயனன், தான் - ஸ்வயமேவ, அணையானான் - ஸேதுவானான். (௧௩)

மூ.—தரணியின்மன்னியயனார்தனித்தவங்காத்தபிரான்
கருணையெனுங்கடலாடித்திருவணைகண்டதற்பின்,
திரணரகெண்ணிய சித்திரகுத்தன் றரித்து வைத்த
சுருணையிலேறியசூழ்வினை முற்றுந் துறந்தனமே. (௧௪)

இப்படி ஸகலலோகைகஸேதுவான ஸர்வேச்வரன் ஸரஸ்வதி ப்ரவாஹமத்யத்திலே யரவணையோடே கூட வணையாகக் கிடந்தவளவில் கண்ணும் மனமுங் களிக்கக் கண்டு நின்ற த்ரைலோக்யவர்த்திகளும் பேசினபாசுரத்தையருளிச்செய்கிறார்.

தரணியில் - தரணியிலே, மன்னி - த்ருடீபவித்து, த்ருட விகட கிரிகூட பேதியான ஸரஸ்வதீ ப்ரவாஹத்துக்குங் கூடவணுக வொண்ணாதபடி பூமியிலே ஸீமாசலம் போலே கண்வளர்ந்தென்றபடி. இதுக்குக் காத்தபிரானென்கிறத்தோடே அந்வயம். அயனார் - அஜனுடைய, அயனாரென்கிற பூஜோக்தியாலே சதுர்முகனொருவனிடத்திலுள்ள பகவத்வாத்ஸல்யத்தால் நிகிலலோகமும் பகவத்ஸாக்ஷாத்காரம் பெற்றுஜ்ஜீவிக்கும் படியாய்த்தென்று மஹோபகாரத்வ ப்ரயுக்தகௌரவாதிசயஸ் ஸூசிதஃ. தனி - அஸஹாயமான, ஸத்ருசாந்தர ரஹிதமான வென்றபடி. யத்வா - தனி அநாதமான, பகவத்வ்யதிரிக்த ரக்ஷக சூந்யமான வென்றபடி. தவம் - தபஸ்ஸை, பஹுவிதவ்யய காயக்லேச ஸாத்யமான வச்வமேதத்தை யென்றபடி, காத்த - ரக்ஷித்தவனை, பிரான் - உபகாரகனுடைய, கருணையெனும் - கருணையென்று பேர் பெற்றிருக்கிற, கடல் - ஸமுத்ரத்திலே, ஆடி - அவகாஹித்து, திருவணை - ஸ்ரீமத்ஸேதுவை, வேகாஸேதுவான ஸ்ரியஃபதியை யென்றபடி. கண்டதற்பின் - ஸாக்ஷாத்கரித்தபின், இதுக்கு துறந்தன மென்கிறத்தோட ந்வயம். பகவத் கருணா விஷயரல்லாதார்க்கு பகவத் ஸாக்ஷாத்காரம் துர்லப மென்று த்யோதநார்த்தம். இங்கு பகவத்கருணா ஸமுத்ராவகாஹத்துக்கு பகவத்ஸாக்ஷாத்கார பூர்வபாவ நிர்தேசஃ. லோகத்திலும் ஸமுத்ரத்தில் விழுந்து துளைந்தவனிறே கரைகாண்பது. இத்தால் ஸமுத்ரத்தி லவகாஹித்து ராமஸேதுதர்சனம் பண்ணினவனிறே ப்ரஹ்மஹத்யாதி மஹாபாதகங்களைப் போக்குவதென்று தர்மசாஸ்த்ர ப்ரக்ரியாபி ஸூசிதா. திரணரகு-திரள் - நரகு-இதிச்சேதஃ. திரள் - ராசிபூதங்களான, நரகு - நரகங்களை, எண்ணிய. கணைபண்ணுமவனை, தத்தத்புருஷக்ருத பாபராசி பலபூத நரக ராசிகளுடைய கணனவிலேகநங்களிலே யதிக்ருதனை யென்றபடி. சித்திரகுத்தன் - சித்ரகுப்தனாலே, தரித்து - அறிந்து, வைத்த - நிவேசிதமான, கணனபூர்வகமாக விலேகித்து பலப்ரதாநார்த்தம் ரக்ஷிதமான வென்றபடி., சுருணையில் - கணக்கோலைச்சுருளில்,

ஏறிய - ஆரூடங்களான, சூழ் - ஆவாரகங்களான, வினை - கர்மங்களை, முற்றும் - க்ருத்ஸ்நங்களையும், துறந்தனம் - பரித்யஜித்தோம், சித்ரகுப்த விலிகிதைகளான வஸ்மத் பாபராசிலிபிகளை காத்ர்த்ஸ்ந்யேந கிறுக்கி விட்டோ மென்றபடி. லோகத்திலும் பலவதவஷ்டம்ப முடையவனிடத்திலே துர்பலன் கையில் ருணபத்ரம் கார்யகரமன்றிறே. (௧௪)

மூ.—சுகலேசமெண்ணிய சூழ்வினைதீர்க்கத்துணிந்தயனார்
அகலாதவன்புடன் கொண்ட வயமேத வேதியின்மேல்
புகலோங்கு பொன்மலை யென்றதோர் புண்ணியகோடியுடன்
பகலோன் பகல்விளக்காகப் பரஞ்சுடர் தோன்றியதே. (௧௫)

இப்படி வேகவதியாய் வந்த ஸரஸ்வதியுடைய கோபவேக மடங்கும்படி வெஃகாவில் துயிலமர்ந்த வெம்பெருமான் கடாக்ஷிக்கக் கலக்கமற்றுவந்த ஸரஸ்வதியையும் கூட்டிக்கொண்டு ப்ரஹ்மாவச்வமேதயாகத்தை நடத்தப்ராதஸ்ஸவநகாலிகமான வபாஹோமம் ப்ரவ்ருத்தமான வளவிலே யாயிரங்கோடி யாதித்தியர்க ளுதித்தாப்போலே உத்தரவேதி மத்யத்திலே ஒருமஹாதேஜஸ்ஸு தோன்றினபடியை யருளிச்செய்கிறார்.

சுகலேசம் - ஸுகலேசத்தை, எண்ணிய - அபிலஷிக்குமவையான, சூழ்வினை- ஆவாரககர்மங்களை, தீர்க்க - நசிப்பிக்க, துணிந்து - நிச்சயித்து, காடாந்தகாரசலிதகத்யோதகல்பா நந்த துக்கஸ்ரோதோந்தர்கத வைஷயிக ஸுகலேசத்திலே புருஷார்த்ததா புத்தி ஜநகங்களான வநந்தப்ராசீந துரிதங்களைக் கழிக்க த்ருடஸங்கல்பத்தைப்பண்ணி யென்றபடி. அயனார் - அஜனாலே, அகலாத - விச்லேஷியாததான, த்ருடதரமான வென்றபடி. யத்வா - அவ்யபிசாரியானவென்றபடி. அன்புடன்- ப்ரேமத்தோடே, கொண்ட - ஸ்வீக்ருதமான - அநுஷ்டிதமான வென்றபடி. அயமேத - ஹயமேதத்தினுடைய, வேதியின்மேல் - வேதிகையின்மேலே, உத்தரவேதி மத்யத்திலே யென்றபடி. புகல் - ப்ரபைகள், ஓங்கு - ஊர்த்வ வ்யாப்தைகளாம்படியான, ஊர்த்வமுகவ்யாபி மயூக படலீ சாலியான வென்றபடி, பொன்மலை - ஹிரண்ய பர்வதம், என்றது-என்னும்படியான, ஓர்-விலக்ஷணமான, புண்ணியகோடியுடன்- ஸ்ரீபுண்யகோடி விமாநத்தோடே கூட, பகலோன் - அஹஸ்கரனனவன்-பகல்விளக்காக-திவாதீபமாம்படி, நிரதிசய ஸ்வதேஜோபிபூதனன ஸூர்யன்திவாதீபம்போலே நிஸ்தேஜஸ்கனாம்படி யென்றபடி. பரஞ்சுடர் - பரஞ்ஜோதிஸானது, “அதயதத: பரோதிவோ ஜ்யோதிர் தீப்யதே,நதத்ர ஸூர்யோ பாதி ந சந்த்ர தாரகம்,நேமா வித்யுதோ பாந்தி குதோ யமக்நி:, தஸ்ய பாஸா ஸர்வ மிதம் விபாதி, தமேவ பாந்தமநுபாதி ஸர்வம், தஸ்யாதித்யோகா முபயுஜ்ய பாதி” என்கிற ஸ்ருதிப்ரஸித்தமாய் ஸர்வதேஜஸா மபிபாவகமாய் ஸர்வதேஜஸா முபஜீவ்யமான பரஞ்ஜ்யோதிஸ்ஸானதென்றபடி. தோன்றியது - ஆவிர்பவித்தது. (௧௫)

மூ.—பெருமையுடை யத்திகிரிப்பெருமாள் வந்தார் பேராதவருள்பொழியும் பெருமாள்வந்தார், அருமறையினுச்சிதனினின்றார்வந்தார் அங்கமுடனவையாகும்பெரியோர்வந்தார், திருவுரையாய்த்தாம்பொருளாய் நிற்பார்வந்தார் திருவருளாற்செழுங்கடலைக்கடந்தார்வந்தார், மருவிலர்க்கு மயக்குரைக்கு மாயோர்வந்தார் வானேறவழி தந்தார் வந்தார் தாமே. (௧௬)

இப்படி ஸ்ரீபுண்ய கோடி விமாநத்தோடே யாவிர்பவித்தருளின பேரருளாளனைக்கண்டு உன்மஸ்தகாநந்த பரிதரானநித்யஸூரிகளுடைய முகத்தாலே யாத்மாதமான வாதிராஜ்ய சிம்ஹ திவ்யகாஹளத்தினுடைய ரஹஸ்யத்ரயப்ரதிபாத்யகல்யாணகுண கர்பமானநாதமிருக்கும்படியை திருச்சின்னமாலை யென்றொரு ஸ்வதந்த்ர ப்ரபந்தமாகச் செய்தருளினார். அதினுடையபாதார்த்த வர்க்யார்த்தங்களிருக்கும் கட்டளையெல்லாம் நாம்ஸ்வதந்த்ரமாகவேவிவரித்தோம். இங்கு ததபேக்ஷயா பின்ன பூர்வார்த்த பாடையான இக்காதையை விவரிக்கிறோம்.

பெருமையுடை - மாஹாத்ம்யத்தை யுடையவரான, அத்திகிரி - ஹஸ்திகிரி வாஸ்தவ்யரான, பெருமாள் - ஸ்பஷ்டம், வந்தார் - ஆவிர்பவித்தார், இப்படி மேலும் கண்டுகொள்வது. பேராத - சலியாததான, அருள் - க்ருபையை பொழியும் - வர்ஷிக்குமவரான, பெருமாள்வந்தார்-ஸ்பஷ்டம், அரு - துர்போதங்களான, மறையின்- வேதங்களுடைய, உச்சிதனில் - சிரஸ்ஸுக்களிலே, நின்றார் - ப்ரதிஷ்டித ரானவர், அதிகஹந கம்பீர ஸகலவேதாந்த ப்ரதிபாத்ய ரென்றபடி. அங்கமுடன்-சிக்ஷாகல் பாத்யங்கங்களோடே கூட, அவை - அந்தவேதங்கள், ஆகும் - ஆகுமவரான, ஸாங்க ஸகல வேத நிர்வாஹகரான வென்றபடி. பெரியோர் - மஹிமயுக்தர், திரு - பிராட்டி, உரையாய் - வாணியாய், தாம் - ஸ்வயம், பொருளாய் - அர்த்தமாய், நிற்பார்- நிற்குமவர், "ஔத்பத்திகஸ்து சப்தஸ் யார்த்தேந ஸம்பந்த:" என்கிற ஜைமினி ஸூத்ர தர்சிதா ப்ரதக்ஸித்ய பிப்ராயத்தாலே "அர்த்தோ விஷ்ணு ரியம்வாணீ" என்று துடங்கி பராசர ப்ரஹ்மர்ஷி ப்ரபஞ்சித்த படியே ஸர்வாவஸ்தையிலும் பிராட்டியோடு ஸம்ச்லிஷ்டரான வரென்றபடி. திருவருளால் ஸ்ரீக்ருபையாலே, செழும்- அபிவ்ருத்தைகளான, கலைகள்-வித்யைகளை, தந்தார் - கொடுத்தவர், முன்பு - வித்யா ஸ்தான வக்த்ருத்வம் சொல்லிற்று, இப்போது தத்ப்ரதாத்ருத்வம் சொல்லுகையாலே புநருக்தியில்லை, மருவலர்க்கு - ப்ரேமசூந்யர்க்கு, மயக்கு - வ்யாமோஹந சாஸ்ரங்களை, உரைக்கும் - உபதேசிக்கு மவரான, மாயோர் - வஞ்சகர், வான் - வைகுண்டாக்ய பரமாகாசத்தை, ஏற-ஆரோஹிக்க, வழி-மார்க்கத்தை, தந்தார்-கொடுத்தவர், தாமே - ஸ்வயமேவ, வந்தார் - ஆவிர்ப்பவித்தார். (௧௬)

மூ.—அத்திகிரியருளாளப்பெருமாள்வந்தார் ஆனைபரிதேரின்மேலழகர்வந்தார், கச்சிதனிற்கண்கொடுக்கும்பெருமாள்வந்தார்கருதவரந்தருந்தெய்வப்பெருமாள்வந்தார், முத்திமழைபொழியுமுகில்வண்ணர்வந்தார் மூலமெனவோலமிட வல்லார்வந்தார், உத்தரவேதிக்குள்ளே யுதித்தார்வந்தார் உம்பர்தொழுங்கழலுடையார்வந்தார்தாமே. (௧௭)

இந்தபாட்டின்வ்யாக்யானத்தை திருச்சின்னமாலையில்காண்பது. (௧௭)

மூ.—திருபரிதிசைந்தமகுடமும் எழின்மதிதிகழ்ந்தவதனமும்
இருவகையிலங்குகுழல்களி லெதிர்பொரவுகந்தமகரமும்
ஒருதகவுயர்ந்ததிருமக ளொளிமருவின்மன்னுமகலமும்
உருவருவுமிழ்ந்தவுதரமும் உலகடையநின்றகழல்களும்
மருவினிடையோங்குபுனலென மலைகுனியநின்றமலையென
மருளறவிளங்குமொளியென மலரயனுகந்தபயனென
வுருவிலுறைகின்றவுயிரென வடியவருகந்தவமுதென
அருமறைகளொன்றியடிதொழ வருள்வரதர்நின்றபெருமையே. (௧௮)

இப்படியாவிர்ப்பவித்தருளின பெருமாளுடைய மஹாதேஜஸ்ஸிலே ப்ரமமேறி யோடின ப்ரஹ்மாவும் தேவர்களும்மகர்ஷிகளும் வருந்தி குறித்துப் பார்த்து அத்தேஜோமண்டலத்துக்குள்ளே புண்யகோடி விமாநத்தையும் அவ்விமானமத்யத்திலே ஹவிர்கர்ப்பமுகரான பெருமாள் காந்திவர்ஷியாயிருப்ப தொரு காளமேகம்போலே நின்றருளினபடியையுங் கண்டுஹர்ஷவிஸ்மயபரவசராய்க் கொண்டு பேசினபடியை யருளிச்செய்கிறார்.

திரு - ஸ்ரீமானான, பருதி - ஸூர்யனோடே, இசைந்த - ஸத்ருசமான, நீதிதி ஸஹஸ்ர பாஸ்வர பாஸ்கர ஸத்ருசமான வென்றபடி. மகுடமும் - மகுடத்தோடும், எழில் - உஜ்வலனான, மதி-சந்த்ரன்போலே, திகழ்ந்த - விளங்காநிற்கிற, வதனமும்- வதநத்தோடும், இருவகை - இரண்டுப்ரகாரமாக, இலங்கு - விளங்காநிற்கிற, குழல்களில் - குந்தளங்களிலே, எதிர்பொர-அபிமுகமாக ப்ரவர்த்திக்க, உகந்த - ப்ரீதங்களான, மகரமும் - மகரங்களோடும், லலாட ப்ராந்த த்வய லம்பி திவ்யாளகங்களிலே க்ரஸந ஸந்நத்தங்கள் போலே யிருக்கிற மகரகுண்டலங்களோடு மென்றபடி. ஒரு - விலக்ஷணமான, தகவு - க்ருபையாலே, உயர்ந்த - துங்கையான, திருமகள் - பிராட்டியானவள், ஒளி - உஜ்வலமான, மருவில் - ஸ்ரீவத்ஸாக்ய சின்ஹத்தோடே

மன்னும் - ஸ்திரீபவிக்குமிடமான, அகலமும் - விசாலஸ்தலத்தோடும், நிரவதிக கருணா ரஸ நிர்ப்பரையான பிராட்டிக்கு ஸ்ரீவத்ஸத்தோடே கூட நித்ய ப்ரதிஷ்டாஸ்பத பூதமான விசங்கட வக்ஷஸ்தலத்தோடு மென்றபடி. உரு - ரூபவத்துக்களையும், அரு - ஸூக்ஷ்மங்களையும், ஸ்தூலங்களான வசேதநங்களையும் ஸூக்ஷ்மங்களான சேதநங்களையு மென்றபடி. உமிழ்ந்த - உத்கிரணம்பண்ணினதான, ஸ்ருஷ்டித்ததான வென்றபடி. உதரமும் - உதரத்தோடும், உலகு - லோகங்கள், அடைய - அநாயாஸேந ஸரணமாக வாஸ்ரயிக்கும்படி, நின்ற - எதிரே ஸௌலப்யேந நின்றவையான, கழல்களும் - திருவடிகளோடும், "ஸர்வபோக்யமநாயாஸம்" என்கிறபடியே ஸர்வ ஸமாஸ்ரயணார்ஹங்களான திருவடிகளோடு மென்றபடி. யத்வா - உலகு-லோகங்களிலே, அடைய - க்ருத்ஸ்நங்களிலேயும், நின்ற - நின்றவையான, கழல்களும் - திருவடிகளோடும், த்ரிவிக்ரமதசையிலே ஸர்வலோகங்களையும் வ்யாபித்து நின்ற திருவடிகளோடு மென்றபடி. அரு - போக்து மசக்யங்களான, மறை - வேதங்கள், ஒன்றி - ஏகீபவித்து, ஏகங்களா யென்றபடி. அடி - திருவடிகளை, தொழ - ஸேவித்திருக்கும்படி, "ஸர்வெவேதா யத்பதமாமநந்தி" இத்யாதிகள்படியே ஸர்வவேதங்களு மேககண்டங்களாய் ஸ்வஸ்வரூபகுணாதிகளை வந்திகள் போலே யுத்கோஷிக்கும்படி யென்றபடி. அருள்வரதர் - க்ருபையாலே வரப்ரதரான பேரருளாளர், நின்றபெருமை - ஸ்ரீஹஸ்திகிரி மூர்த்தாவிலே புண்யகோடிவிமானமத்யத்திலே நின்றருளினவதிசயம், மருவின் - மருப்ரதேசத்தினுடைய, இடை - மத்யத்திலே, ஓங்கு - எழும்பாநிற்கிற, புனலென - ஜலம்போலே, எனவென்கிறபதம் ஸாத்ருசய வாசகமா யுத்ப்ரேக்ஷாத்யோதகம். அகிலஹேயாஸ்பத த்ரிகுண த்ரய காம்பித ஜட விபூதிமத்யத்திலே, அகிலஹேயப்ரத்யநீக சுத்தஸத்வ ஸ்யம்ப்ரகாச விக்ரஹ விசிஷ்டரான பேரருளாள ரவதரித்தது மருகாந்தார மத்யத்திலே ஸ்வச்ச ஸ்வாது தோய பூரோதயம்போலே யென்றபடி. இப்படி மேலு மூசிதமாகக் கண்டுகொள்வது. மலை - பர்வதமானது, குனிய - வணங்கும்படி, நின்ற - மலைமேல்நின்றதான, மலையென - பர்வதம்போலே, ஒரு மலைமே லொருமலை நின்றாப்போல் என்றபடி. மருள் - அஜ்ஞாநாந்தகாரம், அற - உச்சின்னமாம்படி, விளங்கும் - ப்ரகாசியாநிற்கிற, ஒளியென - ஜ்யோதிஸ்ஸுபோலே, ஸ்வதந்த்ராத்மப்ரம தத்கார்யா த்யுச்சேதார்த்தமாக வத்யாத்ம வித்யைதான் மூர்த்திபவித்து நித்தாப்போலே யென்றபடி. மலர் - புஷ்போத்பன்னனான, அயன் - அஜனாலே, உகந்த - அபிலஷிதமான, பயனென - பலம்போலே, உருவில் - சரீரத்திலே, உறைகின்ற - வஸிக்குமவனான, உயிரென - ஜீவாத்மாபோலே, அடியவர் - தாஸராலே, உகந்த - அபிலஷிதமான, அமுதென - அம்ருதம்போலே, பூர்வோக்த திவ்யபூஷண திவ்யாவயவ விசிஷ்டரான பேரருளாளருடைய கரிகிரி மூர்த்தாவில் புண்யகோடி விமாநாவஸ்தாந மிப்படி ஷட்ப்ரகாரமாக வுத்ப்ரேக்ஷிக்கும்படி யிருக்கிறதென்று பிண்டிதார்த்தம். (௧௮)

மூ.—சித்தசித்தென விரித்துரைத்தன வனைத்தமைத்துறையு மிறைவனார்
சிறியபெரியவுரு வடைய வுடலமென நடலமிலதில தநிலையினார்
சித்திரத்தொழிலை யொத்தபத்தரொடு முத்தர்பித்தியெனு முணர்வினார்
செய்தவின்மறைநெறியிலெறியவுருமுறைகள் மூறியசிறையரியநிறைவினார்
கத்துவிக்கவல கத்துவித்தைவழி கற்றவர்க்கசைவின்மாயனார்
கபிலர்கணசரணர் சுகதர்சமணரரர் வழிகளழியுமருண் மொழியினார்
கத்திலக்கிலு மருக்குலத்திலு மசித்திலொக்கு மொருமுதல்வனார்
காணமிடுகடிய பகிரெனுரிருடிகமு மடைய முடியு மடியிருடியார்
ஒத்தனைத்துலகு மொற்றியொற்றிவரு மிப்பவத்திசையு மிசைவினார்
உருவமருவமெனு மூலகின்முடகிலனி லுவமையிலதிலகுதலைவனார்
உத்தமப்படி வகுத்தவித்தைகளி லுத்தரிக்கவுணர் குணவனார்
உரியகிரியைகளி லகிலதொருவிரகு தெரியவினையுமவர் பரிவினார்

சத்தசத்தனு மனைத்தனைத்தவினை தொத்தறுக்கவல துணிவினர்
செரியுமளவிலுரி யவரையறிவரிய தமனிநெறி சொருகு விரகினர்
தத்துவத்திரளை தைத்துதைத்தடைவு தத்துவிக்குமவர் தலைவனர்
தருகவுணருமவர் சரணமணுகவிட லரிவருள்வரத ரடியமே. (௩௰)

இவ்வண்ண மாச்சர்யரஸத்தாலும் பக்திப்ரகர்ஷத்தாலும்ப்ரேரிதரான ப்ரஹ்மாதிகள் தொழுவதொழுவதா யிவர்க்குதாமடியோமாகப் பெறுவதே யென்று வேதாந்தஸாரமானவர்த்தத்தை விண்ணப்பஞ் செய்தபடியையருளிச்செய்கிறார்.

இப்பாட்டில் அத்யாய சதுஷ்டயாத்மக சாரீரகசாஸ்த்ர ஷோடசபாதீ ப்ரதிபாத்யங்களான பதினாறு கல்யாணகுணங்க ளடைவே பதினாறுசரணங்களாலே ப்ரதிபாதிக்கப்படுகின்றன. சித்து - சித்தத்வம், அசித்து - அசித்தத்வம், என - என்று, விரித்து - விஸ்தரித்து, உரைத்தன - சொல்லப்பட்டவையான, அனைத்து - ஸமஸ்தவஸ்துக்களையும், அமைத்து - ஸ்ருஷ்டித்து, உறையும் - அவைத்திலே வஸிக்குமவரான, இறைவனார் - ஈச்வரபூதனை, நியந்த்ருபூதனை வென்றபடி. சேதநாசேதநரூபேண விபஜித்து தத்ராபி தேவதிர்யகாதி மஹதஹங்காராதி பஹுவிதாவாந்தர வைசித்ரீசாலித்வேந சாஸ்த்ரங்களிலே ப்ரதிபாதிதங்களான ஸகல வஸ்துக்களையும் ஸ்ருஷ்டித்து "தத்ஸ்ருஷ்ட்வா,ததேவாநுப்ராவிசத்" என்கிறபடியே அவைத்திலனுப்ரவேசித்து நியமிக்குமவரான வென்றபடி. இத்தால் சாரீரக சாஸ்த்ர ப்ரதமபாத ப்ரதிபாதிதமான சிதசித்ஸ்ரஷ்ட்ருத்வாக்ய கல்யாணகுணம் ப்ரதிபாதிதமாய்த்து. சிறிய - ஸூக்ஷ்மங்களான, பெரிய - ஸ்தூலங்களான, உரு - ரூபங்களான வஸ்துக்களென்றபடி. அடைய - கார்த்ஸ்ந்யேந, உடலமென - சரீரமென்னும்படி, நடலம் - அவத்யம், இலது - இல்லாதபடி, இலகு - விளங்காநிற்கிற, நிலையினர் - ஸ்திதியையுடையவரான, ஸூக்ஷ்ம ஸ்தூல சப்தித நிகில சேதநாசேதந சரீரகராயிருந்து வைத்து தத்ப்ரயுக்ததோஷை ரஸம்ஸ்ப்ருஷ்டராய் ததந்தஸ்ஸ்திதரானவென்றபடி. இத்தால் சிதசித்ப்ரபஞ்ச சரீரகத்வமாகிற த்விதீயபாதப்ரதிபாத்யகுணம் ப்ரகாசிதமாய்த்து. இங்கு நடலமிலதென்கிற வித்தால் "ஸம்போக ப்ராப்திரிதி சேந்ந வைசேஷ்யாத்" என்கிற ஸூத்ரத்தின்படியே "அநச்நந்நந்யோ அபிசாகசீதி" என்கிற ச்ருதியாலே தர்சிதமான சரீர ஸம்பந்த ப்ரயுக்த ஸுகதுக்கபாக் ஜீவ வைலக்ஷண்யத்தைக் காட்டினபடி. சித்திரத்தொழிலை-சித்ரவ்யாபாரத்தோடே, ஒத்த - ஸத்ருசமான, இது பத்த முக்த நித்யர்க்கு விசேஷணம். பத்தரொடு - பத்தரோடு; முத்தர் - முக்தருக்கு, இங்கு முக்தபதத்தாலே அநாதிமுக்தர் ஸாதிமுக்தரிருவரும் விவக்ஷிதர்கள். பித்தியெனும் - பித்தியென்றும்படியான, உணர்வினர் - ஞானத்தையுடையவரான, தாரயதைக ஸ்வபாவதயா சித்ர ரேகா ஸ்தாநீயரான பத்த முக்த நித்ய ரூபத்ரிவித சேதநர்க்கும் தாரகதைகஸ்வபாவதயா பித்திஸ்தாநீயமான ஸங்கல்பத்தை யுடையவரானவென்றபடி. அத்ர த்ரிவிதசேதநதாரகத்வோக்தியாலே "அக்ஷரமம்பராந்தத்ருதேঃ" என்கிற ஸூத்ரோக்தமான மூலப்ரக்ருதி பர்யந்தாசேதந தாரகத்வம் கைமுத்யஸித்தம். இங்கு ஸங்கல்பத்துக்கு ப்ரபஞ்சதாரகத்வோத்தியாலே "ஏதஸ்யவா அக்ஷரஸ்ய ப்ரசாஸநே கார்கி ஸூர்யாசந்த்ரமஸௌ வித்ருதௌ திஷ்டதঃ" என்கிற ச்ருதியும் "ஸாச ப்ரசாஸநாத்" என்கிறஸூத்ரமும் ப்ரத்யபிஜ்ஞாபிதங்கள். ஏதேந "ஸ்வேமஹிம்நிப்ரதிஷ்டிதঃ" என்கிறவநந்யாதாரத்வம் பலிதம். இத்தால் த்ருதீயபாத ப்ரதிபாத்யமான ஸ்வநிஷ்டத்வ ரூபகுணம் வ்யஞ்ஜிதமாய்த்து. சிதைவில் - சைதில்யமில்லாததான, மறை நெறியில்-வேதமார்க்கத்திலே, ஏறிய - ஆரூடங்களான, உரு-அசேதநத்தினுடைய, முறைகள் - கர்மங்கள், முறிய -பக்னங்களாம்படி, சிறை - ஸங்கோசம், காராக்ருஹவாசகமான சிறைசப்தத்தாலிங்கு ஸங்கோசம் விவக்ஷிதம், அரிய அசக்யமான, நிறைவினர் - பூர்த்தியையுடையவரான, ப்ரமாணாந்தரேண பாதிதுமசக்யங்களான "இந்த்ரியேப்யঃ பராஹ்யர்த்தாঃ" இத்யாதி வேதாந்த வாக்யங்களாலாபாததঃ ப்ரதீயமானைகளான காபிலதந்த்ரஸித்தப்ராதாந ப்ரக்ரியைகளெல்லாம் ஸம்யங்ந்யாயாநுக்ருஹீத தத்தத்வாக்ய பராமர்சத்தாலே பாதிதைகளானையாலே "ஏதேநஸர்வேவ்யாக்யாதாவ்யாக்யாதாঃ" என்கிறபடியே ஸர்வவேதாந்த ப்ரதிபாத்யதஸ்ஸங்கோச மஹிமபூர்த்திகளான வென்று பிண்டிதார்த்தம். இங்கு ப்ரதாந ப்ரக்

ரியா ப்ரதிபாதந பங்கத்தைச் சொன்னது "ஜகத்வாசித்வா" தித்யாத்யதிகரணோ தர்சிதமான ஜீவப்ரக்ரியா ப்ரதிபாதந பங்கத்துக்கு முபலக்ஷணம். "ஆநுமாநிக மப்யேகேஷா மிதி சேந் ந சரீர ரூபகவிந்யஸ்த க்ருஹீதேர் தர்சயதிச" இத்யாத் யதிகரணங்களாலே ப்ரதாந ப்ரக்ரியா நிராஸம் ப்ரதமோபக்ராந்தமாகையாலே அத்தை இங்கே கண்டோக்தமாக்கி சரமோபக்ராந்தமான ஜீவப்ரக்ரியா நிராஸத்தை யுபலக்ஷிக்கையுசிதமிறே. இத்தால் நிரவதிகமஹிமத்வ லக்ஷணநுமாநிகபாத ப்ரதிபாத்ய குணம் ப்ரகாசிதமாய்த்து. கத்துவிக்க - ஜல்பம்பண்ணுவிக்க, வல - ஸமர்த்தமான. கத்துவித்தைவழி - ஜல்ப வித்யாமார்க்கத்தை, கற்றவர்க்கு-அப்யஸித்தவர்க்கு, அசைவில்-சலநமில்லாத,மாயனார்-விசித்ரசக்திகரான, எடுத்தவிடமெல்லாம்ஹேது கல்பநம் பண்ணும்படி குதர்க்ககுஹநோத்தாபகமான ஜல்பவித்யாக்ய மார்காப்யாஸ முடையவராலே துர்விசால ஜகத்ஸ்ருஷ்ட்யனுகூல விசித்ர சக்திக ரான வென்றபடி. இங்கு மாயனா ரென்று நிர்தேசித்தது "ஆத்மநி சைவம் விசித்ராச்சஹி" என்கிற ஸூத்ரத்தின்படியே விசித்ர சக்திகதயா ப்ரஹ்மணோ ஜகத்காரணத்வேஸம்பாவித ஸர்வாநுபபத்தி பரிஹார ப்ரதர்சனார்த்தம். ப்ரஹ்மகாரணத்வத்துக்கு தர்க துர்விசாலத்வ கதநம் காபிலாதி ஸ்ம்ருதி துர்விசாலத்வத்துக்கு முபலக்ஷணம், இங்கு சாரீரகசாஸ்த்ரத்தில் ப்ரதமோபாத்தமான ஸ்ம்ருதிதுர்விசாலத்வத்தை கண்டோக்தமாக்கி சரமோபாத்தமான தர்கதுர்விசாலத்வத்தை யுபலக்ஷிக்க வேண்டியிருக்க விபரீதமாகப்பண்ணினது கபிலாதி ஸ்ம்ருத்யபேக்ஷயா பாஹ்யதர்காணும் பரிஹார்யதாயாம் ப்ராதாந்யத்யோதநார்த்தம். இத்தால் ஸ்ம்ருதிந்யாயவிரோதபரிஹாரபர ஸ்ம்ருதிபாதப்ரதிபாத்ய நிர்பாதத்வ ரூப குணமநுபாஷிதமாய்த்து, கபிலர் - கபிலமதநிஷ்டருடையவும், சுகதர் - ஸுகதமதநிஷ்டருடையவும், சமணர் - ச்ரமணமத நிஷ்டருடையவும், ச்ரமணாஜிநா:. அரர் - ஹரமதநிஷ்டருடையவும், வழிகள் - மார்க்கங்கள், அழியும்-நசிக்கும்படியான, அருள் - க்ருபாப்ரயுக்தமான, மொழியினர் - வசநத்தையுடையவரான, இங்கு அருள் மொழிசப்தத்தாலே ஸஹஜ பகவத் காருண்ய பரிவாஹபூதமான ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ரம் விவக்ஷிதம். இதுக்கு க்ருபாப்ரயுக்தத்வோக்தியாலே "வேதாந்தேஷு யதா ஸாரம் ஸங்க்ருஹ்ய பகவாந்ஹரி: | பக்தாநு கம்பயாவித்வாந் ஸஞ்சிக்ஷேப யதாஸுகம்" என்று பரமஸம்ஹிதோக்தரீத்யா விப்ரலிப்ஸாதி மூலக புத்தாதி சாஸ்த்ராபேக்ஷயா வைலக்ஷண்யந் தர்சிதம். காபில காணாத ஸௌகதஜைந பாசுபத பாதகமான ஸ்ரீபாஞ்சராத்ர சாஸ்த்ர ரூப வசநத்தை யுடைவரான வென்றபடி. இங்கு சுகத ரென்கிற பதத்தாலே "ஸமுதாய உபய ஹேதுகேபி தத்ப்ராப்தி:" என்றுதுடங்கி யதிகரணத்ரயத்தாலே நிரஸ்தரானவைபாஷிகஸௌத்ராந்திகயோகாசார மாத்யமிக ரூப சதுர்விதபௌத்தர்விவக்ஷித்தர்கள். ஏதேந ஸாங்க்யாதி கரணம் துடங்கி ஸ்ரீபஞ்சராத்ராதிகரண மளவாக வஷ்டாதிகரணார்த்தத்தை அநுக்ரஹித்தபடி. இத்தால் ஸமயபாத ப்ரதிபாத்யமான வாஸ்ரிதாப்தத்வ ரூபகுண மநுவர்ணிதமாய்த்து. கத்து - கங்களுடைய, கமிந்திரியம். இலக்கிலும் - லக்ஷ்யத்திலேயும், ஸ்தூலத்வேநெந்த்ரியகோசரமான வாகாசாதிபூதபஞ்சத்திலேயு மென்றபடி. இங்கு பூதபஞ்சகோபாதாநேந தத்ஸூக்ஷ்மாவஸ்தாரூப தந்மாத்ர பஞ்சகமுமுபலக்ஷிதமாகிறது. அரு - ஸூக்ஷ்மவஸ்துக்களுடைய, குலத்திலும்-வர்கத்திலேயும், அதிஸூக்ஷ்மத்வேநெந்த்ரியாகோசரமானஜீவவர்கத்திலேயுமென்றபடி. அசித்திலொக்கும்-அசித்தோடே ஸத்ருசமாகிய, மஹதாதிவிகாரத்தோடொக்க வென்றபடி. அசித்பதம் ஸமாந்யவாசியானாலு மிங்கு கோபலீவர்த்த ந்யாயேந பூத பஞ்சக பூர்வபாவி மஹதாதிரூப விசேஷபரம். ஒருமுதல்வனார்-ஒருகாரணபூதரான, ப்ரக்ருதியுடைய ஸாக்ஷாத்விகாரமான மஹத்தத்வத்திலே போலே பரம்பரா விகாரமான பூததந்மாத்ர பஞ்சகத்திலேயும் விகாரமில்லாத ஜீவவர்கத்திலேயும் ஸாக்ஷாதேவ நிமித்தோபாதாநபூதரான வென்று நிர்களிதார்த்தம். இந்த ஸார்வத்ரிக ஸாக்ஷாத்காரணத்வோக்தியாலே உத்தரோத்தர பூதம் ப்ரதிப்ரஹ்மண: பூர்வபூர்வபூதத்வாராகாரணத்வ மென்கிறசங்கா நிராஸகமான "தேஜோதஸ்ததாஹ்யாஹ" என்கிற வதிகரணம் ப்ரத்யபிஜ்ஞாபிதம். இங்குசேதநத்தை இந்த்ரியாகோசரத்வேந நிர்தேசிக்கையாலே ஸ்தூலத்வேந ஸ்வரூபபரிணாம

அஸஹிஷ்ணுதயா ஸ்வரூபாந்யதாபாவ ரூபோத்பத்தியும் ஜீவவர்கத்தை ஸூக்ஷ்மத்வேந நிர்தேசிக்கையாலே சேதந தஹந க்லேதந சோஷணாத்யநர்ஹத்வேந ஸ்வரூபபரிணாமா ஸஹிஷ்ணுதயாஸ்வபாவாந்யதாபாவரூபோத் பத்தியும் ஸூசிதையாய்த்து. இத்தால் வியத்பாத ப்ரதிபாத்யமான வாகாசாத்மாத்யுசித ஸ்ருஷ்டிகர்த்ருத்வ ரூபகுணம் ப்ரதர்சிதமாய்த்து. கரணம் - சக்ஷுராதிகரணங்களை, இடு-நிவேசிக்கை, சடிய - அசக்யங்களான, சக்ஷுராதிகரண ப்ரவ்ருத் யநர்ஹங்களான வென்றபடி. பதினொரு- ஏகாதச ஸங்க்யாகங்களான, இருடிகமும்-ஹ்ருஷீகங்களும், அண்டைய-கார்ஸ்ந்யேந முடியும்-நசிக்குமதான, அடி - ஆதிகாலத்திலே, இருடியார்-ருஷீபூதரான, நிருபாதிக நிகில விஷயகஸாக்ஷாத்கார ரான வென்றபடி. சக்ஷுராதி கரணகோசரைகாத சேந்த்ரிய ப்ரளய காலஸ்திதராய் ஸ்வயங் கரண நிரபேக்ஷ ஸாக்ஷாத்காரரான வென்றபடி. இங்கிந்த்ரியங்களை சக்ஷுராத்ய கோசரத்வேந நிர்தேசித்தது "அணுவச்ச" என்கிற வதிகரணத்தின் படியே ஸூக்ஷ்மதமத்வ ஜ்ஞாபநார்த்தம். ஏகாதசத்வேந நிர்தேசித்தது பரமாத்ம விஷய ச்ருதி ப்ரத்யபிஜ்ஞாபநார்த்தம். தத்ராபிப்ராணசப்தத்தாலே நிர்தேசியாதேருஷிசப்தத்தாலே நிர்தேசித்தது "ருஷிசப்தச்ச ஸர்வஜ்ஞே தஸ்மிந்நெவ யுஜ்யதே நத்வசேதநேஷ்விந்த்ரியேஷு" என்று ஸ்ரீபாஷ்யோக்தரீத்யாதஸ்யாச்ருதேः பரமாத்ம விஷயத்வோபபாதநார்த்தம். இங்கு பரமாத்மநி பஹுக்ருத்வோபஹுவசந நிர்தேசம் "கௌண்யஸம்பவாத் தத் ப்ராக் ச்ருதெச்ச" என்கிறபடியே பரமாத்மந்யேகஸ்மிந் ஔபசாரிகமான "ப்ராணுவாருஷயः" என்கிற பஹுவசநத்தை யநுகரிக்கைக்காக. இத்தால் கரணபாத ப்ரதிபாத்யமான விந்த்ரியாதி காரணத்வ ரூப குணமுபதர்சிதமாய்த்து. அனைத்துலகும்-ஸமஸ்த லோகங்களிலேயும். ஒத்து - ஸமமாயிருந்து, இதுக்கு அசைவினரென்கிறத்தோடந்வயம். ஒத்தியொத்தி - ஆக்ரமித்து ஆக்ரமித்து, வரும் - பொங்கிவருமதான், இப்பவத்து - இந்தபவத்திலே, இசையில்-அப்யுகமம்பண்ணில், அசைவினர் - சலிப்பிக்குமவரான. ஸம்வர்த்த ஸமய ஸாகரம் போலே பொங்கிவருகிற ஸம்ஸாரத்திலே சேதநருக்கு ப்ராரப்த வைசித்ரியாலே ருசிபிறக்கில் ஸர்வஸமராயிருந்து தத்தத்ருச்யநுகுணமாக ஸம்ஸாரத்தை ப்ரவர்த்திப்பிக்குமவரானவென்றுநிஷ்கர்ஷம். ஒத்தி ஒத்திவருமென்கிறவித்தால்ஸம்ஸாரத்துக்கு அவித்யாப்ரக்ருதி ஸம்பந்தருசிவாஸனுமுகேநாவிச்சிந்த்ய பாதகத்வம் தர்சிதம். இத்தால் வைராக்யபாதப்ரதிபாத்யமான் ஸம்ஸாரதந்த்ரவாஹித்வ ரூப குணம் ஸ்புடீக்ருதமாய்த்து. உருவம்-ரூபவத்வஸ்து, அருவம்-ரூபரஹிதவஸ்து, எனுமுலகில்-என்று சொல்லப்பட்டலோகத்திலே, முடகு - ஸங்கோசம், இலெனில் - இல்லையென்னுமிடத்தில், உவமை - உபமானம், இலது - இல்லாதபடி, இலகு-விளங்காநிற்கிற, தலைவனார் - ப்ரதாநபூதரான, சேதநாசேதநாத்மக ப்ரபஞ்சத்திலே கலந்திருக்கச்செய்தேயும் ப்ருமா ப்ரக்ஷிப்த காஷ்டீந்யாயத்தாலே தத்ப்ரயுக்த ஸ்வபாவ ஸங்கோசாதி ஹேயப்ரஸங்க மில்லை யென்னுமிடத்தி லொருத்ருஷ்டாந்தம் சொல்ல வொண்ணாதபடி விளங்குகிற ஸர்வலோகப்ரதான ரான வென்றபடி. இத்தாலுபயலிங்கபாத ப்ரதிபாத்யமானவகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதாநத்வ ரூபகுணம் ஸ்பஷ்டீக்ருதமாய்த்து. உத்தமப்படி-உத்தமப்ரகாரத்தாலே, வகுத்த - விபக்தைகளான, வித்தைகளில் - வித்யைகளிலே- உத்தரிக்க-ஸம்ஸாரோத்தரணார்த்தமாக, உணர் - அநுஸந்தேயமானங்களான, குணவனார் - குணங்களையுடையவரான, "லிங்கபூயஸ்த்வாத்தத்தி பலீயஸ் ததபி" என்கிற வதிகரணத்திலே நாராயணாநுவாகம் ஸர்வபரவித்யோபாஸ்ய விசேஷ நிர்தாரண பரமென்று நிர்ணயித்தபடியே வேதாந்தங்களிலே பரவித்யாத்வேந நிர்ணீதைகளான ஸ தக்ஷர தஹ ராதிவித்யைகளிலே ஸம்ஸாரோத்தரணகாமராலே உபாஸ்யமான கல்யாண குணரான வென்று நிஷ்கர்ஷம். இத்தால் குணோபஸம்ஹாரபாதப்ரதிபாத்யமான பஹுவிதபஜந விஷயத்வ ரூப குணம் க்யாபிதமாய்த்து. உரிய - உசிதைகளான, கிரிசைகளில் - க்ரியைகளிலே, அரியது - துஷ்கரமான, ஒருவிரகு - ஒருஉபாயத்தை, தெரிய - அறிகைக்கு, விரையுமவர் - த்வரிக்குமவரிடத்திலே, பரிவினர் - ப்ரேமயுக்தரான, பக்த்யங்கபூத ஸ்வ ஸ்வ வர்ணாச்ரமோசித நித்ய நைமித்திக காம்ய கர்மங்களை யநுஷ்டிக்கும்போது துரதிகம துஷ்கர ஸாத்விக த்யாக ரூப பந்தகத்வ நிவ்ருத்யுபாயத்தைத் தெரிந் தநுஷ்டிக்கு மிவ்வதிகாரிகள் பக்கல் ப்ரஸன்னரா யவர்களுக்கு ஜடிதி ஸ்வவிஷயக பக்தியோக நிஷ்பாதகரான வென்று பலிதா

ர்த்தம். இங்கு உரியவென்று க்ரியைகளை யுசிதத்வேந நிர்தேசிக்கையாலே "அந்தரா சா பிது தத்த்ருஷ்டே:" என்கிறவதிகரணத்திலே நிர்ணயித்தபடியே விதுராத்ய நாச்ரமிணுமப் யாச்ரம நியதைர் ஜபோபவாஸ தாந தேவதா ராதநாதிபிர் வித்யாதி காரோஸ்தீதி ஜ்ஞாபிதம், இத்தா லங்கபாதப்ரதிபாத்யமான ஸ்வோசித கர்ம ப்ரஸா த்யத்வ ரூப குணமாவிஷ்க்ருதமாய்த்து. சத்து - ஸத்துக்கள், புண்யரூபங்களென்ற படி, அசத்து - அஸத்துக்கள், பாபரூபங்களென்றபடி. எனும் - என்னுமவையான, அனைத்து - ஸமஸ்தங்களான, அணைத்த - ஆத்மாவையாச்லேஷித்திருக்கிற, வினை - கர்மங்களுடைய, தொத்து - ஸம்பந்தத்தை, அறுக்கவல - சேதிக்கசக்தமான, துணி வினர் - ஸங்கல்பத்தையுடையவரான, ஸ்வோபாஸகருடைய புண்யபாபரூப ஸகல கர்மங்களுக்கும் அச்லேஷவிநாசாபாதக த்ருடஸங்கல்பரான வென்றபடி. இத் தால் வ்ருத்திபாத ப்ரதிபாத்யமான கர்மவிமோசகத்வ ரூபகுணம் ப்ரகடிதமாய்த்து. சரியுமளவில் - சரீரம்தளருங்காலத்திலே, உரியவரை - ப்ராப்தரான வதிகாரிகளை, அறிவரிய - ஜ்ஞாது மசக்யமான, தமனிநெறி - தமனி மார்கத்திலே, சொருகு - ப்ர வேசிப்பிக்குமவரான, விரகினர்-உபாயஜ்ஞரான, ஸ்வசரணாரவிந்தப்ராப்தி யோக்ய ரான வுபாஸகரை சரீரவிச்லேஷகாலத்திலே லோகாந்தரப்ராபக க்ஷுத்ரநாடிக ளிலே ப்ரவேசியாதபடி "ததேகொக்ரஜ்வலநம் தத்ப்ரகாசிதத்வாரோ வித்யாஸாமர்த் தியாத் தச்சேஷகத்யநுஸ்ம்ருதி யோகாச்ச ஹார்தாநுக்ருஹீதச் சதாதிகயா" என் கிற ஸூத்ரத்தின்படியே நாடிவிவேசனம்பண்ணிவைத்து அர்சிராதிமார்க ப்ரதமதீர் த்தமான மூர்த்தந்யநாடியிலே ப்ரவேசிப்பிக்கு மவரான வென்றபடி. இத்தால் உத் க்ராந்திபாத ப்ரதிபாத்யமான ப்ரும்மநாடி ப்ரவேசகத்வ ரூபகுண மபிஹிதமாய்த்து. தத்துவ - ப்ரதிவ்யாத்ய சித்தத்வங்களுடைய, திரள் - ஸமூஹத்தை, உதைத்துதை த்து - பாதங்களாலே யாக்ரமித்து ஆக்ரமித்து, அடைவு-க்ரமேண, தத்துவிக்குமவர் - உல்லங்கநம் பண்ணிவைக்குமவர்க்கு, தலைவனார் - ப்ரதாநபூதரான, ப்ரஹ்மாண்ட ததாவரண ரூப ஸகல ப்ராக்ருத தத்வங்களையும் பாதங்களாலே மிதித்துக்கொண்டு ப்ராக்ருதேதரலோகாதிரோஹணம் பண்ணு முபாஸகர்க்கு ஆதிவாஹிகரான வர்சி ராதிகளுக்கு நியாமகரான வென்றபடி. இத்தால் அர்ச்சிராதி பாதப்ரதிபாத்யமான வர்சிராதிமார்க நேத்ருத்வரூபகுண முத்பாவிதமாய்த்து. தருக - ஈச்வரன் பலன்கொ டுக்கும்படி, உணருமவர் - உபாஸிக்குமவர், சரணம் - சரணங்களை, அணுக-அடைய, விடல் - த்யாகம், அரிய - அசக்யரான, பலப்ர தேச்வர ப்ரஸாதார்த்தமாக வுபாஸி க்குமவர் ஸ்வசரணாரவிந்தங்களை யடைந் தநுபவிக்கு மிடத்திலே யத்யர்த்தபோக்ய தையாலே த்யக்து மசக்யரான வென்றபடி. இத்தால் சரமபாத ப்ரதிபாத்யமான அபு நராவ்ருத்தி ஸாயுஜ்ய ப்ரதத்வரூபகுண முத்காடித மாய்த்து. இந்தசாரீரக சாஸ்த்ர ஷோடசபாதிப்ரதிபாத்ய குணங்களை (ஸ்ரஷ்டா தேஹீ ஸ்வநிஷ்டோ நிரவதிமஹி மா பாஸ்ததோஷச்ரிதாப்த: காத்மாதெரிந்த்ரியாதே ருசிதஜநகக்ருத் ஸம்ஸ்ருதௌத ந்த்ரவாஹீ! நிர்தோஷத்வாதி ரம்யோ பஹுபஜநபதம் ஸ்வார்ஹகர்மப்ரஸாத்ய: பாப ச்சித் ப்ரஹ்மநாடீகதிக்ருததிவஹந் ஸாம்யதச்சாத்ரவேத்ய:) என்றதிகரண ஸாராவல் யுபக்ரமத்திலே தாமே யநுக்ரமித்தாரிறே. அருள்வரதர் - க்ருபையாலே ஸகலபுரு ஷார்த்தப்ரதரான பேரருளாளருக்கு, அடியம் - நாங்கள்தாஸபூதர், ஆகப்பெறுவதே யென்றுசேஷ:. (௧௯)

மூ.—திருமகண் மண் மகணீளைமுதலாவெல்லாத் தேவியருந் தன்னுடனே
திகழ்ந்திருக்கத், தருமமிருமூன்றுமுதலனைத்துந்தொன்றத் தன்னனை
யசூரிகடன்னடிக்கீழ்வாழ. அருமறைசேரளவில்லா வவனியின் கண்
ணரவணைமேல்வீற்றிருப்பாலனைத்துங்காக்குங், கருமணியைக்கரிகிரி
மேற்கண்டேனென்றன் கடுவினைகளனைத்துநான்கண்டிலேனே. (௨௦)

ப்ரஹ்மா வப்பொழுது ஸம்ப்ரம ஸந்தோஷ ஸாத்வஸங்களை யுடையனாய்க் கொண்டு கிட்டிச்சென்று ஸூரிபோக்யமான சுபாச்ரயத்தை யனுபவித்துத் தான் பெற்றபேற்றை பேசினபடியை யருளிச்செய்கிறார்.

திருமகள் - பெரியபிராட்டியார், மண்மகள் - பூமிப்பிராட்டியார், நீளை - நீளைப் பிராட்டியார், முதலா - இவர்கள்முதலான, எல்லாத்தேவியரும் - ஸகலதேவிகளும், தன்னுடனே - தன்னோடேகூட, திகழ்ந்திருக்க - ப்ரகாசித்திருக்கும்படி, இதுக்கு வீற்றிருப்பானென்கிறத்தோடே யந்வயம். இருமூன்று - ஷட்ஸங்க்யாகங்களான,

தருமம் - தர்மங்கள், ஞாநாதிஷாட்குண்யமென்றபடி. முதல் - அவைமுதலான, அனைத்தும் - க்ருத்ஸ்ந கல்யாணகுணங்களும், தோன்ற - பாஸிக்கும்படி, "குணைஷ் ஷட்பிஸ்த்வேதை: ப்ரதமதர மூர்த்திஸ் தவபபௌ, ஷாட்குண்யாத் வாஸுதேவ: பர:" என்கிறபடியே ஷாட்குண்யம் முதலான ஸகலகல்யாணகுணங்களும் பரவாஸுதேவவிக்ரஹத்திலே ஸம்ய கபிவ்யக்தங்களாம்படி யென்றபடி, தன் - தன்னுடைய, அனைய - ஸமஸ்தரான, சூரிகள் - நித்யஸூரிகள், அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தராகையாலே ஸந்தத மவிஸ்ம்ருத ஸ்வதாஸ்யரான ஸூரிகளென்றபடி. தன்னடிக்கீழ் - தன்னுடைய திருவடிகளின்கீழே, வாழ - வாழும்படி, இதுக்குமுன்புசொன்னபடி யந்வயம். அருமறை - த்ரவபோதஸ்ருதிகளோடே, சேர் - சேர்ந்திருக்கிற, அளவில்லா - அபரிச்சின்னையான, அவனியில் - அவனியிலே, "தத்விஷ்ணோ: பரமம்பதம். த்ரிபாதஸ்யாம்ருதந்திவி" இத்யாதி ஸ்ருதிசதப்ரதிபாத்யமா யபரிச்சின்னமான விப்ராக்ருத லோகத்திலே யென்றபடி. கண் - ப்ரதானபூதரான, அரவு - ஸர்பமாகிற, பேகிஸார்வபௌமனை திருவநந்தாழ்வானாகிற வென்றபடி. அணை மேல் - பர்யங்கத்தின்மேலே, வீற்றிருப்பால் - வீற்றிருக்கையாலே, உத்கர்ஷம் தோற்றவிருக்கையாலே யென்றபடி. அனைத்தும் - க்ருத்ஸ்நங்களையும், காக்கும் - ரக்ஷிக்குமதான, கருமணியை - கருமாணிக்கத்தை, இங்கு கருமாணிக்க சப்தத்தாலே நீலமணி போலுஜ்வல விக்ரஹரான பரவாஸுதேவரை நிகரணம் பண்ணினபடி. கரிகிரிமேல் - கரிகிரிசிகரத்திலே, கண்டேன் - ஸாக்ஷாத்கரித்தேன், ப்ரக்ருதி மண்டலோத்தீர்ண பரமயோகிவாங்மனஸாகோசர பரமவ்யோமவர்த்தி பரவாஸுதேவனை திர்யங்மனுஷ்யாதி ஸகலலோக சர்மசக்ஷுர்விஷயமான கரிகிரிசிகரத்திலே ஸாக்ஷாத்கரித்தே னென்றபடி. இதுக்குபலம்சொல்லுகிறது. என்தன்- என்னுடைய, கடு - க்ரூரங்களான, வினைகளனைத்தும் - ஸகலகர்மங்களையும், நான்- இப்படிக்ருதார்த்தனான நான், கண்டிலேன் - காணேன், ஸகலகர்மங்களும் நசித்தன வென்றபடி. (௨0)

மூ.—பெடையிரண்டையொ ரனமடைந்து பிரிந்திடாவகைபேசலாம் பெருகுமருவிக ளருகு மருவிய பெரியமணிவரைபயிலலாம், பிடியிரண்டொடு களபமொன்றுபிணைந்தபேரழநோதலாம் பிரிவிலொளியொடு நிழலுமருதுறு மிரவியிலகுதல்பரவலாம், கொடியிரண்டொடு விடபியொன்று குளிர்ந்தவாறுதுலாவலாம் குறைவில்நருதியு நினைவுமிலகியதருமவருநிலையென்னலாம், அடியிரண்டையு மடையுமன்பரறிந்தபேரருளாளனார் அணுகுமலர்மகளவனிமகளொடு கரடிகிரிநிலைகவர்தலே. (௨௧)

இப்படி கண்கள் கண்டற்கரிய மனோரதவிஷயத்தைக் கண்ட ப்ரஹ்மா "மொய்மாம்பூம்பொழில்" படியே அக்ரமமாக ஹர்ஷசேஷ்டிதங்களைப் பண்ணிச் சிறுதுபோதோடிக் கூடித்தரித்து நாச்சிமாருடனே பெரியபெருமா ளெழுந்தருளி யிருக்கிற நிலையை யனுபவித்த படியை யருளிச்செய்கிறார்.

அடியிரண்டையும் - சரணயுகளத்தையும், அடையும் - ஆஸ்ரயிக்குமவரான, அன்பர் - ப்ரேமசாலிகளாலே, அறிந்த - அறியப்பட்டவரான, "ஹ்ருதா மநீஷா மநஸாபிக்ல்ப்த:" இத்யாதிகள்படியே ஸ்வசரணங்களையே ப்ராப்யப்ராபகங்களாக வத்யவஸித்திருக்கும் ப்ரேமசாலிகளாலே ஸுக்ரஹஸ்வபாவரான வென்றபடி. இத்தா லனேவம்வித புருஷ துர்க்ரஹத்வம் பலிதம். பேரருளாளனார் - பேரருளாளருடைய, இதுக்குநிலைகவர்தலென்கிறத்தோடந்வயம். அணுகு - ஸந்நிஹிதைகளான, பார்ச்வத்வய ஸ்திதைகளான வென்றபடி. மலர்மகள் - பெரியபிராட்டியார், அவனிமகள் - பூமிபிராட்டியார், ஒடு - இவர்களோடுகூட, கரடிகிரி - கரடிகிரியிலே, ஸ்ரீஹஸ்திகிரியிலே யென்றபடி. நிலைகவர்தல் - ஸ்திதியையாஸ்ரயிக்கை, இதுக்கு பேசலாமித்யாதிகளோடந்வயம். பெடையிரண்டை - ஹம்ஸீத்வயத்தை, ஓர் - ஏகமான, அனம் - அன்னமானது, ஹம்ஸமான தென்றபடி. அடைந்து - ஸம்ச்லேஷித்து, பிரிந்திடாவகை - விச்லேஷியாதபடி, பேசலாம் - சொல்லலாம். ஒருஹம்ஸமான திரண்டுஹம்ஸங்களோடு ஸம்ச்லேஷித்து விச்லேஷியாதே யுல்லஸிக்குமாப்போலே யென்று உபமிக்கலா மென்றபடி. இப்படி மேலுங்கண்டுகொள்வது. பெருகும்-ப்ரவஹியாநிற்கிற, அருவிகள் - நிர்ஜரங்களாலே, அருகு - ஸமீபத்திலே, மரு

வியை - ஆதரிக்கப்பட்டதான, ஸம்ச்லிஷ்டமான வென்றபடி. பெரிய - மஹோன்னத
மான, மணிவரை - மணிபர்வதத்தை, பயிலலாம். அப்யஸிக்கலாம், அவிச்சின்ன ப்ர
வாஹ நிர்ஜரணீயுகளாலங்க்ருத பார்ச்வத்வய மான விந்த்ரநீல மஹாபர்வதத்தை மு
ஹுர்முஹு: ஸ்மரிக்கலா மென்றபடி. களப மொன்று - ஒருகளபமானது, பிடியி
ரண்டொடு - கரேணுத்வயத்தோடே, பிணைந்த - ஸம்ச்லேஷிக்கையுடைய. பேர் -
மஹத்தான, அழகு - ஸௌந்தர்யத்தை, ஓதலாம் - அத்யநம்பண்ணலாம், கரேணுத்
வய மத்ய வர்த்தி மதகரி களப லக்ஷ்மி போலே வர்ணிக்கலா மென்றபடி. பிரிவில்-
விச்லேஷமில்லாத, ஒளியொடு - ப்ரபையோடே; நிழலும் - சாயையும், அருகு-ஸமீ
பத்தை, உறும் - அடையும்படியான, இரவி-ரவியுடைய, இலகுதல் - ப்ரகாசத்தை,
பரவலாம் - ப்ரசம்ஸிக்கலாம், அப்ரதக்ஸித்த காந்திச் சாயா ரூப வல்லபாத்வயாலங்
க்ருத பார்ச்வத்வயனை ஸூர்யனைப்போலேச்லாகிக்கலா மென்றபடி. கொடியிரண்
டொடு - லதாத்வயத்தோடேகூட, விடபியொன்று-ஒருவிடபியானது, குளிர்ந்தவாறு-
சீதளிபவித்தபடியை, குலாவலாம் - பெருமையோடே சொல்லலாம், வல்லிகாத்வய
வேல்லிதமாய் தழைத்தபாரிஜாதத்ருமத்தைப்போலே குலாவலா மென்றபடி. குறை
வில் - வைகல்யமில்லாத, சுருதியும் - ச்ருதியோடும், நினைவும் - ஸ்ம்ருதியோடும்,
இலகிய - விளங்கினதான, தருமம்-தர்மத்தினுடைய, அருநிலை-ஸூக்ஷ்மஸ்திதி, என்ன
லாம் - இதென்றுசொல்லலாம், இந்தவவஸ்தாகம். ச்ருதிஸ்ம்ருதி பரிஷ்க்ருத ஸூ
க்ஷ்மதர்மஸ்திதிபோலே என்று வர்ணிக்கலா மென்றபடி. (௨௧)

மூ.—வேரொப்பார்விண்முதலாங் காவுக்கெல்லாம் விழியொப்பார்வேத
மெனுங்கண்டனுக்குக் காரொப்பார்கருணைமழை பொழிந்திடுங்காற்
கடலொப்பார்கண்டிடினுங்காணுக்கூத்தால் நீரொப்பார்நிலமளிக்குந்
தன்மைதன்னு னிலமொப்பார்நெடும்பிழைகள் பொறுக்குநேரால்
ஆரொப்பாரிவர்குணங்களனைத்துங்கண்டா லருளாளர்தாமெனினுந்
தமக்கொவ்வாரே. (௨௨)

அநந்தர மநந்தமங்கள குணார்ணவரான பெருமாளுடைய திவ்யகுணங்களை யனு
பவிக்கத் தொடங்கி ஓரோராகாரங்களுக்கு ஓரோருருபமானு பாஸங்களைத்தேடி
குணஸமுதாயத்துக்கொரு உபமானுபாஸங்களும் தேடவொண்ணாதென்று கொண்
டாடினபடியை யருளிச்செய்கிறார்.

அருளாளர் - பேரருளாளர், விண்முதலாம் - ஆகாசப்ரப்ருதியான, காவுக்கெல்
லாம் - தோப்புக்கெல்லாம், வேர் - முதலோடே, ஒப்பார்- ஸத்ருசராவர், ஆகாசாதி
பூதபஞ்சகாத்மக ப்ரபஞ்சரூப மஹோத்யாநத்துக்கு மூலம்போலே தாரகராயிருப்ப
ரென்றபடி. வேதமெனும் - வேதமென்றுசொல்லப்பட்டதான, கண்தனக்கு - சக்ஷு
ஸ்ஸுக்கு, விழி - தாரகையோடே, ஒப்பார்-பூர்வவத். வேதமாகிற அலௌகிகார்த்த
ப்ரகாசக சக்ஷுஸ்ஸுக் கந்தஸ்ஸாரபூதராகையாலே க்ருஷ்ண தாரகைபோலே யிரு
ப்பாரென்றபடி. கருணை மழை - கருணாவர்ஷத்தை, பொழிந்திடுங்கால் - வர்ஷித்து
விடுங்காலத்திலே, கார் - காளமேகத்தோடே, ஒப்பார் - பூர்வவத். அநாலோசித நிம்
நோன்னத விபாகமாக க்ருபாவர்ஷம் பண்ணும்போது காளமேகம்போலே யிருப்பா
ரென்றபடி. கண்டிடினும்-ஸாக்ஷாத்கரித்துவிடிலும், காணு - காணப்படாத, கூத்
தால் - நாட்யத்தாலே, கடல் - ஸமுத்ரத்தோடே, ஒப்பார்-பூர்வவத். முஹுர்முஹு:
பரிசயேப்யபரிசிதவத் விஸ்மயாவஹ திவ்யசேஷ்டிதங்களாலே "ஸலிலநிதி ரிவ ப்ர
திக்ஷணம் மே பவதி ஸ ஏவ நவோ நவோ ய மக்ஷ்ணோ:" என்கிறபடியே ஸமுத்ரம்
போலே நவநவரா யிருப்பா ரென்றபடி, நிலம் - பூமியை, அளிக்கும் - ரக்ஷிக்கும
தான, தன்மை - தன்னுல் ஸ்வபாவத்தாலே, நீர் - ஜலத்தோடே, ஒப்பார்- பூர்வவத்.
பூமிவாடாதே ரக்ஷிக்கும் ஸ்வபாவத்தாலே ஜலம்போலே யிருப்பா ரென்றபடி. நெ
டும் - தீர்க்கங்களான, பிழைகள் - அபராதங்களை, பொறுக்கும் - க்ஷமிக்குமதான,
நேரால் - ஆர்ஜவத்தால், நிலம் - பூமியை, ஒப்பார்-பூர்வவத். நிரதராநுவ்ருத்தாபராத
ஸஹிஷ்ணுதையிலே பூமிபோலே யிருப்ப ரென்றபடி. இப்படி யோரோராகாரங்க
ளுக்கு உபமானுபாஸங்களைக் காட்டி இனிமேல் ஸமுதாயத்துக்கோ ருபமானுபாஸ
மும் கிடையாதென்கிறார். இவர் - இந்தபேரருளாளருடைய, குணங்களனைத்தும் -
ஸகல குணங்களையும், கண்டால்-நிரூபித்துப்பார்த்தால், ஆர்-எவர், ஒப்பார்-ஸத்ருச
ராவர், ஒருவரும் ஸத்ருச ராகா ரென்றபடி, வேறொருவர் ஸத்ருசராகாவிட்டாலும்

தமக்குத்தாமே யாகிலும் ஸத்ருசராகாரோ வென்ன வருளிச்செய்கிறார். தாமெனினும்-தாமேயாகிலும், தமக்கு-ஸ்பஷ்டம். ஒவ்வார்-ஸத்ருசராகார். கரிகிரி வாஸ்தவ்யரான தமக்கு பரமபத வாஸ்தவ்யரான தாமும் ஸத்ருச ராகா ரென்று தாத்பர்யம்.

மூ.—எங்நிலமுங் குரத்தார்க் குறி செய்த வெழிற் பரிகொண்
டன்னமுயர்த்த செய்யோ னன்றுவேள்விசெய் வேதியின்மேல்
முன்னிலையாகியமூர்த்தியுட னான்முகமற்றுமுனக்
கென்னவரந்தருவோ மென்று நாதனியம்பினனே. (௨௩)

ஹர்ஷபரவசனாய் ஸ்தோத்ரபரம்பரையை விண்ணப்பம்செய்யும் சதுர்முகனைப் பார்த்து ப்ரஸாதசுமுகரான பெருமாளுனக்கு வேண்டின வரங்கொள்வா யென்றருளிச் செய்த படியை யநுபாஷிக்கிறார்.

அன்னம் - ஹம்ஸத்தாலே, உயர்த்த-உச்ச்ருதனான, ஹம்ஸவாஹநனான வென்றபடி. செய்யோன் - ருஜுஹ்ருதயன், அக்ருத்ரிமபகவத்ப்ரேமயுக்தனான சதுர்முகனென்றபடி. அன்று-ஆதிக்ருதயுகமுகத்திலே, எங்நிலமும், ஸகலபூமிகளிலும், குரத்தால்-குரங்களாலே, குறி - சின்னத்தை, செய்த - பண்ணினதான, பூமண்டலமெல்லாம் "அநேகஸஸ்ருஜேதராம் துரகமேதமுக்தப்ரமத்துரங்க குரசந்த்ரக ப்ரகரதந்துராமேதிநீ" என்கிறபடியே குரபுடபாடித ரேகாசிந்ஹிதமாம்படி ஜகதேகஜாங்கிகமான வென்றபடி. எழில் - உஜ்வலமான, பரி - அச்வத்தை, கொண்டு - ப்ரதாநமாக ஸ்வீகரித்து, வேள்விசெய் - யாகம்பண்ணுமிடமான, வேதியின்மேல் - உத்தரவேதியின்மேல், நாதன் - ஸகலலோகநாதனான பேரருளாளர், இங்கு யாச்நார்த்தக நாத்ருதாது நிஷ்பன்னமானநாதசப்தத்தாலே ஸகலபுருஷார்த்த விப்ஸாப்ரப்யர்த்தநீயத்வம் தர்சிதம். முன்னிலையாகிய - எதிரவஸ்தாநமுடையதான, மூர்த்தியுடன் - மூர்த்தியோடே, நான்முக - வாராய்சதுர்முகனே, உனக்கு - நம்முடைய வத்யந்த ப்ரஸாதவிஷயனான வுனக்கு, மற்றும் - நாம் யாகவிக்நத்தை சமிப்பித்து ப்ராதுர்பாவித்ததுதவிர, என்னவரம் - எந்தவரத்தை, தருவோம்- கொடுக்கக்கடவோம், என்று - ஸ்பஷ்டம். இயம்பினன் - அருளிச்செய்தார். (௨௩)

மூ.—சென்றுமலர்பறித்தென்னாதன் சேவடிப்போதுகந்து
நன்றெனநீர்சுடர்தூபநன்முகவாசவெள்ளிலைகொடுத்து
கன்னலிலட்டுகத்தோடன்னஞ்சிடைக்கறிபடைத்து
பின்னுஞ்செபித்தவன்பாதமெண்ணுங்கண்முனிகளென்றான். (௨௪)

இப்படி பெருமாளாலே யபிலஷித வராப்யர்த்தநாய் நியுக்தனான ப்ரஹ்மா "வைகுண்டேது யதாவாஸோ யதைவ க்ஷீரஸாகரே" என்று ஸ்வாபிலஷித வரத்தை விண்ணப்பஞ்செய்ய பெருமாளும் "தேவதிர்யங் மனுஷ்யாணாம்" இத்யாதி அருளிச்செய்கையாலே க்ருதார்த்தனாய் க்ரதுஸேஷத்தைத்தலைக்கட்டி கார்த்தயுகதர்ம ப்ரக்ரியையாலே பரிபூர்ண ஸமாராதநம்பண்ணி பரமபாகவதரான மஹர்ஷிகளைக்குறித்துத் தான்பண்ணின வபிகமநாதி ரூபாச்சித்ர பாஞ்சகாலிக ஸமாராதந க்ரமத்தை ஸங்க்ரஹித்துபதேசித்தபடியை யருளிச்செய்கிறார்.

இப்பாட்டு பஹுகோசங்களிலே கண்டதில்லையாகிலும் சிலகோசங்களிலே காண்கையாலும் அபேக்ஷிதார்த்தமாகையாலும் விவரிக்கிறோம். முனிகள் - மஹர்ஷிகளே, சென்று - அடைந்து, பகவதாபிமுக்யேந தங்களாத்மாக்களை நடத்தி யென்றபடி. இத்தால் "த்வயேந தத்விவரணை:" ப்ரபத்யப்ரபுமீச்வரம் நிக்ஷிப்யசிரமாத்மாநம் தத்பாதாப்ஜே க்ருதீபவேத்)" என்கிறபடியே பகவச்சரணாரவிந்தயோ: ஸ்வாத்மஸமர்பணரூபமான வபிகமநத்தை யுபதேசித்தபடி, மலர் - புஷ்பங்களை, பறித்து - அபசயித்து, இத்தால் பாஹ்யபூஜோபகரணஸம்பாதநத்தை விதித்தபடி. நாதன் - நாதனுடைய, சேவடி-சிவந்திருக்கிறதிருவடிகளாகிற, போது-புஷ்பங்களை, உகந்து-ஸ்ப்ருஹித்து, இத்தால் மநஸோபகவச்சரணாரவிந்தைகாக்ரதாரூ பாந்தரபூஜோபகரண ஸம்பாதநத்தை யநுசாஸித்தபடி. இப்படி உபாதாநம் ஸங்க்ருஹீதமாய்த்து. நன்றென - நல்லவை யென்னுமவையான, ச்லாக்யங்களான வென்றபடி. நீர்-ஜலம். சுடர்-தீபம். தூபம் - தூபம், முகவாச - முகவாஸம், வெள்ளிலை - வெளுத்திருக்கிற தாம்பூலாதிகள், கொடுத்து - இவைகளை ஸமர்ப்பித்து, இது மற்றுமுள்ள வௌபசாரிக ஸாம்ஸ்பர்சிக போகங்களுக்கு முபலக்ஷணம். இனி யாப்யவஹாரிக போக

ஸமர்பணத்தைக் காட்டுகிறார். கன்னல்-இக்ஷுரஸம், இது மற்றுமுள்ள பேயங்களுக்கு முபலக்ஷணம். இலட்டுகத்தோடு-லட்டுகாக்ய பக்ஷ்ய விசேஷத்தோடே, இது மற்றுமுள்ள பக்ஷ்யங்களுக் குபலக்ஷணம். அன்னம் - ஓதனம், இதுமற்றுமுள்ள போஜ்யங்களுக் குபலக்ஷணம். சீடை-காத்யவிசேஷம். இதுமற்றுமுள்ள காத்யங்களுக் குபலக்ஷணம். கறி - வ்யஞ்ஜநங்கள், படைத்து - இவைகளை நிர்வபித்து, ஸமர்பித்தென்றபடி. இத்தால் இஜ்யையை சோதித்தபடி. பின்னும் - பிற்பாடும், செபித்து - ஜபித்து, மூலமந்த்ர மந்த்ர ரத்நாதிகளை ஜபித்தென்றபடி. இத்தால்ஸ்வாத்யாயத்தை போதித்தபடி. அவன்பாதம்-அந்தநாதனுடையபாதங்களை, எண்ணுங்கோள்-சிந்தியுங்கோள், இத்தால் யோகத்தை ஜ்ஞாபித்தபடி. என்றான் - என்றுசொன்னான், சதுர்முகனிதிசேஷ:. (௨௪)

மு.—ஆழிநிலை வினைகடிவா னயமேத முடிந்ததற்பின்
வேழமலை நாயகனார் விடைகொடுக்க விண்ணேறி
நாழிகையில் வானவரை மாற்றியிடு நான்முகன்றா
னூழியெலா மழியாத யோக மடைந்திருந்தானே (௨௫)

அநந்தர மதிஸந்துஷ்டரான பெருமாளாலே யநுஜ்ஞாதனான சதுர்முகன் ஸத்யலோகத்தில் சென்று பரிபூர்ண பகவதநுபவ ரஸ பரித ஸமாதி விசேஷத்தாலே சரிதார்த்தனா யிருந்த படியை யருளிச்செய்கிறார்.

நாழிகையில் - கடிகைகளிலே யிருக்குமவரான, வாநவரை-தேவர்களை, மாற்றியிடும் - மாற்றிவிடுமவனான, த்வித்ரப்ரஹ்மவிநாடிகாபதஸ்தரான தேவர்களைதத்தத்காலங்களிலே வாங்கவும் வைக்கவு மதிகாரியான வென்றபடி. நான்முகன்தான். சதுர்முகன், ஆழிநிலை - ஸமுத்ரஸ்தாநீயமான, அபரிச்சின்னமான, வினை-கர்மத்தை, கடிவான் - பரிஹரிக்க, அயமேதம் - ஹயமேதமானது, முடிந்ததற்பின் - ஸமாப்தமானபின்பு, வேழமலைநாயகனார் - கரிகிரிநாயகரான பேரருளாளர், விடை - அநுஜ்ஞையை, கொடுக்க - ஸாதிக்க, விண் - ஸத்யலோகத்தை, ஏறி - ஆரோகித்து, ஊழியெல்லாம் - கல்பகாலமெல்லாம், அழியாத-நசியாததான, ஆகல்பமநுஸ்யூதமான வென்றபடி. யோகம் - யோகத்தை, அடைந்து இருந்தான் - ஸ்பஷ்டம். (௨௫)

மு.—ஆதியுக்த்தயன் கண்டிட நின்றவருள்வரதர்
காதலுயர்த்த களிற்றைத் திரேதையிற் காத்தளித்து
வாதுயர்தேவகுருவுக் கிரங்கித்துவாபரகதில்
சோதியநந்தன் கலியிற் றொழுதெழ நின்றனரே. (௨௬)

இப்படி பெருமாள் க்ருதயுகத்திலே சதுர்முகனாலே ஸமாராதநங்கண்டருளின படியை யநுவதித்துக்கொண்டு யுகாந்தரங்களில் ஸ்ரீகஜேந்த்ர ப்ருஹஸ்பதி சேஷர்களாலே ஸமாராதநங் கண்டருளின படியைக் காட்டிக்கொண்டு ஸத்யவ்ருத மாஹாத்ம்யத்தை யுபஸம்ஹரிக்கிறார்.

ஆதியுகத்து - ஆதியுகத்திலே, அயன் - அஜன், கண்டிட - ஸாக்ஷாத்கரிக்கும்படி, ஆராதிக்கும்படி யென்றபடி. நின்ற - ஆவிர்பவித்தெதிரே நின்றவரான, அருள்வரதர் - க்ருபா ப்ரதாநரான பேரருளாளர். திரேதையில் - த்ரேதாயுகத்தில், காதல்-ப்ரேமத்தாலே, உயர்த்த - அப்யதிகமான, ப்ரதிதிநம் ஸஹஸ்ரபத்ர ஸஹஸ்ரேண பகவத் பாதபத்மார்சநம் விநா ஸ்வாத்ம தாரண மலபமான மானவென்றபடி. களிற்றை - கஜத்தை, காத்தளித்து - ஸயயம்பார்த்து ரக்ஷித்து, க்ராஹப்ரயுக்தாபத் விமோசனம் பண்ணி ஸ்ரீகஜேந்த்ராழ்வானாலே திருவாராதனங் கண்டருளி யென்று பலிதார்த்தம. இத்தால் ஸ்ரீகஜேந்த்ர வ்ருத்தாந்தஸ் ஸர்வோபி ஸங்க்ருஹீத. துவாபரத்தில் - த்வாபரயுகத்திலே, வாது - வாதங்களாலே, உயர் - அப்யதிகனான, தேவகுருவுக்கு - ப்ருஹஸ்பதிக்கு, இரங்கி - ப்ரீதிபண்ணி, தேவஸபையிலே தர்ம ஸம்வாதம் வந்த போது தர்மமார்க்கத்தில் நின்றும் ஸ்கலித்து தேவசப்தனாய் பூமியிலே துக்க பஹுளமான ஜந்மத்தைப்பெற்று தபஸ்ஸு பண்ணுகிற ப்ருஹஸ்பதிக்கு சாபாபத் விமோசனம் பண்ணி யவனாலே யாராதநங் கண்டருளி யென்றபடி. இங்கு வாதுயர் என்கிறபதத்தால் தர்மவிப்ரதிபத்தி தசையிலே தர்மசாஸ்த்ரவிருத்த கேவல ஜல்பப்ரதாநத்வம் ஸூசிதம். இத்தால் ப்ருஹஸ்பதி வ்ருத்தாந்தஸ் ஸர்வோபி ஸம்க்ஷிப்த;

கலியில் - கலியுகத்திலே, சோதி - ஜ்யோதிர்மயனான, அநந்தன் - திருவநந்தாழ்வான், தொழுது - ஸேவித்து, ஆராதித்தென்றபடி. எழ - உஜ்ஜீவிக்கும்படி, நின்றனர்-ப்ரதிஷ்டிதரானார். (௨௬)

மூ. — புண்டரீக முயர்த்த புராணனார் பொய்யின்மாமக வுத்திரவேதியிற்
கொண்டலாரருண்மாரிபொழிந்திடக் கொண்டதோருயர்கூர்மதியன்பினால்
பண்டைநான்மறைமௌலிபடிந்தநான் பாரின்மெய்விரதக்கலிபாடினேன்
தொண்டைமண்டலவேதியர்வாழவே தூயதென்மறைவல்லவர்வாழ்வே.

ஏதத்ப்ரபந்தவக்தா வான தமக்கு ச்ருதிசிரஸ் தாத்பர்ய பர்யாப்த தீத்வேந வைலக்ஷண்யத்தைக்காட்டிக்கொண்டு பகவத் க்ருபொத்தம்பித ஜ்ஞாந பக்தி பரிவாஹ பூத மாகையாலே யிப்ரபந்த முபாதேயதம மென்று கொண்டு நாட்யப்ரதாநப்ரபந்தத்துக்கு அவஸாநத்தில் பரதவாக்யந்யாயத்தாலே துண்டீரமண்டலவாஸ்தவ்யரான உபயவேதாந்தநிஷ்டருக்கு இவர் மங்களாசாஸநம் செய்தருளுகிறார்.

பண்டை - அநாதிகளான, நான்மறை - நாலுவேதங்களுடைய, மௌலி - மௌலிகளிலே, படிந்த - ப்ரதிஷ்டிதனான, நான் - விச்வநாமரூப வ்யாகர்த்ரு பரமபுருஷனாலே தத்த வேதாந்தாசார்ய ஸம்ஜ்ஞனான நான், புண்டரீகம் - புண்டரீகத்தாலே, உயர்ந்த - எடுக்கப்பட்டவரான, புண்டரீகோத்பன்னரான வென்றபடி. புராணனார்-புராதனருடைய, சதுர்முகனுடைய வென்றபடி. பஹுவசநம் அக்ருத்ரிம பகவத் பக்தி க்ருத கௌரவ ப்ரயுக்தம். பொய்யில் - அக்ருத்ரிமமான, மாமக - மஹாமகத்தினுடைய, ஹயமேதத்தினுடைய, வென்றபடி. உத்தரவேதியில் - உத்தரவேதியிலே, கொண்டல் - வலாஹகமானது, ஆர் - பூர்ணமான, அருள்மாரி - க்ருபாவர்ஷத்தைக், கொண்டது - ஸ்வீக்ருதமான, க்ருபாவர்ஷலப்தமான வென்றபடி. ஓர் - விலக்ஷணமான, அஸ்கலிதமான வென்றபடி. உயர் - அபிவ்ருத்தமான, கூர் - தீக்ஷ்ணமான, மதி - ஜ்ஞானத்தாலும், அன்பினால் - ப்ரேமத்தாலும், பாரில்-பூமியிலே, மெய்விரத-ஸத்யவ்ரதக்ஷேத்ரவிஷயகமான, கலி - கவனத்தை, ப்ரபந்தத்தை யென்றபடி. பாடினேன் - கானம்பண்ணினேன், பரதசாஸ்த்ரானுகுணமாக ரசித்தேனென்றபடி, தொண்டைமண்டலம் - துண்டீரமண்டலவர்த்திகளான, வேதியர் - வைதிகர், வாழ - வாழக்கடவர்கள், தூய்ய - நிஷ்கல்மஷமான, தென்மறை - த்ரமிட வேதங்களை, வல்லவர் - அப்யசித்தவர்கள், ஸ்ரீபராங்குசாதி ஸூக்தி நிஷ்ட ரென்றபடி. வாழ - வாழக்கடவர்கள்.

மூ. — உயர்விரதமொன்றின்றியடைந்தாருய்ய வொருவிரதம் தான்கொண்ட
வுயர்ந்தமாலைச் செய்விரதமொன்றாலும் தெளியகிலாச் சிந்தையினாற்
றிசைபடைத்த திசைமுகன்றான் பொய்விரதநிலமெல்லாம் போயே
மீண்டுப் புகலிதுவே புண்ணியத்துக்கென்று சேர்ந்த மெய்விரதநன்
னிலத்து மெய்மையேத்திவேதாந்தவாசிரியன் விளங்கினானே (௨௮)

கேவல துண்டீர மண்டல வாஸ மன்றிக்கே ஸர்வக்ஷேத்ரஸாரபூத ஸத்யவ்ரதக்ஷேத்ர மாஹாத்ம்ய வர்ணநத்தாலே தா மத்யந்த க்ருதார்த்தரான படியை யருளிச்செய்கிறார்.

திசை - திக்குகளை, படைத்த - ஸ்ருஷ்டித்தவனான, திசைமுகன் - சதுர்முகனானவன், உய் - உஜ்ஜீவநஹேதுவான, விரதம் - வ்ரதம், ஒன்றின்றி - ஒன்றுமின்றிக்கே, அடைந்தார் - தன்னை சரணமாகப் பற்றினவர்கள். உய்ய - உஜ்ஜீவிக்கும்படி, தான் - ஸ்வயம், ஒருவிரதம் - ஒருவிரதத்தை, கொண்ட - ஸ்வீகரித்தவனான, ஸக்ருத் ஸ்வசரணாரவிந்தயோ: ந்யஸ்தபரர்களை உஜ்ஜீவநோபாயாந்தர நிரபேக்ஷமாக ரக்ஷிக்கையிலே பத்ததீக்ஷனான வென்றபடி. உயர்ந்த-ஸர்வோன்னதனான, மாலை-ஆஸ்ரிதவ்யாமோஹ சீலனான ஸர்வேச்வரனை, செய்விரதம் - அநுஷ்டேயமான வ்ரதங்களிலே, ஒன்றாலும் - ஒருவ்ரதத்தாலும், தெளிய - ஸாக்ஷாத்கரிக்கையிலே, இல்லார்-அஸமர்த்தையான, சிந்தையினால் - சிந்தையாலே, பொய்விரதம் - மித்யாபூத வ்ரதங்களான, பலாவிநாபாவ ப்ரயோஜக ஸாத்குண்யாநா பாதகங்களாகையாலே பண்ணின வ்ரதங்கள் விபலங்களாய் போ மிடமான வென்றபடி. நிலமெல்லாம் - ப்ரதே

சங்களையெல்லாம், போயே-நடந்தே, மீண்டு - நிரூபித்து திரும்பிவந்து, இதுவே-இந்தஸத்யவ்ரதக்ஷேத்ரமே, புண்ணியத்துக்கு - புண்ணியத்துக்கு, புகல் - உபாயம், அநந்த பல புண்ய ஸாதந மென்றபடி. என்று-இப்படி நிரூபித்து, சேர்ந்த - வந்தடைந்த விடமான, மெய்விரதம் - ஸத்யவ்ரதமாகிற, நல்நிலத்து - நல்லக்ஷேத்ரத்தினுடைய, மெய்மை - யாதார்த்யத்தை. மெய்மை யென்கிற பதத்தா லிப்ரபந்தத்தில் அதிவாதசங்கைக்கு அவகாசமில்லை யென்று ஸூசிதம். ஏத்தி - ப்ரசம்ஸித்து, வேதாந்தவாசிரியன்-ஸ்ரீவேதாந்தாசாரியர், விளங்கினான்-ஸர்வோந்நதராக ப்ரகாசித்தார். (௨அ)

மூ.—சீராருந் தூப்புற் றிருவேங்கடமுடையான்
தாராரருளாளர்தாணயந்து - சீராக
மெய்விரதநன்னிலத்துமெய்மையிதுமொழிந்தான்
கைகொள்களிபோலகிலங்கண்டு. (௨௯)

சரணாகதி வசீக்ருத சரண்ய ப்ரஸாதத்தாலே கரதலாமலகீக்ருத நிகிலதத்வ யாதாத்ம்ய ஜ்ஞானதாம் செய்த விப்ரபந்தம் நிர்விசங்க பரிக்ராஹ்ய மென்கிற வபிஸந்தியோடே ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

சீர் - கல்யாணகுணங்களாலே, ஆரும்-பூர்ணமான, தூப்புல் - தூப்புலென்கிற குடியிலவதரித்தவரான, நாநாஸித்தாந்த நீதிஶ்ரம விமல தீ வம்சஜாதரானவென்றபடி. திருவேங்கடமுடையான் - ஸ்ரீமத் வெங்கடநாதாசாரியர், தார் - ஹாரங்களாலே ஆர் - பூர்ணமான, ஹாராதிஸர்வபூஷண பூஷிதரான வென்றபடி. அருளாளர்-பேரருளாளருடைய, தாள் - திருவடிகளை, நயந்து - ஆஶ்ரயித்து, அகிலம் - அகிலங்களையும், கைகொள் - பாணிதலநிஹிதமான, கனிபோல் - பலம்போல, கண்டு - ஸாக்ஷாத்கரித்து. "தாஹோ மொஹச் ச்ரமச் சைவக்ல மொ க்லாநிஸ் ததைவசரவச்ச தவப்ரஸாதாத்வார்ஷ்ணேய ஸத்யோவ்யபகதாஇமேயச்சபூதம் பவிஷ்யச்ச । பரமத்யுதே । தத்ஸர்வ மநுபச்யாமி பாணௌ வாமலகம்யதாவேதோக்தாச்சைவ யே தர்மா꞉ வெதாந்த நிரதாச்சயே । தாந் ஸர்வாந் ஸம்ப்ரபச்யாமிவரதாநாத் தவாச்சுத" என்கிறபடியே பகவத் ப்ரஸாதத்தாலே ஸர்வத்தையும் கரதலாமலகீ கரித்தென்றபடி. இது-இந்த மெய்விரத-ஸத்யவ்ரதமாகிற, நல்நிலத்து - ஸமீசீநக்ஷேத்ரத்தினுடைய, மெய்மை - யாதார்த்யத்தை, சீராக - குணவத்தரமாக, மொழிந்தான் - சொன்னார், இப்ரபந்தாந்தத்திலே யிப்படி மூன்றுபாட்டிலே தம்முடையகுணங்களை தாமேகீர்த்திக்கை நாடகரூபமான ப்ரபந்தத்துக்கு கவிப்ரசம்ஸாரூபமான வங்கமாகையாலும் ப்ரத்யுத விதுபண்ணுதபோது அங்கவைகல்யம் ப்ரஸங்கிக்கையாலும் தோஷமன்று, ஆனாலும் ப்ரபந்தோபக்ரமத்திலே கொண்டலருள் குணமே நாம் கூறுகின்றோ மென்று பேரருளாளர்குணகதநத்தை ப்ரதிஜ்ஞைபண்ணி ஸமாப்தியிலே ஸத்யவ்ரத மாஹாத்மயத்தைச் சொன்னதாக வுபஸம்ஹரிக்கை யனுபபன்ன மன்றோ வென்னில் அதுவும், "ப்ரஶஸ்திஸ் ஸா ராஜ்ஞோ யதபிச புரீகோசகதநம் என்கிறபடியே பேருளாளருடைய மாஹாத்ம்ய பர்யவஸாயி யாகையாலேஸமஞ்சஸமாம். (௨௯)

இத்தம் வேக......ஜ்ஞாவ꞉ । ஸத்யவ்ரதமாஹாத்ம்யபிண்டாயாவ்
வஸிஷ்டமாலாகவீந்த்ரைஃ॥ (௧)
நாஹம் வேத்மி ஹஸ்தி......ஶரணாஸ்மி। (௨)
ஸர்வாத்ம ஶ்ரவண ஸ்ரவ்......ஜநா ஹ॥ (௩)
இதி ஶ்ரீவேதாந்தாசார்ய......விரசிதே ஸ்ரீ ஹஸ்திகிரி
ஸத்யவ்ரதமாஹாத்ம்யவ்யாக்யாநம்.

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம꞉.

ஸ்ரீஹஸ்திகிரிமாஹாத்ம்ய வ்யாக்யானம்
முற்றிற்று.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாய நம:

அடைக்கலப்பத்து வ்யாக்யாநம்.

ஸாஹ……நகா । ஸ்ரீசைலவ்யவஸ்திதாயாதிதேசகம்
விஷ்ணோராகிஞ்சநவ்ரதம்॥ (௧)
அநாஜிஷ்யேவ……வதிநோ॥ (௨)
ஸ்தாயாஜநோ:……ஸஹிதாதிஸம்ஜ்ஞா:॥ (௩)

தைத்திரீயோபநிஷச்சரமச்லோகாதிகளாலே, சோதிதையாய் மந்த்ரரத்ந ச்வேதாச்வதரமந்த்ராதிகளாலே ப்ரகாசிதையாய் லக்ஷ்மீதந்த்ராஹிர்புத்ந்யதந்த்ராதி பகவச்சாஸ்த்ர ஸம்ஹிதைகளாலே யுபப்ரும்ஹிதையாய் தம்மாலே ஸ்ரீரஹஸ்யத்ரய ஸார நிக்ஷேபரக்ஷாதி பஹுப்ரபந்தங்களிலே ஸகலக்ஷேபங்களும் தீரும்படி ப்ரமாணோபபத்தி ஸம்ப்ரதாயோபந்யாஸ பூர்வகமாக ஸம்யக் வ்யவஸ்தாபிதாதிகாரேதிகாதவ்யதா ஸ்வரூபொத்தரக்ருத்யையான சரணாகதிவித்யையை தாத்ருசப்ரபந்தபரிச்ரமாஸஹரான வேழைபேதைகளுங்கூட ஸுகமாக வநுஷ்டித்து உஜ்ஜீவிக்கும்படி ததநுஷ்டானப்ரகாரத்தை விசதமாக ப்ரதர்சிப்பிக்கைக்காக அடக்கலபத்து என்று பேர்பெற்றிருக்கிற ஸர்வாதிகர்த்தவ்ய த்ரமிடகாதாத்மக ப்ரபந்தத்தைச் செய்தருளுகிறார்.

மூ.—பத்திமுதலாமவைத்திற்பதியெனக்குக்கூடாமல்
எத்திசையுமுழன்றோடி யிளைத்துவிழுங்காகம்போல்
முத்திதருநகரேழின்முக்கியமாங்கச்சிதன்னில்
அத்திகிரியருளாளர்க்கடைக்கலநான்புகுந்தேனே. (௧)

அதிலே முற்பட சரமச்லோகத்தினுடைய சரமவாக்யத்தின் நிஷேதஸாமர்த்யத்தாலே யாதல் ப்ரதமவாக்யத்தி லநுவாதத்தாலே யாதல் ப்ரதிபந்நமாய் த்வயத்திலுத்தமனாலே விவக்ஷிதமான ப்ரபத்யதிகாரத்தை யிரண்டுபாட்டுகளாலே அருளிச்செய்யக்கடவராய், ஆகிஞ்சந்யம் அநந்யகதித்வம் என்கிற இரண்டுவகையான ப்ரபத்யதிகாரத்தில் உபாயாந்தரராஹித்யரூபமான வாகிஞ்சந்ய மென்கிற ப்ரதமப்ரகாரத்தை முதல்பாட்டாலே அருளிச்செய்கிறார்.

எனக்கு - ஜ்ஞாந சக்த்யாதி ரஹிதனான வெனக்கு, பத்திமுதலாமவைத்தில்-பக்தியோக ப்ரப்ருதிகளான தத்தச்சாஸ்த்ரங்களிலே, இங்கு முதல் சப்தத்தாலே பக்தித்வாரா மோக்ஷஸாதநபூத ஜ்ஞாநகர்மயோகபரிக்ரஹ:. பஹுவசநத்தாலே ஸ தக்ஷர சாண்டில்ய தஹர வித்யாதி ரூபேண பக்திக்குள்ள வைவித்யமும் யஜ்ஞ தாந தபோ தேவதார்சனாதி ரூபேண கர்மயோகத்துக்குள்ள வைவித்யமும் மற்றும் சாஸ்த்ரஸித்தங்களான வவாந்தரபேதங்களும் விவக்ஷிதங்கள். பதி - ஸ்திதியானது, கூடாமல்-கடியாமையாலே, “நதர்மநிஷ்டோஸ்மிநசாத்மவேதீநபக்திமாந்த்வச்சரணாரவிந்தே” என்கிறபடியே துஷ்கரங்களான கர்மஜ்ஞாநபக்தியோகங்களிலே நிஷ்டை துர்லபதரையாகையாலே யென்றபடி. எத்திசையும் - ஸர்வதிக்குகளிலும், உழன்று - பரிப்ரமித்து, ஓடி - தவித்து, இளைத்து - பரிச்ரமித்து, பரிப்ரமண ஜநித பரிச்ரமாதிசயத்தாலே பதாத் பதம் சலிதுமக்ஷமமா யென்றபடி. விழும் - விழாநிற்கிற, காகம் போல் - காகாஸுரனைப்போலே, பிராட்டிவிஷயத்தி லபசரித்துப் பெருமாளாலே ப்ரயுக்தமான குசரூப ப்ரஹ்மாஸ்த்ரத்தாலே யநுத்ருதனாய், “ஸபித்ராசபரித்யக்தஸ்தமேவசரணங்கத:” என்கிறபடியே போக்கற்று வந்து சரணமடையும் காகாஸுரனைப் போலே யென்றபடி. இதுக்கடைக்கலம்புகுந்தேனென்கிறத்தோடே யந்வயம். நான்-ஜிதகௌஸ்துப சௌர்யமான வாத்மாபஹாரத்தாலே யாத்யாத்மிகாதி துக்க பரம்பரைகளிலே விழுந்து கரைகாணாதிருக்கிற நான், முத்தி - முக்தியை, தரும் - கொடுக்குமவைகளான, நகரேழில் - ஏழுநகரங்களிலே, முக்கியமாம் - முக்யமாகா

நிற்கிற, கச்சிதன்னில் - காஞ்சீநகரத்திலே, தன்னென்று ஸ்வார்த்தே யனுப்ரயோக:. "அயோத்யா மதுரா மாயா காசீ காஞ்சீ ஹ்யவந்திகா । புரீத்வாரவதீ சைவ ஸப்தைதா முக்தி தாயகா:" என்று மோக்ஷப்ரத த்வேந பரிகணிதமான நகரஸப்தகத்தில் ப்ரதாநமான ஸ்ரீகாஞ்சீநகரத்திலென்றபடி. இவைத்தில் காஞ்சீநகரத்துக்கு ப்ராதாந்யமாவது ஸர்வேச்வரன் அயோத்யாதிநகரங்களிலே யவதரித்து திவ்யலீலாசேஷ்டிதங்களை நடத்தித் திரும்பவும் தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளுமாப்போலன்றிக்கே "வைகுண்டேது யதாவாஸோ யதைவக்ஷீரஸாகரே।ததா ஸத்யவ்ரத க்ஷேத்ரே நிவாஸஸ்தேபவேதிஹ" என்றச்வமேத யஜ்வாவான சதுர்முகன் அப்யர்த்திக்க, "தேவதிர்யங்மநுஷ்யாணும்+ப்ரவீமிதே" என்று தானருளிச்செய்தபடியே "வேகவத்யுத்தரேதீரே+அத்யாபிபரித்ருச்யதே" என்னும்படி ஸகல மனுஜ நயந விஷயதாங் கதனாய் நித்யவாஸம் பண்ணுகை. இங்கு திவ்யநகரவிசேஷோபாதானம் "தேவயம்பவதாரக்ஷ்யாபவத்விஷயவாஸிந:" என்று மடிபிடிக்கலாம்படியான விஷயவாஸாக்ய ஸம்பந்தத்யோதநார்த்தம், இவ்வாகிஞ்சின்யாதிகாரஸம்பத்திதானு மிவ்விஷயவாஸாக்ய ஸுக்ருதவிசேஷப்ரயுக்தை யென்று த்யோதநார்த்தஞ்ச. அத்திகிரி-ஹஸ்திகிரியிலிருக்குமவரான, அருளாளர்க்கு - க்ருபையையாண்டுகொள்ளுமவரான பெருமாளுக்கு, இங்குசரண்யனை யருளாளரென்று நிர்தேசித்தது ஸ்வாதீநகருணாகரத்வமாகிற சரண்யத்வோபயுக்த ப்ரதாந குணப்ரதர்சநார்த்தம். அடைக்கலம் - ரக்ஷ்யவஸ்துவாக, புகுந்தேன் - ஆஶ்ரயித்தேன். (௧)

மூ.—சடைமுடியன்சதுர்முகனென்றிவர்முதலாந்தரமெல்லாம்
அடையவினைப்பயனாகியழிந்துவிடும்படிகண்டு
கடிமலராள்பிரியாதகச்சிநகரத்திகிரி
யிடமுடையவருளாளரிணையடிகளடைந்தேனே. (௨)

இப்படி த்விவிதமான ப்ரபத்யதிகாரத்தினுடைய ப்ரதமப்ரகாரத்தை யருளிச்செய்து இனிமெல் ப்ரயோஜநாந்தரவைமுக்யரூபமான வநந்யகதிகத்வமாகிற த்வதீய ப்ரகாரத்தாலே பலிதமான சரண்யாந்தரவைமுக்யத்தையருளிச்செய்கிறார்.

சடைமுடியன் - ஜடாமௌலி, ருத்ரனென்றபடி. இங்கு ருத்ரனை ஜடாசிரஸ்கத்வேந நிர்தேசித்தது ஸம்ஸார பாரதந்த்ர்ய ப்ரயுக்த கர்மாநுஷ்டான ப்ராவண்யத்யோதநார்த்தம். சதுர்முகன் - ப்ரஹ்மா, என்றிவர்முதலாம் - இப்படி சொல்லப்பட்ட இவர்கள் முதலாயிருக்கிற, தரமெல்லாம் - ப்ரகாரங்களெல்லாம், ப்ரஹ்மருத்ரேந்த்ராத்யைச்வர்ய தாரதம்யங்களெல்லா மென்றபடி. அடைய-காத்ஸ்ந்யேந, வினைப்பயனாகி - கர்மபலன்களாய், அழிந்துவிடும்படி - ஒருகாலவிசேஷத்திலே நசித்துவிடும் ப்ரகாரத்தை, கண்டு - பார்த்து, ப்ருஹ்மருத்ராத் யைச்வர்யங்களெல்லாம் "கர்மணாம்பரிபாகத்வாத் ஆவிரிஞ்சாதமங்களம் । இதிமத்வாவிரக்தஸ்ய வாஸுதேவ: பராகதி:॥ ஆப்ரஹ்மஸ்தம்பபர்யந்தா ஜகதந்தர்வ்யவஸ்திதா:।ப்ராணிந: கர்மஜநித ஸம்ஸாரவசவர்திந:॥ அவித்யாந்தர்கதாஸ்ஸர்வே தேஹிஸம்ஸாரகோசரா: । ஸர்வேதேவாவாஸுதேவம் யஜந்தே ஸர்வேதேவாவாஸுதேவம்நமத்தே, ஸப்ருமகாஸ்ஸருத்ராச்ச ஸேந்த்ராதேவாமஹர்ஷய: । அர்சயந்திஸுரஶ்ரேஷ்டம் தேவம்நாராயணம்ஹரிம்॥ சிந்தயந்தோஹியம்நித்யம் ப்ரஹ்மேசாநாதய: ப்ரபும் । நிச்சயம்நாதிகச்சந்தி தமஸ்மிசரணங்கத:, பத்மேதிவ்யேர்கஸங்காசே நாப்யாமுத்பாத்யமாமபி।ப்ராஜாபத்யந்த்வயாகர்ம ஸர்வம்மயிநிவேசிதம்॥ ஸோஹம்ஸந்யஸ்த பாரோஹித்வாமுபாஸேஜகத்பதிம் । யுககோடிஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்யபத்மபூ: । புநஸ்த்ரைலோக்யதாத்ருத்வம் ப்ராப்தவாநிதிசுஶ்ரும, விச்வரூபோமஹாதேவ: ஸர்வமேதேமஹாக்ரதௌ । ஜுஹாவஸவபூதாநிஸ்வயமாத்மாநமாத்மநா, மஹாதேவஸ்ஸர்வமேதேமஹாத்மாஹுத்வாத்மாநம் தேவதேவோபபூவ । விச்வாந்லோகாந் வ்யாப்யவிஷ்டப்யகீர்த்யா விராஜதேத்யுதிமாந் க்ருத்திவாஸா:, யோமேயதாகல்பிதவாந் பாகமஸ்மிந்மஹாக்ரதௌ । ஸததாயஜ்ஞபாகார்ஹோ தேவஸூத்ரோமயாக்ருத:, "வானவர் தம்மையாளுமவனும் நான்முகனும் சடைமுடியண்ணலும் செம்மையா லவன் பாதபங்கயம் சிந்தித்தேத்தித்திரிவரோ". "வேதாபஹாரகுருபாதக" இத்யாதிப்ரமாணங்க

ளாலே கர்மோபாதிகமாம்படியையும் "ஏகோஹவைநாராயண ஆஸீந்ந ப்ரஹ்மாநே சாநஃ, யஃ புராப்ரளயேப்ராப்தே நஷ்டேஸ்தாவரஜங்கமே। ப்ரஹ்மாதிஷுப்ரலீநேஷு நஷ்டேலோகேசராசரே॥ ஆபூதஸம் ப்லவேப்ராப்தே ப்ரலீநே ப்ரக்ருதௌ மஹாந் ஏகஸ்திஷ்டதி விச்வாத்மாஸமேவிஷ்ணுஃ ப்ரஸீதது" "எம்பெருமானுண்டுமிழ்ந்த வெச்சில்தேவரல்லாதார் தாமுளரோ" இத்யாதி ப்ரமாண ஸஹஸ்ரங்களாலே நச்வரங்களாம்படியையும் விசதமாக வறிந்தேன்றபடி. இங்குப்ரஹ்ம ருத்ராத்யைச்வர்யங்களுடைய நச்வரதாநிரூபணத்தை யருளிச்செய்தது ஸ்ரீமந்நாராயணனுடைய பரஸ்ஸஹஸ்ரப்ரமாணோத்கோஷிதமான ஸ்வாபாவிகா நவதிகா திசயேசித்ருத்வ நிரூபணத்துக்கு முபலக்ஷணம். இங்கு எல்லா மென்கிறகார்த்ஸ்ந்யவாசகபதம் ஸ்வரூபகார்த்ஸ்ந்யபரமாய்அடையவென்கிறகார்த்ஸ்ந்யவாசகம்ப்ரகாரகார்த்ஸ்ந்யபரமாகையாலே கார்த்ஸ்ந்யவாசக பதத்வயத்துக்கு புநருக்தியில்லை. கடிமலராள் - பரிமளயுக்தபுஷ்பத்தையுடையவளோடு, ஸுரபி ஸரோஜ நித்யவாஸிநி யாகையாலே ஸரோஜஸௌரபந்தான் வடிவுகொண்டாப்போலே யிருக்கிற பெரியபிராட்டியாரோடு. பிரியாத - விச்லேஷியாதவரான, "நித்யைவைஷாஜகந்மாதா, அகலகில்லே னிறையுமென் றலர்மேல்மங்கையுறைமார்பா" "சாந்தாநந்த" இத்யாதிகள்படியே ஸர்வாவஸ்தையிலும் ஜகன்மாதாவோடு ஸம்ச்லிஷ்டரான வென்றபடி. இத்தால் த்வயத்தில் மதுப் ப்ரத்யயம் நித்யயோக பரமாக வ்யாக்யாதமாய்த்து. இங்குபிராட்டிக்கு நித்யயோகம் அருளிச்செய்தது திவ்யதம்பதிகளிருவரும் ஆத்மஹவிஸ்ஸமர்பணத்திலே அக்நீஷோமாக்நாவிஷ்ணுந்யாயத்தாலே வ்யாஸஜ்யோத்தேச்யர்களென்று த்யோதநார்த்தம். கச்சிநகர் - காஞ்சீநகரிலே, அத்திகிரி - ஹஸ்திகிரியை வாஸஸ்தாநமாகவுடையவரான, அருளாளர் - பேரருளாளருடைய, இணையடிகள்-பரஸ்பரஸாத்ருச்யத்தாலே யுகளீபூதங்களான திருவடிகளை, அடைந்தேனே-சரணமாகப் பற்றினேன்.　(௨)

மூ.—தந்திரங்கள்வேறன்றித்தமதுவழியழியாது
மந்திரங்கள்தம்மாலும்மற்றுமுள்ளவுபாயாலும்
அந்தரங்கண்டடிபணிவாரெல்லார்க்குமருள்புரியுஞ்
சிந்துரவெற்பிறையவனார்சீலமல்லதறியேனே.　(௩)

இப்படி ப்ரபத்யதிகாரத்தைச் சொல்லி இனிமேல் அநுஷ்டாதாவுக்கு அநுஷ்டாநஸௌகர்யாதிசயஜ்ஞாநார்த்தமாக சரமச்லோகத்தினுடைய ப்ரதமபாதத்திலே யர்த லேசசப்தத்திலே யாதல் விவக்ஷிதமான ப்ரபத்தியுடைய தர்மாந்தரநைரபேக்ஷ்யத்தைக் காட்டாநின்றுகொண்டு அர்த்தாத் ப்ரபத்திக்கு ஸர்வபலஸாதநத்வத்தையும் வெளியிடுகிறார்.

தந்திரங்கள் வேறு இன்றி - வேறுதந்த்ரங்களின்றி யென்றந்வயம், வேறு-ஆநுகூல்யஸங்கல்பாதி ப்ரபத்திப்ரகார வ்யதிரிக்தங்களான, தந்திரங்கள் - தந்த்ரங்கள், இன்றி - இல்லாமல், கர்மஜ்ஞான யோகாதிகளான ஸர்வதர்மங்களாலும் அபேக்ஷையில்லாதபடி யென்றபடி. இதுக்கு அடிபணிவார் என்கிறத்தோடந்வயம். இப்படி ப்ரபத்தி ஸர்வதர்ம நிரபேக்ஷையாகி வித்தை யனுஷ்டிக்கு மதிகாரி தத்கால ஸம்பாவிதங்களான சிகாயஜ்ஞோபவீதோர்த்வபுண்ட்ராதிகளைத் தவிர்ந்து கொண்டேயநுஷ்டிக்கவேண்டாவோ வென்னில் அருளிச்செய்கிறார். தமது - தங்களுடைய, வழி-மார்க்கமானது, அழியாது - குலையாதபடி, பகவதாஜ்ஞாசிந்ஹங்களான ஸ்வஸ்வ வர்ணாச்ரமோசித நித்யநைமித்திக கர்மங்களை விடாதபடி யென்றபடி. இதுக்கும் முன்புசொன்னபடியந்வயம். "ஸஹகாரித்வேநச" என்கிறபடியே பக்திநிஷ்டனுக்கு கர்தவ்யத்வேந ஸர்வதர்மங்களும் அபேக்ஷிதங்களாகிறுப்போலன்றிக்கே "தீக்ஷிதோ ந ததாதி நஜுஹோதி நயஜதெ" என்றுதீக்ஷிதனுக்கு ப்ரதிஷித்தங்களான தாநஹோமபாகங்கள் கர்தவ்யத்தங்களாக வேண்டாவிடிலும் புருஷார்த்தங்களாகவாவச்யகங்களென்று தாசமிகாதிகரணத்திலே பரீக்ஷகர் நிர்ணயித்தபடியே ப்ரபத்தி நிஷ்டனுக்கு "விஹிதத்வாச்சாச்ரமகர்மாபி" என்கிறந்யாயத்தாலே புருஷார்த்தத்வேந ஸர்வதர்மங்களும் அபேக்ஷிதங்களாகையால் முன்புசொன்னசங்கைக்கு அவகாசமில்லை யென்று

கருத்து. மந்திரங்கள்தம்மாலும் - த்வயம் ப்ரணவம் யோப்ரஹ்மாணம் என்கிறச்வேதாச்வதரஶ்ருதி, தத்விஷ்ணோः என்கிறஶ்ருதி, இத்யாதி மந்த்ரங்களாலும், மற்றுமுள்ள - வேறுமுள்ளவைகளான, உரையாலும் - ஸூக்தங்களாலும், பூர்வோக்த மந்த்ரவ்யதிரிக்தங்களாயுள்ள "அகலகில்லேல்" னென்கிறபாட்டு "நதர்மநிஷ்டோஸ்மி" என்கிறச்லோகம், சரணாகதிகத்யம், அம்மாள்பாசுரம், முதலான ஸாங்கப்ரபத்தி ப்ரகாசகங்களான ஸூக்திகளாலு மென்றபடி. இதுக்கும் முன்பு சொன்னபடி யந்வயம். அந்தரம் - அந்தரத்தை, வைலக்ஷண்யத்தை, கண்டு - நிரூபித்து, ப்ரஹ்மருத்ராதிகளுக்கும் ஸர்வேச்வரனுக்கு முள்ள வைதர்ம்யத்தை சாஸ்த்ரங்களாலே தெளிந்தென்றபடி. அடி - தம்முடையதிருவடிகளை, பணிவார் - ஸேவிக்குமவரான, எல்லார்க்கும் - ஸர்வர்க்கும், அருள் - க்ருபையை, புரியும் - வர்ஷிக்குமவரான, பொழியு மென்று பாடமான போது மிதுவே பொருள். தம்முடைய திருவடிகளை சரணமாகவாஶ்ரயித்தவர்களான. "ஆர்த்தோஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ" யென்கிற சதுர்விதாதிகாரிகளுக்கும், "தாவதார்திஸ்ததாவாஞ்சா தாவந்மோஹஸ்ததாஸுகம்| யாவந்நயாதிசரணம் த்வாமசேஷாகநாசநம்" என்கிறபடியே தத்த தபீப்ஸித பலங்களை கொடுக்குமவரான என்றபடி. சிந்துரவெற்பு - ஸிந்தூரசைலத்துக்கு, இறையவனார் - ஈச்வரராயிருக்கிற பேரருளாளருடைய, சீலமல்லது - ஸ்வபாவத்தைத்தவிர, மஹத்வேஸதி மந்தைஸ்ஸஹ நீரந்த்ர ஸம்ச்லேஷாக்ய ஸௌசீல்யத்தை யொழிய வென்றபடி. அறியேனே - ஸ்பஷ்டம். வேறொன்றை இதிசேஷः. (௩)

மூ.—காகமிராக்கதர்மன்னர்காதலிகத்திரபந்து
நாகமரனயன்முதலாநாகநகரார்தமக்கும்
போகமுயர்வீடுபெறப்பொன்னருள்செய்தமைகண்டு
நாகமலைநாயகனார்நல்லடிப்போதடைந்தேனே. (௪)

ப்ரபத்திக்கு தர்மாந்தரநைரபேக்ஷ்யத்தை அருளிச்செய்தினிமேல் "உபாயஸ்ஸுகரச்சாயம் துஷ்கரச்சமதோமம" "கலவெள்கட்டுப்போய் கலவெண்ணையாய்" த்தென்கிறபடியே ப்ரபத்யங்கங்களிலே துர்லப தமமான மஹாவிச்வா ஸத்தினுடைய நிஷ்பத்யர்த்தமாக ப்ரபத்திக்கு பஹுஸ்தலங்களிலே பலாவிநாபாவத்தைக் காட்டுகிறார்.

காகம் - காகாஸுரன், இராக்கதர்மன்னர் - ராக்ஷஸராஜர்கள், ஶ்ரீவிபீஷணாழ்வானும் அவனுக்கந்தரங்கர்களான நாலுமந்த்ரிகளுமென்றபடி. யத்வா - இராக்கதர்-ராக்ஷஸர்கள், மன்னர் - பஞ்சபாண்டவர்களென்றபடி. காதலி - காதலை யுடைய ஸ்த்ரீ, காதல் - அநுராகம். அத்தையுடையவள் காதலி. வண்டார்குழலிபந்தார்விரலி என்னுமாப்போலே, த்ரௌபதி யென்று பலிதார்த்தம். கத்திரபந்து - க்ஷத்ரபந்து, நாகம் - காளீயஸர்பம், யத்வா - ஶ்ரீகஜேந்த்ராழ்வான், அரன்-ஹரன், அயன்-அஜன். சதுர்முகனென்றபடி, முதலாம் - இவர்களைப்ரதானமாகவுடையவர்களான, நாகநகரார்தமக்கும் - நாக நகர வாஸிகளான தேவர்களுக்கும், நாகः - ஸ்வர்லோகः. நாகமாகிய நகரத்தையுடையவர்கள் நாகநகரார், தம்மென்று ஸ்வார்த்தே நுப்ரயோகம். இங்குற்றஷஷ்ட்யர்த்தத்துக்கு காக ப்ரப்ருதிகளான ஸர்வர்களோடும் அந்வயம். போகம் - போகங்களாலே, உயர் - உச்ச்ரிதமான, போகஸம்ருத்தமான வென்றபடி, வீடு - மோக்ஷம், தத்ததாபத்விமோசனமென்றபடி. பெற - லபிக்கும்படி, தத்ததாபத்துக்களும் நீங்கி போகங்களும் ஸம்ருத்தங்களாம்படி யென்று நிஷ்கர்ஷம். பொன்-ஸ்ப்ருஹணீயமான, அருள் - க்ருபை, ஸர்வபலா விநாபாவத்தாலே ஸர்வபலாபிலாஷிகளாம்படி ஸ்ப்ருஹணீயை யென்றபடி. செய்தமை - செய்தபடியை, கண்டு-பார்த்து, பலாபிலாஷிகளான பலவதிகாரிகளிலே ப்ரபத்திக்கு பலாவிநாபாவத்தை நிர்ணயித்தென்றபடி. நாகமலைநாயகனார் - நாகசைலநாயகரான பேரருளாளருடைய, நல் - ஸமீசீனங்களான, அடி-திருவடிகளாகிற, போது - புஷ்பங்களை, இங்கு போதென்கிறபதம் புஷ்பசாமாந்யபரதாயாம் ஸ்வாரஸ்யாபாவாத் தாமரஸபுஷ்பரூப விசேஷபரம். ஆச்ரிதரை கைவிடாதவைகளாய் அருணஸரஸிஜஸுகுமாரசீதளஸரஸ விமலங்களான திருவடிகளென்று பர்யவஸிதார்த்தம். அடைந்தேன் - சரணமாகப் பற்றினேன். (௪)

மூ.—உகக்குமவையுகந்துகவாதனைத்துமொழிந்துறவுகுண
மிகத்துணிவுபெறவுணர்ந்துவியன்காவலெனவரித்துச்
சகத்திலொருபுகலில்லாத்தவமறியேன்மதிட்கச்சி
நகர்க்கருணைநாதனைநல்லடைக்கலமாயடைந்தேனே. (௫)

இப்படி மஹாவிச்வாஸ நிஷ்பத்தி ப்ரகாரத்தை யருளிச்செய்து இனிமேல் "ஆநுகூல்யஸ்யஸங்கல்ப:" இத்யாதிகள்படியே ஆநுகூல்ய ஸங்கல்பாத் அங்கபஞ்சகஸம்பந்நையான ப்ரபத்தியுடைய அநுஷ்டாநப்ரகாரத்தை ஸங்க்ரஹேண விசதமாகக்காட்டியருளுகிறார்.

உகக்குமவை - ஈச்வரனுக்கபிமதங்களான சாஸ்த்ரார்த்தங்களை, உகந்து - ப்ரீதிபூர்வகமாக வநுஷ்டிக்கஸங்கல்பித்து, இத்தாலாநுகூல்யஸங்கல்பத்தை யருளிச்செய்தபடி. உகவாது - ஈச்வரனுக்கு அபிமதங்களாகாதவையான, அனைத்தும் - க்ருத்ஸ்நங்களில்நின்றும், ஒழிந்து - விரமித்து, இத்தால் ப்ராதிகூல்யவர்ஜநம் ப்ரதர்சிதமாய்த்து. ஆக இவ்விரண்டு வாக்யங்களாலும் பூர்ணப்ரபத்தி ப்ரகாசகமான த்வயத்தினாலே நாராயணசப்தார்த்தபராமர்சத்தாலே யாக்ஷிப்தங்களான வர்த்தங்களை வெளியிட்டபடி. உறவு-ஸம்பந்தத்தையும், சேஷசேஷிபாவாதிகளென்றபடி, குணம்-வாத்ஸல்யாதி குணங்களையுமென்றபடி. மிக - அதிகமான, துணிவு - விச்வாஸத்தை, பெற - அடையும்படி, உணர்ந்து - பரிசீலித்து, ஸத்ஸம்ப்ரதாயநிஷ்ட தயா சீல தேசிகோபதேச லப்த ஸவிசேஷண நாராயண சப்த ப்ரதிபாத்ய ஸம்பந்த குண விசேஷங்களை பராமர்சித்து, "தேவதாதீர்த்த தபஸாம் பாரதாத்யஸ்யநிர்ணய: । நஜந்யதே நாஸ்திகதா தஸ்யமீமாம்ஸகைரபி" என்கிறபடியே ப்ருஹஸ்பதி ஸஹஸ்ரத்தாலும் அக்ஷோப்யமான மஹாவிச்வாஸத்தை யடைந்தென்றபடி. இத்தால் ரக்ஷிஷ்யதீதிவிச்வாஸத்தைக் காட்டினபடி. இவ்வளவால் ஸவிசேஷணமான நாராயணசப்தமும் ஸோபஸர்கமான தாதுவும் வ்யாக்யாதமாய்த்து. வியன் - விலக்ஷணமான, காவல்-ரக்ஷகம், என - என்று, வரித்து - ப்ரார்த்தித்து, இங்கு வரணீயனை ரக்ஷகனுக்கு வைலக்ஷண்யமாவது உபாயாந்தர நைரபேக்ஷ்யம். "த்வம்மேகோபாயிதாஸ்யா:" என்றுவரித்தென்றபடி. சகத்தில்-ஜகத்திலே, ஒருபுகலில்லா - ஒரு உபாயமில்லாதவனை, தவமறியேன்-தபஸ்ஸையறியாதவனான நான், தவமிலியேனென்று பாடமானபோது தபச்சூன்யனானவென்று பொருள். சகத்திலொருபுகலில்லா வென்கிறவித்தால் சரண்யாந்தர ராஹித்யமும் தவமறியேனென்கிற வித்தால் உபாயாந்தர ராஹித்யமும் விவக்ஷிதமாகையாலே புநருக்தியில்லை. இத்தால்கார்பண்யத்தை ப்ரகாசிப்பித்தபடி. ஆக வித்தா லுத்தமனில் விவக்ஷிதார்த்தம் விவ்ருதமாய்த்து. மதிள் - ப்ராகார பரிவ்ருதமான, கச்சிநகர் - காஞ்சீநகரத்திலே யெழுந்தருளியிருக்குமவரான, இங்கு காஞ்சீநகரத்துக்கு ப்ராகாரபரிவ்ருதத்வ விசேஷணத்தாலே யமதூதருக்கு அணுகவொண்ணாதபடி சரணாகத வஜ்ரபஞ்ஜராயமாநத்வம் விவக்ஷிதம். கருணைநாதனை - கருணாநாதனை, பேரருளாளனை யென்றபடி. இங்கு சரண்யனை கருணாநாதனென்று நிர்தேசித்தது சரண்யதோபயுக்தகல்யாணகுண பௌஷ்கல்யஜ்ஞாபநார்த்தம். தத்ராப்யுபாயாந்தரஸாதாரண ஜ்ஞாநசக்திகளில் காட்டில் அகிஞ்சநாஸாதாரணாவலம்பமான தயையினுடைய ப்ராதாந்யந்தோற்றுகைக்காக கருணையைவிசேஷித்து நிர்தேசித்தது. நல் - ஸமீசீநமான, அடைக்கலமாய் - ரக்ஷ்யவஸ்துவாய், அடைந்தேன். புகுந்தேன் - ஸ்வநிர்பரத்வபர்யந்தமாம்படி பரஸமர்ப்பணம்பண்ணி விட்டேனென்றபடி. இத்தால் சரணசப்தோபலக்ஷிதமான க்ரியாபதம் வ்யாக்யாதமாய்த்து. இங்கு அடைக்கலம் புகுருமவனுக்கு நன்மையாவது பலோபாயாதிகளில் ஸ்வஸம்பந்தாபிமான மற்றிருக்கை. இத்தால். "சாச்வதீ மம ஸம்ஸித்திரியம்ப்ரஹ்வீபவாமியத் | இத்யங்கமுதிதம்ச்ரேஷ்டம் பலேப்ஸாதத்விரோதிநீ, புருஷம்பரமுத்திச்யநமே ஸித்திரிதோந்யதா" என்றஹிர்புத்ந்ய ஸம்ஹிதையில் முமுக்ஷுப்ரபதநத்துக்கு ப்ரதாநாங்கமாக வுபதிஷ்டமான ஸாத்விகத்யாகத்தை சிக்ஷித்தபடி. இம்முகத்தா லுத்தரகண்டார்த்தஸ்ஸர்வோபிஸூசித:. (௫)

மூ.—அளவுடையாரடைந்தார்க்கு மதனுரையேகொண்டவர்க்கும்
வளவுரைதந்தவனருளேமன்னியமாதவத்தோர்க்கும்
களவொழிவாரெமரென்னவிசைந்தவர்க்குங்காவலராம்
துளவமுடியருள்வரதர்துவக்கிலெனைவைத்தேனே. (௬)

இப்படி ஸாங்கப்ரபத்தியினுடைய வநுஷ்டாநப்ரகாரத்தை ப்ரதர்சிப்பித்தருளி யினிமேல் ஸ்வதந்த்ர ப்ரபத்திநிஷ்டன் உக்திநிஷ்டன் ஆசார்யநிஷ்டன் பாகவதநிஷ்டன் என்கிற வதிகாரிகள் நால்வருக்கும் ஈச்வரன் ப்ரஸன்னனாய் பலன்கொடுக்குமென்று காட்டுகிறார்.

அளவுடையார் - பரிச்சேதத்தையுடையவராய், அடைந்தார்க்கும் - ஆச்ரயித்தவர்க்கும், அங்காங்கிவிஷயக விசதநிஷ்கர்ஷமுடையவர்களாய் பரந்யாஸம் பண்ணுமவர்களுக்குமென்றபடி. இத்தால் ஸ்வதந்த்ரநிஷ்டை சொல்லப்பட்டது, அதன் - அந்தபூர்ணப்ரபத்தியினுடைய, உரையே - உக்தியையே, கொண்டவர்க்கும் - அங்கீகரித்தவர்க்கும், அங்காங்கிவிஷயகவைசத்யமின்றிக்கே பரிபூர்ணப்ரபத்திகர்பவாக்யத்தை உச்சரித்து பரந்யாஸம் செய்பவர்க்குமென்றபடி. உரையேயென்கிறவவதாரணத்தால் அங்காங்கிவிஷயக வைசித்யஸ்யவ்யவச்சேதஃ, நதுஸமுதாயஜ்ஞாநஸ்யாபி, ததாஸதி ஜ்ஞாநாந்மோக்ஷஇதி ஸர்வஸித்தாந்திபத்ததி விலோபப்ரஸங்காத். இத்தாலுக்திநிஷ்டையைக் காட்டினபடி. வளவுரை - ச்ரேஷ்டமானஉக்தியை, ரஹஸ்யத்ரயத்தை யென்றபடி, தந்தவன் - உபதேசித்தவனுடைய, ஆசார்யனுடைய என்றபடி, அருளே - க்ருபையையே, மன்னிய - உபாயமாகப்பற்றின. மாதவத்தோர்க்கும் - மஹாதபஸ்விகளுக்கும், ஆசார்யநிஷ்டையைக்காட்டினபடி. அருளே யென்கிற வவதாரணத்தால் சிஷ்யருக்கு ஸ்வரக்ஷணார்த்த ஸ்வவ்யாபாரவ்யவச்சேதஃ. மன்னிய வென்கிற தாத்பர்யோக்தியாலே "ஸித்திர்பவதிவாநேதி ஸம்சயோச்யுதஸேவிநாம்। நஸம்சயோத்ரதத்பக்த பரிசர்யாரதாத்மநாம்" என்கிறபடியே பலாவச்யம் பாவதாத்பர்யம் விவக்ஷிதம், ஆசார்யநிஷ்டர்களை மாதவத்தோரென்று நிர்தேசிக்கையாலே சரணாகதிசாஸ்த்ரத்திலே மஹாவிச்வாஸம் துர்லபதரம், தத்ராப்யாசார்யநிஷ்டையிலே துர்லபதமம், ஆகையா லாசார்யநிஷ்டையிலே யத்யவஸாயதார்ட்யம் பெற்றவிவர்கள் உத்கடஸுக்ருதவிசேஷங்களை யநுஷ்டித்தவர்களாகவேணுமென்று ஸ்போரிதம். களவு - சௌர்யத்தில்நின்றும், ஒழிவார் - விரதரானவர்கள், ஜிதகௌஸ்துபசௌர்யமான ஆத்மாபஹாரத்தில்நின்றும் நிவ்ருத்தராய் சேஷத்வபாரதந்த்ர்யரஸிகதயா பகவதிந்யஸ்தபரர்களான மஹாத்மாக்களென்றபடி. இவர்களை களவொழிவாரென்று நிர்தேசிக்கையாலே தத்வஜ்ஞாநரஸிகத்வம் வ்யஞ்சிதம், எமரென்ன - அஸ்மதீயர்களென்றபிமாநிக்க, இசைந்தவர்க்கும் - அப்யுபகமம்பண்ணினவர்களுக்கும், பூர்ணப்ரஜ்ஞராய் ஆத்மாத்மீயபரந்யாஸம் பண்ணும் பாகவதர்களுடைய வாத்மீயகோடியிலே நிற்குமவர்களுக்குமென்றபடி. இதுபாகவதநிஷ்டையை சொல்லிற்று. காவலராம் - ரக்ஷகரான, தத்ததபிஸந்த்யநுகுணமாக பலப்ரதாநம் பண்ணுமவரானவென்றபடி. துளபமுடி - துளஸீமாலாமௌலிகரான, துளஸீமாலோஜ்வல கிரீடரானவென்றபடி. இத்தால் ப்ராப்யதோபயுக்த போக்யதாதிசயம் த்யோதிதம். அருள் - க்ருபாப்ரதாநரான, இத்தால் சரண்யதோபயுக்தகுணப்ராதாந்யம் சொன்னபடி. வரதர் - வரதருடைய, வரதசப்தநிர்தேசத்தாலே க்ருபாகார்யபூதாபிலஷிதபலப்ரதாநம் ஸூசிதம். துவக்கில் - ஸம்பந்தத்திலே, எனை - என்னாத்மாவை, வைத்தேன் - நிறுத்தினேன், பகவச்சேஷத்வ பாரதந்த்ர்யங்களிலே ப்ரதிஷ்டிதனானேனென்றபடி. (௬)

மூ.—உமதடிகளடைகின்றேனென்றொருகாலுரைத்தவரை
அமையுமினியென்பவர்போலஞ்சலெனக்கரம்வைத்து
தமதனைத்துமவர்தமக்கும்வழங்கியுந்தான்மிகவிளங்கும்
அமைவுடையவருளாளரடியிணையையடைந்தேனே. (௭)

இப்படிப்ரபத்திநிஷ்டாவிசேஷங்களை யருளிச்செய் தினிமேல் ப்ரபத்தியும்பக்தியோகம்போலே ஆப்ரயாண தஹரஹ ராவர்த்திநீயையாகில் ஸ்வார்த்தாநுஷ்டானோபக்ஷீண ஸர்வாயுஷ்கனான வாசார்யன் சிஷ்யோத்தேசேந வித்தையனுஷ்டிக்கைக்

க்வகாசமெங்ஙனேயென்று சங்கியாமைக்காக "ஸக்ருதுச்சாரஸ்ஸம்ஸாரதாரதோ பவதி, ஸக்ருதேவப்ரபந்நாய, ஸக்ருதேவஹிசாஸ்த்ரார்த்த: க்ருதோயந்தாரயேந்நரம்" இத்யாதிவசநசதஸித்தையான விதியினுடைய ஸக்ருத்கர்த்தவ்யதையை அர்சாவதார தசாபந்ந பகவத்கராரவிந்த விந்யாஸ விசேஷோத்ப்ரேக்ஷித ததபிப்ராயப்ரதர்சனத்தாலே த்ருடீகரியாநின்றுகொண்டு ஈச்வரன் ப்ரபன்னர்பக்கல் ஸர்வப்ரகாரபாதந்த்ரனவனென்கிறார்.

உமது - தேவரீருடைய, அடிகள் - திருவடிகளை, அடைகின்றேன் - சரணமாக வத்யவஸித்தேன், என்று - இப்படி, ஒருகால் - ஏகவாரம், உரைத்தவரை - உச்சரித்தவர்களை, தம்பக்கல் ஸக்ருத் பரந்யாஸம் பண்ணினவர்களென்றபடி, இனி - இத:பரம், அமையும் - பர்யாப்தம், ஸக்ருதநுஷ்டிதமான பரந்யாஸத்தை புநராவர்த்திக்க வேண்டா வென்றபடி. என்பவர்போல் - என்றுசொல்லுமவர்போலே, அஞ்சல் - பயப்படவேண்டாம், என - என்று ஜ்ஞாபியாநிற்கிற, கரம்-ஹஸ்தத்தை, வைத்து-ந்யஸித்து, இதுக்கு விளங்குமென்கிறத்தோடே யந்வயம். பய நிவாரண ஸூசகமான அபயமுத்ரா விந்யாஸத்தை ப்ரபதநாவ்ருத்திவாரணபரமாக வுத்ப்ரேக்ஷித்தபடி. உத்ப்ரேக்ஷா வ்யஞ்சகத்வேந பரிகணிதமான இவ சப்தத்துக்கு பர்யாயமான போல் என்கிறசப்தத்தால் உத்ப்ரேக்ஷா வ்யஞ்சிதா. தமது - தம்முடையவஸ்துக்களை, அனைத்தும் - ஸமஸ்தங்களையும், அவர்தமக்கும் - அந்த க்ருத்ஸ்ந பரந்யாஸம் பண்ணின வதிகாரிகளுக்கு, வழங்கியும் - குடுத்தும், தான் - தாம், மிக - அதிகமாக, விளங்கும் - உல்லஸியாநிற்குமவரான, "இத்தனை யடியரானார்க்கிரங்குநம்மாங்களுயபித்த" னென்கிறபடியே ஸக்ருத் பரந்யாஸ மாத்ரத்தாலே வசீக்ருதராய்க்கொண்டு "யதண்டம் + விபூதய:" என்று விபூதித்வேந ப்ரதிபாதிதங்களான ஸமஸ்தபதார்த்தங்களையும் "பரிஜநபரிபர்ஹா + ஸம்ச்ரிதார்த்தம்சகர்த்த" என்கிறபடியே சரணாகதசேஷங்களாக்கியத்தாலே மிகவும் மகிழாநிற்குமவரான வென்றபடி. இத்தால் முன்பு சொன்ன ப்ரபத்யநாவருத்திநிஷேதம் ஸக்ருத்பரந்யாஸநிஷ்க்ரீத விபூதித்வய விசிஷ்டஸ்வாத்ம வ்யதிரித்த ப்ரதேயவஸ்து தௌர்லப்ய ப்ரயுக்தமென்று ஸூசிதம். அமைவுடைய - பூர்த்தியுடையவரான, இப்படி ஸ்வவிபூதிகளை ஸ்வாச்ரித சேஷங்களாகச் செய்தேயும் தஜ்ஜந்யாதிசயத்துக்கும் ஸர்வசேஷியானதாமே பலியாக பர்யவஸிக்கையாலே ஒருபடியாலும் விபூதிஸம்பந்தமொழியாதவரான வென்றுதிருவுள்ளம். அருளாளர் - பேரருளாளருடைய, அடியிணையை-யுகளீபூதங்களான திருவடிகளை, அடைந்தேன்- ஆச்ரயித்தேன். (எ)

மூ.—திண்மைகுறையாமைக்குநிறைகைக்குந்தீவினையால்
உண்மைமறவாமைக்குமுளமதியிலுகக்குகைக்கும்
தண்மைகுறையாமைக்குந்தரிக்கைக்குந்தணிகைக்கும்
வண்மையுடையவருளாளர்வாசகங்கள்மறவேனே. (அ)

க்ஷணகாலஸாத்யமான பரந்யாஸ மிப்படி ஸக்ருத் கர்தவ்யமாகில் இதையநுஷ்டித்த வதிகாரிக்கு ருசிவிசேஷாப்யுபகத ப்ராரப்த கர்மவைசித்ர்யாலே இருள்தருமாஞாலத்துளிருக்கும் போது சாஸ்த்ரவிச்வாஸமாந்த்ய பகவச்சேஷத்வ பாரதந்த்ர்யாதி விஸ்மரண பாகவதாபசார ப்ரப்ருதிகளான வனர்த்தங்கள் புகுராதோ வென்று சங்கியாமைக்காக விங்கிருந்தகாலம அத்யாத்மபரிசீலநமே பண்ணத்தக்கதென்கிறார்.

திண்மை - தார்ட்யம், மஹாவிச்வாஸம். குறையாமைக்கும் - ந்யூநமாகாமைக்கும், இந்த தாசார்த்ய வாசி பதங்களுக்கெல்லாம் வாசகங்கள் மறவே னென்கிறத்தோடந்வயம். நிறைகைக்கும் - பூர்ணமாகுகைக்கும், இங்கு மஹாவிச்வாஸத்துக்கு குறையாமையாவது பலத்தில் ஸம்சய லேசமற்றிருக்கை. ஸாங்கப்ரபதநாநுஷ்டாந காலத்திலே தானே பூர்ணமான விச்வாஸத்துக்கு ததுத்தரகாலத்திலே நிறைகையாவது விஸ்ரம்பஜநக சாஸ்த்ரபரிசீலநத்தாலே தாராவாஹியா யநுவர்த்திக்கை. தீவினையால் - க்ரூரகர்மங்களாலே, உண்மை - யாதார்த்யத்தை, மறவாமைக்கும் - விஸ்மரியாமைக்கும், பகவச்சேஷத்வ பாரதந்த்ர்யாதிகளை யபலபியாமைக்கும் என்றபடி. உளமதியில் - உண்டான ஜ்ஞாநத்திலே, உகக்குகைக்கும் - ஸந்துஷ்டனாகைக்கும்,

ஜ்ஞாநவைஶத்யமில்லையென்று கரையாதே உபயுக்தாம்சவைசத்யத்தாலே ஸந்துஷ்டனுகைக்கு மென்றபடி. தண்மை-சீதளத்வம், ஸௌம்யதை யென்றபடி. குறையாமைக்கும்-ந்யூநமாகாமைக்கும், "ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம ஜலாநிதிசாந்தஉபாஸீத, ஸர்வபூதாத்மகேதாதஜகந்நாதே ஜகந்மயே|பரமாத்மநி கோவிந்தேமித்ராமித்ர கதா குத:, சராசராணிபூதாநி ஸர்வாணிபகவத்வபு:| அதஸ்ததாநுகூல்யம்மே கார்யமித்யே வநிச்சய:" என்றுபதிஷ்டமான சாந்திரஸம் தலைமாய்ந்து அதடியாக பாகவதாபசாராதிகள் புகுரும்படியாகாமைக்கென்றபடி. தரிக்கைக்கும் - இங்கு தரிக்கையாவது இக்ஷணமே புருஷார்த்தம் பெறுவிடில் தான் முடிந்துபோம்படியான தீவ்ராபிலாஷத்தை விரோதிக்கை, தணிகைக்கும் - தணிந்திருக்குகைக்கும், தணிகையாவது ஆத்யாத்மிகாதிஸாம்ஸாரிகதுக்கங்களைமறந்திருக்கை. வண்மையுடைய - அழகையுடையவரான, அருளாளர் - பேரருளாளருடைய, வாசகங்கள் - வார்த்தைகளை, மறவேன் - விஸ்மரியேன், ஸ்வீக்ருதபரனுன வீச்வரன் "யேந கேநாபி ப்ரகாரேண த்³வயவக்தா த்வம் [illegible] நித்யகிங்கரோ ப⁴வ, [illegible] நித்யகிங்கரோ ப⁴விஷ்யஸி, [illegible] ஸம்ஶய:, [illegible] ஸக்ருதேவ ப்ரபந்நாய, [illegible] பரித்யஜ்ய, இதி மே வசநம் [illegible] ஸர்வதா" என்றருளிச்செய்த வசநங்களை கதாசிதபி மறவேனென்றபடி. இங்கு பகவத்வசநங்களை யெடுத்தது மற்றும் பரிசீலநீயங்களான வத்யாத்மசப்தங்களுக்கு முபலக்ஷணம். இங்கீச்வரனை வண்மையுடைய வென்றழகாலே விசேஷித்தது அவனருளிச்செய்த வசநார்த்தாநுஷ்டாநத்தில் சேதநனுக்கு ப்ரவ்ருத்தி "காந்தாஸம்மிததயோபதேசயுஜே" என்றுகாவ்யஜ்ஞர் சொன்னபடியே தயிததமையாலே ப்ரோர்தனை காமுகனுக்குப்போலே ஸ்வயம் ப்ரயோஜநபூதை யென்று ஸூசநார்த்தம். (அ)

மூ.—சுருதிநினைவிமையறியும்துணிவுடையார்தூய்மொழிகள்
பரிதிமதியாசரியர்பாசுரஞ்சேர்ந்தருக்கணங்கள்
கருதியொருதெளிவாளால்கலக்கமறுத்தத்திகிரி
பருதிமதிநயநமுடைபரமனடிபணிந்தேனே. (௯)

ந்யஸ்தபரனை வதிகாரிக் கிப்படி பலபூதமான ஸ்வநித்தஸந்தோஷாத்யாதாயகாத்யாத்மவிமர்சாநிரூபமான வுத்தரக்ருத்யத்தை யருளிச்செய் தினிமேல் ஶ்ருதிஸ்ம்ருதிபூர்வாசார்யவசநாநா மேகரஸஸ்ய ப்ரதிபாதநத்தாலே அஜ்ஞாநோச்சேதகபூர்வகத்வ ஜ்ஞாநோத்பாத்ய பரோஜ்ஜீவந ரூபமான வுத்தரக்ருத்யத்தை யருளிச்செய்கிறார்.

சுருதி - ச்ருதியுடைய, நினைவு - தாத்பர்யத்தை, இமை - நிமேஷத்தை, அந்தர்வ்யாபாரத்தையும் பாஹ்யவ்யாபாரத்தையு மென்றபடி, அறியும் - அறியும்படியான, துணிவுடையார் - மநோபலத்தையுடையவர்களுடைய, ச்ருதியுடைய தாத்பர்யவிஷயீபூதார்த்தங்களையும் ஆபாதத: ப்ரதீயமாநார்த்தங்களையும் விவேசிக்கத்தக்க மநோபலத்தை யுடையவரான பராசரப்ரப்ருதி மஹர்ஷிகளுடைய வென்றபடி, தூய் - நிர்தோஷங்களான, மொழிகள - தத்ஸூக்திகள், ப்ரபந்தங்க ளென்றபடி. இதுக்கு சேர்ந்தென் கிறத்தோடே யந்வயம். பருதி - ஸூர்யன் போலே யிருக்கிற, மதி -

ஜ்ஞாநத்தையுடையவரான, ஸூர்யவத் ஸகலதமோநிவர்த்தக ஜ்ஞாநரான வென்றபடி. ஆசிரியர் - ஆசார்யர்களுடைய, பாசுரம் - வாக்யங்களோடு, சேர்ந்து - ஏககண்டங்களாய், ஸ்ரீபராங்குசப்ரப்ருதி பூர்வாசார்ய ஸூக்திகளோடே ஏகரஸங்களாயென்றபடி. இதுக்கு கலக்கமறுத் தென்கிறத்தோடே யந்வயம். த்ரமிடபாஷையிலே த்வாப்ரத்யயபர்யாயபதத்துக்கு பூர்வகாலத்வமே பொருளாய் ஸமாநகர்த்ருத்வம் பொருளல்லாமையாலே சேர்ந்தென்கிற ஸூக்தி வ்யாபாரத்துக்கும் அறுத்தென்கிறபுருஷவ்யாபாரத்துக்கும் ஸமாநகர்த்ருத்வாபாவேபி நதோஷ:. இப்படி மற்றுமுள்ள விடங்களிலும் கண்டுகொள்வது. ஶ்ருத்யுபப்ருஹ்மணங்களான மஹர்ஷிவசநங்களையும் பூர்வாசார்யவசநங்களையும் ஏககண்டங்களாக உபபாதித்து என்று நிர்களிதார்த்தம். அருக்கணங்கள்- ஜீவகணங்களை, அருவென்கிறபதம் ஸூக்ஷ்மத்ரவ்ய வாசியாயிங்குஜீவர்களைக்காட்டுகிறது. கருதி - உத்தேசித்து, ஸ்வாபிமானவிஷயங்களான ஜீவர்களுடைய உஜ்ஜீவநத்தை உத்தேசித்தென்றபடி. ஒருவிலக்ஷணமான, தெளி- வைசித்யமாகிற, வாளால் - கட்கத்தால்-கலக்கம் - க்ஷோபத்தை, அறுத்து - ஸமூலமாகச்சேதித்து, ஸ்வாச்ரிதருக்கு ஸம்யக் தத்வஜ்ஞாநோத்பாதநத்தாலே அஜ்ஞாநஸம்சயங்களைக் கழித்தென்றபடி. இங்கு தத்வஜ்ஞாநத்தை கட்கமாக நிரூபித்தது. "பிபர்த்தியச்சாஸிரத்நமச்சுதோத்யந்த நிர்மலம் | வித்யாமயந்துதத்ஜ்ஞாநம் அவித்யாசர்மஸம்ஸ்திதம்" என்கிற வஸ்த்ரபூஷணாத்யாய ப்ரக்ரியாப்ரத்யபிஜ்ஞாபநார்த்தம். ஸ்வச்சஸூக்ஷ்மதர விரோதிலவந ஸௌகுமார்யாதிசயத்யோதநார்த்தஞ்ச. இந்த தத்வஜ்ஞாநகட்கரூபணத்தாலே கலக்கத்துக்கு அவித்யாசர்ம ஸம்ஸ்திதம் என்கிறப்ரமாணாநுகுணமாக கட்காச்சாதககோசரூபத்வம் கம்யமாகையாலே ஏகதேச விவர்த்திரூபகாலங்காரமாகக்கடவது. அத்திகிரி - ஹஸ்திகிரியிலே வஸிக்குமவரான, இது பரமனுக்குவிசேஷணம். பருதி - ஸூர்யனையும், மதி - சந்த்ரனையும், நயனமுடை - நேத்ரங்களாகவுடையவனான, பரமன் - பரமபுருஷனுடைய, அடி - திருவடிகளை, பணிந்தேன் - ஸேவித்தேன். இது பரோஜ்ஜீவனார்த்தமாக வநுஷ்டிக்கும் ப்ரபத்தியாகக்கடவது. (௯)

மூ.—திருமகளுந் திருவடிவுந் திருவருளும் தெள்ளறிவும்
அருமையிலாமையு முறவு மளப்பரிய வடியரசும்
கருமமழிப்பளிப்பமைப்புங் கலக்கமிலாவகைநின்ற
அருள்வரதர்நிலையிலக்கி லம்பெனநானமிழ்ந்தேனே. (௧0)

இப்படி ந்யாஸவித்யையை ஸாதிகாரமாகவும் ஸாங்கமாகவும் ஸோத்தரக்ருத்யமாகவும் வெளியிட் டினிமேல் வித்யாநுஷ்டாநோபயுக்தமான புருஷவிக்ரஹகுண ஸம்பந்தவ்யாபாரநிஷ்கர்ஷம் "மத்தஸ் ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச" என்கிறபடியே ஸர்வநியந்தாவான ஸர்வசேஷியுடைய க்ருபாதீனமாகையாலே இவ்வித்யையில் இச்சேதநனுக்கு ஸ்வதந்த்ரகர்த்ருத்வாதிகளில்லை என்று ஸாத்விக த்யாகத்தை ஸூசிப்பியாநின்றுகொண்டு ந்யாஸவித்யாவிதாயக ப்ரமாணத்தைப்ரத்யபிஜ்ஞாபிக்கிறார்.

மலர்மகள் - பிராட்டியாலே, மருவிய-ஆதரிக்கப்பட்டதான, மறுவுடை-சிந்ஹத்தையுடையவரான, பகவத்வக்ஷோதக்ஷிணபாக நிஷ்டத்வலக்ஷண ஸாமாநாதிகரண்ய ப்ரத்யாஸக்தியாலும் தேவதாந்தர வ்யாவர்த்தகா ஸாதாரணதர்மத்வ ரூப ஸாஜாத்யத்தாலும் பிராட்டிக்கு அத்யந்தாதரவிஷயமான ஸ்ரீவத்ஸாக்ய லாஞ்சனத்தை யுடையவரான வென்றபடி. இங்கு ஈச்வரனுக்கு ஸ்ரீவத்ஸஸம்பந்தத்தாலே பரத்வமும் ஸ்ரீஸம்பந்தத்தாலே பரிபூர்ணத்வமும் வ்யஞ்சிதம். இத்தா லீச்வராராதநார்த்த த்ரவ்யோபாதாந மவனுக்கவாப்த போகாவாப்த்யர்த்தமன்று. கிந்து - சேதநனுடைய சரணகளேபரங்களுக்கு ஈச்வரமுகோல்லாஸநே க்ருதார்த்ததா வாப்த்யர்த்தமென்று பலிதம். இறையவர் - ஈச்வரனுடைய, மலர் - புஷ்பங்கள்போலே யிருக்கிற, அடி - சரணங்களை, கருதிய - சிந்திக்குமவரான, மனமுடை - மநஸ்ஸையுடையவரான, பகவத்பத பத்மார்சநோத்தேசேந தது பகரணோ பாதாநத்திலே ப்ரவர்த்திக்குமவரான வென்றபடி. அடியவர் - தாஸர்கள், மலர் - புஷ்பங்கள், புனல் - தீர்த்தம், அமுது - தண்டுலாதிஹவிரர்த்த த்ரவ்யங்கள், உடன் - இவைகளோடேகூட, வகையென - அந்தமாதிரிகளான, அடையவும் - க்ருத்ஸ்நத்ரவ்யங்களையும் "அந்ஹோத்விதீயபாகேநக்ருஷ்ணாராதநதத்பர:" த்ரவ்யாண்யாராதநார்த்தாநி சாஸ்த்ரீயாணி ஸமார்ஜயேத்॥ ப்ரபூதாநிவிசுத்தாநி சுத்ததேசோத்பவாநிச। அநாத்ராண்யநிஷித்தாநி ஸங்க்ருஹீதாநி வைஷ்ணவை:॥ சுகந்தீநிமநோஜ்ஞாநிபுஷ்பாண்யபிமுகாநிச। வாஸாம்ஸிதநதாந்யாநி சந்தநாதநுலேபநம்॥ அந்யாநிஹவிரர்த்தாநி தாநிமூலபலாநிச। ஸம்க்ஷிப்தாநீஹபஹூநிசேர தேவபோக்யாநியாநிச, ததிக்ஷீராஜ்யமுக்யாநி॥ த்ரவ்யாணிசவிசேஷத:। உத்தமாநுபதம் சாம்ச்ச முத்கமாஷாதிகாந்யபி॥ தாம்பூலாதீநிவாந்யாநி ஸர்வாண்யாதாயஸாமரம்யதர்ஹந்தாநிஸம்ஸ்க்ருத்ய ப்ரக்ரமேதார்சநந்தத:" இத்யாதிப்படி நஞ்ஜீயராலே ஸங்க்ருஹீதார்த்தங்களான த்ரவ்யங்களை, என்றபடி. இதுக்கு வாக்யாந்தக்ரியையோடேயந்வ

யம், இங்குபாதேயமானத்ரவ்யங்களுக்கு வகையெனவென்றுஅப்யஸ்யமானவென்றுதத்வோக்தியாலே "அக்லேசேநசரீரஸ்ய குர்வீததநஸஞ்சயம், அப்ரயத்நேநதாஸ்ஸேவ்யா க்ருஹஸ்தைர்விஷயாஸ்ஸதா" என்று மன்வாதிமஹர்ஷிகள் ஸ்துதித்தபடியேத்யாகாதி விரோதி காயக்லேசகர பஹுவ்யாயாஸநிரபேக்ஷ த்ரவ்யங்களே உபாதேயங்களென்று த்வநிதம். மலர்மதி-மதிமலரென்றந்வயம், மதி-புத்திவிசேஷங்களாகிற, மலர்-புஷ்பங்களையும், [illegible] என்று இத்யாதிகளாலே தர்சிதங்களாய் ஸதாசார்ய ஸேவா ஸம்ப்ரதாயாதிகளாலே லப்யங்களான வஹிம்ஸாத்யாந்தர புஷ்பங்களையு மென்றபடி, எமது-நம்முடையவைகள், அல-அன்று, என-என்று, "[illegible]" என்று ஆபஸ்தம்ப கீதாவசநங்களின்படியே உபாதேயமான வஸ்துக்களிலே ஸ்வார்த்தத்வ புத்தியைவிட்டு பகவதர்த்தத்வா நுஸந்தாநத்தை பண்ணிக்கொண்டு என்றபடி, வருபவர் - வரும்படி பண்ணுவர், ஸம்பாதிப்பரென்றபடி. (௩)

மூ.—நிறையுடைமலர்மக ணலமுறமருவிய
இறையவனினிதுற வினியவையெனுமவர்
அறநெறியிலனவ னணுகினுமணுகிலர்
துறையலதெனு மொருதுறைபடுகிலரே. (௪)

இப்படி உபாதானத்தை விசதமாகக்காட்டி இனிமே லுபாதாநத்திலே ஸம்பாவிதங்களான துஷ்ப்ரதிக்ரஹாதிகளுடைய பரித்யாகமாவச்யகமென்று தந்நியமத்தை யருளிச்செய்கிறார்.

நிறையுடை - பூர்த்தியையுடையவளான, மலர்மகள்-பிராட்டியானவள், நலம்-ஆநந்தத்தை, உற - அடைகைக்காக, மருவிய - ஆதரிக்கும்படியான, மங்களங்களுக்கும் ஸம்பத்துக்களுக்கும் அதிதேவதையாகையாலே ஸம்பூர்ண ஸமஸ்தகாமையான பிராட்டியுங்கூடத் தனக்குபோகஸித்யர்த்தமாக வாஶ்ரயிக்கும்படி திருவுக்கும் திருவாகிய செல்வனானவென்றபடி. இத்தால் நிரதிசயபூர்த்திசாலியான வீச்வரன் ஸ்வாஜ்ஞாரூப சாஸ்த்ர ஸித்த த்யாஜ்யோபாதேய நியமாநுபாலநத்தாலே யுகக்குமத்தனைபோக்கி யதாகதஞ்சித் ப்ரசுரத்ர வ்யார்ஜநத்தாலே யுகவானென்று த்வநிதம். இறையவன் - ஈச்வரன், இனிது - போகத்தை, உற-அடைகைக்காக, இனியவை-போக்யபதார்த்தங்கள், எனுமவர் - என்றுநினைத்திருக்குமவர், ஸமஸ்தபோக்ய வஸ்துக்களும், பகவத்பாகவதார்த் தங்களென்று அத்யவஸித்திருக்கு மநந்யப்ரயோஜநாதிகாரிகளென்றபடி. அறநெறியது - கர்மமார்க ஸித்தாசாரங்கள், இலனவன்-இல்லாதவன், அணுகினும் - கிட்டினாலும், அணுகிலர் - கிட்டார்கள். "[illegible]" என்று ஸ்ரீசாண்டில்யஸ்ம்ருதி ஸாத்வததந்த்ர மஹாபாரதங்கள் சொன்னபடியே, தர்மார்த்தமார்க ப்ரஸ்கலிதரானவர்கள் ஸ்வயமாகத்த்ரவ்யங்களைக் கொடுக்க வந்தாலும் ப்ரதிக்ரஹியார்களென்று நிஷ்கர்ஷம், அணுகிலும்-அணுகிலுமென்கிறவித்தால், கா புந:கதா ஸ்வயமுபஸர்பணயாச்ஞாதேரிதி ஸூசிதம். இப்படி ப்ரதிக்ரஹநியமத்தை அருளிச்செய் தினிமேல் சதுஷ்பத சிவாலய ச்மசாநா த்யசுத்ததேசோத்பவ புஷ்பாதிவர்ஜநத்தை யருளிச்செய்கிறார். துறையலது-துறையல்லாதது, எனும்-என்னும்படியான, ஒருதுறை-ஒருதுறையிலும், படுகிலர்-இழியார்கள். "[illegible]

[illegible]'' என்று ஸ்ரீஸாத்வதத்திலே நியமபரிச்சேதத்தில் சொன்னபடியே ஸந்மார்க்கத்திலே புஷ்பாத்யார்ஜநங்கள் பண்ணுவர்களென்றபடி. (௪)

மூ.—ஒளிமதியெனவொருதிருவுடனுயர்பவர்
நளிர்மதிமுகநகைநலநிலவுகவுகள்
தெளிபுனலமுதெனச்செழுமதியடியவர்
குளிமுதல்கிரிசைகள்குறைகிலர்வலதே. (௫)

இப்படி உபாதாநத்தை யருளிச்செய்து இனிமே லுபாதாநத்ரவ்ய நிஷ்பாத்யையாய் "[illegible]''என்றுப்ரசம்ஸிதையாய்அஹோராத்ரக்ருத்ய ப்ரதாநபூஜையாய் பகவத்பாஷ்யகாரராலே "[illegible]'' என்றுதுடங்கி சௌநக வ்யாஸ போதாயநாத்யநுக்தமாய் பகவச்சாஸ்த்ரோக்தமான யார்கத்தை யவலம்பித்துஸ்நாநவிசேஷ பூர்வகவிசேஷணத்ரயவிசிஷ்டத்வேந ப்ரதிபாதிதையாய் அபிகமந போக மதுபர்க்க நிவேதந ஸம்ப்ரதாந வஹ்நிஸந்தர்பண பித்ருயாகாநுவாகாத்மக க்ரியாஷ்டக ரூபதயாஷ்டாங்கயொகத்வேந ஜயாக்யஸம்ஹிதையிலே விவேசிதையான பகவதிஜ்யையை யிரண்டுபாட்டுக்களாலே யருளிச்செய்யக்கோலி முற்பட ஸ்நாநவிசேஷாதி பூர்வபாவிக்ரியைகளை யருளிச்செய்கிறார்.

ஒளி-ஜ்யோத்ஸ்நையும், மதி-சந்த்ரனும், என - என்னும்படி, ஒரு - அத்விதீயையான, திருவுடன்-பிராட்டியோடே, உயர்பவர் - உச்ச்ரிதரான பேரருளாளருடைய, கௌமுத்யவிநாபூதனென குமுதபந்து வென்னலாம்படி பெரியபிராட்டியாரோடு நித்யஸம்ச்லிஷ்டரான பேரருளாளருடைய வென்றபடி. நளிர் - சீதளமான, மதி-சந்த்ரனைப்போலேயிருக்கிற, முகம் - முகத்தினுடைய, நகை - மந்தஹாஸமாகிற, நல-ஆநந்தப்ரதமான, நிலவு - ஜ்யோத்ஸ்நையாலே தோற்றுவிக்கப்பட்டதான, உகவுகள்- ஹ்ருதயோல்லாஸங்கள், தத்ஹேதுக்களென்றபடி. நேத்ராநந்தநே சந்த்ரன் என்னுமாப்போலே ஹ்ருதயோல்லாஸ ஹேதுக்களை ஹ்ருதயொல்லாஸங்களாக உபசரித்தபடி. தெளி - நிர்மலமான, புனல் - ஜலம், அமுது - ஹவிராதித்ரவ்யங்கள், தெளிபுனலமுது - பூர்வோக்தஹ்ருதயோல்லாஸ ஹேதுக்கள் என்று உத்தேச்யோபாதேய வ்யத்யாஸேநாந் வயிப்பது. என - என்று, செழு - அபிவ்ருத்தமான, மதி - புத்தியையுடையவரான, அடியவர் - தாஸர்கள், வலது - சக்யைகளான. குளிமுதல் - ஸ்நாநாதிகளான, இங்கு - குளிசப்தத்தாலே தர்மசாஸ்த்ரோக்த வாருண மந்த்ராதி கடித ஸ்நாந விலக்ஷணமாய் ஸமாராதநாங்கத்வேந பகவத்பாஷ்யகார நித்யொக்தமாய் மூலமந்த்ர கரணகமான ஸ்நாநவிசேஷம் விவக்ஷிதம். மூலமந்த்ரத்தாலே தேவரிஷி பித்ருதர்பணமாத்யந்திநஸந்த்யோபாஸந மூலமந்த்ரஜபாதிகள்விவக்ஷிதங்கள், கிரிசைகள் - க்ரியைகளை, குறைகிலர் - குறையார்கள், அக்கர்மங்களை ந்யூநமாகாதே அநுஷ்டிப்பார்களென்றபடி. வலதென்று க்ரியைகளை சக்யத்வேந விசேஷிக்கையாலே முக்யஸ்நாநாத்

யசக்தனுக்கு கௌணஸ்நாநாதிகளால் பகவதர்சாதிகார முண்டென்று தர்சிதமாய்த்து. (௫)

மூ.—வருவதோருறவென வளரிளவரசென
மருவுநன்மகனென வனமதகரியென
அருவிலைமணியென வடியவரடைவர்கள்
அருகணையிறைவனை யருகணையுடனே. (௬)

இப்படி இஜ்யாநுஷ்டான யோக்யதாபாதக ஸ்நாநாதிகர்மங்களை யருளிச்செய்தினி பாஷ்யகாரராலே விசதப்ரதர்சிதையான விஜ்யையை ஸங்க்ரஹியாநின்றுகொண்டு ததநுஷ்டாதாக்களுக்கு தத்காலகர்த்தவ்யமாய் ஸாரபூதமான பாவபந்தத்தை யருளிச்செய்கிறார்.

அடியவர் - தாஸர்கள், அருகணை - அர்ஹணைக்கு, பூஜைக்கு, இறைவனை - ஈச்வரனை, "யஜ்ஞைஸ்ஸமிந்தஸேநிதயம் பித்ருதேவஸ்வரூபத்ருக், அஹம்ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தாசப்ரபுரேவச" "தேவனெம்பெருமா னுககல்லால்பூவும் பூசனையுந்தகுமே" என்கிறபடியே ஸத்வாரகாத்வாரக ஸர்வயஜ்ஞ ஸமாராத்யரான பேரருளாளரென்றபடி. அருகணையுடன்-அர்ஹணையோடே, பாஷ்யகாரோபதிஷ்டமான ஸமாராதநத்தோடே என்றபடி. இதுக்கு அடைபவரென்கிறத்தோடே யந்வயம், வருவது - ஸத்ய ஸ்ஸமாகதனான, ஓர் - அத்விதீயனான, அத்யந்தப்ரத்யாஸந்நனான வென்றபடி. உறவென - பந்துவைப்போலவும், எனவென்கிற பதமுபமானவாசகம். இங்கு ஸத்யஸ்ஸமாகதத்வோக்தியாலே அதிதித்வமும் ப்ரத்யாஸன்னத்வோக்தியாலே ப்ரியத்வமும் தர்சிதமாகையாலே "யதாயுவாநம்ராஜாநம் யதாசமதஹஸ்திநம் | யதாப்ரியாதிதிம்யோக்யம் பகவந்தம்ததார்சயேத்" என்கிறவசநத்திலே யதாப்ரியாதிதி மென்கிற த்ருஷ்டாந்த மநூதிதமாய்த்து. இத்தால் ஸாதர ஸகௌரவ ஸமாராதந வ்யக்ரத்வமும தத்விச்லேஷாஸஹிஷ்ணு த்வத்தால் போக்யத்வமும் த்யோதிதம். வளர் - வர்த்தியாநின்ற, இள - யுவாவான, அரசென - ராஜாவைப்போலவும் இத்தால் "யுவாநம்ராஜாநம்" என்கிறவுபமையை யநுபாஷித்தபடி. இங்கு ராஜத்ருஷ்டாந்தத்தாலே தந்முகோல்லாஸஸ்ய புருஷார்த்தத்வமும் யுவத்வோக்தியாலே விவிதபோகோபசார விநோத ரஞ்ஜநீயத்வமும் த்வநிதம். மருவு - ஸ்ப்ருஹணீயனான, நன்மகனென - ஸத்புத்ரனைப்போலேயும், ஏதேந "யதாசபுத்ரந்தயிதம்ததைவோபசரேத்தரிம்" என்கிற ஸாத்ருச்யத்தை யநுவர்ணித்தபடி. இத்தால் ஸ்ரீவிஷ்ணுசித்தந்யாயத்தாலே வாத்ஸல்யோபலாளநாதிகள் வ்யஞ்ஜிதங்கள், வன - அரண்யவர்த்தியான, மதகரியென - மத்தத்விரதத்தைப்போலவும், "யதைவமதஹஸ்திநம்" என்கிறஸாதர்ம்யத்தை யநுஸரித்தபடி. இங்கு கரித்ருஷ்டாந்தத்தாலே ஸ்வரூபஸத்யா நிரதிசயலக்ஷ்மீகரத்வமும் ; ஸ்யாவஸ்திதி மதயோருக்தியாலே அத்யந்தாவஹித மநஸ்கதயா பிகந்தவ்யத்வமும் த்யோதிதம். அரு - அசக்யமான, விலை- மூல்யத்தையுடையதான, மணியென - மணியைப்போலவும், அநகரத்நத்தைப்போலவும் என்றபடி. இங்கு மணித்ருஷ்டாந்தத்தாலே "[illegible]" என்கிறபடியே முந்தாண்யிலே முடிந்தாளலாம்படியான ஸௌலப்யஸௌசீல்யங்களும், அநர்கத்வோக்தியாலே "[illegible]

[illegible]”
என்கிறபடியே ஸாவதாந கோபநஸம்ரம்பமும் வ்யஞ்ஜிதம். அடைவர்கள் - ஆஶ்ரயி
ப்பார்கள். (௬)

மூ.—விரைகமழ்மலர்மகண்மிகவுறுமிறையவன்
குரைகழல்குறுகியகுளிர்மதிமதியொடும்
விரைநிலையடியவர்மறைகளின்மறையெனும்
உரைநிரைபரவுவருளமமுதுணவே. (௭)

இப்படி யிஜ்யையை ப்ரகாசிப்பித்து இனிமேல் பகவத்ப்ரீணந ஸ்வஸித்தரஞ்ச கேதிஹாஸ புராண ஸ்தோத்ர நிகமாந்தத்வய வ்யாபக மந்த்ராதி ஶ்ரவண மநந ப்ரவசநஜபாதி ரூப மாய் ராத்ரௌ கரிஷ்யமாண பகவத்யோக ப்ரதிஸந்துக்ஷண ஸ்நேஹாயமாநமாயிருக்கிற ஸ்வாத்யாயத்தை யிரண்டுபாட்டுக்களாலே யருளிச்செய்யக்கோலி முற்பட ஸமஸ்தசப்தராசிஸாரதம வ்யாபகத்ரய பரிசீலநத்தை யருளிச்செய்கிறார்.

விரைநிலை - பர்வதம்போலே யிருக்கிற நிஷ்டையை யுடையவரான, அடியவர். தாஸர்கள், “[illegible] ”என்று ஸ்திரதரங்களான பர்வதங்களுக்குங் கூட த்ருஷ்டாந்தமாம்படி அத்யந்த நிஷ்கம்ப தத்வஹித புருஷார்த்தாத் த்யவஸாய சாலிகளான பகவத்பரர்க ளென்றபடி. இத்தாலிவர்களுக்கு உபப்ரும்ஹண நிரபேக்ஷ பூர்ணஜ்ஞாநத்வம் ஸூசிதமாகையாலே ஈத்ருசாதிகாரிகளுக்கு உபப்ரும்ஹணீய மந்த்ரபாக ஜபஏவோசிதஃ என்றுவ்யஞ்ஜிதம். “உபப்ரம்ஹண நிரபேக்ஷஸ்ய உபப்ரும்ஹணீயவேதபாகஜபஏவயுக்தஃ”என்று ஶ்ரீபாஞ்சராத்ர ரக்ஷையிலே தாமே யருளிச்செய்தாரிறே. விரை - பரிமளத்தாலே, கமிழ்-வாஸியாநிற்கிற, மலர்மகள் - பிராட்டியாலே, மிக-அத்யந்தம், உறும் - ஆஶ்ரயிக்கப்பட்டவரான, பிராட்டியோடு நித்யஸம்ச்லிஷ்டரான, இறையவர் - ஈச்வரனுடைய, குரை - முகரங்களான, கழல் - சரணங்களை, குறுகிய - கிட்டினதான, நூபுராத்யாபரண சிஞ்ஜிதமுகரங்களான பகவச்சரணாரவிந்தங்களை விஷயீகரியா நிற்கிறவென்றபடி. இதுபுத்திக்கு விசேஷணம். குளிர் - சீதளமான, மதி - சந்த்ரனைப்போலேயிருக்கிற, சந்த்ரனைப்போலே ப்ரஸன்னசீதளையான வென்றபடி. மதியோடு - புத்தியோடே, பகவந்நிவேதந பஞ்சமஹாயஜ்ஞாதி ஸாத்விகான்ன நிஷேவணப்யாயித மநஸ்தத்வோந்மிஷிதஸத்வையாய் க்ஷுத்பிபாஸாதிவ்யாஸங்கராஹித்யேந பகவச்சரணாரவிந்தயோஸ்ஸ்வரஸையான புத்தி யோடே என்றபடி. இதுக்கு பரவுவ ரென்கிற க்ரியையோடே யந்வயம். இத்தால் மந்த்ரஜபகாலத்திலே மௌந மந்த்ரார்த்த சிந்தநாதிநியம மாவச்யகமென்று ஸூசிதம். உளம் - அந்தஃகரணமானது, அமுது - அம்ருதத்தை, உண - புஜிக்கும்படி, ஹ்ருதயம் அம்ருதாஸ்வாதநத்தை யநுபவிக்கும்படி யென்றபடி. இதுக்கு பூர்வவதந்வயம். மறைகளில் - வேதங்களிலே, மறையெனும் - வேதங்கள் என்று சொல்லும்படியான, வேதங்களுக்கும் வேதங்களென்னலாம்படியான வென்றபடி. உரை - உக்திகளுடைய, நிரை - பங்தியை, “மந்த்ராணாம்பரமோமந்த்ரோகுஹ்யாநாம்குஹ்யமுத்தமம் । பவித்ரம்சபவித்ராணாம் மூலமந்த்ரஸ்ஸநாதநஃ” இத்யாதிகள்படியே லௌகிகவாக்யங்களில் காட்டில் வேதங்க ளப்யர்ஹிதங்களானாப்போலே வேதங்கள் தன்னிலும் அப்யர்ஹிதங்களான ஶ்ரீமதஷ்டாக்ஷர த்வாதசாக்ஷர ஷடக்ஷராதிபகவன் மந்த்ரங்களை யென்று தாத்பர்யம். பரவுவர் - ஜபிப்பார்கள். (௭)

மூ.—துதிகளுமறிவருசுருதியினிறுதியின்
இதயமிதெனமுனிவிறையவருறைகளும்
மதுரமனுதவியமறைகளுமடியவர்
விதிவகைபரவுவர்மிகவுளமெழவே (௮)

இப்படி மந்த்ரரூபமான ஸ்வாத்த்யாயத்தை யருளிச்செய்தினிமேல் “வேதாநத்யாபயேச்சிஷ்யாந் தாரயேச்சவிசாரயேத் । அவேக்ஷேதசசாஸ்த்ராணி தர்மாதீநித்விஜோத்தமஃ। வைதிகாதீம்ச்சநிகமாந் வேதாங்காநிவிசேஷதஃ” என்ற வ்யாஸோத்யுக்தரீத்யா ஸ்தோத்ரேதிஹாஸ புராணாதிவேதாங்க பராங்குசபரகாலாதி திவ்யஸூக்திபரிசீலநாத்மகவேதோபப்ரும்ஹணரூபமாணஸ்வாத்யாயத்தையருளிச்செய்கிறார்.

அடியவர் - பகவத்தாஸர்கள், உளம் - அந்தஃக்ரணமானது, மிக - அத்யந்தம், எழ - எழும்படி, தங்களுடையசித்தம் பாவியோகத்திலே அத்யந்தப்ரோத்ஸாஹித

மாம்படி, என்றபடி. இதுக்குவாக்யாந்தக்ரியையோடே யந்வயம். துதிகளும்-ஸ்துதிகளையும், பகவந்நாமஸஹஸ்ர மந்த்ரராஜபத ஸ்தோத்ராதிகளையும், அறிவரு - துர்ஜ்ஞேயங்களான, சுருதியினிறுதியின் - வேதாந்தங்களுடைய, இதயம்-ஹ்ருதயம், இது-இத்தம்பூதம், என - என்றுகாட்டு மவைகளான, இது உரைகளுக்கு விசேஷணம். முனியிறையவர் - முநீச்வரர்களுடைய, உரைகளும் - வசநங்களையும், விதித ஸகல வேத தத்தார்த்தராய் ஸ்வயோகமஹிம ஸாக்ஷாத்க்ருத பராவரதத்வ யாதாத்ம்யரான பராசரபாராசர்ய சுகசௌநகாதி ப்ரஹ்மர்ஷிகளுடைய பரிசிதகஹநகம்பீர விவித வேதாந்ததாத்பர்ய நிர்த்தாரகங்களான வாக்யங்களையு மென்றபடி. இங்கு வேதங்களுக்கு அறிவருஎன்று துர்போதத்வோக்தியாலே "இதிஹாஸபுராணாப்யாம் வேதம் ஸமுபப்ரும்ஹயேத்|பிபேத்யல்பசுருதாத்வேதோ மாமயம்ப்ரதரிஷ்யதி" என்று வாஸிஷ்டஸ்ம்ருத்யுக்தரீத்யா வச்யோபப்ரும்ஹணத்வம்வ்யஞ்ஜிதம், பாராசராத்யுபப்ரும்ஹயிதாக்களை முனியிறையவரென்று வேதார்த்தமனனசீலரான முநிகளை ச்ரேஷ்டத்வேந நிர்தேசிக்கையாலே"வேதார்த்தோயஸ்ஸ்வயம்ஜ்ஞாதஃ தத்ராஜ்ஞாநம்பவேதபி| மஹர்ஷிபிஸ் துநிர்ணீதே காசங்காஸ்யாந்மஹாத்மநாம்" என்று வ்யாஸஸ்ம்ருத் யுக்தரீத்யா தத்க்ருதோபப்ருஹ்மணங்களுக்கு ஆஸ்திகஜநைரதிவிஸ்ரம்பணீயத்வம் த்யோதிதம். இப்படி ஸம்ஸ்க்ருதாத்ம கோபப்ரும்ஹணத்தை யருளிச்செய் தினியவைகளில் காட்டில் வேதாந்தரஹஸ்ய வைசத்யாதிசய ஹேதுக்களாய் "தொண்டர்க் கமுதுண்ணச்சொன்மாலைகள் சொன்னேன்" னென்கிறபடியே ஸத்யஃ பரமாத்மநி சித்தரஞ்ஜகதமங்களான த்ரமிடபாஷாத் மகோபப்ரும்ஹணங்களை யருளிச்செய்கிறார். மதுர-அத்யந்தபோக்யங்களான, மன் - த்ருடமாக, உதவிய - உபகரிக்குமவைகளான, மறைகளும் - வேதங்களையும், மதுரதரங்களாய் காடவிஸ்ரம்பஜநகங்களான ஸ்ரீபராங்குசாதி ஸூரி திவ்யப்ரபந்தங்களையு மென்றபடி. இவைகளுக்கு வேதத்வோக்தியாலே ஆதரணீயதமத்வம்ஸூசிதம். விதிவகை-சாஸ்த்ரப்ரகாரத்தாலே, பரவுவர் - பரிசீலியா நிற்பார்கள். தேசகாலபாத்ராதி விவேசன பூர்வகமாக அத்யயநாத்யாபந ஸம்வாதாதிகளை நடத்துவர்களென்றபடி. (௯)

மூ.—அறிவிலர்தலைமிசையயனடியெழுதிய
பொறிவகையெழுவதோர் பொறிநலமுகவலர்
உறுவதுமுடையது மிதுவெனமருவதும்
நறுமலர்மகள்பதி நலமுறுநினைவே. (௰)

இப்படி ஸ்வாத்யாயத்தை நிரூபித்து இனிமேல் "ஈத்ருசஃபரமாத்மாயம் ப்ரத்யகாத்மாததேத்ருசஃ| தத்ஸம்பந்தாநுஸந்தாந மிதியோகஃப்ரகீர்த்திதஃ" என்று சாண்டில்யபகவானாலே ஸங்க்ரஹேண ப்ரதர்சிதமாய் "யாமுநார்யஸுதாம்போதி மவகாஹ்ய யதாமதி | ஆதாயபக்தியோகாக்யம் ரத்நம்ஸந்தர்சயாம்யஹம்" என்று தொடங்கி ஸ்ரீவைகுண்டகத்யத்திலே பகவத்பாஷ்யகாரராலே விலக்ஷணபலபர்வாநுஸந்தாந விசிஷ்டத்வேநோபதிஷ்டமாய் அநந்யப்ரயோஜநகர்தவ்யமாய் விசித்ரமான பகவத்யோகத்தை இரண்டுபாட்டுக்களாலே யருளிச்செய்யக்கோலி முற்பட விஷயாநுபவாநந்த விரக்தருக்கு பகவச்சிந்தநாம்ருதாஸ்வாதநமே லப்தலப்ஸ்யமான ஸகலபுருஷார்த்தமு மென்கிறார்.

நறுமலர்மகள்-ஸுகந்தி புஷ்பவாஸிநியான பிராட்டியுடைய, பதி-நாயனுடைய, தத்விஷயகமான வென்றபடி. இது நினைவுக்கு விசேஷணம். இங்கு யோகவிஷயீபூதமான வஸ்துவுக்கு பரிமள ஸம்பந்தோக்தியாலே போக்யதாதிசயோ த்யோதிதஃ. இத்தால் பகவத்விஷயபோகத்துக்கு ஆநந்தரூபத்வம் பலிதம். ததேவாஹ. நலம்-ஆநந்தத்தை, உற - அடையாநிற்கிற, ஆநந்தரூபதயா பரிணமியாநிற்கிற வென்றபடி. நினைவு - ஸ்ம்ருதியானது, அவிச்சின்நஸ்ம்ருதி ஸந்தாநரூபமான யோகமானதென்றபடி. இதுக்கு வாக்யாந்தத்திலே யந்வயம். அறிவிலர் - ஜ்ஞாநசூன்யருடைய, தலைமிசை - சிரஸ்ஸிலே, அயன் - அஜனாலே, அடி - பூர்வகாலத்திலே, எழுதிய - லிகிதமான, பொறிவகை - லிபிப்ரகாரத்தாலே, எழுவது - உத்பந்நமாகிற, ஓர் - அத்விதீயமான, விவேகவிகலர்க்கு நிரதிசயத்வேந தோற்றினதான வென்றபடி. பொறிநலம் - விஷயாநந்தத்தை, பொறி - சப்தாதிவிஷயம். உகவிலர் - ஸ்ம்மதியாதவர்கள். தாங்கள் ப்ராக் விவேகசூன்யதாதசையிலே அநுஷ்டித கர்மங்களுக்கு அநுகுணமான பகவத்ஸங்கல்பத்தாலே துர்வாரமாக வருகிற சப்தாதி விஷயாஸ்வாதநத்தில் ஸம்ப்ரதி விவேகதசையிலே ஸங்க மற்றிருக்கிற வநந்யப்ரயோஜநாதிகாரிக ளென்ற

படி. உறுவதும் - ஸம்ப்ரதிலபிக்குமதும், உடையதும் - பூர்வலப்தமும், இதுவென - இதமேவவென்னும்படி, மருவதும் - பரிணமிக்குமதும், ப்ராகுக்தமான பகவத்யோகமே பூர்வாதிகாரிகளுக்கு அபூர்வலாபலப்தார்த்த பரிபாலனாத்மகயோகக்ஷேம ரூபபுருஷார்த்தத்வேந பர்யவஸிக்குமென்று பிண்டிதார்த்தம். (௯)

மூ—பெருகியநலநிலை பெருமையின்மிகுமையில்
உருகியநிலைமன முயர்முகிழெழுமுடல்
சொரிகியவிழிதிகழ் சுடர்மதிபுகுமிறை
கருகியவுருதிகழ் கரிகிரியரியே. (௧௦)

இப்படி யோகத்தை புருஷார்த்த ரூபமாக வருளிச்செய்து இனிமேல் அந்த யோகத்துக்கு அந்தர் விலய நிப்ருத ஸ்வாந்த த்ரவீபாவபுளகோத்கம நேத்ரவிகாராதி கார்யமுகேந நிரதிசயாநந்த ரூபத்வத்தை த்ருடீகரியாநின்றுகொண்டு ஷாட்குண்ய பரிகர்மிதராய் கல்யாணதமஹ்ருதயங்கம விக்ரஹவிசிஷ்டராய் கரிகிரிசிகரவாஸ்தவ்யரான பேரருளாளரே தாத்ருசயோக விஷயத்வேநோபநிஷத் பகவச்சாஸ்த்ராதி ப்ரஸித்தனான பரமாத்மாவென்று ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

கருகிய - ச்யாமளமான, உரு - ரூபத்தாலே, திகழ் - விளங்காநிற்கிற, இத்தால் யோகவிஷயனான வீச்வரனுக்கு விலக்ஷண விக்ரஹவத்தயா சுபாச்ரயத்வஞ்சொன்னபடி. கரிகிரி - ஹஸ்திகிரி நிவாஸியான, அரி - ஹரியானவர், இதுக்கு வாக்யாந்தத்திலே யந்வயம். இங்கு பேரருளாளரை ஹரதீதிஹரி: என்று வ்யுத்பன்னமான ஹரிசப்தத்தாலே நிர்தேசித்தது "ஹரிர்ஹரதிபாபாநி துஷ்டசித்தைரபிஸ்ம்ருத: | அநிச்சயாபிஸம்ஸ்ப்ருஷ்டோ தஹத்யேவஹிபாவக: ‖ யதாக்நிருத்தத ஶிக: கக்ஷந்தஹதி ஸாநில: | ததாசித்தஸ்திதோவிஷ்ணுர்யோகிநாம் ஸர்வகில்பிஷம்" என்கிறபடியே ஸ்வவிஷயாத்மயோக பரிபந்தி ஸகல துரித விரத் யபிப்ராயகம். பெருகிய - அவிச்சின்னமாக ப்ரவஹியாநிற்கிற, நலநிலை - ஆநந்தாவஸ்தையுடைய, பெருமையில் - அபிவ்ருத்தியிலே, மிகு - அதிகமாகாநிற்கிற, மயல் - வ்யாமோஹத்தாலேயும், அவிச்சின்னதாரையான பகவத்யோகாநந்த ப்ரவாஹமானது சரத்பர்வணேந்துமயூக சும்பிதபாராவாரந்யாயத்தாலே ஆத்மநிதாரயிது மசக்யமாகையாலே "விநிஶ்சேதும்ஶக்யோ நஸ்வகமிதிவாதஸ்வகமிதிவாப்ரமோஹோநித்ராவாகிமுவிஷவிஸர்ப: கிமுமதத:| தவஸ்பர்ஶேஸ்பர்ஶே மமஹிபரிமூடேந்த்ரிய கணோவிகாரஶ்சைதந்யம் ப்ரமயதிஸமுந்மீலயதிச" என்கிறபடியே தத்கால ஸமுந்மிஷிதையான துர்நிரூபாநந்தமூர்ச்சையாலேயு மென்றுகருத்து. கருகிய நிலை - த்ரவீபாவாவஸ்தமான, மநம் - மநஸ்ஸாலேயும், உயர் - உந்நதமான, முகுள் - முகுளங்கள், எழும் - அங்குரிக்கும்படியான, உடல் - சரீரத்தாலும், புளகமுகுளோத்துங்கமான வங்கத்தாலேயு மென்றபடி. சொரிகிய - ஸுகபாரவச்யத்தாலே யந்தர்லீயமாநங்களான, விழி - நயநகோளங்களாலேயும், திகழ் - ப்ரகாசியாநிற்கிற, பூர்வோக்தமூர்ச்சா சித்தத்ரவீபாவ புளக நேத்ர விகாரங்களாலே நிரதிசயாநந்தத்வேந பரைரநு மீயமாநமான வென்றபடி. சுடர் - உஜ்வலமான, விசதமான வென்றபடி. மதி - யோகரூபஜ்ஞாநத்தை, புகும் - ப்ரகாசிப்பிக்குமவனான, இறை - ஈச்வரன், பூர்வோக்த திவ்யமங்கள விக்ரஹவிசிஷ்டனான பேரருளாளரே, நிருபம ஸமாதி விஷயபூதனான வீச்வரனென்று பிண்டிதோர்த்த:. திவ்யாத்ம ஸ்வரூபத்தில் காட்டில் திவ்யமங்கள விக்ரஹம் ஹ்ருதயங்கமமானாப்போலேயும் தத்ராதி பரவ்யூஹாதிகளில் காட்டிலும் அர்ச்சாவதாரம் ஹ்ருதயங்கமமானாப்போலேயும் அதுதன்னிலும் அஸ்ப்ருஷ்ட சிந்தாபதாபிரூப்யசாலி விக்ரஹரான பேரருளாளரே ஸமாதிஸுகாஸ்வாத லாலஸரான வதிகாரிகளுக்கு ஹ்ருதயங்கமமென்று திருவுள்ளம். (௧௦)

இத்தம்......தாஸ: | ஶ்ரீவைஷ்ணவதிநசர்யா
வ்யாக்யா வ்யதிக்ஷத் வைஷ்ணவப்ரீதயே ‖
இதிஶ்ரீ......வீரராகவவிதூஷ:
க்ருதிஷு ஶ்ரீவைஷ்ணவதிநசர்யா
வ்யாக்யாவ்யாக்யாநம் ஸம்பூர்ணம்.

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

ஶ்ரீவைஷ்ணவதினசரி வ்யாக்யானம் முற்றிற்று.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

திருச்சின்னமாலை வ்யாக்யானம்.

ஸர்வஸ்ய ஸ்ருஷ்டி......நகா । ஸ்ரீவிஷ்ணுர்விஶ்வகாரண
நாதோ விவ்ருணோதி வைஷ்ணவ வீர்யதே॥ (க)
ஸநாதிவ்யப்ராந்த......வதிநோ॥ (உ)
மாயாதமோ:......மஹதாதிஸம்ஜ்ஞா:॥ (௩)

மூ.—ஈருலகைப் படைக்கவெண்ணியிருந்தார்வந்தா ரெழின்மலரோன் றன்னையன்றேயீன்றூர்வந்தார், மாருதமண்ணீராகு மாயோன்வந்தார் வானேடெரிதானுகு மறையோர்வந்தார், சூரியர்கடம்முடனே துலங்குவார்வந்தார் சுரர்களுக்கன்றமுதருள்சுந்தரனூர்வந்தார், வாரிதிரூழ் வையகம் வாழ்வித்தார்வந்தார் வண்டையுடன்வரந்தருவார் வந்தார் தாமே. (க)

ஸத்ய வ்ரதக்ஷேத்ரத்திலே ஸ்ரீஹஸ்திகிரி மூர்த்தாவிலே யாவிர்பவித்தருளின பேரருளாளருடைய வகிலபுவநாதிராஜ்ய சிஹ்நபூதமாய் உம்மஸ்தகாநந்தபர ப்ரேரித நித்யஸூரி ப்ருந்த முகாத்மா தமான திவ்யகாஹளத்தினுடைய ஸகலோபநிஷ தம்ருதார்த்தஸாரபூத ரஹஸ்யத்ரயப்ரதிபாத்ய ஸாரதர கல்யாணகுணஸளரபகர்ப்பையான ஸ்ருதிஸுபக சீதள பாவந மங்கள விசத கம்பீர நிநாத ப்ரவாஹத்தை திருச்சின்னமாலை யென்று பேரையுடைய வொரு ப்ரபந்தமாக ஸங்க்ரஹிக்கத்துடங்கி முற்பட வாறுபாட்டுக்களாலே மூலமந்த்ரார்த்தத்தைப் ப்ரதிபாதிக்ககோலி யவைத்தில் ப்ரதமம் மூன்றுபாட்டுக்களாலே ப்ரணவார்த்தத்தைவெளியிடநினைத்து தத்ராபி முதல்பாட்டாலே அகாரார்த்தமான காரணத்வத்தினுடைய ப்ரகாரவிசேஷங்களையும் ரக்ஷகத்வத்தினுடைய சில வவாந்தரவிசேஷங்களையும் ஸங்க்ரஹித்தருளுகிறூர்.

இங்கு "ஸமஸ்த சப்த மூலத்வா தகாரஸ்ய ஸ்வபாவத: । ஸமஸ்த வாச்ய மூலத்வாத் ப்ரஹ்மணோபி ஸ்வபாவத:॥ வாச்யவாசகஸம்பந்தஸ் தயோரர்த்தாத்ப்ரதீயதே" என்கிறபடியே ஸமஸ்தவாசக ஜாதப்ரக்ருதியான அகாரத்தாலேவாச்யனான ஈச்வரனுக்கு ஒளசித்யாத்ஸமஸ்தவாச்ய ஜாதகாரணத்வம் பலிதமென்று அபிஸந்தித்து, "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத், ஏகமேவாத்விதீயம் ப்ரஹ்ம, ததாத்மாநம் ஸ்வயமகுருத" இத்யாதி ப்ரமாண ஸஹஸ்ரங்களாலே நிமித்தத்வோபாதாநத்வபேதேந த்விவிதமாக ப்ரதிபன்னமான ப்ரஹ்மஜகத்காரணத்வத்திலே, முற்பட "ததைக்ஷத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி. ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி" இத்யாதி ஶ்ருதசதஸித்த நாராயணோ ந ப்ரஹ்மா நேஶாந ஏகாகீ ந ரமேத ஸ்வயம்ப்ரஜாயேய நிமித்தத்வத்தை யருளிச்செய்கிறூர். ஈர் - சிதசித்ரூபேண த்விவிதமான, உலகை - ப்ரபஞ்சத்தை, படைக்க-ஸ்ருஷ்டிக்க, எண்ணி-ஸங்கல்பித்து, இருந்தார் - ஸ்திதரானவர், இருந்தாரென்கிறபதம் "ஆஸீத்" என்கிற ஸ்ருதபதத்துக்கு வ்யாக்யாநம். வந்தார் - சதுர்முகமகோத்தரவேதியிலே வந்தாவிர்பவித்தார். இப்படி மேலுமுசிதமாகக் கண்டுகொள்வது. இப்படி அத்வாரகமான ஸமஷ்டிஸ்ருஷ்டி நிமித்தத்வத்தை யருளிச்செய்து, இனிமேல் "தேவுமெப்பொருளும் படைக்கப் பூவில் நான் முகனைப் படைத்த" என்கிறபடியே சதுர்முகத்வாரகமான ஸமஷ்டிஸ்ருஷ்டி நிமித்தத்வத்தை யருளிச்செய்கிறூர். எழில் - உஜ்வலனை, அதிசயிதஜ்ஞானைச்வர்யாதி குணகனனவென்றபடி. மலரோன்றன்னை-புஷ்பஸம்பவனை ப்ரஹ்மாவை, அன்று-வ்யஷ்டிஸ்ருஷ்ட்யுபக்ரம காலத்திலே தானே, ஈன்றூர் - ஜநிப்பித்தவர், வந்தார் - ஸ்பஷ்டம். இங்கு அன்று என்கிறபதத்தாலே "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" என்கிற ஸ்ருதியில் பூர்வ மென்கிற பதம் வ்யாக்யாதம். இப்படி நிமித்தத்வப்ரஸங்காத் ஸ்ருஷ்ட்யுபாதாநத்வத்துக்கு

முன்பே வ்யஷ்டிநிமித்வத்தை யருளிச்செய்து இனிமேல் க்ரமப்ராப்தமாய் ஸமஷ்டி ஸாதாரணமான உபாதாநத்வத்தை யருளிச்செய்கிறார். மாருதம்-மாருதமும், மண் - பூமியும், நீர் - ஜலமும், ஆகும் - இவைகளாய் பரிணமிக்குமவனை, மாயோன் - மாயையையுடையவர், வானொடு-ஆகாசத்தோடே, எரிதான்-தேஜஸ்ஸ தானுக, ஆகும்-பரிணமிக்குமவரான, மறையோர் - ச்ருதிப்ரதிபாத்யன், ஆகாசாதிபூதபஞ்சகமாய் பரிணமித்தவரென்றபடி. இது மற்றுமுள்ள மஹதஹங்கா ரேந்த்ரியாதி பரிணாமத்துக்கு முபலக்ஷணம். இங்கு பூதபஞ்சகங்களையும் வ்யுத்க்ரமேண நிர்தேசித்தது "பரஸ்ய ப்ரஹ்மண உத்தரோத்தரஸ்ருஷ்டிம் ப்ரதி தத்ததவஸ்தவஸ்துசரீரகஸ்யைவ காரணத்வம்; கிந்து ஸாக்ஷாதேவ" என்று "தேஜோऽதஸ்ததா ஹ்யாஹ" என்கிற வதிகரணத்திலேநிர்ணீதமானவர்த்தத்தை த்யோதிப்பிக்கைக்காக. ஸர்வேச்வரன்தானே மஹதஹங்காராதிரூபேண பரிணமிக்கிறானாகில் தஸ்யநிர்விகாரத்வ ப்ரதிபாதக ச்ருத்யர்த்தம் வ்யாகோபியாதோ வென்று சங்கியாமைக்காக விங்குமாயோனென்று நிர்தேசிக்கிறது. மாயையையுடையவன் மாயோன். மாயையாவது "மாயாந்து ப்ரக்ருதிம் வித்யாத்" என்கிற ச்ருதியின்படியே விசித்ர ஸர்க்கரியான ப்ரக்ருதி. யதாஹ "மாயாசரீரேணைவ ப்ரஹ்மணா ஜகதுபாதாநத்வேந சரீரபூதாநாம் விகாராணாம் சரீரிணி ந ப்ரஸங்க:" என்று ஸமாதாநம் ஸூசிதம். ப்ரஹ்ம ஸ்வரூபம் க்ருத்ஸ்நமும் ப்ரபஞ்சரூபேண பரிணமிக்குமாகில் கார்யாநுபயுக்தாம்சாஸ்தாநம் நஸ்யாத்; ஏகதேசம் பரிணமிக்குமாகில் தஸ்ய நிரவகாசத்வ ச்ருதிவிரோதஸ்ஸ்யாத் என்று "க்ருத்ஸ்நப்ரஸக்திர் நிரவயவத்வசப்தகோபோ வா" என்கிறஸூத்ரத்திலே உத்காடித சோத்ய ஸமாதாநார்த்தம் மறையோனென்று நிர்தேசிக்கிறது. "ச்ருதேஸ்து சப்தமூலத்வாத்" என்கிற ஸூத்ரத்தின்படியே ச்ருதி ப்ரதிபாதிதார்த்தத்திலே பாஹ்யதர்க்கங்கள் நிரவகாசங்களென்று த்வநிதம். பூர்வார்த்தத்தாலே அகாரத்தினுடைய ரூடிசக்த்யாலப்தமான காரணத்வத்தை விசதீகரித்து இனிமேல் "அவ ரக்ஷண கதி காந்தி ப்ரீதி த்ருப்த்யவகம ப்ரவேச ச்ரவண ஸ்வாம்யர்த்த யாசந க்ரியேச்சா தீப்த்யவாப்த்யாலிங்கந ஹிம்ஸாதாந பாக வ்ருத்திஷு" என்றேகோநவிம்சத்யர்த்தமாக தாதுபாடபடிதமானாலும் உபயோகவிசேஷத்தாலும் ப்ரஸித்தி ப்ராசுர்யத்தாலும் ப்ரக்ருதே ரக்ஷணார்த்தகத்வேந விவக்ஷிதமான வவதாதுவில் கர்த்தரிவிச்ப்ரத்யயாந்தமாக வாதல் டப்ரத்யயாந்தமாகவாதல் வ்யுத்பந்நமான வகாரத்தினுடைய யோகார்த்தமான ரக்ஷகத்வத்தை ப்ரபஞ்சிக்கிறார். சூரியர்கள் தம்முடனே - நித்தியஸூரிகளோடே கூட, துலங்குவார்-நிர்மலமாக ப்ரகாசிக்குமவர், இத்தால் நித்யவிபூதிரக்ஷகத்வத்தை யருளிச்செய்தபடி. இங்கீச்வரதீப்திக்கு நித்யஸூரிஸாஹித்ய ப்ரதர்சனம் "ஜகத்வ்யாபாரவர்ஜ" மென்கிறபடியே ஜகத்வ்யாபாரோதாஸீநரான நித்தியஸூரிகளோடொக்க "கடகமகுடகர்ணிகாதிபேதை: கநகமபேதமபீஷ்யதே யதைகம்। ஸுரபசுமநுஜாதிகல்பநாபி ர்ஹரிரகிலாபிருதீர்யதே ததைக:" என்கிறபடியே பரிணமிக்கிற விச்வரனும் நிர்விகாரனுமாய் ப்ரகாசிக்குமென்று த்ருஷ்டாந்தப்ரதர்சனார்த்தம். ஸஹோக்த்யலங்காரத்தாலே ஸாத்ருச்யம் த்வநிக்குமென்று ஆலங்காரிக ஸம்ப்ரதாய ஸித்தமிறே. இப்படி ஹேதுநிரபேக்ஷமான நித்யவிபூதி ரக்ஷகத்வத்தை யருளிச்செய்து இனிமேல் யத்கிஞ்சித்வ்யாஜஸாபேக்ஷமான லீலாவிபூதி ரக்ஷகத்வத்தை யருளிச்செய்கிறார். சுரர்களுக்கு - தேவர்களுக்கு, அன்று - அம்ருத மதநகாலத்திலே, அமுது - அம்ருதத்தை, அருள் - ப்ரஸாதித்தவரான, சுந்தரனார் - ஸுந்தரர்-இங்கு ஈச்வரனுக்கு ஸுந்தரத்வநிர்த்தேசத்தாலே யம்ருத ப்ரதாநகாலத்திலே தைத்யவ்யாமோஹநார்த்தமான மாயாமத்தகாசிநீவேஷம் ப்ரத்யபிஜ்ஞாபித மாகையாலே களமேயவஸாபசாயநீத்யா ஸம்ச்ரித ரக்ஷணநாந்தரீயகமான துஷ்க்ருத்விநாசநமும் ஸூசிதம். இப்படி லீலாவிபூதியி லூர்த்வலோகரக்ஷகத்வத்தை யருளிச்செய் தினிமேல் அதோலோகரக்ஷகத்வத்தை யருளிச்செய்கிறார். வாரிதி - வாரிதிகளாலே, சூழ்-பரிவ்ருதமான, வையகம் - லோகத்தை, வாழ்வித்தார்-வாழும்படிபண்ணினவர், வாழ்வித்தபடியை ஸ்புடீகரிக்கிறார். வண்மையுடன் - ப்ர

ஸாதத்தோடே கூட, வரம்-அபிலஷிதவரங்களை, தருவார் - கொடுக்குமவர், "ஸ்ரியா தேய" மென்கிறபடியே முகவிகாஸத்தோடே கூட வரப்ரதானம் பண்ணுமவ ரென்றபடி. தாமேவந்தார் - ஸ்வயமேவவந்தார். (௧)

மூ.—அருமறையையூழிதனிற்காத்தார்வந்தா ரதுதன்னையன்றயனுக்களித் தார்வந்தார், தருமவழியழியாமற்காப்பார்வந்தார் தாமரையாளுடனி லங்குந்தாதைவந்தார், திருவுரையாய்த்தாம்பொருளாய்நிற்பார்வந்தார் திருவருளாற்செழுங்கலைகடந்தார்வந்தார், மருவலர்க்குமயக்குரைக் குமாயோன்வந்தார் வானேறவழிதந்தார்வந்தார்தாமே. (௨)

இப்படி ஐஹிக பலப்ரதத்வரூப ரக்ஷகத்வத்தை யருளிச்செய்து, யத்வாஃவ்யாஜ ஸாபேக்ஷமான லீலாவிபூதிரக்ஷகத்வத்தை யருளிச்செய் தினிமேல் ஸ்ருதிஸ்ம்ருதி ஸதாசாரப்ரவர்த்தநமுகேந ஆமுஷ்மிக பலப்ரதத்வரூப ரக்ஷகத்வத்தை அருளிச் செய்கிறார்.

அரு - அசக்யங்களான, கேநசிதப்யவிஸ்மரணேந தாரயிதுமசக்யங்களான வென் றபடி. மறையை - வேதங்களை, ஊழிதனில் - ப்ரளயகாலத்திலே, காத்தார் - ரக்ஷித் தார், அதுதன்னை - அந்தவேதத்தை, அன்று - ஸ்ருஷ்டிகாலத்திலே, அயனுக்கு-அஜ னுக்கு, அளித்தார் - க்ருபையாலே யுபதேசித்தவர், இத்தால் "யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச ப்ரஹிணோதி தஸ்மை" என்கிற ஸ்ருத்யுக்தார்த்தஸ்ஸித்தஃ. தருமவழி - தர்மமார்கம், அழியாமல் - தவறாமல், தப்பாதபடி, காப்பார் - தம்மாலே ப்ரவர்த்தி தங்களான வேதங்களுடைய வ்வர்த்தங்களை நரநாராயணாத்யவதாரங்களாலே யநு ஷ்டித்துகாட்டி ரக்ஷித்தவ ரென்றபடி. தாமரையாளுடன்-தாமரஸபுஷ்பஸம்பவை யான பிராட்டியோடேகூட, இலங்கும் - விளங்குமவரான, தாதை - பிதாவானவர், இங்கு பிதாவென்று - பித்ருத்வநிர்தேசத்தாலே யுத்பாதகத்வ ரக்ஷகத்வங்கள் ஸூ சிதங்கள். இத்தால் பிராட்டிக்கு மாத்ருத்வமும் ஸித்தம். ஜகத்ஸ்ருஷ்டி ரக்ஷணங்க ளிலே பிராட்டியோடே கூட கர்த்ருபூதரென்றபடி. இப்படி யெம்பெருமான் பிரா ட்டியோடேகூடவே ஜகத்ஸ்ருஷ்டிரக்ஷணகர்த்தாவாகில் ப்ராயேண வேதாந்தங்க ளில் ஸ்ருஷ்ட்யாதிப்ரகரணங்களிலே இவனைமாத்திரஞ் சொல்லியொழிவானே னென்ன அருளிச்செய்கிறார். திரு - ஸ்ரீயானவள், உரையாய் - வாக்காய், தாம் - ஸ்வயம், பொருளாய் - அர்த்தமாய், நிற்பார் - நிற்குமவர், "அர்த்தோவிஷ்ணு ரியம்வாணீ" யென்றுபக்ரமித்து ஸ்ரீபராசரப்ரஹ்மர்ஷி ப்ரபஞ்சித்தபடியே ஸர்வாவஸ்தையிலும் பிராட்டியோடே யப்ருதக்ஸித்தரானவரென்றபடி. "ஔத்பத்திகஸ்து ஶப்தஸ்யார்த் தேநஸம்பந்தஃ" என்கிற வதிகரணத்திலே ஸ்வாபாவிகஸம்பந்தசாலித்வேந நிர்ணீத வாகர்த்தத்ருஷ்டாந்தப்ரதர்சன மநயோரபி ததாவிதஸம்பந்தப்ரதர்சநார்த்தம். இத் தால் "ததந்தர்பாவாத் த்வாம் நப்ருதகபிதத்தேச்ருதிரபி" என்கிறபடியே ஸந்நியோக சிஷ்டந்யாயேந வெம்பெருமானைச் சொன்னவிடமெல்லாம் பிராட்டியையும் சொல் விற்றாமென்று பலிக்கையாலே ப்ராகுக்த சங்காவகாசமில்லையென்று ஸூசிதம். திரு வருளால் - ஸ்ரீமத்க்ருபையாலே, செழும் - அபிவ்ருத்தங்களான, கலைகள் - வித்யை களை, தந்தார் - கொடுத்தவர், அத்யந்த தரவபோத வேதாந்த பரிஜ்ஞாநார்த்தம் மந் வாதி மஹர்ஷி முகத்தாலே தர்மசாஸ்த்ராத் யுபப்ரும்ஹணங்களையும் சிக்ஷாத்யங்கங் களையும் ப்ரவர்த்திப்பித்தவரென்றபடி. இப்படி கருணையாலே ஸச்சாஸ்த்ராசார ப்ர வர்த்தநம் பண்ணுகிற வீச்வரன் ஆபாஸசாஸ்த்ராசார ப்ரவர்த்தநம் பண்ணுவானே னென்ன வருளிச்செய்கிறார். மருவிலர்க்கு - ப்ரேமசூன்யர்க்கு, மயக்கு-வ்யாமோஹந சாஸ்த்ரத்தை, உரைக்கும் - உபதேசிக்குமவரான, மாயோன்- மாயாவி, கபடியென்ற படி. ஆஸுரப்ரக்ருதி வ்யாமோஹநமும் தைவப்ரக்ருதி ஸம்ரக்ஷணோபயுக்தமாகை யாலே விரோதமில்லை யென்றுகருத்து. கீழ்பாட்டில் லாஸ்ரிதவிரோதிகளுக்கு தாத்கா லிக நிரஸநஞ்சொல்லிற்று: இப்பாட்டில் வ்யாமோஹசாஸத்ர ப்ரவர்த்தநத்வாரேண ஆமுஷ்மிகநிரஸநஞ் சொல்லிற்றாகையாலே புநருக்தியில்லை. வான் - பரமவ்யோமத் தை, ஏற - ஆரோஹிக்க, வழி - மார்கத்தை, தந்தார் - கொடுத்தவர், ஸாக்ஷாந்மோ க்ஷோபாயங்களான ந்யாஸோபாஸநங்களை சிஷ்பாதிக்கு மவரென்றபடி. (௨)

மூ.—அனைத்துலகுங்காக்குமருளாளர்வந்தா ரனைத்துக்குமதிபதியாய் நிற் பார்வந்தார், தினைத்தனையுந்திருமகளைவிடாதார்வந்தார் தேசொத் தார்மிக்காருமிலாதார்வந்தார், நினைக்கநமக்கின்னறிவுதந்தார்வந்தார் நிலைநின்றவுயிர்தோன்ற நினைந்தார்வந்தார், எனக்கிவர்காணிவர்க் கென்னவினியார்வந்தா ரெழுத்தொன்றிற்றிகழநின்றார் வந்தார்தாமே.()

இப்படி யகாரார்த்தங்களான காரணத்வரக்ஷகத்வங்களை ப்ரபஞ்சித்து இனிமேல் விசகலிதமாக ப்ரதர்சிதமான ரக்ஷகத்வத்தை யுபஸம்ஹரியா நின்றுகொண்டு லுப்தசதுர்த்யுகார மகாரார்த்தங்களை யநுக்ரமிக்கிறார்.

அனைத்துலகும் - ஸர்வலோகங்களையும், காக்கும் - ரக்ஷிக்குமவரான, அருளாளர் - பேரருளாளர், இத்தால் பூர்வப்ரபஞ்சித ரக்ஷகத்வத்தை யுபஸம்ஹரித்தபடி. அனைத்துக்கும் - ஸமஸ்தவஸ்துக்களுக்கும், அதிபதியாய் - ஸ்வாமியாய், நிற்பார்-நிற்குமவர், இத்தால் "ஸ்வாமித்வ" இத்யாதி வரதஸ்வாமித்வயா லுப்தையான சதுர்த்தியுடைய வர்த்தத்தை வெளியிட்டபடி. தினைத்தனையும் - க்ஷணமும்,திருமகளை-பிராட்டியை, விடாதார்-விட்டுப்பிரியாதவர்,"உஹயாபிஷா நஞ்செங்க்ஷம்ஶேஷிக்ஷ" என்கிறபடியே பிராட்டியோடு வ்யாஸக்தைக சேஷித்வாஶ்ரயபூதரானவ ரென்றபடி. இத்தாலுகாரம் லக்ஷ்மீவாசக மென்கிறகடாக்ஷஸித்த யோஜனையை ப்ரகாசிப்பித்தபடி. தேசு-தேஜஸ்ஸாலே, ஒத்தார் - ஸத்ருசரும், மிக்காரும் - அதிகரும், இலாதார் - இல்லாதவர், ஸமாதிக தரித்ரரானவரென்றபடி. இத்தாலுகார மவதாரணபரமென்கிற யோஜனையில் பலிதமான வ்யயோகவ்யவச்சேதத்தை யருளிச்செய்தபடி. இனிமேல் ஜீவவாசகமான மகாரத்தை "மன அவபோதநே" என்கிற தாதுவிலே டப்ரத்யயாந்தமாக வ்யுத்பந்நமாக்கி யத்தாலே ஜ்ஞான குணகத்வம் பலிதமென்று காட்டிக்கொண்டு அதுக்கு மீச்வரனே நிர்வாஹகனென்கிறார். நினைக்க - தம்மை சிந்திக்க, நமக்கு-ஸ்வதாஸரான நமக்கு, இன்-போக்யமான, ஆநந்தரூபமான வென்றபடி. அறிவு - ஜ்ஞாநத்தை, நமக்கு அறிவு என்கிற வ்யதிரேக நிர்தேசத்தாலே ஜ்ஞாநஜ்ஞாநிநோர்பேதோதர்ஶிதஃ. தந்தார் – கொடுத்தவர், இனிமேல் மகாரத்தை "மஸபரிமாணே, மநஜ்ஞாநே" என்கிற தாதுக்களிலே நிஷ்பந்நமாக்கி யத்தாலே யணுத்வநித்யத்வங்களும் ஞானஸ்வரூபத்வமும் பலிதமென்று காட்டிக்கொண்டு அவைகளு மீச்வரஸங்கல் பாதீநங்களென்கிறார். நிலைநின்ற – ஸ்திரதரமான, நித்யமான வென்றபடி. இது பரிமாணஸாமான்யவாசியான மஸதாதுவை ப்ரமாணுந்தராநுகுண்யத்தாலே யணுத்வத்திலே விச்ரமிப்பித்து அத்தாலே நித்யத்வம் பலிதமென்று நினைந்துச் சொன்னபடி. உயிர் - ஜீவன், தோன்ற-ப்ரகாசிக்கும்படி, ஜ்ஞாநாந்தரநிரபேக்ஷமாக ஸ்வயமேவ ப்ரகாசிக்கும்படி, இது"மந ஜ்ஞாநே" என்கிறதாதுவிலே லப்தமாய் ஸ்வயம்ப்ரகாசத்வாபரபர்யாயமான ஜ்ஞாந ஸ்வரூபத்தைக் கணிசித்துச் சொன்னபடி. நினைந்தார் – ஸங்கல்பித்தவர், இப்படி ப்ரணவத்தில் பதார்த்தங்களை யருளிச்செய் தினிமேல் பிண்டிதமான வாக்யார்த்தத்தை விஶேஷணவிசேஷ்ய பாவபேதேந த்விவிதமாக வருளிச்செய்கிறார், எனக்கு-பூர்வோக்தகுணவிசிஷ்டனான வெனக்கு, ப்ரணவத்தில் த்ரிதீயாக்ஷரத்தை லுப்தபூர்வோத்தரபாகமான வஸ்மச்சப்தமத்யமாக்ஷரமாக்கி யோஜிக்குமவர்பக்ஷத்தைக் கணிசித்துச் சொன்னபடி. இத்தால் அஹம்புத்தி கோசரத்வ ரூப ப்ரத்யக்த்வம் பலிதம். இவர் – இந்தகாரணத்வரக்ஷகத்வாதி விசிஷ்டர், ஸ்வாமீதிசேஷஃ, எனக்கு இவர் ஸ்வாமியென்று ப்ரணவத்தில் பிண்டிதார்த்தமென்றுகருத்து. இது ஜீவவிசேஷ்யக வாக்யார்த்தபோத ஜநகமான ப்ரணவத்திலே ஸமானவித்தி வேத்யமான வர்த்தத்தை யருளிச்செய்தபடி. இனி யதாஶ்ருத சாப்தபுத்தி விஷயவாக்யார்த்தத்தையருளிச்செய்கிறார். நான் - பூர்வோக்தனான நான், இவர்க்கு - பூர்வோக்தனான விவருக்கு, தாஸனிதிசேஷஃ. நானிவர்க்கு தாஸபூதனென்று ப்ரணவத்துக்கு யதாஶ்ருதவாயயார்த்த மென்றுகருத்து. என்ன – இப்படி சொல்லுகைக்கு, இனியார் – போக்ய்பூதர், "மமத்வமஸிஸ்வாமீதவாஸ்மிதாஸஃ" என்று ருசிபூர்வகமாக தாஸ்யாப்யுபகமம் பண்ணும்படி நிரதிசயபோக்யபூதரென்றபடி, இத்தால்சேதநருக்கு பகவத்தாஸ்யம்

ஸ்வரூபமாத்ர ப்ராப்தமன்றிக்கே குணக்ருதமாயுமிருக்கு மென்று தர்சிதம். இப்படி ப்ரணவத்தை பதத்ரயமாக யோஜிக்கும் பக்ஷத்தில் பதார்த்தவாக்யார்த்தங்களிருக்கும்படியைக் காட்டி யினிமேல்ப்ரணவத்தை "அவதேஷிவொவஸ்" என்கிற வௌணதிகஸூத்ரத்தின்படியே டிலோபசாலி மங்வ ப்ரத்யயாந்தமான வவதிதாதுவிலே நிஷ்பன்னமாக்கி யத்தை ப்ரஹ்மவாசககண்டாவ்யயஸ்வரூபமாக யோஜிக்கும்பக்ஷத்தை யருளிச்செய்துகொண்டு ப்ரணவார்த்தத்தை யுபஸம்ஹரிக்கிறார். எழுத்தோன்றில் - ஒரெழுத்திலே, ப்ரணவமான வோரக்ஷரத்திலே யென்றபடி. இங்கெழுத்தாவது அச்சசல் ஸமுதாயாத்மகமான வக்ஷரம். திகழநின்றார் - ப்ரகாசித்தவர், அகண்ட ப்ரணவப்ரதிபாத்யரென்றபடி. இத்தால் பூர்வோக்த ஸகலயோஜநோபஸம்ஹாரமும் அர்த்தஸித்தம். (௩)

மூ.—நாம்வணங்கத்தாமிணங்காநிற்பார்வந்தார் நம்மையடைக்கலங்கொள்ளுநாதர்வந்தார், நாமெமக்காம்வழக்கெல்லாமறுப்பார் வந்தார் நமக்கிதுவென்றுரையாமல் வைத்தார்வந்தார், சேமமெண்ணியெம்மையன்பர்க்கடைத்தார்வந்தார் செழுந்தகவாற்றிண்சரணமீசர்வந்தார், தாமனைத்துந்தீவினையைத் தவிர்ப்பார்வந்தார் தமக்கேயாயெமைக்கொள்வார்வந்தார்தாமே. (௪)

இப்படி மூன்றுபாட்டுக்களாலே ப்ரணவார்த்தத்தை ப்ரகாசிப்பித்து இனிமேல் நமச்சப்தத்துக்கு அஹிர்புத்ந்ய ஸம்ஹிதோக்த ஸ்தூலஸூக்ஷ்மபர யோஜனைகளையும் சதுர்த்யந்த நாராயண பத ஸமபிவ்யாஹார லப்தார்த்தங்களையும் ப்ரகாசிப்பித்துக் கொண்டு நமச்சப்தத்தை விவரிக்கிறார்.

நாம் - நீசரானநாம், வணங்க - ஸேவிக்க, தாம் - ஸர்வஸ்மாத் பரனானதாம், இணங்காநிற்பார் - இணங்கிநிற்பவர், வணங்காநிற்பாரென்கிறபாடமும் ஸங்கதமே. "ப்ரஹ்வீபவதிநீசேஹிபரோனைச்யம் விலோகயந்" என்கிறபடியே ப்ரஹ்வீபவித்த சேதநவிஷயத்திலே ஸ்வய மபி ப்ரஹ்வீபவிக்கு மென்றபடி. இத்தால் நமச்சப்தத்தை "ணமப்ரஹ்வத்வேசப்தேச" என்கிற தாதுவிலே நிஷ்பந்நமாக்கி அஜ்யாயஸ்த்வேந நந்தாவான சேஷபூதனுக்கு ஜ்யாயஸ்த்வேந நந்தவ்யனான பரமசேஷி விஷயத்திலே ஸ்வரூப ப்ராப்த வ்ருத்தி பரமாக வ்யாக்யானம் பண்ணினபடி. இப்படி நமச்சப்தத்துக்கு அஹிர்புத்ந்ய ப்ரதர்சித யோஜநா த்ரயத்திலே சப்தாநுசாஸநாநுகுணையான ஸ்தூலயோஜனையிலே ப்ரதமபக்ஷத்தை யருளிச்செய் தினிமேலதிலே தானே த்விதீயபக்ஷத்தை யருளிச்செய்கிறார். நம்மை - அகிஞ்சனரான நம்மை, பஹுவசநத்தா லநுபந்திப்ரிக்ரஹஃ. அடைக்கலம்-ரக்ஷ்யவஸ்துவாக, கொள்ளும் - அங்கீகரிக்குமவரான, நாதர் - ரக்ஷகர், ப்ரார்த்தநா பூர்வகமாக ந்யஸ்தபரரான நம்மை ஸ்வீகரிக்குமவரென்றபடி. இங்கு "நாத்ருநாத்ருயாச்ஞோபதாபைச்வர்யாசீஷ்ஷு" என்கிறபடியே யாச்ஞார்த்தகமான தாதுவிலே நிஷ்பந்நமான நாத சப்தத்தை ப்ரயோகித்தது யாச்ஞோபலக்ஷித ஸாங்க பரந்யாஸ த்யோதநார்த்தம். இத்தால் நமஸ்ஸை யொரு அவ்யயபதமாக்கி பஹுப்ரயோகாநுஸாரேண ஸமர்ப்பண பரமாக விவரித்தபடி. இப்படி நமச் சப்தத்தை ஸ்தூலயோஜனையில் ஏகபதமாக விவரித்து இனி மேல் பதத்வயமாக விபஜித்துக்கொண்டு நிருகத் யநுகுணையான ஸூக்ஷ்மயோஜனையை யருளிச்செய்கிறார். யாம்-நாம், எமக்கு - நமக்கு, ஆம்-சேஷபூதராம் படியான, வழக்கெல்லாம்-வ்யவஹாரங்களை யெல்லாம், அறுப்பார் - சேதிக்குமவர், "அஹம்மே" என்கிற ஸ்வாதந்த்ர்ய துர்புத்தி வ்யவஹாரங்களை நிவர்த்திக்குமவ ரென்றபடி. இத்தால் நமச்சப்தத்தை பதத்வயமாக்கி ஷஷ்ட்யந்த மகார ஸமபிவ்யாஹ்ருத நஞ் பதத்தோடே ப்ரணவ த்ரிதீயாக்ஷரத்தை யநுஷங்கித்து அத்தாலே பலிதையான வஹங்கார நிவ்ருத்தியை வெளியிட்டபடி. இது-இந்த வஸ்து, நமக்கு-அஸ்மத் சேஷபூதம், என்றுரையாமல் - என்று சொல்லாதபடி, வைத்தார் - நம்மை ப்ரதிஷ்டிதராக்கினவர், "மமேதம்" என்கிற துர்புத்தி வ்யவஹாரங்களை நிவர்த்திப்பித்தவ ரென்றபடி. இத்தால் பூர்வோக்த நமஃ பதத்தோடே கிஞ்சித் என்றொருபதத்தை யத்யாஹரித்து அத்தாலே ஸித்தையான மமகாரநிவ்ருத்தியை ப்ரகாசிப்பித்த

படி. இப்படி ப்ரணவ நமச்சப்த ஸாரங்களான பகவச்சேஷத்வபாரதந்த்ர்யங்களாலே பலிதமான பாகவதசேஷத்வத்தை யருளிச்செய்கிறார். சேமம்-க்ஷேமத்தை, எண்ணி-சிந்தித்து, நம்முடைய ஸ்வரூபத்துக்கு உசிதமான உஜ்ஜீவநத்தையாலோசித்தென்ற படி, எம்மை – நம்மை, அன்பர்க்கு - ப்ரேமசாலிகளுக்கு, பகவத்ப்ரேமசாலிகளான பாகவதர்களுக் கென்றபடி. அடைத்தார்-சேஷமாக்கினவர், இப்படி ஸூக்ஷ்ம யோஜனையை யருளிச்செய் தினிமேல் நமச்சப்தத்தை பதத்ரயமாக விபஜித்துக்கொண்டு ரஹஸ்யசாஸ்த்ரங்களிற் சொல்லுகிற வக்ஷ்ரநிகண்டு ப்ரக்ரியாநுகுணையான பரயோஜனையை யருளிச்செய்கிறார். செழும் - அபிவ்ருத்தையான, தகவால்-க்ருபையாலே, திண் - த்ருடமான, ப்ரதாநமான வென்றபடி. சரணும் - சரணமாகுமவரான, ஈசன் - ஈச்வரன், நிருபாதிக க்ருபையாலே ப்ரதாநோபாயபூதரான பரமேசரென்ற படி. இத்தால் "பந்தாநகாரஉத்திஷ்டோ மஃ ப்ரதானஉதீர்யதே । விஸர்கஃ பரமேசஸ்து தத்ரார்த்தோயம் நிருச்யதே॥ அநாதிஃ பரமேசோயச்சக்திமாந் புருஷோத்தமஃ। ஸ்வப்ராப்தயே ப்ரதாநோயம் பந்தாகமநநாமவாந்" என்கிறபடியே பதத்ரயாத்மகமான நமச்சப்தத்தாலே பலிதமான வாக்யார்த்தத்தை ஸ்புடீகரித்தபடி. இப்படி நமச்சப்தத்துக்கு அஹிர்புத்ந்ய ஸம்ஹிதோக்த யோஜநாத்ரயத்தையும் காட்டி யினிமேல் சதுர்த்யந்தநாராயணபத ஸமபிவ்யாஹார லப்தார்த்தங்களை யருளிச்செய்கிறார். தாம்-அனைத்தும் தீவினையை - தீவினையனைத்தையுமென்று மாறி அந்வயிப்பது. க்ரூரகர்மங்களெல்லாவற்றையும், தவிர்ப்பார் - நிவர்த்திப்பிக்குமவர், இதுநமச்சப்தத்தை சதுர்த்தீதாத்பர்யவிஷய பூதேஷ்டப்ராப்தி சேஷபூதாநிஷ்டநிவ்ருத்தி பரமாக யோஜிக்குமவர் பக்ஷத்தை யருளிச்செய்தபடி. தமக்கேயாய் - ஸ்வார்த்தமாகவே, எமை-நம்மை, கொள்வார்-அங்கீகரிக்குமவர், "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்கிறபடியே பரிபூர்ணப்ரஹ்மாநுபவ தத்பரீவாஹ பூத கைங்கர்யாதிகளிலே சுகாதி போக ப்ரத ஸார்வபௌம ந்யாயேந ஸம்பாவித ஸ்வாதந்த்ர்யாதி நிவ்ருத்தி பரமாக யோஜிக்கு மவர் பக்ஷத்தை யருளிச்செய்தபடி. (௪)

மூ—உலகெல்லா முள்ளே வைத்துமிழ்ந்தார் வந்தா ருலகுடம்பாய்த் தா
முயிராய் நின்றார் வந்தார், அலைகடலா யாநந்த மடைந்தார் வந்தா
ளவில்லாவருளாழிப் பெருமாள்வந்தார், திலகமெனுந் திருமேனிச்
செல்வர் வந்தார் செழுங்குணங்க ளிருமூன்று முடையார் வந்தார்,
இலகு சுடர் மூழு நலமா மினியார் வந்தார் எல்லார்க்குங் கதியானார்
வந்தார் தாமே. (௫)

இப்படி நமச்சப்தார்த்தத்தை விவரித் தினிமேல் நாராயண சப்தார்த்தத்தை யருளிச்செய்கிறார்.

உலகெல்லாம் - லோகங்களையெல்லாம், உள்ளே - வயிற்றிலே, ஸ்வரூபைகதேசத்திலே என்றபடி. வைத்து - நிவேசித்து, உமிழ்ந்தார் - உத்கிரணம் பண்ணினவர், இத்தால் "நாராணுமயநம்" என்கிற தத்புருஷ ஸமாஸத்தாலே லப்தையான பஹிர்வ்யாப்தியை ப்ரகாசிப்பித்தபடி. இங்கு "உமிழ்ந்தார்" என்கிற காரணத்வோக்தியாலே "நராஜ்ஜாதாநி தத்வாநி நாராணி" என்கிற நிர்வசநத்தின்படி நாரசப்தம் ஜாதார்த்தகணிநிப்ரத்யயாந்தமாக தர்சிதமாய்த்து. உலகு - லோகங்கள், உடம்பாய் - சரீரமாய், தாம் - அந்தஃ ப்ரவிச்ய நியந்தாவானதாம், உயிராய்-ஆத்மாவாய், நின்றார் - ப்ரதிஷ்டிதரானவர், இத்தால் "நாராஃ அயநம்யஸ்ய" என்கிற பஹுவ்ரீஹி ஸமாஸத்தாலே லப்தையான வந்தர்வ்யாப்தியைச் சொன்னபடி. இனிமேல் நாரசப்தத்தை "நரஸம்பந்திநோநாராஃ" என்கிற நிர்வசநாநுகுணமாக "தஸ்யேத" மென்கிறபடியே ஸம்பந்தஸாமாந்யார்த்தகாண்ப்ரத்யயாந்தமாக்கி யத்தாலே பர்யவஸிதமான விபூதித்வயவிக்ரஹகுணயோகத்தை யருளிச்செய்கிறார். அலை - தரங்க சஞ்சல மான, கடலாய்-ஸமுத்ரமாய், இங்கே யலைகடல் சப்தத்தாலே லீலாவிபூதியை நிகரணம் பண்ணினபடி. ஆநந்தம் - ஆநந்தத்தை, அடைந்தார் - அடைந்திருக்குமவர், பேதரங்க புத்புதா வர்த்தகர்புரித ஸமுத்ரம் போலே விவித கர்ம விஷமித தேவ திர்யங் மனுஷ்ய ஸ்தாவர தந்த்ர லீலாவிபூதி விசிஷ்டராய் லீலாரஸாநுபவம் பண்ணு மவரெ

ன்றபடி. அளவில்லா - பரிச்சேதரஹிதமான, அருளாழி - க்ருபாஸாகரமான, பெருமான் - ஸ்பஷ்டம், இங்கு பரிச்சேத ரஹித க்ருபாஸாகரத்வோக்தியாலே நிருபாதிக நித்ய க்ருபா ப்லோபதாந விஷய நித்ய விபூதி யோகோ த்வநித:. பரிச்சேத ரஹிதத்வோக்தியாலே ஸ்வரூப நிரூபக குண பஞ்சகாந்தர்கதமான வநந்தத்வமும் சொல்லிற்றாய்த்து. திலகமெனும் - திலகமென்றுசொல்லும்படியான, திருமேனி - திவ்யமங்கள விக்ரஹத்தையுடைய, பூர்வோக்த விபூதித்வயா ங்காரபூதபரவ்யூஹ விபவாதி விக்ரஹங்களை யுடையவரான வென்றபடி. செல்வர் - ஐச்வர்யத்தையுடையவர், தேவதிர்யங் மநுஷ்யாதி ஸஜாதீயமாகவிக்ரஹ பரிக்ரஹம் பண்ணச்செய்தேயும் ஸர்வதைவா ஜஹத்ஸஹஜைச்வர்யரான வென்றபடி. செழும் - அபிவ்ருத்தங்களான, அநவதிகாதிசயங்களான வென்றபடி. குணங்களிருமூன்றும் - இருமூன்று குணங்களென்று அந்வயம். இருமூன்று - ஷட்ஸங்க்யாகங்களான, குணங்களும் உடையார் - "ஜ்ஞாந சக்தி பலைச்வர்ய வீர்ய தேஜாம் ஸ்யசேஷத: । பகவச்சப்தவாச்யாநி விநா ஹேய குணாதிபி:" என்கிறபடியே ஸமஸ்த ஹேய வைதேசிக ஷாட்குண்ய பரிபூர்ணரென்றபடி. இத்தால் ஜ்ஞான சக்த்யாதிகளான நிரூபிதஸ்வரூப விசேஷணங்களையும் ஸ்வரூப நிரூபகாந்தர்கதமான வமலத்வத்தையும் சொன்னபடி. இலகு - ப்ரகாசியாநிர்க்கிற, ஸததைகரூபமான வென்றபடி. சுடர்முழுநல மென்கிறவிடத்திலே முழுசப்தம் காகாக்ஷிந்யாயேந பூர்வோத்தரான்வயி. முழுசுடர் - கார்த்ஸ்ந்யேநஜ்யோதிஸ்ஸாக, கார்த்ஸ்ந்யெநஜ்ஞாநஸ்வரூபராக, முழுநலம் - கார்த்ஸ்ந்யேநாநந்தஸ்வரூபமாக, ஆம் - ஆகாநிற்கிற, இனியார் - போக்யபூதர், இத்தால் ஸ்வரூப நிரூபகங்களான ஸத்யத்வ ஜ்ஞாநத்வாநந்தத்வங்களைச சொன்னபடி. நாரசப்தத்தை பகவத்வாசக நாரசப்த விகாரமாகவும் அயநசப்தத்தை யதிகரண ல்யுடந்தமாகவும் யோஜித்தினிமேல் நாரசப்தத்தை "நாரஸ்த்விதிஸர்வபும்ஸாம் ஸமூஹ: பரிகீர்த்தித:" என்கிற நிர்வசநாநுகுணமாக ஜீவவாசக நரசப்தத்திலே தஸ்யஸமூஹ: என்கிற வர்த்தத்திலே நிஷ்பந்நமாக்கி அயந சப்தத்தை "க்ருத்யல்யுடோ பஹுளம்" மென்கிறபடியே ல்யுடந்தமாக்கி ததர்த்தத்தை யருளிச்செய்கிறார். எல்லார்க்கும் - ஸகலஜீவனுக்கும், கதியானார் - கதியானவர், ப்ராப்யபூத ரென்றபடி. (௫)

மூ.—அருளாலே விலங்கிரண்டுமழிப்பார்வந்தா ரஞ்சிறையைக் கழித்தருளு மன்பர் வந்தார், மருள்வாராவகைநம்மைக் காப்பார்வந்தார் வானேற வழிநடத்தி வைத்தார்வந்தார், தெருளாருந் தெளிவிசும்பு தருவார்வந்தார் திண்கழற்கீழ்வாழ்ச்சிநமக்கருள்வார்வந்தார், பொருளானவடிமைநம்மைக் கொள்வார்வந்தார் பிரியாமற்காத்தளிப்பார் வந்தார்தாமே. (௬)

இப்படி நாராயணவென்கிற ப்ராதிபாதிகத்தினுடைய வர்த்தத்தை யருளிச்செய் தினிமேல் சதுர்த்த்யந்த தாத்பர்ய விஷயமான நித்யசேஷவ்ருத்தியையும் ததாக்ஷிப்த கர்ம பந்த நிவ்ருத்யாதி நாந்தரீயக பலபர்வங்களையு மருளிச்செய்கிறார்.

அருளாலே - க்ருபையாலே, விலங்கிரண்டும் - இரண்டுவிலங்குகளையும், புண்ய பாபாத்மக ச்ருங்கலா த்வயத்தையு மென்றபடி. அழிப்பார் - நிவர்த்திப்பிக்குமவர், அம் - அழகியதான, சிறையை - காராக்ருஹத்தை, அவிவேகதசையிலே போக்யத்வேந ப்ரதிபாஸமாநமான சரீர காரா க்ருஹத்தை யென்றபடி. கழித்தருளும் - விடுவித்தருளுமவரான, அன்பர் - ப்ரேமசாலி, வாத்ஸல்ய ஸாகரபூதரென்றபடி. மருள் - அஜ்ஞாநம், வாராவகை - வாராதபடி, அந்திமஸ்மரணம் அந்யவிஷய மாகாதபடி யென்றபடி. யத்வா: லோகாந்தர ப்ராபக சூஷ்த்ரகாடியிலே யவிவேகத்தாலே ப்ரவேசியாதபடி யென்றபடி. நம்மை - காஷ்டபாஷாண ஸந்நிபரான நம்மை, காப்பார் - ரக்ஷிக்குமவர், வான் - ஸ்ரீவைகுண்டத்தை, ஏற - ஆரோஹிக்க, வழி - ப்ரஹ்மநாடி ப்ரவேசம் முதலாகவர்ச்சிராதி மார்க்கத்தை, நடத்திவைத்தார் - நடத்திவைக்க சத்தரானவர், தெருள் - ஜ்ஞாநத்தாலே, ஆர் - பூர்ணமான, அவித்யா தத்கார்ய கந்த ரஹிதமான வென்றபடி. தெளி - நிர்மலமான, ரஜஸ்தமஸ்ஸுக்கள் கலசாதஸத்வத்துக்கு ஆச்ரயமான வென்றபடி. யத்வா: ஸ்வயம் ப்ரகாசமான வென்றபடி. விசும்பு - ஆகா

சத்தை, பரமபதத்தை யென்றபடி. தருவார்-கொடுக்குமவர், திண் - த்ருடங்களான, ஆஶ்ரிதரை யொருபடியாலும் கைவிடாதவை யான வென்றபடி. கழல் - திருவடிக ளுடைய, கீழ் - அதச் சாயையிலே, வாழ்ச்சி - வாழ்வை, நமக்கு - தாஸபூதரான நம க்கு, அருள்வார் - க்ருபை செய்யுமவர், பொருளான - புருஷார்த்தமான, அடிமை - தாஸ்யவ்ருத்திக்காக, நம்மை - நிருபாதிகதாஸபூதரான நம்மை, கொள்வார் - ஸ்வீக ரிக்கு மவர், பிரியாமல் - விச்லேஷியாதபடி, புநராவ்ருத்தி யில்லாதபடி யென்றபடி. காத்து - ப்ரதிபாலித்து, அளிப்பார் - ரக்ஷிக்குமவர். (௬)

மூ.—அகலகில்லாத் திருமகளா ரன்பர் வந்தா ரடியிரண்டுமாருகத்தந்தார் வந்தார், புகலில்லார்புகலாகும் புனிதர்வந்தார் பொன்னுலகிற்றிருவு டனே புகழ்வார்வந்தார், அகிலமெல்லா மாநந்தமானார்வந்தார் அடி யிணைக்கீழ் வைத்தடிமைக் கொள்வார்வந்தார், பகனடுவே யிரவழை க்கவல்லார்வந்தார் பகலொன்றாயிரவழித்தார் வந்தார்தாமே. (௭)

இப்படி மூலமந்த்ரார்த்தத்தை யருளிச்செய் தினிமேல் த்வயார்த்தத்தை யரு ளிச்செய்கிறார்.

அகலகில்லா - க்ஷணமபி விச்லேஷிது மசக்தையான, திருமகளார் - பிராட்டி யையுடையவரான, "அகலகில்லேனிறையுமென் றலர்மேல்மங்கையுறைமார்பா" வென்கிறபடியே பெரியபிராட்டியோடு நித்யஸம்ச்லிஷ்டரான வென்றபடி. இத் தால் த்வயத்தில் பூர்வகண்டத்திலே ஶ்ரீசப்த மதுப் ப்ரத்யயங்கள் வ்யாக்யாதங்கள். அன்பர் - ப்ரேமயுக்தர், வாத்ஸல்ய யுக்தரென்றபடி. இது மற்று முபாயத்வோப யுக்தங்களான காருண்ய மார்தவார்ஜவாதிகளுக்கு முபலக்ஷணம். இத்தால் பூர்வகண் டத்தில் நாராயணசப்தம் "நிகரில்புகழா" யென்கிறபடியே உபாயத்வோபயுக்த வாத் ஸல்யாதி குணபரமென்று தர்சிதமாய்த்து. அடியிரண்டும் - சரணத்வயத்தையும், ஆருக - உபாயமாக, தந்தார் - கொடுத்தவர், இத்தால் த்விவசநாந்த சரணசப்தமும் சரணசப்தமும் வ்யாக்யாதமாய்த்து, புகலில்லார்-உபாயசூந்யருக்கு, அகிஞ்சநருக்கெ ன்றபடி. புகலாகும் - உபாயமானவரான, புனிதர்-பாவநர், விசுத்த ரென்றபடி. ஸக் ருச் சரணவரணம்பண்ணினல் இனியேதேனு மொரு ப்ரபலோபாதியாலே கை விடுவரோவென்கிறசங்காலேசத்துக்கும்கூடவனுஸ்பத பூத ரென்றுஹ்ருதிஸ்திதோர் த்தঃ. இங்கு புனிதரென்கிறவித்தாலே ஸோபஸர்கமாய் மஹாவிச்வாஸ வாசகமான தாதுவும் "புகலில்லா" ரென்கிறவித்தா லாகிஞ்சின்யபர்யவஸிதமான வுத்தமனும் விவ்ருதமாய்த்து. பொன்னுலகில் - ஸ்ப்ருஹணீயலோகத்திலே, சுத்தஸத்வஜ்ஞாநா நந்தமய ஶ்ரீவைகுண்டலோகத்திலே யென்றபடி. திருவுடனே - பிராட்டியோடே கூட, புகழ்வார் - ச்லாக்யராயிருப்பவர், விபந்யுக்களான நித்யஸூரிகளாலே ஸந்தத ஸேவ்யமாந ரென்றபடி. இத்தாலுத்தரகண்டத்தில் ஶ்ரீமச்சப்தம் வ்யாக்யாதமாய் த்து. அகிலம் - அகிலவஸ்துக்களோடும், ஸ்வரூப குண விபூதிக ளெல்லாத்தோடு மென்றபடி. எல்லாம் - ஸர்வ ப்ரகாரத்தாலும், ஆநந்தமானர்-ஆநந்தமானவர், போ க்ய பூதரென்றபடி. முக்த தசையி லுபயவிபூதிவிசிஷ்ட ப்ரஹ்மானுபவம் பண்ணும் போது பந்த தசையில் ப்ரதிகூலங்களாகவும் உதாஸீநங்களாகவும் அல்பாநுகூல ங்களாகவும் தோற்றினவை யெல்லாம் கர்மோபாதிநிவ்ருத்தியாலே ஸர்வப்ரகாரநிர திசயாநுகூல்யசாலிகளாகத்தோற்று மென்று திருவுள்ளம். அகில மென்கிறபதம் ப்ர காரிகார்த்ஸ்ந்யபரமாய்எல்லாமென்கிறபதம் ப்ரகாரகாத்ஸ்ந்யபரமாகையாலே கார்த் ஸ்ந்யவாசக பதத்வயத்துக்கு புநருக்தியில்லை. இத்தாலுத்தரகண்டத்தில் நாராயணசப் தம் ப்ராப்யதோபயுக்த குணவிக்ரஹ விபூதிவைசிஷ்ட்யபரமென்று தர்சிதமாய்த்து. அடியிணைக்கீழ் - சரணயுகளத்தின்கீழ், வைத்து-நிவேசிப்பித்து, நம்மை-இதிசேஷঃ. அடிமை - தாஸ்யார்த்தமாக, கொள்வார் - அங்கீகரிக்குமவர் இத்தா லுத்தரகண்டத் திலே சதுர்த்தீதாத்பர்யம் ஸ்புடீக்ருதமாய்த்து. பகல்நடுவே - திவஸமத்யத்திலே, இரவு-ராத்திரியை, அழைக்கவல்லார்-ஆஹ்வாநம்பண்ண சக்தரானவர், "[illegible]

[illegible]" [illegible]

ஹாநமெதவ்யஸிஸம். இங்குமப்படியே சேதநருக்கு ஸ்வாபாவிகமான அபஹதபாப்மத்வாதி குணாஷ்டகத்தை "வாராஹிஸ்யாநாத்தாதிரோஹிதம்" என்கிறபடியே ஸ்வஸங்கல்பத்தாலே யாச்சாதித்து ஸம்ஸார காளராத்ரியை ப்ரவர்த்திப்பிக்க வல்லரென்று ஹ்ருதயம், இத்தால் நமச்சப்தத்தை பதத்வயமாக்கி யதிலே விதிமுக்தமாய் ஷஷ்டியுமான நம: என்கிறபதத்திலே விவக்ஷிதமான விரோதிஸ்வரூபத்தை ஸ்பஷ்டீகரித்தபடி. பகலொன்றாய் - ஒருபகலாய், இரவு - ராத்ரியை, அழித்தார் - நசிப்பித்தவர், "திவாஹைவாஸ்யபவதி" என்கிறபடியே காலதத்வமுள்ளதனையும் ஒருபகலாம்படியான முக்தி தசையிலே ஸம்ஸார காளராத்ரியை நசிப்பித்தவரென்றபடி. இத்தால் நஞ்பதசப்த ஸமபிவ்யாஹ்ருத ஷஷ்ட்யந்த பத தாத்பர்ய விஷயமான வநிஷ்டநிவ்ருத்தி தர்சிதம். (௭)

மூ. தருமன்விடத்தாந்தூதுபோனார்வந்தார் தரணிபொறுத்திண்பாரந்த
விர்த்தார்வந்தார், அருமறையின்பொருளனைத்தும் விரித்தார்வந்தார்
அஞ்சினநீயென்னையடை யென்றார்வந்தார், தருமமெல்லாந்தாமாகிநிற்
பார்வந்தார் தாமேநம்வினையனைத்துந்தவிர்ப்பார்வந்தார், பரமெனது
நீபுலம்பேலென்பார்வந்தார பார்த்தனுக்குத்தேரூர்ந்தார்வந்தார்தாமே.

இப்படி த்வயார்த்தத்தை யருளிச்செய்து இனிமேல் சரமச்லோகார்த்தத்தை ஸ்ரீமத்கீதாவதார ப்ரதர்சன புரஸ்ஸரமாக வருளிச்செய்கிறார்.

தருமன் - தர்மபுத்ரன், விட - ப்ரேஷிக்க, தாம்-ஸ்வயம், தூதுபோனார் - தௌத்யார்த்தம் போனவர், ப்ரேஷ்யதமனான தர்மபுத்ரனாலே ப்ரேஷிதராய் ஸர்வப்ரேரகரான தாமே பாதசாரத்தோடே தௌத்யம் பண்ணினவர், ஆஶ்ரித பரதந்த்ரரென்றபடி. இத்தால் சாஸ்த்ராவதரணோபயுக்தமான பாரதஸமர ப்ரவர்த்தநஞ் சொன்னபடி. தரணி - தரணியிலே, பொறு, ஸோடுமசக்யமான, திண் - த்ருடமான, பாரம் - பாரத்தை, தவிர்ப்பார் - நிவர்த்திப்பிக்குமவர், மஹாஸமரப்ரவர்த்தனத்தாலே பூபாராவதரணத்திலே க்ருதஸங்கல்பரென்றபடி. இத்தாலாசார்யபந்துவதாதி பீதனான வர்ஜுநனுடைய வஸ்தாந ஸ்நேஹ காருண்ய தர்மாதர்மாதி வ்யாகுலதா ப்ரயுக்தமாய் சாஸ்த்ராவதார நிதாந பூதமான "சிஷ்யஸ்தேஹம்சாதிமாம்த்வாம்ப்ரபந்நம்" என்கிற ப்ரபதநம் ஸூசிதம். அரு-துரவபோதங்களான, மறையின் - வேதங்களுடைய, பொருளனைத்தும் - ஸகலார்த்தங்களையும், விரித்தார் - விஸ்தரித்தவர், விதித்தாரென்றுபாடமான போது-உபதேசித்தவரென்று பொருள். ஸர்வஶ்ருதி ஸாரபூதபரம நிஶ்ரேயஸஸாதந கர்மஜ்ஞாந பக்தி யோகங்களை யர்ஜுநனொருவனை யுத்தேசித்துபதேசித்தவரென்றபடி, இத்தால் ஸ்ரீமத் கீதாசாஸ்த்ரத்தை கார்தஸ்ந்யேந அநுக்ரஹித்தபடி. இதுதானுபாயாந்தர தௌஷ்கர்யாநுஸந்தாந ஜநித சோகரூப சரமச்லோகாவதார நிதாநத்யோதகார்த்தம். அஞ்சின - பீதனான, நீ - சேஷத்வேநரக்ஷ்யனான நீ, என்னை - ஸ்வத: ப்ராப்த ரக்ஷகத்வனான வென்னை, அடை - சரணமாகப் பற்று, என்றார் - இப்படி சொன்னவர், இத்தால் "ஸர்வதர்மாந்பரித்யஜ்ய மாமேகம் சரணம்வ்ரஜ" என்கிற வாக்யார்த்தம் தர்சிதமாய்த்து. தாம் - பரமகாருணிகரான தாமே, தருமமெல்லாமாகி - தர்மங்கள் எல்லாமாய், நிற்பார் - நிற்குமவர், தத்தத்தர்மாநுஷ்டாநாசக்தருக்கு தத்தத்தர்மஸ்தாநத்திலே தாமே நின்று தர்மபலன்களைக் கொடுக்குமவரென்றபடி. இத்தா லேகசப்தத்திற்குத் தாத்பர்யம் ஸ்புடீக்ருதம். தாம் - பரமகாருணிகரான தாமே, நம் - நம்முடைய, வினையனைத்தும் - ஸகலகர்மங்களையும், தவிர்ப்பார் - விடுவிக்குமவர், இத்தால் "ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்கிறவாக்யார்த்த மனுபாஷிதமாய்த்து. பரம் - த்வத்ரக்ஷணபரம், எனது - ஸ்வதஸ்ஸர்வரக்ஷணப்ராப்தனான வென்னது, நீ - பாதந்த்ரதயா ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாதவனான நீ, புலம்பேல் - ப்ரலபிக்கவேண்டாம், ஸ்வரக்ஷணார்த்தம் நீ சோகிக்கவேண்டா வென்றபடி. என்பார் - என்று சொன்னவர், இத்தால் "மாசுச:" என்கிற சரமவாக்யத்தை யநுபாஷித்தபடி. பார்த்தனுக்கு - அர்ஜுனனுக்கு, தேர் - ரதத்தை, ஊர்ந்தார் - ஊரும்படி பண்ணினவர், நடத்தினவரென்றபடி. இந்த பார்த்தப்ரேரகத்வோக்தியாலே யிப்படியே யிவர் ஸ்வாஶ்ரிதருக்கு ஐஹிகாமுஷ்மிக ரக்ஷணம்பண்ணுவதென்று ஸூசிதம். (௮)

மூ. வஞ்சனைசெய்பூதனையைமாய்த்தார்வந்தார் மல்லர்மதகரிமாளமலிந்தார்வந்தார், கஞ்சனைப்போர்க்கடுஞ்சினத்தாற்கடிந்தார்வந்தார் கண்ணுதன்முன்வாணன்றோள்கழித்தார்வந்தார், வெஞ்சொறரவீடுகொடுத்துகந்தார்வந்தார் விலக்கில்லாவழிநடத்தவிரைந்தார்வந்தார், பஞ்சவரைப்பலவகையுங்காத்தார்வந்தார் பாஞ்சாலிகுழல்முடித்தார் வந்தார்தாமே. (௯)

இப்படி சரமச்லோகத்தினுடைய சப்தார்த்தத்தை யருளிச்செய் தினிமேல் சரமச்லோகவக்தாவான கண்ணனுக் கதிசய த்யோதகார்த்தம் ததீய திவ்ய சேஷ்டித ப்ரதிபாதக வ்யாஜேந சரமச்லோகத்தில் மாமஹ மென்கிற பதங்களிலே விவக்ஷிதங்களான கல்யாணகுணங்களை யருளிச்செய்கிறார்.

வஞ்சனை - வஞ்சனையை, செய் - பண்ணுமதான, பூதனையை - பூதநாக்யபிசாசிகையை, மாய்த்தார் - நசிப்பித்தவர், மல்லர் - சாணூர முஷ்டிகாக்ய மல்லவரும், மதகிரி - குவலயாபீடாக்ய கம்ஸகஜமு மென்றபடி. மாள - நசிக்கும்படி, மலிந்தார் - விஜ்ரும்பித்தவர். கஞ்ஸனை - கம்சனை, போர் - யுத்தவிஷயமான, கடும் - க்ரூரமான, சினத்தால் - சினவாலே, கடிந்தார் - நிரஸித்தவர். சிரகாலாநுவ்ருத்த துர்விஷஹ புஜதண்டீதியாலே கம்ஸனைத்ருணவத் ப்ரதிக்ஷேபித்தவரென்றபடி, இவ்வளவால் துஷ்டசிக்ஷணம் ப்ரதிபாதிதமாகையாலே சரண்யனுக் கநிஷ்டநிவர்தக சக்தியை வெளியிட்டபடி. கண்ணுதல் - நுதலிலே கண்ணையுடையவனுடைய, நுதல் - லலாடம். ருத்ரனுடைய வென்றபடி. முன் - எதிரேதானே, வாணன் - பாணாஸுரனுடைய, தோள் - புஜங்களை, துணித்தார் - சேதித்தவர், பாணாஸுரனாலே உபாஸிதனாய் அவனுக்கு வரப்ரதாநம் பண்ணி தத்ரக்ஷணார்த்தமாக ஸபரிகரனாய் வந்து ஸந்நத்தனான ருத்ரனுடைய முன்பே யவனுடைய புஜங்களைச் சேதித்தவ ரென்றபடி. இத்தால் ஸ்வ ஸங்கல்பஸ்ய பாலலோசனப்ரப்ருதிபி துர்வாரபலோபதாநம் ஸந்தர்சிதம். வெம்- க்ரூரமான, சொல் - உக்தியை, தர - கொடுக்க, வீடு - மோக்ஷத்தை, கொடுத்து - ப்ரதாநம்பண்ணி, உகந்தார் - ப்ரீதரானவர், அதிதுர்விஷஹா நேக துர்பாஷண ப்ரயோக்தாவான சிசுபாலனுக்கு ஸ்வஸாயுஜ்ய ப்ரதாநம்பண்ணி உகந்தவரென்றபடி. இத்தால் ஸ்வஸம்பந்தலேசமுண்டான விடத்திலே ப்ரபலதராபசாரங்களையும் க்ஷமிக்கு மென்று க்ஷமாதிசயம் காட்டினபடி. விலக்கில்லா-ப்ரதிபந்தமில்லாதான, வழி- மார்கத்தை, நடத்த - நடத்திவிக்க, விரைந்தார் - துணிந்தவர், வைதிகபுத்ரர்களை முக்தேதரதுஷ்ப்ராபமான வப்ராக்ருத திவ்யலோகத்திலே நிரர்களமாகக்கொண்டு போய் திரும்பவும் மீட்டுக்கொண்டு வந்தவ ரென்றபடி. இத்தா லிவருக்கு நினைத்த போது மோக்ஷப்ரதான மீஷத்கரமென்று சக்த்யதிசயோதர்சிதஃ. பஞ்சவரை-பஞ்ச பாண்டவரை, பலவகையும் - நாநாப்ரகாரங்களாலும், காத்தார் - ரக்ஷித்தவர், பாஞ்சாலி - பாஞ்சாலி யென்னும்பெயரை யுடைய த்ரௌபதி யுடைய வென்றபடி. குழல் - குந்தளங்களை, முடித்தார் - பந்தநம் பண்ணிவித்தவர், ராஜஸபஸி துர்யோதநாதிக்ருத கேசாகர்ஷண பராபவ ஜ்வலித ஹ்ருதயை யான த்ரௌபதி துர்யோதநாதிகளை வதித்தா லல்லது கேசங்களை முடியேன் என்று ப்ரதிஜ்ஞை பண்ணி விரித்த தலையோடேயிருக்க அப்படியே ஸவ்யஸாசியை நிமித்தமாத்ரமாக்கி தத்விரோதிகளை நிரஸித்து ததீய கேசங்களை முடிவித்து தத்ப்ரதிஜ்ஞையை பூரித்த வரென்று நிஷ்கர்ஷம். இத்தால் கேவலம் ஸ்வஸங்கல்பநிர்வஹணம் நஸ்வபாவஃ; கிந்து: ஆஸ்ரிதஸங்கல்பநிர்வஹணமபிதிவ்யஞ்ஜிதம். (௯)

மூ. அத்திகிரியருளாளப் பெருமாள்வந்தார் ஆனைபரிதேரின்மே லழகர் வந்தார், கச்சிதனிற்கண்கொடுக்கும்பெருமாள்வந்தார் கருதவரந்தருந்தெய்வப்பெருமாள்வந்தார், முத்திமழைபொழியுமுகில்வண்ணர்வந்தார், மூலமெனவோலமிடவல்லார்வந்தார், உத்தரவேதிக்குள்ளே யுதித்தார்வந்தா ரும்பர்தொழுங்கழலுடையார்வந்தார்தாமே. (௧௦)

இப்படி ரஹஸ்யத்ரய ப்ரதிபாத்ய குணங்களை வெளியிட்டு இனிமேல் தத்பரிவாஹபூதங்களாய் ஈச்வரனாலே அர்சாவதார தசையிலே ப்ரகாசிதங்களான குணங்களை யருளிச்செய்கிறார்.

அத்திகிரி - ஹஸ்திகிரியிலே வஸிக்குமவரான, அருளாளப்பெருமாள் - பேரருளாளர், இது பகவதவதாரஸமயத்திலே நித்யஸூரிமுகோத்கத திவ்யகாஹளநாதமானாலு மவர்கள் அயர்வறுமமரர்களாகையாலே யுத்தரகாலவ்யக்திபவிஷ்ய தர்ச்சாவதாரகுணங்களை யலௌகிக ஜ்ஞாநத்தாலே ஸாக்ஷாத்கரித்துப் பேசுகிற தாகையாலே யுக்தவிரோதமில்லை. ஆனைபரிதேரின் - கஜதுரகரதங்களுடைய, மேல்-உபரி, அழகர் - ஸுந்தரர், கஜதுரகஸ்யந்தநாதி வாஹநங்களிலே அதிகாதிகாங்யாங்யாத்ம சோபா விபூஷிதரென்றபடி. கச்சிதனில் - ஸ்ரீகாஞ்சிதிவ்யநகரத்திலே, கண்கொடுக்கும்-அந்தகருக்கு நேத்ரப்ரதாநம்பண்ணுமவரான, பெருமாள் - ஸ்பஷ்டம், கருத - மநஸ்ஸாலே சிந்திக்க, வரம்வரங்களை, தத்ததபிலஷிதவரங்களை யென்று ஹ்ருதயம். தரும்-கொடுக்குமவரான. ஸமானகால நிர்தேசத்தாலே வதாந்யஸ்ய லாலித்யம் ஸூசிதம். தேவப்பெருமாள் - ஸ்பஷ்டம். முத்தி - மோக்ஷமாகிற, மழை - வர்ஷத்தை, பொழியும் - வர்ஷிக்குமவரான, முகில்வண்ணர் - இங்கு வண்ண சப்தம் ஸ்வபாவபரம். மேகம்போலே நிம்நோந்நதவிபாகமற க்ருபாவார்ஷுக ரென்றபடி. மூலமென-ஜகன் மூலகாரணமேயென்று, ஓலமிட-கூச்சலிட, கஜேந்த்ரன் ஆக்ரந்தநம்பண்ணும்காலத்திலேயென்றபடி. வல்லார்-ஸமர்த்தர், ததாபத்விமோசந சக்தரென்றபடி, உத்தரவேதிக்குள்ளே - சதுர்முகாச்வமேதீயோத்தர வேதிமத்யத்திலே, உதித்தார் - ஆவிர்பவித்தவர், உம்பர் - தேவராலே, தொழும் - ஸேவ்யமாநங்களான, கழலுடையார் - திருவடிகளையுடையவர். (௧௦)

மூ. மறைத்தலையிலிசையெழுத்தில் வணங்கும்வாக்கின் மந்திரத்தினெழுத்தாந்திருநாமத்தில், நிறைத்திலகுவேற்றுமையிலிரண்டாமொன்றினெடுமாறன் கீதையெல்லாநிறைந்தசொல்லில், உரைத்தவர்கண்டுரைத்தபொருளானதெல்லா முயர்விருதவருளாளப் பெருமாடேசின், திறத்திலிவை திருச்சின்னமாலைபத்துஞ் செவிக்கினிதாஞ்சிற்றின்பமிசையாதார்க்கே. (௧௧)

நிகமநம். ஸதாசார்ய ஸம்ப்ரதாயாகதங்களான ரஹஸ்யத்ரயார்த்தங்களை அப்ரமாதத்தோடே கேட்டு அவைகளையேகர்ப்பீகரித்து பேரருளாளர் ப்ரபாவவிஷயமாக விரசிதமான திருச்சின்னமாலை யென்கிற ப்ரபந்தம் வைஷயிக ஸுகவித்ருஷ்ணருக்கு கர்ணாம்ருதமாயிருக்கு மென்று கொண்டு ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

மறைத்தலையில் - வேதசிரஸ்ஸுக்களிலே, இசை - கேயமாநமான, எழுத்தில் - அக்ஷரத்திலே, ஸகல வேதாந்த ப்ரஸித்தமான ப்ரணவத்திலேயும், வணங்கும் வாக்கில் - ப்ரஹ்வீபாவபரமான சப்தத்திலேயும், நமச்சப்தத்திலேயும் என்றபடி. மந்திரத்தில் - மூலமந்த்ரத்திலே யிருக்குமதான நாலெழுத்தாம் - சதுரக்ஷரமான, திருநாமத்தில் - ஸ்ரீபகவன்நாமத்திலேயும், மூலமந்த்ராநு ப்ரவிஷ்டமாய் சதுரக்ஷாமான நாராயணவென்கிற ப்ராதிபதிகத்திலேயு மென்றபடி. மந்திரத்திலென்கிற பதம் ப்ரணவாதி ஸர்வாந்வயி மூலமந்த்ராநு ப்ரவிஷ்டங்களான ப்ரணவாதிகளுக்கிறே பூர்வோக்தார்த்தங்கள் விவக்ஷிதங்கள். நிறைத்து - மந்த்ரத்தைபூரித்துக்கொண்டு, இலகு - விளங்காநிற்கிற, வேற்றுமையில் - விபக்தியிலேயும், ஸம்ஸாரநிவ்ருத்திபூர்வக கைங்கர்ய ரூப பல ப்ரதிபாதகத்வேந மூலமந்த்ரத்துக்கு சிகாமணி ஸ்தாநீயையான சதுர்த்தீ விபக்தியிலே யென்று கருத்து. இரண்டாம் - உபாயோபாய ரூபார்த்தத்வய ப்ரதிபாதகத்வேந கண்டத்வ யாத்மகமான, ஒன்றில் - ஒருமந்த்ரத்திலேயும், ஏகவாக்யமாய் சரணாகதிகரணமான த்வயாக்யமந்த்ரத்திலேயு மென்றபடி. நெடுமால்தன் - விபூத்யத்யாய விச்வரூபாத்யாயப்படியே ஸர்வோத்க்ருஷ்டரான கண்ணனுடைய, கீதையெல்லாம்-கீதாசாஸ்த்ரத்துக்கெல்லாம் நிறைந்த - பூர்த்திகரமான, சொல்லில்-சரமச்லோகத்திலுமென்றபடி. பொருளானதெல்லாம் - அர்த்தங்களானவையெல்லாம், ரஹஸ்யத்ரயத்திலே சப்தார்த்தசக்திகளா

லே விவக்ஷிதங்களான ஸகலார்த்தங்களையு மென்றபடி. உரைத்தவர்-அருளிச்செய்த வாசார்யர்களை, கண்டு - பார்த்து, தந்முகாத் யதாசாஸ்த்ர மிவ்வர்த்தங்களைக் கேட்டென்றபடி. இதுக்கு உரைத்த என்கிறத்தோடந்வயம். உயர் - உச்சரிதமான, விருதம் - வ்ரதத்தையுடையவரான, "ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே"

"...." என்கிற ஸர்வோத்தமவ்ரத பத்தஸூத்ரரான வென்றபடி. அருளாளப்பெருமாள் - பேரருளாளப்பெருமாளுடைய, தேசின்திறத்தில் - தேஜஸ்ஸூவிஷயமாக, உரைத்த - சொல்லப்பட்டவையான, திருச்சின்னமாலை-ஆதிராஜ்ய ஸ்ரீசிந்ஹபூத திவ்யகாஹள நிநாதாநுகார ரூபதயா திருச்சின்னமாலை யென்று பேர்பெற்றிருக்குமவையான, இவைபத்தும் - இந்தபத்துபாட்டுக்களும், சித்தின்பம்-அல்பாநந்தத்தை, இசையாதார்க்கு-ஸம்மதியாதவர்க்கு, ப்ராக்ருத சப்தாதி விஷய ரஸாஸ்வாத வித்ருஷ்ணருக்கென்றபடி. செவிக்கு - ஶ்ரோத்ரங்களுக்கு, இனிதாம் - போக்யங்களாம். (கக)

உத்தாவக.....ஸ்பிராஜஹிந்த காஹலை
நாதாந்வரிஷ்டாவஸ்யாஸ்வீதி
நாஹம்......மாரணாஸ்து.
இதிஶ்ரீகதாதயாய......வீராவவவிஷைஷுஷ்க்ருதிஷு
ஸ்ரீவிஹாராயாயாவ்யாவ்யாநம் ஸம்பூர்ணம்.

திருச்சின்னமாலை வ்யாக்யானம் முற்றிற்று.

ஸ்ரீமதேநிகமாந்தமஹாதேசிகாயநம:.

பன்னிருநாமம் வ்யாக்யாநம்.

ஸூரஹ்......நத்வா வர்ணாயிதேவதாநாம்ஶாயாவிவ்யணோ
திவர்ணஸ்ஸுஸ்வீதெத்
ஸநாஜிஷ்ணோவ......வழிரா॥
ஶாயாஜா:......மஜிதா நிரஜா:।

மூ.—கேசவனுய்ந்தின்றுகிழ்த்திசையிலுநெற்றியிலுந்
தேசுடையாழிகணன்குடன்செம்பசும்பொன்மலைபோல்
வாசமிருத்தென்னை மங்காமற்காக்குமறையதனால்
ஆசைமிருத்தவயன்மகவேதியிலற்புதனே. (க)

ஸ்ரீமத் ஸச்சரித்ரரக்ஷா த்விதீயாதிகாரத்திலே தம்மாலே ஸாமாந்யத: த்ரைவர்ணிகருக்கும் விசிஷ்ட ஸ்ரீவைஷ்ணவ ஸார்வ வர்ணகருக்கும் கர்மாங்கத்வ தத்பல பூமாதாயகத்வ பகவத்தாஸ்யசிந்ஹத்வாதிநா வச்யதார்யத்வேந நிர்ணீதங்களாய் ப்ரபஞ்சேந வ்யவஸ்தாபித த்ரவ்ய வர்ண தது பாதாந தேச ஸங்க்யா ஸ்தாந ஸம்ஸ்தாந பரிமாணங்குலி விசேஷங்களான ஊர்த்வபுண்ட்ரங்களுடைய தாரணம் தத்தத்புண்ட்ராதிஷ்டாத்ரு தேவதாமந்த்ர த்யாநரஹிதமானபோது கார்யகரமல்லாமையாலே தத்ஸாத்குண்யார்த்தமாக தத்தத் அதிதேவதைகளின் திருநாமம் திருநிறம் திருவாயுதம் திக்கு ஸ்தாநம் இவைகளை யடைவே பன்னிரண்டுபாட்டுக்களாலே ஸ்புடீகரிக்க ப்ரவ்ருத்தராய் முற்பட "சதுச்சக்ரதரம்மாந்து ஸ்ம்ருத்வாஜாம்பூநதப்ரபம் । லலாடே, கேஶவாயேதி தாரயேதூர்த்வபுண்ட்ரகம்" "சதுச்சக்ரம்நமஸ்யாமி கேஶவம் கக

கப்ரபம்” “புரஸ்தாத்கேஶவஃபாது சக்ரீஜாம்பூநதப்ரபஃ” இத்யாதி ப்ரமாண ப்ரதிபன்னங்களான ப்ரதமபுண்ட்ர தேவதையுடைய வர்ணாயுதாதி விசேஷங்களை யருளிச்செய்கிறார்.

ஆசை - ஆசையாலே, மிகுத்த-அதிசயிதனான. பகவத்விஷயக நிரதிசய ப்ரேமசாலியான வென்றபடி. அயன் - அஜனுடைய, மகவேதியில் - உத்தரவேதியில் நிற்குமவனான, அற்புதன் - அற்புத ஸ்வபாவனான பேரருளாளர், நிஷாத கோபால வாநராதிகள் பக்கல் நிர்வ்யாஜமாகவே பலாத்கரித்து ஸம்ச்லேஷித்த ஸுலபஸுசீலன்தானே ஸாக்ஷாத் கார மாத்ரார்த்தியான சதுர்முகன் பக்கலில் காய்க்லேச யமநப்ரணிதாந ஸாத்யாச்வமேத நிஷ்பாதித மானஸ கல்மஷ கஷாய பரிபாக பர்யந்த முபேக்ஷிக்கை விஸ்மயநீயமாகையாலே இங்கு பேரருளாளரை யத்புதனென்று நிர்தேசிக்கிறது. அச்சுதனென்றுபாடமானபோது ஆஶ்ரிதரை யொருபடியாலும் கைவிடாதவ னென்று பொருள். கேசவனாய் - கேசவாக்ய திவ்யாவதாரவிசிஷ்டனாய், தேசுடை - தேஜஸ்ஸை யுடையவையான, ஆழிகள் - சக்ரங்களுடைய, நான்குடன்-சதுஷ்டயத்தோடே, பாஹுசதுஷ்டயத்ருத பாஸ்கர கோடி கல்ப சக்ரசதுஷ்டயத்தோ டென்றபடி. செம் - சிவந்ததான, பசும் - பசுத்ததான, பொன்மலைபோல்-ஸுவர்ணபர்வதம்போலே, அருணஹரிதஸங்கீர்ண ஜாம்பூநதாக்ய ஸ்வர்ணமய பர்வத வர்ணனா யென்றபடி. கீழ்த்திசையிலும் - பூர்வதிக்கிலேயும், நெற்றியிலும்-லலாடத்திலேயும், நின்று-ப்ரதிஷ்டிதனாய், வாசி - வைலக்ஷண்யம், மிகுத்து - விரோதி நிரஸநனாய் க்ருத சக்ரசதுஷ்டய தாரணத்தாலே பர வ்யூஹாதி மூர்த்யந்தரா பேக்ஷயா ரக்ஷகத்வாதிசயந் தோற்றும்படிநின்றென்றபடி. மறையதனால் - வேதத்தாலே, என்னை-அனேக விரோதித்யாக்ராந்தனாய் ரக்ஷணீயனான வென்னை, மங்காமல் - நசியாதபடி, அவித்யா கல்லோலத்திலேபெருகிப்போகாதபடி யென்றபடி. காக்கும்-ரக்ஷிக்கும், இங்கு ரக்ஷணஸாதநத்வேந ப்ரதிதங்களான வாயுதங்களுக்கும் வேதங்களுக்கும் அடைவே நிஷ்டநிவர்த்தனத்திலும் இஷ்டப்ராபணத்திலு முபயோகம் கண்டுகொள்வது. இங்கு புண்ட்ரதேவதையுடைய வர்ணாயுதஸ்தாநநிசாம்கநம் த்யேயாகார ப்ரதர்சனார்த்தம். நாமகதநந்து நமோந்ததத்தன்னாமரூப மந்த்ரோபதேசார்த்தம்,தத்தந்நாமஞ்ச ப்ரதிபாத்யகுணவிசேஷ த்யாநவிதாநார்த்தந்து இப்படி மேலுங்கண்டுகொள்வது. (௧)

மூ — நாரணனாய்நல்வலம்புரிநாலுமுகந்தெடுத்து
காரணிமேகமெனவேயுதரமுமேற்குநின்று
ஆரணநூல்தந்தருளாலடைக்கலங்கொண்டருளும்
வாரணவெற்பில்மழைமுகில்போல்நின்றமாயவனே. (௨)

“சதுர்ப்புஜமுதாரதேவம் நீலஜீமூதஸந்நிபம்। ஶங்கஹஸ்தம் நாராயணாயேதி ஶங்கசங்கயாராயேதி” “நாராயணம்ஸநஸ்ஸாமம் சதுர்ப்புஜம் ஸம்நகாநநம்” “வக்ஷோநாராயணஸ்ஸ்வீ நீலஜீமூதஸந்நிபஃ” இத்யாதி ப்ரமாண ப்ரதிபன்னங்களான த்விதீய புண்ட்ர தேவதையுடைய வர்ணாயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

வாரணவெற்பில் - வாரணாசலத்திலே, மழைமுகில்போல் - வார்ஷுக வலாஹகம்போலே, வலாஹகத்தைவார்ஷுகத்வேந நிர்தேசிக்கையாலே ஸ்நிக்தச்யாமளசீதளச்சவி வ்யஞ்சிதம். நின்ற - ப்ரதிஷ்டிதனான, மாயவன் - ஆச்சர்ய சரிதரான பேரருளாளர், நாரணனாய் - நாராயணாக்யப்ராதுர்பாவ விசிஷ்டனாய், நல் - ஸமீசீனமான, வலம்புரி - சங்கங்களுடைய, நாலும் - சதுஷ்டயத்தையும், உகந்து - ப்ரீதனாய், எடுத்து - தரித்து, கார்-ச்யாமளவர்ணத்தாலே, அணி - அலங்க்ருதமான, மேகமெனவே - மேகம்போலவே, மழை - முகில்போல் என்கிறவிடத்திலே சொன்னசாத்ருச்யம் கரிகிரிசிகர வாஸ்தவ்யார்சாவதார விஷயமாகையாலும் காரணிமேகமெனவேயென்கிறஸாத்ருச்யம் நாராயணாக்யவ்யூஹாந்தராவதாரவிசேஷபரமாகையாலேயும் புநருக்தியில்லை உதரமும் - உதரத்திலேயும், மேற்கும் - பச்சிமதிக்கிலேயும், நின்று-ஸ்திரனாய்; அருளால்- க்ருபையாலே; ஆரணநூல் - உபநிஷத் சாஸ்த்ரத்தை; தந்து -

கொடுத்து; அடைக்கலம் - ரக்ஷ்யவஸ்துவாக; கொண்டருளும் - ஸ்வீகரித்தருளும்; பரந்யாஸ விதாயக சாஸ்த்ர ப்ரதான முகத்தாலே பரந்யாஸநிஷ்பாதநம் பண்ணுவித்து பரஸ்வீகாரம் செய்தருளுமென்றபடி. (௨)

மூ.— மாதவநாமமும்வான்கதை நான்குமணிநிறமும்
ஓதுமுறைப்படியேந்தியுரத்திலும் மேலுநல்கி
ப்போதலர்மாதுடன்புந்தியிலென்பாற் புகுந்தளிக்கும்
தூதனுநாதனுமாகியதொல்லத்திகிரிச்சுடரே. (௩)

“[illegible]” “[illegible]” “[illegible]” இத்யாதி ப்ரமாண ப்ரதிபன்னங்களான த்ருதியபுண்ட்ர தேவதையுடைய வர்ணாயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

தூதனும் - தூதரும்; நாதனும் - நாதனும்; ஆகிய - ஆனதான; ஆச்ரிதவிஷயத்தில் தௌத்யாதி ப்ரேஷ்ய க்ருத்யங்களைப் பண்ணச்செய்தேயும் தத்ப்ரயுக்த பரமாதிசய பாவேந ஸ்வயமேவ தத்ஸ்வாமிபூதரான வென்றபடி. தொல் - அநாதியான; அத்திகிரிச்சுடர் - ஹஸ்திகிரிவர்த்தி ஜ்யோதிஸ்ஸு; ஹஸ்திகிரி வாஸ்தவ்யதைகரூபஜ்ஞாநாத்மகரான பேரருளரென்றபடி. மாதவநாமமும்-மாதவசப்தரூப நாமத்தையும்; வான்- விலக்ஷணமான, கதைநான்கும் - கதாசதுஷ்டயத்தையும்; மணிநிறமும்- மணிவர்ணத்தையும்; இதுக்கு ஏந்தியென்கிறத் தொடங்வயம். ஸாமாந்ய வாசகமான மணிசப்த மிங்கு பூர்வோதாஹ்ருத ப்ரமாணாநுஸாரேண இந்த்ரநீலமணிரூபவிசேஷபரம். உபமாந பூதங்களான மேகேந்த்ர நீலங்களுக்கு நீலவர்ண விசேஷ இக்ஷுக்ஷீராகுடாதி மாதுர்யங்யாயேந நீலாவாந்தரபேதம் ஸூக்ஷ்மேக்ஷி காக்ராஹ்ய மாயிருக்குமாப்போலே உபமேயபூத நாராயண மாதவமூர்த்யோ ரபிவர்ணபேதம் ப்ரமாண ஸித்த மாகையாலே வர்ணஸங்கர சங்கைக் கவகாசமில்லை. நீலரூபாவாந்தர பேதங்களிந்த்ர நீலேந்தீவரங்களுக்கு அதிஸன்னிக்ருஷ்ட ஸாஜாத்யமநு பவ ஸித்தமாகையால் “இந்த்ரநீலமணிச்யாம: - இந்தீவரதளச்யாம:” என்கிற மாதவமூர்த்திவிஷய ப்ரமாணத்தின்படியே பூர்வோதாஹ்ருத பகவச்சாஸ்த்ராதிகத வசநோக்தரீத்யா வென்றபடி. பகவச்சாஸ்த்ரவிஷயமாக வோதுமென்று அத்யயநபர்யாய பதத்தைப்ரயோகித்தது வேதகல்பத்வ ஜ்ஞாபனார்த்தம். ஏந்தி - தரித்து; உரத்திலும், உரஸ்ஸிலும், மேலும்-ஊர்த்வதிக்கிலேயும்; நல்கி-ஸ்நேஹித்து, ஸ்நேஹபூர்வகமாக வாஸம் பண்ணி யென்றபடி. நின்று என்றுபாடமானபோது ஸ்பஷ்டோர்த்த:. போது-புஷ்பத்திலே, அலர் - அபிவ்ருத்தமான; மாதுடன் - ஸ்திரீயோடே, கமலகுஸுமஸம்வர்த்தி தையான பிராட்டியோடே கூட வென்றபடி. மாதவநாமமு மென்கிறவிடத்திலே நாமபதப்ரயோகேண சப்தஸ்வரூபமே விவக்ஷிதமாய் “மாயா: - தவ: மாதவ:” என்கிறவர்த்தம் விவக்ஷிதமாகையாலே யிங்கே லக்ஷ்மீஸம்பந்தஞ்சொன்னது புநருக்தமன்று. யத்வா: பூர்வப்ரயுக்த மாதவசப்தத்துக்கே இதுவிவரண மாகையாலே புநருக்தியில்லை. அதவா: முன்பு மூர்த்திமாத்ரத்திலே லக்ஷ்மீஸம்பந்தஞ் சொல்லித்தாய் இப்போது அந்த: ப்ரவிச்யநியமநரக்ஷணாதிவ்யாபாரங்களிலும் தத்ஸம்பந்தஞ் சொல்லுகிறதாகையாலே தோஷமில்லை அன்பால்- வாத்ஸல்ய ரூப ப்ரீதியாலே, புந்தியில்- புத்தியிலே, ஹேயமான ஹ்ருதாத்யந்த: கரணத்திலே யென்றபடி. புகுந்து-ப்ரவேசித்து; அளிக்கும் - ரக்ஷிக்கும். (௩)

மூ.— கோவிந்தனென்னும்குளிர்மதியாகிக்கொடியவரை
ஏவுந்தனுக்களுடன்தெற்கிலுமுள்சூழ்ததுநின்று
மேவுந்திருவருளால்வினைதீர்த்தெம்மையாண்டருளும்
பூவன்றொழவத்திமாமலைமேல்நின்றபுண்ணியனே (௪)

“[illegible]” “[illegible]” “[illegible]

ஹாரு'' இத்யாதி ப்ரமாண ப்ரதிபந்நங்களான த்ரியபுண்ட்ர தேவதையினுடைய வர்ணாயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

பூவன் - புஷ்பஸம்பவனான சதுர்முகன்; தொழ - ஸேவிக்கும்படி; அத்திமாமலைமேல் - ஹஸ்திமஹாபாவதத்தின்மேலே, நின்ற - ப்ரதிஷ்டிதனான - புண்ணியன் சுப கர்ம ப்ரவர்த்தகரான பேரருளாளர், கோவிந்தனென்னும் - கோவிந்தனென்று சொல்லப்படுமவனான; குளிர் மதியாகி - சீதள சந்த்ரனாய் ஸௌம்ய சந்த்ர ப்ரபனு யென்றபடி; கொடியவரை - க்ரூரர்களை; ஏவும் - ப்ரதிக்ஷேபிக்குமவையான, தநுக்களுடன் - தநுஸ்ஸுக்களோடே; தநுச் சதுஷ்டயத்தோடே யென்றபடி. அஸதிவிசேஷநியாமகே பஹுவசநத்துக்குத்ரித்வே பர்யவஸாநமுசிதமானாலும் இங்குதநுக்களென்கிற பஹுவசனத்துக்கு பூர்வோதாஹ்ருத ப்ரமாணநுரோதத்தாலும் பூர்வோத்தரகாதைகளிலாயத சதுஷ்டயஸங்க்யாகணடோக்தி ஸந்தர்சநத்தாலும்சதுஷ்டத்வே பர்யவஸாநமுசிதமிறே. தெற்கிலும் -தக்ஷிணதிக்கிலேயும்; உள்கழுத்தும்-அந்தஃ கண்டத்திலேயும், புரஃ கண்டத்திலேயு மென்றபடி. நின்று - ப்ரதிஷ்டிதனாய்; மேவும். ஆதரணீயமான; ஸர்வஸ்ப்ருஹணீயமான வென்றபடி. திருவருளால் ஸ்ரீமத்க்ருபையாலே; வினை-கர்மங்களை, தீர்த்து - நசிப்பித்து; எம்மை - தாமோசோத்படகர்மநிபிடனான நம்மை, ஆண்டருளும் - ஸ்வ கைங்கர்யத்திலே விநியோகித்து ரக்ஷித்தருளும். (௪)

மூ.—விட்டுவலவயிற்றின்கண்வடக்கும் விடாதுநின்று
மட்டவிழ்தாமரைத்தாது நிறங்கொண்டமேனியனாய்
தொட்டகலப்பைகளிரிரண்டாலுந் துயரறுக்கும்
கட்டெழிற்சோலைக் கரிகிரிமேல்நின்றகற்பகமே. (௫)

"வதா²ஹுலுயாதெவம் வக்ஷிணக்ஷஸந்நிஹம்। வெவஷிவொஷாஜ்ஞு வுதிதம் யாரயெதக்ஷிணெஸ்தெ'' "விஷ்ணுதா²ஹுலுவம்வநெ வக்ஷிணக்ஷஸந்நிஹம்'' "உத்ரெஹலயுக்ரீவிஷ்ணுஃ வக்ஷிணக்ஷஸந்நிஹஃ'' இத்யாதி ப்ரமாணப்ரதிபன்னங்களான பஞ்சம புண்ட்ரதேவதையினுடைய வர்ணாயுதாதிகளை அருளிச்செய்கிறார்.

கட்டு - ஸாந்த்ரதையாலே, எழில் - உஜ்வலமான, சோலை - வ்ருக்ஷ வாடிகையை யுடையதான, கரிகிரிமேல் - கரிகிரியின்மேலே, நின்ற - ப்ரதிஷ்டிதனான, கற்பகம் - கல்பகம், இங்கு பேரருளாளரை கல்பகவ்ருக்ஷமாக வத்யவஸித்தபடி. கரிகிரிசிகர ப்ரரூடோ தக்ர தருஷண்ட மத்யத்திலே நந்தந வந கல்பக வ்ருக்ஷம் போலே விளங்குமவரான பேரருளாள ரென்றபடி. இங்கு கல்பகத்வ வ்யபதேசத்தாலே அர்த்திதார்த்த பரிதான தக்ஷிதத்வம் விவக்ஷிதம். விட்டு - விஷ்ணுவாய், வலவயிற்றின்கண், தக்ஷிணோதரத்திலேயும்,வடக்கும்-உத்தரதிக்கிலேயும், விடாதே-விச்லேஷியாதே, நின்று - ப்ரதிஷ்டிதனாய், மட்டு- மகரந்தயுக்தமாக, அவிழ் - விகஸிதமான, தாமரை-தாமரஸத்தினுடைய, தாது - கேஸரங்களுடைய, நிறம் - வர்ணத்தை, கொண்ட - க்ரஹித்ததான, மேனியனாய் - விக்ரஹத்தை யுடையவராய், தொட்ட-த்ருதங்களான, ஹஸ்த த்ருதங்களான வென்றபடி. கலப்பைகள் - ஹலநகளுடைய, ஈரிரண்டாலும்-சதுஷ்டயத்தாலும், துயர் - துக்கங்களை, அறுக்கும் - சேதிக்கும். (௫)

மூ.—மதுசூதனன்வலப்புயந்தென்கிழக்கென்றிவற்றில்
பதியாயிருந்துபண்மாதுறைபங்கயவண்ணனுமாய்
முதுமாவினைகளறுக்கும்முயலநுகிளிரிரண்டால்
மதுவாரிளம்பொழில்வாரணவெற்பின்மழைமுகிலே (௬)

(௭) இனி "கட்கபாணிஞ்சதுர்ஹஸ்த மக்நிஸந்நிபதேஜஸம்; த்ரிவிக்ரமாயமந்த்ரேண தாரயேத்தக்ஷிணேகளே'' "அக்நிவர்ணஞ்சதுஃ கட்கம்பாவயாமித்ரிவிக்ரமம்'' "த்ரிவிக்ரமஃகட்கபாணிர் நைர்ருத்யாம் ஜ்வலநப்ரபஃ'' இத்யாதிப்ரமாண ப்ரதிபந்நங்களான ஸப்தமபுண்ட்ர தேவதையுடைய வர்ணாயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

மது - மதுவாலே, ஆர் - பூர்ணமான, இளம் பொழில் - பாலோத்யாநத்தையுடையதான - வாரணவெற்பில் - வாரணாசலத்திலே யிருக்குமதான, மழைமுகில் -

வார்ஷ்ணகவலாஹகம், மதுக்குதனன் - மதுஸூதநனாய், என் - என்னுடைய, வலப்புயம் - தக்ஷிணபுஜம், தென்கிழக்கு - தக்ஷிணப்ராசீ, ஆக்நேயதிக்கென்றபடி. என்றிவைத்தில் - என்கிறவிவைகளில், பதியாய் - வாஸமாய், அதிஷ்டாதாவா யென்றபடி, இருந்து - ப்ரதிஷ்டிதனாய், பண் - கீயமானையான, மாது - ஸ்த்ரீ, உறை - வாஸம்பண்ணுமிடமான, நிகிலலோகவேத கீயமான கல்யாணகுண கண லக்ஷ்மீநிவாஸஸ்தானமான வென்றபடி. பங்கயவண்ணனுமாய் - பங்கஜத்தினுடைய வர்ணத்தையுடையனுமாய், இங்குவண்ணனுமென்கிற இத்தாலே பதியாயிருந்தென்றது ஸமுச்சிதம். பங்கஜத்துக்கு லக்ஷ்மீஸம்பந்தகதநத்தாலே சோபாதிசயம் சொல்லிற்றாய்த்து. முயலங்கள் - முஸலங்களுடைய, ஈரிரண்டால் - சதுஷ்டயத்தாலே, முது - ப்ராசீநங்களான, மா - வினை - மஹாகர்மங்களை, அறுக்கும் - சேதிக்கும். (௬)

மூ.—திருவிக்கிரமன்திகழ்தீநிறத்தன் தெளிவுடைவாள்
உருவிக்கரங்களிலீரிரண்டேந்திவலக்கழுத்தும்
செருவிக்கிரமத்தரக்கர்திக்கும் சிறந்தாடுமிறை
மருவிக்கரிகிரிமேல்வரந்தந்திடும்மன்னவனே. (௭)

"ஜ்வாலாஸ்ய ஜ்வாலாவிஷ்ட: । ஜ்வலிதாலகோஜ்வல, ஜ்யேஷ்ட நைர்ருத்ய ஜ்யோதிர்மயாப்ரயே தக்ஷிணே ஜயே" "சதுர்பிர் ஜ்வாலாவிதம் ஜ்யோதிர்ப்ரதீபயே ஜ்யோதிர்மய:" "ஸூர்யப்ரதீவிதாஜோ ஜ்வாலாதீஜ்ய ஜ்யோதிர்மய:" இத்யாதி ப்ரமாண ப்ரதிபன்னங்களான ஷஷ்ட புண்ட்ர தேவதையுடைய வர்ணயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

இறை - ஈச்வரனான, ஸர்வேச்வரனான வென்றபடி. கரிகிரிமேல் - ஹஸ்திகிரியில், மருவி - நியதவாஸியாய், வரம் - வரங்கள், தந்திடும் - கொடுக்குமவனான, மன்னவன் - ராஜா, இங்குபேரருளாளரை ராஜாவாக ரூபித்தது கட்கதாரணௌசித்யத்யோதநார்த்தம். திகழ் - ப்ரகாசியாநிற்கிற, தீநிறத்தன் - அக்நிவர்ணனான, திருவிக்கிரமன் - த்ரிவிக்ரமனாய், தெளிவுடை - நைர்மல்யத்தை யுடையதான, வாள் - கட்கங்களுடைய, ஈரிரண்டு - சதுஷ்டயத்தை, உருவி - நிஷ்கோசமாக்கி, கரங்களில் - கரங்களிலே, ஏந்தி - தரித்து, வலக்கழுத்தும்-தக்ஷிணகண்டத்திலேயும், செரு-அபிவ்ருத்தமான, விக்ரமத்து - விக்ரமத்தையுடைய, அரக்கர் - ராக்ஷஸருடைய, திக்கும் - திக்கிலேயும், நைருதிதிக்கிலேயுமென்றபடி. இங்குத்ரிவிக்ரமாதிஷ்டித நிருருதிதிக்கு ஸம்பந்திகளான ராக்ஷஸர்களை விக்ரமவ்ருத்திசாலித்வேந நிர்தேசித்தது த்ரிவிக்ரம த்ருத கட்கங்களுக்கு ப்ரயோஜந பௌஷ்கல்யத்யோதநார்த்தம். சிறந்து - விஜ்ரம்பித்து; ஆடும் - ஸஞ்சரிக்கும். விஹரிக்கு மென்றபடி. (௭)

மூ.—வாமனனென்றன்வாமோதரமும்வாயுவின்றிசையும்
தாமமடைந்துதருணவருக்கனிறத்தனுமாய்ச்
சேமமரக்கலஞ்செம்பவியிரிரண்டாற்றிகழும்
நாமங்கைமேவியநான்முகன்வேதியினம்பரனே (௮)

"சதுர்வஜ்ர்யாஜ்யம் தருணார்க்கஸந்நிபம் வாமநம் வாமோதரே வாயவ்யாம்" "வாமநம் வஜ்ரஹஸ்தம் வஜ்ரம் விகாஸயே" "வாயவ்யாம் வாமநோ வஜ்ரதருணார்க்கதீதி:" இத்யாதி ப்ரமாண ப்ரதிபன்னங்களான அஷ்டமபுண்ட்ர தேவதையினுடைய வர்ணயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

நாமங்கை - ஸரஸ்வதியாலே, மேவிய - ஆச்ருதனான; நான்முகன் - சதுர்முகனுடைய, இவனுக்கு வாக்தேவதா வல்லபத்வகதநத்தாலே ஸ்வாதீநவேதசாஸ்த்ரத்வம் தோற்றுகையாலே க்ருத்வதிகாரபௌஷ்கல்யம் ஸூசிதம். வேதியில் - வேதியிலிருக்குமவனான, சதுர்முக மகோத்தரவேதி பூத கரிகிரி வாஸியான வென்றபடி. வேதியிலென்கிறபதஸ்தாநத்திலே வேழ்வியி லென்றுபாடமானபோது யாகத்தி லாவிர்பவித்தவரான வென்று பொருள். நம் - நமக்கு ஸ்வாமியான; பரன் - ஸர்வஸ்மாத்பரனான பேரருளாளர், வாமனன்- வாமனனாய்; என்-என்னுடைய, வாமோதரமும் - வாமோதரத்தையும்; வாயுவின் - வாயுவினுடைய; திசையும் - திக்கையும்; தாமம் - தாம

மாக, ஸ்தாநமாக வென்றபடி. அடைந்து - ஆச்ரயித்து, தருண - தருணனான, அரு க்கன் - அரக்கனுடைய, நிறத்தனுமாய் - வர்ணத்தையுடையவனுமாய், சேமம்- க்ஷேம கரமான, மரக்கலம் - மரக்கலமான, ஸம்ஸார ஸாகராந்தர் நிமஜ்ஜதாத்மவர்கத்துக்கு க்ஷேமேண பாரப்ராபகமான என்றபடி, இது ஆயுதங்களுக்குவிசேஷணம். யத்வா: வாமனனுக்குவிசேஷணம். செம் - சிவந்ததான, பவி - வஜ்ராயுதங்களுடைய, ஈரிர ண்டால் - சதுஷ்டயத்தால், திகழும் - ப்ரகாசிக்கும். (அ)

மூ.—சீரார்சிரீதரனச்சிவன்றிக்குமிடப்புயமும்
ஏராரிடங்கொண்டிலங்குவெண்டாமரைமேனியனைப்
பாராயப்பட்டயமீரிரண்டாலும்பயமறுக்கும்
ஆராவமுதத்திமாமலைமேனின்ற வச்சுதனே. (௯)

இனி "പട്ടിശായുധഹസ്തശ്ച പുണ്ഡരീകാഭദേവശ്ച, ശ്രീധരോ ദക്ഷിണപാർശ്വേ ദേവതായാമൈക" "ശ്രീധരം പുണ്ഡരീകാഭം ബദ്ധഃ പട്ടിശോദ്യതം" "വൈശാഖ്യം പുണ്ഡരീകാഭഃ ശ്രീധരഃ പട്ടിശായുധഃ" இத்யாதி ப்ரமாணப்ரதிபன்னமான நவமபுண்ட்ர தேவதை யுடைய வர்ணாயு தாதிகளை யருளிச்செய்கிறார்.

ஆரா - அபர்யாப்தமான, அமுது - அம்ருதமான, அம்ருதம்போலே அனுபவத் தால் த்ருப்திவாராதவென்றபடி. நிரதிசயபோக்ய பூதரான வென்கை. அத்தி மாமலைமேல் - ஹஸ்திகிரிசிகரவாஸியான, அச்சுதன் - அச்யுதன், சீரார் - கல்யாணகு ணபூர்ணரான, சிரீதரனை - ஸ்ரீதரனை, சிவன்திக்கும் - சிவனுடையதிக்கையும், இட ப்புயமும் - ஸவ்யபுஜத்தையும், ஏரார் - ஔசித்யபூர்ணமான, இடம் - ஸ்தாநமாக, கொண்டு - ஸ்வீகரித்து, இலங்கு - விளங்காநிற்கிற, வெண்டாமரை- ஸிதாம்போஜம் போலிருக்கிற, மேனியனை- விக்ரஹத்தையுடையவனை, புண்டரீகஸவர்ணவிக்ரஹ னையென்றபடி. சந்த்ரபுண்டரீகயோர்தாவள்யாத்யவிசேஷேப்யவாந்தர வைஜாத்ய மனுபவஸித்தமாகையாலேகோவிந்தஸ்ரீதரயோர்நவர்ணஸங்கர:. பாராய்-பாரமான, கௌரவாதிசயத்தாலே ஸ்வேதர துர்பரமான வென்றபடி. பட்டயம் -பட்டஸங்க ளுடைய, கட்கவிசேஷங்களுடைய வென்றபடி.பட்டயம் கட்காவாந்தரபேதமாகை யாலே த்ரிவிக்ரம ஸ்ரீதரயோர நாயுத ஸங்கர:. ஈரிரண்டாலும்-சதுஷ்டயத்தாலும், பயம் -பயத்தை, ஆச்ரிதாநாமிதிசேஷ:. அறுக்கும் - சேதிக்கும். (௯)

மூ.—என்னிருடீகேசனிறைக்கீழிடக்கெழுத்தென்றிவற்றில்
நன்னிலைமின்னுருவாய்நாலுமுறகரங்கொண்டளிக்கும்
பொன்னகில்சேர்ந்தலைக்கும்புனல்வேகைவடகரையில்
தென்னனுகந்துதொழுந்தேனைவேதியர்தெய்வமொன்றே. (௧0)

"ചന്ദ്രാഗ്നിസൂര്യസംഭേദി ചക്ഷുശ്ചക്രീ ഹൃഷീകേശോ ദക്ഷിണേ ധാരയേത് ഖഡ്ഗം" "ചന്ദ്രാഗ്നിസൂര്യനേത്രശ്ച ഹൃഷീകേശശ്ചതുർഭുജം" "വിദ്യുദ്വർണോ ഹൃഷീകേശോ ഹൃദ്വാമപാർശ്വേ" இத்யாதி ப்ரமாணஸித்தங்களான தசமபுண்டர தேவதை யுடைய வர்ணாயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

பொன் - ஸ்ப்ருஹணீயமான, அகில் - ஸுகந்தவ்ருக்ஷ விசெஷங்களோடே, சேர்ந்து - கூடி, அளிக்கும் - ரக்ஷிக்குமதான, புனல் - ஜலத்தையுடையதான, ஸ்ப்ரு ஹணீய தரா கரு சந்தநா த்யநேக தீர தரு ஷண்ட பரிவ்ருதமாய் பாப நிவர்த்தக தயா ஸர்வரக்ஷகமானப்ரவாஹத்தையுடையதானவென்றபடி. வேகை-வேகவதியினு டைய, வடகரையில் - உத்தரதீரத்தில், தென்னன் - தக்ஷிணதிக்பதியான ராஜாவா லே, உகந்து - ஸ்ப்ருஹித்து, தொழும் - ஸேவிதமான, இது தேவதைக்குவிசேஷ ணம். தேன - தேனம்என்கிற காஞ்ச்யுபக்ராமத்தில் வஸிக்குமவரான, வேதி யர்-வைதிகர்களுடைய, தைவமொன்றே - அத்விதீயதேவதை, தக்ஷிணதிக்பதி ராஜ விசேஷேணஸமயோசித ஸர்வவித கைங்கர்யங்களாலும் உபசரிதராய் தேனமென் கிறக்ராம விசேஷவர்த்திகளாய் ஸாங்கவேதாத்யயந ததாத்தஜ்ஞாநாநுஷ்டாநநிஷ்ட

ரானவர்சகராலே யதாசாஸ்த்ரமாராதிதரானபேரருளாளரென்றபடி. இவ்வர்த்தமை திஹ்ய ஸித்தமிறே. என் - மத்ஸ்வாமியான, இருடீகேசன் - ஹ்ருஷீகேசாக்யரான, இறை - ஈச்வரனாய், கீழ் - அதோதிக்கு, இடக்கெழுச்து - தக்ஷிணகண்டம், என்றி வைத்தில் - என்கிறவைத்தில், நன்னிலே - நல்லஸ்திதியை யுடையதான, மின்னுருவாய் - வித்யுத் ஸத்ருசரூபமாய், பத்மகேஸரவித்யுதோர் கௌரவர்ணவாந்தரபேதம் ப்ரமாணிகமாகையாலே விஷ்ணுஹ்ருஷீகேசயோர் நவர்ணஸங்கரஃ. நாலுமூற்கரம் - மூத்கரசதுஷ்டயத்தை, கொண்டு - க்ரஹித்து, அளிக்கும் - ரக்ஷிக்கும். (௧0)

மூ.—எம்பற்பநாபனென்பின்மனம்பற்றிமன்னிநின்று
அம்பொற்கதிரவனாயிரமேவியமெய்யுருவாய்
அம்பொற்கரங்களிலைம்படைகொண்டஞ்சலென்றளிக்கும்
செம்பொற்றிருமதிள்சூழ்சிந்துராசலச்சேவகனே. (௧௧)

இனி, "வஜ்ராயுதாயுதம் தேவம் ஸஹஸ்ராக்ஷஸமப்ரபம்। வஜ்ரநாபாய மந்த்ரேண வ்யஷ்டயேத்யாம்யசக்ஷுஷா" "வஜ்ராயுதாயுதம் ஸநகேஸ்ர்யாக்ஷரோவிஷ்ணம்" "ஹ்ருச்சகசேஷநாபேந்நாபோ ஸஹஸ்ராக்ஷஸ்ஸமப்ரபஃ" இத்யாதி ப்ரமாணப்ரதிபந்நங்களான ஏகாதச புண்ட்ர தேவதையுடைய வர்ணாயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

செம்பொன் - உஜ்வலஸ்வர்ணமயமான, திருமதிள் - ஸ்ரீமத்ப்ராகாரத்தாலே, சூழ் - பரிவ்ருதமான, சிந்துராசலம் - ஸிந்துராசலத்திலிருக்குமவனான, சேவகன் - மஹாயோதன், இங்குபேரருளாளரை யுத்தோந்முக யோதத்வேந நிரூபிக்கையாலேதததிஷ்டித ஸிந்துராசலத்துக்கு துரதிரோஹ துர்கத்வம் வ்யஞ்ஜிதம், ஸகலஜகதவஸ்கந்தியானகலிபலத்துக்குதுரவஸ்கந்த்யமாம்படி துர்லலங்க்யப்ராகாரபரிவ்ருதஸிந்துராசல துரதிரோஹ துர்க மூர்த்த ஸீமப்ரதிஷ்டிதரான பேரருளாள ரென்றபடி. எம்பற்பநாபன் - அஸ்மத்ஸ்வாமியான பத்மநாபனாய், என்பின் - என்னுடையப்ருஷ்டபாகத்தையும், மநம் - மநஸ்ஸையும், பற்றி - ஆச்ரயித்து, மன்னிநின்று - ஸ்திரனாய் நின்று, அம் - ஸுந்தரமான, பொன் - ஸ்ப்ருஹணீயமான, இவைகளுக்கு உருவோடந்வயம். கதிரவனாயிரம் - ஸூர்யஸஹஸ்ரம்போலே, மேவிய - ஆதரணீயமான, மெய் - ஸத்யபூதமான, உருவாய் - ரூபத்தையுடையவனாய், இங்கு பகவத்ரூபத்துக்கு ஸத்யத்வ கதநம் தஸ்ய கால்பநிகத்வாதி நிரஸநார்த்தம். அம்பொன் - ஸுந்தர ஸ்ப்ருஹணீயங்களான, கரங்களில் - ஹஸ்தங்களிலே, ஐம்படை - சங்கசக்ரகதாசார்ங்கபத்மரூப பஞ்சாயுதங்களை, கொண்டு - க்ரஹித்து, அஞ்சல் - மாபைஷீஃ, என்றளிக்கும் - என்றுரக்ஷிக்கும். (௧௧)

மூ.—தாமோதரனென்தாமங்கள்நாலுகரங்களில்கொண்டு
ஆமோதரமெனவாகத்தினுட்புறம்பிற்கழுத்தும்
தாமோரிளங்கதிரேனென்னவென்னுளிருளறுக்கும்
மாமோகமாற்றுமதிளத்தியூரின்மரதகமே. (௧௨)

"பாசஹஸ்தம் ச தேவம் பாலார்கஸத்ருசப்ரபம்। தாமோதராய மந்த்ரேண தாரயேத்வாமபார்ச்வகே" "தாமோதரஸ்தடித்பாச தீப்ரகோவ நிஸம்ஹஜ" "இந்த்ரகோபகஸங்காசஃ பாசஹஸ்தோபராஜிதஃ ஸபாஹ்யாம்த்யந்தரம் தேஹம் வ்யாப்யதாமோதரஸ்ஸ்தித:" இத்யாதி ப்ரமாண ப்ரதிபந்நங்களான த்வாதசபுண்ட்ர தேவதையுடைய வர்ணாயுதாதிகளை யருளிச்செய்கிறார்.

மாமோகம் - மஹாமோஹங்களை, தேஹாத்மப்ரமஸ்வதந்த்ராத்ம ப்ரமதத்கார்யங்களையென்றபடி. மாற்றும் - நசிப்பிக்குமதான, மதிள் - ப்ராகார பரிவ்ருதமான, அத்தியூரில் - ஹஸ்திகிர்யலங்க்ருத ஸ்ரீகாஞ்சீநகரத்திலிருக்குமதான, மரதகம் - மரகதரத்நம், இங்கு ஸ்நிக்த ச்யாமள மஞ்சுளோஜ்வல விக்ரஹரான பேரருளாளரை மரகதரத்நமாக அத்யவஸித்தபடி. என்தாமோதரன் - மத்ஸ்வாமியான தாமோதரனாய், ஆமோதரம் - தரமாமோவென்றுமாறியந்வயிப்பது, தரமாமோ - சக்யமாமோ, என - என்னும்படி. அந்தர் பஹிர் வ்யாபித்து நியந்த்ருத்வேந வர்த்திக்கை மற்றொருவராலே சக்

உமோ.வென்னலாம்படி யென்கை. ஆகத்தின்-சரீரத்தினுடைய, உள் - அந்த:ப்ரதேசத்திலேயும், புறம் - பஹி: ப்ரதேசத்திலேயும், பிற்கழுத்தும் - பச்சிமகண்டத்திலேயும், தாம் - ஸ்வயம், ஓர் - அத்விதீயமான, இளம் - பாலனான, கதிரோன் - ஸூர்யன், என்ன - என்னலாம்படி,பாலஸூர்யஸவர்ணனு யென்றபடி. இங்குநின்று இதிசேஷ: இளங்கதிரோ னென்கிற பதத்தாலே உத்யதவஸ்த ஸூர்யன் விவக்ஷிதனாகையாலும் வாமனகாதையிலே தருணவருக்கசப்தத்தாலே யுதிதாவஸ்தஸூர்யன் விவக்ஷிதனாகையாலும் தயோர்வைலக்ஷண்ய மநுபவஸித்தமாகையாலும் வாமந தாமோதரயோர் நவர்ண ஸங்கர:. பாலஸூர்யேந்த்ரகோபயோர் வர்ணஸாஜாத்ய மனுபவ ஸித்தமாகையாலே தாமோதரனுக்கு இந்த்ரகோபவர்ணத்வப்ரதிபாதக ப்ரமாணத்தோடு விரோதமில்லை. என்னுள்-என்னந்த: கரணத்தினுடைய, இருள் - அந்தகாரத்தை, பாலஸூர்ய துருச்சேத்யமான வாந்தரதமஸ்ஸை யென்றபடி. அறுக்கும் - சேதிக்கும். (௨௪)

மூ.—கற்றுத்திரியுங்கலைகளைவெல்லுங்கருத்தில்வைத்து
பத்திக்குறுதுணைபன்னிருநாமம்பயில்பவர்க்கு
முத்திக்குமூலமெனவேமொழிந்தவிம்மூன்றுநான்கும்
தித்திக்குமெங்கள்திருவத்தியூரரைச்சேர்பவர்க்கே. (௧௩)

இப்படி த்வாதச வித புண்ட்ர தேவதைகளுடைய வர்ணாயுதாதிகளை நிரூபித்து இனிமேல் பகவத் பக்தி பரிவாஹ பூதமானகேசவாதி த்வாதசநாமத்தை மநஸ்ஸாலே தரித்து ததர்த்தசிந்தநத்தோடப்யஸிக்கும் பகவதாஶ்ரிதருக்கு பகவச்சரணாரவிந்தப்ராப்திபர்யவஸாயியான இக்காதாத்வாதசகம் ஸித்திப்ரதமாமென்று கொண்டு ப்ரபந்தத்தைத்தலைக்கட்டுகிறார்.

பத்திக்கு - பக்திக்கு, உறு-ஸந்நிஹிதமான, துணையாம் - ஸஹாயமான, பகவத்பக்திவர்த்தகமாகவும்,தத்பரிவாஹபூதமாயுமிருக்கையாலே பக்திஸஹசரியான வென்றபடி. பன்னிருநாமம்-கேசவாதி நாமத்வாதசகத்தை, இதுக்கு வைத்துஎன்கிறத்தோடந்வயம், கற்று-அப்யஸித்து, திரியும்-ஸஞ்சரியாநிற்கிற, வாதிபிரப்யஸ்யமானைகளாய் லோகத்திலே ப்ரசுரிக்குமவையான வென்றபடி. கலைகளை - வித்தைகளை, வெல்லும் - ஜயிக்குமவையான, கருத்தில்-மநஸ்ஸிலே, ஸகல வித்யாஸ்தாநக்ரஹண தாரணக்ஷமமானமனஸ்ஸிலே யென்றபடி.மநஸ்ஸை வித்யாவிஜயித்வேநநிர்தேசித்தது கேசவாதி நாமங்களுடைய நிர்வசநாதி லப்யார்த்த சிந்தந ஸாமர்த்ய ஸூசகார்த்தம். வைத்து - நிவேசித்து, பயில்பவர்க்கு-அப்யஸிக்குமவரான, இது ஆஶ்ரிதருக்கு விசேஷணம். எங்கள் - அஸ்மத்ஸ்வாமியான, திருவத்தியூரரை - ஶ்ரீஹஸ்திகிரிநகரவாஸியான பேரருளாளரை, சேர்பவர்க்கு- ஆஶ்ரிதருக்கு, இதுக்கு தித்திக்கு மென்கிறத்தோடந்வயம். முத்திக்கு - முக்திக்கு, மோக்ஷத்துக்கு, மூலமென - மூலமென்று, மொழிந்த - சொல்லப்பட்டதான, இம்மூன்றுநான்கும் - இந்தபன்னிரண்டு காதைகளும். சித்திக்கும் - ஸித்திக்கும், பலித்துவிடு மென்றபடி. தித்திக்கு மென்று பாடமானபோது அம்ருதம் போலே போக்ய தமங்களா மென்று பொருள். (௧௫)

ஏதம்......ஜாஸ: | ஸங்க்ஷேபாய தைவதாநாம்
த்வாதஶாநாம் விஶேஷ ஸம்ப்ரத்யய ஸித்தயே ||
நாஹம்......ஶரணாஶ்ச ||
ஸர்வம்......ஸஹ ||
இதி ஶ்ரீ கவிதார்க்கிக ஸிம்ஹஸ்ய.. ..வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஶ்ரீ த்வாதஶநாம வ்யாக்யானம் ஸம்பூர்ணம்.

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ

திருமந்த்ரச்சுருக்கு வ்யாக்யானம்.

ஸ்ரீஸூ......நஸா । ஸுஷ்டாக்ஷரார்த்த ஸங்க்ரஹமாயா
வ்யாவ்யாதிவைஷ்ணவஸ்ரீத்யை॥ க॥
ஸுநாஜிஹ்வேந... ..வஷிதா॥ உ॥
மாயாஜதா:......மஷிதாதிஸுஜ்ஞா:॥ ங॥

மூ.—நாவலர்மறைநாலொன்று நலந்திகழ்மறையென்றோரத்
தாவலுப்பலைக்குமோகத்தழுந்தி நின்றலமருகின்றீர்
தூவலம்புரியாமொன்றிற்றுலக்கமாமணிவண்ணமொன்றால்
காவலென்றகரத்தகவாய்க் கருத்துறக்காண்மினீரே. (க)

ஸ்ரீமத் ரஹஸ்யபதவ்யாதி ஸ்ரீரஹஸ்யத்ரயஸாராந்த பஹுப்ரபந்தங்களிலே தத்தத் புருஷவிசேஷ ருச்யநுகுண தரதம பாவாபன்ன ஸம்க்ஷேப விஸ்தார ப்ரக்ரியையாலே ஸ்வேநைவ பஹுப்ரகார வ்யாக்யாதமாய் ஸ்ரீமத் விரோதபரிஹாராக்ய க்ரந்த தூரோத்ஸாரித ஸம்பாவித ஸமஸ்த ஸம்சய ப்ரகரமான ரஹஸ்யத்ரயத்தினுடையஸாரார்த்தங்களைத்ரமிட ஸூக்தி ரஸிக ஸாரக்ராஹி ஸமாஜ சித்தரஞ்சநார்த்தமாக த்ரமிடகாதைகளாலே ஸங்க்ரஹிக்க ப்ரவ்ருத்தராய் ப்ரதம காதா தசகத்தாலே மூலமந்த்ராந்தர்கதங்களான வகாராதிகளுடைய ஸாரார்த்ததசகத்தை ஸங்க்ரஹிக்கக் கோலி முதல்பாட்டாலே யகாரார்த்தமான ஸர்வரக்ஷகதா பரிஜ்ஞாநத்தாலே தாபத்ரய தவாநல தஹ்யமான தசாயா மசரணராய் அகாதசோகஸாகர நிமக்நரான ஸம்ஸாரி சேதநர்களை ஸம்போதித்து தாத்ருச சோக நிவ்ருத்யர்த்தமாக வகாரார்த்தங்களை ஹ்ருதயாரூடீ கரித்துக்கொள்ளுங்கொ ளென்றுபதேசிக்கிறார்.

தாவு - தாவநத்தாலும்,அலுப்பு-நிர்வேதத்தாலும்,அலைக்கும்-அலைப்பிக்கும், மோகத்து - மோஹத்திலே, "ஓடியோடிப்பலபிறப்பும்பிறந்து" என்கிறபடியே ஸம்ஸார பதவீபரிதாவந ஜநித பரிஶ்ரம ப்ரதிஸந்தாநங்களாலே ஹ்ருதய மோஹாவஹமான வஜ்ஞாநாந்தகாரத்திலேஎன்றபடி.அழுந்திநின்று-மக்நராய்நின்று,நின்றென்கிறநிர்தேசத்தாலே மஜ்ஜநாவஸ்தைக்குச்சிரகாலாநுவ்ருத்தத்வம் பலிதம். அலமருகின்றீர் -தடுமாறினவர்களே, இது ஸம்போதநம். நாவு-ஜிஹ்வையிலே, அலர் - விகஸியாநிற்கிற, மறைநாலு - நாலுவேதங்களும், ஒன்று - சேர்ந்து, நலந்திகழ் - பெருமையோடு ப்ரகாசியாநிற்கிற, மறையென்று - வேதமென்ற, ஓர - விசாரிக்கும்படியான, ஓருகை விசாரிக்கை. ஸகலவேதார்த்தஸாரபூத ஜீவ பரமாத்ம ஸம்பந்த விசேஷ ப்ரதிபாதநத்தாலும் வேதத்ரய ஸாரபூதாகாரொகார மகாராத்மகமான அக்ஷர த்ரய ஸம்மேளநத்தாலும் ஸகல புருஷார்த்தீயமான ஸகல வேத ஸமஷ்டி ரூபத்வேந ப்ரஸித்தமாகையாலே வேதங்களுக்கும் வேத மென்று பாவிக்கும்படியான வென்றபடி. இது ப்ரணவத்துக்கு விசேஷணம். தூ - பரிசுத்தமான, உச்சாரணத்தாலும் அர்த்தஜ்ஞானத்தாலும் யதாதிகாரம் சுத்யாபாதகமான வென்றபடி. வலம்புரியாம் - தக்ஷிணாவர்த்த சங்காத்மகமான, யத்வா. லிப்யாத்மகமானவென்றபடி. ஒன்றில் - அகாரோகாரமகாரஸமுதாயத்வேந ஏகாக்ஷரதயா ப்ரதிபந்நமான ப்ரணவத்திலே, இதுக் ககவாயோ டந்வயம்,துலக்க - நிர்மலமான, மாமணிவண்ணம் - மஹாமணிஸ்வபாவமான, ஒன்றால் - ஒருவஸ்துவாலே, காவல்-ரக்ஷை, எல்லார்க்கு மிதி சேஷ:. நிர்மலமான மணி ஸ்வபாவமான வொரு வஸ்துவே ஸர்வரக்ஷகமென்றபடி. என்றகரத்தகவாய்- என்கிறஅகாரதாத்பர்யத்தால், அகிலஹேயப்ரத்யநீககல்யாணைகதாந ரூப:புருஷோத்தமஸ்ஸர்வரக்ஷக இத்யாகாரகமான ப்ரணவாந்தர்கதாகார தாத்பர்யத்தை யென்று நிர்களிதார்த்தம். இத்தால் அவதாதுரக்ஷணத் யேகோநவிம்ர்த்தகத்வேந தாதுபாடபடிதமானாலும் ப்ரஸித்தி ப்ராசுர்யத்தாலும் ப்ரயோக விசேஷத்தாலும் ப்ரக்ருதே ரக்ஷாமாத்ர பரத்வேந விவக்ஷிதமான தாதுவிலே கர்த்தரி விச் ப்ரத்யயாந்தமாகவாதல் டப்ரத்யயாந்தமாகவாதல் வ்யுத்பன்னமாகையாலேயோக வ்ருத்யாரக்ஷணபரமான ப்ரணவாந்தர்கதாகாரத்தை ரூடவ்ருத்யா நாராயணபரமாக வ்யவஸ்தாபித்தப

டி. கருத்து-ஹ்ருதயத்திலே, உற - ஸந்நிஹிதமாம்படி, ப்ரதிஷ்டிதமாம்படி என்ற படி. காண்மினீர்-காணுங்கோள். "உபதேசோ நிரர்த்தக:" என வாராதபடி யறியுங் கோளென்றபடி.

துவக்கமாவண்ணமொன்றாலென்கிறபாடம்சாதுதரம். அப்போது துவக்கமா - ஆரம்பமாகிற. அகரமுதலவெழுத்தெல்லா மாதிபகவன் முதற்றேயுலகு, என்கிறபடியே ஸர்வாக்ஷராரம்பமான வென்கை. வண்ணமொன்றால்-ஒருஅக்ஷரத்தாலே, அகரம் ஸர்வாதியாயிருக்குமாப்போலே ஸர்வஜகதாதியான ஸர்வேச்வரனாலே யென்று தாத்பர்யம். (௧)

மூ.—இளக்கமின்மயக்கந்தன்னா லெனக்குநானுரியேனென்னுங்
களக்கருத்தொன்றேகொண்டு கடுநரகடைந்துநின்றீர்
விளக்குமிவ்வெழுத்தினாலாம் வேற்றுமையேற்றிவாங்கித்
துளக்கமிலடிமைபூண்டுத் தூயராய்வாழ்மினீரே. (௨)

இப்படி யகாரத்தாலேஸர்வரக்ஷகதாத்யவஸாயம்பிறந்தாலும்ரக்ஷகனோடு தனக்குள்ள ஸம்பந்தத்தை யறியாதபோது அவனைக் கிட்டினாலை ஸுகரமல்லாமையாலே ஸம்பந்தஜ்ஞாநபூர்வகாநாதிகாலாநு வ்ருத்தத்ருடதரஸ்வேதரசேஷத்வ ப்ரமப்ரயுக்தஸாம்ஸாரிக க்லேச கர்ம விபாகாதி மல பரம்பராபிபூதனாக் குறித்து தாத்ருசசேஷத்வபரம நிவ்ருத்யர்த்தமாக அகாரோத்தரலுப்த சதுர்த்யபி ஸம்ஹிதமான தாஸ்யாக் யஸம்பந்தத்தை ருசிபூர்வகமாக வப்யுபகமித்துஜ்ஜீவியுங்கோளென்று அநுசாஸிக்கிறார்.

இளக்கமில் - சைதில்யமில்லாத, மயக்கந்தன்னால் - வ்யாமோஹத்தாலே, ஸ்வாத்மநி பகவச்சேஷத்வாஜ்ஞாநதார்ட்யத்தா லென்றபடி. அஜ்ஞாநத்துக்கு தார்ட்யம் அநாதித்வம். நானெனக்கு - எனக்குநானென்றந்வயிப்பது. நான்எனக்குஸ்வதந்த்ரன், என்னும் - என்கிற, ஏவம் ரூபமான வென்றபடி. களக்கருத்தொன்றே - விருத்தபுத்தியொன்றையே, கொண்டு - அவலம்பித்து, கடுநரகு - க்ரூரநரகங்களை ஸ்வரூபவிருத்தஸாம்ஸாரிகஜகதிகளை என்றபடி. அடைந்து நின்றீர் - ப்ராப்தராயிருக்கிறவர்களே, நின்றீர் என்றவித்தால் அவிவேகங்களாலே யனுபூதமான க்லேசாதிகளுக்கு ஸ்தைர்யம் ஜ்ஞாபிதம். அவ்வெழுத்து - அந்தஅக்ஷரத்தை, பூர்வகாதையிலே நிபாதிக ஸர்வரக்ஷக வாசகத்வேந ப்ரதிபந்நமான வகாரார்தத்தை யென்றபடி. விளக்கும்-ப்ரகாசிப்பிக்குமதான, சப்தஸாதுத்வத்தாலும் அர்த்தசாதுத்வத்தாலும் பரிஷ்கரிக்குமதான வென்றபடி. நாலாம் - சதுர்த்தியான, வேற்றுமை-விபக்தியை, அகாரத்தை நிக்விபக்திகமாக்கில் நகேவலாப்ரக்ருதி: ப்ரயோக்தவ்யா என்கிறபடியே ஸ்வரூபதோ ஸாதுத்வம் ப்ரஸங்கிக்கையாலும் குத்ருஷ்டி மதரீத்யா ப்ரதமாந்தமாக்கி மகாரார்த்தத்தோடே யபேதாந்வயமாய் யோஜிக்கில் ரக்ஷ்யரக்ஷகத்வ கார்யகாரணத்வரூபவிருத்ததர்மாதிஷ்டிதயோர்ஜீவப்ரஹ்மணோரபேதம் துர்வசமாய் ஸ்வரூபபேதப்ரதிபாதக ப்ரமாண சதபாதிதமு மாகையாலே யர்த்ததொ ஸாதுத்வம் ப்ரஸங்கிக்கையாலும் ப்ரணவத்தை யாத்மஸமர்பணத்தில் விநியோகிக்கிற ப்ரமாணாநுஸாரத்தாலே யனுஷ்டேயார்த்தப்ரகாசகார்த்தமாக "அக்நயஇதம்" என்னுமாப்போலே ஸம்ப்ரதாந சதுர்த்தி யவச்யம் பாவி யாகையாலும் அத்தைஸம்பந்த ஜ்ஞாநமாத்ர பரமாக யோஜிக்கும் பக்ஷத்திலும் தாதர்த்தய ஸம்பந்தத்திலே சதுர்த்தி ப்ரதிபதோக்தை யாகையாலும் ப்ரணவகதமான வகாரத்துக்கு சதுர்த்யந்தத்வமே மிகவுமுசித மென்று கருத்து. ஏற்றி-ஏறிட்டு, ப்ரஸஞ்ஜிப்பித்தென்றபடி. வாங்கி - லோபித்து, ப்ரணவத்துக்கு 'ஸுபாம்ஸு' பேதிஸமாஸைகபதபக்ஷே 'ஸுபோதாதுப்ராதிபதிகயோ'ரென்றுதல், த்ரைபத்யபக்ஷே 'ஸுபாம்ஸுலுக்' இத்யாதி ச்சாந்தஸப்ரக்ரியையாலே யாதல் லுப்தையான சதுர்த்தியை யனுஸந்தித்தென்றபடி. துளக்கமில் - சலந ரஹிதமான, 'பிறந்தபின்மறந்திலேன்' னென்கிறபடியே விஸ்மரண ரஹிதமான வென்றபடி. அடிமை-தாஸ்யத்தை, சேஷத்வந்தானே சேதநநிரூபிதமாய் சேதநநிஷ்டமானபோது தாஸ்யமாக பர்யவஸிக்குமென்று கருத்து. பூண்டு - பூட்டிக்கொண்டு, ஆபரணம் பூட்டிக்கொள்ளுமாப்போலே ருசியோடேயப்யுபகமித்து என்றபடி. ஸ்வாத்மநி லுப்தசதுர்த்தி தாத்பர்யவிஷயமான பகவத்தாஸ்யத்தை யநுஸந்தித்தென்று பலிதார்த்தம். தூயராய், பரிசுத்தராய், " [illegible] " என்கிறபடியே நிவ்ருத்தோபாயாநர்ஹதாரூபாசுத்திகராய் என்றபடி. வாழ்மினீர்-வாழுங்கோள். (௨)

ஸூ.—அப்பொருளிகழ்ந்துமற்றுங்கழிந் தழிந்தெழுவார்தாளில்
இப்பொருளிகழ்ந்தவன்பாலிரங்கி நீர்வணங்கிவீழ்வீர்
உப்பொருளுள்ளிமற்றோருயிர்களுக் குரிமைமாற்றி
யெப்பொருள்பயனுமீதென்றெண்ணி நீரெழுமினீரே. (௩.)

இப்படி பகவச்சேஷத்வாஸ்திக்யம் பிறந்தாலு மந்யசேஷத்வப்ரமம் கழியாத போது ஸ்வரூபவிருத்த துச்சேதந ஸாமாச்ரணமும் ப்ரஸங்கிக்கையாலேதன் நிவ்ருத்யர்த்தமாக உகாரார்த்தமான வந்யயோக வ்யவச் சேதத்தை யநுஸந்தித்துவ்யாவ்ருத்தராயிருங்கோ ளென்கிறார்.

நீர் - அந்யசேஷத்வ ப்ரமங்கழியாத நீங்கள், அப்பொருள்-அந்தவர்த்தத்தை, பூர்வோக்த நிருபாதிகஸர்வசேஷியையென்றபடி, யத்வா: அப்பொருள் - அகரார்த்தினுடையவர்த்தத்தை; பூர்வவதேவ பலிதார்த்த:. இகழ்ந்து-த்யஜித்து, ஆச்ரயியாதே யென்றபடி. மற்றும்-தத்வ்யதிரிக்தரான, கழிந்து - கழியப்பட்டு, ப்ரஷ்டைச்வர்யரா யென்றபடி, அழிந்து-நசித்து, எழுவார்-உத்பன்னராவாருடைய, அத்யந்தாஸ்திரைச்வர்யராய் உத்பத்திவிநாசயோகிகளான க்ஷுத்ரதெவதைகளுடைய வென்றபடி. இத்தாலிவர்களுக்கு ரக்ஷகத்வ சேஷித்வஸ்வரூபயோக்யதா பாவம் ஜ்ஞாபிதம். தாளில்-கால்களிலே, இதுக்குவணங்கி யென்கிறத்தோடந்வயம். இப்பொருள்-இந்தவர்த்தங்களை, பரித்ருச்யங்களான க்ஷுத்ரபுருஷார்த்தங்களை யென்றபடி. இகழ்ந்தவன்பால்-விட்டப்ரீதியாலே, அல்பாஸ்திரத் வேநாநுபவ ஸித்தங்களான க்ஷுத்ரபுருஷார்த்தங்களுடைய வலாப ப்ரயுக்தாசா வேதாளியாலே யென்றபடி. இரங்கி - சிதிலமநஸ்கராய், 'நநமேயம்' என்கிற மாநத்தைத்யஜித்து என்றபடி. வணங்கி-ப்ரணதராய், வீழ்வீர்-அதோகதிகளை அடைகிறவர்களே, உப்பொருள்-உகாரத்தினுடைய வர்த்தத்தை, உள்ளி - நினைத்து, "[illegible]" இத்யாதி ச்ரௌதப்ரயோகாநுஸாரேண அவதாரண பரமான வுகாரத்தாலே யநந்யார்ஹபகவச்சேஷத்வத்தை யத்வஸித்தென்றபடி. மற்றோர்-பகவத்வ்யதிரிக்தரான, உயிர்களுக்கு - சேதநருக்கு, உரிமை - சேஷத்வத்தை, மாற்றி - பரித்யஜித்து, தத்ஸம்ஸர்காதிகளை விட்டென்றபடி. எப்பொருள் பயனும் - ஸகலார்த்த பலமும், ஈது-இதுவே, இந்த பகவதநந்யார்ஹ சேஷத்வாத்யவஸாயமேஸகலவேதார்த்தஸகலசாஸ்த்ரபரிஜ்ஞாந மென்றபடி. என்றெண்ணி-இப்படி யநுஸந்தித்து நீர்-ஈத்ருசநிஷ்டாசாலிகளான நீங்கள், இப்படி இரண்டிடத்திலே நீரென்கிறபதம் ப்ரயோகித்தது வாக்ய பேதத்தாலும் தாத்பர்யபேதத்தாலும் தோஷமன்று அன்றிக்கே எண்ணினீர் என்றுசிறப்புனகரமாகவைத்து எண்ணினீர்-எண்ணினவர்களாய், என்றுபொருள கொல்லல் நலம். எழுமினீர்-ப்ரகாசியுங்கொள், பகவதேகஸமாச்ரயணப்ரவ்ருத்தராகுங்கோளென்றபடி. (௩)

ஸூ.—என்றுமோரேதமின்றி யிரவியுமொளியும்போல
வொன்றி நின்றுலகளிக்கு முகமிகழ்ந்தடிமைவைத்தீர்
ஒன்றுமூன்றேழுத்தாயொன்று மொன்றியொன்றுடையமுன்னே
யொன்றியவிரண்டையுள்ளி யுளரெனவுய்மினீரே. (௪)

இப்படி யகாரசதுர்த்யுகாரங்களாலே பகவத்ரக்ஷ்யத்வாநந்யார்ஹ சேஷத்வஜ்ஞாநம் பிறந்தாலும் திவ்யதம்பதி சரணாகதி கூடாமையாலே தாத்ருசஜ்ஞாநாந்தரைக் குறித்து, ப்ரணவாந்தர்கதமான உகாரத்துக்கு "அகாரேணோச்யதே விஷ்ணு: ஸர்வலோகேச்வரோ ஹரி: । உத்த்ருதா விஷ்ணுநா லக்ஷ்மீ: உகாரேணோச்யதே ததா ॥ மகாரஸ்து தயோர்தாஸ: இதி ப்ரணவலக்ஷண: ॥ அகாரஸ்த்[illegible] உகாரஸ்த்[illegible] ॥ மகாரஸ்து தயோர்தாஸ: இதி ப்ரணவலக்ஷணம்" இத்யாதி ச்ருதி பகவச்சாஸ்த்ராதி ஸித்தலக்ஷ்மீ பரத்வ யோஜனையிலே கண்டோக்தயாநந்தம்பதிசரண்யத்வ ரக்ஷ்யத்வாதிகளையநுசந்தித்து உஜ்ஜீவியுங் கோளென்கிறார்.

என்றும் - ஒருகாலத்திலும், ஓரேதமின்றி - ஓரவத்யமுமிலலாததாய், கதாசிதபி விச்லேஷரூபாவத்யம் இல்லாதபடி, யத்வா : கதாசிதபி வைரஸ்யரூபாவஸ்தா கந்தமில்லாதே யென்றபடி. இரவியுமொளியும் போல-ரவியும்ப்ரபையும்போலே, ஒன்றிநின்று - ஏகீபவித்து இருந்து, ப்ரபா ப்ரபாவந்ந்யாயத்தாலே நித்யஸம்ச்லிஷ்டமாய்நின்றென்றபடி. உலகு - லோகங்களை, அளிக்கும் - ரக்ஷிக்குமதான, உகப்யுகத்தை, திவ்ய தம்பத் யாத்மகயுகளத்தை யென்றபடி. இசழ்ந்து-த்யஜித்து, இத்தம்பதிகளில் பத்நீ ஸக்த சேஷித்வரக்ஷகத்வா ஜ்ஞாநத்தாலே திவ்யதம்பத்யாத்மக யுகளத்தைத் த்யஜித்தென்றபடி. அடிமை- தாஸ்யத்தை, கேவலபகவத்தாஸ்யத்தை யென்றபடி, வைத்தீர் - வைத்துக்கொண்டவர்களே, அப்யுகமித்தவர்களே என்றபடி. ஒன்று-ஏகாக்ஷரமாய்,மூன்றெழுத்தாய்- அகாரோகாரமகாராத்மகமாய், ஒன்றும் - ஏகீபவிக்குமதான, ஒன்றில்-ஒருபதத்திலே, ச்ருதியிலே அக்ஷரத்ரய ஸமுதாயாத்ம னைகாக்ஷரத்வேந ப்ரஸித்தமாய் ஸம்ஹிதேதரதசையிலே ஏகாக்ஷரீபவிக்குமதான ப்ரணவரூபவிலக்ஷண சப்தத்திலே என்று பிண்டிதார்த்தம். ஒன்றுடைய-ஒருவர்ணத்தினுடைய, முன்னே - பூர்வபாகத்திலே, ஒன்றிய-ஏகீபவித்ததான, இரண்டை-வர்ணத்வயத்தை, ப்ரணவத்திலே மகாராத்பூர்வ மேகார்த்த பாவத்தாலே இதரேதர யோகத்வந்த்வ ஸமாஸேந ஐகபத்யமாபன்னமான வகாரோகாரரூபவர்ணத்வயத்தை என்றபடி. உள்ளி- அத்யவஸித்து, விஷ்ணுவாசகமான வகாரமும் லக்ஷ்மீவாசகமான உகாரமும் பூர்வொக்த ப்ரக்ரியைகளாலே லுப்தசதுர்த்தீ த்விவசநாந்த த்வந்த்வஸமாஸமாகையாலே ஆக்நாவைஷ்ணவ ஹவிராதாநந்யாயேந ததுபய சேஷத்வத்தையநுஸந்தித்தென்றபடி. இந்த யோஜனையிலே ப்ரமாணாந்தரபலத்தாலே சேஷத்வாந்ய்யோகவ்யவச்சேதம் ப்ரணவத்திலார்த்தமாகக்கடவது. உளரென-ஸத்துக்களென்னும்படி.“ஸந்தமேநம்ததோவிது:” என்றஸத்தா சாலிகளா யென்றபடி. உய்மின்-உஜ்ஜீவியுங்கள். (௪)

மூ.—தத்துவமறுநான்கோடு தனியிறையன்றிநின்ற
சித்தினையுணராதென்றுந் திரடொகையாகின்றீர்
மத்தனைத்தனிவிடாதே மையிலாவிளக்கமாக்கி
உத்தமனடிமையான வுயிர்நிலையுணர்மினீரே. (௫)

இத் திவ்யதம்பதி சேஷத்வ ஜ்ஞாநம் பிறந்தாலும் தத் சேஷத்வாச்ரயனான தன்னை தேஹேந்த்ரியாதி விலக்ஷணனாக வறியாதபோது ஸ்வரூபோசித ஸாம்ப்ரதாயிக பலானுகூல ப்ரவ்ருத்தி கூடாமையாலே தாத்ருசஜ்ஞாநசபளரைக்குறித்து தந்நிவ்ருத்யர்த்தமாக மகாரார்த்தாநுஸந்தாந பூர்வகம் ப்ரணவவாக்யார்த்தத்தை அநுஸந்தியுங்கோளென்று அருளிச்செய்கிறார்.

தத்துவம் - தத்துவங்களுடைய, அறுநான்கோடு-சதுர்விம்சதியோடே, தனி-அத்விதீயனான, இறை-ஈசவரன், இன்றிநின்ற-ஆகாதேயிருக்குமவனான, ப்ரக்ருதி மஹதஹங்காரேந்த்ரிய தந்மாத்ரபூதரூப சதுர்விம்சதிகுண தத்வேப்ய: பரமபுருஷாச்ச விலக்ஷணனான வென்றபடி. இங்குத்ரிகுண வைலக்ஷண்யகதநம் புத்திகால சுத்தஸத்வ வைலக்ஷண்யத்துக்கு முபலக்ஷணம். இங்கு ப்ரணவாந்த்ய மகாரத்தை ‘மந அவபோதநே’ என்கிற தாதுவிலே கர்த்தரி ல்யுட் ப்ரத்ய யாந்தமாக வ்யுத்பன்னமாக்கி ஜ்ஞாநாச்ரயபரமாக யோஜிக்கும்போது அசேதநவ்யாவ்ருத்தியும் மஸபரிமாணே யென்கிற பரிமாண ஸாமாந்யார்த்தக தாதுவிலே நிஷ்பன்னமாக்கி, வாலாக்ரசதபாகஸ்ய, இத்யாதி ப்ரமாணாநுகுண்யேந பரிமாண விசேஷத்திலே விஜ்ரும்பித்து அணுபரிமாண பரமாக யோஜிக்கும்போது ஈச்வர வ்யாவ்ருத்தியும் ஸித்திக்குமென்று கருத்தாலே ஜீவனுக்கு பயவ்யாவ்ருத்தி சொன்னபடி. சித்தினை - ஜீவனை, என்றும்-ஒருக்காலும், உணராது-அறியாதே,திரள்-ஸங்கீபூதமான,தொகையாகி-மயூரபிஞ்சிகையாகி, நின்றீர்-ஸ்பஷ்டம். அசேதநேச்வரவிலக்ஷண ஜீவாஜ்ஞாநேநசிர:ப்ராண்யாதிலக்ஷண தேஹேந்த்ரிய மந: ப்ராணாதிகதம்பத்திலே யாத்மாபிமானம் பண்ணுகையாலே மயூரபிஞ்சநிகரம் போலே சபளஸ்வரூபமாய் நின்றவர்களே யென்றுபலிதார்த்தம். மத்தனை-மகாரவாச்யனான ஜீவனை, மகாரத்தையுடையவன் மத்தன். மகாரவாச்யனென்றபடி. இத்தால் “மகாரோயம் பஞ்சவிம்ஸ:ப்ரகீர்த்தித:” என்கிற தத்வ ஸாகரஸம்ஹிதாவசநம் ப்ரத்யபிஜ்ஞாபிதம், தனிவிடாதே-பிரித்துவிடா

தே, ஸமபிவ்யாஹ்ருத பூர்வபதார்த்தங்களோடே நிராகாங்க்ஷமாக்காதே யந்வயித்தென்றபடி. மையிலா-மஷீசூன்யமான, விளக்கமாக்கி-தீபமாக்கி, ஸரஸதோதுக்காஜ்ஞாநரஹிதஸ்வயம்ப்ரகாசரூபமாக லபித் தென்றபடி. இதுமந ஜ்ஞாநேஎன்கிறதாதுவிலே பூர்வோக்தப்ரக்ரியையாலேநிஷ்பன்னமானமகாரத்தாலேபலிதமானஜ்ஞாநஸ்வரூபத்வத்தைக்காட்டினபடி. இப்படி மகாரமாத்ரார்த்தத்தை யருளிச்செய்தினிமேல்பூர்வபத ஸமபிவ்யாஹாரலப்த வாக்யார்த்தத்தையருளிச்செய்கிறார். உத்தமன் - புருஷோத்தமனுக்கு, அடிமையான-தாஸ்யரூபமான, உயிர்நிலை-ஜீவஸ்திதியை, பகவத்தாஸ் யாத்மக ஜீவஸ்வாபாவிகாகாரத்தை யென்றபடி. உணர்மினீர் - அநுஸந்தியுங்கள். (ரு)

மூ.—தனதிவையனைத்துமாகத் தானிறையாகுமாயன்
உனதெனுமுணர்த்திதாராதுமக்கு நீருரிமையுற்றீர்
எனதிவையனைத்தும்யானே யிறையெனுமிரண்டுதீர
மனவெனுமிரண்டின் மாறுவல்வினைமாற்றுவீரே. (சா)

இப்படி விலக்ஷணாத்மஸ்வரூப ஜ்ஞாநம் பிறந்தாலும் தனக்கும்நிருபாதிக சேஷித்வ ஸ்வாதந்த்ர்யங்களுண்டென்கிற ப்ரமம் கழியாதபோது அநந்ய சரணத்வம் ஸித்தியாமையாலே தாத்ருசப்ரமாந்தரைக்குறித்துநமச்சப்தத்தை பதத்வயமாக்கி வ்யத்யயேநாந்வயித்து ததார்த்தத்தை யனுஸந்தியுங்கொளென்கிறார்.

இவையனைத்தும் - இந்தஸகலவஸ்துக்களும், தனதாக - தனக்கீசிதவ்யங்களாக, தான்-ஸ்வயம், இறையாகும் - ஈச்வரனுமவனான மாயன் ஆச்சர்யஸ்வபாவ்ன, இங்கு ஈச்வரனுக்கு ஆச்சர்யஸ்வபாவமாவது யதாவஸ்தி தேசேசிதவ்யஸ்வபாவ திரோதாந ஸாமர்த்யம். உனது-உங்களது, எனுமுணர்த்தி - என்கிறஜ்ஞானத்தை, தாராது-கொடாதேயிருக்கச்செய்தே, நீர் - அஜ்ஞாதநமச்சப்தார்த்தரானநீங்கள், உமக்கு-உங்களுக்கு, உரிமை - பாரதந்த்ர்யத்தை, அதீநத்வத்தை என்றபடி. உற்றீர் - அடைந்தீர்கள், ஸர்வநியந்தாவானவன் ஸ்வாஜ்ஞா ரூபசாஸ்த்ர முகத்தாலேஜீவாநாம்நிருபாதிக சேஷித்வ ஸ்வாதந்த்ர்யங்களை நிஷேதிக்கச் செய்தே தத்விருத்தமான சேஷித்வாபிமாநத்தையும் ஸ்வாதந்த்ர்யாபிமாநத்தையும் அடைந்திகோள் என்றபடி. மனவெனும் - மனவென்கிற, இரண்டின் - பதத்வயத்தினால், இவையனைத்தும் - இந்த ஸகல வஸ்துக்களும், தேஹேந்த்ரிய பார்யாபுத்ர பசுக்ஷேத்ராதி வஸ்துக்களெல்லாமென்றபடி. எனது - மதீயங்கள், நிருபாதிக மச்சேஷ பூதங்களென்றபடி. யானே-நான்தானே, இறை - ஈச்வரன், ஸ்வதந்த்ர னென்றபடி, எனும் இரண்டு - என்கிற வபிமாநத்வயமும், தீர - நசிக்கவே, - நமச்சப்தத்தை பதத்வயமாகச்சேதித்து மஃ ந என்றந்வயித்து மஃ என்கிற பாகத்தை சாந்தஸப்ர க்ரியையாலே லுப்த பூர்வோத்தர பாக மகாரமாத்ரமாக்கி ஷஷ்ட்யந் தாஸமச்சப்தமாக்கி யத்தோடே கிஞ்சித் என்றும் ஸ்வாதந்த்ர்ய மென்றும் பதத்வயத்தை அத்யாஹரித்து மஃ - கிஞ்சித் ப்ரதி ஸ்வாதந்த்ர்யம் ந - என்று யோஜிக்கும் போது எனக்கு நிருபாதிக சேஷமொன்றுமில்லை- நான் ஸ்வதந்த்ரனு மல்லேனென்ற போதம் பிறக்கையாலே பூர்வோக்த ப்ரம த்வயமும் நிவ்ருத்தமாகிறதென்று நிர்களிதார்த்தம். இத்தால் நமச்சப்தத்துக் கஹிர்புத்ந்யஸம்ஹிதோக்த ஸௌக்ஷ்மயோஜனையைக் காட்டினபடி. மாறு- நித்யமாக ப்ரவாஹரூபேண அநுவர்த்திக்கையாலே நித்யங்களான, வல் - த்ருடங்களான, தத்வ ஜ்ஞாநேதர துர்நிராஸங்களான வென்றபடி. வினை-கர்மங்களை, மாற்றுவீர்- போக்குங்கள். (சா)

மூ.—அழிவிலாவுயிர்கட்கெல்லா மருக்கனையழியாவீசன்
வழியலாவழிவிலக்குமதியெழமாயமூர்த்தி
வழுவிலாதிவையனைத்தும் வயிற்றில்வைத்துமிழ்ந்தமாலை
நழுவிலாநாரவாக்கி னுடிநீர்கணுகுவீரே. (எ)

இப்படி ப்ரணவ நமச்சப்தார்த்தஜ்ஞாநம் பிறந்தாலுமீச்வரனுக்கு ப்ராபகத்வோபயுக்த காரணத்வ நியந்த்ருத்வாதிகளையும் ப்ராப்யத்வொபயுக்த நித்யத்வ சுபாச்ரய வைசிஷ்ட்யாதிகளையு மறியாத போது பூர்வோக்த ....நார சப்தார்த்தத்தை யறியுங்கோளென்கிறார்.

அழிவிலா - நாசரஹிதமான, உயிர்கட்கெல்லாம், ஸர்வாத்மாக்களுக்கும், மதி-ஜ்ஞாநமானது, எழ - உதிக்கும்படி, அருக்கனைய்-ஸௌர்யவத் ப்ரகாசகனையென்றபடி. வழியலா - ஸந்மார்கமாகாத, வழி - மார்கத்தில் நின்றும், விலக்கும், நிவாரணம்

பண்ணுமவனுன, ஸ்வரூபதோ விகார ரஹிதனுன சேதனனுக்கு" ததாமி புத்தியோகந்தம்யேந மாமுபயாந்திதே" என்கிறபடியே ஸம்யக்ஜ்ஞாந ப்ரதானத்தாலே யநுசிதமார்க நிவர்த்தகரான வென்றபடி. இங்கு ஜீவாநாம் நித்யத்வபஹுத்வகதநத்தாலே 'நாரஸ்ஸ்ரிதி ஸர்வ ஸம்ஸாரம் ஸமூஹ: ஸமீக்ஷித: । நாமோ நாராணாமயநம் ய:' இத்யாதி ப்ரமாணநுஸாரத்தாலே ஸமூஹார்த்தகாண் ப்ரத்யயாந்தமான நாரசப்தத்தில் ப்ரக்ருதிபூதமான நரசப்தத்தை - "ரிக்ஷயெ" என்கிற தாதுவிலே - கர்த்தரி ட ப்ரத்யயாந்தமாக வ்யுத்பன்னமாக்கி ரசப்தத்தோடே நகைகாதிவத் நஸமாஸமாக்கி ஜீவபரமாக்கி இத்தாலே ஜீவாநாம் க்ஷயராஹித்யம் ஸித்திக்கும் என்கிற பக்ஷமும் ஈச்வரனுக்கு தன்னியந்த்ருத்வ கதநத்தாலே நரசப்தத்தை "ந்ரு நயெ" என்கிற தாதுவிலே பசாத்யஜந்தமாக வ்யுத்பன்னமாக்கி பரமாத்மபரமாக்கி, அத்தாலே நியந்த்ருத்வம் ஸித்த மென்கிறபக்ஷமும் பரிக்ருஹீதமாய்த்து. அழியா - நசியாதவனுன, ஈசன் - ஈச்வரனுன, இத்தால் ப்ராகுக்த ப்ரதமபக்ஷரீத்யா வ்யுத்பன்னமான நரசப்தத்தை பரமாத்மபரமாக்கி யத்தா லவனுக்கு க்ஷயராஹித்யம் ஸித்திக்கு மென்கிற பக்ஷ மனுக்ருஹீதமாய்த்து. மாய - ஆச்சர்யாவஹமான, மூர்த்தி - விக்ரஹத்தை யுடையவனுன "தத்விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய:" என்கிறபடியேவிலக்ஷணஸன்னிவெச விக்ரஹசாலியானவென்றபடி. இதுமற்றும் அபேக்ஷித குணுதி வைசிஷ்ட்யத்துக்குமுபலக்ஷணம். இத்தால்நாரசப்தத்தை 'நரஸம்பந்தி நோ நாரா:' இத்யாதி ப்ரமாணநுஸாரேணபரமாத்ம பரங்ருசப்தப்ரக்ருதிக ஸம்பந்த ஸாமாந்யார்த்தகாண்ப்ரத்யயாந்தமாக யோஜிக்கிறத்தாலேபரமாத்மஸம்பந்தித்வேநப்ரமாணஸித்தங்களானகுணவிக்ரஹாதி கள்லபிக்குமென்கிறபக்ஷம் ப்ரகடிதமாய்த்து. இவையனைத்தும்-இந்த ஸகல வஸ்துக்களையும், வழுவிலாது - சகலிதங்களாகாதபடி, வயிற்றில் - உதரத்தில், வைத்து - நிவேசித்து,உமிழ்ந்த - உத்கிரணம் பண்ணினவனுன, மாலை-ஸ்வாமியை, ப்ரளயகாலத்திலே ஸகல வஸ்துக்களையும் ஸ்வரூபைக தேசத்திலே யடக்கி ரக்ஷித்து ஸ்ருஷ்டிகாலத்திலே யதோசித ஸ்ருஷ்டிகர்த்தாவான ஸர்வஸ்வாமியையென்றபடி. இதுக்கு நாடி யென்கிறத்தோ டந்வயம். இத்தால் நார சப்தத்தை "நராஜ்ஜாதாநி தத்வாநி நாராணி" என்கிறப்ரமாணநு ஸாரேண ஜாதார்த்த காண் ப்ரத்யயாந்தமாக்கி யத்தாலே ஈச்வரனுக்கு ஜகத்காரணத்வம் ஸித்திக்கு மென்கிற பக்ஷம்ஸ்புடீக்ருதமாய்த்து, நழுவிலா-விச்லேஷ மில்லாத, ஸமாஸ தசாபன்னமான வென்றபடி. நாரவாக்கில் - நாரசப்தத்திலே, நாராயணசப்தாத்மக ஸமாஸாந்தர்கதமான நாரசப்தத்திலே யென்றபடி. நாடி - அந்வேஷித்து, ஸாவதாநரா யனுஸந்தித்து என்றபடி. நீர் - லப்தஜ்ஞாநரான நீங்கள், நணுகுவீர் - ஆச்ரயிக்கக்கடவீர்கள். (எ)

மூ.—வயனமொன்றறிந்துரைப்பார் வன்கழல்வணங்கவெள்கி
நயனமுள்ளின்றிநாளு நள்ளிருணண்ணிநின்றீர்
அயனமிவ்வனைத்துக்குந்தானவை தனக்கயனமென்றப்
பயனுமாய்ப்பதியுமான பரமனைப்பாடுமினீரே. (அ)

இப்படி நாரசப்தார்த்தஜ்ஞாநம்பிறந்தாலும்பஹிர்வ்யாப்திஜ்ஞாநமில்லாதபோது குலாலாதிவிலக்ஷணகாரணத்வமும் அந்தர்வ்யாப்திஜ்ஞாநமில்லாதபோது நிருபாதிக விலக்ஷண நியந்த்ருத்வமும் துர்போத மாகையாலே தாத்ருசவ்யாப்தித்வய ஜ்ஞாந ரஹிதரைக்குறித்து அயநசப்தத்தோடு நாரசப்தத்துக்குள்ள தத்புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸார்த்தங்களையும் அயன சப்த மாத்ரார்த்தங்களையும் உபதேசிக்கிருர்.

வயனமொன்று - ஒருவசநத்தை, ஒருசாஸ்த்ரத்தை என்றபடி. அறிந்து - நிரூபித்து ,உரைப்பார்-சொல்லுமவருடைய, ஸத்ஸம்ப்ரதாயத்தாலே சாஸ்த்ரார்த்தத்தை விசதீகரித்து உபதேசிக்குமாசார்யருடைய வென்றபடி. வன் - த்ருடங்களான, ஆச்ரிதரைக் கைவிடாதவையான வென்றபடி. கழல்-திருவடிகளை, வணங்க - ப்ரணிபதிக்க, வெள்கி - லஜ்ஜித்து, குருபஸதநாதி ப்ரதிபந்தக துர்மானத்தாலே யென்றபடி. நாளும் - ஒருகாலத்திலும், உள்நயநமின்றி - அந்தர்த்ருஷ்டியில்லாதே, நள் - த்ருடமான, இருள்- அந்தகாரத்தை, நண்ணி நின்றீர்- அடைந்திருந்தவர்களே, பரமா

த்மாவினுடைய வந்தர்வ்யாப்த்யாதி ஜ்ஞாநமில்லாமையாலே காடாந்தகாரமோஹிதர்களே யென்றபடி. தான் - விபுத்வாதி விசிஷ்டனானதான், இவ்வனைத்துக்கும் - இந்த ஸகலங்களுக்கும், "நரஸம்பந்திநோ நாரா:" என்கிறபடியே நாரசப்தார்த்தத்வேந பூர்வோக்தங்களான சேதநாசேதநாத்மக ஸகல வஸ்துக்களுக்கு மென்றபடி. அயநம் - ப்ராப்யமான, ப்ரவேச்ய னென்றபடி. ஸகலமு மவனுடைய ஸ்வரூபைகதேசத்திலே ப்ரவேசித்தடங்கிக்கிடக்குமென்று பலிதார்த்தம். "இண்கதௌ" என்கிற தாதுவிலேயாதல் அயகதா வென்கிறதாதுவிலே யாதல் கர்ம ல்யுடந்தத்வேந வ்யுத்பன்னமாய் வ்யாப்யபரமான வயநசப்தத்தோடு நாரசப்தத்துக்குள்ளதத்புருஷஸமாஸத்திலே ஸித்தையான பஹிர்வ்யாப்தியைக் காட்டினபடி. அவை. அந்த ஸகலவஸ்துக்களும், தனக்கு - ப்ரதிகாதாநர்ஹ ஸ்வபாவனானதனக்கு, அயனம்-வ்யாப்யங்கள், ப்ரவேச்யங்களென்றபடி. என்ற - என்றுசொல்லும்படியான, இத்தா லுக்தரீத்யா நாரசப்தத்துக்கும் வ்யுத்பன்னமானவயநசப்தத்துக்கு முள்ள பஹுவ்ரீஹி ஸமாஸஸித்தையான வந்தர்வ்யாப்தியை வெளியிட்டபடி. ஆகஇரண்டுஸமாஸங்களாலும் "யச்ச கிஞ்சிஜ்ஜகத்ஸர்வம் த்ருஶ்யதே ஶ்ரூயதேऽபிவா । அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயணஸ்ஸ்தித:" என்றதுபலிதம். பயனுமாய்-பலமுமாய், இத்தால் அயநசப்தத்தைப்ராப்யபரமாகயோஜித்தபடி. பதியுமான-ஆதாரமுமான, இத்தால அயநசப்தத்தையதிகரண ல்யுடந்தமாக யோஜித்தபடி. பரமனை. பரமபுருஷனை, பாடுமினீர்-காநம் பண்ணுங்கோள், நாராயணசப்தத்தாலே யர்த்தாநுஸந்தானபூர்வகமாக கீர்த்தியுங்கள் என்றபடி. (அ)

மூ.—உயர்ந்தவருணர்ந்தவாற்ற லுகந்தகுற்றேவலெல்லாம்
அயர்ந்துநீரைம்புலன்கட் கடிமைபூண்டலமருகின்றீர்
பயர்ந்திவையனைத்து மேந்தும்பரமனார்நாமமொன்றில்
வியந்தபேரடிமைதோற்றும் வேற்றுமைமேவுவீரே. (௯)

இப்படி ஜீவபரமாத்மஸ்வரூப ஸ்வபாவ தத்வ ஜ்ஞாநம் பிறந்தாலும் ஸ்வரூபோசித புருஷார்த்த ஜ்ஞான மில்லாதபோது ததுபாய ப்ரவ்ருத்தி கூடாமையாலே ததநபிஜ்ஞரைக் குறித்து பகவன் னித்ய கைங்கர்யாக்ய மகாபுருஷார்த்த பரையான நாராயணபதோத்தர சதுர்த்தியை பர்யாலோசியுங்கோ ளென்கிறார்.

உயர்ந்தவர் - உன்னதரால், அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தத்வேந நித்யோன்னதரான ஸூரிகளாலே யென்றபடி. உணர்ந்தவாற்றால் - ஸங்கல்பித்த ப்ரகாரத்தாலே, உகந்த - அபிலஷிதங்களான, நித்யஸூரிகளுக்கு யதாஸங்கல்ப மபிமதங்களான வென்றபடி. யத்வா: உயர்ந்தவர் - ஸர்வஸ்மாத்பரனான ஸ்ர்வசேஷி, உணர்ந்தவாற்றால்-ஸங்கல்பித்தபடியே, உகந்த-பூர்வவத். பரமபுருஷ ஸங்கல்பாநுகுணத்வேந ஸ்வாபிலஷிதங்களான வென்றபடி. குற்றேவலெல்லாம் - ஸர்வவித கைங்கர்யங்களையும், அயர்ந்து-விஸ்மரித்து, ஸ்வரூபோசித புருஷார்த்தத்தைஇகழ்ந்து என்றபடி. இங்குகதாசிதபி அநநுபூதமான பரமபுருஷார்த்தத்தை விஸ்மரித்ததாக நிர்தேசித்தது ஸம்ஸாரிணாமபி ஸூரிவந் தாயதநக்ரமத்தாலே ப்ராப்தி யுண்டாகையாலே ஸித்தப்ராய மென்று ஸூசநார்த்தம். நீர் - ஸாம்ராஜ்யார்ஹ ராஜகுமார ந்யாயேந பரமபுருஷார்த்த ஸ்வரூபயோக்யரான நீங்கள், ஐம்புலன்கட்கு - பஞ்சேந்திரியங்களுக்கு, அடிமை - கிங்கரபாவத்தை, பூண்டு - பூட்டிக்கொண்டு, அலமருகின்றீர் - தடுமாறிநின்றீர்கள், "வயந்துகிங்கராவிஷ்ணோ:" என்கிறபடியே ஸ்வரூபப்ராப்தமானவிஷ்ணுகிங்கர பாவத்தை, த்யஜித்து "யூயமிந்திரியகிங்கரா:" என்கிறபடியே ஸ்வரூபவிருத்தமான விந்த்ரியகிங்கர பாவத்தைவஹித்து, ததர்த்த வ்யாபாரங்களாலேபரிஸ்ரமிந்திர்களென்றபடி. பயர்ந்து வ்யாபித்து, இவையனைத்தும்ஏந்தும்-இந்தஸகலவஸ்துக்களையும்தாங்குமவரான, பரமனார்-பரமபுருஷனுடைய, நாமமொன்றில்-ஒருதிருநாமத்திலே, ஸகல பகவந்மூர்த்தி ஸாதாரண மாகையாலும் ஸகலவஸ்துவ்யாபகத்வப்ரதிபாதக மாகையாலும் பகவன் நாமாந்தரங்களில் காட்டில் வ்யாபகதரமான நாராயணசப்தத்தி லென்றபடி. வியந்த - விலக்ஷணமான, நிருபாதிகமான வென்றபடி. பேர் - மஹத்தரமான, உத்தராவதி ரஹிதமானவென்றபடி. அடிமை - கைங்கர்ய

த்தை, தோற்றும். போதிக்குமதான, வேற்றுமை - விபக்தியை, மெவுவீர் - ஆத ரியுங்கோள், நிருபாதிக நித்ய கைங்கர்ய ரூப மஹாபுருஷார்த்தப்ரதிபாதக சதுர்த்தி யைப்பரிசீலியுங்களென்றபடி. இங்கு வியந்தவென்கிற வைலக்ஷண்யகதநத்தாலே "சர்வம்பரவசந்துக்க" மிதிநியமஸ்ய கர்மாதீநபாரவச்ய விஷயத்வேந முக்திதசாபாவி நிருபாதிக கைங்கர்யஸ்ய புருஷார்த்த தாநுப்பத்தி சங்கை யில்லை யென்று ஸூசி தம். அடிமைசொல்லுமென்று ப்ரயோகியாதேதோற்றுமென்றுப்ரயோகித்தது தாதர்த் யாநுசிஷ்டையான சதுர்த்திக்கு தாதர்த்தய கார்ய பூத கைங்கர்யத்திலே லக்ஷணை யென்றுஸூசநார்த்தம். சுப்விபக்தௌலக்ஷணு திநிஷேதப்ரவாதம்மூலசைதில்யேநமந் த்ரப்ராயமாகையாலே யுபேக்ஷ்ய மென்று கருத்து. (சு)

மூ.—எண்டிசைபரவுஞ்சீரோ ரெங்களுக்கீந்தவெட்டில்
உண்டவாறுரைப்பார்போல வொன்பதுபொருளுரைத்தோம்
பண்டுநான்மறையோர்காக்குமா நிதியிவையனைத்தும்
கண்டவர்விள்ளார்விள்ளக் கருதுவார்காண்கிலாரே (ம)

ஸர்வலோகப்ரஸித்தரான வாசார்யர்களாலே ஸார்த்த முபதிஷ்டமான மூல மந்த்ரத்திலே நாம்விசதீகரித்த இவ்வர்த்தங்கள் மஹாநிதிவ தத்யந்த கோபநீயங்க ளென்று கொண்டு ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

எண்டிசை - எட்டுதிக்குகளிலேயும், பரவும் - ப்ரஸரிக்குமவையான, சீரோர்- திருக்கல்யாணகுணங்களையுடைய வாசார்யர்களாலே, எங்களுக்கு "சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம்ப்ரபந்நம்" என்று ப்ரபன்னரான வெங்களுக்கு, ஈந்த - உக்தமான, ஸார்த்தமாக வுபதிஷ்டமானவென்றபடி, எட்டில் - திருவஷ்டாக்ஷரத்தில், ஒன்பது- நவஸங்க்யாகங்களான, பொருள் - அர்த்தங்களை, அகார சதுர்த்யுகார மகார நமச் சப்த நாரசப்தாயநசப்த சதுர்த்தி களுடைய வர்த்தங்களை யென்றபடி. இங்கு உகாரத்துக்கு யோஜநாபேதே நார்த்த த்வய முண்டாகையாலே நவஸங்க்யாபூரணங் கண்டுகொள்வது. நமச்சப்த நாராயண சப்தாயந சப்தங்களுக்கு யோஜநாபேதேநா ர்த்தபேத முண்டேயாகிலு மவைத்துக்கு ப்ரயாஸபேத மில்லாமையாலே ப்ரதக் பரிகணநம் பண்ணுதொழிந்தபடி. உண்டவாறு - அநுபவித்தபடியே, உரைப்பார் போல-ப்ரதிபாதிக்குமவர்போல, உரைத்தோம்-ப்ரதிபாதித்தோம். ஶ்ருதி சிரோகு ஹ்யங்களான வர்த்தங்களை ஆசார்யோபதேசத்தாலேயநுபவபர்யந்தமாக வறிந்து அநு பூதவௌகிகார்த்தகதநம் பண்ணுமாப்போலே விசதமாக ப்ரதிபாதித்தோ மென்ற படி. பண்டு-ப்ராசீநங்களான, நான்மறையோர்-நாலுவேதங்களுடையவர்களாலே, ஸகல வேத ஸார வேதிகளாலே என்றபடி. காக்கும் - ரக்ஷிதமான, மாநிதி-மஹா நிதியான, மஹாநிதிவத் தைர்கோபாயிதங்களான, இவையனைத்தும் - இந்தஸகலா ர்த்தங்களையும், கண்டவர் - அறிந்தவர், விள்ளார் - ப்ரகாசிப்பியார்கள், லோகத்தி லே நிதிலபித்தால் கோபிக்கு மத்தனை போக்கி ப்ரகடீகரிக்க விரகில்லை யிறே. விள் ளக்கருதுவார் - ப்ரகாசிப்பிக்க நினைக்குமவர்கள், காண்கிலார் - காணமாட்டார்கள், மந்த்ரப்ரகாசந ப்ரவ்ருத்தருக்கு மந்த்ரார்த்தம்நெஞ்சில்படவேயில்லை யென்று அறிதி யிடலாவ தென்றபடி. (ம)

ஜகம்வக-ஊாஹாணோ......ஊாஸ்:।சுஷாக்ஷாகூ-வைஹூ ஹ
மாயாவ்யாவ்யஜ ஞா-ஹவவிதீ தெ்ய॥
நாஹம்வெதீஹ......யாணாஶூ॥
சவ்யூ...........சுஹம்॥
ஜதிஸ்ரீதூாதயாய ....வக-ஊாஹாணவீாாவவவிஷ-ஷ:
கூ்திஷ-சுஷாக்ஷாகூ-வைஹூ ஹ மாயாவ்யாவ்யாநம்.

திருமந்த்ரச்சுருக்கு வ்யாக்யானம் முற்றிற்று.

ஸ்ரீமதேநிகமாந்தமஹாதேசிகாயநம:.

ஸ்ரீ

த்வயச்சுருக்கு வ்யாக்யானம்.

ஶ்ருஹ்......நக்ஷா । ஶ்ரீகௌஸ்துபாத்யுஸம்ஹ்ரஹ
ராயா விவரணீய ஶரணவிஜ வீத்ரைதை॥
ஜநாதிவ்ருந்தே......வதிதோ॥
ராயாஜஜோ:......ரஜஸதாதிஶக்ஷ:॥

மூ.—இன்னமுதிற்பிறந்தாளிதங்கேட்கவுரைத்தபிரான்
பொன்னருளான்மறைமௌலியிற்பூண்டவிரண்டிசைத்து
தன்னுரைமிக்கத்தனமிதெனத்தந்தவேதகத்தில்
துன்னுபொருள்கள்பத்துந்தொலையாநிதியாகின்றவே. (க)

இப்படி மூலமந்த்ரத்தாலே வ்யுத்பாதித ஸ்வரூபோபாயபுருஷார்த்தனை அதிகாரிக்கு ப்ரதமபத ப்ரதிபன்ன ஸ்வரூபாநுகுணமான த்ரீதீயபதோத்தர சதுர்த்தீ ப்ரதிபன்ன புருஷார்த்த விசேஷத்துக்கு ஸாதநத்வேந மத்யம பதார்த்த ஸாமர்த்ய ஸித்தமான உபாய விசேஷத்தை தத்பல சோதந பூர்வகம் ஸேதிகர்த்தவ்யதாகமாக விசதீகரிக்கையாலும் ப்ரதமாக்ஷர த்ரிதீயபதங்களிலே ப்ரதிபன்னமான பரமசேஷி பரமப்ராப்யத்வத்தை பத்நீவிசேஷ ஸம்பந்தத்தாலே யுஜ்வலீகரிக்கையாலும் மூலமந்த்ர விவரண பூதமாய் அஷ்டாக்ஷரோபதேச்ய மந்த்ரத்வ ஸாதர்ம்யத்தாலே மூலமந்த்ர ப்ரத்யாஸன்னமாய் பகவத்பாஷ்யகாரராலே ஸ்ரீமத் கத்யத்திலே ச்சாயயாவ்யாக்யாதமான ஸ்ரீமத்வயாக்ய ப்ரபத்தி கரணமந்த்ரத்தினுடைய ஸாரார்த்த தசகத்தை காதா தசகத்தாலே ஸங்க்ரஹிக்க ப்ரவ்ருத்தராய் ப்ரதமம் ப்ரக்ருதமந்த்ரத்துக்கு ச்வேதாச்வதரஸ்ருத்யாதிப்படியேப்ரவ்ருத்திமந்த்ராந்தராபேக்ஷயாவைலக்ஷண்ய ஜ்ஞாபகார்த்தமாகவும் 'யேநகேநாபி ப்ரகாரேண த்வய வக்தா த்வம்' என்றும் 'த்வய மர்த்தாநுஸந்தாநேந ஸஹ ஸதைவம் வக்தாத்வம்' என்றுஞ்சொல்லப்பட்ட மந்த்ர ததர்த்த விஷயக நிஷ்கம்ப நிஷ்டா ஸித்த்யர்த்தமாகவும் கடஸ்ருதி பகவச்சாஸ்த்ராதி ஸித்தமான விம்மந்த்ர மாஹாத்ம்யாதிசயத்தையும் ஸதாசார்யோபதேச பரம்பராகதங்களான ததர்த்தங்களுடைய கௌரவ போக்யதாதிசயங்களையும் ஸ்புடீகரிக்கிறார்.

இன்னமுதில் - போக்யமான வம்ருதத்திலே, பிறந்தாள் - உத்பன்னையானவள், இதம் - ஹிதத்தை, கேழ்க்க-ப்ரச்நம்பண்ண, போக்யதமாம்ருதோத்பன்னையானபிராட்டி மாத்ருத்வாவிநாபூத நிருபாதிக வாத்ஸல்யத்தாலே ஸர்வஜகத் பிதாவானவீச்வரனை துரந்த ஸம்ஸாரஸாகரநிமக்நர்களானதன் ப்ரஜைகளுக்குத் தாரணோபாயத்தை ப்ரச்னம் பண்ண வென்றபடி. பிராட்டிக் கம்ருதோத்பன்னத்வ கதநத்தாலே போக்யத்வோத்கர்ஷ ப்ரயுக்த பதிவால்லப்யாதிசயஸ்ஸூசிதஃ. இத்தால் ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதாவதாரோபோத்காதமான ப்ரச்நத்தைக்காட்டினபடி. உரைத்த - உபதேசித்தவனை, பிரான் - மஹோபகாரகனாலே, ஸ்வ சரணாரவிந்த ப்ரபத்தியே ஸர்வலோக பரமஹித மென்று ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதையிலே உபதேசித்த ஸர்வபரமோபகாரக பரமபுருஷனாலேயென்றபடி. இதுக்குத் தந்த வென்கிறத்தோடந்வயம். இதுக்கத்யந்த பதிவல்லப ஸ்ரீ கர்த்ருக ஸம்ஸாரி ஹித ஸாமான்ய ப்ரச்நத்தை ஸ்ரீப்ரச்நஸம்ஹிதாவதார மூலத்வேந ப்ரதிபாதிக்கையாலும் தத் வக்தாவான பரமபுருஷனை மஹோபகாரகத்வேநநிர்தேசிக்கையாலு மிந்தஸம்ஹிதைக்கு விஸ்ரம்பணீயத்வாதிசயஸ்ஸூசிதஃ. பொன்னருளால் - ஸ்ப்ருஹணீய க்ருபையாலே, மறைமௌலியில் - ஸ்ருதிமௌலியிலே, பூண்ட-அனுப்ரவிஷ்டமான, இரண்டு - வாக்யத்வயத்தை, இசைத்து-சேர்த்து, ஏகீகரித்தென்றபடி. கடஸ்ருதியிலே பிரிய வோதி சேர்த்தநுஸந்திக்கச் சொல்லி விஹிதமான விம்மந்த்ரத்தினுடைய ஸமுதாயஜ்ஞான பூர்வக ஸக்ருதுச்சாரணம் ஸம்ஸார தாரக மென்கிறப்ரபாவாதிசயம் ப்ரத்யபிஜ்ஞாபிதம். இது - இந்தமந்த்ரம், தன்னுரை-தன்னுடையஸூக்திகளிலே, மிக்க-அதிசயிதமான, தனமென-தநமெ

ன்று, தந்த - உக்தமான, வேத வேதாந்த பகவச்சாஸ்த்ராதி ரூப ஸ்வோக்திகளிலே இம்மந்த்ரம் மஹாதநவத் அத்யந்த கோபநீய மென்று சீர்மையோடே உபதிஷ்டமானவென்று பிண்டிதார்த்தம். இத்தால், ஸ்ரீப்ரச்ந ஸம்ஹிதையிலே வர்ணோத்தார ப்ரக்ரியையாலே பகவதுபதிஷ்டமான விம்மந்த்ரத்தினுடைய ப்ரபாவாதிசயஸ் ஸூசிதஃ. வேதகத்தில் - வேதகத்திலே, அகிஞ்சநாநுஷ்டேய ஸாங்கப்ரபதநா வேதகமான ஸ்ரீமத் த்வயாக்ய மந்த்ரத்தி லென்றபடி. துன்று - வ்யாப்தமான, தாத்ருச மந்த்ர ப்ரதிபாத்யமான வென்றபடி. பொருள்கள்பத்தும் - அர்த்த தசகமும், ஸ்ரீசப்த மதுப் ப்ரத்யய நாராயண சரண சரண சப்த ஸோபஸர்கதாதூ த்தம புருஷோ த்தரகண்டகத ஸவிசேஷண நாராயண சப்த சதுர்த்தீ நமச்சப்தங்களுடைய வக்ஷ்யமாணார்த்த தசகமு மென்றபடி. தொலையா-மாளாத, நிரந்தரோபயோகேப்யபரிஹீநமான வென்றபடி. நிதியாகின்ற - நிதியாயிருந்தது, நிதிவ தத்யந்த கோப்யபோக்ய மென்றபடி. (௧)

மூ.—அருவுருவானவைதன்னையடைந்திடத்தானடைந்து
வெருவுரைகேட்டவைகேட்பித்தகற்றும்வினைவிலக்கி
இருதலையன்புதனுலெம்மையின்னடிசேர்த்தருளும்
திருவுடனேதிகழ்வார்சிறந்தாரெங்கள்சிந்தையுள்ளே. (௨)

இனி, மந்த்ர கடக சப்தார்த்தங்களை க்ரமேண வருளிச்செய்யத்துடங்கி ப்ரதமம் "[illegible]" என்று பகு மங்களகுண கர்ப்பத்வேநாபிஸம்ஹிதமான ஸ்ரீசப்தத்தினுடைய ஸ்ரீயதே ச்ரயதே ச்ருணோதி - ச்ராவயதி - ச்ருணாதி - ச்ருணாதி என்று பகவச்சாஸ்த்ராதிகளிலே ஷோடா தர்சிதங்களான வர்த்தங்களை யாகாங்க்ஷித ஸமுசிதார்த்த ஸமந்வயத்தாலே பரிஷ்கரித்துக்கொண்டு அருளிச்செய்கிறார்.

அருவுருவானவை - சேதநாசேதநங்களான வஸ்துக்கள், தன்னை - தன்ஸ்வரூபத்தை, அடைந்திட-ஆச்ரயித்துக்கிடக்க,சேதநாசேதநங்களாலே ஆதாரத்வேந ஸ்ரீயமாண ஸ்வரூபையா யென்றபடி. ஏதேநபஹிர்வ்யாப்திஃ பலிதா. இத்தால் "[illegible]" என்றுதீர்க்கஸந்நியோகக்விப் ப்ரத்யாந்தமான ஸ்ரீசப்தத்தை 'சேதநாசேதநைஃ ஸ்ரீயத இதி ஸ்ரீஃ' என்று 'ஸ்ரீஞ்ஸேவாயாம்' என்கிறதாதுவிலே க்ருத்யல்யுடோபஹுளமிதி பாஹுளகத்வேந கர்மணி வ்யுபந்நமாக்கி அதுக்கபேக்ஷிதமான கர்த்ருகாரகத்தையும் சேதந ரூபமாக ஸ்புடீகரித்து பஹிர்வ்யாப்தி பரத்வேந விவரித்தபடி. இங்கு 'ச்ரயந்த்யேதாமிதி ஸ்ரீஃ' என்று ப்ரக்ரியாகௌமுதீயிலே ப்ரதர்சிதையான கர்மவ்யுத்பத்தியை 'கர்த்தரிக்வி' பிதிஸூத்ரவிரோதோத்பவாநேகப்ரௌடமநோரமையிலேதூஷித்தது. "[illegible]" இத்யார்ஷ நிர்வசநா பரிஜ்ஞாந மூலமாகையாலே யநாதரணீய மென்று கண்டுகொள்வது. தான் - ஸ்வயம், அடைந்து - ஆச்ரயித்து, அந்தர்வ்யாபித்தென்றபடி. சேதநாசேதநங்களை யிதி சேஷஃ. இத்தா லுக்தரீத்யா நிஷ்பந்நமான ஸ்ரீ சப்தத்தை ஸ்வரஸதஃ கர்த்தரி வ்யுத்பன்னமாக்கி யதுக் கபேக்ஷிதமான கர்மகாரகத்தையும் சேதநாசேதந ரூபமாக ஜ்ஞாபித்து அந்தர்வ்யாப்திபரமாக யோஜித்தபடி. தத் புருஷ பஹுவ்ரீஹி ஸமாஸத்வயா பன்னமான நாராயண சப்தம் போலே கர்மகர்த்ருத்வயா பன்னமான ஸ்ரீசப்தமும் பஹிரந்தர்வ்யாப்தி பரமாகலா மென்றுகருத்து. ஆகையாலிறே பகவத்பாஷ்யகாரரும் ஸ்ரீமத் கத்யத்திலே பகவந்நாராயண வென்று பக்ரமித்த நேரிலேபகவதீம் ச்ரியம் என்று ப்ரயோகித்தருளினர். ஆகையாலிறே ஸ்ரீயதே ச்ரயதே என்கிறவ்யுத்பத்தித்வயத்திலே ஸம்பாவித யோஜநாந்தராபேக்ஷயா இந்தயோஜனையே ப்ரதாநமாகிறது. வெருவுரை-பயோக்திகளை, கேட்டு-ஆகர்ணித்து, சோகஸாகரநிமக்நரான ஸம்ஸாரிகளுடைய வார்த்தசப்தத்தைக் கேட்டென்றபடி. இத்தால் ச்ருணோதீதி ஸ்ரீஃ என்று ச்ரு ச்ரவணே யென்கிறதாதுவிலே ப்ருஷோதராதித்வேந ஸாதுவாக நிஷ்பன்னமாக்கி யதுக்கபேக்ஷிதமான கர்மகாரகத்தையும் ஸமர்பித்து யோஜித்தபடி. அவை - அந்தபயோக்திகளை, கேழ்ப்பித்து - ச்ரவணம் பண்ணிவித்து, ஈச்வரனுக்கிதிசேஷஃ. தன்னாலே ச்ருதமான ஸம்ஸாரிகளுடைய வார்த்த சப்தத்தை யீச்வரனுக்கு ச்ருவிப்பித்தென்றபடி. இத்தால் ச்ருணோதியை யந்தர்பாவிதண்ய

ர்த்தமாக யோஜித்தபடி. அகற்றும்-விச்லேஷிப்பிக்குமவையான, வினை - கர்மங்களை விலக்கி - நிவர்த்திப்பித்து, பகவச்சரணாரவிந்த ப்ராப்தி ப்ரதிபந்தகத்வேந ஸம்ஸார சக்ர பரிப்ரம கரங்களான வநாதிகால ஸஞ்சித கர்மங்களை "வேரிமாருதபூமேலிருப்பாள் வினைதீர்க்கு" மென்கிறபடியே நிச்சேஷமாக நிவர்த்திப்பித்தென்றபடி. இத்தால் ஸ்ரீசப்தத்தை ஸ்ருணாதிநிகிலாந்தோஷாந் இத்யாதி ப்ரமாணநுஸாரேண ஸ்ருஹிம்ஸாயா மென்கிறதாதுவிலே ப்ருஷோதராதித்வேந ஸாதுவாக நிஷ்பன்னமாக்கி யதுக்கபேக்ஷித ப்ரமாணிகார்த்த ஸமர்பணத்தாலே பரிபூரித்தபடி. இருதலை - உபய கோடிகளிலும், சேஷிவிஷயத்திலும் சேஷவிஷயத்திலுமென்றபடி. அன்புதனால் - ப்ரேமத்தாலே, எம்மை-நித்யஸம்ஸாரிகளான நம்மை, இன்னடி - போக்யங்களான திருவடிகளை, பகவச்சரணாரவிந்தங்களை யென்றபடி. சேர்த்தருளும் - அடைவிக்குமவளான, சேஷசேஷிணோ: பரஸ்பராலாப ரூபமான வவத்யம் கழியும்படி இருவரையும் ஸங்கடிப்பிக்குமவளான வென்றபடி. சேதநருக்கு அபவர்க பர்யந்த குணபரிபாகத்தை யுண்டாக்கு மவளான வென்றுபலிதார்த்தம். இத்தால் ஸ்ரீசப்தத்தை ஸ்ருணாதி சகுணைஜகத் என்கிற ப்ரமாணநுஸாரேண ஸ்ரீஞ்பாகே என்கிறதாதுவிலே கர்த்தரிக்வி பந்தமாக நிஷ்பன்ன மாக்கி யபேக்ஷிதார்த்தோபஸ்தாபநத்தாலே பரிஷ்கரித்தபடி. திருவுடனே-பெரியபிராட்டியோடே,திகழ்வார் - ப்ரகாசிக்குமவரான, பேருளாளர் எங்கள் - எங்களுடைய, சிந்தையுள்ளே - சிந்தாப்யந்தரத்திலே, சிறந்தார் - விஜ்ரும்பித்தார். ஸ்ரீசப்த கர்பித கல்யாணகுணவிசிஷ்டையான பிராட்டியோடே கூட ஹ்ருதயங்கமரானாரென்றபடி. (௨)

மூ.—ஒருயிராய் நின்ற வொண்சுடரின்பவுருத்தனிலும்
பேருருவத்திலும்பின்னதிற்றோற்றுமுருக்களிலும்
ஒருருவானவுலகிலுமேற்குமுருக்களினால்
சேருதன்மன்னுசெய்யாளன்பர்நம்மனஞ்சேர்ந்தனரே. (௩)

இப்படி ஸ்ரீசப்தார்த்தங்களை நிர்வசித்தினிமேல் "சாந்தாநந்த மஹாவிபூதி பரமம்யத்ப்ரஹ்மரூபம் ஹரே: மூர்த்தம்ப்ரஹ்மத தோபிதத்ப்ரியதரம்ரூபம்யதத்யத்புதம்। யாந்யந்யாநி யதாஸுகம் விஹரதோ ரூபாணி ஸர்வாணி தாந்யாஹு: ஸ்வை ரநுரூப ரூபவிபவைர்காடோப கூடாநிதே" என்கிற ச்லோக ப்ரதர்சித நித்யயோக மதுப்ப்ரத்யயார்த்தத்தை யருளிச்செய்கிறார்.

ஒருயிராய்நின்ற - ஏகாத்மாவாயிருந்த, ஸகலஜகதேகாந்தர்யாமிபூதமான வென்றபடி. இத்தால் ஸர்வவஸ்துஸாமாநாதிகரண்யார்ஹத்வம் பலிக்கையாலே த்ரிவிதபரிச்சேதராஹித்ய ரூபாநந்த்யாந்தர்கத வஸ்து பரிச்சேத ராஹித்யமுகேநா நந்த்ய முபலக்ஷிதமாகிறது. ஒண்-உஜ்வலமான, ஸத்தைகரூபமான வென்றபடி. சுடர் -ஜ்யோதிராத்மகமான, ஜ்ஞாநாத்மகமான வென்றபடி. இன்ப-ஆநந்தரூபமான, அநந்தத்வ ஸத்யத்வ ஜ்ஞாநத்வா நந்தத்வ விசிஷ்டமான வென்று பிண்டிதார்த்தம். இது ஹேயப்ரதிபடத்வ ரூபா மலத்வத்துக்கு முபலக்ஷணம். உருத்தனிலும் - ரூபத்திலேயும், ஸ்வரூப நிரூபக குண பஞ்சக நிரூபிதமான திவ்யாத்ம ஸ்வரூபத்திலேயு மென்றபடி. இதுக்கு ச்சேருதலோடன்வயம். இப்படி மேலுங் கண்டுகொள்வது. பெரு-மஹத்தரமான, உருவத்திலும்-ரூபத்திலேயும்,"ஸமஸ்தாச்சக்தயச்சைதாந்ருபயத்ர ப்ரதிஷ்டிதா:। தத்விச்வரூபவைரூப்யம் ரூபமந்யத்தரேர்மஹத்" இத்யாதி ப்ரமாண ப்ரதிபன்னமான பரமவ்யோம-வர்த்தி பரவிக்ரஹத்திலேயு மென்றபடி. பின்-அநந்தரம், அதில்-அந்த பர விக்ரஹத்தில்நின்றும், தோற்றும் - ப்ராதுர்பவிக்குமவையான, உருக்களிலும் - ரூபங்களிலேயும், வ்யூஹவிபவாதிரூபங்களிலு மென்றபடி. ஒருருவான - ஏகரூபமான,திவ்யதம்பதி சேஷதை ரூபமான வென்றபடி. உலகிலும் - லோகத்திலேயும், தேவதிர்யங்மனுஷ்யாத்மக ப்ரபஞ்சத்திலேயு மென்றபடி. ஏற்கும்-அநுரூபங்களான, உருக்களினால் - ஸ்வரூபங்களாலே, இங்குஉருவென்கிறபதம் ஸ்வரூபவிக்ரஹஸாதாரணம். சேருதல்-ஸம்ச்லேஷத்திலே,மன்னு-ஸ்திரையான, ஸ்திரஸம்ச்லேஷையான வென்றபடி. ஈச்வரனுடைய ஸ்வரூபத்திலும் பரவ்யூஹவிபவார்ச்சாந்தர்யாமி ரூபசுத்த ஸத்வமயாத்வாரக விக்ரஹங்களிலும், தேவதிர்யங் மனுஷ்யாதிபும்வ்யக்தி ரூபகுணத்ரய பஹுளசேதநாந்தர வ்யவதாந ஸஹிஷ்ணு விக்ரஹங்களிலும்தத்தநுசித ஸ்வரூப விக்ரஹங்களாலேநித்யஸம்ச்லிஷ்டையான வென்றபடி. பகவத்ஸ்வரூபத்திலேததநு

ரூபஸ்வரூபத்தாலும் தத்விக்ரஹங்களிலே ததநுரூப விக்ரஹங்களாலும் நித்யஸம்ச்
லிஷ்டையான வென்று பலிதார்த்தம். இங்கு லக்ஷ்மீஸ்வரூபத்துக்கு பகவத் ஸ்வரூ
பாநுரூப்யமானது 'நித்யம்தத்த்தர்மதர்மிணீ' யதாஸர்வகதோவிஷ்ணுஸ்ததைவேயம்
த்விஜோத்தமா:' இத்யாதி ப்ரமாண சத ப்ரதிபன்னமான சாந்தத்வாநந்தத்வ மஹாவி
பூதித்வ பரத்வ நிரதிசய ப்ருஹத்வ ப்ருஹ்மணத்வாதி பகவத்கத பூயஸ்தர தர்ம பாக்
த்வ ரூப ப்ரக்ருஷ்ட ஸாத்ருச்யமென்று ஸ்ரீமத் ப்ரதுகத்ய சதுச்லோக்யதிகாரங்களி
லே தாமே யருளிச் செய்தாரிறே. விபு த்வய ஸம்யோகம் கூடாதென்கிற வைசே
ஷிகாதி ப்ரவாதம் மந்த்ரபாட ப்ராயத்வேநாஸ்ருத்தேய மாகையாலும் ப்ரத்யுத ஸ்ரீ
மந்ந்யாயஸித்தாஞ்ஜநாதி க்ரந்தங்களிலே விபூநாம் நித்யஸம்யோகம் ப்ரயத்நேந ஸ
மர்த்திதமாகையாலும் விபுவான பகவத்ஸ்வரூபத்திலே தாத்ருச லக்ஷ்மீஸ்வரூபத்துக்
கு ஸம்ச்லேஷம் சொன்னது விருத்த மன்று லக்ஷ்மீ விக்ரஹத்துக்கு பரவிக்ரஹா
நுரூப்யமாவது "நித்யைவைஷாஜகந்மாதா விஷ்ணோஸ்ரீரநபாயிநீ" இத்யாதிப்ரதிபன்
னமான ஸததைகரூபத்வாதிகம். வ்யூஹவிபவாத்யாநுரூப்யமாவது 'தேவத்வேதேவ
தேஹேயம்மநுஷ்யத்வேசமாநுஷீ। விஷ்ணோர்தேஹாநுரூபாம்வைகரோத்யேஷாத்ம
நஸ்தநும்' 'ராகவத்வேபவத்ஸீதா ருக்மணீக்ருஷ்ணஜந்மநி அந்யேஷுசாவதாரேஷு
விஷ்ணோரேஷாநபாயிநீ' இத்யாதிகளில்படியேஸத்ருசஸம்ஸ்தாநாதிமத்வம். தேவதிர்
யங்மனுஷ்யாத்யாத்ம,பும்வ்யக்தி ரூப பகவச்சரீராநுரூப்யமாவது. அர்த்தோவிஷ்ணுரி
யம்வாணீ' யென்றுபக்ரமித்து 'தேவதிர்யதிர்யங்மநுஷ்யேஷுபுந்நாமாபகவாந்ஹரி:।
ஸ்த்ரீநாம்நீலக்ஷ்மீர்மைத்ரேய நாநயோர்வித்யதே பரம்' என்று பராசர ப்ர
ஹ்மர்ஷி உபஸம்ஹரித்தபடியே அபிமாந விசேஷாதிஷ்டித தேவ் திர்யங் மனு
ஷ்யாத்மக ஸ்திரீ ரூபத்வம். பகவத்ஸ்வரூபத்திலே ஸ்வரூபத்தாலும் சுத்த ஸத்வமய
விக்ரஹங்களிலே தாத்ருசவிக்ரஹங்களாலும் ப்ரபஞ்சாந்தர்கத பும்வ்யக்தி ரூபப்ராக்
ருதசரீரங்களிலே தாத்ருசஸத்ரீவ்யக்திரூப சரீரங்களாலும் நித்யசம்ச்லிஷ்டையான
வென்று பிண்டிதார்த்தம். லோகத்தை யொருருவான வென்று நித்யைக ரூபமாக
நிர்தேசித்தது "ஸ்த்ரீபும்ஸாம் ஸர்வேஷாம்திவ்யதம்பதி நிரூபிதைகசேஷித்வ மேவ
ஸ்வபாவிகம், பும்ஸாம் பகவத்விபூதித்வம் ஸ்த்ரீணாம் லக்ஷ்மீவிபூதித்வம் ரலவி
சேஷ ப்ரயுத்த விபாக நிபந்தநம்" என்றுத்யோத நார்த்தம். இவ்வர்தத்தை 'ஸா
தாரண்யெஸத்யபி ஸ்வெச்சயைவ த்வேதா விஸ்வம் யத்விபூதிர்வ்யபாஜி" என்று
தாமேயருளிச்செய்தாரிறே. செய்யாள் - ருஜுப்ரபருதியான பிராட்டியினிடத்து
லே, அன்பர் - ப்ரேமசாலியான, ஈச்வரன், இங்கு பிராட்டியை ருஜுப்ரக்ருதித்
வேந நிர்தேசித்தது நித்யம் அஞ்சாதநிக்ரஹத்வ ஸூசநார்த்தம். நம்மனம் - நம்முடைய
மனஸ்ஸிலே, சேர்ந்தனர் - ஸந்நிஹிதரானார். (௩)

மூ.—காரணமாயிறையாய்க் கதியாயமரும்பதியாய்
ஆரணமோது மனைத்துறவாயகலாவுயிராய்
சீரணியுஞ்சுடராய்ச் சிறந்தெங்குந்திகழ்ந்துநின்ற
நாரணனார்நமக்காய் நல்கிநாந்தொழ நின்றனரே. (௪)

இப்படி மந்த்ரார்த்தத்தை யருளிச்செய்தினி நாராயண சப்தார்த்தத்தை யரு
ளிச்செய்கிறார்.

காரணமாய் - ஜகத்காரணபூதராய் "நாராஜ்ஜாதநிதத்வாநி" என்கிறபடியேஜா
தார்த்தகாண்பரத்யயாந்தமான நாரசப்தலப்தமான வர்த்தத்தைச் சொன்னபடி. இ
றையாய் - நியந்தாவா யென்றபடி - இது - அண்ப்ரத்யய ப்ரக்ருதி பூதமான நரசப்த
த்தை ந்ருநயெ யென்கிறதாதுவிலே பசாத்யச்கமாக வ்யுத்பாதித்தபடி. அமரும் - ஸர்
வவஸ்துக்களு மடங்கும்படியான, பதியாய் ஸ்தானமாய், இதயந சப்தத்தை யதிக
ரண ல்யுடந்தமாக வ்யுத்பாதித்தபடி. ஆரணம் - உபநிஷத்துக்களாலே, ஓதும் -
அதீதரான, அனைத்துறவாய் - ஸகலபந்துக்களாய், "மாதாபிதாப்ராதாநிவாஸஸ்ஸ
ரணம் ஸுஹ்ருத்கதிர்நாராயண:" இத்யாதி ஸௌபலாதிஸ்ருதிகள் சொல்
லுகிறபடியே, சேதநருக்குஸகலவிதபந்துவாயென்றபடி. இது நாராயணசப்தாத்மகஸ
மாஸாநுப்ரவிஷ்டலுப்த ஷஷ்ட்யர்த்தமானஸம்பந்தத்தைவிசேஷித்தபடி. அகலாவிச்
லேஷியாததான, உயிராய் - ஆத்மாவாய், இது நியந்த்ருத்வா தாரத்வ நியம் பலித
தான வாத்ம பாவத்தை ஸ்புடீகரித்தபடி. இத்தால் பஹுவ்ரீஹி ஸமாஸஸித்தா

ந்தர்வ்யாப்தி: பலிதா,சீர்-கல்யாணகுணங்களாலே, அணியும் - அலங்ருதமான,சுடராய் - ஜ்யோதிஸ்ஸாய், ஜ்ஞாநஸ்வரூபனு யென்றபடி. இது ஸத்யத்வாதிகளுக்கு முபலக்ஷணம். நிகரில் புகழாயென்கிறபடியே நிருபம ஸத்யத்வாதி ஸ்வரூபநிரூபக குணங்களாலும் வாத்ஸல்ய ஸௌசீல்யஸௌலப்யாதி நிரூபித ஸ்வரூப விசேஷண குணங்களாலும் விசிஷ்டனு யென்றபடி. இது நாரசப்தத்தை'நரசம்பந்திநொ நரா:' என்கிற ப்ரமாணுநுஸாரத்தாலே யுபாயத்வோபயுக்த குணபரமாக யோஜித்தபடி. எங்கும் ஸர்வத்ர, செறிந்து-வ்யாபித்து, திகழ்ந்து நின்ற, ப்ரகாசித்து நின்றவரான, இது தத்புருஷ ஸமாஸ லப்யபஹிர்வ்யாப்தியை ப்ரகடீகரித்தபடி. நாரணனர் - நாராயணன், நமக்காய் - நம்முடைய ஸ்வாமியாய், நல்கி - ஸ்நேஹித்து வாத்ஸல்யத்தைப் பண்ணி யென்றபடி, நாம் - தாஸபூதரான நாம், பஹுவசநத்தா லநுபந்திபரிக்ரஹ:, தொழ-ஸேவிக்கும்படி, சரண வரணம் பண்ணும்படி யென்றபடி. நின்றனர் - ஸ்பஷ்டம். (௪)

மூ.—வானமர்மன்னுருவாய் வகையாலதினுலுருவாய்
மீனமதயாமைகேழன் முதலாம்விபவங்களுமாய்
ஊனமருள்ளுருவாயொளி யாதவருச்சையுமாய்த்
தேனமர்செங்கழலான் சேர்த்தனன்கழலென்மனத்தே (௫)

இனி சரணசப்தோபலக்ஷித பஞ்சப்ரகார திவ்யமங்கள விக்ரஹயோகத்தை யருளிச்செய்கிறார்.

தேனமர்-மதுபரிதங்களான, செங்கழலான்-அருண சரணாரவிந்தங்களை யுடையவரான ஸர்வேச்வரன், இத்தால் ததீயசரணங்களுக்கு போக்யதாதிசயேந சித்தாலம்பநஸௌகர்யம் வ்யஞ்ஜிதம். வான் - பரமவ்யோமத்திலே, அமர் - ப்ரதிஷ்டிதமான, மன் - த்ருடமான, நித்யமான வென்றபடி. யத்வா:ஸமஸ்த சக்த்யாதாரமான வென்றபடி, உருவாய் - ரூபத்தையுடையவனாய், "நித்யஸித்தே ததாகாரே தத்பரத்வே ச பௌஷ்கர யஸ்யாஸ்தி ஸத்தா ஹ்ருதயே" இத்யாதிப்ரமாணசத ஸித்தபரமவ்யோமகத நித்யஸர்வாதாரபரவிக்ரஹ விசிஷ்டனு யென்றபடி. வகையால் - க்ரமத்தாலே, அதில்-அந்தபரரூபத்திலுத் பன்னங்களான, நாலுருவாய் - நாலுரூபங்களை யுடையவனாய், க்ரமேண ப்ராகுக்த பரரூபொத்பன்ன வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்நாநிருத்த ரூப வ்யூஹாக்ய விக்ரஹ விசிஷ்டனு யென்றபடி. இது மற்றுமுள்ள கேசவாதி வ்யூஹாந்தரங்களுக்கு முபலக்ஷணம். மீனம் - மத்ஸ்யம், அது-ப்ரஸித்தமான, இது பூர்வொத்தராந்வயி,ஆமை-கூர்மம்,கேழல்-வராஹம், முதலாம்-இவைமுதலான, விபவங்களுமாய் - விபவங்களுமாய், இது மற்றுமுள்ள ஹம்ஸ ஹயக்ரீவாதி விபவாந்தரங்களுக்கு முபலக்ஷணம். ஊன் - சரீரத்திலே, அமர் -அடங்கினதான, உள் - அந்தர்கதமான, ஸூக்ஷ்மமான வென்றபடி. உருவாய் - ரூபத்தையுடையவனாய், அந்தர்யாமி விக்ரஹவிசிஷ்டனாயென்றபடி. ஒளியாத - திரோஹிதமாகாத, அருச்சையுமாய்-ஸர்வலோக ப்ரஸித்தார்ச்சாக்ய விக்ரஹவிசிஷ்டனுமா யென்றபடி. கழல் - ஸ்வசரணங்களை, இங்கு அநதிக்ரமணீயம் ஹிசரணக்ரஹணம் என்கிறபடியே க்ருபோத்தம்பகத்வம் ஸூசிதம், நம்மனத்து - நம்முடைய மநஸ்ஸிலே, சேர்த்தனன். வைத்தான். (௫)

மூ.—வேறொரணங்குதொழும் வினைதீர்த்தெம்மையாண்டிடுவான்
ஆறுமதின்பயனுந்தந்தளிக்கு மருளுடையான்
மாறிலதாயிலகும் மதுமெல்லடிப்போதிரண்டால்
நாறுதுழாய்முடியானமக்குச் சரணுயினனே. (௬)

இப்படி சரணசப்தத்தினுடைய முக்யார்த்தத்தையும் தது பலக்ஷிதவிக்ரஹ விசேஷங்களையும் அருளிச்செய் தினிமேல் ஸர்வம் வாக்யம் ஸாவதாரண மென்கிற ந்யாயத்தாலும்காகணே மிசைநம்பிரான் சரணே சரணமக்கு என்கிற பாசுரத்தாலும் சரணசப்தத்திலே விவக்ஷிதமான வவதாரணத்தை த்விவசநார்த்தத்தோடே கூட ஸ்புடீகரித்துக்கொண்டு உபாயக்ருஹரக்ஷகாதி பஹ்வர்த்த பரதயா தத்ரதத்ர ப்ரயுஜ்யமான சரணசப்தத்துக்கு ப்ரக்ருதெ விவக்ஷிதமான வர்த்தத்தை யருளிச்செய்கிறார்.

வேறோர்-பகவத் வ்யதிரிக்த மாயிருப்பதொரு, அணங்கு - தேவதையை, தொழும் வினை - சேவிக்கும் கர்மத்தை, தேவதாந்தர ஸேவாபாதக கர்மங்களை யென்றபடி. தீர்த்து - நிவர்த்திப்பித்து, எம்மை - நம்மை, ஆண்டிடுவான் - விநியோகித்துக்

யோகித்துக்கொள்ளுமவனென, இது சரணவதாரண பலிதமான தேவதாந்தர வ்யவச்சேதத்தை வெளியிட்டபடி. ஆறும் - உபாயத்தையும், அதின்பயனும் - அதினுடையபலத்தையும், தந்து - கொடுத்து, அளிக்கும் - ரக்ஷிக்குமதான, அருளுடையான் - க்ருபையுடையவனென, இது ஈச்வரன் சரணமாகும் போது க்ருபாவைசிஷ்ட்ய மாவச்யக மென்று ஜ்ஞாபனார்த்தம் விசெஷிப்பித்தபடி. நாறு - பரிமளிக்குமதான, துழாய்முடியான் - துளஸீமௌலலிகனென வீச்வரன், மாறிலதாய்-ச்யுதி இல்லாததாய், இலகும் - விளங்குமதான, ஆச்ரிதர்க்குச்யுதியில்லாதே யுல்லஸிக்குமதான வென்றபடி. மேல் - ம்ருதுவான, அடிப்போது- சரண புஷ்பங்களுடைய, பதபங்கஜங்களுடைய வென்றபடி. - இரண்டால் - யுகளத்தால், நமக்கு - ஸ்பஷ்டம். சரண் - சரணமாக, ஆயினன் - ஆனான். (சு)

மூ.—பெறுவதுநாம்பெரியோர்பெறும்பேறெனநின்றவெம்மை
வெறுமையுணர்த்திவிலக்காதநன்னிலையாதரிப்பித்
துறுமதியாற்றன்னையொண்சரணென்னவுணர்வுதந்த
மறுவுடைமார்பனுக்கேமன்னடைக்கலமாயினமே. (எ)

இனி மேல் மஹாவிச்வாஸ ரூப ஜ்ஞாநவிசேஷபர்யவஸிதமானஸொபஸர்க தாதுவை விவரிக்கிறார்.

நாம் - நீசரானநாம், பெரியோர் - மஹாத்மாக்களாலே, பெறும் - லப்தும் யோக்யமான, பேறு - புருஷார்த்தத்தை, பெறுவது - அடைவோம், மஹாத்ம ப்ராப்யமோக்ஷாக்ய புருஷார்த்தம் நமக்கு வேணு மென்றபடி. என - என்று, நின்ற-வாஞ்சித்திருக்கிற, எம்மை - நம்மை, இத்தால் ப்ரபத்தி சாஸ்த்ராநுஷ்டாநோபயுக்த பலாபிருசியைச் சொன்னபடி - வெறுமை - ரிக்ததையை, ஆகிஞ்சின்யத்தை யென்றபடி. உணர்த்தி-அறிவிப்பித்து,விலக்காத-விச்லேஷிப்பியாத, நன்னிலை-நல்லநிஷ்டையை, ஆதரிப்பித்து - அபிருசிப்பித்து, தன்னுடைய வாகிஞ்சின்யத்தையு மீச்வரனுடைய வுத்கர்ஷத்தையு மனுஸந்தித்தால் ‘அம்மானாழிப்பிரானவனெவ்விடத்தான் யானார்’ என்றகலும்படி நராதமத்வா பாதகங்களான நைராச்யம் பிறவாதபடி புருஷார்த்தாபிருசியை த்ருடீகரித்தென்றபடி. உறு- த்ருடமான, மதியால்-ஞானநத்தாலே, ப்ருஹஸ்பதி ஸஹஸ்ரத்தாலும் அக்ஷோப்யமான மஹாவிச்வாஸத்தாலே என்றபடி. தன்னை - பத்நீ குண விசிஷ்டனான தன்னை, ஒண் - உஜ்வலமான, உபாயாந்தரநிரபேக்ஷமான வென்றபடி. சரணென்ற - சரணமென்று விஷயீகரிக்கலாம்படி, உணர்வு - ஜ்ஞாநத்தை, ஸ்ரீமத் பரிகர விபாகாதிகார ப்ரதர்சித ரீத்யா மஹாவிச்வாஸ ப்ரதிபந்தக சங்காபஞ்சக நிவர்த்தகமான ஸம்பந்தகுண விசேஷ ஜ்ஞானத்தை என்றபடி. தந்த - கொடுத்தவனான - மறுவுடை - ஸ்ரீ வத்ஸாக்ய சிந்ஹயுக்தமான, மார்பனுக்கு - வக்ஷஸ்ஸையுடையவனுக்கே, மன்-த்ருடமான, அடைக்கலம்-ரக்ஷ்யவஸ்துவாக, ஆயினம்- ஆனோம். (எ)

மூ.—அருமறையாதுந்துறவோமென்றேயறிந்தார்கவரும்
கருமமுஞானமுங்காதலுங்கண்டுமுயலகில்லோம்
வருவதுமிங்கிலையாய்மையனுற்றவெமக்குளதோ
திருமகளார்பிரியாத்திருமாலன்றிநற்சரணே. (அ)

இப்படி ஸொபஸர்க தாத்வார்த்தத்தை யருளிச்செய் தினி யுத்தமனில் அபிஸம்ஹிதமாய் மஹாவிச்வாஸ ப்ரதிபந்தக சங்கோத்தாபநாக்ஷமத்வென பூர்வகாதையிலே ப்ரக்ருதமான வாகிஞ்சந்யத்தை “நதர்ம நிஷ்டோஸ்மி நசாத்ம வேதீ நபக்திமான் த்வச்சரணா ரவிந்தெ” இத்யாத்யநுஸாரேண த்ரைகாலிக ஜ்ஞாந க்ரியா பஜநஸம்பத் துர்பிக்ஷமாக நிரூபிக்கிறார்.

அருமறை - திரவகாஹவேதங்களை, யாதும்-ஸகலங்களையும், துறவோம்- த்யஜியோம், என்றறிந்தார்- என்றத்யவஸித்தவராலே, கவரும்-பரிக்ருஹீதமான, ஸகலவேதார்த்தாநுஷ்டான த்ருடதர ஸூத்தராலே சக்யாநுஷ்டான மான வென்றபடி. கருமமும்-கர்மயோகத்தையும், ஞாநமும்- ஜ்ஞாநயோகத்தையும், காதலும் - பக்தியோகத்தையும், கண்டு-நிருபித்து, ததீய தௌஷ்கர்யத்தை யநுஸந்தித்தென்றபடி. - முயல-

டுக

ப்ரவர்த்திக்க, இல்லோம்- ஸமர்த்தரல்லோம், ஸம்ப்ரதி ஸாமர்த்யமில்லை யாகிலும் ஆகாமி காலத்திலே ஸம்பவிக்குமாகில் லாகிஞ்சன்யம் விகடிதமாகாதோ வென்னில்; வருவது - வரப்போகிறதும், இந்நிலையாய் - இந்த அவஸ்தையாய் "அநாகதா நந்த கால ஸமீக்ஷயா ப்யத்ருஷ்ட ஸந்தா ரோபாயః" என்கிறபடியே யாகாமிகாலத்திலு மாகிஞ்சந்ய மநுவர்த்திக்கலாம் படியாயென்றபடி. காலத்ரயேப் யுபாயாந்தர ஸம்பா வநாகந்த விகலரா யென்று நிர்களிதார்த்தம். மையல்-வ்யாமோஹத்தை 'அநாதிவாச நாரோஹாத் அநைச்வர்யாத்ஸ்வபாவஜாத் । மலாவகுண்டி தத்வாச்சத்ருக்கரியா பிஹி ஷ்க்ருதியா॥ தத்கார்பண்ய' மென்கிறபடியே யாகிஞ்சன்ய மூல பூதா வித்யா வாசநா திகளை யென்றபடி. உற்ற - ப்ராப்தரான, எமக்கு - நமக்கு, திருமகளார் - பெரியபி ராட்டியாரோடு - பிரியா - கதாசிதபி விச்லேஷியாதவரான, திருமாலன்றி -விபூதித் வய ஸ்வாமியைத்தவிர, திருசப்தம் விபூதிபரமாய் மால் சப்தம் ஸ்வாமி பரமாகை யாலே புநருக்தியில்லை. நல்சரண் - நல்லசரணம், உபாயாந்தர நிரபேக்ஷமான வுபாய மென்றபடி - உளதோ - உண்டோ, இல்லை யென்றபடி. (அ)

மூ.—சுருங்காவகலமெல்லாந்துளங்காவமுதக்கடலாய்
நெருங்காதனைத்துடனேநின்றநந்திருநாரணனார்
இரங்காதகாலங்களெல்லாமிழந்தபயன்பெறவோர்
பெருங்காதலுற்றினிமேற்பிரியாமையுகந்தனமே. (கூ)

இப்படி பூர்வகண்டத்தை விவரித் தினியுத்தரகண்டகத ஸவிசேஷண தாராய ணபதத்தை ப்ராப்யதொபயுக்த பத்நீவிபூதி வைசிஷ்ட்ய ப்ரயுக்த நிரதிசயபோக்யதா பரமாக விவரித்துக் கொண்டு தத்பலிதமான ப்ராப்தாவினுடைய க்ஷணவிச்லேஷா ஸஹிஷ்ணு நிரதிசய ப்ரேமத்வத்தை யருளிச்செய்கிறார்.

சுருங்கா-ஸங்கோசி யாததான, அகலமெல்லாம் - விஸ்தாரமெல்லாம், துளங் கா - நிச்சலமான, அமுதகடலாய் - அம்ருதஸாகரமாய், கர்மபந்ததசையில் ப்ரதிகூ லங்களாகவு முதாஸிநங்களாகவும் அல்பாநுகூலங்களாகவும் தோற்றின ப்ரபஞ்சாந் தர்கதங்களானஸகல வஸ்துக்களும் கர்மபந்தநிவ்ருத்திதசையிலே நிஸ்தரங்கஸுதா ஸாகரம்போலே நிரதிசயபோக்யங்களா யென்றபடி-அனைத்துடனே - ஸகலவஸ்து க்களோடே, நெருங்காது - ஸம்மர்தியாதே, நின்ற - ஸம்ச்லேஷித்திருக்கு மவனான, 'நானுன்னையன்றி யிலேன்கண்டாய் நாரணனே நீ யென்னையன்றியிலை' யென்கிறபடி யேஸகலவஸ்துக்களோடும் கலந்திருக்கு மவனானவென்றபடி. திருநாரணனார்- ஸ்ரீமந் நாராயணன், இரங்காதகாலமெல்லாம்- அநுகம்பியாதகாலமெல்லாம், அபவர்கப்ரதாந ஸ்வரூப யோக்யையான பகவத்க்ருபை வ்யாஜவிசேஷரூப ஸஹகாரவிளம்பேந பலோபதாநம் பண்ணாத ஸம்ஸாரகால மெல்லாமென்றபடி. இழந்த - அலப்தமான, பயன் - பலத்தை, மோக்ஷரூபபுருஷார்த்தத்தை யென்றபடி. நாம்-ஸ்வரூபயோக்ய ரான நாம், பெற லபிக்கைக்கு, ஓர்-அத்விதீயமான, பெருங்காதல்- உத்கடாகாங் க்ஷையை, உற்று - அடைந்து, இனிமேல்- ஸ்பஷ்டம். பிரியாமை- விச்லேஷியாதே, உகந்தனம் - ஹ்ருஷ்டரானோம், (கூ)

கடிசூடுமூன்றும் கழல்பணிந்தார்க்குக் கடிந்திடவே
முடிசூடிநின்ற முகில்வண்ணனார் முன்னுலகளந்த
அடிசூடிகாமவராதரத்தாலு டுத்துக்களையும்
படிசூடியன்புடனே பணிசெய்யப்பணிந்தனமே. (க0)

இனி சதுர்த்தீப்ரதிபாத்ய தாதர்த்யகார்யபூத கைங்கர்ய ரூப புருஷார்த்தத்தை யருளிச் செய்கிறார்.

கடி - துஸ்ஸகமான, சூடு மூன்றும் - தாபத்ரயத்தையும், கழல் பணிந்தார்க்கு - தன் திருவடிகளை சேவித்திருக்குமவர்க்கு, கடிந்திடவே - நிவர்த்திப்பித்துவிடவே, முடி - கிரீடத்தை, சூடிநின்ற - தரித்துநின்றவரான, ஸ்வசரணாரவிந்த ஸேவிகளுக் காத்யாத்மிகாதி பௌதிகா திதைவிக ரூப தாபத்ரய ப்ரசமநார்த்தமாகவே மகுடதார ணாதி ஸாம்ராஜ்ய சிந்ஹத்தை வஹித்தா ரென்று த்ப்ரேக்ஷிக்கலாம்படி ரக்ஷணதீ க்ஷிதரான வென்றபடி. முகில்வண்ணனார் - மேகவர்ணனுடைய, இதுக்கு திருவடி யோ டந்வயம். முன் - பூர்வத்திலே, த்ரிவிக்ரமாவதார தசையி லென்றபடி உலகு

லோகங்களை, அளந்த-பரிச்சேதித்தவையான, அடி - திருவடிகளை, சூடி-சிரஸ்ஸிலே அலங்காரமாக தரித்து. நாம்- தாஸபூதரான நாம், அவராதரத்தால்-முகில்வண்ணனுடைய வாதரத்தாலே, உடுத்துக்களையும்படி- தரித்துவாங்கும்ப்ரகாரத்தை,திருப்பரிவட்டம் முதலான வசேதநங்களை இச்சாநுஸாரேண உடுத்துக்களைந்தருளுமாப் போலே சேதநரானநம்மையும் ஸ்வாபிமத கைங்கர்யங்களிலே ப்ரவர்த்திப்பித்தும் நிவர்த்திப்பித்துமுபயோகித்துக்கொள்ளும்படியானபாரதந்த்ர்யத்தை, சூடி - வஹித்து, அன்புடனே -ப்ரேமத்தோடே, பணி - கைங்கர்யங்களை, செய்யப்பணிந்தனமே - பண்ணவணங்கியமர்ந்தோம். (௧0)

தனதன்றிவையெனத் தானன்றெனமறை சொன்னதெல்லாற்
தனதென்றுந்தானென்று மெண்ணுதலால் வருமீனமெல்லாம்
மனதொன்றியின்று நமவென்றதேகொண்டு மாற்றுதலால்
தனதன்றியொன்றுமில்லாத் தனித்தாதை சதிர்த்தனனே. (௧௧)

இனி நமச்சப்தத்தை ஸம்ஸாரசக்ர பரிவ்ருத்தி நிதாநபூதாஹங்கார மமகார ரூபாநிஷ்டநிவ்ருத்தி பரமாக விவரிக்கிறார்,

இவை - இந்தவஸ்துக்கள், ப்ரமாணஸித்தங்களான தேஹேந்த்ரியாதிகளும் தததநுபந்திங்களுமென்றபடி. தனதன்று- ஆத்மீயங்களன்று, தானன்று - ஆத்மாவுமன்று என - இப்படி, மறைசொன்னதெல்லாம் - வேதோக்தங்களை யெல்லாம், தனதென்றும்- ஆத்மீயங்களென்றும், தானென்றும் - தானென்றும் - ஆத்மா வென்றும், எண்ணுதலால் - அபிமானிக்கையாலே, அநாத்மத்வேநா த்மீயத்வே யீத்வேநச ச்ருத்யாதி ப்ரதி பந்நங்களான தேஹேந்த்ரியாதிகளிலும் ததநுபந்திகளிலும் ஆத்மத்வ புத்தியையு மாத்மீயத்வ புத்தியையும் பண்ணுகையாலே யென்றபடி. வரும்- ப்ராப்தமான, ஈனம்-ஹீநத்தை, பாவப்ரதாநோ நிர்தேசः. ஹீநத்வத்தை யென்றபடி. யத்வா: பாவேநிஷ்டா. ஹாநியை என்றபடி.எல்லாம்-ஸ்பஷ்டம். அஹங்காரமமகாரமூலக ஸாம்ஸாரிக தோஷங்களை யென்றபடி. இன்று-விவேகம் பிறந்தவின்று, மனது - மநஸ்ஸிலே, ஒன்றி - உறுத்தி, ஹேயத்வேந ஹ்ருதயாரூடங்களான வென்றபடி. நமவென்றதேகொண்டு-நமः என்கிற பதத்தையேகொண்டு, மாற்றுதலால்-நிவர்த்திப்பிகையாலே, தனதன்றி-தனக்குச் சேஷமாகாதே, ஒன்றுமில்லா - ஒருவஸ்துவுமில்லாதவனை, 'இலனதுவுடையனி தெனனினைவரியவ' னென்கிறபடியே ஸ்வசேஷா சேஷார்த்தனை வென்றபடி. தனித்தாதை - அத்விதீயபிதா, ஸகலஜகதேகோபாதாந நிமித்தமான வீச்வரனென்றபடி. சதிர்த்தனன்-சதுரனானன் ஸகலஹிதப்ரவர்த்தகனான ஸர்வசேஷி நம்முடைய வஹங்கார மமகாரங்களை நமச்சப்தத்தாலே சமிப்பித்து க்ருதக்ருத்யனாய்விஜ்வரனாய்ப்ரமோதித்தானென்றபடி. இத்தால் அபவர்காநுபவ தசையில் பலாந்தராநுபவந்யாயேந ஸம்பாவித ஸ்வதந்த்ர கர்த்ருத்வாபிமாநநிவ்ருத்தியும் பலிக்கும். (௧௧)

சேர்க்குந் திருவாளர் சேர்த்தியின் மன்னுதல் சீர்ப்பெரியோர்க்கு
ஏற்குங்குணங்களிலக்காம் வடிவைந்தினையடிகள்
பாற்குஞ் சரணத்திற் பற்றுதனன்னிலைநாம் பெறும்பேற்
றேற்கின்னவெல்லைக ளெல்லாங்களையற வெண்ணினமே, (௧௨)

இப்படி மந்த்ரகடக பதங்களை விவரித்து இனி ப்ரதம காதையிலே ஸாமாந்யதः கீர்த்திதமான வர்த்ததசகத்தை கௌரவபோக்யதாதிசய ப்ரயுக்தா தராதிசயத்தாலும் அநுஷ்டாநதசாயா மேக புத்யாரோஹார்த்தமாகவும் விசேஷித்தநுக்ரமித்துக்கொண்டு ப்ரபந்தத்தைத் தலைக்கட்டுகிறார்.

சேர்க்கும் - சேதனனை ஈச்வரனோடு கடிப்பிக்குமவளான, திருவாளர் - ஸ்ரீயையுடையவர், சேர்த்தியில் - ஸம்ச்லேஷத்திலே, மன்னுதல் - ஸ்திரீபவிக்கை, ஸ்ரியःபதிக்கு புருஷகாரபூத ஸ்ரீயொடுண்டான நித்யஸம்பந்த மென்றபடி. இதுக்கு ஏர்க்கின்ற வென்கிற த்தோடந்வம். இது ஸ்ரீசப்த மதுப் ப்ரத்யயங்களுடைய வர்த்தங்களை தனுஸந்தித்தபடி. பெரியோர்க்கு - ஸர்வஸ்மாத்பரனான வீச்வரனுக்கு, ஏர்க்கும்-உசியங்களான, குணங்கள் -குணங்களைக்காட்டிலும், ஈச்வரனுடைய பரத்வத்வத்துக் கதி

சயாவகங்களான வாத்ஸல்ய ஸௌலப்யாதி குணங்களைக்காட்டிலுமென்றபடி. இலக்காம் -லக்ஷீபவிக்குமதான,சித்தாலம்பனமானவென்றபடி. வடிவில்-விக்ரஹத்தில்,சீர்-கல்யாணகுணபூர்ணங்களான, இணையடிகள்-பரத்வஸௌலப்யாதிகுணேப்யோபி சித்தாலம்பந பூதங்களான திருவடிக ளென்றபடி. இதுக்கு முன்சொன்னபடியந்வயம். இதுநாராயணசரணசப்தார்த்தங்களையநுகீர்த்தித்தபடி. பார்க்கும்-ப்ரதிக்ஷணீயமான, கத்யந்தரம் காணுமையாலேஇதுவே சரணமென்று பரீக்ஷ்ய நிர்ணீதமானவென்றபடி. சரணத்தில் - உபாயத்திலே, பற்றுதல் - அவலம்பிக்கை, இதுக்கு முன்பு சொன்ன படி யந்வயம்- இப்படி மேலுங் கண்டுகொள்வது. சரண சப்த ஸோபஸர்கதாதுக்களுடைய வர்த்தங்களை யநுஸந்தித்தபடி. நன்னிலை - நல்லவவஸ்தையை, ஆகிஞ்சிந்யாவஸ்தையை யென்றபடி. இது உத்தமனி லர்த்தத்தை யநுவர்ணித்தபடி. நாம் - ஸம்ஸாரிகளான நாம், பெறும்பேறு - அடையப்புகுகிறபுருஷார்த்தம், ஸகலப்ரதிபந்தக நிவ்ருத்தி பூர்வக பத்நீகுண விக்ரஹவிபூதிவிசிஷ்ட ப்ரஹ்மாநுபவ பரீவாஹ பூத கைங்கர்யங்க ளென்றபடி. இதுஸித்தஸாத்யோபேய தத்ப்ரதிபந்தக நிவ்ருத்திபரங்களான உத்தரகண்டகத ஸவிசேஷண நாராயணபத சதுர்த்தீ நமச்சப்தங்களுடைய வர்த்ததசகங்களைஸங்க்ரஹித்தநுபாஷித்தபடி. ஏர்க்கின்ற-இவைகளுக்கு சிதங்களான, எல்லைகளெல்லாம் - ஸீமைகளெல்லாம், இதுகளுக்கு சிதங்களான ஸ்வரூபஸ்வபாவங்களை யெல்லா மென்றபடி, களை - ப்ரதிபந்தகம், அற - நிவர்த்திக்க, அஜ்ஞான நிவ்ருத்தி பிறக்கும்படி, எண்ணினம்- பரிகணித்தோம் - இங்கு பரிகணநோக்தியாலே யொன்றுஞ் சிந்தாமலநுஸந்திக்க வேணு மென்று வ்யஞ்ஜிதம். (௧௨)

உத்தரவ......ஊஹநோ. .....தாவஸ:। ஸ்ரீஜயாத்ரஸஜஹ ஹாயா வ்யவஸிஷ வெஷ்ணவஸ்ரெஜு॥

நாஹம்.......ஶரணாஸ்ரு।
ஈநாஜிவ்ரஜெவ......வமிஶா॥

த்வயச்சுருக்கு வ்யாக்யானம் முற்றிற்று.

ஸ்ரீமதேநிகமாந்த மஹாதேசிகாயநம:

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

தேசிகன் திருவடிகளே சரணம்.

சரமச்லோகச் சுருக்கு வியாக்கியானம்.

கோடிகன்னிகாதானம் திருமலைதாத தேசிகன்
செய்தருளியது.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரியவிருத்தம்.

மாமலர்மங்கை மார்பனைமன்னும் மாறனைப்புகழெதிவரனார்
தூமலர்ப்பாத நண்ணுநன்மறையின் மௌலியாசிரியனா லுரையைக்
கோமலமாகக் கூறுமின்னமுதத்திருமகள் தநயனைப்பணியா
யாமலசருக்கும் பயன்படச்சுருங்கச் சரமபத்தியச்சுருக்குரைப்பாம்.

'கல்லாரகலு' மென்று துடங்கி பதினொரு கட்டளைக்கலித்துறைகள்
சரமச்லோகச் சுருக்கு.

மூ—கல்லாரகலுங் கருமமு ஞானமுங் காதலுமற்
றெல்லாநிலைகளுக்கேற்க விதித்த கிரிசைகளும்
வல்லார்முயல்க வலியிழந்தா ரென்றனைத்தொழுகென்
றெல்லாத்தரும முரைத்தவரின்னடி சேர்ந்தனமே. (க)

"ஸாத்த்விகேந ஸௌம்யேந யேந யேநைவ ஹேதுநா।
தஸ்ய தஸ்ய ஹிதைவேதி ஸார ஶ்லோக ஸங்க்ரஹ:"

'கர்மணோஹ்யபி போத்தவ்யம், கர்மண்யகர்ம யஃ பச்யேத்' இத்யாதியாலே கர்மயோகமும் ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாந ஸஹக்ருதமாக வேண்டுகையாலும் தாத்ருச ஜ்ஞானயோக கர்மயோகங்களில் ஜ்ஞாநாம் சந்துக்கு விசேஷதோ விநியோகம்காண்கையாலும் தாத்ருச ஜ்ஞானரஹிதர்க்கு அவற்றில் ப்ரவேசிக்கலாம் விரகில்லையாகையாலே கல்லாரகலும் என்றது. கர்மயோக நிஷ்டாதி சகலநிலைகளுக்கும் ஏற்குமாறு விதிக்கப்பட்ட மற்றைக் கர்மங்களுமென்று கூட்டுவது. வர்ணாச்ரமதர்மங்கள் அங்ககோடிப்ரவிஷ்டங்களிறே. த்ருதீய ஷட்கத்தில் பூர்வோத்தர த்ரிகங்களிலே சோதிதமான ப்ரதானபுருஷாதி விவேசநமும் தது பயோகி. ஜ்ஞாநயோகாதிகாரியும் லோகஸங்க்ரஹார்த்தமாக கர்மயோகத்தையே அநுஷ்டிக்கக்கடவன் என்கையாலே எல்லாநிலைகளுக்கேற்க விதித்த கிரிசைகளு மென்றதென்னுமாம். தர்மங்களுக்கெல்லாம் ஸாத்விகத்யாக மத்தனை போக்கி ஸ்வரூபத்யாக மில்லையாகையாலே, கிரிசைகளும் — ஸாத்விகத்யாகாதியோடே அநுஸந்தேயமாக விஹிதமான கர்மங்களை, யென்கை. வல்லார்முயல்கவென்னுமளவும் கீதாசாஸ்த்ரத்தின் அஷ்டாத சாத்யாயங்களின் அர்த்தம். மேல் சரமச்லோகார்த்தம். அதிலும் வலியிழந்தாரென்றனைத் தொழுகென்றென்கையாலேஸ்ரீகீதாபாஷ்யப்ரக்ரியையாலே அங்கப்ரபத்தியும் ஸ்ரீரஹஸ்யத்ரயஸார ப்ரக்ரியையாலே ஸ்வதந்த்ரப்பத்தியும் என்கிற யோஜநாத்வயமும் அபிப்ரேதம். (க)

என்கிற கட்டளையிலே சரமச்லோகத்துக்கெல்லாம் திரண்ட பொருளிதென்றருளிச் செய்கிறார். கல்லார் — ஸம்யக்ஜ்ஞான மில்லாதவர்கள், அகலும் — விலகிப்போமதான, இது மேலெல்லாவற்றிலும் அந்வயிக்கிறது. கருமமும் - கர்மயோகத்திலும், ஞானமும் - ஜ்ஞானயோகத்திலும், காதலும் - பக்தியோகத்திலும், மற்று - மற்றும், எல்லாநிலைகளுக்கு - அவஸ்தைகளெல்லாவற்றிற்கும், ஏற்க - அநுரூபமாக, விதித்த - கீதாசாஸ்த்ரத்தில் கீதாசார்யன் நியமித்த, கிரிசைகளும் - க்ரியைகளிலும், வல்லார் - வல்லமையுள்ளவர்கள், முயல்க — ப்ரயத்னப்படக்கடவர்கள், அவர்களுக்கு ருசித்ததொரு வழியிலே ப்ரவர்த்திக்கக் கடவர்கள், வலியிழந்தார் - சக்தியற்றவர்கள், அதிகாரமில்லாதவர்கள், என்றனை - என்னை, தொழுக - தொழக்கடவர்கள், என்னையே உபாயாந்தரஸ்தானத்தில் நிவேசித்துக்கொள்ளக்கடவர்கள், என்று - இப்படி, எல்லாத்தருமம் - தர்மம் எல்லாவற்றையும், உரைத்தவர் - அவர் அவர் ருசிக்கும் அதிகாரத்துக்கும் தக்கபடி அவர் அவர் பரிக்ரஹிக்கைக்காக கீதாசாஸ்திரத்தில் அர்ஜுனனை வ்யாஜீகரித்து ப்ரகாசிப்பித்த கீதாசார்யனது, இன்னடி - போக்யதமமான திருவடிகளை, நிருபாதிகாநவதிக போக்யதா சாலிகளான திருவடித்தாமரைகளை, சேர்ந்தனம் - ஸதாசார்யகடாக்ஷத்தாலே தத்வ ஹித புருஷார்த்த விவேகம் பெற்ற நாம் அதிகாரமில்லாமையாலே உபாயாந்தரங்களில் பிரவர்த்திக்க மாட்டாதவர்களாய் விச்வாஸாதிசயத்தோடே விளம்பாக்ஷமராய் கீதாசார்யன் திருவடிகளே நமக்கு உபாயமும் உபேயமு மென்று பற்றினோமென்கை.

வெறுமையுணர்ந்தது முன்னிட்டு வேறங்கமில்லையெனக்
குறியவனின்றவை யெட்டக்குதித்திடுங் கோணைத்துறந்
துறுமயனத் திரமென்னப் பொருநிலையோர்ந்திடவோ
ரறநெறியன்றுரைத் தானழியா வறமாயினனே. (உ)

"[illegible]"

என்கிற கட்டளையிலே 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய' என்னும் பதங்களுக்குஆர்த்தங்களை அடைவேஸங்க்ரஹித்துக காட்டியருளுகிறார். இதில் முந்தின அர்த்தம் 'அநித்ய மஸுகம் லோக மிமம் ப்ராப்ய பஜஸ்வமாம்' என்னு மிடத்தில் போலே 'ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய ஸ்தித ஸ்த்வம்' என்கிற யோஜனையால் அநுவாதபக்ஷஸித்தம். மேலை ஐந்தர்த்தங்களும் விதி பக்ஷஸித்தங்கள்.

வெறுமை - தாரித்ர்யத்தை, உணர்ந்து - தெரிந்துகொண்டு, ஸர்வேச்வரனைப் பெறுகைக்குத் தன்பாடே யொருகைம்முதலில்லாமையை யுணர்ந்து என்றபடி. இது அசக்தாதி காரத்வம். அதுமுன்னிட்டு - அந்தவெறுமையை முன்னிட்டுக் கொண்டு, இது ஆகிஞ்சந்ய புரஸ்க்ரியை. தான் அவனைப்பெறுகைக்குக் கைம்முதலொன்று மில்லாமையை புரஸ்கரித்தென்கை. ஆகிஞ்சந்யாநு ஸந்தான ரூபமான கார்ப்பண்யம் சொல்லிற்று. வேறு-இந்த ந்யாஸவித்யைக்கு ப்ரதிநியதமாகச் சொல்லப்பட்ட ஆநுகூல்ய ஸங்கல்பாதிக ளொழிய வேறுபட்ட, அங்கம் - அங்கங்கள், இல்லையென- வேண்டியதில்லையென்று, இப்படித்தெரிந்தென்கை. இது அநங்கபாவோதர்மாணும். வர்ணாச்ரமதர்மங்கள் ஸ்வயம் ப்ரயோஜந பகவதாஜ்ஞாநுபாலன புத்யா நுஷ்டேயங்க ளாகையாலே அவையு மங்கமல்லவிறே. குறியவன் - குள்ளனைபுருஷன், நின்றவை - நின்றனவான பலபுஷ்பாதிகளை; தன்கைக்கெட்ட வொண்ணாதபடி உச்ச்ரிதங்களாய் நின்றவைகளான பலாதிகளை என்றபடி. எட்ட - தான் கையாலெட்டவேண்டுமென்று, குதித்திடும் - குதிப்பதாகிற, தாவித்தாவிக்குதிப்பதாகிற, கோளை - பீடையை, துறந்து - விட்டு, குள்ளன் - தன்கைக்கெட்டாநிலத்திலுள்ள பலத்தைப் பெறவேண்டிக்கையைத் தூக்கிக்கொண்டு தாவித்தாவிக் குதிப்பதுபோலே தனக்கு அசக்யமானவற்றில் தலையிட்டுக் கொள்ளுதலை விட்டென்கை. இது அசக்யாரம்ப வாரணமும் தத்ப்ரத்யாசா ப்ரசமனமும். அசக்யத்தில் ப்ரவர்த்திக்கவேண்டா, இனி எப்போதாவது இது நமக்கு சக்யமாமென்று ஆசைப்படவும் வேண்டா என்பனவிறே அவை- கோளை என்று வேற்றுமைத்தொகை. அன்றிக்கே: கோண் என்று கோணலாய் வக்ரபாவமென்னுமாம். அப்போது கோணை யென்று விரி. உறம் - த்ருடமான, அயனத்திரமென்ன - ப்ரஹ்மாஸ்த்ரமென்னும்படி, பொரு - ஸஹகார்யந்தர ஸம்பந்தத்தைப்பொருததான, நிலை - ப்ரபத்தியின் நிலையை, 'ராக்ஷஸாநா மவிஸ்ரம்பா தாஜ்ஞநேயஸ்ய பந்தநே। யதா விகளிதா ஸத்யஃ அமோகா ப்யஸ்த்ர பந்தநா॥ ததா பும்ஸாம விஸ்ரம்பாத் ப்ரபத்திஃ ப்ரச்யுதாபவேத்' என்றதிறே. இதொரு ப்ரஹ்மாஸ்த்ர மிருக்கும்படி. அத்திரமன்னவெனப் பாடமானபோதுப்ரஹ்மாஸ்தரம்போன்ற பொருநிலையென்க. "மூண்டாலு மரியதனின் முயலவேண்டா முன்னமதி லாசைதனை விடுகை திண்ணம். வேண்டாது சரணநெறி வேறோர் கூட்டு வேண்டி னயன்த்திரம் போல் வெள்கி நிற்கும்." இது ப்ரஹ்மாஸ்த்ரந்யாயஸூசகம். ஆகவித்தால் சொல்லிற்றாய்த்தென்னென்னில்; (ஸர்வதர்மாந் பரித்யஜ்ய) என்கிற த்யாகவிதிக்கு அங்கத்வேநாநுஷ்டானத்யாகமும் ப்ரபத்திப்ரச்யாவகத்வாத் உபாய கோடிப்ரவிஷ்டத் வேநாநுஷ்டானத்யாகமும் அசக்யஸர்வகர்மத்யாகமும் அசக்யேஷு ப்ரத்யாசா த்யாகமும் அபிப்ரேதமென்கை. ஓர்ந்து - தெளிந்து, ஸதாசார்யோபதேசத்தாலே ஸம்யக்காக அறிந்தென்கை, இட - போட, தன்மேல் பரத்தைப்போடும்படி யென்கை. ந்யாஸம் நிக்ஷேபம் என்றிறே சொல்வது. அன்றிக்கே: ஓர்ந்திட வென்றுஅறியவென்னுமாம்.
ஓர் - அத்விதீயமான, அறநெறி - தர்மமார்கத்தை, அழியா - அநச்வரமான, அறமாயினன் -தர்மமானவன், 'க்ருஷ்ணம் த்ர்மம்ஸநாதநம்.' இறே. அன்று - அந்த நாளிலே. 'சிஷ்யஸ்தேஹம்' என்று அடி பணிந்த அர்ஜுநனை இடையிட்டு அத்யாத்ம சாஸ்த்ர ஸாரார்த்தத்தை ஸ்ரீகீதாசாஸ்த்ரரூபமாக வெளியிட்ட நாளிலே, உரைத்தான் - உபதேசித்தான் என்கை.

(உ)

மூ.—வாரிதிவிட்டு மலர்மகளோடு மதுரைவந்து
பாரதவெஞ்சமர் பார்மகள்பாரஞ் செகவுகந்து
சாரதியாய்முன்பு தூதனுமாய்த்தளரும் விசயன்
தேரதினின்றவனைத் தேற்றினான் திறமாயினமே (௩)

இது மாம்சப்தார்த்தம் சொல்லுகிறது. மாம்என்று பரத்வ ஸௌலப்யவ்யஞ்ஜக பார்த்தசாரதி பூதனான தன்னுடைய திவ்யமங்கள விக்ரஹவிசேஷம் தொட்டுக் காட்டப்படுகிறது. அத்தாலே வாத்ஸல்ய ஸ்வாமித்வ ஸௌசீல்ய ஸௌலப்யங்களாகிற குண சதுஷ்டயம் வ்யஞ்ஜிதமாகிறது.

வாரிதிவிட்டு - க்ஷீர சமுத்ரத்தைவிட்டு, மலர்மகளோடு - பெரியபிராட்டியாரோடு, மதுரை - வடதிருமதுரையிலே, வந்து - திருவவதரித்து, பாரத வெஞ்சமர் - பாரதமென்னும் க்ரூரமானயுத்தத்தில், பார்மகள் -பூமியினது. பாரம் - பாரமானது, செக - நசிக்கும்படி, உகந்து - ஸந்தோஷித்து, சாரதியாய் - அர்ஜுனனுக்கு ஸாரதியாய், முன்பு - யுத்தாரம்பாத்பூர்வம், தூதனுமாய் - தூத்யம்பண்ணினவனுமாய், தளரும் - அஸ்தான ஸ்நேஹாதிகளாலே தளர்ந்து போகாநின்ற, விசயன் - அர்ஜுனனது, தேரதில் - ரதத்தில் நின்று, அவனை - அப்படி கலங்கின அர்ஜுனனை, தேற்றினான் - தத்வோபதேசத்தாலே தேறச்செய்த ஸ்ரீகீதா சார்யனது, திறமாயினம் - வசமானோம், ததேக தாஸராகப் பெற்றோமென்கை.

(தளருமித்யாதி) அஸ்தான ஸ்நேஹாதிகளாலே கலங்கின அர்ஜுனனை அநாதரியாமையாலே வாத்ஸல்யம் சொல்லிற்று. 'மத்த: பரதரம் நாந்யத்' இத்யாதியாலே தானே தன்ஸ்வாமித்வத்தைப் பலகாலும் அருளிச் செய்தான். வேண்டுமென்றவிடத்தில்ரதத்தை நிறுத்தென்னவும் குதிரையைக் கட்டென்னவும் அவிழ்க்க வென்னவுமாம்படி ஸாரதியாயும் ஓலைகட்டித் தூதுபோவென்னும்படியாயும் தன்னைத் தாழ நிறுத்துகையாலும் அதுதான் தன்பேறாக வுகந்து செய்கையாலும்ஸௌசீல்யமும், விச்வரூபத்தைக் காட்டென்ன காட்டி பழயரூபத்தோடு நிற்கவேணு மென்ன பழயபடியே ஸாரதியாய் நிற்கையாலே ஸௌலப்யமும் சொல்லிற்றாகிறது. இதெல்லாம் இங்கே சாரதியாயித் யாதியிலேப்ரகாசிதம் 'நிகரில் புகழாய்' என்னுமிடத்திலும் நாராயணசப்தத்திலும் ப்ராதாந்யா இவையேயிறே தோற்றுகிறன. மாம் என்று காட்டுகிறவடிவில் லக்ஷ்மீவிசிஷ்டத்வம் ஸர்வாவஸ்தாஸாதாரணம். அப்படியே அவதாரத்தில் மெய்ப்பாடும் ஸித்தம். (வாரிதிவிட்டித்யாதி) ஓரூரிலிருந்து மற்றோரூருக்குப் போமாப்போலே யிறே தன்னுடைச்சோதியில் நின்றும் க்ஷீராப்தியில் நடுவிலே நின்று மதுரைவந்தது. இத்தால் அப்ராக்ருதஸம்ஸ்தானத்தோடே திருவவதரித்தபடி சொல்லுகிறது. 'ஏஷநாராயண: ஸ்ரீமாந்' இத்யாதி. மற்றும் அநுக்ரஹைகாந்தங்களாய் மாம்சப்தத்தில் சொருகிக்கிடந்த குணவிசேஷங்களுமெல்லாம் இங்கேயதாஸ்தாநம் அநுஸந்தேயங்கள். (௩)

மூ—.தன்னருளாற்பெறுஞ்சாதனஞ்சாதகனென்றிவற்றைத்
தன்னுடனெண்ணுதனீங்கத்தமர்க்கொருசாதனமாய்ப்
பொன்னருளோடும் பூமகளோடுந் திகழ்கின்ற
விண்ணுரையீசனையேயேகமெண்ண விசைந்தனமே. (௪)

இது 'ஏகம்' என்றதின் அர்த்தங்களைக் காட்டுகிறது.

"ப்ராப்யஸ்யைவ ப்ராபகத்வம் ஹ்யப்ராப்ய நிவாரணம் | ப்ர
பத்தே வ்யாஜமாத்ரத்வ மந்யாபேக்ஷா நிவ்ருத்தய: || தத்வேஷ ந வ்ய
வஸாய ஸம்பந்த ஸாபேக்ஷா ஸித்தா | இத்யேகசப்தார்த்த மாஹுரே-
கோ வ்யஞ்ஜிதா:"

"யதா ஸ்தாணாதி வைசிஷ்ட்ய விசேஷாபேக்ஷ ஈக்ஷிதம் |
ஸாவா பூதி விசிஷ்டைவ ப்ராதிஷ்டா ஸாக்ஷாத் வக்ஷ்யஷா" என்கிற கட்டளை

யிலே தன்னருளால் - தனதுகிருபையாலே, பெறும் - சேதநன் பெறுகிற, சாதனம் - ஸாதனத்தையும், ஸர்வேச்வரன் தன்னுடைய நிர்வ்யாஜ நிரவதிக கருணையாலே அவ ஸர ப்ரதீக்ஷனாய் அஜ்ஞாத யாத்ருச்சிகாதி ஸுக்ருத மடியாக ஆசார்ய ப்ராப்தி பண்ணுவித்து தத்வ ஹித புருஷார்த்த விவேக பூர்வகமாக ப்ரபதநத்திலே மூட்டுகையா லே தன்னருளால் பெறுஞ் சாதன மென்றது. சாதகன் - உபாயாநுஷ்டாதாவான சேதநன், என்றிவற்றை - என்கிறஇவைத்தை, தன்னுடன் - தன்னோடே, எண்ணுதல் - அபிஸந்திசெய்தல், நீங்க - நீங்கும்படி, சாதனத்தைத் தன்னுடன் எண்ணுதலாவது ஸர்வேச்வரன் ப்ராப்யன் நாம் அநுஷ்டித்த உபாயம் ப்ராபகம் என்று நினைக்கை. அது நீங்குகையாவது மாம்என்கிற ஏகவசநத்தாலேயே ஏகத்வம் ஸித்தமாயிருக்க மிகுதிகாட்டுகிற ஏகசப்தத்தாலே ப்ராப்யனான தானே ப்ராபகனாக அபிஸந்தி பண்ணத் தக்கவனென்றதாகையாலே ப்ராப்யஸ்யைவ ப்ராபகத்வம் என்றிருக்கை. சாதகனைத் தன்னுடனெண்ணுகையாவது ஸ்ரிய:பதி பலப்ரதன், நாம்நதுபாயா நுஷ்டாநம் செய்தோ மென்றிருக்கை. அது நீங்குகையாவது அவனையொழிய நமக்கு ஸத்தையே யில்லாமையாலே அவன் கொடுத்தகரணகளேபரங்களையுடைய நாம் அவன் கொடுத்த ஸ்வரூபஜ்ஞானத்தாலே ப்ரார்த்தித்தோமத்தனை; ஸ்தநந்தய ப்ரஜை ரோதனம் செய்யுமாப் போலே, ஆனபின்பு நமக்கு உபாய கோடியில் எவ்வித அந்வயமு மில்லையென்று தெளிகை. இது ஸ்வப்ராதாந்ய நிவாரணம். இங்குற்ற ஸ்வசப்தம் சேதநபரம். தமர்க்கு - ஆத்மீயர்க்கு, ஸ்வதாஸபூதர்களுக்கு, ஆகிஞ்சந்யை கதநரான ப்ரபந்நர்களுக் கென்கை. ஒரு - அத்விதீயமாய் விலக்ஷணமான, சாதனமாய் - உபாயமாய், ஒருவ்யாஜமின்றியே ரக்ஷிக்கில் ஸர்வமுக்திப்ரஸங்கம் வருகையாலே நீ செய்யும் ப்ரபதநம் வ்யாஜமாத்ரம், முக்யோபாயம் நானே என்று ஏகசப்தார்த்த மாம்போது ப்ரபத்தேர் வ்யாஜமாத்ரத்வம் சொல்லிற்றாகிறது. அதாவது ஸித்தோபாய துல்யதயா உபாயமன்றென்கை. அங்க ப்ரபத்தி நிஷ்டான்திறத்தில் அங்கியான உபாஸந நிஷ்பத்தி ப்ரதீக்ஷைபோலே ஸ்வதந்த்ரப்ரபத்தி நிஷ்டன் திறத்தில் உபாயாந்தராபேக்ஷையில்லை யென்றேக சப்தார்த்தமாம் போது அந்யோபாயைரநந்வயம் சொல்லிற்றாகிறது. பரஸ்வீகர்த்தாவான ஸர்வேச்வரன் தானே உபாயாந்தர ஸ்தானத்திலே நிற்கையாலே இவனுக்கு பாயாந்தராபேக்ஷையில்லை யென்கை. பக்த்யா த்யநபேக்ஷஸ்வதந்த்ரோபாயத்வ மென்றதாயித்து. வித்யாத்வஸாம்யத்தாலே வர்ணாச்ரமதர்மாதிகளுக்கும் அங்கத்வ முண்டோ வென்று ஸம்சயிக்கவேண்டா, அங்காந்தர புஷ்கலேபாயாந்தரக்ருத்யத்தையும் நானேசெய்வன் என்னொருவனையேபற்றென்று ஏகசப்தார்த்தமானபோது ததங்கைரப்யஸம்பந்தம் சொல்லிற்று. ப்ரபத்திக் கென்றடைத்து வைத்த ஆநுகூல்ய ஸங்கல்பாதிக ளொழிய பக்த்யங்க பூதங்களாயாதல் இதரங்களாயாதலுள்ள பரிகாரந்தரங்கொண்டுஅபேக்ஷையில்லையென்கை. இவன்கோலினபலமெல்லாவற்றிற்கும்உபாயமொன்றே யாயிருக்குமென்று'யத்யேநகாமகாமேந' இத்யாத்யநுஸாரேணஏகசப்தார்த்தமாம்போதுஸர்வசாத்யேஷ்வபேதம் சொல்லிற்றாகிறது.இப்படியாலுள்ளவைலக்ஷண்யங்கள்ஒருசாதனமாயென்றதில் அபிப்ரேதங்கள். பொன் - ஸ்ப்ருஹணீயமான, ஸர்வகுணங்களுக்கும் புகலுட்டவற்றாய் அகிஞ்சநாலம்பநமாயிருக்கையாலே ஸர்வபோக்யமான வென்கை. அருளோடும் - கிருபையோடும், பூமகளோடும் - பெரியபிராட்டியாரோடும், புகழ - புகழும்படி, வேதங்களும் ப்ரஹ்மாதிகளும் ஆச்ரிதர்களும் ஸ்துதிக்கும்படியாக, நின்ற-நின்றவரான, இங்கு அருளென்றது ரக்ஷணோபயுக்தமான ஸகலகல்யாணகுணங்களுக்கும்உபலக்ஷணம். இது த்ருஷ்டாந்தார்த்தம். அநவதிகாதிசயா ஸங்க்யேய கல்யாண குண விசிஷ்டனாயிருக்குமாப்போலே ஸ்வாபிமதாநுரூப குண விபவைச்வர்ய சீலாத்ய நவதிகாதிசயா ஸங்க்யேய கல்யாணகுணையான பெரியபிராட்டியாரோடு நித்யஸம்ச்லிஷ்டன் என்கை. இத்தால் ஏகசப்தம் உபாயதசாயாம் லக்ஷ்மீ வைசிஷ்ட்யத்தை நிஷேதிக்கிறதென்கிறபக்ஷம் ப்ரதிக்ஷிப்தமானபடி. கல்யாணகுணயோகம் ஏகத்வ பாதக மாகாதாப்போலே லக்ஷ்மீவைசிஷ்டயமும் ஏகத்வபாதகமன்றென்று திருவுள்ளம். இன்னுரை - போக்யமான ஸூக்தியை யுடையவரான, ப்ரபந்ந ஜநபாதேயமான ஸூக்தியையுடையவரான என்கை. ப்ரம விப்ரலம் பாதி ஸம்பாவனையில்லை யாகையாலே ஸர்வவிஸ்ரம்பணீய சரமச்லோகரூபதிவ்யஸூக்திகரான வென்று திருவுள்ளம். ஈச

னையே - ஸர்வேச்வரனையே, ஏகம் - ஏகம்என்கிற பதத்திலே, எண்ண - எண்ணு கைக்கு, இசைந்தனம் - அங்கீகரித்தோம். ஸதாசார்யோபதேசாதிகத ஸாரார்த்தர் களாகையாலே கீழுபபாதித்த ஆறர்த்தங்களையும் ப்ரகாசிப்பிக்கிற ஏகசப்தத்தில் தா த்ருச குணவிசிஷ்ட ஸர்வேச்வரனை அநுஸந்திக்கலாகு மென்கை. (௪)

ஊனிலிணைத்துழல்விக்கும் வினைக்கடலுள்விழுந்த
யானெனதான குணங்களெனக்கிசை நல்வழியுந்
தானுதவித் தனைத்தந்திடநின்ற தனித்தரும
நானினிவேறோர்பர நணுகாவகைநல்கின்றதே. (௫)

இது சரணசப்தார்த்தம் சொல்லுகிறது. சரணசப்தம் உபாயபரமிறே. உபாயமாவது தான் கோறின பலத்தைப் பெறுவதற்காகத் தான் செய்யவேண்டியகார்யம். ஈச்வரனை உபாயமாகப் பற்றுகையாவது எனக்கு வேண்டிய பலத்தை நீயே கொடுக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கை. இது பரந்யாஸம். ஈச்வரகதமான உபாயத்வமாவது பரஸ்வீகர்த்ருத்வம். அப்படியே பரந்யாஸோபயுக்த ஜ்ஞானுதிப்ரதாநமும் ஈச்வர கார்யம். அத்தைச்சொல்லுகிறது.

ஊனில் - மாம்ஸத்திலே, மாம்ஸமயமான தேவாதிசரீரத்திலே, இணைத்து - சேர்த்து, அவிவேகிகளுக்கு பேதாரஹம் அரிதாம்படி ஒன்றாக்கி யென்கை. உழல்விக்கும் - உழலச்செய்கிற, பரிப்ரமிக்கும்படி செய்கிறதான, ஜநநமரண சக்ரபரிவ்ருத்தியாலே ஸதத பரிப்ரமம் செய்விக்கிறதான வென்கை. வினைக்கடலுள் - கர்மரூபஸாகரத்தில், அநுபவைக நாச்யமான ஸுக்ருத துஷ்க்ருத ரூபா நாதிகர்ம பரம்பரை யென்னும் கரைகாண வொண்ணுக் கருங்கடல் நடுவில்என்கை. விழுந்த-நிபதிதனை, கடல் நடுவில் விழுந்தவன் அதன் அலை போக்கும் போக்கன்றித் தன் முயற்சியாலொன்றும் செய்யவல்லானாகாதாப் போலே கர்மஸாகர பதிதனான சேதநனும் தான் அவசனாய் கர்மாநுரூப தேவாதிசரீரயோகேந ஜநந மரணாதி சக்ரபரிப்ரமம் செய்யுமத்தனை போக்கி ஸ்வயத்நத்தாலே தன்ஹிதாஹிதம்செய்துகொள்ள சக்தனல்லனென்கை. யான் - என்னையும், எனதான - என்னுடையவையான, குணங்கள் - பகவத நந்யார்ஹ சேஷத்வாதி குணங்களையும், எனக்குஇசை - என்ஸ்வபாவத்திற்கு அநுகுணமான, ஜ்ஞான சக்த்யாத்யதிகாராநுரூபமான வென்கை. நல்வழியும் - ஸமீசீநமார்க்கத்தையும், ஸம்ஸாரஸாகர ஸந்தரணோபாயத்தையு மென்றபடி. கர்மயோக ஜ்ஞான யோகபக்தியோக ந்யாஸவித்யாதிகளில் ஸ்வஸ்வாதிகாராநுகுணமான உபாயத்தையு மென்றபடி. தான் - நிரவதிக காருண்யரூபியான தானே, உதவி - கொடுத்து, நம்முடைய உத்தரணோபாயத்தைச் சிந்தித்து ரக்ஷாபேக்ஷாப்ரதீக்ஷனாய் நின்று அஜ்ஞாத ஸுக்ருதாதிகளை முதலாக்கித் தானே ஸ்வரூபஜ்ஞாநாதி ஹேதுகமான ஜாயமான கடாக்ஷத்தைப்பண்ணி ஆசார்ய ப்ராப்தி பண்ணுவித்து தத்வோபாய விவேகம் பண்ணுவித்து ஸ்வாதிகாராநுகுண ஸமுசித ஸமீசீநோபாயத்திலே மூட்டியென்றதாயிற்று. என்னைத்தருகையாவது பகவத்தாஸ்யைகஸ்வரூபமான என் ஸ்வபாவத்தை அறிவிக்கை. 'அஸந்நேவ ஸபவதி, ஸந்தமேநந்ததோவிது:' இறே. தனை - தன்னை, அப்ராக்ருத தேச விசேஷத்திலே ஸர்வப்ரகார நிரதிசய போக்யனாய் ஸர்வாகார விசிஷ்டனான தன்னை, தந்திட - கொடுக்கும்பொருட்டு, தானானதன்மையில் தரும்பொருட்டு, "முதற்றனியுன்னையுன்னை யெந்நாள் வந்து கூடுவன்யான்" என்றிறே அபேக்ஷிப்பது. நின்ற - ஆத்மாநம் ப்ரகாச்ய ஸ்திதனான, இங்கு நின்ற வென்றது திஷ்டமாந சப்தபர்யாயம். நாம் சரணவரணம்பண்ணும்படி தன்திருவடிகளைத் தாழவிட்டுக் கொண்டு பார்த்தன் தேர் முன்னே தாழநின்றவனான வென்கை. அன்றிக்கே: ஸர்வ ஸமாச்ரயணீயத்வாய உகந்தருளின நிலங்களிலே அர்ச்சாருபேணநின்ற வென்றுமாம், அர்ச்சாவதாரங்களிலிறே நம்மாசார்யர்கள் ப்ரபத்தி பண்ணுவது. தனித்தருமம் - அத்விதீயதர்மமானது, "ஏகம்ஸர்வப்ரதம் தர்மம் ஸ்ரீயாஜுஷ்டம்" என்கிறபடியே ஸநாதந தர்மமான ஸ்ரீகீதாசார்யனென்றபடி. நான்-அவன் திருவடிகளில் ரக்ஷாபரந்யாஸம் பண்ணின நான், இனி - மேல், வேறோர்பரம் - வேறொரு பாரத்தை, நணுகாவகை - அடையாதவண்ணம், நல்கின்றது - ஸ்நேஹியாநின்றது, ஸக்ருத்வ பாதகமான விதியொன்றும் இல்லாமையாலே அது ஸக்ருத்கர்த்தவ்யமாய்த்து, 'ஏகம் சரணம்' என்ற ஸமபிவ்யாஹாரத்தாலே கோலினபலத்தைப்பற்ற மேலொருகர்த்தவ்யாந்தரமில்லையென்றதாகிறது. தேஹயாத்ரை கர்மாதீனையாய் ஆத்மயாத்ரை ஈச்வராதீனையாய் அற்றபின்பு நமக்கினி

கர்த்தவ்ய மொன்றுமில்லை யாகாதே. இப்படி நாம் நிர்ப்பரராயிருக்கும்படி அவன் செய்துவைத்தது அவனுடைய நிரவதிக காருண்யமேயிறே. 'மித்ரபாவேந' என்பானவன் அபிப்ராயத்தாலே நல்கின்ற தென்றது. (ரு)

கடுவினைநாம்பெறும் பேற்றைத்தகைந்தமைகொண்டுநம்மேல்
நடைவிலகாமலிசைந் தொருகாலந் துணிவுடனே
உடைமையடைக்கலமாக வடைக்கு முகப்பதனால்
அடையெனவன்றுரைத்தா னடைவித்தனன்றன்னடியே. (சா)

வ்ரஜவின் அர்த்தம் சொல்லுகிறது. கடுவினை - க்ரூரமான கர்மங்கள், ப்ராரப்தருபங்களான கர்மங்கள், நாம் பெறும்பேற்றை-நமக்கு தாயதனக்ரமத்தாலே ஸ்வதஃப்ராப்தமாய் நாம் பெறக்கடவபுருஷார்த்தத்தை, பகவத் கைங்கர்ய ரூப புருஷார்த்தத்தை யென்கை. தகைந்தமைகொண்டு - ப்ரதிபந்தித்தபடி கொண்டு, ப்ரதிபந்தித்தமையாலே யென்றபடி. நம்மேல் - நம்முடையமேலே, ஸ்வசரண யுகள ஸமாச்ரிதரான நம்திறத்திலென்கை. நடை - கதியானது, ஆசாரமானது, விலகாமல் - தவறாமல், மேலையார் செய்வனகள் என்று முன்னோர் நடந்தவழியே வழுவாதுநடக்கும்படி யென்கை. இசைந்து - அங்கீகரித்து, துணிவுடனே - மஹாவிச்வாஸத்துடனே, ஒருகாலம் - ஒருகாலத்தில், ஸக்ருத்தாகவென்றபடி. உடைமை- ஸ்வரக்ஷ்ய வஸ்துவை, அடைக்கலமாக — சத்ருனுக்குரக்ஷ்யமாக, அடைக்கும்-ந்யாஸம்செய்கிற, உகப்பதனால்-ஸந்தோஷத்தினாலே, தன்னுடைமையை ரக்ஷித்துக்கொள்ள சக்தியில்லாதவன் அதை ரக்ஷிக்க சக்தன்கையில் நிக்ஷேபமாக அடைத்துவிட்டு நிர்பரனாய்ப் பயங்கெட்டு மார்பில் கைவைத்துறங்கு மாப்போலே யென்றபடி. அடை-வ்ரஜ, என - என்று, அன்று-பாரதஸமராரம்ப ஸமயத்திலே, அர்ஜுநசோகாப நோதநவ்யாஜேந அத்யாத்மசாஸ்த்ர ஸாரார்த்தத்தை உபதேசிக்க உறுப்பட்டகாலத்திலேஎன்கை. உரைத்தான்- அருளிச்செய்த கீதாசார்யன், தன்னடி -ஸ்வசரண கமலயுகளத்தை, அடைவித்தனன்- ப்ராபிக்கச்செய்தான், ஸதாசார்ய ப்ரஸாதத்தாலே விசததமாதிகத ஸ்வரூபோபாய விவேகராக்கி ந்யஸ்தபரராக்கி வைத்தான்.

கத்யர்த்தமானவ்ரஜதாது புத்யர்த்தமாய் ஸாங்கமாய்ஸக்ருத்கர்த்தவ்யமான பரந்யாஸரூபாத்யவஸாய விசேஷத்தைச் சொல்லுகிறதென்று அருளிச்செய்கையாலே, முதலடியிலே அநாத்யாஜ்ஞாதிலங்கனமடியாக ஏதாவத் பர்யந்தம் தானிழந்தமையை அநுஸந்திக்கும்படியையும், நடைவிலகாமலென்று ப்ராதிகூல்யவர்ஜனமும் இசைந்தென்று ஆநுகூல்யஸங்கல்பமும் துணிவுடனே யென்று மஹாவிச்வாஸமும்கடுவினை யென்று கர்மங்களுக்கு ப்ராபல்யம் சொல்லுகையாலே தத்ப்ரதிகாரார்ஹமானதோர்கைம்முதலில்லாமை சொல்லிற்றாய் ஆகிஞ்சந்யமும் அடை யென்பதில் கோப்த்ருத்வவரணமும் அங்கியும் சொல்லிற்றாய்த்தென்று கொள்ளுக. உரைத்தானடைவித்தனன் தன்னடியே யென்று ஸாத்விகத்யாகம் சொல்லிற்று. (சா)

கானென்ற வேதங்கள் கற்கும்பரனென்று காட்டநின்ற
தானின்றறிய கிலார்க்கறிவிக்குந் தனித்திறலோன்
வானொன்றினரோடு மானிடனென்ன வவதரிப்பான்
நானென்றநந்திரு மானம்மைநற்பதஞ் சேர்த்திடுமே. (எ)

அஹம் சப்தார்த்தம் சொல்லுகிறது. கானென்ற - காடுபோன்ற, துரவகாஹங்களான வென்கை. வேதங்கள் கற்கும்-வேதங்களால்கற்கப்படுமவனை 'வேதைச்ச ஸர்வை ரஹமேவ வேத்ய:' இறே. பரன் - பரமபுருஷன், பரதத்வம், என்று - இப்படி, காட்டநின்ற - காட்டும்படிநின்றவனை. தான்—,ஸர்வஸ்மாத் பரத்வேந வேதங்களாலே ப்ரதிபாதிக்கப்பட்ட தான் என்கை. இன்று - இப்போது, தான் மநுஷ்யஸஜாதீயனாய் அவதரித்திருக்கச்செய்தே; அறியகிலார்க்கு - அறியஅஸமர்த்த ரானவர்களுக்கு, அறிவிக்கும் — தானே ப்ரகாசிப்பித்துத் தெரிவிப்பதான, தனி — ஒப்பற்ற, திறலோன் -ப்ரபாவமுடையவனும், 'பஹூநி மே வ்யதீதாநி' என்கிறபடியே தன்அவதாரரஹஸ்யத்தைத் தான் சபத பூர்வகமாக வாகிலும் வெளியிடு மவனை வென்கை. "அறியாத விடைச்சியரு மறியும் வண்ணம்." வான்-பரமபதத்திலே, ஒன்றினரோடு-தன்னோடொக்க 'ஸவயஸ இவதே' என்றுபெருமதிப்புடையநித்யஸூரிகளோடுகூட,

மாணிடனென்ன - மனுஷ்யனென்னும்படி, மனுஷ்ய ஸஜாதீயதயாஎன்கை. 'க்ஷணமபி தேயத்விரஹோதி துஸ்ஸஹ:' ஆகையாலே அவர்களை விட்டுப் பிரியமாட்டாதே கூட்டிக்கொண்டு வந்தபடி. திருவநந்தாழ்வானிறே நம்பி மூத்தபிரான். திருவடி நேரே வந்திருக்கும். சேஷாசநன் பார்த்தனென்பர். இப்படியேமற்றும் கொள்க. அவதரிப்பான் - அவதரிப்பவனும், 'ததாத்மாநம்ஸ்ருஜாம்யஹம், ஸம்பவாமி யுகே யுகே' இறே. நான் - அஹம், என்ற - என்றருளிச்செய்த, நம்திருமால் - நமக்குமாதாவான பெரிய பிராட்டியாரிடத்தில் வ்யாமுக்தனானவன், இது மாம் அஹம் ஸமபிவ்யாஹாரார்த்தம். மோக்ஷயிஷ்யாமியில் உத்தமனாலே அஹம் என்று தோற்றுகிற்க மிகுதி காட்டுகிற அஹம்சப்தத்தினாலே தன் ஸ்வாதந்த்ர்யமும் மாமில் ஸௌலப்யமும் ஆக, பரஸ்பராதி சயாதாயகமான குணத்வயமும் ப்ரகாசிதமாயிருக்கிறது. நம்மை-அவன் திருவடிகளை ஆச்ரயித்த நம்மை, நற்பதம்-'தத்விஷ்ணோ: பரமம்பதம்' என்கிறபடியே உத்தமபதமான பரமபதத்தை, சேர்த்திடும் - சேர்ப்பான், நாம் ந்யஸ்தபாராகையாலே, நாம் கோலின காலத்திலே நாம் கோலின பலத்தைத் தருகைக்காக சுடரொளியாய் நின்ற தன்னுடைச் சோதியைப்ராபிக்கும்படி செய்வன். (எ)

தன்னிலைகாட்டித் தனிமையுகந்து தளித்தகவால்
நன்னிலைதீரவடைக்கலங் கொண்டடி சேர்த்திடவே
பன்னிலைமூலவெழுத்திலும் பாண்டவர் தேர்தனிலும்
முன்னிலை கொண்டபிரானெம்மை முன்னிலைகொண்டனனே (அ)

இது 'த்வா' சப்தத்தின் அர்த்தத்தைக் காட்டுகிறது. நிர்பரத்வமிறே த்வா சப்தார்த்தம். தன் - தனது, நிலை - ஸ்திதியை, காட்டி - ப்ரதர்சிப்பித்து, சிதசித் விலக்ஷணனான தன் ஸ்வரூபத்தை, 'நத்வேவாஹம் ஜாதுநாஸம்' முதலானஉபதேச பரம்பரைகளாலே அர்ஜுனனை வ்யாஜீகரித்துஸர்வருக்கும் ப்ரகாசிப்பித்துஎன்கை. தனிமை - அஸஹாயதையை, உகந்து - ஸந்தோஷித்து, அல்பத்வா ஸ்திரத்வாதி தோஷங்களைத் தெளிகையாலே பரமபுருஷார்த்தத்தில் உத்கடாபிலாஷம் பிறந்து இதற்கென்று காட்டிய துஷ்கரோபாயாந்தரத்தில் துவக்கற்ற படியைக்கண்டுதன்னுபதேசம் பலித்ததென்று ஸந்தோஷித்தென்கை. நம் - நமது, நிலை - ஸ்திதியானது, தீர-தீரும்படி, நெடுங்காலம் பிழைசெய்த நிலை நீங்கும்படியாக, அநாத் யாஜ்ஞாதிலங்கனமடியாக ஸம்ஸரிக்கிற நிலை கழியவென்று திருவுள்ளம். தனி - ஒப்பற்ற, தகவால் - க்ருபையாலே, ஆச்ரிதரை ஒரு வழியாலே கரையேற்றவேண்டுமென்று நினைத்தால் விலக்கவல்லாரில்லை யென்று தனி யென்றது. அடைக்கலம் கொண்டு-ரக்ஷ்யவஸ்துவாக ஸ்வீகரித்து, ஸர்வ ப்ராப்யனாய் பரமகாருணிகனாய் விரோதி நிராகரண க்ஷமனான தான் இவன் செய்யும் சரணவரண மென்னும் வ்யாஜத்தை ஒரு பெருங்கைமுதலாக நினைத்து திருவுள்ளம் பற்றி யென்கை. 'கோவிந்தேதியதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம்' என்பானிறே அவன். 'பூயிஷ்டாந் தே நம உக்திம்விதேம' இறே. அடி - ஸ்வ சரண கமல யுகளங்களை, சேர்த்திடவே - சேர்க்கைக்காகவே, பூபாரா வதரணம் வ்யாஜமாத்ரம். அவதார ப்ரயோஜநம் அகிஞ்சந ப்ரபந்நஜந மோக்ஷணம், பல் நிலை - பல நிலைகளையுடைய, ஏகமாத்ரம் த்விமாத்ரம் த்ரிமாத்ரம் என்றுப்போல்வன பல விறே ப்ரணவத்தின்படிகள். மூல வெழுத்திலும் - ஸகல வேத மூலபூதமான ப்ரணவத்திலும், மூலமாகிய வொற்றை யெழுத்திறே. பாண்டவர்-பாண்டவரது, சரமச்லோகாவதார நிதாந பூதனாகையாலும் ஸ்ரீ ஸேநாபதி யாழ்வான் அவதாரமாகையாலும் பாண்டவரென்று புகழ்ச்சிப் பன்மை. (பூஜாயாம் பஹுவசநம்.) தேர்தனிலும் - தேரிலும், ப்ரணவத்தையும் பார்த்தரதத்தையு மொப்பிட்டுச் சேரஇணைத்த நுஸந்திப்பது நம்மாசாரியர்கள் பணி. 'சிலைவிசயன் தேரனையச் சிறுவேதத்தே, ப்ரணவேபார்த்தரதேசபாவயந்த:.' இத்யாதி. முன் - முன்னே, அக்ஷர த்ரயாத்மகமான ப்ரணவத்தில் ஆத்யக்ஷரத்தில், ஸாரதியாகையாலே ரதிக்குமுன்னே இருக்குமிறே. அபிமுகாகதர் முந்தறக்காண்பதிவனையாகாதே, நிலை - அவஸ்திதியை, கொண்ட - திருவுள்ளம்பற்றின, பிரான் - மஹோபகாரன், எம்மை - நம்மை, இருள்தருமாஞாலத்தில் மாறி மாறிப் பல பிறப்பும் பிறந்து தட்டித்தாவற்றுப் பரிப்ரமிக்கிற நம்மை, முன்னிலை - முன்னிலையாக, நீர் நீ முன்னிலை. த்வா என்றனிறே. கொண்டனன் - கொண்டான், அர்ஜுனன் பேரிட்டு வைத்தது மாத்திரம். த்வா என்றவனருளிச்செய்தது நம்மை என்கிறார். 'ஸர்வலோக சரண்ய'னிறே. 'ஸர்வபூதேப்ய:' 'அருக்காதேயனைவர்க்குமனைவராலு மஞ்சேலென் றருள்கொடுக்கும்.' (அ)

காடுகளோ நரகோ கடிதாங் காளத்திரளோ
சூடுவிடா வனலோ தொலையா நிலை நள்ளிருளோ
சாடுபடச் சரணாலன்று சாடிய சாரதியார்
வீடுசெய்வித்து நம்மைவிடுவிக்கின்ற பாவங்களே. (கூ)

இது 'ஸர்வபாப' சப்தார்த்தம் சொல்லுகிறது. பாபமாவது சாஸ்த்ரங்கொண்டே அறியவேண்டும் அநிஷ்டஸாதநம்.

சாடு - சகடமானது, பட - நசிக்கும்படி, அன்று - ஸ்தந்யார்த்தியாய் ரோதனம் பண்ணின காலத்திலே, சரணால் - திருவடியாலே, சாடிய - உதைத்த, 'போர்ந்தோர் சாடிறச்செய்ய பாதமொன்றூற் செய்த நின்சிறுச் சேவகமும்' என்றதிறே. 'ஊர் சகடமிறச்சாடியதும்'. சாரதியார் - ஸாரதியான க்ருஷ்ணன், பாடுபட வென்று பாடமானபோது பாடென்று வருத்தமாய் பூமியின் துஸ்ஸஹ பாரரூபமான வருத்தம் தீரும்படி திருவடிகளை அசைத்து தேரை நடத்திய சாரதி யென்னுதல், அன்றிக்கே: பாடு என்று இடமாய் அது தப்பும்படி திருவடியால் தேரை யூன்றின வென்றுமாம். கர்ணயுத்தத்தினன்று நாகாஸ்த்ரத்தை இலக்குத் தப்புவிக்கும்படி திருவடி யூன்றின வென்றபடி. இத்தால் ஆச்ரித ரக்ஷணத்தில் அப்ரமாதித்வம் சொல்லிற்றாகிறது. "தம் வீக்ஷ்ய தீக்ஷ்ணம் யமதண்டகல்பம் அஸ்த்ரம் புஜங்காஸ்யமிவாக்நிகர்ப்பம் । பதாவநிஷ்டப்ய ரதோத்தமம் தம் ப்ராவேசயத் க்ஷோணீம் கிஷ்கிந்தாத்ராம்" என்னக்கடவதிறே. வீடு-த்யாகத்தை, பரந்யாஸத்தையென்கை. செய்வித்து - பண்ணிவைத்து, நம்மை ரக்ஷாபரஸமர்ப்பணம் பண்ணும்படி செய்து வைத்தென்கை. நம்மை விடுவிக்கின்ற - நம்மைவிட்டுப்போகும்படி செய்கின்ற, பாவங்கள் - பாவங்களானவை, 'வீடிசைமினோ' ஒன்றதை அடியொற்றி வீடிசைவித்து என்று பாடமானாலும் பொருந்தும். வீடு - ஸமர்ப்பணத்தை, இசைவித்து - அப்யுபகமிக்கும்படி பண்ணியென்கை. ஸ்வரக்ஷாபரஸமர்ப்பணத்தைப் பண்ணுவித் தென்றுபலிதம். பாவங்கள், காடுகளோ - விபிநங்களோ, பாபங்கள் போகவேண்டிய இடம் காடோ நரகோ இத்யாதி. 'நாட்டிலுள்ள பாவமெல்லாம் சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே' என்னக்கடவதிறே. நரகோ - நரகமோ, கடிதாம் - க்ரூரமான, காளத்திரளோ - விஷஸமூஹமோ, அன்றிக்கே: விஷபிண்டமோ. விஷப்ரசுரமான கபளமோ என்னுதல். சூடுவிடா - உஷ்ணபாவத்தைவிடாத, அனலோ - அக்னியோ, மணிமந்த்ரௌஷதி பலாதிகளால் ப்ரதிகாதாநர்ஹமான அக்னியோ என்கை. தொலையா - ஒழியாத, நிலை - ஸ்திதியையுடைய, சாச்வதமான வென்கை நள் - நிபிடமான, இருளோ - அந்தகாரமோ, அவைகள் சரிப்பது காடோ நரகோ விஷகபளமோ அக்னியோ அந்தகாரமோ. அவை போய்த்தன, இனிமீளா என்கை.

ப்ராரப்தேதரங்களாய் ப்ராப்தி விரோதிகளாகவல்ல பூர்வபுண்ய பாபங்கள் உபாயாரம்பத்திலே கழியும்படியை அவை போவதுகாடோ என்றும் அபுத்திபூர்வங்களும் தேசகாலவைகுண்ய க்ருதங்களும் அலேப விஷயங்களாம்படியை நரகோ என்றும் அநபத்தில் புத்திபூர்வோத்தராகங்கள் ஸ்வாதிகாராநுகுண ப்ராயச்சித்த விசேஷத்தாலேயாதல் சிக்ஷார்த்தமான லகுபல விசேஷத்தாலேயாதல் தீரும்படியை கடிதாங்காளத்திரளோ என்றும் ப்ரபந்நனுக்கு ப்ராரப்தத்தில் இசைந்தகாலத்துக்குள்ளே விபக்வமாம் கர்மாம்சம் அநுபவத்தாலும் அவாந்தரப்ராயச்சித்தத்தாலும் நாசநீயபடியைச் சூடுவிடாவனலோ என்றும் உபய பாவநா க்ரமத்தாலே வந்த புத்திபூர்வோத்தர புண்யங்களில் ப்ரதிபந்தகமில்லாதவையும் உபாஸகனுக்கு வித்யாநுகுண பூர்வோத்தர புண்யங்களும் பலப்ரதாநத்தாலே கழியும்படியையும், வித்யைக்கநுபயுக்த புத்தி பூர்வோத்தர புண்யங்களில் அநுகூல ப்ரதிகூலப்ரபலகர்பாந்தர பலங்களாலே நிருத்தாவஸரங்களாய் பலங்கொடுக்கப் பெறாதே மிகுதியாய் நின்றவை அந்திமகாலத்திலே கழியும்படியையும் தொலையாநிலை நள்ளிருளோ என்றும் அருளிச்செய்தார்.

விடுவிக்கின்ற பாவங்கள் துரவகாஹத்வ துஸ்தரத்வங்களாலே மருகாந்தாரங்களோ, துஸ்ஸஹதுக்கஜநகத்வாதிகளாலே ரௌரவாதிநரகங்களோ, துக்கமிச்ரத்வாதிகளாலே விஷ ஸம்ஸ்ப்ருஷ்டமான அன்னகபளமோ, தாபத்ரய ஜநகதயா அனலோ, ஸ்வரூபதிரோதாநாதிகளைப் பண்ணுகையாலே அவிநாச்ய காடாந்தகார யுக்தமான காளராத்ரியோ என்று பொருள்கூறுவாருமுண்டு. இப்படி இதஃபூர்வம் நினைக்

கலாம்படியாயிருந்த எல்லாபாபங்களையும் விடுவிக்குமென்று கருத்து. ப்ராரப்தேதரங்களை காடுகளென்றது. அப்யுபகதமாய் அநபூயமான பாபங்களை நரகென்றது. புண்ய சப்திதங்களை கடிதாங்களந்திரள் என்றது. இப்படி 'க்ருதாங்' என்றதைச்சொல்லி 'சூடுவிடாவனமே' வென்று 'க்ரியமாணாங்' என்றதைச்சொல்லி 'க்ரிஷ்யமாணாம்ச்சஸர்வாங்' என்றதை 'தொலையபிலை நள்ளிருளோ' என்கிருர் என்னுமாம். (௯)

சென்றுயர் வானமர்ந்தவ்வடியாருடன் சேர்ந்திடவே
இன்றெனிலின்றுநாளை யெனினாளை யினிச்செறிந்து
நின்றநிலை நின்றனைத்து வினையுநின் விட்டகலக்
கன்றிவிடுப்பனென்ருன் கருத்தானம்மைக் காத்திடுமே. (௧௦)

இது 'மோக்ஷயிஷ்யாமி'யின் அர்த்தம் சொல்லுகிறது. நீ நினைத்தபோது விடுவிப்பேன் என்றிறே அதின் அர்த்தம்.

இனி - நீ என்னிடத்தில் ரக்ஷாபரந்யாஸம் செய்தபின்பு, செறிந்து - நீபிரீஸங்களாய், நின்ற - இருந்தவையான, நிலை நின்ற - ஸ்திரப்ரதிஷ்டிதங்களான, நின் - உன்னுடையவையான, அனைத்துவினையும் - ஸகலகர்மங்களும், 'ஸர்வபாபேப்ய:' என்ருனிறே. ப்ராப்திவிரோதிகர்மங்களுக்குக்கார்யமாயும் காரணமாயும் வருகிற அவித்யாவாஸநாதிகளும் ஸர்வபாபசப்தார்த்தமாகையாலும் ஆநந்த்யம் பஹுவசநார்த்தமாகையாலும், செறிந்துநின்ற வென்று கார்யகாரணபலிஷ்டத்வமும் நிலைநின்றவென்று ஆநந்த்யமும் சொல்லிற்றாகிறது. விட்டு - ந்யஸ்தபரனான உன்னைவிட்டு, அகல- விலகிப்போம்படி, ஸுக்ருத துஷ்க்ருதங்கள் ஸுஹ்ருந் துர்ஹ்ருத்துக்கள் பக்கலிலே ஸங்க்ராந்தமாம்படி யென்கை. சென்று - அர்ச்சிராதி கதியாலே சென்று, உயர் - ஸர்வோத்க்ருஷ்டமான வான் - பரமபதத்திலே, அமர்ந்து - புநராவ்ருத்தியில்லாதபடி ஸ்திரமாயிருந்து, அவ்வடியாருடன் - என்னோடொக்க ஸமாநபோகராய் ஆநந்தாநுபவம் பண்ணுகிற நித்யமுக்தர்களோடு, சேர்ந்திட - நீ ஒரு கோர்வையாகச்சேரும்படி, இழந்தநாள் பலத்தினிழவத்தனை போக்கி மேல் பலபாகத்தில் வைஷம்ய மில்லையிறே. அன்றிக்கே: அமர்ந்த - ஸ்திரப்ரதிஷ்டிதரான, அடியாருடன்- நித்யமுக்தர்களோ டென்றுமாம். இன்றெனில் - இன்றே பரமபுருஷார்த்தம் பெறவேண்டின், இன்று - இப்போதேவிடுப்பன், நாளையெனில் - நாளைக்கு ஆகட்டுமென்ருல், நாளை - நாளையதினம் விடுப்பன், நீ கோலினகாலத்திலே விடுவிப்பன் என்கை. கன்றி - கோபித்து, 'க்ரோதமாஹாரயத்தீவ்ரம்'என்று கோபந்தான் இவனிட்டவழக்காயிறே இருப்பது. ஆச்ரிதரை நலிந்ததென்ருக்கடுஞ் சீற்றம் பிறக்குமிறே. விடுப்பன், அநாதிவிபரீதாநுஷ்டானத்தாலே பிறந்த நிக்ரஹஸங்கல்பத்தை நான் விடுவேனென்றபடி. என்ருன் - 'மோக்ஷயிஷ்யாமி' என்று அருளிச்செய்தவன், கருத்தால் - ஸங்கல்பத்தாலே, நம்மை - ந்யஸ்தபாரராய் சாதகவ்ரதிகளான நம்மை, காத்திடும் - ரக்ஷித்தருளும். 'க்ஷிப்ரம் ஸம்ஸ்ருதி சர்வரீம் க்ஷிபதியத் ஸங்கல்ப ஸூர்யோதய:' என்றுஸம்ஸார நிவர்த்தகம் ஸங்கல்பமேயிறே. (௧௦)

அறிவுமனைத்து மிலாவடியோமை யடைக்கலங்கொண்
டுறவெனநின்றதெல்லா முறவேநின்ற தானெமக்காய்
மறுபிறவித்துயர்வாராவகை மனங்கொண்டகலா
இறையவனின்னருளா லெங்கள்சோகந் தவிர்த்தவனே (௧௧)

'மாசுச:' இன் அர்த்தத்தைச் சொல்லிக்கொண்டு பிரபந்தத்தை நிகமிக்கிறது.

அனைத்தறிவும் இலா - ஸர்வஜ்ஞானமுமில்லாத, தேஹாத்மஜ்ஞான மில்லாதே சேஷசேஷிபாவ ஜ்ஞானமில்லாதே ஸ்வரூபாநுரூப புருஷார்த்த ஜ்ஞானமில்லாதே தது சிதோபாய ஜ்ஞான மில்லாதே இப்படி இவனுக்கு ஆவச்யகமான ஜ்ஞானங்கள் எல்லாம் கிடக்க விபரீதமான ஜ்ஞான முண்டாயிராநின்றதென்று தோற்ற இரண்டும்மை கொடுத்தது. அடியோமை - ஸ்வரூபத்தாலே நிருபாதிக தாஸபூதரான நம்மை, ஆசார்யாநுக்ரஹத்தாலே லப்தமந்த்ரராய் ஸ்வரூபஜ்ஞானம் பெறும்படி பண்ணி தாஸராக்கிவைத்த நம்மை யென்னுமாம். அடைக்கலம் கொண்டு- ரக்ஷ்யவஸ்துவாக அங்கீகரித்து, நாம் பண்ணின ரக்ஷாபரஸமர்ப்பணத்தைத் திருவுள்ளம்பற்றி யென்கை. உறவென - பந்தவென்று சொல்லும்படியாக, நின்றதெல்லாம் - நின்றவையெல்லாம், 'அன்னையாய் அத்தனாய்' இத்யாதியாலே சொல்லப்படுகிறபாந்தவ்யமெல்லா

மென்கை. உறவே - அடைகைக்காகவே, நின்ற -இருந்தவனான, தான்—,எமக்காய்-நமக்காக, நாம் அநர்த்தப்படாதபடி பண்ணுகைக்காக, என்றபடி. மனங்கொண்டகலாவென்று கூட்டுவது. அன்றிக்கே: உறவெனநின்றதெல்லாம் எமக்கு நின்ற உறவு தானே யாய் என்றுகூட்டி 'மாதா பிதா ப்ராதா நிவாஸச்சரணம்ஸுஹ்ருத்கதிர்நாராயணः' என்கிறபடியே நித்ய நிருபாதிக ஸகலவித பந்துவும் நமக்குத்தானேயாயென்னுதல். மறுபிறவித்துயர் - ஜன்மாதரதுக்கம், வாராவகை - நமக்குநேராவண்ணம், மனங்கொண்டு - மனதை நியதவாஸஸ்தலமாகத்திருவுள்ளம் பற்றி, அகலா-நீங்காத, பெரியபிராட்டித்தன்னகலத்தை விட மாட்டாதாப்போலே இவனும் நம்மனதை விட்டகலமாட்டாதவன் என்கை. 'இன்றவன் வந்திருப்பிடம் என்தனிதயத்துள்ளே தனக்கின்புறவே.' 'கொள்ளக்குறைவற் றிலங்கிக் கொழுந்துவிட் டோங்கிய நின்வள்ளற்றனத்தினால் வல்வினையேன் மனம் நீ புகுந்தாய்'' இறையவன் - ஸர்வஸ்வாமியானவன், அந்திமப்ரத்யயம் தன் கார்யமேயிறே 'அஹம் ஸ்மராமி' இறே. 'அப்போதைக்கிப்போதே சொல்லி வைத்தேன்' என்றவனாகையாலே இவனுக்கு தேஹாவஸாநகாலத்தில் நாம் தாழ்த்தோமாக வொண்ணாதென்று மனத்தே கோயில்கொண்டவனென்று திருவுள்ளம். இன்னருளால் - போக்யமான கிருபையாலே, எங்கள் - அவன் திருவடிகளிலே ந்யஸ்தபரரான எங்களுடைய, சோகம் - சோகத்தை, தவிர்த்தனன் – நீக்கினான். 'மாசுச:' என்று அருளிச்செய்தானிறே.

கீதாசாஸ்த்ரம் அர்ஜுநனை வ்யாஜீகரித்து ப்ரவ்ருத்தமாயிருக்கும். அதில் பந்துவதாதி நிமித்தக சோகங்கள் யதாவஸ்திதாத்மோபதே சாதிகளாலே கழிக்கப்பட்டன. ப்ருக்ருதியைப் பற்றவந்த சோகம் ''மாசுசஸ்ஸம்பதந்தைவீம் அபிஜாதொஸி' என்று கழிக்கப்பட்டது. இதில் உபாய தௌஷ்கர்ய விரோதி பாகுள்ய பலவிளம்ப ப்ரயுக்தசோகம் கழிக்கப்படுகிறது. சரமச்லோகந்தான் அர்ஜுநனை லக்ஷீகரித்து பரவ்ருத்தமானாலும் சரண்யாபிப்பிராயத்தாலே அது ஸர்வவிஷயம். ஆகையாலே எங்கள் சோகந்தவிர்த்தனனே என்னக்குறையில்லை. இங்குசோகம் என்றது பயத்துக்கும் உபலக்ஷணம். ஒன்றைச்சொல்ல இரண்டும் வருமாகையாலே சோகமென்றிவ்வளவே அருளிச்செய்தது. 'அஞ்சின நீ யென்னை அடையென்றார் வந்தார்.' என்றதிறே. அதிகார விசேஷத்தையும் உபாய விசேஷத்தையும் பலஸித்தியையும் பற்ற உபாயாநுஷ்டான பூர்வாபர மத்ய தசைகளில் பலபடியாக சோகங்கள் ஸம்பாவிதமாகையாலே ஜ்ஞானாநுஷ்டானங்கள் இரண்டினுடையவும் பலமான சோக நிவ்ருத்தியெல்லாம் இங்கே அபிப்ரேத மென்று திருவுள்ளம்.

இச்சரமச்லோகம் திரளிலே கேட்பிக்கலான இதிஹாஸத்தி லேற்பட்டுக்கிடக்கையைப்பற்ற சப்தம் ப்ரகாசமாய்ச் சொல்லலாமாகையாலே அர்த்ததः ரஹஸ்யமாயிருக்கும் என்று ஸம்ப்ரதாயம். (௧௧)

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

திருமகளார் திருமகனாந் தாதசூரித்
திருநாவீறுடைய பிரான்பதமே போற்றும்
பெருமையுடை வேங்கடநல் வரதனென்னுங்
குருவரனார் மகனாகித் தாதைபாதம்
மருவிநனிக்கசடறவே கலைகள்கற்றான்
கருவினிலாந் திருவுடையன் சாரவேதி
திருமலையினமமுடைத்தாதவாக்கிச்
சரமவுரைச்சுருக்குக்கோருரையிட்டானே.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

சரம சுலோகச் சுருக்கு வியாக்கியானம்

முற்றிற்று.

லக்ஷ்மி குமார தாத தேசிகன் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதேநிகமாந்தமகாதேசிகாயநமஃ

கீதார்த்த ஸங்க்ரஹ வ்யாக்யாநம்.

ఆరభ్యస్వగురుభ్యః...నత్వా। గీతార్థసారసంగ్రహగాథావివృషీయసంగజిత్ ప్రీత్యై॥
ఆనాజిఘ్రన్నేవ... పటిమా॥
గాథాఇమాః... తిశంకాః॥

ஆரப்யஸ்வகுருப்யஃ...... ஸ்ரீசமபிவ்யாப்யகுருததிம்நத்வா
கீதார்த்தஸாரஸங்க்ரஹ காதாவிவ்ருஷீய ஸங்கஜித்ப்ரீத்யை (க)
அநாஜிக்ரந்நேவ - படிமா (உ)
காதாஇமாஃ...களிதாதி சங்காஃ (ங)

கருமமுஞ்ஞாநமுங் கொண்டெழுங்காதலுக் கோரிலக்கென்
றருமறையுச்சியு ளாதரித்தோதுமரும் பிரமம்
திருமகளோடு வருந்திருமாலென்று தானுரைத்தான்
தருமமுகந்த தனஞ்சயனுக் கவன்சாரதியே. (க)

"தத்வம் ஜிஜ்ஞாஸமாநாநாம் ஹேதுபிஸ்ஸர்வதோமுகைஃ (1) தத்வமேகோ மஹாயோகீ ஹரிர்நாராயணஃ பரஃ, ஆலோட்யஸர்வசாஸ்த்ராணி விசார்யசபுநஃ புநஃ, இதமேகம்ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாராயணஸ்ஸதா" இத்யாதி ப்ரமாண ஸங்க்ரஹீத தத்வ ஹித புருஷார்த்த ப்ரதர்சகமாய் "அத்ரோபநிஷதம் புண்யாம்க்ருஷ்ணத்வைபாயநோப்ரவீத்" என்கிறபடியே உபநிஷத் ஸாராத்மகமாகையாலே "பாரதே பகவத்கீதா தர்மசாஸ்த்ரேஷுமாநவம். வேதேஷுபௌருஷம் ஸூக்தம் புராணேஷுசவைஷ்ணவம்" என்று மஹாபாரத ரஸத்வேந நிர்ணீதமாய் "யஸ்மிந் ப்ரஸாதஸுமுகேகவயோபிதேதே சாஸ்த்ராண்ய சரஸுரிஹதந் மஹிமாச்ரயாணி, க்ருஷ்ணேநதேநயதிஹஸ்வயமேவகீதம் சாஸ்த்ரஸ்யதஸ்யஸத்ருசம் கிமிஹாஸ்திசாஸ்த்ரம்" என்று அபியுக்தராலே வக்த்ரு வைலக்ஷண்யப்ரயுக்த பரமோத்கர்ஷ சாலித்வேந ப்ரசம்ஸிதமாய் பெரியமுதலியாராலே ஸ்ரீமத்கீதார்த்தஸங்க்ரஹத்திலே ஸங்க்ருஹீத சாஸ்த்ரஷட்காத்யாய ஸாரார்த்தமாய் பகவத் பாஷ்யகாரராலே ஸ்ரீமத் கீதாபாஷ்யத்தாலே விசதப்ரதர்சித பதவாக்யார்த்த யோஜநாகமாய் தம்மாலே ஸ்ரீமத்கீதார்த்தஸங்க்ரஹ ரக்ஷையிலே ரக்ஷிதஸாரார்த்தமாய் ஸ்ரீமத்கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகையிலே பரமத யோஜநா ப்ரதிக்ஷேப பூர்வகமாக நிஷ்கம்பீக்ருதார்த்தமான ஸ்ரீகீதாசாஸ்த்ரத்தினுடையஸாரார்த்தங்களை த்ரமிடஸூக்தி ரஸிக ஸாத்விக ஸமாஜ சித்தரஞ்ஜநார்த்தமாக த்ரமிட காதைகளாலே ஸங்க்ரஹிக்க வுபக்ரமித்து "ஸ்வ தர்ம ஜ்ஞாந வைராக்ய ஸாத்ய பக்த்யேக கோசரஃ, நாராயணஃ பரப்ப்ரஹ்மகீதா சாஸ்தரே ப்ரகீர்த்திதஃ" என்கிற ச்லோகத்தின்படியே க்ரோடீக்ருத ஷட்கத்ரயார்த்தமான சாஸ்த்ர மஹா வாக்யார்த்தத்தை நிஷ்கர்ஷித்தருளிச்செய்கிறார்.

தருமம்-தர்மத்தை, உகந்த - அநுபவித்தவனான, தனஞ்சயனுக்கு - அர்ஜுனனுக்கு, "விவாதபீதாயவிதிப்ரியாய" என்கிறபடியே தர்ம ச்ரவண ததநுஷ்டாநைக ப்ரவணனான வர்ஜுனனுக்கென்றபடி, இங்கர்ஜுனனை தனஞ்ஜயபதத்தாலே நிர்தேசித்தது தநஞ்ஜயதீதி தநஞ்ஜயஃ என்கிற வ்யுத்பத்தி லப்த தநத்ருஷ்ண விஜய ப்ரதர்சநார்த்தம். ஆக விசேஷண விசேஷ்ய பதங்களால் "ச்ருதாதந்யத்ர ஸந்துஷ்டஸ் தத்ராவசகுதூஹலீ" என்கிறபடியே ச்ரோதவ்ய சாஸ்த்ராபிருசியும் தத் வ்யதிரிக்த விஷயே ஷ்வலம் புத்தியும் ப்ரதிபாதித மாகையாலே யிவனுக்கு சாஸ்த்ரார்த்த ச்ரவணா திகார பௌஷ்கல்யம் தர்சிதம். அவன் - அந்த வர்ஜுநனுடைய, சாரதி - ஸாரதி, ஆச்ரிதவாத்ஸல்ய ப்ரயுக்த பாரதந்த்ர்யாதிசயத்தாலே யர்ஜுநஸாரத்ய ப்ரவ்ருத்தனான ஸர்வேச்வர னென்றபடி. இதுக்கு உரைத்தானென்கிற த்தோடே யந்வயம். கருமமும் - கர்மயோகத்தையும், ஞாநமும் - ஜ்ஞானயோகத்தையும், கொண்டு - அவலம்பித்து, எழும்-உத்பவிக்குமதான, ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞான பூர்வக பரித்யக்த பலாதிஸங்க பரமபுருஷாராதனைக வேஷ நித்யநைமித்திகாதி சாஸ்த்ரார்த்த ரூப கர்மயோகத்தாலும் பரிசுத்தாத்ம

ஸ்வரூப நிரந்தர ஸ்ம்ருதி ஸந்ததி விசேஷ ரூப ஜ்ஞாநயோகத்தாலும் பரிகர்மிதாந்
தஃகரண நிஷ்பாத்யா த்மஸாக்ஷாத்கார ஸாத்யத்வேந கர்மயோக ஜ்ஞானயோகங்
களை யாத்ம ஸாக்ஷாத்கார த்வரா ஸாதநத்வெ நா பேக்ஷிக்குமதான வென்று நிஷ்
க்ருஷ்டார்த்தம். காதலுக்கு - ப்ரேமத்துக்கு, பக்தியோகத்துக்கென்றபடி. தைல
தாராவ தவிச்சின்ன ஸ்ம்ருதி ஸந்தாந ரூப மாயாப்ரயாண மநுவர்த்தநீயமாய்
அஹரஹ ரப்யாஸாதேயாதிசயமாய் தர்சந ஸமாநாகார பக்தி யோகத்தை ப்ரேம
ரூபமாக நிர்த்தேசித்தது "நாயமாத்மாப்ரவசநேநலப்யோ நமேதயாநபஹுநாச்ரு
தேந" என்கிறபடியே பூர்வோக்த யோகம் நிரதிசய ப்ரேம ரூபதயா பரிணமித்தா
லல்லது பரம புருஷ வரணீயதா ஹேது வாக மாட்டா தென்று ப்ரேமாகார பரி
ணமத்தினுடைய ப்ராதாந்ய த்யோதநார்த்தம். ஓரிலக்கு-ஏகலக்ஷயம், இங்குலக்ஷ
யத்வமாவது பலத்வேநோத்தேச்யத்வம். இந்தயோஜநையிலோரென்கிறபதமவதா
ரணார்த்தமாய் ஜ்ஞாநகர்மாதி ப்ராப்யத்வ வ்யவச்சேதபரம். "பக்த்யேககோசர"
இதிபக்தேரேவ கோசரோ நாந்யஸ்யே த்யர்த்தஃ. ஏதேந கர்மஸமுச்சய வாக்யார்
த்த ஜ்ஞாநாதிபக்ஷாஃ ப்ரதிக்ஷிப்தாஃ. கோசரத்வ மிஹ பலத்வே நேதி க்ராஹ்யம்.
'பக்த்யேகலப்யே புருஷேபுராண' இத்யாதிபிரைகார்த்த்யாத் பக்தியோகலப்யஇதி
ஸ்வொக்தி ஸம்வாதாச்ச" என்று கீதார்த்த ஸங்க்ரஹரக்ஷையிலே தாமே அருளிச்
செய்தாரிறே. லக்ஷயத்வம் விஷயத்வ மென்னவுமாம். இது நிரங்குசைச்வர்யாதி
யுக்ததயா பக்த்யர்ஹத்வ மிஹ தத்கோசரத்வ மென்றருளிச்செய்தாரிறே.அப்போது
ஓரென்கிறபதம் பக்தியோகத்துக் கைகாந்தி கத்வாதிப்ரதர்சநார்த்தம். இந்தயோஜ
நையில் பரமபுருஷனுக்கு பலத்வம் தத்க்ரதுந்யாய ஸித்த மென்று கண்டுகொள்
வது. ஆக விவ்வளவால்பூர்வொதாஹ்ருத சாஸ்த்ரார்த்த ஸங்க்ரஹ ச்லொகத்தில்
பூர்வார்த்த மநுவர்ணிதமாய்த்து. கருமமும் ஞாநமு மென்கிறவித்தால் "ஜ்ஞாநகர்
மாத்மிகே நிஷ்டேயோகலக்ஷயே ஸுஸம் ஸ்க்ருதே, ஆத்மாநுபூதி ஸித்யர்த்தே
பூர்வ் ஷட்கேந சோதிதே" என்கிற ஸங்க்ரஹ ச்லோக ஸங்க்ருஹீதமான பூர்வஷ
ட்கார்த்தமும் காதலுக்கென்கிற வித்தால் "மத்யமேபகவத்தத்வ யாதாம்யாவாப்தி
ஸித்தயே" ஜ்ஞாந கர்மாபி நிர்வர்த்யொ பக்தியோகப்ரகீர்த்திதஃ" என்கிற ச்லோக
ஸங்க்ருஹீதமான மத்யம ஷட்கார்த்தமும் க்ரோடீக்ருதமாய்த்து. இதுக்கோது மெ
ன்கிற த்தோடே யந்வயம். அரு - துர்போதங்களான, மறையுச்சியுள் - வேதசிரஸ்
ஸுக்களிலே, இங்கு வேதாந்தங்களுக்கு துர்போதத்வோக்தியாலே யச்லோகோப
ப்ரும்ஹணீயத்வம் பலிக்கையாலே ஸ்ரீமத்கீதோபநிஷதாம் வேதாந்தைஃ க்ருதகத்வ
சங்காப்ரத்யுக்தா. ஆதரித்து - ஆதரம்பண்ணி, ஓதும் - அதீதமான, அரும் - பக
வத் பக்தி விகலராலே துர்போத துஷ்ப்ராபமான, பிரமம் - ப்ரஹ்மம், பரப்ரஹ்ம
மென்றபடி, அரு மென்கிற துர்போதத்வோக்தியாலே ஸர்வ ஸாதாரணா ஹம்ப்
ரத்யயகோசரத்வேநஸுலபதம ஜீவ ரூபா வரப்ரஹ்மம் வ்யாவ்ருத்திஃ. ஆதரித்தோது
மென்கிற விசேஷணத்தாலே ஸ்வதஃ நிரதிசயாநந்தரூபதயா பரமப்ராப்ய ப்ரஹ்ம
போதகங்களான வேதாந்தங்களுக்கு ப்ரவ்ருத்திநிவ்ருத்தி பரத்வாபாவேபி ஸமய
ஸூத்ரோக்தரீத்யா புருஷார்த்த பர்யவஸாயித்வெந ப்ராமாண்யந் துரபந்ஹவ
மென்று ஸூசிதம். திருமகளோடு - பெரியபிராட்டியாரோடு, வரும்-புத்தியில் வரு
மவனுன, ஸர்வாவஸ்தையிலும் ஸ்ரீவிசிஷ்டனுகவே ப்ரமாண ப்ரதிபந்நனுன வென்
றபடி. இத்தால் பிராட்டிக்கு பக்தியோக விஷயத்வமும் பரப்ரஹ்மத்துக்கு
தேவதாந்தரவைலக்ஷண்யமும் தர்சிதம். திருமால் - உபயவிபூதி ஸ்வாமீ, இங்கு
திருவென்கிறபதம் ஸம்பத் வாசகமாயுபயவிபூதி பரமாகையாலும் மாலென்கிற
பதம் ஸ்வாமிவாசகமாகையாலும் திருமகளோடு வரு மென்கிறத்தோடு புநருக்
தியில்லை. யத்வா - திருமகளோடுவரு மென்கிறது ஸர்வாவஸ்தையிலும் லக்ஷ்மீ
ஸம்பந்தமாத்ர தத்பரமாகையாலும் திருமாலென்கிறபதம் ததுபபாதக லக்ஷ்மீ
விஷயக நிரதிசய ப்ரேமபரமாகையாலும் புநருக்தியில்லை. ஜ்ஞாந கர்மாபிநிர்
வர்த்தித பக்தியோக லக்ஷயத்வேந வேதாந்தாம்நாதமான பரப்ரஹ்மம் ஸ்ரீமந்நா
ராயண னென்று திரண்டபொருள். இத்தால் ஸமாநப்ரகரண படிதங்களான
ஸத் ப்ரஹ்மாதிசப்தங்களுக்கு ச்சாகபசுந்யாயேந உசிதவிஷய பர்யவஸாநம் தர்சித
மென்றபடி. தான் - ஸ்வயமெவ, உரைத்தான் - சொன்னுன். ஸ்ரீகீதாசாஸ்த்ரத்தி
லிதிசேஷஃ. ஸ்ருதிஸ்ம்ருதித்வாரக மன்றிக்கேஸாக்ஷாதேவ உபதேசித்தானென்
றபடி. இங்கு ஸர்வேச்வரனுக்கு அரும் பிரமமென்கிற சித்வைலக்ஷண்ய கதநே
நாசித்வைலக்ஷண்யம் கைமுத்ய ஸித்தமாகையாலே "ப்ரதாந புருஷ வ்யக்த

ஸர்வேச்வர விவேசனம், கர்மதீபக்திரித்யாதிः பூர்வசேஷொந்தி மோதிதः’ என்கிறசரமஷட்க ஸங்க்ரஹச்லோக பூர்வார்த்தஸங்க்ருஹீதமான சரமஷட்க பூர்வ த்ரிகார்த்தமும் தருமமுகந்தவென்கிற தநஞ்ஜயவிசெஷண தர்மாபிருசி கதநத்தாலே கர்மதீபக்திரித்யாதி சப்தவிவக்ஷித சாஸ்த்ரார்த்தோப பாதந ப்ரகார சாஸ்த்ரவச்யத்வாதிகமும் ஸூசிதமாகையாலே சரமஷட் கார்த்தமு மந்தர்பாவிதமாய்த்து. கர்மஜ்ஞாநபக்திகள் ஷட்கத்வய ப்ரதிபாத்யத்வேந ப்ரதர்சிதங்களாகையாலே விலைத்தைசரமஷட்கார்த்தத்வேந புநःகீர்த்தியாதொழிந்தபடி. (க)

உகவையடைந்தவுறவுடையாருறவற்றவந்நாள்
தகவுடையன்புகரைபுரளத் தருமத்தளவில்
மிகவுளமஞ்சி விழுந்தடிசேர்ந்த விசயனுக்கோர்
நகையுடனுண்மையுரைக்கவமைந்தனர்நாரணரே (உ)

இப்படி யந்தர்நீத ஷட்கத்ரயார்த்தமான சாஸ்த்ர மஹாவாக்யார்த்தத்தை ஸங்க்ரஹித் தினிமேல் அத்யாயாஷ்டாதசகார்த்தங்களைக் க்ரமேண காதாஷ்டாதசகத்தாலே ஸங்க்ரஹிக்கக்கோலி முற்பட “அஸ்தாந ஸ்நேஹகாருண்ய தர்மாதர்மதியாகுலம், பார்த்தம்ப்ரபந்நமுத்திச்யசாஸ்த்ராவதரணம்க்ருதம்” என்கிற ஸங்க்ரஹச்லோகத்தின்படியே “தமுவாசஹ்ருஷீகேசः ப்ரஹஸந்நிவபாரத, ஸேநயோருபயோர்மத்யேஸீதமாந மிதம்வசः” என்கிற ச்லோகபர்யந்த த்விதியாத்யாயைகதேச சிரஸ்கமான ப்ரதமாத்யாயத்தினுடைய சாஸ்த்ராவதாரோபயுக்தமான வர்த்தத்தை ஸங்கரஹிக்கிறார்.

நாரணர்-நாராயணன், இங்கு பஹுவசநம் கீதொபநிஷ துபதேச கௌரவ ப்ரயுக்தம். கீதாசார்யனை நாராயண பதத்தாலே நிர்தேசித்தது த துபதேசோபயுக்தகாருண்ய வாத்ஸல்யாதி குணங்களுக்கு ஜ்ஞாபநார்த்தம். உகவை - ப்ரீதியை, அடைந்த - ப்ராப்தரான, உறவுடையார் - ஸம்பந்தத்தை யுடையவர், இங்கு உறவு சப்தத்தாலே வித்யா ஸம்பந்தம் யோநி ஸம்பந்த மிரண்டும் விவக்ஷிதம். அதிஸ்நிக்தரான வாசார்யாதிகளும் பித்ராதிகளு மென்றபடி. உறவு - ஸம்பந்தத்தை, அற்ற - பரித்யஜித்த, அந்நாள் - அந்த தினத்திலே, த்ரோண பீஷ்ம துர்யோதநாதிகள் ப்ராக்ஸித்த ஸம்பந்தத்தை பரிஹரித்து பாண்டவ வதார்த்தமாக யுத்த ஸந்நத்தரான காலத்திலே யென்றபடி “தாந்ஸமீக்ஷ்யஸகௌந்தேய ஸ்ஸர்வாந்பந்தூநவஸ்திதாந்” என்னுமளவாக வுண்டான வர்த்தத்தை ஸங்க்ரஹித்தபடி. இத்தால் வக்ஷ்யமாண க்ருபா ஸ்நேஹங்களுக்கு அநௌசித்யம் தோற்றுகையாலே ஸங்க்ரஹ ச்லோக கதாஸ்தாநபதம் வ்யாக்யாதமாய்த்து. தகவுடை-க்ருபாஸஹிதமான, அன்பு-ஸ்நேஹம், கரைபுரள - வேலாதிக்ரமம் பண்ண, ஆசார்ய பித்ராதி விஷயமாக க்ருபாஸ்நேஹங்கள் அந்தர் தாரயிது மசக்யங்களாய் ஸர்வதர்மஜ்ஞ ஸர்வப்ரகார ஹிதப்ரவர்த்தகனான ஸர்வேச்வரன் பாரதஸமரப்ரவர்த்தந வ்யாஜேநபூபாராவதரண ப்ரவ்ருத்தனா யிருக்க வவனைக்குறித்து “குரூநஹத்வாஹிமஹாநுபாவாந்ச்ரேயோபோக்தும்பைக்ஷமபீஹலோகே” என்கிறபடியேநயுத்தாபேக்ஷயா க்ஷத்ரிய ஸ்வரூப விருத்தமான பைக்ஷாசரணமாகிலும் ப்ரசஸ்த மென்று சொல்லுகிற காலத்திலே யென்றபடி. தருமத்து - தர்மத்தினுடைய, அளவில் - பரிச்சேதத்திலே, உளம்-அந்தःகரணமானது, மிக-அத்யந்தம், அஞ்சி-பயப்பட்டு, க்ஷத்ரியனுக்கு பரமதர்மமான யுத்தத்திலே யதர்ம புத்தியாலே பீதமநஸ்கனா யென்றபடி. இங்கு “பந்துஸ்நேஹேநபரயாசக்ருபயாதர்மபயேநச” என்கிற ப்ரதமாத்யாயாந்தபாஷ்யாநுகுணமான தர்மாதர்மபயாகுலம் என்கிற ஸங்க்ரஹச்லோக பாடத்தையநுஸரித்து மிகவுள மஞ்சியென்றருளிச்செய்தபடி. “ஏவமஸ்தாநேஸமுபஸ்திதஸ்நேஹகாருண்யாப்யாமப்ரக்ருதிம்கதம் க்ஷத்ரியாணாம்யுத்தம்பரம தர்மமப்யதர்மமந்வாநம்” என்று சாஸ்த்ராவதாரிகா பாஷ்யாநுகுணமாக தியாகுலம் என்றுபாடமானபோது உளமஞ்சி யென்கிறபத மாகுலசப்தார்த்த ப்ரதர்சந பரமாகக்கடவது. விழுந்து - ப்ரணிபதித்து, அடி - சரணங்களை, சேர்ந்த - ஆச்ரயித்தவனான, “யச்ச்ரேயஸ்யாந்நிச்சிதம்ப்ரூஹிதந்மேசிஷ்யஸ்தேஹம்சாதிமாம்த்வாம்ப்ரபந்நம்” என்று தர்ம புபுத்ஸயா சரணாகதனான வென்றபடி. விசயனுக்கு - விஜயனுக்கு, விஜயனை யுத்தேசித்தென்றபடி. ஓர்-விலக்ஷணமான, விரோத வ்யஞ்ஜகமான வென்றபடி. நகையுடன்-ஸ்மிதத்தோடேகூட, “తమువాచహృషీకేశః ప్రహసన్నివ భారత”

ఇతిశ్లోక వ్యాఖ్యానావసరే "ఏవం దేహాత్మనోర్యాథాత్మ్యాజ్ఞాన నిమిత్తశోకావిష్టం దేహాతిరిక్తాత్మజ్ఞాన నిమిత్తంచధర్మం భాషమాణం పరస్పరవిరుద్ధ ధర్మాన్వితము భయోస్స్వేన యోయుద్ధాయోద్యుక్తయోర్మధ్యే అకస్మాన్నిరుద్యోగంపార్థమవలోక్యపరమపురుషః ప్రహసన్నివ-పరిహాసరూప వాక్యంవదన్నివ என்று பாஷ்யகாரரருளிச்செய்த படியே விருத்ததர்மஸமாவேசப்ரயுக்தஸ்மிதத்தோடேகூட வென்றபடி. உண்மை - யாதாத்ம்யத்தை, ஆத்ம பரமாத்ம யாதாத்ம்ய தத்ப்ராப்த்யுபாயாதிகளை யென்றபடி. உரைக்க - உபதேசிக்க, அமைந்தனர் - ப்ராப்தராஞர்.

உடலமழிந்திடு முள்ளுயிரொ ன்றழியாதெனைப்போல்
விடுமதுபற்று விடாததடைத்த கிரிசைகளே
கடுகவுனக்குயிர்காட்டு நினைவதனுலுளதாம்
விடுமயலென்று விசயனைத்தேற்றினன் வித்தகனே. (௬)

இப்படி சாஸ்த்ரோபோத்காத பரமான த்விதீயைகதேச சிரஸ்க ப்ரதமாத்யாயத்தினுடைய வர்த்தத்தை ஸங்க்ரஹித் தினிமேல் "நித்யாத்மா ஸங்ககர்மேஹா கோசராஸாங்க்யயோகதீః, த்விதீயேஸ்திரதீலக்ஷ்யா ப்ரோக்தாதந்மோஹசாந்தயே" என்கிற ஸங்க்ரஹ ச்லோகத்தின்படியே, "நத்வேவாஹம் ஜாதுநாஸம்" என்று துடக்கமாக வுள்ள த்விதீயாத்யாயத்தினுடைய வர்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறர். வித்தகன் - விஸ்மயநீய சரிதனுன ஸர்வேச்வரன், இதுக்குவாக்யாந்த க்ரியையோடே யந்வயம். இப்படி மேலுங் கண்டுகொள்வது. இங்கு ஸாரத்ய ரூப ப்ரேஷ்யக்ருத்ய ப்ரவ்ருத்தனுனவன் தானே தத்வோபதேசரூபா சார்யக்ருத்யம் பண்ணுகையாலே யிவனை வித்தகனென்கிறது. நீ யுத்தாத் நிவ்ருத்த னுகிறது ஆசார்ய பித்ராதிகளுடைய தேஹநாசபீதியாலோ ஆத்மநாசபீதியாலோவென்று விகல்பித்து ப்ரதம விகல்பத்துக்கு த்தரம் சொல்லுகிறது. உடலம்-சரீரம், அழிந்திடும் - நசித்துவிடும், இடுமென்கிற வித்தால் சஸ்த்ரப்ரஹா ராதிகம்விநாபி பரிணுமைகஸ்வபாவத்வேந ஸ்வயமேவ நசிக்குமென்று ஸூசிதம். இது "அந்தவந்தஇமேதேஹாః" இத்யாதிகளாலே ப்ரபஞ்சிதமாய் ஸங்க்ரஹச்லோகத்தி லாத்மநித்யத்வ கதநத்யோதிதமான தெஹ நச்வரத்வத்தைச் சொன்னபடி. இத்தால் யுத்தநிவ்ருத்தாவபி ததீய சரீரநாச மவச்யம் பாவித்வேந அவர்ஜநீயமாகையாலே யது சோகஸ்தாந மன்றென்று பலிதம். இனி த்விதீயகல்பத்துக் குத்தரம் சொல்லுகிறது. உள் - அந்தர்வர்த்தியான, உயிரொன்று - ஆத்மா வொருவன், ஆழியாது - நசியாது. இங்காத்மனோந்தர்வர்த்த்வ நிர்தேசேந ஸூக்ஷ்மதமத்வம் பலிக்கையாலே "நைநம்ச்சிந்தந்திசஸ்த்ராணி" இத்யாதிகளில் படியே சேதந தஹந சோஷணு த்யநர்ஹத்வம் ஸூசிதம். ஆத்மநித்யத்வே ஸம்ப்ரதிபந்ந த்ருஷ்டாந்தகதநம், எனைப்போல் - பரமாத்மாவாய் ஸர்வேச்வரனுன வென்னைப்போலே, இத்தால் ஜீவநித்யத்வாஈபிஜ்ஞனுன வர்ஜுநனைக்குறித்து ஈச்வரநித்யத்வத்தையுபந்யஸித்தது "யதாஹம்ஸர்வேச்ரః பரமாத்மாநித்ய இதி நாத்ரஸம்ஶயః, எவம் பவந்தః க்ஷேத்ரஜ்ஞா ஆத்மாநோபி நித்யாஏவமந்தவ்யாః" என்றுபாஷ்யோக்தரீத்யா த்ருஷ்டாந்தார்த்தமென்று தர்சிதம். ஏதெநாத்மநாச ப்ரயுக்த சோகாவகாசமில்லை யென்று பலிதம். இப்படியாகில் தெஹாத்மஸ்வரூப ஸ்வபாவ விவேகம் பிறந்தவனுக்கு ஸ்வைரஹிம்ஸாப்ரவ்ருத்திஸங்கேந ஹிம்ஸாநிஷேதக ஸகலப்ரமாண வ்யாகோபம் ப்ரஸங்கியாதோ வென்று சங்கையில் மேல் வாக்யம் ப்ரவர்த்திக்கிறது. அடைத்த-நிவேசிதங்களான, விதிசோதிதங்களான வென்றபடி, கிரிசைகள் - க்ரியைகள், விடாதது - விடத்தகாது, பற்று - ஸங்கமானது, விடுமது - விடத்தக்கது, ப்ராஹ்மணுதி வர்ணசதுஷ்டயத்துக்கும் ப்ரதிக்ரஹ யுத்தவாணிஜ்ய சிச்ரூஷாதி ரூபேண விபஜ்ய ச்ருதிதர்சிதங்களான கர்மங்களிலே பலாதி ஸங்கமாத்ரமே த்யஜிக்கக்கடவ தென்றபடி, இங்கு ப்ரதிநியத தர்மோபாதானம் மற்றுள்ள ஸத்யவசநாதி ஸாதாரண தர்மங்களுக்குமுபலக்ஷணம். பலாதிஸங்க மாத்ர த்யாகோக்தியாலே க்ரியாஸ்வரூபத்யாகம் சாஸ்த்ர விருத்த மென்று ஸூசிதம். ஆக வித்தால் பூர்வோக்த தெஹாத்ம விவேக ப்ரதர்சநம் யுத்தாயாலம், ஸ்வைரஹிம்ஸா ப்ரஸக்தி யில்லை யென்று முன்புற்ற சங்கைக்கு ஸமாதாநம் ஸூசிதமாய்த்து. இவ்வர்த்தம் ஸ்ரீமத்கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகைகளிலே கண்டோக்தமிறே. இப்படி சோதிதமான வாத்ம யாதாத்ம்ய விவேக பூர்வக த்யக்தபலாதிஸங்க பரமபுருஷாராதநைகவேஷ கர்மாநுஷ்டாந

ரூப கர்மயோகத்துக்கு பலம்சொல்லுகிறது மேல். அதினால் - அந்தஸங்க ரஹித
கர்மயோகத்தாலே, உனக்கு - தேஹாத்ம மோகாந்தனாய் ஸம்ப்ரதி ஶ்ரூத தேஹா
த்ம யாதாத்ம்யஜ்ஞனா வுனக்கு, உயிர் - ஆத்ம ஸ்வரூபத்தை, காட்டும் - ஸாக்ஷாத்
கரிக்குமதான, நினைவு - ஸ்ம்ருதி, ஸ்ம்ருதி ஸந்ததி ரூப த்யாந மென்றபடி. ஆத்
மாவலோகந ஸாதநமாய் தேஹாதி விலக்ஷணாத்மஸ்வரூப நிரந்தர சிந்தநாத்மகமாய்
ஸ்திரப்ரஜ்ஞதா பரபர்யாயமான ஜ்ஞாநயோக மென்றபடி. கடுக - சீக்ரமாக, உள
தாம் - உண்டாம், பிறக்குமென்றபடி, மயல் - மோஹத்தை, விடு-த்யஜி, என்று -
ஸ்பஷ்டம். விசயனை - அர்ஜுநனை, தேற்றினன். ஆச்வஸிப்பித்தான். (௩)

சங்கந்தவிர்ந்து சகஞ்சதிர்பெற்ற தனஞ்சயனே
பொங்குங்குணங்கள் புணர்ப்பனைத்தும் புகவிட்டவைத்து
நங்கண்ணுரைத்த கிரிசையெல்லா மெனவுந்நவின்றார்
எங்குமறிவார்களே யென்று நாதனியம்பினனே. (௪)

“அஸத்யாலோகரக்ஷாயை குணேஷ்வா ரோப்யகர்த்ருதாம். ஸர்வேச்வ ரேவா
ந்ய ஸ்யோக்தாத்ருதீயேகர்மகார்யதா” என்கிற ச்லோகத்தின் படியே த்ரிதீயா
த்யா யார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். சகம் - ஜகத்திலே, சதிர் - சாதுர்யத்தை,
பெற்ற - ப்ராப்தனான, தநஞ்சயனே - தநஞ்சயனே, ஸாராஸாரவிவேசன சாதுரீ
சாலித்வேந ஸர்வலோக ப்ரஸித்தனான வர்ஜுநனே யென்றபடி. இத்தால்சிஷ்ட
தயா வ்யபதிஷ்டனாய் லோகாநுவிதேயாநுஷ்டாநனான வுன்னுடைய வநுஷ்டா
நத்தாலே யந்தர்கதாத்மஜ்ஞாந கர்ம நிஷ்டாக்ய நிஷ்ப்ரமாத ஸூசக கண்டாபதத்
திலே ஸம்பாவித ப்ரமாத துச்சக ஜ்ஞாந நிஷ்டாதிகாரிகளும் கூட ப்ரவர்த்தித்து
ஜ்ஜீவிப்பர்க ளென்று வ்யஞ்ஜிதமாகையாலே ஸங்க்ரஹச்லோகத்தில்“லோகரக்ஷா
யை” என்கிற பதமர்த்தாத் வ்யாக்யாதமாய்த்து. சங்கம் - ஸங்கத்தை, தவிர்ந்து -
த்யஜித்து, அநுஷ்டேயமான கர்மங்களிலே பலாபிஸந்தியையு மாத்மீயதாபிமானத்
தையும் விட்டென்றபடி, இத்தால் “மயிஸர்வாணிகர்மாணி ஸந்யஸ்யாத்யாத்மசே
தஸா, நிராசீர் நிர்மமோ பூத்வாயுத்யஸ்வவிகதஜ்வரः” என்கிற ச்லோகத்தில்
நிராசீः - நிர்மமः - என்கிறபதத்வய விவக்ஷித பல மமதாத்யாக ஸங்க்ராஹக
மாய் ஸங்க்ரஹச்லோக கதமான வஸக்தி பதம் விவ்ருதமாய்த்து. பொங்கும் -
உத்ரிச்ய மாநங்களான, குணங்கள் - குணங்களுடைய, பார்வணேந்து மயூக
சும்பித ஸாகரகல்லோலந்யாயேந ந்யூநாதிகபாவேந விஜ்ரும்பியாநிற்கிற ஸத்வாதி
குணங்களுடைய வென்றபடி, புணர்ப்பு - கார்யங்களை, அனைத்தும் - ஸர்வங்களை
யும், ஸத்வாதிகுணமூலக ஸர்வவிதவ்யாபாரங்களையு மென்றபடி, அவைத்து - அந்த
ஸத்வாதிகுணங்களிலே, புகவிட்டு - ஆரோபித்தென்றபடி. ஆத்மநஸ் ஸாம்ஸாரிக
ஸர்வவித வ்யாபாரகர்த் ருத்வமும் குணஸம்ஸர்க ப்ரயுக்தமாகையாலே தாத்ருச
கர்த்ருத்வமும் ப்ராப்தாப்ராப்த விவேகேந குணக்ருதம் நது ஸ்வரூபாநுபந்தி
யென்று நிஷ்கர்ஷித்தென்று பிண்டிதார்த்தம். உரைத்த - சொல்லப்பட்டவை
யான,சாஸ்த்ர சோதிதங்களான வென்றபடி. கிரிசையெல்லாம் - க்ரியைகளிலெல்
லாம், நம்கண் - நம்மிடத்திலே, கண்ணென்று ஸப்தம்யர்த்த வாசகம். ஸர்வகர்மங்
களும் ஸர்வசேஷியாய் ஸத்வாதிகுணத்ரயாச்ரய ப்ரக்ருத்யாதி ஸர்வபதார்த்த
நியந்தாவான வென்னிடத்தி லாயத்தங்க ளென்றபடி. அதவா,நங்கண்-நம்ஸ்வாமி
யிடத்திலே, கண்ணென்று ஸ்வாமிவாசகமாம் லுப்தஸப்தமீக மாகக்கடவது. முன்
புள்ள யோஜனையில் நம்என்கிற பத முபதேஷ்ட்ரு க்ருஷ்ண பரம். இந்த யோஜ
னையில் அந்தபத மநுஸந்தாயி புருஷ பரமாய் மகண் என்கிறபதம் தத்ஸ்வாமி பூத
பரமாத்ம பர மென்று கண்டுகொள்வது, உபயதாபி சேதநனுடைய ஸர்வவிதகர்த்
ருத்வமும் ‘பராத்துதச்ச்ருதேः’ என்கிறபடியே பரமாயத்தமென்று பலிதார்த்தம்.
என்றும் - இப்படியும், நவின்றவர் - சொன்னவர்கள், சப்தாபிலாபபர்யந்தமாம்படி
மநஸாநுஸந்தித்தவர்களென்றபடி. இங்கு - நினைந்தவரென்று அபிஸந்தி மாத்ரத்
தைச் சொல்லவேண்டியிருக்க நவின்றவர் என்று சப்தாபிலாபபர்யந்தம் சொன்
னது சிஷ்டதயா வ்யபதேச்யரான விவர்களுடைய சப்தாபிலாபத்தாலே யுந்நீத
மான வபிஸந்தியை மிதப்ரஜ்ஞ ரநுஷ்டித்து ஜ்ஜீவிப்பார்க ளென்கிற வபிப்ரா
யத்தாலே. என்று மென்கிற நிர்தேசத்தாலே பூர்வோக்த குணகர்த்ருத்வாநுஸந்
தாந ஸமுச்சயः. இத்தால் ஸங்க்ரஹச்லோகத்தில் ஸர்வேச்வரேவாந்யஸ்ய என்கிற

வாசப்தம் விகல்பபரமன்று; கிந்துஸமுச்சயபரமென்று ஸூசிதம். "த்ருதீயாத்யாய ஸங்க்ரஹ ச்லோகே துல்யவிகல் போநபிமத இத்யபிஸூசிதம் பவதி" என்றுஶ்ரீமத் தாத் பர்யசந்த்ரிகையிலே தாமே யருளிச்செய்தாரிறே. எங்கும் - ஸர்வவிஷயத்தி லும், அறிவார்களே - ஞானத்தை யுடையவர்கள்தானே, ஸர்வசாஸ்த்ரார்த்தஸார பூத ப்ராபகதாநுஷ்டாந நிஷ்டையாலே ஸர்வசாஸ்த்ரார்த்த பரிஜ்ஞாந பலம் ஸித் திக்கைகயாலே ஸர்வஜ்ஞத்வேந வ்யபதேச்யர்க ளென்றபடி. என்று - இப்படி, நாதன் - நாதன், இயம்பினன் - சொன்னான். (ச)

பிறவாமைதந்திடத்தானேபிறக்கும்பெருமைகளும்
துறவாக்கிரிசைகள்தூய்மதிதன்னாற்றுலங்குகையும்
இறவாவுயிர்நிலையுங்கண்டிடுமுலகினிலையும்
மறைவாழிமாயவனேயெனக்கின்றறிவித்தனனே (ரு)

"ப்ரஸங்காத்ஸ்வஸ்வ பாவோக்திः கர்மணோகர்மதாஸ்யச, பேதோஜ்ஞாநஸ் யமாஹாத்ம்யம் சதுர்த்தேத்யாய உச்யதே" என்கிற ஸங்க்ரஹ ச்லோகத்தின் படியே சதுர்த்தாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். மறை - வேதங்களிலே, வாழி - வாழுமவனான, "அஜாயமாநோபஹுதா விஜாயதே" என்கிற ச்ருதியிலே விசித்ர திவ்யாவதார ப்ரயுக்த நிரங்குசைச்வர்ய சாலித்வேந ப்ரஸித்தனான வென்ற படி. இத்தால் வக்ஷ்யமாணாவதார ஸ்வரூப ஸ்வபாவாதௌ ஶ்ருதிரேவ ப்ரமாண மென்று தர்சிதம். மாயவன் - மாயையையுடையவன், இங்கு மாயாசப்தத்தாலே "மாயா துவயுநம்ஜ்ஞாநம்" என்கிறபடியே ஸங்கல்ப ரூபஜ்ஞாநம் விவக்ஷிதம். இத்தால் பகவதவதாரம் புண்யபாபஹேதுகமன்று; கிந்து "ஸம்பவாம்யாத்மமா யயா" என்கிறபடியே ஸ்வஸங்கல்பைகஹேதுக மென்று ஜ்ஞாபிதம். பிற வாமை — அபுநர்பவத்தை, தந்திட - கொடுக்கைக்கு "ஜன்மகர்மசமே திவ்ய மேவம்யோ வேத்திதத்வதः, த்யக்த்வா தேஹம்புநர்ஜந்ம நைதிமாமேதி ஸோர் ஜுந" என்கிறபடியே ஸ்வா சரிதர்க்கு ஸ்வாவதார ரஹஸ்யவேதநத்தாலே புநர்ஜந்ம ப்ராப்தி யில்லாத மோக்ஷப்ரதாநம் பண்ணுகைக்கென்றபடி. இத் தால், பகவதவதாரம் ஸாதுபரித்ராணபலகமத்தனை போக்கி ஸுகதுக்காநுபவ பலகமன்றென்று ப்ரதர்சிதம். இது துஷ்க்ருத்விநாசக தர்மஸம்ஸ்தாபநங்களுக்கும் உபலக்ஷணம். தானே - அஜத்வாவ்யயத்வஸ்வாபாவிக ஜ்ஞாநபலைச்வர்யாதிவிசிஷ் டனானதானே, பிறக்கும்பெருமைகளும் - அவதரிக்கும் மாஹாத்ம்யங்களையும், தானே யென்கிற வித்தாலே ஸ்வபாவாபரித்யாகமும் பிறக்குமென்கிறவித்தாலே தஸ்ய சுத்த ஸத்வ மயத்வ தர்மக்லாந்யாதிகாலிகத்வைச்சிகத்வங்களும் விவக்ஷிதங் கள். இத்தாலே பகவதவதாரத்துக்கு ஸ்வரூபதः ப்ரகாரதः த்ரவ்யதः காரணதः காலதः ப்ரயோஜநதச்ச வைலக்ஷண்யம் தர்சிதம். துறவா-த்யக்துமசக்யங்களான, கிரிசைகள்-கிரியைகள், பகவத் ப்ரோக்தங்களாய் விவஸ்வதாதி ஸம்பரதாயா கத ங்களாகையாலே த்யாகாநர்ஹங்களான சாஸ்த்ரீய கர்மங்களென்றபடி. இங்கு கிரி சைசப்தத்தாலே க்ரியா ஸ்வரூபமும் பஹுவசநத்தாலே "தைவமேவாபரேயஜ்ஞம்" இத்யாதிநா ப்ரபஞ்சிதங்களான தேவார்ச்சநேந்த்ரிய ப்ராணாயாம யாகதான ஹோம தப ஸ்தீர்த்த ஸேவா ஸ்வாத்யாய ததர்த்தாப்யாஸாதி ரூப ததவாந்தர பேதங்களும் துறவாவென்கிறவித்தாலே அவைத்துக்குப்ரா மாணிகத்வமும் தர்சித மாய்த்த. தூய் -பரிசுத்தமான, மதியால் - ஜ்ஞாநத்தாலே ஆத்மஸ்வரூபஸ்வபாவ ஜ்ஞானத்தாலே யென்றபடி. துலங்குகையும் - நிர்மலங்களாம்படியையும், "கர் மண்யகர்மயःபச்யேத்" இத்யாதிகள்படியே க்ரியமாண கர்மங்களே அந்தர்கத கர்மஜ்ஞாந தயாஜ்ஞாநாகாரங்களாம்படியையு மென்றபடி. இறவா - நசியாதவ னான, உயிர் - ஆத்மாவினுடைய, நிலைவழி - நிஷ்டாமார்கத்தை, கண்டிடும் - அறி ந்துவிடுமதான, நித்யாத்ம கோசர ஜ்ஞாந நிஷ்டோபாய வேதியான வென்றபடி. உலகின் - லோகத்தினுடைய, நிலையும் - ஸ்திதியையும், "ச்ரேயாந்த்ரவ்யமயாத்ய ஜ்ஞாத்ஜ்ஞாநயஜ்ஞः பரந்தப, ஜ்ஞாநம்லப்த்வா பராம்சாந்திமசிரேணாதிகச்சதி,யோ கஸந்யஸ்தகர்மாணம் ஜ்ஞாநஸஞ்ச்சிந்ந ஸம்சயம், ஆத்மவந்தம் நகர்மாணி நிபத்நந் திதநஞ்சய" என்று ப்ரதர்சிதையான ஜ்ஞாநநிஷ்டாதிகாரி வர்கத்தினுடைய வுத்கர் ஷாவஸ்தையையு மென்றபடி. ஆகவித்தால் ஶ்ரீமத் தாத்பர்ய சந்த்ரிகையிலேசதுர் த்தாத்யாய ஸங்க்ரஹச்லோகரூபத்வேந ப்ரதர்சிதமான கர்மஸ்வரூப தத்பேத தத்

ப்ராமாணிகத்வ ஜ்ஞாநப்ரதாந்ய பகவதவதார யாதாத்ம்யாத்ம கார்த்தவஷ்டகம் ஸங்க்ருஹீதமாய்த்து. எனக்கு - இருள்தருமாஞாலத்துள் பிறந்து ஜாத்யந்தனான வெனக்கு, இன்று - ஆசார்ய கடாக்ஷம் பெற்ற விந்ததிநத்தில், அறிவித்தனன் - தெரியப்பண்ணினான், ஆசார்யரூபியா யுபதேசித்தா னென்றபடி. அர்ஜுனனுக்கன்றுபதேசித்த வர்த்தத்தை தமக்கின்றுபதேசித்ததாக வருளிச்செய்தது ஸ்வயமேவ ப்ரவர்த்திதமான கர்மயோகத்தை பாரதஸமரஸந்நாஹகாலத்திலே க்ருஷ்ணரூபியாய் அர்ஜுனனுக்கு வெளியிட்டதோடு ஸம்ப்ரத்யாசார்யரூபியாய்த் தமக்கு வெளியிட்டதோடு வாசையில்லாமையாலே. (ரு)

கண்டெளிதாங்கருமமுயிர்காட்டுங்கடுகுதலும்
மண்டியதன்படியின்மனங்கொள்ளும்வரிசைகளும்
கண்டறியாவுயிரைக்காணலுற்றநினைவுகளும்
வண்டுவரீசனியம்பினன்வாசவன்மைந்தனுக்கே (சு)

இனி "கர்மயோகஸ்ய ஸௌகர்யம் சைக்ர்யம் காச்சநதத்விதாः,ப்ரஹ்மஜ்ஞாநப்காரச்ச பஞ்சமேத்யாய உச்யதே" என்கிற ஸங்க்ரஹ ச்லோகத்தினடியே பஞ்சமாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். வண்-ஸுந்தரமான, துவர்-த்வாரகாபுரத்துக்கு, ஈசன்-ஈச்வரன், ஸ்ரீமத்வாரகேச்வரனான கீதாசார்யனென்றபடி. கண்டு-அறிந்து, எளிதாம்-ஸுகரமாம், சாஸ்த்ரமுகேந தன்னநுஷ்டான ப்ரகாரத்தை யறிந்தால் ஸுகரமாகத் தோற்றுமதான வென்றபடி. கருமம் - கருமயோகம், உயிர் - ஆத்மாவை, காட்டும்கடுகுதலும்-அவலோகநம்பண்ணுவிக்கும் ஜாடித்யத்தையும், "யோகரக்தோமுநிர்ப்ரஹ்மநசிரேணாதிகச்சதி" என்று தர்சிதமான கர்மயோகத்துக் காத்மாவலோகந நிஷ்பாதகதா சைக்ர்யதையுமென்றபடி. இங்கு ஸௌகர்யத்தை சைக்ர்யாதிகளைப்போலே யுபதேசகர்மத்வேந நிர்தேசியாதே கர்மயோகவிசேஷணத்வேநாநுவதித்தது பஞ்சமே கர்மயோகஸௌகர்ய கதநஸ்ய த்ரீதீயோக்தாநுவாதமாத்ரத்வ ஜ்ஞாபநார்த்தம். ஆகையாலிறே பஞ்சமாரம்பபாஷ்யத்திலே ஸங்க்ரஹச்லோகார்த்தாநுக்ரமண வஸரத்திலே ஸௌகர்யத்தை யநுக்ரமியாதொழிந்தது. இவ்வர்த்தத்தை ஸங்க்ர ஹரக்ஷா தாத்பர்யசந்திரிகைகளிலே தாமேயருளிச் செய்தாரிறே. அதன்படியில் -அந்தயோகத்தினுடைய ப்ரகாரங்களிலென்றபடி. மண்டி-அத்யந்தமாஸக்தனாய், மனம் - மநஸ்ஸை, கொள்ளும் வரிசைகளும் - நிவேசிப்பிக்கும் க்ரமங்களையும், நைவகிஞ்சித்கரோமீதியுக்தோமந்யேததத்வவித்" இத்யாதிகளாலே ப்ரதிபாதிதங்களான கர்மயோகாந்தர்பூத கர்த்ருத்வாநுஷ்டாநபரபர்யாயங்களான மநச்சிக்ஷண ப்ரகாரங்களையு மென்றபடி. கண்டறியா - கதாசிதபி தர்சந விஷயமல்லாத, உயிரை-ஆத்மாவை, ஸாக்ஷாத்கர்த்துமசக்யமான பரிசுத்தாத்மஸ்வரூபத்தை யென்றபடி. உண்டறியாவென்று பாடமானபோது "யம்லப்த்வாசாபரம் லாபம்மந்யதேநாதிகந்ததः" என்கிறபடியே நிரதிசய ஸுகரூப மாயிருக்கச்செய்தேயும் கதாசிதபி ததாவிதத்வேந பகவத்விஷயமல்லாத வென்றர்த்தம் கண்டுகொள்வது. இத்தால் ஸங்க்ரஹ ச்லோகத்திலே ப்ரஹ்மபதம் ப்ரஹ்மஸமாநாகார பரிசுத்தாத்ம ஸ்வரூபப்ரமென்று தர்சிதமாய்த்து. காணல் - பார்க்கையை, உற்ற - அடைந்தவையான வென்றபடி. நினைவுகளும் - ஜ்ஞானங்களையும். இங்கு காணலென்கிற பதம் "வித்யாவிநயஸம் பந்நே" இத்யாதிகளில்படியே ஸமதர்சந விபாகாபந்நஜ்ஞாநபரம். "நப்ரஹ்ருஷ் யேத்ப்ரியம்ப்ராப்ய" இத்யாதி ப்ரதிபாதிதங்களான ஸமதர்சன விபாக ஸாதநாநுஸந்தாநங்களையு மென்று பலிதார்த்தம். வாசவன் - வாஸவனுடைய, மைந்தனுக்கு - குமாரனுக்கு, அர்ஜுநனுக்கென்றபடி. இயம்பினன் - சொன்னான். (சு)

யோகமுயற்சியும் யோகிற்சமநிலை நால்வகையும்.
யோகினுபாயமும் யோகுதன்னால்வரும் பொருளும்
யோகுதனிற்றன்றிற முடையோகு தன்முக்கியமும்
நாகணையோகிநவின்றனன் முடிவீரனுக்கே. (எ)

"யோகாப்யாஸவிதிர்யோகீசதுர்த்தாயொகஸாதநம்,யொகஸித்திஸ்ஸ்வயோகஸ்யபாரம்யம்ஷஷ்டஉச்யதெ" என்கிற ஸங்க்ரஹச்லோகத்தின்படியே ஷஷ்டாத்

யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். நாகணை - நாகபர்யங்கத்தில், யோகி - யோகீ, "ஏஷநாராயண ஸ்ரீமான் க்ஷீரார்ணவநிகேதநः, நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்யஹ்யாகதோ மதுராம்புரீம்" என்கிறபடியே நாகபர்யங்க யோக நித்ரா ரஸிகனை க்ருஷ்ண னென்றபடி, யோகீ யோக தத்ப்ரகாரங்களை யுபதேசிக்க ப்ராப்தனுவது. யோக - யோகத்தினுடைய, முயற்சியும் - அப்யாஸத்தையும், இங்குயோகபத மாத்மாவலோகந பரம். ஜ்ஞாநகர்மயோக ஸாத்யாத்மாவலோகநரூப யோகாப்யாஸ விதியையு மென்றபடி. யோகில்-யோகத்தில், நால்வகைச்சமநிலையும் என்றங்வயிப்பது. நால்வகை - சதுஷ்ப்ரகாரையான, சமநிலை-ஸமநிஷ்டையும், "ஸர்வபூதாத்மாந" மித்யாதிச்லோகசதுஷ்டயத்தாலே க்ரமேணுத்த ரோத்தர விபாக தேசாபந்நத்வேந ப்ரதர்சிதையாய் "ஆத்மநாம் ஜ்ஞாநாநந்தத்வாதிபி ரந்யோந்ய ஸாம்யதர்சநம், சுத்தாவஸ்தாயாம், அபஹதபாப் மத்வாதிபிரீச்வரேண ஸாம்யதர்சனம், பரித்யக்தப்ராக்ருத பேதாநாம் அஸங்குசிதஜ்ஞாநாகாரதயாஈச்வரேணததப்ருதக்ஸித்த விசேஷணத்வாதிபி ரந்யோந்யஞ்ச ஸாம்யதர்சநம், ஔபாதிகைः புத்ராதிபி ரஸம்பந்தஸாம்யதர்சநஞ்ச" என்று ஸ்ரீமத்கீதார்த்தஸங்க்ரஹரக்ஷா தாத்பர்ய சந்திரிகைகளிலே விவரித்தபடியே சதுர்விதையான ஸமதர்சந விபாக நிஷ்டையையு மென்றபடி. இங்கு ஸங்க்ரஹ ச்லோகத்தை யநுஸரித்துயோகிசாதுர்வித்யம் சொல்லாதே யோக சாதுர்வித்யம் சொன்னது தஸ்யயோக சாதுர்வித்யோபாதிகத்வத் யோதநார்த்தம். யோகின் -யோகத்தினுடைய,உபாயமும் - ஸாதநங்களையும், அப்யாஸவைராக்யாதிகத்தையு மென்றபடி. யோகுதன்னால்-யோகத்தாலே, வரும்-ஸித்திக்குமவையான, பொருளும் - அர்த்தங்களையும், யோகப்ரஷ்டஸ்யாபி ப்ரத்யவாய விரஹ புண்ய லோகாத்யவாப்தி விச்சிந்நப்ரதிஸந்தாநாதி ரூப யோகாவதார பலங்களையு மென்றபடி, யோகுதனில் - யோகங்களில், பூர்வோக்த சதுர்விதஸமதர்சந நிஷ்டையினு மென்றபடி. தன்திறமுடை - தன்னைவிஷயமாகவுடையதான, யோகுதன் - யோகத்தினுடைய, முக்கியமும் - பாவப்ரதாநோ நிர்தேசः. முக்யத்வத்தையு மென்றபடி. பகவத் வாஸுதேவ விஷயமாக வுடையதான பரபக்தியுடைய நிரதிசயோத்கர்ஷத்தையு மென்றபடி. இங்கு "யோகிநாமபிஸர்வேஷாம்மத்கதே நாந்தராத்மநா, ச்ரத்தாவாந்பஜதே யோகம்ஸமே யுக்ததமோமதः" என்று ஷஷ்டாந்த்ய ச்லோகத்திலே யோக்யந்தராபேக்ஷயா பகவான் உத்கர்ஷஞ் சொன்னதும் யோகோத்கர்ஷ பர்யவஸிதமா மாகையாலும், "ஸ்வயோகஸ்ய பாரம்யம்" என்கிற "நிஷ்கர்ஷாநுஸாரத்தாலும் உபபந்நம்." நன்முடி - நல்ல மகுடத்தை யுடையவனுன, வீரனுக்கு - விக்ரமசாலியான அர்ஜுனனுக்கு, நவின்றனன் - சொன்னான். (எ)

> தானின்றவுண்மையைத்தன்றனிமாயைமறைத்தமையும்
> தானன்றிமாயைதனைத்தவிர்ப்பான்விரகற்றமையும்
> மேனின்றபத்தர்களுல்வரின் ஞானிதன்மேன்மைகளும்
> தேனின்றசெங்கழலான் றெளிவித்தனன்பார்த்தனுக்கே. (அ)

"ஸ்வயாதாத்ம்யம் ப்ரக்ருத்யாஸ்யதிரோதிச்சரணுகதிः, பக்திபேதःப்ரபுத்தஸ்யச்ரைஷ்ட்யம் ஸப்தமஉச்யதே" என்கிற ஸங்க்ஹச்லோகத்தின்படியே ஸப்தமாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். தேன் - மது, நின்ற - நிற்குமிடமான, செம்-அருணங்களான, கழலான் - திருவடிகளை யுடையவன், மகரந்தபரித கோகநதஸத்ருச சரணனை பரமபுருஷ னென்றபடி. இத்தால் தச்சரணேபாஸநத்துக்கு நிரதிசய ப்ரீதிரூபதா பத்யர்ஹத்வம் ஸூசிதம் தான் - ஸ்வேதரவிலக்ஷணனை தான், நின்ற - ப்ரமாண ப்ரதிபந்நனு யிருந்தமையுடைய,உண்மையை - யாதார்த்யத்தை, அஷ்டகாரம்ப பாஷ்யாநுபாஷித நிகிலசேதநுசேதந வஸ்து சேஷித்வ காரணத்வா தாரத்வ ஸர்வசரீரத்வ ஸர்வப்ரகாரத்வ ஸர்வசப்தவாச்யத்வ ஸர்வகல்யாண குண கணப்ரயுக்தபரத்வாதி ஸ்வயாதாத்மயத்தை யென்றபடி. தன்-தன்னுடைய, ஸ்வ சேஷிபூதையான வென்றபடி. தனி-அத்விதீயையான,இத்தால் "தைவீஹ்யேஷா குணமயீமமமாயாதுரத்யயா" என்கிறவிடத்திலே குணமயீ என்கிற மயட்ப்ரத்யயம் ப்ராசுர்யபரமாய் ஸ்வார்த்திக மல்லாமையாலே "ஸத்வரஜஸ்தமோ ரூபத்ரவ்யத்ரய மாத்மிக மூலப்ரக்ருதிः" என்கிற ஸாங்க்யதர்சந மநுபபன்ன மென்று ஸூசிதம், மாயை - ப்ரக்ருதிः, மறைத்தனவும் - ஆச்சாதித்தபடியையும், தேஹேந்திரியாதிரூபேண பரிணதையானப்ரக்ருதி பவேத் ஸ்வரூபயாதாத்ம்யதிரோதாநம் பண்ணின

படியையு மென்றபடி. மாயைதனை பூர்வோக்த ப்ரக்ருதியை, தவிர்க்க-த்யஜிக்கை
க்கு, மாயாக்ருத பகவத் ஸ்வரூப யாதாத்ம்ய திரோதாந நிவ்ருத்திக் கென்றபடி.
தானின்றி-தன்னைத்தவிர, விரகு-உபாயம், அற்றமையும்-இல்லாமையையும்,"மா
மேவயேப்ரபத்யந்தே மாயாமேதாந்தரந்திதே"என்கிறபடியே ஸ்வவ்யதிரிக்தமாயா
தரணோபாய துர்பிக்ஷத்தையு மென்றபடி. இந்த வாகிஞ்சந்யோக்தியாலே மாயாதர
ணார்த்த ப்ரபதந மிங்கே பலிதம். மேனின்ற - மேல்நின்ற இதிச்சேதஃ. உபரிஸ்தி
தரான, "சதுர்விதாபஜந்தேமாம் ஜநாஸ்ஸுக்ருதி நோர்ஜுந" என்கிறபடியே
பரமபுருஷ ததீயத்வாபிமாந விஷயதயா அதிகார்யந்தராபேக்ஷயா ஸமுந்நதரான
வென்றபடி. நால்வர்பத்தரிலென்றந்வயம். நால்வர் "ஆர்த்தோஜிஜ்ஞாஸுரர்த்தார்
த்தீஜ்ஞாநீச" என்கிறபடியே சதுர்விதரான,பத்தரில் - பக்தர்களிலே, ஞானிதன்-
ஞானியுடைய, மேன்மைகளும் - உத்கர்ஷங்களையும், ஞானிசப்தநிர்திஷ்டனான
பகவத்ப்ரேப்ஸுவுடைய நித்யத்வைகபக்தித்வ பரமபுருஷ ப்ரியத்வ ப்ரயுக்த ச்ரை
ஷ்ட்யங்களையு மென்றபடி. பார்த்தனுக்கு - பார்த்தனுக்கு, தெளிவித்தனன்-விசத
மாக வறிவித்தான். (௮)

ஆராதசெல்வமு மாருயிர்காணு மரும்பயனும்
பேராததன்கழற்கீ ழமரும் பெருவாழ்ச்சிகளும்
சோராதுகந்தவர் தூய்மதிகொள்வதுஞ் செய்வனவும்
தோராவிசயனுக்குத் திருநாரணன் செப்பினனே. (௯)

"ஐச்வர்யாக்ஷர யாதாத்ம்ய பகவச்சரணார்த்திநாம் வேத்யோபாதேய பாவாநா
மஷ்டமேபோத உச்யதே" என்கிற ஸங்க்ரஹ ச்லோகத்தின்படியே யஷ்டமாத்யா
யார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். திருநாரணன் - ஸ்ரீயஃ பதியான நாராயணன், கண்
ணனென்றபடி. "ஏஷநாராயணஃ ஸ்ரீமான்" என்னக்கடவதிறே. ஆராத - பர்யாப்த
மாகாத, செல்வமும் - ஐச்வர்யத்தையும், உத்தரோத்த ரோத்கர்ஷத்தாலே நிரந்தர
முத்தரோத்தர த்ருஷ்ணாஜநகமான வைச்வர்யத்தையு மென்றபடி. இத்தையுகந்தவ
ரென்கிறத்தோடே யந்வயிப்பது. இப்படி மேலுங்கண்டுகொள்வது. இங்கு செல்வ
சப்தத்தாலே ஸங்க்ரஹ ச்லோகத்தில்போலே நஷ்டைச்வர்யமும் அபூர்வைச்வர்
யமும் ஐச்வர்யத்வேந ஸங்க்ருஹீதமானதாகையாலே அதிகாரி சாதுர்வித்யோக்தி
யோடே விரோதமில்லை. ஆகையாலிறே "ஆர்த்தஃ-ப்ரதிஷ்டாஹீநஃ ப்ரஷ்டைச்வர்
யஃ புநஸ்தத்ப்ராப்திகாமஃ, அர்த்தார்த்தீ - அப்ராப்தைச்வர்யதயா ஐச்வர்யகாமஃ,
தயோர்முகபேதமாத்ரம் ஐச்வர்ய விஷயதயாஐக்யாத் விஷயதயாஐக்யாத் ஏகஏவஃ"
என்று பாஷ்யகார ரநுபாஷித்தருளினார். ஆர் - த்ருப்திப்ரதமான, விஷயாந்தர
வைத்ருஷ்ண்ய ஜநகமான, உயிர் - ஆத்மாவை, காணும் - அநுபவிக்கையாகிற, அ
ரும் - துர்லபமான, பயனும் - பலத்தையும், "யம்லப்த்வாசாபரம்லாபம்மந்யதேநா
திகந்ததஃ" என்கிறபடியே நிரதிசயமாகத்தோற்றி யாழங்கால்படுத்து மதானவாத்
மாநுபவஸுகத்தையு மென்றபடி. இதுக்கு துர்லபத்வோக்தியாலே பரமாத்மாநு
பவாபேக்ஷயா திக்ஷுத்ரரஸமான வாத்மாநுபவத்தை ஜ்ஞாநகர்மநிஷ்டாதிக்லேசா
நுபவத்தாலே ஸாதிக்கை மலைகல்லி யெலிபிடிக்குமாப்போலே போலே யநுசித
மென்றுத்வநிதம். பேராத - புநராவ்ருத்தி சூந்யங்களான வென்றபடி. இது வாழ்
ச்சிகளு மென்கிறத்துக்கு விசெஷணம். தன்கழல்கீழ் - தன் திருவடிகளுடைய கீழ்ச்
சாயையிலே, அமரும்-அந்தர்பவிக்கையாகிற, பெருவாழ்ச்சிகளும் - மஹாபுருஷார்
த்தங்களையும், "நிரஸ்தாதிசயாஹ்லாதஸுகபாவைகலக்ஷண. பேஷஜம்பகவத்ப்ரா
ப்தி ரேகாந்தாத்யந்திகீமதா" என்கிறபடியே நிரதிசயமாகத்தோற்றி யுத்தராவதி
சூந்யநிரதிசய ஸுகாத்மக பகவச் சரணார விந்தாநுபவ தத்பரிசரணாதிரூப புரு
ஷார்த்தங்களையு மென்றபடி. இங்கு வாழ்ச்சிக்கு பெரு வென்கிற விசெஷ
ணத்தால் ஸ்வரூபதோ நிரதிசயத்வம் தோற்றுகையாலே யத்யல்பரஸாக்ஷராநுபவ
வைலக்ஷண்யம் ஜ்ஞாபிதம். பகவதநுபவரஸத்துக்குப் பேராத வென்று புநராவ்ரு
த்தி சூந்யத்வோக்தியாலே "ஸர்வேச்யவநதர்மாணஃ ப்ரதிபுத்தஸ்துமோக்ஷபாக்"
என்றநுகீதையில் சொன்னபடியே ஐச்வர்யவ தாத்மாநுபவஸ்யாபி ப்ரச்யுதி துஷ்
டத்வம் வ்யஞ்ஜிதம். சோராது - விடாதே, உகந்தவர்-அபிலஷித்தவராலே, நிரந்தர
மபிலஷித்தவராலே யென்றபடி. செய்வனவும்-அநுஷ்டேயங்களையும், இவ்வதிகாரி

களுக்கு அவச்யாநுஷ்டேயங்களான தத்ததிஷ்டபலாநுரூப பரமபுருஷசிந்த நாந்திமப்ரத்ய கதிசிந்தநாதிகளையு மென்படி. தோரா-தோல்வியில்லாதவனை, பராஜய ப்ரஸக்தியில்லாதவனை வென்றபடி. விசயனுக்கு – விஜயனுக்கு, செப்பினன் – சொன்னான். (௯)

தன்மேன்மையுந் தன்பிறப்பிற்றளராத்தனிமையையும்
பன்மேனிநண்ணினன்பாற் பிரியாவன்பராசைகளும்
புன்மேனிவிண்ணவர்பாற்புரியாததன்பத்தியையும்
நன்மேனிநாரணன்று னரனுக்குநவின்றனனே. (௧௦)

"ஸ்வமாஹாத்ம்யம்மநுஷ்யத்வேபரத்வஞ்சமஹாத்மநாம், விசேஷோ நவமே யோகோபக்திரூபః ப்ரகீர்த்திதः" என்கிற ஸங்க்ரஹச்லோகத்தின்படியே நவமாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். நன்மேனி-நல்லவிக்ரஹத்தையுடையவனை, "மன்மநாபவமத்பக்தः" என்கிறச்லோகபாஷ்யோக்த ரீத்யா விலக்ஷணலோசநவர்ண தேஜோ லாவண்ய பாஹு பீதாம்பர பூஷண விசிஷ்டமான விக்ரஹத்தை யுடையவனை வென்றபடி. நாரணன் - நாராயணன், இங்கு நாராயணசப்தத்தாலே ப்ராகுக்தச்லோக பாஷ்ய ப்ரதர்சித பஜநீயதோபயுக்த ஸர்வேச்வரத்வாதி கல்யாண குணாச்ரயத்வம் விவக்ஷிதம், ஆக விசேஷண விசேஷ்யங்களா லுபாஸ்யவஸ்துவுக்கு விக்ரஹதோ குணதஸ் ஸ்வரூபதச்ச நிரதிசய போக்யத்வேந தத்விஷயோபாஸநத்துக்கு நிரதிசய ப்ரீதி ரூபதா பத்யர்ஹத்வம் ஸூசிதம். தான் - ஸ்வயமேவ, பதரிகாச்ரமத்தில் நாராயணனா யவதரித்து ஸ்வதைவத்ய மந்த்ரத்தைத்தானே வெளியிட்டதுபோ லிங்கு ஸ்வமாஹாத்ம்யாதிகளைத் தானே யுபதேசித்தது மென்று கருத்து. தன்-தன்னுடைய, மேன்மையும் - உத்கர்ஷத்தையும், "மயாததமிதம்ஸர்வம்" இத்யாதிநா ப்ரதிபாதிதங்களான ஜகத்காரணத்வ ஸர்வாதாரத்வா நந்யாதாரத்வாதிஸ்வாஸாதாரண மாஹாத்ம்யங்களையு மென்றபடி. தன்பிறப்பில் - தன்னுடைய வவதாரத்திலே, தளரா - சிதிலீபவியாததான, தனிமையையும்-அத்விதீயதையையும், மநுஷ்ய திர்யகாதி ஸஜாதீயனா யவதரிக்கச்செய்தேயும் ஸ்வாபாவிகாநவதிகாதிசயபாரம்யா ப்ரச்யுதியையு மென்றபடி. இங்கு பிறப்பி லென்றவதாரஸாமாந்யோபாதாநத்தாலே ஸங்க்ரஹ ச்லோகத்தில்மநுஷ்யத்வோபாதாந மவதாரஸாமாந்யோபலக்ஷணபர மென்று ப்ரதர்சிதம். இவ்வர்த்தத்தை "பரோவா...இதரதா" என்கிற வபியுக்தோக்த்யுதாஹரணபூர்வகமாக ஸ்ரீமத் கீதார்த்தஸங்க்ரஹரக்ஷையிலெதாமே யருளிச்செய்தாரிறே. பன்மேனி - பல்மேனியிதிபதச்சேதः. பல் - பஹுக்களான, மேனி-சரீரங்களை, நண்ணினன்பால்-அடைந்தவன்விஷயத்திலே, "ஜ்ஞாநயஜ்ஞேந சாப்யந்யே யஜந்தோமாமுபாஸதே-ஏகத்வேநப்ருதக்த்வேநபஹுதாவிச்வதோமுகம்" என்கிறபடியே தேவதிர்யங் மனுஷ்யஸ்தாவராக்ய விசித்ர ஜகச் சரீரகத்வேந விச்வப்ரகாரனை தன் விஷயத்திலே யென்றபடி. இதுக் காசைகளோடேயந்வயம். பிரியா-விச்லேஷியாதவரான, அன்பர்-ப்ரேமசாலிகளுடைய, ஆசைகளும்-ப்ரீதிகளையும், "மஹாத்மாநஸ்துமாம்பார்த்ததைவீம்ப்ரக்ருதிமாஸ்திதாः, பஜந்த்யநந்யமநஸோஜ்ஞாத்வா பூதாதிமவ்யயம்" என்கிற ச்லோகத்திலே "அநந்யமநஸः" என்கிற பதவிவக்ஷிதரான நிரதிசய ப்ரேமசாலிகளுடைய "ஸததம்கீர்தயந்தோமாம்யதந்தச்சத்ருடவ்ரதாः, நமஸ்யந்தச்சமாம்பக்த்யாநித்யயுக்தா உபாஸதே" என்கிற ச்லோக பாஷ்ய ப்ரதர்சித பகவத் கல்யாண குண விசேஷ வாசி நாம ஸ்மரண ஸர்வாங்க புளகோத்கம கத்கதகண்டபவந நாமவிசேஷ கீர்தந பகவதர்சந ததுபகாரக பவநநந்தநவநகரணாதி த்ருட ஸங்கல்பயதநாசிந்திதபாம்ஸு கர்தமசர்க்கராதிப்ரதேசபக்திபாரவநமித சிரஸ்காஷ்டாங்கப்ரணாம நித்யயோகாகாங்க்ஷாதிரூப ப்ரேம பரீவாஹ வ்யாபாரங்களையு மென்றபடி. இத்தால் "மஹாத்மநாம்விசேஷः" என்கிற ஸங்க்ரஹ ச்லோககட்டம் விவ்ருதமாய்த்து. புன்மேனி-புல் மேனி இதிச்சேதः. புல்-அத்யல்பமான, மேனி-சரீரத்தையுடையவரான, விண்ணவர்பால்-தேவர்விஷயத்திலே, புரியாத-ப்ரவர்த்தியாததான, நித்ய நைமித்திகாதி கர்மாநுஷ்டானகாலத்திலே விநச்வரதேஹயுக்த பகவத்ப்ரகாரபூத தேவதாதி விஷயத்திலே பர்யவஸியாததான, தேவர்களுக்குப் புன்மேனி யென்கிற விசேஷணத்தாலே தானே பக்த்யநர்ஹத்வ முத்பாவிதம். தன்-ஸ்வவிஷயையான, பத்தியையும் - "மன்மநாபவமத்பக்தோமத்யாஜீ

மாம்நமஸ்குரு, மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம்மத்பராயணஃ'' என்கிற ச்லோகதர்சித வ்யபிசாரி பரபக்தி ஸ்வரூபத்தையு மென்றபடி. நரனுக்கு-நராம் சாதிஷ்டிதனான வர்ஜுனனுக்கு, நாராயணன் நரனுக்கு பதேசிக்கையுசிதமிறே. நவின்றனன்-சொன்னான். (கo)

எல்லையில்லாததன்சீலமுமின்னமுதக்கடலும்
எல்லையில்லாதவிபூதியெல்லாந்தனதானமையும்
எல்லையில்லாதபத்தியெழுவிக்கத்திருவருளால்
எல்லையிலீசனியம்பினனிந்திரன்மைந்தனுக்கே. (கக)

"ஸ்வகல்யாணகுணாநந்த்யம்க்ருத்ஸ்நஸ்வாதீனதாமதிஃ, பக்த்யுத்பத் திவிவ்ருத்த்யர்த்தம் விஸ்தீர்ணம் தசமோதிதம்'' என்கிற ஸங்க்ரஹ ச்லோகத்தின்படியே தசமாத்யாயார்த்தத்தை ஸங்கரஹிக்கிறார். எல்லையில் - அவதிரஹிதனான,ஈசன்-ஈச்வரன், ஸ்வாபாவிகாநவதிகாதிச யைச்வர்யசாலியான வாஸுதேவ னென்றபடி. திருவருளால் - ஸ்ரீமத் க்ருபையாலே, நிருபாதிகக்ருபையாலே யென்றபடி. எல்லையில்லாத - அவதிரஹிதையான, பத்தி - பக்தியை, அபவர்கதசாயாமபி பலரூபத்வேந அநுவர்த்திக்கையாலே உத்தராவதிரஹிதையான ஸ்வவிஷய பக்தியோகத்தை யென்றபடி. எழுவிக்க-உத்பவிப்பிக்க, ததுத்பத்யர்த்தமாகவும் தத் வ்ருத்யர்த்தமாகவு மென்றபடி, எல்லையில்லாத-அவதிரஹிதமான,தன்சீலமும்-தன்ஸௌசீல்யாக்யமஹாகுணத்தையு மென்றபடி. மஹதோ மந்தைஸ்ஸஹ நீரந்த்ர ஸம்ச்லேஷஸ்வபாவத்வம் ஸௌசீல்யம். இன்-போக்யமான, அமுதக்கடலும்-அம்ருதஸாகரத்தையும், இங் கம்ருதஸாகரத்வேந நிரதிசயகல்யாணகுணராசியை யத்யவஸித்தபடி, இந்த குணராசியி லந்தர்கதமான ஸௌசீல்யத்தை ப்ருதக் நிர்தேசித்தது தஸ்யா ச்ரிதரக்ஷணே பயோகாதிசய ப்ரயுக்த ப்ராதாந்ய ஜ்ஞாபநார்த்தம். எல்லையில்லாத-அவதிரஹிதங்களான, அஸங்க்யேங்களான வென்றபடி. எல்லாந்தனது விபூதியானமையு மென்றந்வயம், எல்லாம் - ஸர்வவஸ்துக்களும், தனது-ஆத்மீயையான, விபூதியானமையும்-விபூதியானபடியையும், விபூதிர் நியந்தவ்ய வர்கஃ. இந்திரன்-இந்திரனுடைய, மைந்தனுக்கு-புத்ரனுக்கு, இயம்பினன் - சொன்னான். (கக)

எல்லாந்தனக்குருவாயிலங்கும்வகைதானுரைத்துச்
சொல்லாலறிந்ததுசோராமற்கண்டிடவேண்டுமென்ற
வில்லாளனுக்கன்று மெய்க்கண்கொடுத்தது வேறுமுண்டோ
நல்லார்கள்காண்பரென்றுந்நவின்றானங்களுயகனே. (கஉ)

இனி "ஏகாதசேஸ்வமஹாத்ம்ய ஸாக்ஷாத்காராவலோகநம், வ்யக்தமுக்தா விதிப்ராப்த்யோர் பக்த்யே கோபாயதாததா'' என்கிறஸங்க்ரஹ ச்லோகத்தின்படியே ஏகாதசாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். எங்கள்-எங்களுடைய,நாயகன் - நாயகன், அஸ்மதாதிஸர்வஜந நேதாவான ஸ்ரீக்ருஷ்ண னென்றபடி. எல்லாம் - ஸர்வவஸ்துக்களும், தனக்கு - ஸர்வநியந்தாவான தனக்கு, உருவாய்-ரூபமாய், சரீரமாயென்றபடி. இலங்கும்வகை - ப்ரகாசிக்கும் ப்ரகாரத்தை, தான் - ஸ்வயமேவ, உரைத்து-உபதேசித்து, இதுக்கு நவின்றா னென்கிறத்தோடே யந்வயம். இத்தால் பூர்வாத்யா யார்த்தத்தை யநுபாஷித்தபடி, சொல்லால் - உக்தியாலே, அறிந்தது-பூர்வாத்யாயத்தில் பகவதுபதேசாவகதமான வந்தவிபூத்யாதி யோகத்தை யென்றபடி, சோராமல் - விடாதே, கண்டிடவேண்டும் - ஸாக்ஷாத்கரித்து விடவேணும், "யோகேச்வர ததோமேத்வம் தர்சயாத்மா நமவ்யயம்'' என்கிறவிடத்திலே "அவ்யயம்இதி க்ரியா விசெஷணம், ஸகலம் தர்சயெத்யர்த்தஃ'' என்று பாஷ்யகாரரருளிச்செய்தபடியே பகவத் விபூத்யாதி யோகத்தை லேசமும் விடாதே ஸாக்ஷாத்கரிக்க வேணு மென்றபடி. என்ற - இப்படி ப்ரார்த்தித்தவனான, வில்லாளனுக்கு-தாநுஷ்கனுக்கு, இங்கு அர்ஜுனனை தாநுஷ்கத்வேந நிர்தேசித்தது தஸ்ய தீரதரத்வ த்யோதநார்த்தம்.இத்தால் பகவத் ரூபத்துக்கு தீரதரனான வர்ஜுனனுங்கூட "த்ருஷ்ட்வாஹி த்வா ப்ரவ்யதி தாந்தராத்மா த்ருதிர்நவிந்தாமிசமஞ்சவிஷ்ணோ'',

என்று கூரபிதனும்படி பீஷணதமத்வம் ஸூசிதம், அன்று - அவன் ப்ரார்த்தித்த காலத்திலே, மெய்க்கண் - ஸத்யசக்ஷுஸ்ஸை, யதாவஸ்திதாபரிச்சிந்ந பகவத்ரூப க்ராஹகமான திவ்ய சக்ஷுஸ்ஸை என்றபடி. கொடுத்து - ஸ்பஷ்டம். இதுக்கு நவின்றனனென்கிறத்தோடே யந்வயம். இப்படி ஸங்க்ரஹச்லோக பூர்வார்த்தத்தை யருளிச்செய் தினிமேல் பகவத்ஜ்ஞாநதர்சந ப்ராப்திநாம் ஐகாந்திகாத்யந்திக பகவத்பக்த்யேகலப்யத்வரூபோர்த்தராத்த்யார்த்தத்தை யருளிச்செய்கிறார். இது-இந்த ஜ்ஞாநாதிஸாதநம், வேறும்-பக்திவ்யதிரிக்தமாயும், உண்டோ "நாஹம்வேதைர் நதபஸாநதாநேந நசேஜ்யயா, சக்ய ஏவம் விதோத்ரஷ்டும் த்ருஷ்டவாநஸிமாம்யதா" என்கிறபடியே பக்தி வ்யதிரிக்தமான ப்ரவசநதபோதாநாதிகம் பகவத் ஜ்ஞாநாதி ஸாதநமாக மாட்டாதென்றபடி. நல்லார்கள் - ஸாதுக்கள், பக்திசாலிகளென்றபடி. காண்பர் - ஸாக்ஷாத்கரிப்பர்கள், இங்கு ஸாக்ஷாத்காரோபாதாநம் "பக்த்யாத்வநந்யயாசக்ய: அஹமேவம்விதோர்ஜுந, ஜ்ஞாதும்த்ரஷ்டுஞ்சதத்வேநப்ரவேஷ்டுஞ் சபரந்தப" என்கிறபடியே தத்பூர்வோத்தர பாவி ஜ்ஞாந ப்ராப்திகளுக்கு முபலக்ஷணம். என்றும் - இப்படியும், இந்த ஸமுச்சயபதத்தால் ஸ்வமாஹாத்ம்யோப தேச ஸங்க்ரஹ:. நவின்றான் - சொன்னான். (கஉ)

தன்கழலிற்பத்தி தாழாதது மதின்காரணமாம்
இன்குணர்சிந்தையு மீதறியார்க் கவ்வடிமைகளும்
தன்கருமங்க ளறியாதவர்க்குலகு நிலேயும்
தன்கழலன்பர்க்கு நல்லவன்சாற்றினன் பார்த்தனுக்கே. (கங)

இனி "பக்தேச்சைக்ர்யமுபாயோக்திரசக்தஸ்யாத்ம நிஷ்டதா, தத்ப்ரகாராஸ்த்வதிப்ரீதி:பக்தேர்த்வாதச உச்யதே" என்கிறஸங்க்ரஹச்லோகத்தின்படியே த்வாதசாத்யார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். தன்கழல்-தன்னுடைய திருவடிகளிலே, அன்பர்க்கு - ப்ரேமசாலிகளுக்கு, நல்லவன் - ஸாதுதமன், ஸ்வசரணாரவிந்த பக்தர்கள் விஷயத்திலே ஸ்வாந்தராத்ம புத்திபண்ணுமவனான பரமபுருஷனென்றபடி. இத்தால் "யேதுதர்ம்யாம்ருதமிதம் யதோக்தம்பர்யுபாஸதே, ச்ரத்ததாநாமத்பரமாபக்த்தாஸ் தேதீவமெப்ரியா:" என்கிற வத்யாயாந்திம ச்லோகத்தில் ப்ரதிபாதித ஸ்வபக்த விஷய நிரதிசய ப்ரீதியைச் சொன்னபடி. தன்கழலில் - தன்னுடைய சரணாரவிந்த விஷயமான, பத்தி - பக்தியோகமானது, தாழாததும் - விளம்பியாதபடியையும், ப்ரத்யகாத்ம ப்ராப்தி ஸாதநீபூத ஸ்வோபாஸநஸ்யபலோபதாந ச்ஜாடித்யத்தையு மென்றபடி. அதின் - அந்த பக்தியோகத்துக்கு, காரணமாம் - ஸாதநமாம், இன் - போக்யபூதமான, இது சிந்தைக்குவிசேஷணம். குணம் - குணங்களையுடையவருடைய, சிந்தையும்-நிரதிசயப்ரீதிரூபாபந்ந தர்சநஸமாநாகார த்ருவாநுஸ்ம்ருதி ரூப பக்தியோக ஸந்தனுக்கு தத்ஸாதநீபூத பகவத்குணப்யாஸத்தையு மென்றபடி. இன்குணரென்று குணிபர்யந்தோபாதாநம்குணிவிநாக்ருதகுண சிந்தநம்ஸம்பவியாதென்று ஸூசநார்த்தம். குணங்களுக்கு போக்யத்வோக்தியாலே சிந்தாஸௌகர்யம் வ்யஞ்ஜிதம். இது - இந்தகுணசிந்தநத்தை, அறியார்க்கு - அறியமாட்டாதவர்களுக்கு, அவ்வடிமைகளும் - அந்தகைங்கர்யங்களையும், பகவத் குண சிந்தநாசக்தனுக்கு "அப்யாஸேப்யஸமர்த்தோஸி மத்கர்ம பரமோபவ" என்கிற ச்லோகபாஷ்யப்ரதர்சிதாலய நிர்மாணோத்யாநகரணாதி பகவத் கைங்கர்யங்களையு மென்றபடி. இவை - இவற்றை, பூர்வோக்த பகவத்கர்மங்களை யென்றபடி. அறியாதவர்கட்கு - ஸ்பஷ்டம். லகுநிலே - லகுநிஷ்டையையு மென்றபடி. பூர்வோக்த பகவத்கர்மகரண சக்தனுக்கு ஆத்மஸ்வபாவாநு ஸந்தாந ரூபாத்மநிஷ்டையையு மென்றபடி. இது "அத்வேஷ்டாஸர்வபூதாநாம்" இத்யாதிநாஉக்தங்களான ததபேக்ஷித ப்ரகாரங்களுக்குமுபலக்ஷணம். பார்த்தனுக்கு - அர்ஜுனனுக்கு, சாற்றினன் - விசதமாக வுபதேசித்தான். (கங)

ஊனின்படியு முயிரின்பிரிவு முயிர்பெறுவார்
ஞாநம்பெறுவகையுஞ் ஞானமீன்ற வுயிர்ப்பயனும்
ஊனின்றதற்கடியு முயிர்வேறிடுமுள்விரகும்
தேனின்றபாதன் தெளிவித்தனன் சிலேப்பார்த்தனுக்கே. (கச)

இனி "தேஹஸ்வரூப மாத்மாப்திஹேதுரா த்மவிசோதநம், பந்தஹேதுர்விவேகச்ச த்ரசயோதச உதீர்யதே" என்கிற ஸங்க்ரஹச்லோகத்தின்படியே த்ரயோதசாத்யார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். தேன் - மது, நின்ற-நிற்குமிடமான, பாதன் - பாதங்களுடையவன், அம்ருதஸ்யந்திபாத பங்கஜனான ஸர்வேச்வரனென்றபடி. ஊனின் - சரீரத்தினுடைய, படியும் - ப்ரகாரங்களையும் "தத்க்ஷேத்ரம்யச்சயாத்ருக்சயத் விகாரியதச்சயத்" என்று ப்ரக்ஷிப்தங்களான தேஹோபாதாநாதேய கார்யப்ரயோஜநஸ்வரூபங்களையு மென்றபடி. உயிரின் - ஆத்மாவினுடைய, பிரிவும் - விபாகத்தையும், வெத்யபூததேஹாபேக்ஷயா வெதித்ருபூதாத்மாவுக்குள்ள வைலக்ஷண்யத்தையு மென்றபடி. இத்தால் ஸங்க்ரஹச்லோகத்தில் தேஹஸ்வரூபபதமாத்மஸ்வரூபஸ்யாப் யுபலக்ஷண மென்று ஸூசிதம். உயிர் - ஆத்மாவை, பெறுவார் - லபிக்குமவர், ஞாநம் - ஞாநத்தை, பெறுவகையும் - லபிக்கும் ப்ரகாரத்தையும், இங்குஞாந சப்தத்தாலே ஜ்ஞாயதெநேநாத் மேதிவ்யுத்பத்யா ஆத்மஜ்ஞாநஸாதனமான வாத்மநித்யத்வாத்யாத்மகுணப்ருந்தம் விவக்ஷிதம். ஆத்மப்ரேப்ஸுக்களுக்கு ஆத்மப்ராப்தி ஸாதநமான வமாநித்வாதிகுண ப்ருந்த முபாயமானபடியையு மென்றபடி. ஞானமீன்ற - ஞாநத்தாலே ப்ரஸூதமான, உயிர்ப்பயனும் - ஆத்மாக்யபலத்தையும், அமாநித்வாதி குணப்ருந்த ரூபாத்மஜ்ஞாநஸாதந ஸாத்யமான ப்ரத்யகாத்ம ஸ்வரூபலக்ஷண ப்ராப்யத்தையு மென்றபடி. ஊன் - சரீரத்திலே, நின்றவர்க்கு - அவஸ்திதர்க்கு, அடியும் - மூலத்தையும், ஆத்மாவுக்கு நாநாகளேபர ஸம்ஸர்க ரூபபந்தஹேதுவையு மென்றபடி. உயிர் - ஆத்மாவை, வேறிடும் - ப்ருதக்கரிக்குமதான, உள்விரகும் - அந்தருபாயத்தையும், ப்ரக்ருதி ஸம்ஸ்ருஷ்டாத்மாவுடைய வைலக்ஷண்யாநுஸந்தாந ப்ரகார ததந்தரங்கோபாயங்களையு மென்றபடி. சிலை - தந்வியான, பார்த்தனுக்கு, தெளிவித்தனன் - விசதமாக வுபதேசித்தான். (கச)

முக்குணமேயுயிர் முற்றவுங் கட்டிட மூண்டமையும்
முக்குணமே யனைத்தும் வினைகொள்ள முயன்றமையும்
முக்குணமாயை கடத்தலு முக்கதி தந்தளிப்பும்
முக்குணமற்றபிரான் மொழிந்தான் முடியோன்றனக்கே. (கரு)

இனி "குணபந்தவிதாதேஷாம் கர்த்ருத்வம் தந்நிபந்தநம், கதித்ரயஸ்ய மூலத்வம் சதுர்தச உதீர்யதே" என்கிற ஸங்க்ரஹச்லோகத்தின்படியே சதுர்தசாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். முக்குணம் - த்ரைகுண்யத்தாலே, அற்ற - சூந்யனான, பிரான்-உபகாரகன், "ஸத்வாதயோந ஸந்தீசேயத்ரசப்ராக்ருதாகுணா:, ஸஸர்வ பூதப்ரக்ருதிம் விகாரான்குணாம்ச்ச தோஷாம்ச்சமுநேவயதீத:" இத்யாதிகளில்படியே ஸத்வரஜஸ்தமோரூப குணத்ரயதத்கார்யபூதப்ரக்ருதி ஸம்பந்தாதிரஹிதனான மஹோபகாரகனென்றபடி. முக்குணமே-த்ரைகுண்யந்தானே,உயிரை-ஆத்மாவை, முற்றவும் - கார்த்ஸ்ந்யேந, கட்டிட - ஸம்பந்தித்துவிட, மூண்டமையும் - ப்ரவர்த்தித்தபடியையும், ஸத்வாதிகுணத்ரயமுமடைவே ஜ்ஞாநகர்மநித்ராதிஸங்கத்வாரா புருஷனை பந்தித்து நிரந்தரம் ஸம்ஸரிப்பிக்கும் ப்ரகாரத்தையு மென்றபடி. முக்குணமே - த்ரைகுண்யமே, அனைத்தும்-ஸமஸ்தங்களான, வினை - கர்மங்களை, கொள்ள - க்ரஹிக்க, பண்ண வென்றபடி. முயன்றமையும் - வ்யாபரித்தபடியையும்,ப்ராப்தாப்ராப்தவிவேகத்தாலே ஸகலஸாம்ஸாரிக வ்யாபாரங்களிலும் குணத்ரயமே கர்த்ருபூத மென்கிறவநுஸந்தாநப்ரகாரத்தையுமென்றபடி. முக்குண - த்ரிகுணையான, மாயை-மாயையை, கடத்தலும் - உல்லங்கிக்கையையும், கார்யகாரணரூபேண பஹூதாபரிணத குணத்ரயப்ரக்ருத்யபரபர்யாய துரத்யய மாயாதரணப்ரகாரத்தையு மென்றபடி. முக்கதி - கதித்ரயத்தை, தந்தளிப்பும் - கொடுத்து ரக்ஷிக்கையையும், "ப்ரஹ்மணோஹிப்ரதிஷ்டாஹமம்ருதஸ்யாவ்ய யஸ்யச, சாச்வதஸ்ய சதர்மஸ்யஸுகஸ்யைகாந்திகஸ்யச" என்கிற வத்த்யாயாந்திம ச்லோகப்ரதிபாதித கைவல்யைச்வர்யாபவர்கரூப புருஷார்த்தத்ரய ப்ரதத்வத்தையு மென்றபடி. ஸ்ரீமத் கீதார்த்தஸங்க்ரஹரக்ஷையிலே "ஊர்த்த்வம்கச்சந்தீத்யாத்யுக்த கதித்ரய விவக்ஷாயாந்து ஸங்க்ரஹக்ரமபங்கஸ்ஸ்யாத்" என்கிற வாக்யத்தாலே ஸங்க்ரஹச்லோகத்தில் கதித்ரயபதத்தை "ஊர்த்த்வம்கச்சந்திஸத்வஸ்தா:" இத்யாத்

யத்யாயமத்ய படித ச்லோகப்ரதிபாதித ஸாத்விகராஜஸதாமஸ புருஷப்ராப்யோர்த்வமத்யாதோலோகரூப கதித்ரய பரமாகயோஜிக்கையில் "மாஞ்சயோவ்ய பிசாரோண பக்தியொகேநஸேவதே, ஸகுணாந்ஸமதீத்யைதாந்ப்ரஹ்ம பூயாயகல்பதே" என்கிற வத்யாயோபாந்த்ய ச்லோகப்ரதிபாதித குணாத்யயாதிக்ரஹோத்தரம் தத்ஸங்க்ரஹே க்ரமபங்க தொஷம் ப்ரஸங்கிக்குமென்று ப்ரதிபாதிக்கையாலும் "ப்ரஹ்மணோஹிப்ரதிஷ்டாஹ" மென்கிறவிடத்திலே ப்ராகுக்த புருஷார்த்த த்ரயமூலத்வம் போல ஊர்த்வம் கச்சந்தீத்யாதிஸ்தலத்திலே ஸாத்விகாதி கதிமூலத்வம்பரமபுருஷனுக்கு கண்டோக்தமல்லாமையாலுமிப்பாட்டிலும் முத்தியென்கிறபதம்தத்பரமன்றிக்கே ப்ராகுக்தபரமாகக்கடவது. முடியோன்தனக்கு - கிரீடசாலியான வர்ஜுநனுக்கு, மொழிந்தான் - சொன்னான். (கரு)

மூவெட்டிலுமதின்மோக மடைந்தவுயிர்களிலும்
நாவெட்டெழுத்தொடு நல்வீடு நண்ணினநம்பரிலும்
மேவெட்டுவன்குண விண்ணோர்களிலும் விசயனுக்குத்
தாவிட்டுலகளந்தான் றன்னைவேறென்று சாற்றினனே. (கசு)

இனி "அசிந்மிச்ராத்விசுத்தாச்ச சேதநாத்புருஷோத்தமঃ, வ்யாபநாத்பரணாத்ஸ்வாம்யாத் அன்யঃபஞ்சதசோதிதঃ" என்கிற ச்லோகத்தின்படியே புருஷோத்தமவித்யாபர பஞ்சதசாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். தாவிட்டு - தாவநம் பண்ணி,வ்யாபித்தென்றபடி. உலகு-லோகங்களை, அளந்தான்—பரிச்சேதித்தவன், இந்தலோக விக்ரமணோக்தியாலே ஸர்வலோகஸ்வாமித்வம் பலிதம். இதுபரணத்துக்கு முபலக்ஷணம். "யொலோகத்ரயமாவிச்ய பிபர்த்யவ்யய ஈச்வரঃ" என்கிறபடியே ஸர்வஜகத்வ்யாபந பரண ஸ்வாம்ய விசிஷ்டனான வென்றபடி. தன்னை-ஸ்வஸ்வரூபத்தை,இதுக்குவேறென்று சாற்றினன் என்கிறத்தோடந்வயம். மூவெட்டிலும்-த்ரிகுணிதாஷ்ட ஸங்க்யாகங்களிலும் காட்டிலும், சதுர்விம்சதிஸங்க்யாகப்ரக்ருதி ப்ராக்ருததத்வங்களில் காட்டிலு மென்றபடி. இதுக்கு வேறென்கிறத்தோடேயந்வயம்-இப்படிமேலுங்கண்டுகொள்வது,இத்தால்பஞ்சதசாத்யாயத்திலேவிவரணீயத்வேநப்ரஸக்தமான புருஷோத்தமபதத்தில் புருஷபதத்யோதிதவிகாரித்ரவ்யவ்யாவ்ருத்தியைச்சொன்னபடி, அதில்-அந்தசதுர்விம்சதிதத்வங்களிலே, மோகம் - மோஹத்தை, அடைந்த - ப்ராப்தரான, உயிர்களிலும்-ஆத்மாக்களிலும், ப்ராக்ருததத்வ ஸங்காதாத்மக கரண களேபர ஸம்பந்த குண்டித ஸ்வாபாவிகஜ்ஞாநாநந்தத்வேந மோஹ துக்காத்யாக்ராந்தரான க்ஷேத்ரஜ்ஞரில் காட்டிலுமென்றபடி. இத்தாலுத்தென்கிற பதலப்தமான க்ஷர சப்தித பத்தசேதநாவதி கோத்கர்ஷத்தைக்காட்டினபடி. நா - ஜிஹ்வையாலே,எட்டெழுத்தும் - திருவஷ்டாக்ஷரத்தையும்,வீடும்-நண்ணினவென்கிறவிடத்திலே ஸந்தியிலே மகார லோபம். நம்பரிலும் - விச்வாஸசாலிகளில் காட்டிலும், ஸ்வாசார்ய ப்ரஸாத லப்த ஸ்ரீமத் அஷ்டாக்ஷராதி ப்ரஹ்மவித்யாப்ரபாவத்தாலே நிச்சேஷஸம்ஸாரநிவ்ருத்தி லக்ஷண மோக்ஷம் பெற்றவத்யவஸாயசாலிகளில் காட்டிலு மென்றபடி. இத்தா லுத்தமசப்தத்திலே ச்ரூயமாண தமப்ப்ரத்யயார்த்தத்வேந விவக்ஷிதமான கூடஸ்தாக்ஷர சப்தித முக்தசேதந ப்ரதியோகிகொத்கர்ஷத்தை வெளியிட்டபடி. மேவு - ஆதரணீயங்களான, ஸ்ப்ருஹணீயங்களான வென்றபடி. எட்டு - அஷ்டஸங்க்யாகங்களான, வன் - த்ருடங்களான, திரொதாந கந்த மன்றிக்கே நித்யாவிர்பூதங்களான வென்றபடி. குண - குணங்களையுடையவரான, அஸ்ப்ருஷ்டஸம்ஸார கந்தத்வேந நித்யாவிர்பூதா பஹதபாப்மத்வாதி கல்யாணகுணாஷ்டகரானவென்று பலிதார்த்தம்.விண்ணோர்களிலும்-பரமவ்யோமவாஸிகளில் காட்டிலும், நித்யஸூரிகளில் காட்டிலு மென்றபடி.இத்தாலுத்தமசப்தத்தில் தமபர்த்தத்வெந விவக்ஷிதமான கூடஸ்தாக்ஷரசப்தக்ரோடீக்ருத நித்யசேதநநிரூபிதாதிசயத்தை விசதீகரித்தபடி. இவ்வர்த்தத்தை "புருஷசப்தேந சேதநவாசிநா அசேதநா: வ்யக்தா வ்யக்த ரூபா ப்ரக்ருதிர் வ்யாவர்த்யதே, உதித்யுத்க்ருஷ்டவாசிநா ததாபத்தாঃ, ஸமர்த்ய ப்ராப்தேந தரபா முக்தாঃ தமபா நித்ய ஸூரயொ நந்தகருடவிஷ்வக்ஸெநாதயঃ" என்று பகவத்குண தர்பணத்திலே பட்ட ரருளிச்செய்தார். வேறு - விலக்ஷணன், பூர்வொக்த வ்யாபந பரண ஸ்வாம்யாதிகளாலே யத்யந்த விஸஜாதீயனென்றபடி. என்று - இப்படி, விசயனுக்கு -

அர்ஜுநனுக்கு, சாற்றினன் - விசதமாக வுபதேசித்தான். "யஸ்மாத்க்ஷரமதீதோஹ மக்ஷராத பிசோத்தமஃ, அதோஸ்மிலோகேவேதேசப்ரீதிரஃ புருஷோத்தமஃ" என்கிறபடியே ச்ருதி ஸ்ம்ருதி ப்ரஸித்தத்வேந வுபதேசித்தான். (கசு)

ஆணைமறாதவர்தேவ ரல்லாவழக்கோ ரசுரர்
கோணைமறாதகுணச்செல்வ நீகுறிக்கொண்மறையை
பேணியதத்துவமும் பிணியற்ற கிரிசைகளும்
காணிதனால்விசையா வென்றுகண்ணனியம்பினனே. (கஎ)

இனி "தேவாஸுரவிபாகொக்தி பூர்விகாசாஸ்த்ர வச்யதா, தத்வாநுஷ்டாந விஜ்ஞாநஸ்தேம்நே ஷோடஸ உச்யதே" என்கிற ஸங்க்ரஹ ச்லோகத்தின்படியே பூர்வோக்த க்ருத்ஸ்நார்த்தஸ்தேமாபாதகமான ஷோடசாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். கண்ணன் - க்ருஷ்ணன், விசையா-வாராய் விஜயனே, ஆணை-ஆஜ்ஞையை, மறாதவர்-அதிக்ரமியாதவர்கள், தேவர்-தேவர்கள், "தேவாபகவதாஜ்ஞாநுவர்த்தநசீலாஃ" என்கிறபாஷ்யத்தின்படியே பகவதாஜ்ஞாதிலங்கன பீருக்கள் தைவப்ரக்ருதிக ளென்றபடி, அல்லா-துஷ்டமான, வழக்கோர் - வ்யவஹாரத்தை யுடையவர்கள், அசுரர் - அஸுரர்கள், "அஸுரா பகவதாஜ்ஞாநிவ்ருத்தி சிலாஃ" என்கிற பாஷ்யத்தின்படியே பகவதாஜ்ஞாதிலங்கந ருசிகள் ஆஸுரப்ரக்ருதிகளென்றபடி. இப்படியாகில் நான் வந்தராசியில் சேர்ந்தவனோவென்று பீதனான அர்ஜுநனைக்குறித்து ப்ரவ்ருத்தமாகிறது. கோனை - ஸ்வாமியை, மறாத - அதிக்ரமியாதவையான, குண-குணங்களையுடைய, செல்வ-ஸம்பத்தையுடையவனான, நீ-ஸ்பஷ்டம். ஸர்வஸ்வாமி பூத பரம புருஷா ஜ்ஞாதிக்ரம பரிபந்த் யபய ஸத்வஸம்சுத்த்யாதி சுபகுண விசிஷ்ட பகவ தாஜ்ஞாநுவ்ருத்தி ரூபதைவ ஸம்பதபிஜாதனான நீ யென்றபடி. இத்தால் "மாசுசஸ்ஸம்பதம்தைவீமபிஜாதொஸிபாண்டவ" என்கிறபடியேசோகாபநோதநம் பலிதம். மறையை-வேதத்தை, குறிக்கொள் - லக்ஷணயாகஸ்வீகரி, ஜ்ஞாபகத்வேந வவலம்பி யென்றபடி. சாஸ்த்ரவச்யனாகக் கடவையென்று பலிதார்த்தம். இந்த சாஸ்த்ரவச்யதைக்குப்பலம் சொல்லுகிறது மேல். இதனால்-இந்த வேதாக்ய சாஸ்த்ரத்தாலே, பேணிய - ஆதரணீயமான, தத்துவமும் - தத்வத்தையும், நிரதிசயபோக்யத்வேந பரமப்ராப்யமான விசிஷ்டபரதத்வத்தையு மென்றபடி. பிணி-துக்கத்தாலே, அற்ற - சூந்யங்களான, துக்கநிவர்த்தகங்களான வென்றபடி. கிரிசைகளும் - க்ரியைகளையும், த்யக்தஸங்கத்வேந பந்தக்லேச நிவர்த்தகங்களான கர்மஜ்ஞாநபக்திரூபப்ராகுக்த தத்வப்ராப்த்யுபாயபூத சாஸ்த்ரார்த்தங்களையு மென்றபடி. காண் - விசதமாகத் தெரிந்துக்கொள், என்று - ஸ்பஷ்டம். இயம்பினன் - சொன்னான். (கஎ)

மறைபொருந்ாதவை வல்லசுரர்க்கு வகுத்தமையும்
மறைபொருக்தும் நிலையும் வன்குணப்படி மூவகையும்
மறைநிலைதன்னை வகுக்குங் குறிமூன்றின்மேன்மையையும்
மறையுமிழ்ந்தானுரைத்தான் வாசவன்றன்சிறுவனுக்கே. (கஅ)

"அசாஸ்த்ரமாசுரம் க்ருத்ஸ்நம் சாஸ்த்ரீயம் குணதஃப்ருதக், லக்ஷணம்சாஸ்த்ர ஸித்தஸ்யத்ரிதாஸப்ததசோதிதம்" என்கிற ஸங்க்ரஹச்லோகத்தின்படியே ஸப்ததசாத்யாயார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார். மறை - வேதத்தை. உமிழ்ந்தான் - உத்கிரணம் பண்ணினவன், ஸ்ருஷ்டித்தவனென்றபடி. இது வைதிககர்ம ததநுஷ்டாத்ரூணாமப்யுத்பாதநோபலக்ஷணம். "ப்ராஹ்மணாஸ்தேநவேதாச்ச யஜ்ஞாச்சவிஹிதா ஃ புரா" என்கிறபடியே வேத தத்விஹித கர்ம ததநிகாரித்ரைவர்ணிகநிர்மாதாவான பரமபுருஷ னென்றபடி. மறை - வேதத்தோடே, பொருந்தாதவை - ஸம்பந்தியாதவை, வல் - பலவான்களான, அசுரர்க்கு - அசுரர்களுக்கு, வகுத்தமையும்- விபக்தங்களானபடியையும். ஶாஸ்த்ரயநநுமதகர்மங்கள்பலவ தாஸுரப்ரக்ருதி பரிக்ரஹீதங்களாய் நிஷ்பலங்களாம்ப்ரகாரத்தையு மென்றபடி. இங்காஸுரப்ரக்ருதிகளை பலவத்வேந நிர்தேசித்தது பஹுவித்த வ்யயாயாஸஸாத்ய நிஷ்பல கர்மங்களிலே புநஃ புநஃ ப்ரவ்ருத்தி ஜநக துர்வார ச்ரத்தா பாதக வாஸநா தார்ட்யா பிப்ராயம். மறை - வேதத்தோடே, பொருந்தும் - ஸம்பந்திக்குமதான, நிலையும் - ச்ருதி

றுகுறைசொல்லவிரகில்லை, ஆனபின்பு நமக்குததகிகாரம் நிறைந்ததில்லையென்றுதல்; அவன்தானித் தலையில் அநுராகமில்லாதவனென்றுதல் சொல்லவேண்டிற்றிறேயென்று உத்விக்நராஞர். சோகித்தவாறே ''மாசுசஃ'' என்னவேண்டுமிறே அவனுக்கு, 'இதன் அடியென்னென்றுராயாநின்றுயீ ! அநுராகவிரஹமாதல் ; அதிகாரசூந்யதையாதல் அன்று. நாம்மானுஷ்யாவதாரத்தில் மநுஷ்யபாவனை செய்யக்கடவோமானுப்போலே அர்ச்சாவதாரஸமாதியின் மர்யாதையையழிக்காமைக்காகவாயிற்றுநாம் தூஷ்ணீம்நின்றது, துக்கமுறுதேகொள்' என்று ஸமாதானம்பண்ணி முன்னம் இவனை அநுபவிப்பியாத குணங்களை அநுபவிப்பித்தான். இங்ஙனல்லாதபோது இவனை இழக்கவேண்டிவருமிறே. நெடும்போதுகூட பரத்வத்தைமறைத்து வைத்தும் கடைசியில் அது தானே வெளிவரும்படியாய்த்திறே விபீஷண பரிக்ரஹத்தினன்று. அதுபோலேயிங்கும். 'ஸ்வநிகமமபஹாய' இறே. ''విమతసహోదరరక్షఃపరిగ్రహవిసంవాదివివిధసచివవిప్రలంభసమయసంరంభవిజృంభితసర్వేశ్వరభావ'' என்னக்கடவதிறே. அது தன்னைத்தான் அநுபவித்தபடியே பேசுகிறுர். அது பேசுமிடத்தில் ஸஹேதுகமாக உபபாதித்தருளுகிறுர், பரோபதேசபர்யவஸிதமாம்படி. இதில் அந்யதாபாவம் சங்கிக்கவிரகில்லையென்றுகொண்டு ஸ்திரீகரணமாயிருக்கும். அதுதன்னில் உத்விக்நராய் அகலப்பாரித்ததம்மை அநுபவிக்கும்படி சித்தஸமாதானம் செய்துவைக்கையாலே அதுதன்னையே முந்தற அருளிச்செய்கிறுர். பயில்மதி - இடைவிடாதே அநுபவிக்க அளவுடைமையை, தருதலின்-எனக்கு அருள்செய்கையாலே, பயில்மதி-அநுபவயோக்யனை சந்தரன், நீயே. வெளியுற-இதரதேஜோவஸ்துக்கள் ப்ரகாசத்தையடையும்படி, தன்னை அதிவஸித்து தேஜோந்தரங்கள் தேஜஸ்ஸையடையும்படி யென்கை. நிற்றலின்-நிற்பதினுலே, வெளியும் - தேஜஸ்ஸும், நிருபாதிகதேஜோ ரூபியான ஸூர்யனும், நீயே. ''ப்ருஹந்பாண்டரவாஸாஸ்ஸொமொராஜெதி'' என்று பாஸ்யனுனசந்த்ரனும் ''அதிஷ்டாஸ்ஸர்லேவஷாம்பூதாநாம்மூர்தாராஜேதி'' என்று பாஸ்யனுன ஸூர்யனும் நீயே. ''யஸ்தெஜஸ்திதெஜாம்ஸி, தஸ்யபாஸாஸர்வமிதம்விபாதி'' என்று தன்னையொழிந்த தேஜஸ்ஸுக்களுக்கும் புகர்கொடுப்பவனிறேநீதான். யஸ்யாம்ஸமெதயஸமயெஷுசிரந்நிவாஸாத் பாகீரதீப்ரப்ருதயோபிபவந்திபுண்யாஃ என்னுமாப்போலே. இது ஸர்வநிர்வாஹகத்வம் சொன்னபடி . மேல் ''ப்ராதா பர்தாசபந்துச்ச பிதாசமமராகவஃ மாதாபிதாப்ராதாநிவாஸச்சரணம்ஸுஹ்ருத்'' இத்யாதிப்படியே ஸர்வவிதபந்துவும் நீயேயென்கிறுர். சாயை - நிழலை, தந்து-கொடுத்து, உகத்தலின்-ஸந்தோஷித்தலால், தாயும் — மாதாவும், நீயே. ''மாத்ருதேவோபவ'' என்று முந்தறச்சொல்லிற்றிறே. இங்குச் சாயையென்றது ஸம்ஸாரஸந்தாபஹரமான திருவடிகளை. அதை அஜ்ஞாதயாத்ருச்சிகாநுஷங்கிக ப்ராஸங்கிகஸுக்ருதாதிமூலகமாகத் தான் முயன்று தருகையாலும் அதுதான் தன்பேறென்று உகக்கையாலுமாய்த்துத் தாயு நீயேயென்றது. அங்குச்சாயையென்பது கர்ப்பதாரணத்தை. முந்தி - ஸ்ருஷ்டிகாலத்திற்கு முன்னே, நின்று—, அளித்தலின்-கரணகளேபரப்ரதானம்பண்ணி ரக்ஷிக்கையாலே, தந்தையும்-பிதாவும், நீயே.''அசிதவிசிஷ்டாந்ப்ரளயேஜந்தூநவலோக்யஜாதநிர்வேதா.கரணகளேபரயோகம்விதரஸிவ்ருஷ சைலநாத்தகருணேத்வம்.''பிதாதான்ஹிதப்ரவர்த்தகனுகையாலே இவனுக்கு ஆமது ஆகாதது ஆராய்ந்து இவன் அறியாக்காலத்திலும் நடத்திவைக்குமாப்போல கழிக்கவேண்டுவனகழித்துக் கூட்டவேண்டுவன கூட்டி ரக்ஷிக்கையாலே பிதாவும்நீயே. 'அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண்அன்பு சைவித் தறியாமாயத்தடியேனைவைத்தாயால்.' துறவாது - விடாதே. ஒழிதலின்-ஒழிகையாலே, உறவும் - பந்துவும், நீயே. பரித்யாகஹேதுக்கள் நிலைநின்றுலும் விடமாட்டாதேயிருக்கையாலே நிர்வ்யாஜபந்துநீயே. 'ப்ராதா' இத்யாதி. 'பர்த்தாசபந்துச்ச.' 'வேறே போகவெஞ்ஞான்றும்விடலே.' சிற்றின்பம் - சில்வான இன்பங்கள்,ஆபாததஃ அல்பாநுகூலங்களாய்த்தோற்றிப் பின்னுல் அநர்த்தோதர்க்கமான காமங்கள், 'நெடுங்காமமுற்பயக்குஞ் செந்நீரவின்பத்தின் முற்றிழாய் பிற்பயக்கும் பீழை பெரிது, என்று தமிழன் வார்த்தை. இன்மையின்-இல்லாமையால், அப்படியாகாமையால் என்றபடி. அவகாஹிக்க அவகாஹிக்க ஸரஸமாய்ஸுகோதர்க்கமாகையாலே என்கை. 'அதிகமதிசமந்யாமாத்மசோபாம்ததாநம். அநவதிக்கவிபூதிம் ஹஸ்திசைலெச்வரம் த்வாமநுதிநமநிமேஷைர்லோசநைர்நிர்விசெயம்.' உற்றதும் - ப்ரப்தமும், வகுத்தவிஷயமும், நீயே. 'வாயவனையல்லதுவாழ்த்தாது கையுலகந்தாயவனையல்லது

நான்றெழா, பேய்முலை நெஞ்சூணாகவுண்டா னுருவொடுபேரல்லால் காணாகண்கே ளாசெவி' 'வாழ்த்துகவாய்' இத்யாதி. அன்றிக்கே: உற்றதும் - பரித்யாகார்ஹ அந் தரங்கவஸ்துவும் நீயே யென்பாருமுண்டு. உற்றதும் - வாஸஸ்தானமும் நீயே யெ ன்றுமாம். இது 'நிவாஸ:' என்றதைச்சொல்லுகிறது. மேல் 'சரணம்' என்றதைச் சொல்லுகிறது. ஆற்றுக்கு- அநுஷ்டிக்கு மேதேனுமொரு வ்யாஜமாத்ரமான உபா யத்துக்கு, அருள்தலில் - உபாயலாகவத்தையும் பலகௌரவத்தையும் நினையாதே பரிபூர்ண பலப்ரதானம்பண்ணி ரக்ஷிக்கையாலே, ஆறும் - உபாயமும், நிருபாதிக ஸர்வவிதஸம்பந்தமு முடையவனாகையாலே இத்தலையில் வ்யாஜமாத்ரத்தைக்கொ ண்டு தான் உபாயாந்தர ஸ்தானத்திலே நிற்கையாலே ஸகலபலஸாதநமும் நீயே. [Grantha] இறே. மறநிலை - பாபங்களின்நிலையை, மா ய்தலில் - மாய்த்தலில், நசிப்பிக்கையாலே, அறமும் - தர்மமும், நீயே. பாபநிவர்த் தகங்கள் தர்மங்களிறே. [Grantha] [Grantha] [Grantha] இது 'ஸுஹ்ருத்' என்றதைச்சொல்லுகிறது. [Grantha] [Grantha] என்னக்கடவதிறே. அறம் என்று கர்மயோ காதிகளைச்சொல்லி [Grantha] [Grantha] என்றபடியைச் சொல்லிற்றென்றுமாம். இணை- தன்னோடொப்பார், இல்லையாதலின் - இல்லாமையால், 'ஒத்தார் மிக்காரை இலை யாயமாமாயா.' துணைவனும் - ஸஹாயமாய் நிற்பவனும், நீயே. உன்னோடொப்பா னொருவன் உண்டாமன்றிறே அவனும் ஸஹாயமோவென்று சங்கிக்கலாவது. [Grantha] [Grantha] என்கையாலே ஸத்பதவீ ஸஹா யன் நீயேயிறே. இது கதி: என்றதைச்சொல்லிற்று. அன்றிக்கே ஆறும்நீயே, அற மும் நீயேயென்று சரணம் என்றதைச்சொல்லி துணைவனும் நீயே துய்யனும்நீயே யென்று ஸுஹ்ருத் என்றதைச்சொல்லி காரணம்நீயேயென்று கதி: என்றதைச் சொல்லி நாராயண: என்றதை நாரணனாதலின் என்றுசொல்லிற்றென்னுமாம். செ ய்யாள் - பெரியபிராட்டியார், உறைதலின்-அகலகில்லே னிறையுமென்று நித்யவா ஸம் பண்ணுகையாலே, துய்யனும் - பரிசுத்தனும், நீயே. அகிலஹேய ப்ரத்யநீக கல்யாணைகதானன் நீயே, 'மங்களம் மங்களாநாம்' என்று அவிகலகல்யாண நிதி யான பெரியபிராட்டியார் விரும்பிவஸிக்கையாலே ஸர்வப்ரகாரசுத்தனாய் சுபாச்ர யமான திவ்யமங்களவிக்ரஹ யோகத்தாலே முமுக்ஷுபாஸ்யனென்கை. [Grantha] [Grantha] என்னக் கடவ திறே. [Grantha] [Grantha] ஸ்ரீ [Grantha] என்கை. நாரணனாதலின் - நாராயணனா கையாலே, காரணம் - நிகலஜகந்நிமித்தோபாதாநரூப ஸர்வவித காரண பூதனும் நீயே. 'ஏகோஹவைநாராயண ஆஸீத்' இத்யாதியாலே நாராயணனிறே ஸர்வகார ணமாக ப்ரதிபாதிதனானன். நாராயணசப்தம் ஸமாஸத்வயத்தாலுமாக காரணத் வாதி கண்டோக்திமத்திறே. இது கீழும்மேலுமுள்ள எல்லாவற்றுக்கும் ஸ்தாபக மும். நற்பதந்தருதலின் - புநராவ்ருத்தி ப்ரஸங்கமற்ற ஸமீசீநபதத்தை பரமபதத் தைத் தருகையாலே, கற்பகம் - கல்பவ்ருக்ஷம் நீயே. சதுர்வித புருஷார்த்தங்களை யும் வழங்குமளவன்றிக்கே ஏதேனுமொரு கிஞ்சித்காரம் பண்ணினார்க்கு ஸர்வஸ்வ பூதமான காடபரிஷ்வங்கத்தைக் கொடுக்கக்கடவதிருத்தோள்களை யுடையவனாகை யாலே கற்பகக்காவன்ன நற்பலதோளனிறே. குறை ஒன்று - ஒரு குறையும், இலா மையின் - இல்லாமையாலே, ஸ்வரூபரூபகுணவிபவாதிகளில் ந்யூநதை ஒன்று மில் லாமையாலே, இறைவனும் - ஸர்வேச்வரனும், நீயே. 'நம்பி.' ஸ்வேதரஸர்வநியந் தாநீயே. துன்பம் - துயரங்களை, துடைத்தலின் - நீக்குகையாலே, இன்பமும் - நிருபாதிகாநந்த ஸ்வரூபமும், நீயே. 'ஆநந்தோப்ரஹ்ம.' என்னுள் - எனக்குள், இச் சரீராந்த:ப்ரதேசத்தில், உறைதலின்- கறந்தபாலுள் நெய்யேபோல் அப்ருதக்ஸித்த னாய் வஸிக்கையாலே, யானும்நீயே. 'யஆத்மநிதிஷ்டன்.' சரீரவாசிசப்தங்கள் நிய

ந்த்ருத்வ சேஷித்வாதிகளாலே ஆத்மவாசகமிறே. இப்படி இவ்வாத்மாவைப்பற்
அவன் நியந்தாவும் ஆதாரமும் சேஷியும் ஆகையாலே யானும் நீயே. உனதன்றி
உன்னுடையதல்லாமல், இன்மையின் - இல்லாமையின், எனதும்-மதீயமும், நீயே
மதீயமெல்லாம்நீயே. 'ஐஈ_நாயயஉஷியொஹு)ஹஂ ஸகஃஂ_தஜி_தவெவஉ
யவ | _நிய_தஃஸஂ' இறே. ஜ்ஞாநசக்த்யாதிகளும் களத்ரபசுக்ஷேத்ராதிகளும் நீயே
பொல்லாங்கு இலாமையின் - தீமையொன்றுமில்லையாதலின், நல்லாய் - நல்லவன்
ஹேயகுணலேசமு மின்மையால் கல்யாணஸ்பாவன் நீயே. ஆறும்நீயேயென்றுது
ங்கி இவ்வளவும்வர 'சரணம்' என்றதைச்சொல்லி 'நல்லாய்' என்று 'ஸுஹ்ருத்
என்றதைச்சொல்லுகிற தென்னுமாம். அப்போது மேல் 'கதி:' என்றதைச்சொல்லு
கிறது. வையம் - பூமியை, ப்ரஹ்மாண்டலக்ஷ சதகோடிகளை யென்றுகருத்து
உண்டு - ப்ரளயம்வந்தவாறே வயிற்றில்வைத்துரக்ஷித்து, உமிழ்தலில் - ப்ரளய
போனவாறே யதாபூர்வம்நிகரணம் பண்ணுகையாலே, வல்லாய் - வல்லவன், நீயே
நிகிலஜகத்ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரகரணசக்தன்நீயே. நீயே நல்லாய் நீயே வ
லாய். ஸர்வஜ்ஞனுகையாலும் ஸர்வசக்தனுகையாலும் பரமகாருணிகனுகையாலு
இஷ்டப்ராபணத்திற்கும் அநிஷ்டநிவர்த்தனத்துக்கும் கடவன்நீயே. மெய்ய
அடியவர்க்குமையனே, நின்வியப்பு - உனது ஆச்சர்யஸ்வபாவம், எங்ஙனமாகும்
எவ்வகையாயிராநின்றதோ, அங்ஙனே - அவ்வகையில் எல்லாம், ஒக்க அறிவது
நின்படிக்கேற்க அறியவல்லது, அறிந்துசொல்வது. ஆரணமே - வேதமே. அபெ
ருஷேயமாகையாலே நித்யநிர்தோஷமான வேதமொன்றே யாயிற்று அறிவது
நம்போலிகளுக்கு நிலமோ. அன்றிக்கே: ஒக்கவறிவது - போலியாய் அறிவது
நின்படிமுழுதும் அறிய வேதங்களுக்கும் நிலமல்லவிறே. 'யதோவாசோநிவர்த்
ந்தே' இறே. 'உவய_ுவய_ுஜஹவொவிவஸஷாநு வ_ுகஃ_)செ
யெஶ_தஜி_த்)_நாக_ூஜா_தீ | ஹ்ரீஸுஷெசெகஃமாணாவயீஷயா ஸஶாவு
_தா_நாஃ)ஐெ_தா_திஶெல_தெ' என்கை, அங்ஙனேயொக்க - இங்குச்சொன
னவையன்றிக்கே, நல்குரவும் இத்யாதியிற்சொன்னபடி யெல்லாமறிவது என்கை
'ஸோஅங்கவேதயதிவாநவேத' என்று கைவாங்கின பழமறைபோலன்றிக்கே மா
ன்மறையாயிற்றொக்க வறிவது. 'ஸேவாயோச்ய:' இத்யாதியிற்படியே பத்துபத்து
க்களிலும் ப்ரதிபாதிதங்களான பத்துஅர்த்தங்களும் இப்பாட்டில் அருளிச்செய்ய
பட்டதிறே. எங்ஙனேயென்னில், பயின்மதிநீயென்று ஸேவ்யத்வம். வெளியும்
யென்று போக்யத்வம். தாயுநீயே தந்தையும்நீயே என்னும் இரண்டிலுமாக சு
ஸுபகவிக்ரஹவத்வம். உறவும்உற்றது மென்று ஸர்வபோக்யாதிசத்வம். ஆறு
அறமுமென்று ச்ரேயஸ்தத்தேதுதாநம். துணைவனும் துய்யனுமென்று ப்ரபத
ஸுலபத்வம். காரணம் கற்பகமென்று அநிஷ்டநிவர்த்தகத்வம். இறைவனுமின்
மும் என்று ஆச்ரிதேச்சாநுஸாரித்வம். யானும்நீ யெனதும்நீ யென்று நிருபாதி
ஸுஹ்ருத்வம். நல்லாய் வல்லாய் என்று ஸத்பதவீஸஹாயத்வம். இப்படி இக்குண
தசகத்தாலும் உபாயமும் உபேயமும் அவனே யென்றிறே அங்குமிங்கும் ப்ரதி
பாத்யம். (எ

ஆரணங்கள் தேடவயிந்தைநகர்வந்துதித்த
காரணராய்நின்றகடல்வண்ணர்—நாரணனுர்
இப்படிக்குமிக்கன்றெடுத்தபாதங்கழுவ
மெய்ப்படிக்கமானதுபொன்வெற்பு. (அ

இப்படி தன்னுடைய குணங்களை வகையும் தொகையுமாக வகுத்தநுபவிக்கி
இவனைக்கண்டு எம்பெருமான் தன் திருவடியைக் காட்டிக்கொடுத்தான். இதை
பாராயென்றுன். இதுவோ பார்க்கச்சொல்லிற்று, இது தான் வேதங்களுக்கு
ம்ருக்யமன்றோவென்று த்ரிவிக்ரமவ்ருத்தாந்தத்தை அநுஸந்திக்கிறுர். த்ரிவிக்
மாந்தம் வேதமென்றிறே ப்ரவாதம். கீழ்மொழிவார்மொழிவனவென்று வேத
கள் அதிக்ருதாதிகாரமென்றும் எம்பெருமான் வேதைகஸமதிகம்யனென்றும் செ
ல்லிற்று. தூமறையினுள்ளத்தில் பகவத்ஸ்வரூபாதிகள் வேதைகஸமதிகம்யமா

னும் அது ஆஸுரப்ரக்ருதிகளுக்கு நிலமன்றென்றும் பரதேவதாபாரமார்த்த்யஜ்ஞானவான்களின் மதாவலம்பநத்தாலே இதிஹாஸபுராணாதிகளால் உபப்ரும்ஹிதமாம்போது ஸுகமமாமென்றும் அது தனக்கு ஸதாசார்யபரிக்ரஹம் வேண்டுமென்றும் சொல்லிற்று. இங்கு அப்படி நிரூபிக்கப்புக்கவாறே வேதந்தான் அவன் ஸ்வரூபாதிகளை பரிச்சேதித்தறியமாட்டாதே 'நந' என்னும் 'யதோவாசஃ' என்றும் கைவாங்கிற்றென்றறியலாயிற்றென்கிறது இங்கு. ஆரணங்கள்தேட - வேதங்கள் தேடாநிற்க, இன்னும் தேடிக்கொண்டிருக்கிறனவாயிற்று. 'நோத்யமதோதிசேரதே.' அயிந்தைநகர் - திருவயிந்தையில், வந்து - தானேவந்து, உதித்த - அவதரித்தருளின, அவையங்கே தேடாநின்றன; இவ னவற்றின்கண்ணின் மணற்கொடு தூவிக்காலினுல்ப்பாய்ந்துவந்து நின்றபடி. காரணராய்நின்ற - ஸர்வகாரணபூதனாய் நின்ற, வேதங்களில் காரணத்வம் ப்ரதிபாதிதமாயிருந்தாலும் இவ்வவதாரமில்லாதபோது அது ஸர்வருக்கும் ப்ரமாணமாகமாட்டாது. 'ஸம்வஜெ தகிஷய தீவூஶா ஜூரெ ஹஸதீவூஶாணவிதியெஹிஜெநிரெ| தநூதெவிஙு தஶா நதாம் மதாஹஸிநாஜ்வாவஸுநிதூயீ'என்னக்கடவதிறே. கடல்வண்ணர்-கடலின் ப்ரகாரத்தையுடையவர்,ஸமுத்ரம் போன்றவர். அநுக்ஷணவீக்ஷணேபி நவநவம்போலே ஆச்சர்யாவஹனானை. 'ஸமுத்ரஇவகாம்பீர்யே.' நாரணனார்-நாராயணன்,நிகிலஜகத்வ்யாபநபரணசீலன், இப்படிக்கு - இந்த பூமிக்கு, மிக்கு - மிகுத்து, அன்று- அந்தகாலத்தில், சேவடியால் மூவடிமண்தென்னரங்கத்தம்மான் மாவலிபால்வாங்கியநாள், எடுத்த - விசும்பையளக்க உயர்த்த, பாதம் - திருவடியை, கழுவ - அவநேஜநம் பண்ண, 'குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர் பெய்து மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்திக் கறைகொண்ட கண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினானண்டத்தான் சேவடியையாங்கு' என்கிறபடியே தன்தேசத்தேற எழுந்தருளின வலது திருவடியை அயன் அர்ச்சித்து அவநேஜநம்பண்ணின அந்த ஸ்ரீபாததீர்த்தத்திற்கு, 'சுநூவுதஷணஜாஉவாம்கூம்ஹா உநூவுதாஉாவநெஜநாதீ|சுநூக்ஷு ஸஷஸம்வூஸ்நா நூவெஷுதிஜநாஉஜநஃ' இறே. மெய்ப்படிக்கமானது - ஸத்யமான ப்ரதிக்ரஹ பாத்ரமாகவானது, பொன்வெற்பு - மேருபர்வதம். மேருபர்வதம் ப்ரதிக்ரஹபாத்ரமானது. வாமனன் த்ரிவிக்ரமனானன், ஸ்ரீயஃபதி ப்ரஹ்மசாரியானன். ஈச்வரனென்றிருப்பார் திருவடிவிளக்குவதும் அதை சிரஸில் தரிப்பதுமானர், பொன்வெற்புப்படிக்கமாயிற்று, இதென்ன ஆச்சர்யம்தான். கீழ் 'இழிவாரிதிகவென்'றென்று அவஸரப்ரதீக்ஷத்வம் சொல்லிற்று. 'ரக்ஷாபேக்ஷாம்ப்ரதீக்ஷதே' இறே. 'அடிமையாகின்றோம்......நாராயணனார்க்கேநாம்' என்று ரக்ஷ்யவஸ்துலாபம் சொல்லிற்று. 'அநுத்தமம்பாத்ரமிதம்தயாயாஃ.' இங்கு கடல்வண்ணனென்று ஸ்வாபீஷ்டரக்ஷ்யவஸ்துலாபத்தால் வந்த க்ருதக்ருத்யத்வப்ரயுக்தஹர்ஷப்ரகர்ஷம் சொல்லுகிறது. 'உதாராஃ' என்பானொருவனிறே. (அ)

வெற்புடனென்றியயிந்தையில்வெவ்வினைதீர்மருந்தொன்
றற்புதமாகவமர்ந்தமை கேட்டருள்வேண்டிநிற்கப்
பற்பினமர்ந்தசெய்யாள்படிகாட்டிய பண்புடையெம்
விற்புருவக்கொடிக்கோர் விலங்காமயல்பெற்றனமே. (கூ)

இப்படி அநுகூலப்ரதிகூல நீசாநீசவிபாகமற எல்லார்தலையிலும் திருவடியை வைத்து 'ஸக்ஷுவஜூதாம்தவவஉம் வதுாநநவூம் வாஜெஉகும்வஸீரஸாவஹதாம்ஸிவக்ஷம்| வகதுவிகுஶணகஶஜணிதெஷயஜெஹஜூ) பீஸாகிஷவூயிதம்வூயிவா)ம்'என்கிறபடியே ஒருவனைச்சதுராநநனுக்கி ஒருவனை சிவனுக்கிப்பொல்லாக்குறளுருவிட்டங்கே நின்றாழ்கடலும் மண்ணும் விண்ணும் முடிய விரடியால் முடிந்துகொண்டமை சொல்லிற்று. அயிந்தையோடொக்க நீள்கோயில்பொன்னகரமும் நடுநாடிறே. அங்குற்றைப்படி சொல்லிற்று. அர்ச்சாவதார ப்ரதிபத்தியைமறந்து விபவதில் நெஞ்சம் குடிபோய் 'அந்நாள்தடந்தோறும் புல்லாய்ச்சிலையாய்க்கிடந்திலமே நெஞ்சமே சுழல்தீண்டுகைக்கே' என்று கொண்டு நெஞ்சம்புண்பட்டு நோவுபடத்துடங்கினர். தீர்ப்பாரையாமினியுமாயிற்று. அவ்வள

விலே தன்படிதாமாகாதவாறே அங்கு நின்ற இவர்தமக்கு முத்தேச்யரான பாகவதர்
சொல்லும் பாசுரத்தைதலைவியீடுபாடுகண்டு வியந்துநொந்துரைத்ததாயார் பாசுரத்
தாலே யருளிச்செய்கிறார். துறை நற்றாய் வருந்தல். கற்பொடுபுணர்ந்தகவ்வையின்
கண்ணதாயிற்று. நற்றாய் பாங்கியர் தம்மொடும் அயலார் தம்மொடும் புலம்புமாறு
இங்கு சுருங்கக் கூறப்பட்டுளது. தன் மகள் மேன்மைத்தன்மைக்கிரங்கலுமாம்.

ஜ்ஞாநதசையில் தம்பேச்சு, ப்ரேமதசையில் பெண்பேச்சு. ப்ராப்யத்வரை
தலைமகள். ஸம்பந்த ஜ்ஞாநம்தோழி. உபாயத்வாத்யவஸாயம்தாய். எம்பெருமா
னோடிவ்வாத்மாசேருகைக்கு ஸம்பந்த ஜ்ஞாநம் ஆவசியகமாகையாலே அதைத்தோ
ழியென்கிறது. இருதலையும் கலக்கச்செய்வது தோழியிறே. தலைமகள் தலைவன்
பாடே அதிமாத்ரப்ராவண்யத்தாலே அவனிருந்தவிடத்தே போவதாக உறுப்படா
நின்றால், 'அவன் வருமளவுபார்த்திருக்கையல்லது இதுநம்குலவழக்கன்' றென்பது
தாயின் கார்யமாகையாலே ப்ராப்யத்தின் போக்யதாதிசயத்தாலே க்ரமப்ராதிபற்
றாமே முறுகினவளவிலே 'ஸாத்யோபாயபரிக்ரஹமுகேந ஸித்தோபாயவசீகாரம்
பெற்ற நமக் கினியொருவிளம்ப ஹேதுவில்லாமையாலே அவன்தானே வந்து
கொடுபோமளவும் பதறாதிருக்கவேண்டும், இங்ஙனே மேல்விழுவது ப்ரபந்நகுல
மர்யாதைக்குச்சேரா' தென்று நிவர்த்திப்பிக்குமதான உபாயத்வாத்யவஸாயத்
தைத்தாயென்கிறது. 'இன்றேயிசையிலிணையடிசேர்ப்பரினிப்பிறவோம் நன்றே
வருவதெல்லாம் நமக்குப்பரமொன்றிலதே' என்றிறேப்ரபந்நன் இருக்கக்கடவது
க்ரமப்ராப்தியளவுமாறியிருக்கமாட்டாதே கிட்டியல்லதுதரியேன் என்று பதற்றத்
தையுண்டாக்குமது ப்ராப்யத்வரையாகையாலே நாயகவைலக்ஷண்யத்தையுணர்ந்து
குலமர்யாதையைப்பாராதே மேல்விழத்துடிக்கிற தலைமகளென்கிறது. தர்சனஹே
துவாகையாலே ஜ்ஞாநத்தைக்கண்ணென்கிறது. மேல்விழுகைக்கு ஹேதுவாகை
யாலே பக்தியைமுலையென்கிறது. கார்ச்யத்தையிட்டு வைராக்யத்தை இடையென்
கிறது. கரணநியமநரூபதாந்தியை வளைவையிட்டுப்புருவமென்கிறது. இது நம்மா
சார்யர் அருளிச்செய்யும்படி. வெவ்வினைதீர்-அதிக்ரூரமான கர்மங்களை நீக்கவல்ல
தான, மருந்தொன்று-ஓர் ஔஷதம், 'யத்கொடிநியாதா நாஹவெவ
நாஶஂ' இத்யாதிகளில் சொன்னவடைவில் தீராதநோய்களாவன வினைநோய்
றே. 'தீராதவினையனைத்தும் தீர்க்குங்கோயில்.' 'வினையேன்வினைதீர்மருந்தானாய்.'
வெற்புடன் ஒன்றி - மலையோடேசேர்ந்து, அன்றிக்கே: சேர்ந்து விளங்காநின்ற
அயிந்தையில்-அயிந்தைமாநகரில், 'மாமலையிலுள்ள மருந்தே பிணிதீர்க்கும்' என்று
தமிழாள்பேச்சு. ஒன்று - நிஸ்ஸமாப்யதிகம். அற்புதமாக-ஆச்சர்யதயா விலக்ஷண
மாக, பத்யநியம காலநியம ப்ரமாண நியமாதிகளின்றியே போஜநம்பண்ணவேண்டு
மென்றில்லாதே 'சிந்திக்கத்தித்திக்கும் செவ்வாய்த்துவர்த்துப்பாம்புந்திக்குளேயின்
புளிமேவும் நந்தம் கருவரங்கங்கைத்தழலுங் காவிரியினூடே திருவரங்கத்தேவன
ருந்தேன்' என்கிறமுறையிலே விலக்ஷணமான மருந்து. ஆகையாலே ஸர்வரும் விஸ்
மயிக்கலாம்படியென்கை. அமர்ந்தமை-நிலைநின்றமையை, ஸததோபபோசேபி ஸக
லோபயோகேபிகலயாபிவைகல்யமில்லாமேநிலைநின்றமையையென்கை. கேட்டு—
அருள்வேண்டிநிற்க-பகவத்கடாக்ஷத்தை நாம் ப்ரார்த்தித்துக்கொண்டிருக்கச்செய்
தே, ஔஷதஸேவைபண்ணும்போதும், 'வைத்யோநாராயணோஹரி:' என்றிறே
சொல்வது. 'நாராயணம்ஸரதரோஹ்யநயாகாஃ நாராயணாத
தரம்நஹிகிஞ்சித்வஸ்தி' என்றிறே லோலம்பன் வைத்யஜீவநம் தலைக்கட்டிற்று. இம்
மருந்தினாலே நம்நோயும் நம்மவர்நோயுமெல்லாம் தீரும்படிஅவன் அருள்புரிவானோ
வென்றுநாம்வேண்டிக்கொடுநில்லாநின்றோம். பற்பித்யாதி. பற்பென்றுபத்மம். இல்
லென்றுவீடு. கம்பீராம்பஸ்ஸமுத்பூத ஸம்ம்ருஷ்டநாள ரவிகரவிகஸித புண்டரீக
தளாமலாயத ததீய நயநஸத்ருசமான திருத்தாமரை யாகிற வாஸஸ்தானத்தை,
அன்றிக்கே, இல்லென்று ஏழனுருபாய் பற்பில் என்றுவேற்றுமைமயக்கம். தாம
ரையை யென்கை. மறந்த-மறந்தவளான, அகலகில்லேன் என்று வைத்து திருமா
ர்பிலே நித்யவாஸம்பண்ணுகையாலே தாமரையை மறந்தாளாயிற்று. இருப்பதும்

தாமரை, காற்கடைக்கொண்டதும் தாமரை, பார்ப்பதும்தாமரை, பார்க்கப்படுமதும் தாமரை, தரிப்பதும்தாமரை, அணைப்பதும்தாமரை, மறந்ததும் தாமரை. செய்யாள்படி - பெரியபிராட்டியின்படிகளை, படி - ப்ரகாரம். காட்டிய - எல்லோருக்கும் காட்டியதான, இவள்படியே பெரியபிராட்டியாரின்படியென்று எல்லோருமறியும்படி ஸ்வாநுஷ்டாநமுகேந காட்டிக்கொடுத்தவள் இவள்ஒருவளேயாயிற்று. பண்புடை - ஸ்வபாவத்தையுடைய, 'பின்னைகொல் நிலமாமகள்கொல் திருமகள்கொல் பிறந்திட்டாள்.' பற்பினித்யாதி. பிறந்தகத்தமறக்கையாலே பெரியபிராட்டியை யொத்தாளென்கிறாள். அன்றிக்கே, பற்பினமர்ந்த வென்றுபாடமாய், திருமார்வத்தில் நிலைநின்றுவஸிக்குமென்று பொருளாய் படிகாட்டியவென்று தத்வத்பாவாபேக்ஷையைச் சொல்லுகிறது என்னுமாம். 'இல்லம்வெறியோடிற்றாலோ என்மகளை யெங்கும்காணேன்' என்று நானலற்றும்படி பண்ணப்பாரியாநின்றாள். எம் - எமது, விற்புருவக்கொடிக்கு - மன்னியசீர்மதனன் கருப்புச்சிலைபோன்ற புருவமுடைய வல்லிநுடங்கிடைக்கு, அன்றிக்கே. புருவமுடைய கொடிபோன்ற பெண்பிள்ளைக்கு, அன்றிக்கே: வில்போன்ற புருவக்கொடியுடையாளுக்கு, ஓர் - அத்விதீயதயாவிலக்ஷணமான, விலங்கா - பரிஹரிக்கவொண்ணாத, மயல் - மோஹத்தை, பெற்றனம் - யாமடைந்தோம். நாம் அருள்வேண்டி நிற்கச்செய்தே நம்குலக்கொழுந்து மோஹமுறப்பெற்றோம். இப்படியும் ஓர்மருந்தே! நாம் குணம்வேண்ட நம்மவர்க்கு மையனூட்டவற்றே. அன்றிக்கே: விலங்காமயல் - நிகளமான மோஹம். ஸம்ஸாரகாராக்ருஹத்தில் நின்றும் பேர்ந்து போகவொட்டாதநிகளம். 'ஸத்ரும் ஸவௌ வாரணமேஸ நாய வைகுண்டவாஸே நமே ஹிஸ்ருஷ:' என்றிறேபேச்சு. அர்ச்சாவதாரத்தி லீடுபாடு. பிள்ளான் ஸூக்தியை ஸ்மரிப்பது. 'இங்குற்றை அநுபவத்திலும் காட்டில் அங்குப்போய் அநுபவிக்கை தண்ணியதென்றிருந்தீராகாதே' யென்று அருளிச்செய்தாரிறே.

பெற்றனைநீயே மற்றுளதெல்லாம் பெறுவதுநின்னை உறுவதுகொள்வார், நின்னலன்றி மன்னாரின்பம் நின்பொருட்டு நீயென்பொருட்டில்லை, நின்னுருநின்று மின்னுருத்தோன்றும் நின்றனக்குநிகர் நின்னடியடைவார், நின்பாலன்றியன்பாலுய்யார் வாரணமழைக்கவந்தகாரணமே. (௧௦)

கீழ் 'விலங்காமயல்பெற்றனமே' என்னும்படிநின்றது. இனித்தான் முகங்கொடாதொழியில் ஸம்யக்பவிஷ்யதி ததச்சரண கதாநாம் ஸம்ரக்ஷிதேதி பிருதம் வரதத்வதீயம், என்றாமிறே. தேவநாயகன் தன்னைக்காட்டி அநுபவிப்பித்தான். உன்மழலைச்சொல்கேட்க விருப்பமானேனென்றான். நான் சொல்லலாவதென்தான்என்றார். சங்குதுடைத்தான், மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வாரைப்போலே அநுபாவயிதாவை அநுபவிக்கிறார். 'வ்யூஹவ்யூஹ ஸம்ஸ்வதந்த்ரா.'

வாரணம் - கஜேந்த்ரனானவன், அழைக்க - மொய்மாம் பூம்பொழில் பொய்கையிலே முதலைச்சிறைப்பட்டு ஆதிமூலமே யென்றழைக்க, வந்தகாரணமே - நானேமூலமென்று வந்துதோன்றிய காரணவஸ்துவே, யானை மூலமேயென வோலமிட எங்களுள்யாருமில்லை என்றகன்றார்கள் தேவர்கள். நானோ இதற்கு என்றகன்றான் நக்கன். நானன்றென்று புறமிட்டான் திசைமுகன். நானேயென்றுவந்தான் கடல்வண்ணன். அவனேயிறே ஸகலகாரணன். நீயே—, மற்றுளதெல்லாம் - மற்றுள்ள சேதநாசேதநங்களை, பெற்றனை - ஸ்ருஷ்டித்தாய். அன்றிக்கே: மற்றுளதெல்லாம் - உன்னோடொக்க நாட்டார்சங்கிக்கு முன்பேரன் பிள்ளைதுடக்கமாக எல்லாவற்றையுமென்னுதல். பெற்றனை - ப்ராபித்தாய், கரணகளேபர ப்ரதாநாதிகளைத் தன் பேறாகப்பண்ணுகையாலே இவற்றை யெல்லாம் ஆத்மலாபமென்றுநினைத்து லபித்தாயென்னுதல். உறுவது - ஸ்வரூபாநுரூபமானபலத்தை, கொள்வார் - கொள்ளுமவர், பெறுவது - ப்ராபிப்பது, நின்னை - உன்னை, 'நாதோஸ்த்ருண மந்யதந்யதபிவா' என்றுவைத்து ஸாராஸாரவிவேகம் பண்ணின பரமைகாந்தி ஸார்வபௌமர்க்கு நீயே ப்ராப்யம். நீயே ப்ரார்த்த்யம். 'நிரவதி ஸஸுதஸ்த்வதீய

உஸ ஹஷ விஜ்ஞாவதராஹிரவ்யா | ஸத்யஂஸெவாரணமெஸவநாய மெவகஂவாஸெவிநஹெிஷி:' என்பதிறே இவர்படி. அன்றிக்கே: உறுவது - விளம்பாக்ஷமனுய் அசக்தனுன தன்ஸ்வரூபத்துக்கநுரூபமான உபாயவிசேஷத்தை, கொள்வார் - பரிக்ரஹித்தவர்கள், ப்ரபந்நரென்கை. பெறுவது நின்னை - உபாயாந்தரஸ்தாநத்திலே உன்னைப்பெறுவார்களாயிற்று. அவர்கள்; இன்பம்-ஸுகத்தை, பரமபதத்தையும், நின்னுலன்றி - உனக்குப்புறம்பாமன்று, மன்னுர்-அடையார்கள், 'நஜெவஜொகாகூஷணஂ நாஜரகுவஹஂவநெணெ| ஜெனஸ்யஂவாவிஜொகா நாஂ காஜெயெநகுயாவிநா.' தன்னுடைச் சோதியிலும் அவர்களறியில் ஒட்டார்களென்ருயிற்றுக்காணும் மாயங்கள் செய்வது. தூபதூமம்மறைவாமன்றிறே வருவதும்போவதும். "சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டி யந்தூபந்தராநிற்கவே அங்கோர் மாயையினுலீட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப்போந்து மிலேற்றுவள்கூன்கோட்டிடை யாடினை குத்தடலாயர்தங்கொம்பினுக்கே" ஸ்நாநாஸநமும் அலங்காராஸநமும் தன்னுடைச்சோதி. போஜ்யாஸநம் திருவாய்ப்பாடி. நீ-ஸ்வாபிமதாநுரூப ஸ்வரூபரூபகுண விபவைச்வர்யாதி விசிஷ்டனுன நீ, நின்பொருட்டு - உனக்காகவே, என்பொருட்டில்லை - எனக்காகவில்லை, 'வரதஸகலமேதத் ஸம்ச்ரிதார்த்தம் சகர்த்த' என்றுநீதான் எனக்காகச் செய்தாயென்ருலும் அதுதானு முனக்கேயாகையாலே இப்படி சொல்லுகிறது. 'உவாநெதஸதாஷிதி நியஜநாஜெஷ்டிஷிவிதெள ஷஜஂஜிஸ ஸ்ரீஜாநு' இறே. யார்கார்யம்செய்தோ மென்றிருக்கிருய், உன்கார்யமாயிற்று நீ செய்தது. உபாயதசையில் ஸ்வார்த்தகர்த்ருத்வாதி ப்ரமநிவ்ருத்திபோலே பலதசையில் ஸ்வார்த்தபோக்யத்வாதி ப்ரமநிவ்ருத்தி யாவச்யகமென்றதாயிற்று. நின்னுருநின்றும் - உனதுரூபத்திலிருந்து, மின்னுரு - மின்னல்போலே அல்பாஸ்திரமான ஸ்வரூபத்தையுடைய சராசரம் முற்றவும், தோன்றும் - ஆவிர்பவிக்கும். நீதான் கொண்டல்வண்ணனிறே. மின்னல்தோன்றுவது கொண்டலிலேயிறே. அங்கேயேலயிப்பதும். அதுபோலே உன்னில்தோன்றி உன்னில்லயிக்குமென்கை. நாம் ஸமாதிகரஹிதரென்றிராதே கொள்ளாய். அதிகரில்லையாகுலும் ஸமராவார்பலருண்டுகாண். அவர்களாரென்னில்; நின்னடியடைவார் - உனது சரணாரவிந்தங்களையடைபவர்கள், நின்தனக்கு - உனக்கு. நிகர்-துல்யர். 'சுவஸஜெஹாகுஜெதஂ' என்றுவைக்கையாலே. 'யதுதஂமெரதஂமெஸவுணமெதஜஹ்யெதஹெயஂ' என்றதிறே. 'நதாநாஂயதுவொநதி:.' கைங்கர்யப்ரதிஸம்பந்தித்வத்தில்தான் போக்யத்வத்தில் தான் உத்தேச்யத்வத்தில் தான் ஸம்ஸாரோத்தாரணத்தில்தான் உன்னேடொப்பர் அவர்கள். 'தன்னையெந்நாளும் வணங்கித்தொழுவார்க்குத் தன்னையேயொக்கவருள் செய்வார்.' அவர்களுணும் வ்ருத்தியுமிதுவென்கிருர். நின்பால் - உன்திறத்தில், அன்பாலன்றி - பக்திரூபமான ப்ரீதியாலல்லது, உய்யார் - உஜ்ஜீவியார்கள். நீதான் உன்னடியார்திறத்து ப்ரீதியோடே நின்று அதொழிந்தவன்று உண்டதுருக்காட்டாதே நிற்குமாப்போலே அவர்களும் உன்திறத்து ப்ரீதியல்லது ஆத்மதாரணமில்லாதவர்கள். 'ஜஜஜூகுஹகுஷ வீதிரஹயிகாஹவெதீ' என்ருயிறே. 'யநூஹஒதஂக்ஷணஂவாவி வாஸஜெவொநவிதுெதெ | ஸாஹாநிஸநூஹஹிஜஂ ஸாஹுாஜிஸாவவிகியா' என்ருயிற்றிவர்கள்படி. வேற்றுமைமாலையெனுஞ் சொல்லணி. (௪௦)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

திருமகள்புதல்வன்ருதயசூரித் தாளிணைச்சென்னியிற்பூண்ட
திருவுடைத்தாதவேங்கடவரதக் குருவரன்றநயனுய்த்தந்தை
திருவடியொன்றிக்கசடறக்கலைகள் கற்றவன்கருவினிற்றிருவன்
திருமலைதாதக்கவிவரன்மொழிந்தான் மும்மணிக்கோவையின்பொருளே.

மும்மணிக்கோவையாவது முப்பதுப்பாட்டுக்கள் அந்தாதித்தொடராக வேண்டுகையாலும் அந்தாதித்தொடர்ப்பாமுடிவு துவக்கப்பாவின் முதலாக வேண்டுகையாலும் இங்குபத்தேபாக்கள் காண்கையாலும் அருள்தருமென்று துவக்கியது சாரணமேயென்று முடிகையாலும் இடையடுத்த பந்துகழலம்மானை யூசலேசற்பாக்கள் லோபித்துக்கிடைக்கையாலும் அவற்றுடன்சேர இப்ரபந்தத்தின் பின்னிருபதுபாக்களும், லுப்தமாயிருக்கிறனவென்று சண்டுகொள்வதென்று நம்மாசார்யன் அருளிச்செய்வர்.

மும்மணிக்கோவை வ்யாக்கியானம் முற்றிற்று.

ஸ்ரீமதேநிகமாந்தமஹாதேசிகாயநமஃ.

ஸ்ரீஃ

ஸ்ரீதேவநாயக பரப்ருஹ்மணேநமஃ.

தேசிகன்திருவடிகளேசரணம்.

நவரத்நமாலை வியாக்கியானம்.

கோடிகன்னிகாதானம் திருமலைதாததேசிகன் செய்தருளியது.

சந்தவிருத்தம்.

மலர்மகள்மணாளனைப் புகழ்ந்துபாடுமாறனன்
மலர்ப்பதத்தனுக்கமைந்த வாகமாந்தசூரிவாய்
மலர்ந்தநூல்கள்விள்ளநன்குரைத்தநாவின்வீறுடை
மலர்மகள்புதல்வனைப் பணிந்துபோற்றியேற்றுவாம். (௧)

கலித்துறை.

தாமரைமலரின்மங்கை தனியுறையகலன்பாதத்
தாமரைச்சிரமேற்கொண்ட மாறனார்தமிழ்மறைக்குத்
தாமுரைசெய்தபிள்ளான் திருக்குலத்துதித்தோமென்று
நாமுரைசெய்யப்புக்கோம் நவமணிமாலையிற்கே. (௨)

நவரத்நமாலையாவது 'அந்தாதித்து வெண்பாவாதிய, பாவும் பாவினமுமாக வொன்பது, செய்யுளணிபெறச் செப்புவததுதான், நவமணிமாலையாநாடுங்காலே' என்கையாலே வெண்பாவாதியாக பாவும் பாவினமுமொன்பது பாக்கள் அந்தாதித்துப்பாடுவதாம். ஆனாலும் அந்தாதித்தலும் வெண்பா முதலாதலுமின்றியே பலநவமணிமாலை காண்கையாலே அது இன்றியமையாத விலக்கணமல்லவென்பது ஸாரம்.

ஆச்ரிதர் இழியுந்துறை திருவடிகளாகையாலே அதை அநுபவிக்க ப்ராப்தமாயிற்று. இவன்தான் அதை விட்டவ்வருகுபோவானல்லனிறே. 'நூபுரேத்வபிஜாநாமி நித்யம்பாதாபிவந்தநாத்,நாஹம்ஜாநாமி'இறே. மேலையார்செய்வனகள்என்று அதுவேயாயிற்றுவழி பின்னானார்க்கும். 'துயரறுசுடரடி தொழுதெழென்மனனே' என்பாரும், 'ஓரடியுஞ்சாடுதைத்த ஒண்மலர்ச்சேவடியுமீரடியுங் காணலாமென்னெஞ்சே' என்பாரும் 'பெருந்தவத்தோர்காண்பரோ காரோதவண்ணன்கழல்' என்பாரும், 'இன்றேகழற்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன்' என்பாரும் 'தாங்கடத்தும் தன்மையான்தாள்' என்பாரும், சேவடி செவ்விதிருக்காப்பு' என்பாரும்' த்வத்பாதாரவிந்தயுகளம் சரணமஹம் ப்ரபத்யே' என்பாரும், ஆயிறே முன்னோர்கள் போனபடி. ஆகையாலே இவரும் 'அடியவர் மெய்யர் மலர்ப்பதங்களே' யென்பாரானார்.

ஒருமதியன்பருளங்கவர்ந்தன உலகமடங்கவளர்ந்தளந்தன
ஒருசடையொன்றியகங்கைதந்தன உரகபடங்களரங்குகொண்டன
தருமமுயர்ந்ததிதென்னநின்றன தருமனிரந்ததிசைந்துசென்றன
சகடமுடைந்துகலங்கவென்றன தமர்களருந்துமருந்திதென்பன
திருமகள்செய்யகரங்களொன்றின திகழ்துளவுந்துமணங்கமழ்ந்தன
செழுமணிகொண்டசிலம்பிலங்கின சிலைதன்னிலன்றேரணங்குமிழ்ந்தன
அருமறையந்தமமர்ந்தபண்பின அயன்முடிதன்னிலமர்ந்துயர்ந்தன
அருடரவெண்ணியயிந்தைவந்தன அடியவர்மெய்யர்மலர்ப்பதங்களே. (க)

ஏகாந்திகளாய்த்து ஒருமதியன்பர். ஐகாந்திகாத்யந்திகபரபக்தி யென்பதிறே. ஏகாவலம்பியாயுள்ளமதியையும் அன்பையும் உடையவர்கள். அவர்களாகிறார் அயர்வறுமமரர்களும் - பராங்குசபரகாலாதிகளும் நாதயாமுனயதிவராதிகளும், பரமைகாந்தி ஸார்வ பௌமர்களது திருவுள்ளத்தைக் கைக்கொண்டதும் திருவடிகள். சூட்டுநன்மாலைகள் என்னும்படியாயிறே அங்குற்றைப்பரிவு. 'பரிஜனபரிசாரிகாபரிசரிதசரணயுகள' இறே. 'அடிச்சியோந்தலைமிசைநீ அணியாய் ஆழியங்கண்ணாவுன்கோலப்பாதம்' என்றும், 'தளிர்புரையுந்திருவடி யென்தலைமேலவே' என்றும், 'மதுஜிதங்க்ரிஸரோஜ தத்வஜ்ஞாந' என்றும் 'தவாம்ருதஸ்யந்திநி பாதபங்க்ஜே' என்றும் 'பாதாரவிந்தயுகளம் சரணமஹம்ப்ரபத்யே' என்றுமிறேஇங்குற்றைப்படிகளவில் நிலைநின்றவையாகையாலே உளங்கவர்ந்தன வென்கிறார். இப்படி 'வேறொன்றும் நானறியேன்' 'மறவேனினி நின்பதமே' என்று சொல்லுமாப்போலே 'உன்னடிசேர்வண்ணமருளாய்' என்பாரளவன்றிக்கே அபேக்ஷியாதார் தலையிலும் தன்பேறாக வடியிட்டபடி யென்தானென்கிறார். முன்னம் குறளாய் வந்து 'நிலம் மாவலிமூவடி' யென்று இரந்து அங்கேநின்றாழ்கடலும் மண்ணும்விண்ணும் முடியவோங்கிவளர்ந்து ஸகல புவநங்களையும் அளந்ததும் திருவடிகள். தாளாலுலகமளந்தவசைவேகொல்' என்றின்றளவும்வரஅயர்க்கும்படியிறே அளந்தது. இப்படி ஒருக்கால் அடியிட்டுப்போன வன்றும் தீர்த்தம் ப்ரஸாதித்தபடியை அநுஸந்திக்கிறார். அன்றிழந்தாரும் இழக்கக்கடவர்களன்றென்று பார்த்து பாவநதமமான கங்கையை ப்ரஸாதித்ததும் திருவடிகள். 'பாவநார்த்தம் ஜடாமத்யே யோக்யோஸ்மீத்யவதாரணாத்' என்றுவைத்து ததீயகம்பீர நிபாதஸஹநஸமர்த்தமாய் அத்விதீயமான சிவன் சடையில் நின்று ஏகீபவித்து ப்ரவஹிக்கும் கங்கையைத்தந்தன- கொடுத்தன. 'குறைகொண்டு நான்முகன் குண்டிகை நீர்பெய்து, மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்திக், கறைகொண்டகண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினான், அண்டத்தான் சேவடியையாங்கு' என்னக்கடவதிறே. 'தீர்த்தேநமூர்த்நிவித்ருதேந சிவச்சிவோபூத்.' கங்கோத்பாதநம் ஒரு திருவடியின் கார்யமானாலும் அவ்விஷயத்தில் இரண்டும் ஏகாபிப்பிராயமாகையாலே தந்தனவென்கிறார். மிதுநசேஷர்களிறே. 'உபயாதிஷ்டாநஞ்சைகம் சேஷித்வம்' என்றதிங்கும் ஒக்கும். மேலே ஆச்ரிதவிரோதிநிரஸந சீலதையை அநுஸந்திக்கிறார். துஷ்ட நிக்ரஹத்தில் திருவுள்ளம் பதறிப்பாயும்படி. காளியனென்றும் நாகராஜனது படங்களைத்தம்லீலாந்ருத்தங்களுக்கு ரங்கஸ்தலமாகக்கொண்டன. அநுகூலப்ரதிகூலவிபாகமற வெல்லார்தலையிலு மடியிட்டப்ரஸங்கத்திலே ப்ரதிகூலர்தலையில் மாறிமாறியடியிட்டபடி ப்ரஸ்துதமாய்த்து. த்ரிவிக்ரமாபதாநத்துக்கு விஜயத்வஜமான கங்காப்ரஸ்தாவத்திலே நிலையிலச்சினையிட்டது ஸம்ஸ்துதமாய்த்து. '[illegible]' என்றானிறே. இப்படி அநிஷ்டநிவர்த்தகத்வம் மாத்ரமன்றிக்கே இஷ்டப்ராபகத்வமுமிவைகளுக்குண்டாய்த்து, உயர்ந்தது-உத்தமமானதருமம், இது வென்னலாம்படி நின்றன. அலௌகிகச்ரேயஸ்ஸாதநமிறே தர்மம். 'தஸ்யஸ்வாத்மப்ரதாநேது ஸாதநம்ஸ்வபதத்வயம்' இறே. 'உபாயத்வமிஹஸ்வாமிபாதயோரபிஸம்ஹிதம்.' இப்படியானபரத்வத்துக்குநிறங்கொடுக்கவற்றான ஸௌலப்யம்

சொல்லுகிறது. தருமபுத்திரன் அபேக்ஷித்தவாறே அவனுக்காக தூத்யத்தை அங்கீகரித்துக் கடுந்தூரம் கடந்து நடந்தன, கழுத்திலே ஓலைகட்டித் தூதுபோவென்னலாம்படியிறே தன்னை அவர்களுக்கு பவ்யனாக்கிவைத்தது. தூதுநடந்த தன்னேற்றம் திருவடிகளுக்கேயாயிற்று. இப்படி பருவம் நிரம்பினவாறே அன்றிக்கே தன்னைத்தான் அறியமாட்டாத சிறுபருவத்திலும் தன்னை நோக்கிக்கொடு நின்று விரோதி நிரஸநம்செய்து ஆச்ரிதர்க்கு உபகரித்தபடி சொல்லுகிறது. சகடம்-ரக்ஷார்த்தமாகக்காவல்வைத்த சகடந்தானே அஸுராவேசத்தாலே ஊர்ந்துநலியவர அது தானே உடைந்து முறிந்து விழும்படி நிமிர்ந்தன. அத்தாலே வெற்றிபெற்றன. 'பொன்றச்சகடமுதைத்தாய் புகழ்போற்றி' இறே. இப்படியானகுணங்கள் காநநகௌமுதி ஆகாமே ஆச்ரிதர்க்கு ஸர்வாவகாஹநார்ஹமானமைசொல்லுகிறது. பக்திபாராவநதர்கள் ஸாதரமாக ஸேவிக்கும் அபர்யாப்தமான அமிருதம் இவையென்னலாய்த்தன. போக்யத்வம் திருவடிகளுக்கே. அபர்யாப்தியும் இவற்றின் அநுபவத்திலே. இவ்வளவுக்கும் அடிலக்ஷ்மீஸம்லாளநம் என்கிறது. பகவந்நாராயணாபிமதாநுரூபஸ்வரூபரூப குணவிபவைச்வர்ய சீலாத்யநவதிகாதிசயாஸங்க்யேய கல்யாணகுணகணையான மலர்மகள் கூசிப்பிடிக்குமவையாகையாலே செய்ய தாமரைக்கைகள் பதிந்துள்ளன. 'வடிவிணையில்லாமலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி' இறே. இப்படி நிறம்பெற்றன. அதன்மேலே மணம்கொண்டபடி. திகழ்-தண்ணந்துழாய் மணம் கொண்டன. தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்ததண்ணந்துழாயுடையம்மானிறே. மேலே அலங்காரம். பல பலவேயாபரணம் இறே. நிர்துஷ்டரத்நகசித நூபுராலங்க்ருதங்கள். போக்யத்வம் பூஷணத்தாலே அதிசயிதமாகாநின்றது. மேலே ஆச்சர்ய சேஷ்டிதம். ஒரு சிலையிலே ஒரு கன்னிகையை உமிழ்ந்தன. உத்கிரணம்பண்ணின. 'யோஷித்பூதத்ருஷந்தி.' மேல் அபரிச்சேத்யமஹிமத்வம். 'யதோவாசோ நிவர்த்தந்தே' என்று வைத்து வேதங்களே சொல்லத்துடங்குமவையாயிற்று. ஸம்சயாநர்க்கு துர்ப்போதமான வேதாந்தங்களில் ப்ரதிபாதிதமான ஸௌலப்ய ஸௌசீல்யாதிகுணங்களையுடையன. ஜகத்ஸ்ரஷ்டாவான சதுர்முகன் ஸ்வாபேக்ஷித ஸித்திக்காகப் பணிகையாலே அவன் பக்திக்குமெய்ச்சி அவனது சிரத்தில் படிந்து ஆச்ரிதர்க்குத் தலையாய் உயர்ந்தன. 'த்ரிவிக்ரமத்வச்சரணாம்புஜத்வயம் மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி' என்றிறேயன்பர்படி. இவை யெல்லாம் ஒரு தேசவிசேஷத்திலே ஒரு கால விசேஷத்திலே யென்னாய் இருள்தருமாஞாலத்துள்ளாரும் பிற்பாடரும்இழக்கவொண்ணாதே எல்லாருக்கும் அருள்புரிய ஸங்கல்பித்து நடுநாடானதிருவஹீந்திரபுரத்தில் ஆவிர்ப்பவித்து நித்யஸேவ்யமாயிராநின்றன. அவர்தாம் அன்பர்க்கு மெய்யன். 'மெய்யனாகும்விரும்பித்தொழுவார்க்கெல்லாம் பொய்யனாகும்புறமேதொழுவார்க்கெல்லா' இறே. மலர்ப்பதங்கள். பொன்மலர் நாறினாப்போலே யிருக்கையாலே இன்னமலர்என்னாதே மலர்என்று பொதுவிலே அருளிச்செய்தபடி. அடியவர் மெய்யர் மலர்ப்பதங்கள். வேறோருபமானம் சொல்லவொண்ணாமையாலே தானே தனக்கொத்த திருவடிமலர்கள். ஒரு மதியன்பருளங்கவர்ந்தன. இத்யாதி. (௧)

மகரம்வளருமளவிற் பௌவமடையவுற்றலைத்தனை
   வடிவுகமடமெனவமர்ந்து கிரிதனைத்தரித்தனை
மலியுமசுரனுரமிடந்து வசுதைபேர்த்தெடுத்தனை
   வலிகொளவுணனுடல்பிளந்து மதலைமெய்க்குதித்தனை
பகருமுலகமடியளந்து தமர்களுக்களித்தனை
   பரசுமுனிவன்வடிவுகொண்டு பலவரைத்துணித்தனை
பணியவிசைவிறிசைமுகன் றன்முடிகள்பத்தறுத்தனை
   படியுமுருவில்வருபிலம்ப வசுரனைத்தகர்த்தனை
நகரந்துவரையெனவுகந்துகிரிதனைத்தரித்தனை
   நடமொடியலும்பரியில்வந்துநலிவறுக்கவுற்றனை
நலியும்வினைகள்செகுமருந்தினலமுறைந்தவெற்பினை
   நனுகுகருடநதிகிளர்ந்தபுனலுகப்பில்வைத்தனை

அகரமுதலவுரைகொண் மங்கைகணவனுக்களித்தனே
அடையும்வினைதைசிறுவனுய்யவருள்கொடுத்துயர்த்தினே
அடியுமணையுமெனுமனந்தனடிதொழக்களித்தனே
அவனிமருவுதிருவயிந்தையடியவர்க்குமெய்யனே. (உ)

இனி ஆச்ரித ரக்ஷணார்த்தமாக திருவவதரித் தருளின படிகளை அநுஸந்தித்தினிய ராகிருர். ‘பரித்ராணாய ஸாதூநாம் விநாசாய ச துஷ்க்ருதாம்। தர்மஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே’ என்றருளிச்செய்கையாலே மூனறுங் கூட அவதாரங்களுக்கெல்லாம் ப்ரயோஜநம் ஆனாலும் ஓரோ ரவதாரத்திற் கோரொன்றிலே நோக்கென்று திருவுள்ளம் பற்றி அநுஸந்திக்கிற படியிது. மகரம். ‘[illegible]’ இத்யாதிப்படியே பரத்வத்தைமறைக்கவேண்டி மத்ஸ்ய ரூபியாய் வளர்ந்தருளும்போதும் ஆச்சர்ய சேஷ்டிதனுகையாலே ஸமுத்ரப் பரப்படங்கலும் வியாபித்து அலேக்கச்செய்தனே. வேதங்கள் முழுகிப் போயிருக்கையாலே அதைத் தேடக் கருதி கண்ணிமைக் கொட்டாத ரூப மெடுத்து தேடுகிறவன் ஜலத்தை அலேத்துக் கலக்குவது போல கலக்கினுயிறே யென்கை. பக்த ரக்ஷணத் திலுள்ள ஆதராதிசய மிது. பௌவ்வம் - ஸமுத்ரம். வடிவு. ஸகலஜக தாதாரமான கூர்மரூபத்தோடு ஸ்திரப்ரதிஷ்டிதனுய் மந்தரமலேயைத் தாங்கினே. அம்ருதமதநத்தினன்று மலேதன்னே மத்தாவரவாற் சுழற்றும்போதைக்கு அது முழுகிப்போகாமே ஆமையாய்த்தாங்கினே. பக்தரக்ஷண ப்ரதிஜ்ஞா பரிபாலனே காக்ர்யமிது.மலியுமசுரன். ஊன்மல்கு மோடு பருத்த ஹிரண்யாக்ஷனென்னு மசுரனது மார்பைப் பிளந்து அவனேக் கொன்று அண்டபித்தி யோடொட்டிக்கிடந்த பூமியைப் பேர்த்து எடுத்தருளினே. ஸ்ரீவராஹாவதாரம். துஷ்டநிக்ரஹமும் ஆச்ரிதபாலனமும். வலிகொள். அநிதர ஸுலப வரப்ல மத மத்தனுன ஹிரண்ய கசிபு வென்னும் அசுரனது உடலேப்பிளந்து அவன் குமாரனுன ப்ரஹ்லாதன் வாக்கியத்தை ஸத்யமாக்குகைக்காக அப்போதே விலக்ஷணமான நரஸிஹ்மரூபத்தோடே ஸ்தம்பத்தில் தோன்றினுய். ஸாதுபரித்ராணம்ப்ரதாநம். துஷ்க்ருத்விநாசம் ஆநுஷங்கிகம். தைவிகபைத்ருக மாநுஷ்யகாதி ஸகலகர்மங்களும் ஸ்வோத்தேசேந பண்ணக்கடவதென்று கட்டளேயிடுகையாலே ஸர்வயஜ்ஞபோக்தாவான தன்னேடு எதிரிட்ட சண்டாளனே வதம்செய்வது ப்ரதானமேயானுலும் அவன் தான் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானே டெதிரிடாமே நின்ருனுகில் உபேக்ஷித்துப் போருமவன் நீ யென்கை. ‘எங்கு முளன் கண்ணனென்ற மகனேக் காய்ந்து, இங்கில்லேயா லென் றிரணியன் றூண் புடைப்ப, அங்கப்பொழுதே அவன் வீயத்தோன்றிய, சிங்கப்பிரான் பெருமை யாராயுஞ் சீர்மைத்தே’ இறே. பகரும். த்ரைலோக்யாதிபதியாய் நின்ற மஹாபலிக்கு வசமாயிருந்த உலகமூன்றையும் யாசித்து வாங்கி அளந்து வசங்கொண்டு பக்தர்களுக்குக் கொடுத்தருளினே. இது ஸாதுபரித்ராணம். நிக்ரஹமும் பலிக்கு அநுக்ரஹமிறே. அமரர்களுக்களித்தனே யென்றும்பாடமுண்டு. பரசுமுனிவன். அஸஹநமுனியென்று பெயர்கொண் டதினுலேயே சேராச்சேர்த்தி இயல்புடையனென்று ஸர்வலோகவிதிதனுன பரசுராமன் என்னும் ரூபத்தைக்கொண்டு அஸுராம்சரான அரசர்பலரை இருபத்தொருகால் துணித்தனே. இது துஷ்க்ருத்விநாசேதம்பரம். பணிய. லோகராவணனுன பையல் நீ சக்கிரவர்த்தித் திருமகனுய் வந்தபோதைக்கு ஆர்த்ராபராதியாய் ஜகந்மாதாவை வாஞ்சித்து போரப்பொலிய நலிந்து ஆத்மீயரைத் தடிந்து நெருக்கிப்பொடிபடுத்தி யிராநிற்கச் செய்தேயும், ‘[illegible]’ என்று பரமஹிதத்தை நீயே அருளிச்செய்தும் அவன் கேளாதே ‘நநமேயம்’ என்று நிமிர்ந்து நிற்கையாலே அவனது முடி பத்து மொருகொத்தென வுதிர்த்தனே. இது தர்மஸம்ஸ்தாபநாதரம். படியு முருவில். கோபால பாலகர்களோ டொத்த வுருவங்கொண்டு வந்த ப்ரலம்பாஸுரனே நிரஸநம் செய்தனே. இது பலராமாவதாரம். துஷ்க்ருத்விநாசம்ப்ரதாநம். நலியநினேந்தவன் ஸுஹ்ருத்ரூபமாய் வருகைக்கு மேற்பட்டதொரு

துஷ்கிருத மில்லையிறே. நகரம். த்வாரகாநகரம் ஸமுசிதஸ்தான மென்று திருவுள் ளம்பற்றி ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்திங்குப்பிறந்து தன் அகடிதகடநா ஸா மர்த்யம் ஸர்வலோகவிதிதமாம்படி பால்யத்தில் ஏழுநாளொருபடியாக கோவர் த்தன மலையைத் திருக்கையால் கொடையாய்த்தாங்கி வர்ஷபயத்தினின்றும் கோ கோப கோபீ குலங்களைக் காத்தருளினை. ஸாது பரித்ராண ப்ராதாந்யம். மதுரைப் புறத்தே திருவவதரித் தருளாநிற்கச்செய்தே நகரந்துவரையென்றது, சக்ரவர்த் தித் திருமகனார்க் கயோத்தியைபோலே கண்ணனுக்குத் துவரையாகையாலே. ஒருத்தி மகனாய்ப் பிறந்து என்னுமாப்போலேயிறே ஊர்விட்டேர் புக்கதும். அன் றிக்கே துவரையில் வீற்றிருந்தே தர்மஸம்ஸ்தாபநம் செய்தருளுகையாலே யென்று மாம். ஸாதுபரித்ராணம் திருவாய்ப்பாடியில், துஷ்கிருத்விநாசம் வடதிருமதுரை யில், தர்மஸம்ஸ்தாபநம் திருத்துவரையில், என்று நம்பரமாசார்யன் அருளிச்செய் வது. நடமொடு. விசித்ர ஸவிலாஸ கமநத்தோடு ஸஞ்சரிக்கும் கல்கியாய்வந்து கலிகோலாஹலத்தை அடக்கப்பாரியாநின்றாய். 'வ்ருஷாத்ரிஹயஸாதிநः' என்று அருளிச்செய்கையாலே பரியில்வந்தென்பதற்கு அச்வாரூடனாய் வந்தென்று பொ ருள் கொள்ளினு மொக்கும். 'பாவிந்யா தசயா' 'கற்கியாமின்னும்' என்கையாலே நலிவறுக்கவுற்றனை யென்றது. இவ்வவதாரம் தர்ம ஸம்ஸ்தாபந ப்ரதாநம். இப் படி செய்தருளினதும் செய்தருளத் திருவுள்ளமானதுமான விபவாவதாரங்கள் தீர்த்தம் ப்ரஸாதித்துப் போமவையாகையாலே காலவிப்ரக்ருஷ்டர்கள் இழந்து நோவுபடாமே அர்ச்சையாய் நடுநாட்டில் நிற்கும்படியை யருளிச்செய்கிறார். நலி யும். இதற்கோர் உபமை சொல்லவொண்ணாதே மேன்மேலெனக்கிளர்ந்தோங்கிப் பாதியாநிற்கும் இருவிலங்கான புண்யபாபரூப பந்தக கர்மங்களென்னும் துர்வார வ்யாதி விசேஷங்களைப் போக்கவல்ல மருந்துகளின் நன்மைக்கு இடமாகையாலே ஔஷதகிரியென்று பெயர்பெற்ற திருமலைக்குடையவனாயினை. ஆச்ரிதபீடா நிவர் த்தநாபிஸந்தியாலே ஔஷதகிரிக்கு ஸ்வாமித்வத்தை வஹித்தவன். நணுகு. கிரி யோடு சார்ந்து ஸரஸமாய்ப் பெருகிவரும் கருடநதியின் உத்தரோத்தராபிவ்ருத்தி சாலியான ப்ரவாஹஜலத்தின் பெருமையை ஸந்தோஷத்தில் வைத்தாய். ஸந் தோஷத்தோடு திருவுள்ளம்பற்றி யருளினாய். ஔஷத ஸேவை பண்ணுமவனுக் கும் ஔஷதப்ரதாநம் பண்ணுமவனுக்கும் நீர்வளம் வேண்டுமாகாதே. நாதேய மாகையாலே குணவத்தரமாயிருக்குமிறே. வேதாபஹாராதிகளிலே உதவினவனே அயிந்தையில் வந்திருந்தானாகையாலே இருவருமொருவராய்க் கொள்ள ப்ராப்தம் என்கிறார். அகரமுதல. வாக் தேவதையான ஸரஸ்வதிக்கு பர்த்தாவான சதுர்மு கனுக்கு அகாரம் முதலாக கிருபைசெய்தருளினாய். ருக்,யஜுஸ்,ஸாமம், அதர்வண மென்று முறையாகையாலே 'அக்நிமீளே' என்று ருக்வேதாதியான அகாரத்தைச் சொல்லிற்றென்கை. 'யோவைவேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை' என்றதைச்சொ ல்லவே 'யோ ப்ரஹ்மாணம்விததாதி பூர்வம்' என்றது ஆக்ஷிப்தமாம். ஆகையாலே ஜகத்காரணத்வம் சொல்லிற்றாய் 'காரணந்து த்யேயः' என்ற உபாயத்வம் ப்ரதி பாதிதமாய்த்து. அர்ச்சாவதாரத்திலும் ஆச்ரித பக்ஷபாத மிருக்கும்படி சொல்லு கிறது. அடையும். சரணகமலஸமாச்ரிதனான வைநதேயன் உஜ்ஜீவிக்கும்படியாக கிருபை செய்தருளி உச்சரிதனுக்கினாய். ஓரளவிலே பெரிய திருவடி நயினார் சர ணம்புகுகையாலே அவனைத் தன்னோடொக்க ஸர்வோபாஸ்யராக்கி வைத்தானெ ன்று புராணத்தில் சொல்லிற்று. "ஶாஸ ஸ்வா வாஹந ஶாஸநம் ஶ்ருஜோ ய ஷே விதாநம் வ்ரஜநம் த்ருயீமயः" என்றும், "வெமொதாநம் விதாநம் வ்ரஜந உநுரணம் வெஜயஷீஜயஷீ ஶித்ரும் நித ்ராஹ்ரிஶித்ரும் யு யிவிஜயவயொ யுமரியொமா நவெக்ஷ:!ஶாவொ நிஷயபூஶாவொ உநுதநயஸிஶொநிஸஹாய ஸஹாயः" என்னக்கடவதிறே. அடியும். 'செ ன்றாற் குடையா மிருந்தாற் சிங்காதனமாம், நின்றான் மரவடியா நீள்கடலுள்' என் கிறபடியே திருவடிநிலையும் திருவமளியுமான திருவநந்தாழ்வான் திருவடி தொழு கையாலே ஸந்துஷ்டனாயினை. அவனி. தன்னுடைச் சோதியிலிருப்பு நெருப்பி

லிருக்கைபோலேயாய் இருள்தருமாஞாலத்துள் வந்தவிடத்தில் 'ரோசயாமாஸ' என்று தன் திருவுள்ளத்திற் கேற்கப்பொருந்திய திருவஹீந்திரபுரத்தில் நித்யவாஸம் பண்ணி அருளாநின்ற தாஸஸத்யனே. இத்திருநாமம் அயிந்தைநாதனுக்கு அஸாதாரணம், பேரருளாளனுக்கு ப்ரணதார்த்திஹரன், வரதன், என்னுமவைபோலே யென்று ஸம்ப்ரதாயம். மகரமித்யாதி. "[illegible]" என்றதைப்பற்ற மகரம்வளருமளவில் என்றது. "[illegible]" என்றதைப்பற்ற பௌவமடையவுற்றலைத்தனை யென்றது. (௨)

புரமுயர்த்தவசுரர்கட்கோர்புறமுரைத்தபொய்யினன்
வரையெடுத்துமழைதடுத்தமழையொடொத்தமெய்யினன்
திரைநிரைத்தகடலெரித்தசிலைவளைத்தகையினன்
அருள்கொடுத்துவினைதவிர்க்குமடியவர்க்குமெய்யனே. (௩)

இனி இதில் அவன் அடியார்க்கு மெய்யனானமைக்கேற்க புறத்தார்க்குப் பொய்யனாய் விரோதிநிராகரண சீலனானமையை அநுஸந்திக்கிறார். புரமுயர்த்த. மயமாயா விநிர்மிதமான த்ரிபுரத்தில் தார்மிகராய் உத்தம ரென்னும்படியிருந்த அஸுரர்களுக்கு, அவர்களறியாததொரு படி விலக்ஷணமான வேதபாஹ்ய ஸமயத்தை உபதேசித்தவனாய், அத்தாலே பொய்யனென்னப்பட்டவன். 'பொய்யனாகும் புறமே தொழுவார்க்கெல்லாம்' என்றதை அநுபாஷித்தருளிச்செய்தபடி. இது பௌத்தாவதாரத்தை அருளிச்செய்தபடி. சில வஸுரர்கள் ருத்ரனை நோக்கித் தபஸ்ஸுபண்ணி அவன் அநுக்ரஹத்தாலே ஒன்று இருப்புக்கோட்டையும் ஒன்று வெள்ளிக்கொட்டையும் ஒன்று பொன்கோட்டையுமாய் மூன்றுபட்டணங்களை மயனைக்கொண் டாக்குவித்துக்கொண்டு சில தர்மங்களைப் பண்ணிக்கொண்டு புறம்பே யாகாதிகள் பண்ணுகிற ப்ராஹ்மணர்களை ஹிம்ஸியாநின்றார்களாய் அத்தாலே பலஹாநிபிறந்து ப்ரஹ்மாதிகளான தேவர்களெல்லாருந் திரண்டு பசுபதிபாடே சென்று 'இதென்செய்தாய், இவர்களை நிரஸிக்கலாகாதோ' வென்ன, அவன்தான் 'நச்சு மரமாகிலும் நட்ட மரங்களை வெட்டுவா ருண்டோ' என்கையாலே ஆபந்நாநுகம்பியான ஸ்ரீமந் நாராயணன் திருவடிகளிலே சரணவரணம் பண்ண ஸ்ரிய:பதியும் உங்களால் அவர்களை நிரஸிக்கப் போகாதோ என்ன அவர்கள் தாம் சில தர்மங்களைச் செய்கையாலேஎங்களால்செய்யலாவதொன்றில்லையென்றுகைபிசிகையாலே அவர்களுக்கு அபயப்ரதாநம்பண்ணி அருளி ஒரு வ்ருத்தபௌத்தனாய்க் கொண்டு புறப்பட்டு ஓரோட்டையும் இடுக்கிக் கொண்டு கையிலே புல்லையும்சுற்றிக் கொண்டு அந்தப்பட்டணத்திலே சென்று இவன் தார்மிகன் என்றுநினைக்கும்படி சிலவார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு அவர்களை விச்வஸிப்பித்து அவர்களோடே கலந்து நின்று நாளடைவிலே தர்மச்ரத்தையைக்குலைப்பித்து வைத்தானென்று சொல்லிற்றிறே. மேல் 'மெய்யனாகும் விரும்பித்தொழுவார்க்கெல்லாம்' என்றதை அருளிச்செய்கிறார். நமக்கென்றுவைத்த சோற்றை மலைக்காக்கினனென்று ஆயிரங்கண்ணன் சோபித்துக்கொண்டு கன்மாரி பெய்வித்துக் கோகுலத்தை நலியப்பார்க்க அந்தமலையையே யெடுத்து ஆநிரைகாத்த காளமேகஸத்ருசமான திருமேனியையுடையவன். நலியவந்த உருவும் சாத்த வுருவு மொன்றாய் அமைந்தபடி. ஊர்மிமாலியான ஸாகரத்தை தஹநம் பண்ணவல்ல தநுஸ்ஸைவளைத்த திருக்கையையுடையவன். ஆச்ரித ஸம்ச்லேஷத்துக்கென்று பாரியாநிற்கச்செய்தே க்ஷணம் விளம்பம் பண்ணது பொறுக்கமாட்டாமே 'சராம்ச் சாசீ விஷோபமாந் ஸாகரம் சோஷயிஷ்யாமி' என்றவனிறே. இது அவனது ஆச்ரித விரோதி நிரஸந ஸ்வபாவ மிருக்கும்படி. ஆச்ரிதர் திறத்தில் கிருபை செய்தருளி ஸர்வபாபேப்யோ மோக்ஷணம் பண்ணுவிக்கும் தாஸஸத்யன். தன் ஸத்யத்வத்தைப் பலபடியாய் ப்ரகாசிப்பித்து நிலைநிறுத்திக்கொண்டானென்கை. முந்தற முன்னம் விபீஷணனுக்கு பட்டாபிஷேகம்பண்ணிப் பின்னே ராவணவதம் பண்ணினாப்போலே முந்தற வருள்கொடுத்துப் பின்னால் வினைதவிர்க்கு மவன். (௩)

தேசொத்தாரில்லையெனுந்தெய்வநாயகர்
வாசக்குழன்மாமலராண்மணவாளர்
வாசித்தொழுமன்மதனூர்மணற்றோப்பின்
மாசிக்கடலாடிமகிழ்ந்துவருவரே, (ச)

இனி அடியவர்க்கு மெய்யனான தெய்வநாயகன் மாசிக்கடலாடிவரும்படியை அநுஸந்தித் தினியராகிறார். திவ்யமங்களவிக்ரஹ சோபையில் தன்னோடொத்த தொரு அர்ச்சாவதாரமில்லை யென்னும்படியான தேவநாதன். 'முஹ்யந்த்யபங்குரதியः' என்று பேரருளாளன் திருமேனி மயங்கப் பண்ணுகையாலே ஆபாதகேசம் பிரித்தநுபவிக்கப்போகாது. இங்கு லாவண்யாதிசயம் பளபளிதமாய் அஸத்ருசமாயிருக்கும். இதற்கு கமகம் அச்யுத சதகத்திலும் தேவநாயக பஞ்சாசத்திலும் ஆபாதகேசவர்ணநமும் வரதராஜபஞ்சாசத்தில் ததபாவமு மென்று ஸம்ப்ரதாயம். ஸர்வகந்தனான தனக்கும் பரிமளப்ரதாநம் பண்ணுகிற நிரதிசய புண்யகந்த வாஸிதாநந்த திகந்தராள மான திருக்குழற்கற்றையை யுடையவளாய் பத்மவாஸிநியான பெரியபிராட்டியார்க்கு வல்லபன். 'மாதர் லக்ஷ்மி யதைவ மைதிலஜநः' என்ற கட்டளையிலே அந்தः புர பரிகரமாகையாலே மலராள் மணவாளர் என்கிறது. வாசித்தொழும் மன்மதனூர். தாரதம்யத்தைப் பரீக்ஷிக்கப்புக்கால் மன்மதன் தோற்றுத் தொழவேண்டினவன். "ஸகீஸவஹ்ரீரயா தெரவீ உநயா நாம் யக்ஷாஹீ ஸிந்தூவ்ருஷதாநாக்ருதி நயுஸக்ரா" என்றதிறே. மாசிக்கடலாடி. 'மாகாத்யாः பஞ்ச வஸந்தாः' என்கையாலே வஸந்தாதிகால விஹிதமான ஜலக்ரீடை யிது. ஸமுத்திரராஜனில் திருக்கூடற்றுறையில் தீர்த்தம் ப்ரஸாதித்து, மணல்தோப்பில், திருமணல்தோப்பில், புஷ்பாபசயக்ரீடை யிருக்கும்படி. மகிழ்ந்துவருவர். விலாஸிகள் மஹிஷிகளோடு புனல்விளையாடிப் பூக்கொய்து விளையாடி வருமாப்போலே. 'ஸ்ரீயாவஸஹதந்வம்ஹ்ரா ஹஸ்கா ஷொஙஸவா ஷிநகः| ராஜவக்ஷணவஸம்வந ஸவநாஹரணஹஷிதः' என்ற பேரருளாளன்படியை இங்கும் அநுஸந்தித்தபடி. (ச)

உருளுஞ்சகடமொன்றுதைத்தாயுலகேழுமுண்டுமிழ்ந்தளந்தாய்
பொருளுமழனுமிறையாகப்பூண்டேனடிமையினிமீண்டேன்
இருளுமருளுந்தருமந்நாளருளாராழிசங்கேந்தி
அருளுந்தெருளுந்தரவென்பாலடியோர்மெய்யவந்தருளே. (ரு)

மாச்சிரம்-ஜாதி-ப்ராஹ்மணத்வாதிகள், குணம்-ஞானாஞானங்களும், க்ருஷ்ணசேசத்
வாதிகளும், ஆச்சிரமம்-ப்ரும்மசர்யாத்யாச்ரமங்கள், தேசம்-புண்யபாபக்ஷேத்ரங்
கள், காலம்-உபராகாதிகள், தருமங்கள்-நித்யஸத்க்ரியா ப்ரஜாபாலகத்வாதிகளும்,
நிமித்தங்கள்-பாபிஷ்ட புண்யவத்வாதிகள், முதலாகவோதும்பேதம்-பால்யயௌ
வனவார்த்திகாவஸ்தைகளென்றபடி. ஓதும்-வேதம் முதலாக ஸ்ம்ருதிகள் சொல்லு
கிறபேதபூர்வகமாக, ஒருதிரவியந்தான், ஏகத்ரவ்யந்தான், பிறந்து-உத்பன்னமாய்,
நலந்தீங்கினை-நன்மையும் பொல்லாமையும், பெற்றுநிற்கும்-அடைந்திருக்கும், இது
க்குதாஹரணமேதென்னில், பாதமிசைபிறந்தோர்க்கு - ஸர்வேச்வரனுடைய ஸ்ரீபா
தத்திலே பிறந்த சூத்ரஜாதிக்கு, கபிலையின்பால் - கபிலாக்ஷீரமானது, பருகிடலாகா
தென்று மறையோர் சொன்னார் - பானம் பண்ணலாகாதென்றுவைதிகர் சொன்னா
ர்கள். ஆதலில் நாளோதியுணர்ந்தவர்பால்-ஆகையாலுக்த காலங்களிலே அத்யயநம்
பண்ணிஸகலத்தையும் அறிந்தவர்கள்ஸந்நிதியிலே, எல்லாமடிக்கடிகேட்டு-பதேபதே
ஸகலார்த்தங்களையும் கேட்டு-அயர்வுதிர்மினீரே-அஜ்ஞானத்தையெல்லாம் போக்கிக்
கொள்ளுங்கள். (உ0)

ஹவிஷ ரதாஹாரணெ ॥ காவியம்ய: விபெவூதெ்ரா நஜகெஸ
தாவவரதெ | ஹாதஸெஷம்விபெஷிவெராவிவஸூராஷநரயா
ஸாவி:॥ ஐதராஷி. உ॥

கங்கிருளால்விடியாதவுலகுக்கெல்லாங் கைவிளக்காமிவையென்றுக
ண்ணன்காட்டும், பொங்குபுகழாகமங்கடெரியச்சொன்ன பொருளிவை
நாம்புண்ணியர்பாற்கேட்டுச்சொன்னோம், மங்குடலும்பொருளுமல்லதறி
யாமாந்தர் வலையுளகப்பட்டுவரம்பழியாதென்றும், பங்கயமாதுற்றவருளா
ளர்தம்பாற் பத்திமிகுபவித்திரங்கள்பயின்மினீரே. (உக)

நிகமனத்திலே,நாமிந்தத்யாஜ்யோபாதேயங்களைப்பெரியோர்கள் உபதேசிக்கஸங்
க்ரஹித்தோம். சார்வாகாதிகள் சொல்லும்புத்தியிலே அகப்படாதே பெரியோர்கள்
ஸன்னிதியிலே யிவ்வர்த்தங்களைக்கேட்டுப்பரிசயம்பண்ணுங்களென்கிறார்.

கங்கிருளால் விடியாதவுலகுக்கெல்லாம்-திவாராத்ரங்கள் விடியாதலோகத்துக்
கெல்லாம், கைவிளக்காமிவையென்று-இவை ஶ்ருதிஸ்ம்ருதிகள் கைவிளக்காமென்
று ‘மாநம்ப்ரதீபமிவ’ என்னக்கடவதிறே. கண்ணன்காட்டும்-க்ருஷ்ணன்காட்டுகிற,
‘காருணிகோததாதி’ என்றதிறே. பொங்குபுகழாகமங்கள்-நித்யத்வேந ப்ரஸித்தங்

களான வேதங்கள்,தெரியச்சொன்ன-ப்ரகாசிக்கும்படி ப்ரதிபாதித்த,பொருளிவை நாம் புண்ணியர்பால் கேட்டுச்சொன்னோம் - அர்த்தவிசேஷங்களை பெரியோர்கள் ஸன்னிதியிலேகேட்டு விண்ணப்பஞ்செய்தோம்; மங்குடலும் பொருளுமல்லதறியா மாந்தர்வலையிலகப்பட்டு வரம்பழியாது - நச்வரமான சரீரம் அர்த்தமொழியவறியாத மனுஷ்யர் வலையிலே அகப்பட்டு மர்யாதைதப்பாதே,என்றும் பங்கயமாதுற்றவருளாளர்தம்பால் பத்திமிகு - பங்கஜவாஸிநியான பிராட்டி நித்யவாஸம்பண்ணப்பட்ட பேரருளாளன் விஷயத்தில் பக்தியை விருத்திபண்ணுமவையான, பவித்திரங்கள்பயில்மினோ - சுத்தபாதார்த்தங்களை இன்னதென்றுகேட்டு பரிசயம்பண்ணுங்களென்றபடி.

ஆகாரநியமம் வ்யாக்கியானம் முற்றிற்று.

தேசிகன் திருவடிகளேசரணம்.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேசிகாயநம:.

ப்ரபந்தஸார வ்யாக்யானம்.

தனியன்.

ஆரணநான்கின்பொருள்க ளாழ்வார்களாய்ந்திடவே யன்புடனேயம் புவியோரனைவருமீடேறவென்று, நாரணனார்தாள்களிலேநாலாயிரந்தமிழா னண்ணியுரைசெய்தவற்றைநாடிவகைதொகைசெய்தாய், பூரணமாஞானியர்சேர்பொங்குபுகழ்த்தூப்புல்வரும் புனிதனென்றும்பிள்ளையென்றும்புவியோர்புகழ்வேங்கடவா, தாரணியோரிங்குகக்கச்சாற்றியநல்ப்ரபந்தசாரந் தனையுரைத்துவாழுமனந்தந்தருளாயென்றனுக்கே.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரனாலே மயர்வறமதிநலம்அருளப்பெற்ற ஸ்ரீமத்பொய்கையாழ்வார்தொடக்கமானவர்கள் ருக்யஜுஸ்ஸாமாதர்வணமென்றுநாலுவகையாயிருந்துள்ள வேதங்களுடைய ஸர்வார்த்தங்களையும் ப்ரீதியோடே பரமதநிரஸநம் ஸ்வமதஸ்தாபனமென்ற க்ரமத்தாலே நிரூபித்து, அழகியபூமியிலே யிருப்பாரெல்லாரு முஜ்ஜீவிக்கவேணுமென்று,சேதநாசேதநங்கள் ப்ரகாரமாய்த்தான்ப்ரகாரியாயிருக்கையாலே நாராயணசப்தவாச்யனான ஸ்ரீய:பதி திருவடிகளிலே பாதரேகைபோலேகிட்டி, த்ரமிடபாஷையாலே யருளிச்செய்த நாலாயிரத்தையும் நன்றாகவப்பொய்கையார் முதலானவர்கள் ப்ரஸாதத்தாலே யதிகரித்து, அவற்றின் அவாந்தர ஸமுதாயஸங்க்யா நிஷ்கர்ஷ ரூபங்களான வகைதொகைகளை யருளிச்செய்தருளும் ஸ்வாமியாய்,பரிபூர்ணமஹத்தரப்ரஹ்மவித்யாவான்களாலே ஸேவ்யமானராய்,நித்யாபிவ்ருத்திசாலிகளான ஜ்ஞானவைராக்யபக்த்யாதி கல்யாணகுணங்களையுடையராய், தூப்புல்குடியிலே திருவவதரித்தருளும் பாவனரென்றும் நமக்குவகுத்த ஸ்வாமியென்றும் பூலோகத்திலுள்ளவரனைவராலும்கொண்டாடப்படுமவராய்,'ஸ்ரீமத் வேங்கடநாதோநாமகவி:' என்கிற ப்ரஸித்ததிருநாமத்தையுடையவரே, பூமியிலேவஸிக்குமவர் ஆபாலகோபால முகக்கும்படி தேவரீரருளிச்செய்த ஸர்வபரபந்தோத்க்ருஷ்டமான ஸ்ரீமத் ப்ரபந்தஸாரமென்கிற திவ்யப்ரபந்தத்தையனுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படியான நெஞ்சையடியேனுக்கு க்ருபைபண்ணி யருளவேணும்.

ஆதிமறையோதிமகிழயக்ரீவர்தம்மருளா லன்புடனேதூப்புனகரவதரித்திங்குவந்து, வாதியரைவென்றுவந்து வண்புவிமேலெதிராசர் வாழ்வுறுநற்றரிசனத்தைவண்மையுடனேவளர்த்து, நீதிநெறிதவறுமனிறுத்தியிடும்வேங்கடவாநேசமுடனாழ்வார்கணிலைகளையெல்லாமுணர்ந்து,சாதுசனம்

வாழவென்றுசாற்றியநல்ப்ரபந்தசாரம் தனையுரைத்துவாழுமனந்தரு
ளாயென்றனுக்கே.

வேதங்களெல்லா மொருகாலவிசேஷத்திலே ப்ரமுஷிதங்களாக, வத்தசையி
லே திருவவதரித்து வேதங்களையோதிவைக்கப்பெற்றேமே யென்னு முவப்பையு
டையரான ஸ்ரீமத்ஹயக்ரீவருடைய பரமக்ருபையாலே ஸ்ரீகாஞ்சியென்கிறநகரத்
திலே தூப்புலென்கிற குடியிலே திருவவதரித்தருளி பாபிஷ்டஜநஸங்கலிதமானவி
ந்தபூமியிலுள்ள துர்வாரகர்வாநல பாஹ்யகுத்ருஷ்டி ப்ரதிவாதிகளை ஸம்யங்ந்யா
யாநுக்ருஹீத ஸோபப்ருஹ்மணோபநிஷந்மார்க்க மீக்ஷத்துந் தப்பாதே ஜயித்து, மிகு
வுமுவப்போடே ஆச்ரிதஜநங்கள்கிட்டி யாஶ்ரயிக்கும்படி மிகவும் ஸௌலப்யத்
தாலே யவர்கிட்டவந்தவராய், அழகிய பூமியிலே ஸ்ரீமத் யதிஸார்வபௌமருடைய,
த்ருடதமமாக வாழும்படியிருக்கிற, ஸர்வோத்க்ருஷ்ட ஸித்தாந்தத்தை சீர்மை
யோடே யபிவ்ருத்தமாக்கியதிகாராநுகுண ஸகலந்யாயாநுக்ரஹீத பக்திப்ரபத்தி
ரூபமார்க்கங்கள் துர்கமாகாதபடி கண்டகசோதநம் பண்ணி ஸ்தாபித்தருளும் ஸ்ரீமத்
வேங்கடநாததேசிகனே, ப்ரீதிபுரஸ்ஸரமாக ஆழ்வார்களுடைய திருவவதாரக்ரமம்
திருநக்ஷத்ரம் ஊர் மாஸம் திருநாம மவர்களருளிச்செய்த ப்ரபந்தம் அதின்வகை
தொகைகளாகிற ஸர்வஸ்திதியையும் ஸம்சயாதிகளறவறிந்து, 'அபகாரிஷ்வபியஸ்ஸா
துஸ்ஸஸாதுஸ்ஸத்பிருச்யதே' என்று சொல்லப்பட்ட ஸாதுஜநமுவந்துவாழவேண்
டுமென்று தேவரீரருளிச்செய்த ஸகலப்ரபந்த விலக்ஷணமான ஸ்ரீமத்ப்ரபந்தஸார
மென்கிற திவ்யப்ரபந்தத்தை யநுஸந்தித்து உஜ்ஜீவிக்கும்படி யானவந்தஃகரணத்
தை கபிசபலமாகாதே ஸ்திரமாக க்ருபைசெய்தருளவேணும்.

அனைத்துலகம் வாழும்படிக்குடலாக திருவேங்கடத்துறை செல்வனுக்குஉபகர
ணபூதரான திருமணியாழ்வார்ஸ்ரீமத்வேங்கடமஹீத்ரபதி ப்ரஹ்மோத்ஸவத்தி னவ
ப்ருதநக்ஷத்ரமான திருவோணமென்கிற திருநக்ஷத்ரத்திலே ஒளிமாடங்கள் சூழ்ந்த
தூகாயகச்சியிலே சந்தமிகுதமிழ்மறையோர்களாலே யாஶ்ரிதமான தூப்புல்குலத்தி
லே திருவவதரித்தருளின ஸ்வாமியாய், கருணைக்கடலான நடாதூரம்மாளுடைய
ஸ்யாதஸாவென்கிற விசேஷகடாக்ஷமடியாகவுண்டான கிடாம்பியப்புள்ளாருடை
ய பரமக்ருபையாலே திருவிலச்சினை முன்பாகச் செந்தமிழும் வடகலையுமாகிற வுப
யவேதாந்தங்களையும் பெற்றுடையராய், அதடியாகச் செங்கோலுடைய திருவரங்க
ச்செல்வனாருடைய திருவருளாலே ஸ்ரீமத்வேதாந்தாசார்யரென்கிற திருநாமத்தை
யும்அவர்தமக்கணியாக மன்னும்பங்கயமாமலர்ப்பாவையான ஸ்ரீரங்கநாச்சியாருடை
யசீரருளாலே ஸ்ரீமத்ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரரென்கிற திருநாமத்தையும்பெற்றுடைய
ராய், அத ஏவ கவிதார்க்கிகஸிம்மஇதி விக்யாதகுண ஸமாக்யராய், 'விச்ருதநாநாவி
தவித்யஃ' என்கிறபடியே ஸகலசாஸ்த்ரபாரங்கதராய், வாஸூதம்வாவி வாஸு
ஹ ஸூம்ஸ்ரீ வெங்கடாவாய க்ஷூதா: ஸூவநா: என்கிறபடியெ வேதாந்தா
ர்த்தப்ரகாசகங்களான பலப்ரபந்தங்களையருளிச்செய்து தந்முகேநந்தர்சநத்துக்கு
வர்த்தகராயும்மஹோபகாரகராயும் உத்தாரகராயும் பிறந்தஸ்ரீமத்வேங்கடநாததேசி
கன், பொய்கையார் தொடக்கமானத்ராமிடவேதத்ரஷ்டாக்களாயும் தத்ப்ரவர்த்தக
ராயுமிருந்துள்ள வாழ்வார்களவதரித்தருளின வடைவு இன்னபடியென்றும், அவ
ர்களவதரித்தருளின திவ்யநகரமாஸ நக்ஷத்ரங்களிவை யிவையென்றும், ப்ரபந்தங்
களின் ஸங்க்யையிவ்வளவென்றும், ஓரோராழ்வாரருளிச்செய்த ப்ரபந்தங்களில் பா
ட்டுக்களின்ஸங்க்யை யிவ்வளவென்றும், எல்லாப்ரபந்தங்களுக்கும் எல்லாப்பாட்
டுக்களுக்குமாகஸங்க்யை யிவ்வளவென்றும் தனித்தனியே தம்முடைய பரமக்ரு
பையாலேஸ்ரீமத் ப்ரபந்தஸார மென்கிற திவ்யப்ரபந்தமுகேந வனைவருக்கும் ஸநு
க்ரஹமாம்படி யருளிச்செய்கிறார்.

ஆழ்வார்களவதரித்தநாளூர்திங்க ளடைவுதிருநாமங்களவர்தாஞ்செ
ய்த, வாழ்வானதிருமொழிகளவற்றுட்பாட்டின் வகையாகத்தொகையிலக்
கமற்றுமெல்லாம், வீழ்வாகமேதினிமேல்விளங்கநாளும் விரிந்துரைக்

குங்கருத்துடனேமிக்கோர்தங்கள், நீள்பாதநிரந்தரமுந்தொழுதுவாழ்த்து
நேசமுடனடியேன்றன்னெஞ்சுதானே. (க)

இதில் முதல்பாட்டில் பொய்கையார் தொடக்கமான வாழ்வார்கள்திருவவதரித்த க்ரமத்தையும் அவரவர்கள் திருவவதரித்தருளின திவ்யநகரமாஸாதிகளையு மிந்த பூமியிலே ஸுப்ரஸித்தமாம்படி ஸர்வகாலமும் பாவபந்தத்தோடேயுரைக்கும் மிக்கோர் திருவடித்தாமரைகளிலே தந்திருவுள்ளம் மிகவும் ப்ரவணமானபடியைக்கண்டு விஸ்மிதராயருளிச்செய்கிருர்.

ஸ்ரீயஃபதியான ஸர்வேச்வரனாலே மயர்வறமதிநலமருளப்பெற்ற பொய்கையார்தொடக்கமான வாழ்வார்கள் திருவவ்தரித்தருளின க்ரமத்தையும்,அவர்கள் திருவவரித்தருளின திவ்யநக்ஷத்ரநகர மாஸங்களினுடைய திருநாமங்களையும், அவர்கள் தந்தம்முடைய பகவதநுபவ ஜநிதப்ரீதிப்ரகர்ஷத்தாலே யருளிச்செய்தவையாயிங்குள்ள முமுக்ஷுக்களோடு அங்குள்ள நித்யமுக்தரோடு வாசியறவெல்லாருக்கும் நிரவதிக ஸம்பத்தாயிருந்துள்ள ஸ்ரீ ஸூக்திகளாகிற திவ்யப்ரபந்தங்களின் வகையையும், ப்ரபந்தங்களில் பாட்டுக்களின் தொகையையும், ஆக ப்ரபந்தங்களித்தனை அவைதம்மில் பாட்டுக்களித்தனை யென்கிற ஸாமான்யஸங்க்யையாகிற தொகையையும், ப்ரபந்தத்ரஷ்டாக்களித்தனை திருநாமம் ப்ரபந்தமித்தனை ஆசப்பாட்டுகளித்தனை யென்கிற விலக்கத்தையும் இப்ரபந்தப்ரவர்த்தக பரம்பரா முகங்களாலே யந்தப்ரபந்தத்ரஷ்டாக்களே தமக்கு யதாவத்தாக ப்ரஸாதித்தருள வேணுமென்று ப்ரார்த்தநாரூபமான மற்றுமுள்ளவையெல்லாவற்றையுமிந்தபூமியிலேயிருந்துள்ள ஜநங்களுடைய நெஞ்சிலே நன்ருக விழும்படியாகவும் ப்ரகாசிக்கும்படியாகவும் விஸ்தரித்து நாள்கள்தோறும் பாவபந்தத்தோடே யருளிச்செய்யும்படி, பெரியோர்கள்தங்களுடைய ஜநநிவாரணஜாங்கிகமாக நீண்டதிருவடிகளை 'ஸ்ரீமத்ப்யாம்ஸ்யாதஸாவித்யநுபதிவரதாசார்ய ராமாநுஜாப்யாம் ஸம்யக்ஸந்த்ருஷ்டனுன' வடியேனுடைய மனஸ்ஸானது ஈஷத்துமிடைவெளி யில்லாதபடி ஸர்வகாலமும் ப்ரீதியுடன் ப்ரணமபூர்வகமாக மங்களாசாஸநமே பண்ணிக்கொண்டிராநின்றது. நாள் - திருநக்ஷத்ரம். அடைவு - க்ரமம், திருமொழிகள்-ஸ்ரீஸூக்திகள், வகை-ப்ரகாரம், தொகை - ஸமுதாயஸங்க்யை, வீழ்வாக - விழும்படியாக, நெஞ்சிலே நிற்கும்படியாகவென்றபடி. நேசம் - ப்ரீதி. (க)

அருண்மிகுத்ததொருவடிவாய்க்கச்சிதன்னி லைப்பசிமாதத்திருவோ
ணத்தினுளில், பொருண்மிகுத்தமறைவிளங்கப்புவியோருய்யப் பொய்கை
தனில்வந்துதித்தப்புனிதாமுன்னுள், இருளதனிற்றண்கோவலிடைகழிச்
சென் றிருவருடனிற்கவுமாலிடைநெருக்கத், திருவிளக்காமெனவையந்தக
ளிநூருஞ் செழும்பொருளையெனக்கருள்செய்திருந்தநீயே. (உ)

இரண்டாம்பாட்டி லிவ்வாழ்வார்க ளெல்லாரிலும் முந்தறமுன்னம் பொய்கையாழ்வார் அவதரித்தருளுகையாலே யவர்திருவவதரித்தருளின திவ்யநகர மாஸநக்ஷத்ரங்களைத் தனித்தனியே யிவையிவையென்று தர்சிப்பியாநின்று கொண்டு, இங்ஙனம் திருவவதரித்தருளின தேவரீரருளிச்செய்த முதல் திருவந்தாதியின் செழும்பொருளை யடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தருளுகிருர்.

ஸ்ரீமன் நாராயணனுகிற மிக்கபொருளை ப்ரதிபாதியாநின்ற வேதமானது விளங்கும்படியாகவும் பூமியிலுள்ளா ருஜ்ஜீவிக்கும்படியாகவும், மிகுத்ததாய் பெருத்ததாயிருந்துள்ள தேவரீருடைய க்ருபையைத்தானே யத்விதீயமான திருமேனியாகவுடையவராய்க்கொண்டு,காஞ்சியென்று ப்ரஸித்தமானபெருமாள்கோயிலிலே த்வாபரயுகத்தில் ப்லவங்க ஸம்வத்ஸரத்திலே ஐப்பசி மாதத்திலே திருவோணமென்கிற திருநக்ஷத்திரத்திலே சொன்னவண்ணஞ்செய்த பெருமாள்ஸன்னதிக்குவடக்குதிக்கிலே யிருக்கிற ஸரஸ்ஸிலுண்டானதொரு காஞ்சனபத்மத்தின் கர்ப்பத்திலே பகவன்நியோகத்தாலே ஸ்ரீபாஞ்யஜந்யாம்சராய்க்கொண்டு திருவவதாரஞ்செய்தருளும் பரமபாவனரான பொய்கையாழ்வாரே, இங்ஙனவதரித்ததேவரீர் முற்காலத்திலே குளிர்ந்திருந்துள்ள திருக்கோவலூரில் திருவிடைகழியிலெ யாத்ருச்சிகமாக

அந்தகாராவ்ருதமான தொருராத்திரியில், முந்தறமுன்ன மெழுந்தருளின தேவர்க்குப்பின்பெழுந்தருளின பூதத்தார்பேயாராகிறவிருவரோடுங் கூட வங்கே நிற்கிற வளவிலே, ஆஶ்ரிதவ்யாமுக்தனான ஶ்ரியஃபதி தேவரீர்கள் மூவருக்கும் நடுவேப்ரவேசித்து நெருக்கிக்கொண்டு மயர்வற மதிநலமருளாநிற்க, அவ்வளவிலே யவன் ப்ரஸாதத்தாலே யவனை யுள்ளபடியனுபவித்து அவ்வனுபவஜநிதப்ரீத்யதிசயத்தாலே விளக்குப்போலே யவனுடைய ஸ்வரூபரூபகுண விபூதிசேஷ்டிதங்களுக்கு நேரே ப்ரகாசகமாய், 'வையந்தகளியா வார்கடலே நெய்யாக'வென்று தொடங்கி தேவரீராலே யருளிச்செய்யப்பட்டதாய், தரிப்பாருக்கு ஸுகமமாம்படி நூறுபாட்டா யாவிர்ப்பவித்த முதல்திருவந்தாதி யாகிற வேதத்தினுடைய ச்லாக்யமான வர்த்தத்தை யதிலேயபேக்ஷையுடைய வடியேனுக்கு ஸம்சயவிபர்யாதிகள் தீரும்படி தத்வக்தாவானதேவரீரே க்ருபைபண்ணி யருளவேணும். நாளில்-திருநக்ஷத்ரத்திலே. பொய்கை-குளம். செழும்பொருள்-ச்லாக்யமானபொருள். திருந்த-தெரியும்படி. (உ)

கடன்மல்லைக்காவலனேபூதவேந்தே காசினிமேலைப்பசியிலவிட்டநாள் வந், திடர்கடியுந்தண்கோவலிடைகழிச்சென் றிணையில்லாமூவருமாயிசைந்தேநிற்க, நடுவிலுமிலொருவருமன்றறியாவண்ண நள்ளிருளின்மானெருக்கநந்தாஞானச், சுடர்விளக்கேற்றியவன்பேதகளியான தொடை நூறுமெனக்கருள்செய்துலங்கநீயே. (௩)

மூன்றாம்பாட்டில் பொய்கையாழ்வாருக்கநந்தர மவதரித்தருளினர் பூதத்தாழ்வாராகையாலே, யவர்திருவவதரித்தருளின திவ்ய நகர மாஸ நக்ஷத்ரங்களிவை யிவையென்று தனித்தனியே தர்சிப்பியாநின்றுகொண்டு, இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீ ரருளிச்செய்த விரண்டாந்திருவந்தாதியை யடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேண்டு மென்று ப்ரார்த்திக்கிறார்.

திருக்கடல்மல்லை யென்கிற திவ்யதேசத்திற்கு நிர்வாஹகரா யிருந்துள்ள பூதத்தாழ்வாராகிற ஸ்வாமியே, தேவரீர் த்வாபரயுகத்தில் ப்லவங்கவர்ஷத்தி லைப்பசிமாஸத்தி லவிட்டமென்கிற திருநக்ஷத்திரத்திலே குறுக்கத்திப் பூவிலே ஶ்ரீகௌமோதக்யம்சராய்க் கொண் டிங்கே வந்தவதரித்தருளி, துக்கநிவர்த்தகமாயிருந்துள்ளதிருக்கோவலூரில் திருவிடைகழியிலே தேவரீரும் பொய்கையாரும் பேயாருமாகிற வொப்பில்லாத மூன்றுதிருநாமமும் யாத்ருச்சிகமாக ஸங்கதராய் நீரும்நீரும் சேர்ந்தாற்போலே சேர்ந்திருந்தவளவிலே, யிம்மூவருமாகிற தேவரீர்களிலே யொருவராகிலு மறியாதபடி தேவரீர்கள் நடுவே காடதமோ வ்ருதமான ராத்ரியிலே யாஶ்ரிதவ்யாமுக்தனான ஶ்ரியஃபதி தேவரீர்களை மிகவும்நெருக்க, வுடனே யவன்தன்ப்ரஸாதத்தாலே யவனையுள்ளபடி யனுபவித் தவ்வநுபவஜநித ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே, யொருநாளும் ஸங்கோசமன்றிக்கே யிருக்கிற நிரவதிக தேஜோரூபமான திருவிளக்கை ஞானச்சுடர் விளக்கேற்றினே னென்று ப்ரகாசமாக தேவரீ ரேத்தின ப்ரசாரத்தை வெளியிடாநிற்பதாய் 'அன்பேதகளியா வார்வமே நெய்யாக'வென்று தொடங்கி தேவரீராலே யருளிச்செய்யப்பட்டதா யெழுத்தசை சீர்பந்தமித்யாதிகளான லக்ஷணங்களில் தொடை யென்கிறலக்ஷணத்தை யுடைத்தாய், தரிப்பாருக்கு ஸுகமமாம்படி நூறுபாட்டா யவதரித்த விரண்டாந் திருவந்தாதியையதிலே யபேக்ஷையுடைய வடியேனுக்கு தத் வக்தாவான தேவரீரே நன்றாக வென்னெஞ்சிலே நிற்கும்படி ப்ரஸாதித்தருளவேணும். வேந்தே-ராஜாவே. இடர்-துக்கம். கடியும்-போக்கும். தண்-குளிர்ந்திருக்கிற, இணை-ஒப்பு. வண்ணம்-ப்ரகாரம். நள்ளிருள்-நெருங்கினவிருட்டு. நந்தா-விச்சேதியாத. அன்பே-ப்ரேமமே, தகளி-தீபபாத்ரம். துலங்க-விளங்கும்படியாக. (௩)

மாமயிலைப்பதியதனிற்றுலாமாதத்தில் வருஞ்சதயத்தவதரித்துக்கோவலூரில், தூமுனிவரிருவருடன்துலங்கநின்று துன்னியபேரிருணீங்கச் சோதிதோன்றச், சேமமுடனெடுமாலைக்காணப்புக்குத் திருக்கண்டேனெனவுரைத்ததேவேயுன்றன், பாமருவுதமிழ்மாலைநூறுபாட்டும் பழவடியேனுக்கருள்செய்பரமநீயே. (௪)

இப்பூதத்தாழ்வாருக்கு அநந்தரம் திருவவதரித்தருளினார் பேயாராகையாலே, யவர்திருவவதரித்தருளின திவ்ய நகர மாஸ நக்ஷத்ரங்களிவையிவையென்று தனித் தனியே தர்சிப்பியாநின்று கொண்டு, இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீரருளிச் செய்த மூன்றாந்திருவந்தாதியை யடியேனுக்கு ப்ரஸாதித்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தருளுகிறார்.

தேவரீர் திருவவதரிக்கையாகிற பெருமதிப்பை யுடைத்தான மயூரபுரி யென்கிறதிருப்பதிதன்னிலே த்வாபரயுகத்தில் ப்லவங்கவர்ஷத்தில் துலாமாஸ மென்கிற பர்யாயநாமத்தை யுடைத்தான அந்தஐப்பசிமாதத்தில் அவிட்டத்துடனே வருகிற சதயமென்கிற திருநக்ஷத்ரத்திலே ஸ்ரீ நந்தகாம்சராய் திருவவதரித்தருளி, யாத்ருச்சிகமாகத் திருக்கோவலூரில் திருவிடைகழியிலெ நிரஸ்த ரஜஸ்தமஸ்கராகையாலே பரிசுத்தராய் பகவத் குணங்களையே மநநம்பண்ணிக்கொண்டு போருமவர்களான பொய்கையார் பூதத்தாராகிற விருவரோடுங்கூட ஸ்வவ்யாவ்ருத்திதோற்ற நின்றருளினவளவிலே, அனேகமாயிரமாதித்யர்கள் சேரவுதித்தாலும் மாற்றவொண்ணாத படி நெருங்கிப் பொருந்தி யிருக்கிற அஞ்ஞாநாந்த காரமானது நீங்கும்படி தேவரீரெழுந்தருளி யிருக்கிற திருவிடைகழியிலே நிரவதிக தேஜோரூபனான ஸ்ரியஃபதி ஸந்நிஹிதனாக, மத்யேயொருவிச்சேதாந்தரமன்றிக்கேக்ஷேமத்தோடேகூட வாஸ்ரித விஷயத்தில்மிகவ்யாமொஹத்தை யுடையவனான அவனைப்பெரியபிராட்டியார்முன்னிலையாக வவன்தன் ப்ரஸாதத்தாலே கண்ணாரக்காணப்புக்கு, அத்தசையிலே பெரியபிராட்டியார் முன்னிலையாக வவனைக்கண் டனுபவிக்கையாலே, யவ்வநுபவ ஜநித ப்ரீதிப்ரகர்ஷ முள்ளடங்காமே யதுக்குப்போக்குவீடாக, திருக்கண்டேனென்றுதொடங்கி மூன்றாந்திருவந்தாதியை யருளிச்செய்தகவிராஜனே,இப்புடைகளிலெ சீரியரான தேவரீராலே ரசிக்கப்பட்டதாய், கவிக்கவயவமான வெண்பா வென்கிற சந்தஸ்ஸோடெ பொருந்தியிருப்பதாய், த்ரமிடபாஷானுரூபமான பதச்சேர்த்தியையுடைத்தாய் அதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படி நூறுபாட்டாயாவிர்ப்பவித்த மூன்றாம் திருவந்தாதியை யநாதியாக தேவரீர்க்கடிமைபுக்க வடியேனுக்கு, ஒருஹித மருளிச்செய்யுமிடத்தில் தேவரீருக்கு மேற்பட்டாரன்றிக்கே யிருக்கும் தேவரீரே,க்ருபைபண்ணியருளவேணும். மா-மதிப்பு.தூய்மை-பரிசுத்தி. துன்னிய-நெருங்கியிருக்கிற. பேர் - பெருத்திருக்கிற. செமம் - க்ஷேமம். நெடுமை - மிகுதி. பா - சந்தஸு. (ச)

தைமகத்தில்வருமழிசைப் பரனேமற்றைச் சமயங்கள்பலதெரிந்து மாயோனல்லால், தெய்வம்மற்றில்லையெனவுரைத்தவேதச் செழும்பொருணான்முகன்றனூற்றாறுபாட்டும், மெய்மிகுத்ததிருச்சந்தவிருத்தப் பாடல் விளங்கியநூற்றிருபதுந்தப்பாமன்மெய்யே, வையகத்தின்மறவாமலுரைத்துவாழும்வகையடியேனுக்கருள்செய்மகிழ்ந்துநீயே. (ரு)

பேயாழ்வாருக்குப் பின்பு திருவவதரித்தவர் திருமழிசைப்பிரானாகையாலே, யவர் திருவவதரித்தருளின மாஸ நக்ஷத்ர நகரங்களிவையிவையென்று தனித் தனியே தர்சிப்பியாநின்றுகொண்டு, இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீரருளிச் செய்தநான்முகன்திருவந்தாதியையும், திருச்சந்தவிருத்தத்தையும்அடியேனுக்குப்ரஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தருளுகிறார்.

அந்த த்வாபரயுகத்தில் ப்லவங்கவர்ஷத்தில் தைமாஸத்திலே மகமென்கிற நக்ஷத்திரத்திலே,மஹீஸாரக்ஷேத்ரமென்று நிரூபிக்கப்படாநின்றுள்ள திருமழிசை யென்கிற திருப்பதியிலே, பார்கவமுநிகர்பத்தினின்றும் ஸ்ரீஸுதர்சநாம்சராய்க் கொண்டு திருவவதரித்தருளி,ஸ்வப்ரபந்தமுகத்தாலேஸாத்விகவர்க்கத்திற்கெல்லாம் உபகாரகரான திருமழிசையாழ்வாரே இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீர், வைதிகஸமயங்களைப்பற்ற வத்யந்த நீஹீநங்களாகையாலே 'மற்றை' யென்னவேண்டும்படியான சாக்யோலூக்யாதி பாஹ்யகுத்ருஷ்டிஸமயங்களை யெல்லாம் பூர்வபக்ஷோபயோகித்வேந பலப்ரகாரங்களாலும் நிரூபித்து, ஆச்சர்ய சேஷ்டிதனான ஸ்ரியஃபதியை யொழிய வேறொருஉபாஸ்யவஸ்துவில்லை யென்று அவன்ப்ரஸாதத்

தாலே நிஷ்கர்ஷித்தனுபவித் தவ்வநுபவஜநித ப்ரீதிப்ரகர்ஷம் பேசுவிக்க 'நான் முகனை நாராயணன்படைத்தா' னென்று தொடங்கி தேவரீராலே யருளிச்செய்யப் பட்டதாய், 'நாராயணாத் ப்ரஹ்மாஜாயதே' இத்யாதிஶ்ருதிகளால் ப்ரதிபாதிக்சப் படாநின்றுள்ள பகவத்பரத்வமாகிற ச்லாக்யமானவர்த்தத்தை ப்ரதிபாதி யாநிற்ப தாய், அதிகரிப்பவருக்கு ஸுகமமாம்படி தொண்ணூற்ருறு பாட்டாயவதரித்த நான் முகன்றிருவந்தாதியையும், அப்படியே 'ஸர்வம்கல் விதம் ப்ரஹ்மே' த்யாதிஶ்ருதி களை யுட்கொண்டு 'பூநிலாய வைந்துமா' யென்றுதொடங்கி தேவரீராலே யருளிச் செய்யப்பட்டதாய், ஸ்வப்ரதிபாத்யார்த்தத்தில் அர்த்தவாதகந்த மில்லாமையாலே யதாபூதார்த்தவாதித்வ மாகிற மெய்மை மிக்கிருப்பதாய், யாழிலே ஏறிட்டுப் பாடலாம்படி யிருப்பதொன்ருய், ஸ்வப்ரதிபாத்யார்த்தத்தின்சீர்மையாலே மிகவும் விளங்காநிற்பதாய், அதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படி நூற்றிருபது பாட்டா யவ தரித்த திருச்சந்தவிருத்த மென்கிற திவ்யப்ரபந்தத்தையு மீதி லொருபாட்டும் நழு வாதபடி கர்மபூமிகளிலே மறப்பன்றியே யதாவத்தாக வநுஸந்தித் துஜ்ஜீவிக்கும் ப்ரகாரத்தை யிவற்றி லபேக்ஷையுடையவடியேனுக்கு ப்ரீதிபுரஸ்ஸாமாக தேவரீரே க்ருபைபண்ணியருளவேணும். செழும்-ச்லாக்யமான. நான்முகன்-நான்முகன்றிரு வந்தாதி. மெய்-யதாபூதவாதித்வம். தப்பாமல்-நழுவாதபடி. மெய்-யதாவத்தாக. வையகத்தில்-பூமியிலே, வகை-ப்ரகாரம். மகிழ்ந்து-ப்ரீதிபுரஸ்ஸரமாக. (௫)

முன்னுரைத்ததிருவிருத்தநூறுபாட்டும் முறையின்வருமாசரியமே ழுபாட்டும், மன்னியநற்பொருட்பெரியதிருவந்தாதி மறவாதபடியெண்பத் தேழுபாட்டும், பின்னுரைத்ததோர்திருவாய் மொழியெப்போதும் பிழை யறவா யிரத்தொருநூற் றிரண்டுபாட்டும், இங்நிலத்தில்வைகாசிவிசாகந்த ன்னி லெழிற்குருகைவருமாருவிரங்குநீயே. (௬)

இத்திருமழிசைப்பிரானுக்குப்பின்பு திருவவதரித்தருளின நம்மாழ்வாருடைய அவதார திவ்ய நகர மாஸ நக்ஷத்ராதிக ளிவையிவை யென்று தனித்தனியே தர்சி ப்பியாநின்றுகொண்டு,இங்ஙன் திருவவதரித்தருளினதேவரீர் திவ்யசக்ஷுஸ்ஸாலே ஸாக்ஷாத்கரித்தருளின திருவிருத்தந்திருவாசரியம் பெரியதிருவந்தாதி திருவாய் மொழி யென்கிற நாலுவேதத்திற்கு மெதிர்த்தட்டான நாலுதிவ்யப்ரபந்தங்களையு மடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணு மென்று ப்ரார்த்திக்கிருர்.

பாரெல்லாமுய்யும்படி இந்தப்பூமியிலே கலியுகத்தில் ப்ராதமிகமான ப்ரமாதி வர்ஷத்தில் நாற்பத்தைந்தாம்நாளில்வையாசிமாஸத்தில் விசாகமென்கிறதிருநக்ஷத் திரத்திலே அழகையுடைத்தாய் ஸ்ரீமத் குருகாபுரி யென்கிற பர்யாயநாமத்தை யுடைத்தான திருநகரியிலே பகவதம்சபூதராய்க்கொண்டு உடையநங்கையாருடைய கர்பத்திலே திருவவதரித்தருளி, பாஹ்யகுத்ருஷ்டிமதங்களுக்கு ப்ரதிபடராய் அவ ற்றை பஸ்மஸாத்தாக்குகையாலே மாறனென்கிறதிருநாமத்தை யுடையரானநம்மாழ் வாரே, அகில கல்யாணகுணாகரனை ஸ்ரீயஃபதி தேவரீருக்கு மயர்வறமதிநலமருளு கைமுன்னாகத் தன் ஸ்வரூபகுணவிபூதி சேஷ்டிதங்களைத்தானே காட்டிக்கொடுக்க, அதை அனுபவித்து தேவரீ ரவ்வநுபவஜநிதப்ரீதி ப்ரகர்ஷத்தாலே ஸ்ரீமதுரகவியா ழ்வார் பட்டோலைகொள்ளப் 'பொய்நின்றஞானமும்' என்றுதொடங்கி மூந்தற முன் னம் தேவரீரருளிச்செய்ததாய், அதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படி நூறுபாட்டாய வதரித்த திருவிருத்தத்தையும், அப்படியே இங்குற்றஸம்ஸாரிகளுக்குப் போக்யமா யிருந்துள்ள வவன்படிகளைப்பின்னையும் அவன்தானே காட்டிக்கொடுக்கக் கண்டனு பவித்த தேவரீரு மந்தக்ரமத்திலே 'சக்கர்மாமுகிலுடுத்து' என்றுதொடங்கி அருளி ச்செய்ததா யதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படி யேழுபாட்டா யவதரித்த திருவாசரி யத்தையும், அப்படியே யனுபூதனான வவனிடத்திலே தேவரீருக்கு த்ருஷ்ணைகரை புரண்டபடிக்கு ப்ரகாசமாம்படி 'முயற்றிசுமந்தழுந்த' வென்றுதொடங்கி தேவரீ ரருளிச்செய்ததாய் பாஹ்யகுத்ருஷ்டிகளால் சலிப்பிக்கவொண்ணுதபடி ஸ்திரமாயி ருந்துள்ள வேதாந்தார்த்தங்களுக்கு ப்ரகாசகமாயதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படி எண்பத்தேழுபாட்டாயவதரித்த பெரியதிருவந்தாதியையும்,அப்படியே யித்திருவந்

தாதியையருளிச்செய்த பின்பு த்ருஷ்ணைக்கநுகுணமாக வவன் தேவரீரோடே ஸம்ச்லெஷித்தமைக்கு ப்ரகாசகமாம்படி 'உயர்வறவுயர்நல' மென்று தொடங்கி தேவரீரருளிச்செய்ததாய் ஸ்வப்ரதிபாத்யார்த்தத்தாலே அத்விதீய மாயிருப்பதாய் அதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படி ஆயிரத்தொருநூற்றி ரண்டுபாட்டா யவதரித்த திருவாய்மொழியையும், ஸர்வாவஸ்த்தையிலும் ஸர்வ காலங்களிலும் விஸ்ம்ருதிகந்தமில்லாதபடியாகவும் உச்சாரணாதிகளில் பிழை ஈஷத்தும் வாராதபடியாகவு மிவற்றின்வாசியறியாத வடியேனுக்கு இவற்றுக்கு தேசிகரானதேவரீரே க்ருபையோடே ப்ரஸாதித்தருளவேணும். முன்-முதலிலே. முறையில்-க்ரமத்திலே. எப்பொழுதும்-ஸர்வகாலங்களிலும். எழில்-அபிவ்ருத்தமான. (௬)

தேறியமாஞாநமுட்ன் றிருக்கோளூரிற் சித்திரையிற் சித்திரைநாள் வந்துதோன்றி, ஆறியநல்லன்புடனேகுருகூர்நம்பிக்கநவரதமந்தரங்கவடிமைசெய்து, மாறனையல்லாலென்றுமறந்துந்தேவு மற்றறியேனெனுமதுரகவியேநீமுன், கூறியகண்ணிநுண்சிறுத்தாம்பதனிற்பாட்டுக் குலவுபதினொன்றுமெனக்குதவுநீயே. (௭)

இந்த நம்மாழ்வாருடைய விஷயீகாரத்தாலே ஸத்தைபெற்ற ஸ்ரீமந் மதுரகவிகள் திருவவதரித்தருளின திவ்யநகரமாஸநக்ஷத்திரங்க ளிவையிவையென்று தனித்தனியே தர்சிப்பியாநின்றுகொண்டு, இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீரருளிச்செய்த 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்கிற திவ்யப்ரபந்தத்தை அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

பயிர் முளைக்கும்போதே பயிர் முளைக்குமாப்போலெ தான்பிறக்கும்போதே தொடங்கி ஸாராஸாரவிவேசனத்திற்குறுப்பான தெளிவையுடைத்தாய் ஆசார்யவிஷயத்திலே தானேயூன்றி நிற்கையாலே மிகவும் விலக்ஷணமாயிருந்துள்ள தத்வஹிதபுருஷார்த்த யாதாத்ம்யஜ்ஞாநத்தோடேகூட திருக்கோளூ ரென்கிற திவ்யதேசத்திலே, கலியுகத்திலே நம்மாழ்வார் திருவவதரித்தருளின முந்நூற்றிருபத்திரண்டாம்நாளில் விக்ரமவர்ஷத்திலே சித்திரைமாஸத்தில் சித்திரையென்கிற திருநக்ஷத்ரத்திலே, ஸ்ரீகுமுதாம்சராய்க்கொண்டு பகவந்நியோகத்தாலே யிங்கேவந்து திருவவதரித்தருளி, விஷயவைலக்ஷண்யமடியாகப் பிறந்ததொன்றாகையாலெ சிறியதாய் அமைந்ததாய், பரிபூர்ணமாயிருப்பதாய், அன்பேபெருக மிகு மென்கிற வாழ்வாருடையவன்பைக்காட்டில் ச்லாக்யதமமான வன்போடே திருநகரிக்கு நிர்வாஹகரா யன்பின் மிகுதியாலுண்டான ஜ்ஞாநபக்த்யாதி குணபூர்த்தியையுடையரான வாழ்வார்பக்கலிலே ஸர்வகாலமும் அந்தரங்கவ்ருத்தியைப்பண்ணி,யவ்வ்ருத்திக்கு ப்ரதிபந்தியான வவ்வாழ்வாரை யல்லது மறந்தும் வேறொருதேவதையை நானறியேனென்று சொல்லி, அச்சொன்னசொல் கல்வெட்டாம்படி 'தேவுமற்றறியே' னென்று உத்கோஷமாக வுரைத்திப்படி யாசார்யவிஷயத்திலே யினிதாகக்கவிபாடுகையாலே ஸ்ரீயந்மதுரகவி யென்னும் பேர்பெற்றவரே,இங்ஙன் ஆழ்வார்பக்கலிலே யடிமைசெய்து கொண்டு போந்ததேவரீர் அதடியாகவுண்டான ஹர்ஷப்ரகர்ஷம் வரம்பிட்டுக்கொடுக்க வத்தாலே 'கண்ணிநுண்சிறுத்தாம்பினு, லென்றுதொடங்கி முற்காலத்திலே யருளிச்செய்ததாய், ஸ்ரீமந்நாதமுனிகள் போல்வாரால் அறியப்பட்டுக் கொண்டாடப்படுகிற பதினொருபாட்டும் தேவரீரே யவச்யம் ப்ரஸாதித்தருளவேணும். தேறிய - தெளிந்திருக்கிற, மா - விலக்ஷணமான, ஆறிய - பூர்ணமான, கூறிய-அருளிச்செய்த, குலவு-கொண்டாடப்படுகிற. (௭)

பொன்புரையும்வேற்குலசேகரனேமாசிப் புநர்பூசத்தெழில்வஞ்சிக்களத்திற்றோன்றி, அன்புடனேநம்பெருமாள்செம்பொற்கோயி லனைத்துலகின்பெருவாழ்வு மடியார்தங்கள், இன்பமிகுபெருங்குழூஉக் காணமண்மே விருளிரியவென்றெடுத்த விசையிற்சொன்ன, நன்பொருள்சேர்திருமொழி நூற்றைந்துபாட்டு நன்றாகவெனக்கருள்செய்நல்கிநீயே. (௮)

இவ்வாழ்வாருக்குப் பின்பு திருவவதரித்தருளினர் குலசேகரப்பெருமாளாகையாலே, யவர்திருவவதரித்தருளின மாஸநக்ஷத்ரநகரங்க ளிவையிவையென்றுதனித்

தனியே தர்சிப்பியா நின்றுகொண்டு, இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீரருளிச்செய்த பெருமாள் திருமொழியை யடியேனுக்கு ப்ரஸாதித்தருள வேணுமென்று ப்ரார்த்தித்தருளுகிறார்.

பொன்போலே ஸ்ப்ருஹணீயமான வேலையுடைய ஸ்ரீகுலசேகராழ்வாரேயிந்த கலியுகத்தில் மனுஷ்யமானத்தாலே எழுபதாம்ஆண்டான ஸர்வதாரிவருஷத்தில் மாசிமாஸத்தில் புநர்வஸுவென்கிற திருநக்ஷத்திரத்தில் நிரவதிகசோபாயுக்தமான திருவஞ்சிக்களமென்கிற திவ்யநகரத்திலே, ஸ்ரீகௌஸ்துபாம்சராய்க்கொண்டு திருவவதரித்தருளி பகவத்விமுகருடைய ஸஹவாஸம் தேவரீருக்கு துஸ்ஸஹமாகையாலேயவ்விழவுதீர,நிரவதிகப்ரீதியுடனே நமக்குவகுத்தஸ்வாமியானபெரியபெருமாள் விரும்பும்படி செம்பொன்னாலே செய்யப்பட்ட திருவரங்கப்பெருநகரியிலே யந்தபெரியபெருமாள்பக்கலிலே ப்ரேமசாலிகளாய்க்கொண்டுவஸிக்கிற ஸகலஜநங்களுடையவு மங்குற்றவாஸமாகிற மஹாஸம்பத்தையும், அதுக்குமேலே யப்பெரியபெருமாள்பக்கலிலே செய்யக்கடவதான வடிமையொன்றுமே தங்களுக்கந்தரங்கநிரூபகமாகவுடையராய் அவரிலுமுத்தேச்யரான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ப்ரேமமிக்கிருந்துள்ள பெரிய கோஷ்டியையுங் காணவேணுமென் றவருடைய விஷயீகாரத்தாலே யவரையனுபவித்து,அவ்வநுபவபரீவாஹம் பேசிவித்தபடியே யிந்தபூமியிலேஅஜ்ஞாநாந்தகாரம்நிவ்ருத்தமாம்படி 'இருளிரிய'வென்றுதொடங்கிதேவகாநத்தோடே தேவரீரருளிச்செய்ததாய்,பரமபுருஷார்த்தகாஷ்டை யாகிற ச்லாக்யதமார்த்தங்களோடே கூடியிருப்பதாய், அதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படி நூற்றைந்துபாட்டாயவதரித்த பெருமாள் திருமொழி யென்கிற திவ்யப்ரபந்தத்தை யஹங்காராதிகளாலே மிகவும் தூஷிதனான வடியேனுக்கு என்பக்கல் வாத்ஸல்யாதிசயத்தைப்பண்ணி ஏதத்வக்தாவான தேவரீரே ப்ரஸாதித்தருளவேணும். புரைதல்-உபமாநம். வேல்-ஆயுதவிசேஷம், எழில் - அழகு, செம்பொன்-சிவந்தபொன், உலகு-சேதநவர்க்கம், குழூஉ-கோஷ்டி, இரிய-நிவ்ருத்தமாக, எடுத்த-தொடங்கின, இசை-காநம், நல்கி - ஸ்நேஹித்து. (அ)

பேரணிந்தவில்லிபுத்தூரானிதன்னிற்பெருஞ்சோதிதனிற்றோன்றும் பெருமானேமுன், சீரணிந்தபாண்டியன்றன்னெஞ்சுதன்னிற் றுயக்கறமால்பரத்துவத்தைத்திரமாச்செப்பி, வாரணமேன்மதுரைவலம் வரவேவானின் மால்கருடவாகனனாய்த்தோன்றவாழ்த்து, மேரணிபல்லாண்டுமுதற்பாட்டுநானூற் றெழுபத்தொன்றிரண்டுமெனக்குதவுநீயே. (௯)

இச்குலசேகரப்பெருமாளுக்குப் பின்பு அவதரித்தருளினார் பெரியாழ்வாராகையாலே, யவர் திருவவதரித்தருளின திவ்யநகர மாஸநக்ஷத்ரங்க ளிவையிவையென்று தனித்தனியே தர்சிப்பியாநின்றுகொண் டிங்ஙன் திருவவதரித்தருளின தேவரீ ரருளிச்செய்த பெரியாழ்வார்திருமொழியை அடியேனுக்குப்ரஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

செம்பொன்மாடங்கள் தொடக்கமானபருப்பருத்ததான நகராலங்காரங்களாலேயலங்க்ருதமான ஸ்ரீவில்லிபுத்தூரிலே,நம்மாழ்வார்திருவவதரித்தருளினவாண்டுக்கு நூற்றெண்பத்து மூன்றாமாண்டான விஷுவர்ஷத்திலே ஆனிமாதத்தில்தேவரீருடைய பெருமைக்குத்தகுதியான பெருமையுடைத்தான ஸ்வாதி யென்கிற திருநக்ஷத்ரத்திலே ஸ்ரீவிஷ்ணுரதாம்சபூதராக்கொண்டுதிருவவதரித்தருளும்ஸ்வாமியான பெரியாழ்வாரே, இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீர் முற்காலத்திலே சமதமாத்யாத்மகுணங்களாலே யலங்க்ருதனாய் பாண்டியனென்கிற பேருடையவனான ஸ்ரீவல்லப தேவராயனுடைய மநஸ்ஸிலுண்டாயிருந்த வாத்மைக்ய தேவதை க்யாதிகளாகிற விபரீதஜ்ஞாநாதிகள் தீரும்படி, முக்திதரராயும் முக்தபோக்யராயும் ஸர்வஸ்வாமியாயு மிருந்துள்ள ஸ்ரீமந்நாராயணனுடைய ஸர்வாதிகாரமான பரதேவதாபாரமாத்ம்யத்தை யவன்வித்வத்கோஷ்டியிலே யெழுந்தருளிஸ்திரமாகநிஷ்கர்ஷித்தருளிச்செய்ததைக்காண, அந்த ராஜாவானவன் மிக்கப்ரீதியோடே யானையின் கழுத்திலே தேவரீரை யேறியருளப்பண்ணி ஸ்ரீமதுரையை ப்ரதக்ஷிணமாகவருகிற

வளவிலே, ஸ்ரீயஃபதி கருடவாஹநனாகக்கொண்டு தேவரீரைக்கடாக்ஷிப்பதாக வாகாசத்திலே ஸன்னிஹிதனாக,வவ்வளவிலே ஸ்ரீயஃபதிப்ரஸாதத்தாலேயவரைஸாக்ஷாத்கரித்து முகப்பிலே தோற்றுகிறவருடைய ஸௌந்தர்யாதிகளைக் கண்டிதுக்காராலே யென்னதீங்கு வருகிறதோ வென்று கலங்கி,யதடியாக வுண்டான ப்ரேமாதிசயத்தாலே யவரை தேவரீர்மங்களாசாஸநஞ் செய்தருளினமைக்கு ப்ரகாசகமாய்சப்தாலங்காராதிகளாலே யலங்க்ருதமாய் 'பல்லாண்டு பல்லாண்டெ'ன்று தொடங்கி தேவரீரருளிச்செய்ததாய்,அதிகரிப்பாருக்கு ஸூசகமமாம்படி நானூற்றெழுபத்து மூன்றுபாட்டா யவதரித்தபெரியாழ்வார் திருமொழியை ஸாராஸாரவிவேக மில்லாதவடியேனுக்கு ஸாரார்த்தங்களே நெஞ்சிலேயிருக்கும்படி தத்வக்தாவான தேவரீரே ப்ரஸாதித்தருளவேணும். பேர்-பெருக்க, அணிந்த-அலங்ருதமான, சோதி - ஸ்வாதி, சீர் - குணம், துயக்கம் - ஸம்சயாதிகள், அற - நிவ்ருத்தமாக, திரமாக-ஸ்திரமாக, வலம்-ப்ரதக்ஷிணம், ஏர் - அழகு, ஒன்றிரண்டும் - மூன்றும். (௯)

வேயர்புகழ்வில்லிபுத்தூராடிப்பூரம் மேன்மேலுமிகவிளங்கவிட்டுசித்தன், தூயதிருமகளாய்வந்தரங்கனார்க்குத் துழாய்மாலைமுடிசூடிக்கொடுத்தமாதே, நேயமுடன்றிருப்பாவைப்பாட்டாறைந்துநீயுரைத்ததையொரு திங்கட்பாமாலை, ஆயபுகழ்நூற்றுநாற்பத்துமூன்று மன்புடனேயடியேனுக்கருள்செய்நீயே. (௰)

இப்பெரியாழ்வாருக்குப்பின்பு திருவவதரித்தருளினார் சூடிக்கொடுத்த நாச்சியாராகையாலே,அவர் திருவவதரித்தருளின திவ்யநகரமாஸநக்ஷத்ரங்களிவையென்று தனித்தனியே தர்சிப்பியா நின்றுகொண்டு, இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீரருளிச்செய்த திருப்பாவை நாச்சியார்திருமொழிகளை அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

மூங்கில் குடியிலெ ஜநித்தவர்களாலே கொண்டாடப்படுகிற ஸ்ரீவில்லிபுத்தூரிலே ஸ்ரீநம்மாழ்வா ரவதரித்தருளின வாண்டுக்கு இருநூற்றிருபத்தோராமாண்டான ஸித்தார்த்தி வருஷத்தி லாடிமாஸத்தில் பூரமென்கிற திருநக்ஷத்திரத்திலே பகவத்ப்ரேமாதிசயத்தாலே உத்தரோத்தரம்விளங்க நிற்பாராய் ஸ்ரீவிஷ்ணுசித்தரென்கிற பர்யாயநாமத்தையுடையரான பெரியாழ்வாருக்குப்பெண்ணாகத் திருவவதரிக்கச்செய்தேயும், ஸ்ரீயவதாரரஹஸ்யத்தின்படியே தப்பாதபரிசுத்தையான புத்ரியாய்க்கொண்டு, பெரியாழ்வார் திருத்துழாய்க்கன்றைக் கொத்தாநிற்க வதின்மண்ணின்கீழே ஸ்ரீபூமிப்பிராட்டியாருடைய அம்சமாகத்திருவவதரித்தருளி, யவர்திருமாளிகையிலே வளர்ந்தருளுகிற காலத்திலே, யவர் திருவாராதநமான வழகியமணவாளனுக்குச்சாத்துவதற்காகத்தொடுத்ததிருத்துழாய்மாலையையவர்மாத்யாந்ஹிகஸ்நாநாத்யர்த்தமாக க்ரஹாத் வெளியிலே யெழுந்தருளின தசையிலே, தேவரீருடைய வாசப் பூங்குழலிலே நாள்தோறும் சூட்டிப்பரிமளிதமாக்கி யுடனேகளைந்து அவர் திருக்கைகளாலே தேவரீ ராழங்கால்படும் விஷயமான வழகியமணவாளனார்க்குச் சூடும்படி கொடுத்தவராயும், அவர் விரும்பியருளும்படி ஸௌந்தர்யாதிகுணவிசிஷ்ட திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவராயு முள்ள நாச்சியாரே, தேவரீரைந்து வயஸ்ஸிலேதானே பகவத்விஷயத்திலே நிரவதிகப்ரேமத்தை யுடையராய்க்கொண்டுமார்கழிநோன்பு நோற்றமைக்குப்ரகாசகமாம்படி 'மார்கழித்திங்க'ளென்றுதொடங்கி தேவரீரருளிச்செய்ததா யதிகரிப்பாருக்கு ஸூசகமமாம்படிமுப்பதுபாட்டாயவதரித்த திருப்பாவையையும், பின்னையும் 'தையொருதிங்க' ளென்றுதொடங்கி யவனோடே ஸம்ச்லேஷித்தமைக்கு ப்ரகாசகமாம்படி தேவரீரருளிச்செய்ததா யதிகரிப்பாருக்கு ஸூசகதமாம்படி நூற்றுநாற்பத்துமூன்றுபாட்டா யவதரித்த நாச்சியார் திருமொழியையும் வாத்ஸல்யாதிசயத்தாலே மிகுந்த ப்ரீதியோடே யபத்யபரிஹாரதீ விமுகனான வடியேனுக்கு நித்யமாக வேகரூபமாகயிருக்கிற ரமணீயப்ரீதிவிசேஷத்தையே தெகட்டாதே ஸகலகாலத்திலேயு மனுபவிப்பிக்கும் நிருபாதிக மாதாவான தேவரீரே க்ருபைபண்ணியருளவேணும். வெயென்று மூங்கிலாய், அதனால் மூங்கில்குடியையுபலக்ஷித் தக்குடியிலெ ஜநித்தவர்களுக்கு வேயரென்று பேரா

யிருக்கிறது. புகழ்-கொண்டாடப்படுகிற. மேன்மேல்-உத்தரோத்தரம். தூய-பரிசுத்தமான. முடி-மயிர்முடியிலே. மாதே-பெண்ணே. நேயம்-ஸ்நேஹம். யா-சந்தஸ்ஸு. ஆயபுகழ்-ஆயப்பட்ட குணங்கள். (௧௦)

மன்னுமதிட்டிருமண்டங்குடிதான்வாழ மார்கழிமாதக் கேட்டைநாளில்வந்து, துன்னுபுகழ்த்தொண்டரடிப்பொடியேநீமுன் றுழாய்மாலைப்பணியடிமைசெய்துநாளுந், தென்னரங்கமணவாளர்க்கன்புமிக்குச்செப்பிய நற்றிருமாலை நாற்பத்தைந்தும், பன்னியநற்றிருப்பள்ளியெழுச்சிப்பத்தும் பழவடியேனுக்கருள்செய்பரிந்துநீயே. (௧௧)

நாச்சியாருக்குப் பின்பு திருவவதரித் தருளினார் ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வா ராகையாலே யவர்திருவவதரித்தருளின திவ்யநகரமாஸநக்ஷத்ரங்களிவையென்று தனித்தனியே தர்சிப்பியாநின்றுகொண்டு, இங்ஙன் திருவவதரித்தருளின தேவரீரருளிச்செய்த திருமாலையையும் திருப்பள்ளியெழுச்சியையும் அடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தருளுகிறார்.

ஸ்திரமான மதிலையுடைத்தான திருமண்டங்குடி யென்கிற திவ்யதேசமானது வாழும்படியாக, ஸ்ரீநம்மாழ்வார் திருவவதரித்தருளினவாண்டுக்கு முந்நூற்றறுபத்திரண்டாமாண்டான விக்ரமவர்ஷத்தில் மார்கழிமாஸத்தில் கேட்டையென்கிற திருநக்ஷத்ரத்திலே ஸ்ரீவைஜயந்தீ வநமாலாம்சரா யிங்கேவந்து திருவவதரித்தருளி நெருங்கியிருக்கிற ஞானபக்த்யாதி கல்யாணகுணங்களையுடையரான ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வாரே, தேவரீர் முற்காலத்திலே கோயிலேற வெழுந்தருளி பெரியபெருமாளுடைய வீக்ஷயீகாரத்தாலே யங்குற்றைக்குப் பாங்காகத்திருத்துழாயை மாலையாகத்தொடுத்துச் சாற்றுவதாகிற தாஸக்ருத்யத்தை யநுஷ்டித்து,கோயிலைத் தமக்கு நிருபகமாகவுடைத்தான வழகியமணவாளர்க்கு ஸர்வகாலமும்ப்ரேமமதிசயிக்கும்படியாக 'காவலில்புலனைவைத்' தென்றுதொடங்கி யனுபவபரீவாஹரூபமாக பாகவதவைபவ ப்ரதிபாதகமாகிற நன்மையுடைய திவ்யப்ரபந்தத்தையும், அதுக்குமேலே பாவுகராலே யநுஸந்திக்கப்படுகிற 'கதிரவ'னென்று தொடங்கி யதிகரிப்பாருக்குஸுகமமாம்படிபத்துபாட்டா யவதரித்த திருப்பள்ளியெழுச்சி யென்கிற திவ்யப்ரபந்தத்தையும், அனாதியாக தேவரீருக்கே யடிமைபுக்க வடியேனுக்கு நேரேதத்வக்தாக்களான தேவரீரே பரிவோடே ப்ரஸாதித்தருளவேணும். மன்னு-ஸ்திரமான, துன்னு-நெருங்கியிருக்கிற, பணி-தொடுக்கை. பன்னு - அனுஸந்திக்கப்படுகிற, பரிந்து-பரிவோடே, ஸ்நேஹபுரஸ்ஸரமாக வென்றபடி. (௧௧)

உலகறியமலிபுகழ்கார்த்திகைமாதத்திலுரோகிணிநாளுறைந்தைவளம்பதியிற்றோன்றித், தலமளந்ததென்னரங்கர்பாலுலோக சாரங்கமாமுனி தோள்தனிலேவந்து, பலமறையின்பொருளாற்பாண்பெருமாளேநீ பாதாதிகேசமதாய்ப்பாடித்தந்த, சொலவமலனாதிபிரான்பத்துப்பாட்டுஞ்சோராமலெனக்கருள்செய்துலங்கநீயே. (௧௨)

தொண்டரடிப்பொடியாழ்வாருக்குப் பின்பு திருவவதரித்தார் திருப்பாணாழ்வாராகையாலே, அவர் திருவவதரித்தருளின மாஸநக்ஷத்ரநகரங்க ளிவையிவையென்று தனித்தனியே தர்சிப்பியாநின்றுகொண் டிங்ஙன் திருவவதரித்தருளின தேவரீரருளிச்செய்த 'அமலனாதிபிரா' னென்கிற திவ்யப்ரபந்தத்தை யடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்தித்தருளுகிறார்.

"ரங்கபதிநா பஹுமாநபூர்வம் நித்ராளுநாபிநியதம் நிஹிதாः கடாக்ஷாः" என்கிறபடியே பெரியபெருமாளுடைய பரிபூர்ணகடாக்ஷவிஷயமானவுறையூரிலே, தம்முடைய வவதாரவைலக்ஷண்யத்தை ஸகலரு மறியும்படியாக வளருகிற செய்கொள் செந்நெல்கதிரிலே ஸ்ரீநம்மாழ்வாரவதரித்தருளின வாண்டுக்கு முந்நூற்றெண்பத்தெட்டாமாண்டான பராபவவர்ஷத்தில் கார்த்திகைமாஸத்தில் ரோஹிணியென்கிறதிருநக்ஷத்ரத்திலே ஸ்ரீவத்ஸாம்சராயவதரித்தருளிஸகலதிவ்யஸ்தலஸாராஸாரவிவேசகார்த்தம் ஸஞ்சரித் தொருவிரகாலே முக்தரானவர்களைக் கூட்டிக்கொண்டிருக்கிறபரமபதநாதனுடைய வாஸஸ்தாநமான ஸ்ரீவைகுண்டதிவ்யலோகாபே

க்ஷயா இந்ததிருவரங்கப் பெருநகர்மே 'ஸ்ரீமாநசேஷ ஜந ஸங்க்ரஹணாயசேதே'
யென்கிறபடியே விண்ணவர் மண்ணவரோடு வாசியற ஸர்வரக்ஷண யோக்யஸ்தாந
மானபடியாலே இக்கோயிலே ஸர்வதிவ்யஸ்தல ஸாரமென்று நிஷ்கர்ஷித்தருளின
வராய்,அப்படிக்கொத்த கோயில் ப்ரதேசத்தைத்தம்முடைய திருவடிகளாலே ஸ்ப
ர்சிக்க நடுங்குகிற வெவ்வாழ்வாரை வஹிக்கும்படி வரம்வேண்டிக்கொண்டமஹாப்ர
பாவசாலியாயும், கோயில்ப்ரபாவத்தையே ஸர்வதேசஸர்வகால ஸர்வாவஸ்தைகளி
லேயும் மநநம்பண்ணிக்கொண்டிருக்கிறவராயுமிருந்துள்ள ஸ்ரீலோகஸாரங்கமஹா
முநி தோள் தன்னாலே, யாராமாதிகளாலே மிகவுமழகான திருவரங்கப்பெருநகரியி
லே யாஸ்ரிதஸம்ரக்ஷணார்த்தம் நித்யவாஸஞ்செய்தருளுகிற பெரியபெருமாள்பக்க
லிலேகிட்டி ஸேவித்ததிருப்பாணாழ்வாரோ, நானுவாகவிருந்துள்ள வேதங்களுடைய
வர்த்தங்களையுட்கொண்டு தேவரீர் பெரியபெருமாளைத் திருவடிகள் தொடங்கித் தி
ருமுடியளவாக, ஸகலவேதங்களுடைய வடிதொடங்கி நுனிபர்யந்தம் தாம் ஸம்யக்
காகவறிந்தபடிக்கு நிதர்சனமாக 'அமலனாதிபிரா' னென்றுதொடங்கி யருளிச்செய்
ததா யதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படி யிசையோடே ஸாதித்தருளின பத்துப்பா
ட்டையும் ப்ரமப்ரமாதாதிகளையுடைய வடியேனுக்குத்தத்வக்தாக்களான தேவரீரே
அடியேனுடைய புத்திமாந்த்யவிஸ்ம்ருத்யாதிகளைக் கடாக்ஷித் துபேக்ஷியாதே யெ
ன்னெஞ்சிலும் நாவிலும் நன்றாகப் பிரகாசிக்கும்படி க்ருபைபண்ணி யருளவே
ணும். உரோகிணிநாள்-ரோஹிணீநக்ஷத்ரத்திலே, உறைந்தை - உறையூர்என்கிற,
வளம்-வளப்பம், ஸாரவத்தாயிருக்கை, தலம்-ஸ்தலம். எம்பெருமா னுகந்தருளின
திவ்யதேசங்களென்றபடி. பால்-பக்கலிலே. (கஉ)

அறிவுதரும்பெரியதிருமொழிதப்பாம லாயிரத்தோ டெண்பத்துநா
லுபாட்டுங், குறியதொருதாண்டகநாலைந்தாறைந்துங் குலாநெடுந்தாண்ட
கமெழுகூற்றிருக்கையொன்றும், சிறியமடற்பாட்டு முப்பத்தெட்டிரண்
டுஞ் சீர்பெரியமடறனிற்பாட்டெழுபத்தெட்டு, மிறையவனேகார்த்திகை
யிற்கார்த்திகைநாளெழிற்குறையல்வருங்கலியாவிரங்குநீயே. (கங)

இத் திருப்பாண்பெருமாளுக்குப் பின்பு திருவவதரித்தருளினவர் திருமங்
கைமன்னனுகையாலே யவர் திருவவதரித்தருளின மாஸநக்ஷத்ரநகரங்களிவை
யென்று தனித்தனியேதர்சிப்பியாநின்றுகொண்டிங்ஙன் திருவவதரித்தருளின தேவ
ரீரருளிச்செய்த திருமொழிதொடக்கமான வாறுதிவ்யப்ரபந்தங்களையும் அடியே
னுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று பிரார்த்திக்கிறார்.

சாஸ்த்ரா விருத்தார்த்தங்களை ப்ரயோஜநமாகச் சொண்டு ப்ரவ்ருத்தமான
நீதிசாஸ்த்ரத்தின்படியே'அஸாதுப்யோர்த்த மாதாய ஸாதுப்யஸ்ஸம்ப்ரயச்சதி'என்
கிறபடியே அர்த்தார்ஜநங்களைப்பண்ணி கோபுரப்ராகாரநிர்மாண ஸ்ரீவைஷ்ணவா
ராதநங்களிலே நியோகித்த ஸ்வாமியே, ஸ்ரீநம்மாழ்வார் திருவவதரித்தருளின வா
ண்டுக்கு முந்நூற்றெண்பத்தொன்பதாமாண்டான ப்லவங்கவர்ஷத்தில் கார்த்திகை
மாஸத்தில் க்ருத்திகையென்கிற திருநக்ஷத்திரத்திலே நிரவதிகசோபாயுக்தமான தி
ருக்குறையலூரிலே ஸ்ரீசார்ங்காம்சராகத் திருவவதரித்தருளி, திருமணங்கொல்லை
யில் திருவரசடியிலே வயலாலிமணவாளன் திருமணம்புணர்ந்து மணவாளக்கோல
மும் தாமுமாய் ப்ராஹ்மணவேஷத்தை பரிக்ரஹித்து பத்நீஸஹிதனாய் ஸர்வபூஷ
ணபூஷிதனாய் பரிவாரங்களோடும் வந்துதோன்ற, வித்திரளைக்கண்டு பஹுவாகஸந்
தோஷித்துக்கொண்டு வாள்வேலாயுதராய் ஸபரிகரரா யதிஸம்ப்ரமத்தைப்பண்
ணிக்கொண்டவர்களைவந்து சூழ்ந்து வஸ்த்ராபரணாதிகளையும்அபஹரித்துக்கொண்டு
திருவிரலாழியையுந் திருமுகத்தாலே கடித்துவாங்க, ஸ்ரீயःபதியு மிதைக்கண்டு நங்
கலியனோ வென்றுப்ரஸாதித்தருளின கலியனென்கிற பர்யாய நாமத்தையுடையீ
ரான திருமங்கையாழ்வாரோ, தேவரீரைப்போலே தத்வஹிதபுருஷார்த்த யாதாத்
ம்யஜ்ஞாநத்தைக்கொடுக்க வற்றாய் ஸ்வவ்யதிரிக்தஸகலதிவ்ய ப்ரபந்தோத்க்ருஷ்
டமாய் வயலாலிமணவாளன் ப்ரஸாதத்தாலே யவனையுள்ளபடியநுபவித்துஅவ்வ
நுபவஜநிதப்ரீதிப்ரகர்ஷத்தாலே 'வாடினேன்வாடி' யென்றுதொடங்கி தேவரீரரு
ளிச்செய்ததா யதிகரிப்பாருக்கு ஸுகமமாம்படியாயிரத்தெண்பத்து நாலுபாட்
டாயாவிர்ப்பவித்த திருமொழியையும், அப்படியேயவனை நெஞ்சாலேநினைந்தும்
வாயாலேபேசியும் தேவரீர்தரித்தமைக்கு ப்ரகாசகமாய் 'நிதியினைப்பவளத்தூணை'

யென்றுதொடங்கி தேவரீரருளிச்செய்ததா யிருபதுபாட்டா யவதரித்ததிருக்குறுந் தாண்டகத்தையும், பின்னையும் தேவரீருடைய பரபக்திக்கு ப்ரகாசகமாய் பட்டர் போல்வராலே மிகவுங்கொண்டாடப்படுமதாய் 'முன்னுருவ' யென்றுதொடங்கி தேவரீரருளிச்செய்ததாய் முப்பதுபாட்டா யாவிர்பவித்த திருநெடுந்தாண்டகத்தை யும், அப்படியே யவ்வாற்றாமையின் கனாபுரட்சியாலே திருக்குடந்தையி லாராவ முதாழ்வார் திருவடிகளிலே தேவரீர் சரணம்புக்கமைக்கு ப்ரகாசகமாய் 'ஒருபேரு ந்தி' யென்றுதொடங்கி சித்ரமென்கிறகவிதாசக்தியாலே ரதபந்தமாக தேரீரருளிச் செய்ததாய் ஒருபாட்டாயவதரித்த திருவெழுகூற்றிருக்கையையும், இங்ஙன்சரணம் புக்க விடத்திலும் அவன் முகங்காட்டாமையாலே வழியில்லாவழியேயாகிலுஞ் சென்றவனைமுகங்காட்டுவித்துக் கொள்வதாக ஸ்ரீமத்ராமாவதாரத்திலே தேவரீர் மட லெடுத்தமைக்கு ப்ரகாசகமாய் 'காரார்வரைக்கொங்கை' யென்று தொடங்கி தேவ ரீரருளிச்செய்ததாய் நூற்றைம்பதுபாதமாய் நாற்பதுபாட்டா யவதரித்த சிறிய திருமடலையும், இங்ஙன மவதாரத்தையழிக்கப் பார்த்தாரோயாகிலும் நமக்குந்தமக் கும் வைப்பான வர்ச்சாவதாரத்தை யழிக்கமாட்டாரோ யென்றுகொண்டு அவன் தேவரீருக்குப்பின்னையும் முகங்காட்டாதொழிய வவ்வர்ச்சாவதாரத்தையுங்கூட வழிப்பதாகவும் நின்றநிலைகுலைந்தவன்தானே சடக்கெனவந்து முகங்காட்டும்படி யாகவும் பண்டேயுறைவான் திருநிறையூர்நம்பிபக்கலிலே தேவரீர்மடலெடுத்தமை க்கு ப்ரகாசகமாய் கவிக்கவயவமானலக்ஷணங்களோடேகூடி யிருப்பதாய் 'மன் னியபல்பொறிசே' ரென்றுதொடங்கி தேவரீரருளிச்செய்ததா யிருநூற்றுத் தொ ண்ணூற்றேழுபாதமாய் எழுபத்தெட்டுபாட்டா யாவிர்பவித்த பெரியதிருமடலை யும் தப்பாதபடி யடியேனுக்கிவற்றுக்கு வக்தாக்களான தேவரீரோ க்ருபையோடே ப்ரஸாதித்தருளவேணும். குலவு-கொண்டாடப்படுகிற. சீர்-கவிக்கவயவமான லக்ஷ ணம், எழில் - அழகு. குறையல் - ஊர்ப்பேர். (கஈ)

தேசமெலாமுகந்திடவே பெரும்பூதூரில் சித்திரையிலாதிரைநாள் வந்துதோன்றிக், காசினிமேல்வாதியரைவென்றரங்கர்கதியாகவாழ்ந்தருளு மெதிராசாமுன், பூசுரர்கோன்திருவரங்கத்தமுதனுருன் பொன்னடிமேலந் தாதியாகப்போற்றிப், பேசியநற்கலித்துறைநூற்றெட்டுப்பாட்டும் பிழை யறவேயெனக்கருள்செய்பேணிநீயே. (கச)

இவ்வாழ்வார்களுக்குப்பின்பு ஸ்ரீமன்னாதமுனி யாமுநமுநி முதலானவாசார்ய க்ருபைக்கு பரிபூர்ணபாத்ரராய் குருபங்திஹாரத்துக்கு நாயகரத்நராய் யதிராஜ ரான வெம்பெருமானார் திருவவதரித்தருளின திவ்யநகர மாஸநக்ஷத்ரங்களிவை யிவையிவையென்று தனித்தனியே தூர்சிப்பியாநின்றுகொண்டு இங்ஙன் திருவவத ரித்தருளின தேவரீர் விஷயமாய் திருவரங்கத்தமுதனார் விண்ணப்பஞ்செய்த நூற் றந்தாதியாகிற திவ்யப்ரபந்தத்தை யடியேனுக்கு ப்ரஸாதித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

எம்பெருமானா ரிந்தகர்மபூமியிலே திருவவதரித்தருளுகையாலே யவர் ஸம்பந் தம் பெற்று நாமுஜ்ஜீவிப்போமென்று ஸர்வதேசங்களிலுள்ளாரு முகக்கும்படியாக ஸ்ரீபெரும்பூதூரென்கிற திவ்யநகரத்தில், ஸ்ரீநம்மாழ்வார் திருவவதரித்தருளின வாண்டுக்கு நாலாயிரத்துமுப்பத்தொன்பதாமாண்டான பிங்களவர்ஷத்தில்சித்திரை மாஸத்தில் திருவாதிரை யென்கிற திருநக்ஷத்ரத்திலே சேஷசேஷாசநாம்சராய்க் கொண்டு பூமியிலே யெல்லாருமெளிதாகக்கிட்டிவந்து ஆஸ்ரயிக்கும்படி திருவவ தரித்தருளி, இவ்வவதாரப்ரயோஜநம் பெறுகைக்காக பூமியிலே சிஷ்யப்ரசிஷ்யாதி முகேந வேரூன்றியிருக்கிற பாஹ்யகுத்ருஷ்டிகளாகிற துர்வாதிகளை வாதாஹவத்தி லேஜயித்து, தேவரீருக்கந்தரங்கராயிருந்துள்ள திருக்குருகைப்பிரான் பிள்ளான்கூ ரத்தாழ்வான் முதலியாண்டான் முதலானமுதலிகளுக்கு 'இஹாமுத்ரசதத்பாதௌ சரணம்தேசிகாவிது:' என்கிறபடியே பரமப்ராபக பூதராய்க்கொண்டவர்களை குணா நுபவகைங்கர்ய ஸ்ரீயோடேகூட்டிவைத்து வாழ்ந்தருளுகிற யதிராஜரோ, தேவரீரு டையஸ்ப்ருஹணீயமாயழகிய திருவடிகளின் விஷயமாக, பூமியிலுள்ள ஸர்வவிப்ர வரருக்கு முத்தேச்யராயிருந்துள்ள திருவரங்கத்தமுதனார், 'பூமன்னுமா' தென்று தொடங்கி பாட்டுக்களுக் கடியுரை வேண்டாதபடி அந்தாதியாக தேவரீருடைய திருக்கல்யாணகுணங்களைப்புகழ்ந்து நிரவதிகப்ரேமத்தாலே யதுவதுவென்றுவாய்

